Digitization by eGangotri-South Center



விநாயக விஜயம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

SIVAGAMA CHOODAMANI
SIVAGAMA CHINTHAMANI
S. GOWRI SHANKARAN
SIVACHARIYAR
SRI VAITHYANATHA SWAMY TEMPLE
SANATORIUM, CHENNAI-600 047
98845 14083

விநாயக விஜயம்

விலை ரூ. 30

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

ஆசிரியர்
வித்துவான் ந. சுப்ரமண்யன், பி.ஏ.,பி.டி.

பதிப்பகத்தார்
தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
தியாகராயநகர், சென்னை - 600 017.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முதற் பதிப்பு : 1992
மறு அச்சு : 1995
" : 2000

© பதிப்புரிமை :
தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
தி. நகர், சென்னை - 600 017

தயாரிப்பு :
தி.ந.ச. வரதன்

அச்சிட்டோர் :
பிரிண்டர்ஸ் பிளேட்ஸ்
231, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600 014

சென்னையில் லிப்கோ ஸ்டாகிஸ்டுகள் :
எம். தாமோதரம் அண்டு கம்பெனி,
சென்னை - 600 108.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

பொருளடக்கம்

		பக்கம்
திருத்துருத்திக் கச்சிவிநாயகர் பதிகம்	...	9
1. சோமகாந்தன்	...	17
2. வேத வியாசர்	...	28
3. விநாயகர் விவாஹம்	...	31
4. திருமாலுக்கு அருளிய திறம்	...	37
5. வீமன்	...	41
6. ருக்மாங்கதன்	...	50
7. முப்புரம் எரித்த முக்கண்ணன்	...	60
8. மலைமகள்	...	73
9. கர்த்தமன்	...	77
10. நளன்	...	80
11. சந்திராங்கதன்	...	82
12. முருகனுக்கு அருளிய முன்னவன்	...	85
13. ரதிபதி	...	90
14. அனந்தனுக்கு அருளிய ஆனைமுகன்	...	94
15. இந்திர விமானம்	...	96
16. புருசுண்டி முனிவர்	...	98
17. கிருதவீரியன்	...	103
18. அறுகம்புல்	...	112
19. வன்னி பத்ரம்	...	130
20. கிப்பிரப்பிரசாதன்	...	152

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பக்கம்

21. கார்த்தவீரியன் ... 156
22. சூரசேனன் ... 159
23. பரசுராமன் ... 167
24. கோகர்ண இலிங்கம் ... 170
25. காவிரி தந்த கணபதி ... 173
26. காச்யபர் ... 177
27. விநாயகர் அவதாரங்கள் ... 178
28. வக்ரதுண்ட விநாயகர் ... 178
29. சிந்தாமணி விநாயகர் ... 179
30. கஜானனர் ... 192
31. விக்னராஜர் ... 202
32. முந்திய மயூரேச விநாயகர் ... 211
33. பிந்திய மயூரேச விநாயகர் ... 218
34. தூமகேது விநாயகர் ... 252
35. கணேசர் ... 259
36. கணபதி ... 259
37. மஹோத்கட விநாயகர் ... 265
38. உடுண்டி விநாயகர் ... 302
39. வல்லபை விநாயகர் ... 312
40. சோமகாந்தன் விநாயகர் உலகு அடைதல் ... 316

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

முன்னுரை

வேதங்கள், ஆகமங்கள், இதிஹாஸங்கள், புராணங்கள் ஆகியவை ஸநாதன தர்மத்திற்கு ஆதாரங்கள். அவை மனிதன் வாழ்க்கை முறை, புனிதத் தன்மை, பிறவி எடுத்த பயன் என்பவற்றையெல்லாம் விளக்கவந்த அரிய பொக்கிஷங்கள்.

வேதங்கள் மூலநூல் ஆகும்; ஆகமங்கள் வேதத்திற்கு இணையானவை; வேதப் பொருளை விளக்க வந்த நூல்களே இதிஹாஸங்கள்; ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு குணம் மிகுந்து ஒவ்வொரு மூர்த்தம் உயர்வாகும் என்பதை விளக்குவதே புராணங்கள்.

வெகுகாலமாக பாரத நாடு முழுவதும், குறிப்பாகத் தமிழ் நாட்டில் விநாயக வழிபாடு சிறந்து விளங்குகிறது. எடுத்த காரியம் இனிது நிறைவேற எல்லாம் வல்ல ஆனைமுகத்தரை முதலில் நினைந்து வணங்கித் தொடங்குவது தொன்றுதொட்டு வரும் மரபு. விநாயகரைத் துதிக்காமல் எந்தக் காரியமும் செய்வதில்லை என்ற திடசித்தம் பலரிடம் காணப்படுகிறது. ஆகவே, விநாயகருடைய மகாத்மியத்தை அறியப் பலரும் விழைகிறார்கள்.

வடமொழியில் பார்க்கவ புராணத்தில் விநாயகர் வரலாறு கூறப்பெற்றுள்ளது. தமிழில் கச்சியப்ப முனிவர் விநாயக புராணத்தைச் செய்யுளால் இயற்றியுள்ளார். பல பேரறிஞர்கள் அதனை உரைநடையிலும் எழுதியுள்ளனர். அவர்களுடைய நூல்கள் யாவும் போற்றத் தகுந்தன.

லிப்கோ பதிப்பகத்தார் நீண்ட நாட்களாக விநாயகப் பெருமானின் திருவிளையாடல்களை வெளியிடவேண்டுமென்று மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார்கள். லிப்கோ உரிமையாளர் திரு தி.ந.ச. வரதன் அவர்கள் என்னைப் பார்க்கும்போதெல்லாம் விநாயகர் பெருமைகளை எழுதுமாறு தூண்டினார்கள். அதன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விளைவாகிய இந்நூல் மரபுமுறைகளையெல்லாம் அதிகம் பின்பற்றாமல் விநாயக விஜயம் என்னும் தலைப்பில் வெளி வருகிறது. லிப்கோவின் பக்திநூல் வரிசையில் இதுவும் இடம் பெறுகிறது.

இந்நூலில் குற்றம் குறைகள் ஏதேனுமிருப்பின், அவற்றை அறிஞர் உலகம் சுட்டிக் காட்டவேண்டுமென்று விரும்புகிறேன். அடுத்த பதிப்பில் அக்குறைகளை விலக்கிப் பதிப்பிக்க அவை உதவியாய் இருக்கும்.

ந. சுப்ரமண்யன்.

9, மருதூர் அக்ரஹாரம்,
விழுப்புரம் - 605 602.
12-9-1991
(ஸ்ரீ விநாயக சதுர்த்தி தினம்)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை
ஆதீனத்து மஹாவித்துவான்
திரிசிரபுரம்
ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய

திருத்துருத்திக் கச்சிவிநாயகர் பதிகம்

1. மாமேவு பவளா சலக்குவட்டு உதயமெழு
மழவிளங் கதிர்நிகர்த்து
மணிமௌலி பொலியஅவ் வரைமுடியின் இருபாலும்
மணிகொழித்து இழிஅருவியின்

பாமேவு கருஞ்சிமிறு இரைப்பக் கபோலம்
பகுத்துவிடு தானம்ஒழுகப்
பனிமதிப் பிறையொன்று அடுத்தமர்ந் தாலெனப்
பகர்ஒரு மருப்புஇலங்கத்

தேமேவு மலர்இறைத்து அடியர்சய சயவென்று
திசைதொரு முழக்கெடுப்பச்
செறுவலிக் கருமூடி கத்திவர்ந்து யாங்கள்மகிழ்
தேக்கவந்து அருள்புரிகுவாய்

காமேவு தண்ணளி அமைந்துஅடையு நர்ப்பாது
காத்துஅறம் வளர்த்திடுதலால்
கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர்
கச்சிக் களிற்றுமுகனே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

2. குலவுதவ முனிவரர்கள் அமரும் தவச்சாலை
குவலயம் படிதராமே
கூறும்அச் சாலையுள் சைவா கமம்தீட்டு
கோசங்கள் சிதைதராமே

நிலவுதழல் படுகுண்டம் வேதிமே கலையொடு
நிதம்புதிது இயற்றுறாமே
நித்தியமுன் ஆயகரு மம்பலவும் அத்தவர்
நிகழ்த்தலிற் குறைவராமே

புலவுகமழ் அங்குசம் பாசம்நமை ஏவியது
போதுமென்று உவகைமலியப்
பொங்கும் சினத்துலவு கருமுடி கத்துப்
பொருக்கென இவர்ந்துபலவும்

கலவுபல அண்டத்து உலாவரும் திறலுடைச்
கருணையாம் அறியவலமோ
கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர்
கச்சிக் களிற்றுமுகனே.

3. ஏதியென எவ்வளவு இருப்பன அவற்றால்
இறுத்தல்செய் யாதவரமும்
இமையவர் உடம்புமுதல் எத்துணை உடம்புஅவை
இரிந்திடற் காயவரமும்

நீதிதரும் அட்டாங்க பஞ்சாங்கம் முதலிய
நிகழ்த்துவந் தனைவிலக்கும்
நிகழுமற் றுள்ளவும் நினைந்துமிச் சிரவுருவம்
நிலவமற் றொன்றமைந்து

சோதிதரு கோடொன்று கொண்டுகய முகன்வலி
தொலைத்துவிறல் ஊர்தியாக்கிச்
சோர்விலவன் அமரர்பால் பெற்றவையும் ஏற்றருள்
சுரந்துபல் உயிர்செய்வினையைக்

காதிநல மேயுதவு நினதுபெரு மாண்பெவர்
கருத்தமைத்து ஓதவல்லார்
கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர்
கச்சிக் களிற்றுமுகனே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

4. ஏற்றமிகும் ஒருமுனிவன் ஒம்பழற் குழிநாப்பண்
இரியாத கிரியைஞானம்
என்னுமிரு சத்திக ளொடும்தோன்றி அம்முனியொடு
ஏற்றமர் புரிந்துபலரும்

சாற்றஒளிர் புரவுமணி கைக்கொண்ட மாற்றலன்
றன்வலி யடங்காப்பெருந்
தானைவலி யொடுகவர்ந்து அம்மணியும் வாங்கிஅத்
தாபதர்க்கு இனிதளிக்கத்

தேற்றம்அத ஞல்வரல் உணர்ந்தனைய தவனும்
சிறந்தமார் பில்தரித்துச்
சிந்தா மணிக்குஞ்ச ரப்பிரான் என்றுஏத்தல்
செய்யஅவன் வினையனைத்தும்

காற்றஎழும் அருள்பொழிந்து இனிதமரும் ஆடலைக்
கண்டுவிண் டிடவல்லரார்
கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர்
கச்சிக் களிற்றுமுகனே.

5. தெள்ளமுத மயமாக உமையம்மை நல்கிய
திருந்துமோ தகம்நஞ்சமாய்த்
தீயகொடு நஞ்சமய மாகவொரு பேதைதரு
செழுநாவ லங்கனிகள்தாம்

எள்ளலரும் அமுதமாய்த் தான்புரிதல் தவறாது
இயற்றிடக் கண்டோமினும்
இயலுத்த மாங்கம்வே றாகவும் பார்க்கவும்
இருசெவிக ளால்கேட்கவும்

உள்ளபொருள் இதுவென்று வாய்பேச வும்பிற
உஞற்றவும் இயங்கல்செயவும்
உண்மையிற் கண்டுளேம் என்னின்எவர் நின்ஆடல்
உட்கொண்டு அளக்கவல்லார்?

கள்ளம்அகல் மாதவர்க்கு ஆனந்த மாய்ப்பரவு
கற்பனை கடந்தவாழ்வே
கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர்
கச்சிக் களிற்றுமுகனே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

6. எந்தவா னவர்அருள் பெறக்கருதி னுலும்உனை
ஏத்திவழி படுவர்எழுவாய்
ஏத்திவழி படல்செயார் என்னின்அவர் எண்ணியது
இழந்தும்இடை யூறுறுவரால்

முந்தஆர் வம்பெருகு மாறுநின் அடிப்பூசை
முற்றும் புரிந்துபோற்றின்
முன்னிய அனைத்தும்முற் றாததுஅல வேஇந்த
முறைமைநான் உணர்தலாலே

பந்தமாம் மலகன்ம மாயையொரு மூன்றையும்
பாற்றிநின் அறிவுதொழிலாம்
பாதநிழல் புக்கின்பம் உறுமாறு நின்னையே
பற்றித் துதித்தல்செய்வேன்

கந்தமா மலரிடுநர் எய்ப்பில்வைப்பே புகழ்நர்
களைகணே அமலவாழ்வே
கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர்
கச்சிக் களிற்றுமுகனே.

7. மருவுபல புவனத்தும் எந்தவா னவர்வடிவும்
மண்சிலை வடுத்தாரம்ஒண்
மாசைகள் இவற்றுளொன் றால்செய்து வயிறுஅளவின்
மருவாமல் அஃகுமென்னின்

வெருவுமிக வாய்ந்துஅந்த வடிவுஅருச் சனைசெயார்
விடுவர்அவ் வாறுதேர்தல்
வேண்டாது பேருதரம் வாய்ந்தநின் திருவுருவம்
மேதகப் பூசைபுரிதல்

ஒருவுதல்செ யாதவர்கள் யாவரே எனினும்அவர்
உம்பர்மக வான்மலரின்மேல்
ஒருவன்முத லோர்களினும் அதிகரென்று அருமறை
உரைத்தல்சிலர் எண்ணாமைஎன்?

கருவுதவிர் மாதவர் கசிந்தேத் தெடுக்கஒளிர்
கருணையா னந்தவாழ்வே
கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர்
கச்சிக் களிற்றுமுகனே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

8. பொங்கும் கருங்கடல் பரந்ததென் என்றுபல
புவனமும்ஓர் ஐயமெய்தப்
புக்ககட னின்றும்மலை இன்றெழுந் தஃதெனாப்
பொருதொழில் வலாரிஎண்ணித்

தங்கும் திறற்கொடிய சதகோடி ஒல்லைத்
தடற்றும்நின்று ஒருவல்செய்யச்
சகமுழுவ தும்புதை படச்சிறை விரிக்குமொரு
தறுகண் கலாபமயில்மேல்

எங்கும் கதிர்க்கும்ஒரு பவளாச லம்பொர
இவர்ந்துபல படையொடும்எதிர்
ஏற்றமாற் றலன்ஆக வப்பா ரிடைக்கவிழ
எழுகாக மோடுகழுகும்

கங்கும் புகழ்ந்தடைட் விறற்படைகை தொட்டநின்
காமர்விறல் யாவர்புகழ்வார்?
கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர்
கச்சிக் களிற்றுமுகனே.

9. துதிக்கையோடு இருசெவியி னின்றுமொரு மூவரைத்
தோற்றிஞய் அண்டம்அணுவாத்
தோற்றிட உயர்ந்தாய்ஓர் சனகன்இடும் உணவெலாம்
துய்த்துமிகு பசிதெரித்து

மதிக்கைகொடு அவன்பணிய முப்பொருளின் உண்மையை
வகுத்தவற்கு உறநவின்றாய்
வையமுதல் யாவும்ஓர் அறுகளவு போதாத
வண்ணம் தெரித்தல்செய்தாய்

விதிக்கைபுரி வானும்நிக ராதபுரு சுண்டிமுதல்
மேலோர்கள் பலர்இறைஞ்ச
விழையும்ஆ னந்தமய மேயாய் விளங்கிஞய்
வெய்யேன்நின் உண்மைதேர்ந்து

கதிக்கையுறு மாறுபே ரருள்புரிவ தென்றுகலை
காணா அதீதமுதலே
கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர்
கச்சிக் களிற்றுமுகனே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

10. மலையும்ஒரு பொருளன்று எனக்கறிக் குந்திறல்
வயங்குநின் ஊர்திவாழ்க
மலர்பொருவு கைத்தலப் பாசாங்கு சப்படை
வயங்கிளந் நாளும்வாழ்க

நிலைமருவு ஞானமும் கிரியையும் எனக்கலை
நிரம்பினர் எடுத்துரைக்கும்
நேயமிகு சித்திபுத் திகளெனும் சத்திகள்
நிரம்புசீர் ஓங்கிவாழ்க

அலைகடல் உடுத்தபுவி முழுதும்நின தருளடைந்து
ஆதரம் பெருகிவாழ்க
அற்புதம் விராவும்நின் அணியல்பூண் ஆகிய
அருந்தவத் தெவையும்வாழ்க

கலைவழி நினைப்பரவு செங்குந்தர் மரபும்
கதித்துநீ டூழிவாழ்க
கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர்
கச்சிக் களிற்றுமுகனே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

விநாயக விஜயம்

ஆனை முகத்தான் ஆரருட் கொடையால்
மோனை முத்தமிழ் முன்னாக வருமே.

பிநாக பாணிபெற்ற பிள்ளையார் அருளால்
விநாயக விஜயம் விளங்க வருமே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

1. சோமகாந்தன்

சௌராஷ்டிர தேசத்தை நிலவொளிபோல் காந்திவீசும் மேனி பெற்ற சோமகாந்தன் என்றொரு அரசன் ஆண்டு வந்தான். அந்நாட்டின் தலைநகர் தேவநகர். அந்நகர் தன் பெயருக்குத்தக மலையரணும் காட்டரணும் நீரரணும் பெற்று அழகுபொலிந்து விளங்கியது. அவ்வரசன் மனைவி சுதன்மை என்பாள். அவள் அழகும் அறிவும் கற்புத் திறனும் பெற்ற காரிகை. அவர்களின் இல்வாழ்க்கைக் கனியாக அவர்களுக்கு ஏமகண்டன் என்றொரு மகன் தோன்றினான். அவன் உடல் வளமும் உள்ள வளமும் வாய்ந்து வளர்மதிபோல் நாடோறும் வளர்ந்து வந்தான். சோமகாந்தனுக்கு ஐந்து மதி மந்திரிகள் இருந்தனர். அவர்கள் முறையே ரூபவான், வித்யாதீசன், கெமங்கரன், ஞானகம்யன், சுபலன் என்பவர். சமர்த்தர்களான மந்திரிகளின் துணையோடு நாட்டு மக்களின் நலத்தில் நாட்டம் கொண்டு ஆட்சி புரியும் மன்னனுக்கு இணையேது? மக்கள் யாவரும் மன்னனைப் போற்றினர். அவனிடம் அளவற்ற அன்பும் பக்தியும் கொண்டிருந்தனர்.

ஏமகண்டனுக்கு முடிசூட்டல்

சோமகாந்தன் நீண்டநாட்கள் புகழோடு அரசாண்டான். அவன் மகன் ஏமகண்டன் அரசருக்குரிய கலைகள் யாவும் கற்றுத் தேர்ந்தான்; சிறந்த வடிவும் நிகரற்ற வலிமையுங் கொண்ட இளைஞனாய்த் திகழ்ந்தான்.

அப்போது சோமகாந்தனுக்கு மேனிஒளி குன்றித் தொழு நோய் தோன்றியது; விரைவில் உடல் முழுதும் பரவி அவனைக் காணச் சகியாதவனாக்கியது. மனமும் மானமும் குன்றிய அரசன் தன் அமைச்சர்களை அழைத்துத் தன் நிலைமை முழுவதையும் ஒளியாது உரைத்தான். பின்னர் ஏமகண்டனுக்கு முடிசூட்டி அரசை அவனிடம் ஒப்புவித்துவிட்டுக் கானகம் ஏகிக் கடுந்தவம் புரியும் கருத்தையும் கழறினான். அந்தப்புரத்தில் இருந்த சுதன்மை இந்நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்று அத்தாணி மண்டபத் திற்கு வந்தாள். நோயுற்ற அரசன் கானகம் செல்வதை அவள் தடுக்கவில்லை; ஆனால் தானும் கூடவே வந்து தக்க உதவிகளும் பணிவிடைகளும் செய்வதாகத் திடமுடன் கூறினாள். அரசனால் அதனை மறுக்க இயலவில்லை. மந்திரிகளும் மன்னன் கருத்தை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒத்துக்கொண்டனர். ஆனால் தாங்களும் மன்னனோடு வந்து தங்களால் இயன்ற உதவிகளைச் செய்துகொண்டு மன்னனோடு இருப்போம் என்று மனப்பூர்வமாகக் கூறினர்.

இச்செய்தியை உணர்த்த வேண்டி இளவரசனாகிய ஏமகண்டனை அரசவைக்கு அழைத்துவரச் செய்தனர். ஏமகண்டன் விரைந்து வந்து தந்தையை அடிபணிந்தான். அமைச்சர்கள் அவனிடம் அரசன் கருத்தை எடுத்துக் கூறினர். அரசனும் தன் மகனிடம் ''அரசுச் சுமையை ஏற்றுப் புகழோடு நீண்டகாலம் ஆட்சிபுரிக'' என வாழ்த்தினான். ஆனால் ஏமகண்டன் மனம் கலங்கி "அரச போகங்களை அனுபவிக்க விரும்புபவர் அனுபவிக் கட்டும். நான் என் தந்தையையும் தாயையும் பின்பற்றி அவர் களோடு கானகம் சென்று அவர்களுக்குப் பணிவிடை புரிந்து வாழ்வேன்'' என்று கூறித் தன்னையும் கானகத்திற்கு அழைத்துச் செல்லுமாறு தந்தையிடம் மன்றாடினான்.

அரசன் ஏமகண்டனை அருகில் அழைத்து அகம் குழைந்து ஆறுதல் கூறத் தொடங்கினான்: ''மன்னர்களுக்குச் சிறப்பான பொறுப்பு உள்ளது. மற்றையோர் வேறெதையும் எண்ணாது யாவற்றையும் துறந்து செல்ல இயலும். ஆனால் மன்னர்கள் மக்களைக் காக்க வேண்டியவுர்கள். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்பது பல்லாற்றானும் உண்மை. செங்கோ லரசன் இல்லாத நாடு வெங்கண் புலிகள் வாழும் காடேயாகும். நாட்டு மக்களின் நல்வாழ்க்கையின் பொருட்டு மன்னன் தன்னுடைய சுயநலத்தையெல்லாம் தியாகம் செய்துவிட வேண்டும்; தன்னுடைய விருப்பு வெறுப்புகளை எல்லாம் விட்டுவிட வேண்டும்; ஆகையால் நாட்டைக் காக்கும் பொருட்டும் மக்களை நல்வழியிற் செலுத்தும் பொருட்டும் நீ மணிமகுடம் தாங்கி அரசுக்கட்டில் ஏறுவது நெறி'' எனக் கூறி அரச நீதிகள் அனைத்தையும் அன்பு மகனுக்கு எடுத்துரைத்தான். கல்வி கேள்விகளில் சிறந்தவனும் அரச காரியங்களில் தந்தைக்கு உதவியாக இருந்துவந்தவனும் ஆகிய ஏமகண்டனுக்கு அவை புதியன அல்ல; எனினும் தந்தையார் எடுத்துக் கூறிய நெறிமுறைகளை ஆர்வத்துடன் கேட்டான். நல்லோர்களைக் காக்கும் பொருட்டும் அல்லோர்களைத் தண்டித்து தருமத்தை நிலைபெறச் செய்யவும் ஏமகண்டன் அரசுக்கட்டில் ஏற ஒப்புக் கொண்டான். அனைவரும் அதனை வரவேற்றனர்.

அரசன் அப்போதே தவம் சிறந்த சோதிடர்களை வருவித்து முடிசூட்டு விழாவுக்கு ஒரு நன்னாள் தேர்ந்தெடுத்தான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அந்த நன்னாளில் மங்கல வாத்யங்கள் முழங்க ஏமகண்டனையும் அவன் மனைவியையும் புனித நீரால் அபிஷேகம் செய்து அரசருக் குரிய ஆடை அணிகளை அணிவித்து அரசவைக்கு அழைத்து வந்தனர். ஏமகண்டனும் அவன் மனைவியும் அழகிய சிங்கா சனத்தில் திருமகளும் திருமாலும்போல ஏறி அமர்ந்தனர். அந்தணர்கள் வேத கோஷம் இசைக்க இன்னிசையாளர் கீதம் பாட தவமுனிவர்கள் ஆசி கூற குலகுரு மகுடம் சூட்டினார். மங்கலப் பெண்கள் ஆலத்தி எடுத்தனர்.

முடிசூடிக்கொண்ட ஏமகண்டனும் அவன் மனைவியும் அன்னையையும் அத்தனையும் அடிபணிந்தனர். மனம் மகிழ்ந்த அவர்கள் அவர்களை வாழ்த்தினர்; சுதன்மை தன் மகனை அன்புடன் நோக்கி, "குழந்தாய், ஆதி முதல்வனான ஆனைமுகனை அனுதினமும் போற்றி இடைவிடாது பூசனைகள் புரிவாய். அவரருளாலேயே எல்லா நன்மைகளும் சித்திக்கும்; இதனை நீ என்றும் மறவாதே. நாடு வளம் பெறுவதும் மக்கள் கல்வி கேள்விகளிற் சிறந்து நல்வாழ்க்கை வாழ்வதும் விநாயகரின் அருளாலேயே" என்று அறிவுறுத்தினாள்.

சோமகாந்தன் வனம் ஏகல்

பின்னர் சோமகாந்தன், மந்திரிகள், சேனாதிபதிகள், ஆட்சித் தலைவர்கள் ஆகியவர்களுக்கெல்லாம் தனித்தனியே சொல்ல வேண்டியவைகளைக் கூறி இனிய அரண்மனை நீத்துத் தன் மனைவியுடன் அரிய கானகம் நோக்கிப் புறப்பட்டான். அது பொறாத மகனும் மந்திரிகளும் மக்களும் மன்னனைத் தொடர்ந்து சென்றனர். ஊருக்கு வெளியில் ஓர் அழகிய புஷ்கரிணி இருந்தது. அதன் கரையில் அரசனும் அரசியும் தங்கி மகனையும் மற்றவர் களையும் நோக்கி, "வழியனுப்புதற்பொருட்டு வருபவர்கள் ஒரு தீர்த்தக்கரைவரை வந்து அனுப்புவதுதான் மரபு. ஆகவே எல்லாரும் மீண்டு நகரத்திற்குச் செல்ல வேண்டும்" என வேண்டினர். பிறகு யாவரும் ஆலோசனை செய்து சுலபன், ஞானகம்யன் என்ற இரு அமைச்சர்களும் அரசனுக்கு உதவியாக உடன் செல்வதென்றும் மற்றவர் நகரத்திற்குத் திரும்புவதென்றும் தீர்மானம் செய்தனர். அவ்வாறே மக்கள் யாவரும் பின்தொடர ஏமகண்டனும் அவன் மனைவியும் நகரம் நோக்கிச் சென்றார்கள். சோமகாந்தனும் சுதன்மையும், சுலபனும் ஞானகம்யனும் துணையாக வர, கானகம் நோக்கிச் சென்றார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிருகு முனிவரைக் காணல்

சோமகாந்தன் முதலிய நால்வரும் தாங்கள் வசிப்பதற்கான ஒரு நல்ல இடம் தேடி ஆங்காங்கே தங்கிப் பலநாள்கள் பயணம் செய்தனர்; ஒருநாள் அமைதி குடிகொண்டிருந்த ஓர் அழகிய சோலையையும் தெளிந்த தண்ணீர் நிரம்பிய பொய்கையையும் கண்டனர். அதன் கரையில் அமர்ந்து அவ்விடத்தின் அழகைத் துய்த்து இன்புற்று இளைப்பாறினர். சுலபனும் ஞானகம்யனும் அவ்விருவரையும் அங்கேயே இருக்கும்படிக் கூறி உணவு தேடும் பொருட்டுக் காட்டினுள் சென்றார்கள். அவர்கள் சென்றபின் அரசியும் அரசனும் அமர்ந்திருந்த அப்பொய்கைக் கரைக்கு ஓர் இளங்குமரன் தண்ணீர் எடுத்துச் செல்லும் பொருட்டு வந்தான். அவ்விடத்தில் ஓர் இளங்குமரனைக் கண்ட அரசி அதிசயமெய்தி அவனை நோக்கி, "குழந்தாய், வன விலங்குகள் அச்சுறுத்தும் இவ்வடர்ந்த காட்டிற்குள் வன்னெஞ்சம் படைத்த வில்வேடர்களும் வர அஞ்சுவரே. சிறுபிள்ளையாகிய நீ அஞ்சாது தன்னந்தனியனாக வந்திருக்கின்றாய். உன் தாய் தந்தையர் யாவர்? அவர்கள் எங்கு இருக்கிறார்கள்?" என அன்புடன் வினவினாள்.

அரசியின் அன்புரைகளைக் கேட்ட அச்சிறுவன், "நான் பிருகு முனிவரின் புதல்வன்; என் தாயார் புலோமை; என் பெயர் ச்யவனன். இத்தடாகத்திலிருந்து நீர் எடுத்துப் போக இங்கு நான் வந்தேன். எங்களுடைய ஆச்ரமம் அருகில்தான் உள்ளது" என இனிய குரலில் இயம்பினன். பிறகு குடத்தில் நீர் எடுத்துக்கொண்டு மீண்டும் வந்து, "கொடிய விலங்குகளுக்கு இருப்பிடமானதும் மனித சஞ்சாரமே அற்றதுமாகிய இக் காட்டிற்குத் தாங்கள் வந்த காரணமென்ன? தங்கள் அருகில் இருப்பவர் மிக்க துன்பநிலையில் இருப்பதாகத் தெரிகிறது. என்னிடம் சொல்லத் தக்கது எனக் கருதினால் தயைசெய்து தெரிவிக்க வேண்டும்" எனக் கூறி எதிரில் நின்றான்.

சுதன்மை தன் கண்களில் நீர் பனிப்பத் தங்கள் வரலாற்றைச் சுருங்கக் கூறினாள். தங்களோடு வந்த அமைச்சர்கள் இருவரும் உணவு முதலியன தேடிக் கொணரும் பொருட்டுக் காட்டினுள் சென்றிருப்பதையும் அவர்கள் திரும்பி வரும்வரையில் அக்குளக் கரையிலேயே தாங்கள் இருக்கப்போவதையும் கூறினாள். இவற்றைக் கேட்ட முனிகுமாரனின் மனம் நெகிழ்ந்தது; அவர் களுடைய துன்பத்திற்கு இரங்கினான்; பிறகு தண்ணீர்க் குடத்தோடு தன்வழிச் சென்றான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முகவாட்டத்தோடு ஆச்ரமத்துள் நுழைந்த மகன் முகம் நோக்கி, "மகனே, இன்று உன் முகம் ஏன் வாட்டமுற்றிருக்கிறது?" என்று பிருகு முனிவர் வினவினார். உடனே ச்யவனன் பொய்கைக் கரையில் தான் கண்ட அரசியையும் அரசனையும் பற்றிக் கூறினான்; அவர்களுடைய இரங்கத்தக்க நிலையை எடுத்துக் கூறினான். அரசனுக்கு ஆகூழ் அணுகி வந்தமையின், பிருகு முனிவர் தன் மகனிடம் உடனே பொய்கைக் கரைக்குச் சென்று அந்நால்வரையும் அழைத்துவருமாறு பணித்தார். ச்யவனனும் மகிழ்ச்சியோடு விரைந்து சென்று அவர்களை ஆச்ரமத்திற்கு அழைத்துவந்தான்.

சூரியனுக்குச் சமமான தேஜஸை உடைய பிருகு முனிவரைக் கண்டவுடன் சோமகாந்தன் அவர் பாதங்களைப் பற்றிக் கொண்டான். சுதன்மையும் இரு அமைச்சர்களும் முனிவரின் மலரடிகளைப் போற்றி வணங்கினார்கள். முனிவரும் அவர்களை ஆசீர்வதித்து இருக்கைகளில் அமர்த்தினார். இரு அமைச்சர்களும் சோமகாந்தன் நாட்டையாண்டதுமுதல் நோயுற்று நொந்து நெடிய கானகம் வந்து சேர்ந்தவரை விநயத்துடன நவின்றார்கள். சுதன்மையோ ஒன்றும் பேசாது கண்ணீர் பெருக்கினாள். பிருகு முனிவரின் உள்ளம் உருகியது; தம் ஞானதிருஷ்டியால் சோமகாந்தனின் முன்வினையைத் தெரிந்துகொண்டார். அவனுடைய தீவினைகள் நசிந்து நன்மை தரும் நாள் நணுகியதை உணர்ந்தார். முனிவரின் சீடர்கள் அவர்களை நன்னீரில் நீராடச் செய்து சுவை மிக்க உணவு வழங்கினார்கள்; சிறப்பான உபசாரம் பலவும் செய்தார்கள்.

சோமகாந்தன் முற்பிறப்பு

அன்றைய இரவு இனிமையாய்க் கழிந்தபின், மறுநாட் காலையில் மன அமைதியோடு எழுந்த சோமகாந்தன் தன் நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு முனிவரிடம் வந்து அவரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். முனிவரும் அவ்வரசனை அன்புடன் நோக்கி, தம் ஞான திருஷ்டியால் உணர்ந்த அவன் முற்பிறப்பை எடுத்து மொழியலானார்:

"சோமகாந்த, போன ஜன்மத்தில் நீ வைசிய குலத்தில் பிறந் திருந்தாய். அப்போது உன் பெயர் காமந்தன்; உன் தந்தையார் பெயர் சித்ரூபன்; தாயார் பெயர் சுலோசனா. இளமையில் குடும்பினி என்பாளை மணந்தாய். உன் தாய் தந்தையர் உயிரோடு இருந்தவரை ஒழுங்காக இருந்த நீ, குடும்பினியிடம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏழு பிள்ளைகளையும் ஐந்து பெண்களையும் பெற்ற பின்னும் தன் பெயருக்கேற்றாற்போல காமம் மிகுந்தவனாய் விலைமாதர் பொருட்டு உன் செல்வம் அனைத்தையும் தொலைத்தாய். உன்னிடம் கள்ளுண்ணல், பொய்யுரைத்தல், களவாடுதல், கற்பழித்தல், கொலைசெய்தல் போன்ற கொடிய செயல்கள் குடிகொண்டன. உன்னைக் கண்டு அஞ்சிய மக்கள் அரசனிடம் முறையிட்டனர். அது கேட்டு வெகுண்ட அரசன் உன்னைப் பிடித்து அரசவைக்குக் கொணருமாறு ஆக்ஞை செய்தான். அஃதறிந்த நீ அரச தண்டனைக்கு அஞ்சி அருகில் உள்ள காட்டில் கரந்துறையத் தொடங்கினாய்; கொள்ளையடித்த பொருள்கள் உன்னிடம் ஏராளமாகச் சேர்ந்துவிட்டன. மூட்டை மூட்டையாகப் பொன்னும் மணியும் நகைகளும் இருந்தன. ஆயினும் என்? மன அமைதியின்றி அலைந்தாய். உன்பசியைத் தீர்த்துக் கொள்ள பறவைகள் விலங்குகள் ஆகியவற்றைக் கொன்று சில சமயம் பச்சையாகவும் சிலசமயம் வேகவைத்தும் உண்டாய். இவ்வாறு தறிகெட்டு ஒழுகும் நாளில் ஒருநாள் அக்காட்டின் வழியே ஓர் அந்தணன் வந்தான். அவனைக் கண்டவுடன் கடிதோடிப் புலியெனப் பாய்ந்தாய்; உன் கரத்தில் இருந்த கத்தியையும் முகத்தில் இருந்த கோபக் கொடுமையையும் வெள்ளமென வரும் வேகத்தையும் கண்ட அந்தணன் கலங்கினான்; ஓடித் தப்ப முடியாது என்று உணர்ந்தான்; ''என்னிடமுள்ள கொஞ்சப் பொருளையும் கொடுத்து விடுகிறேன்; மறைக்காமல் தந்துவிடுகிறேன்; என்னைக் கொன்று விடாதே; இப்போதுதான் திருமணம் செய்து கொண்டேன்; ஏதுமறியாத என் மனையாள் பொருட்டாவது என்னை உயிருடன் விட்டு விடு'' எனக் கதறினான். அவன் கூக்குரல் யாவும் செவிடன் காதில் சங்கொலியேயாயின; நீயோ அவ்வந்தணனைக் கொடு வாளால் வெட்டி வீழ்த்தினாய்; அவனிடமிருந்த பொருளை அபகரித்துக் கொண்டாய்; அவ்வளவில் உன்னை பிரமஹத்தி தோஷம் பிடித்துக்கொண்டது.

''அன்றுமுதல் நீ எத்திசை நோக்கினும் அச்சுறுத்தும் பொருள்கள் தோன்றின. அருகிலேயே வந்து ஒரு பூதம் அறைவதுபோலத் தோன்றும்; இருளினூடே திடீரென்று எரிநெருப்புத் தோன்றி நின்னை வாட்டும்; பாறையொன்று மார்பிலேறி நின்று அழுத்துவது போல் தோன்றும்; அலறுவாய், கண்களைத் திறந்தால் உன்னால் கலக்கமுற்று ஆருயிர் இழந்த காரிகையர் கரும்பேய்கள் என எதிரில் தோன்றிக் கோரமாக நகைப்பர்; கண்களை மூடினாலோ உன்னால் ஆறலைக்கப்பட்ட ஆடவர் அனைவரும் கோடி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குரூர வடிவம் கொண்டு உன்னைச் சுற்றி நின்று எள்ளி நகையாடுவர்; எங்கெங்கு நோக்கினும் எண்ணிலாக் கூளிகள்; என் செய்வாய்? கடந்ததை எண்ணி எண்ணி இரங்கினாய்; அழுதாய்; ஓலமிட்டாய்; எங்கெங்கும் ஓடினாய்; இறையேனும் அமைதியின்றிப் பித்தானாய்; உள்ளம் தளர்ந்தது; உடல் தளர்ந்தது. நீ ஈட்டிய செல்வம் எதிரே நின்று இளித்தது. பொன்னும் மணியும் 'பொய் பொய்' எனப் புலம்பின. நீயோ செய்வதேதென அறிவிழந்து நின்றாய்; காலவெள்ளம் கடுகிக் கரைந்தது; உன்னை இருமலும் ஈளையும் பீடித்தது.

"அப்போதுதான் உன் மனைவியின் நினைவு உனக்கு உண்டாயிற்று; உன் ஆட்களில் சிலரை நகருக்கு அனுப்பி உன் நிலையை அவளுக்கு எடுத்துரைக்கச் செய்தாய். ஆனால் அவளோ அரசன் ஆணைக்கு அஞ்சி உன்னைப் புறக்கணித்தாள். பெண்டு பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்ட நீ, உண்மையை உணரத் தொடங்கினாய்; விலைமாதரைச் சேர்ந்து, கொலையே புரிந்து, தலைமறைவாய் வாழும் நிலையையுணர்ந்து வெறுப்படைந்தாய். 'இனி வாழ்வதெவன்?' என்ற நிலையில் அவ்வழிச் சென்ற அந்தணன் ஒருவனைக் கண்டாய். தரித்திரமெல்லாம் ஓர் உருவம் தாங்கி வந்தது போன்றிருந்த அவ்வேதியனைக் கண்டதும்

'மூட மதியால் விளைந்த துன்பெல்லாம்
வாட வேதியற்கு வள்ளண்மை செய்வாம்'

என்றெண்ணி அவனைக் கூவி அவனால் தூக்கிச் செல்லக்கூடிய அளவுக்கு ஏராளமான பொன்னும் பொருளும் அளித்தாய். இலம்போடு ஓங்கிய முப்புரிநூல் மார்பனும் உன்னை இன்னான் என அறியாது அளித்த பொருளைக் களிப்போடு பெற்றுத் தன்வழிச் செல்ல முனைந்தான். தானம் செய்தலால் தன்வினை நீங்கும் என எண்ணிய நீ, மீண்டும் அவனை நோக்கி, 'நல்குரவால் நாளும் நலியும் மறையோர் பலரை ஈண்டழைத்து வருவா யாயின் அவர்களுக்கும் இவ்வாறே வழங்குவேன்' எனக் கூறி மேலும் பல சான்றோரை அழைத்து வருமாறு அவ்வந்தணனிடம் பிரார்த்தித்தாய். அவனும் அவ்வாறே அந்தணர் பலரை அழைத்து வந்தான்.

"ஆனால் வறுமையிலும் செம்மை நிலை நீங்காத விப்பிரர்கள் உன்னைக் கண்டதும் இன்னான் என உணர்ந்தனர். கொலையும் கொள்ளையும் பாவமும் பழியும் செய்துசெய்து பழகிய உன் கையால் தானம் பெறுதல் தகாது எனக் கொதித்தனர். அப்போது தவறான வழியில் வந்த தனத்தைத் தானமாகப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெற விழையாத பெருந்தகையாளர்களை நோக்கிக் கழிவிரக்கம் கொண்ட நீ கலங்கி,

'எவ்வுயிராயினும் இதமான அருள் அளிக்கும்
செந்தண்மை பூண்ட அந்தணர்களே, யானுமோர்
உயிர் என்பதை எண்ணி எனக்கும் அருள்
பாலிக்க வேண்டும்'

என்று கதறினாய்.

"பண்ணிய பாவங்களை எண்ணிக் கதறும் உன்னைக் கண்டு இரங்கிய அவர்கள் அருகில் இருந்த ஆனைமுகத்தோன்தன் சிதிலமடைந்த சினகரம் ஒன்றைக் காட்டிப் புனர்நிர்மானம் செய்து உய்யுமாறு புகன்றார்கள்.

"அவாவறுத்த அன்புளம் கொண்ட அந்தணாளர்கள் அருளிய வாக்கே வேதவாக்காகவும் தேவ வாக்காகவும் கொண்ட நீ உடனே சிற்பநூல் வல்லோர் பலரை வருவித்தாய்; ஆகமம் உணர்ந்த அந்தணர் பலரை அழைத்துவந்தாய்; கலைவளம் கொழிக்கும் சிலைவளம் மிகுந்த ஆலயத்தை அமைத்தாய்; அருளாளன் அமர்ந்திருக்கும் கருவறையை ஆகம நெறிப்படி ஆக்குவித்தாய்; ஆதியும் அந்தமும் அற்ற ஆனைமுகத்தானுக்குச் சிறப்பும் பூசனையும் செழித்தோங்கச் செவ்வனே திட்டமிட்டு ஆலயநெறியைக் காக்க ஆதிசைவரை நியமித்தாய். பொல்லா வழியில் வந்த செல்வமெல்லாம் எல்லாமாய் நிற்கும் எம் பெருமானுக்கே செலவழித்தாய்; கணபதியின் பாதமே கதி என்று கடைசிவரை பக்தியோடு வாழ்ந்தாய்;

"இறுதிக் காலம் நெருங்க இயமனுலகு புகுந்தாய்; தனக்கு விதித்த தருமத்தினின்றும் இம்மியும் தளராத அறநிலை அந்தகன் நீ செய்த நல்வினை தீவினைகளைச் சமன்செய்து சீர் தூக்கும் துலாக்கோல் போல ஆழ்ந்து ஆய்ந்தான். ஆவி பிரியும் அந்திம காலத்தில் ஆனை முகத்தானை அடிபணிந்து ஆலயம் செப்பனிட்ட அரிய நல்வினையால் அவனி போற்றும் அரசனாய்த் தோன்றுக எனவும், நாளும் நாரியரை அலைத்து அறவழி கொன்று பூரியர் ஒழுக்கமே கொண்டு பாதகங்கள் பலவும் செய்த பாடுறு தீவினையால் தீரா நோய்கொண்டு தரணியில் வாடுக எனவும் நிர்ணயம் செய்தான்.

"அவ்வாறே நீ இப்பிறவியில் எழில்மிகு அரசனாய்த் தோன்றித் தொல்லைமிகு தொழு நோயால் வாடுகின்றனை. இவ்வாட்டம் தீர விநாயகப் பெருமானை வழிபடுவதே ஏற்ற வழியாகும்."

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூர்வாய்ப்புட்கள் கொத்திய கொடுமை

நல்வினை தீவினை என்ற இருவினையும் அறுதலால் விளங்கித் தோன்றும் ஞான ஒளி உணர்த்த உணர்ந்து, பிருகு முனிவர் கூறிய கூற்றில் சற்றே ஐயம் கொண்டான் அவ்வரசன். ஆசங்கை கொண்ட அக்கணமே அவன் உடலெங்கும் சிறுசிறு வெடிப்புகள் தோன்றின. ஒவ்வொரு வெடிப்பினின்றும் கூர் வாய்ப் *புட்கள் பல தோன்றின. அவை அவனுடலைக் கொத்தி அணுஅணுவாக்கித் தின்னத் தொடங்கின. அவ்வளவில் சோமகாந்தன் அடியற்ற மரம்போல ஆசறு தவமுனிவரின் பாதங்களில் வீழ்ந்தான். அருள்மிகு ஆன்றோர் வாக்கில் அணுவளவு ஐயம் கொளினும் வருந்துன்பம் மலையளவென்று தெளிந்தான். "அபயம் அபயம்" என அவர்தம் உபய பாதங் களைப் பற்றிக் கொண்டான். தன்னடி அடைந்தவர் தக்கவரல்லர் எனினும் தயைமிகு தவத்தோர் அவரை வெறுத்து ஒதுக்க மாட்டார்கள். பிருகு முனிவரும் மனம் கனிந்து ஒரு ஹுங்கார ஒலியெழுப்பினார். அவ்வொலி அண்டமுகடு வெடித்ததோ என்னுமாறு பேரொலியாயிருந்தது. அதனைக் கேட்ட அனைவரும் நடுங்கினர். புவியரசனின் புல்லுடலினின்றும் புறம்போந்த புட்கள் ஹுங்கார ஒலி கேட்டு ஒடுங்கின; பேரச்சம் கொண்டு விண்ணுக் குள்ளே பறந்து கண்ணுக்குத் தெரியாமற் போயின.

பிரம்மஹத்தி நீங்கியது

முனிவர் பெருமானும் கமண்டலத்து நன்னீரைக் கரத்தில் தேக்கி கணபதி தியானம் செய்து மூவா முதல்வரின் மூல மறையை உருவேற்றிச் சோமகாந்தன்மீது புரோக்ஷணம் செய்தார். அவ்வளவில் அவன் உடம்பினின்றும் அச்சம்தரும் ஆங்கார வடிவம்கொண்ட பூதமொன்று வெளிப்பட்டது. விண்ணுக்கும் மண்ணுக்குமாய் நின்ற அந்நெடிய பூதம் பசியால் அலறியது; சோமகாந்தனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் விழுங்கிவிட விரைந்தது.

அதனைக் கண்ட பிருகு முனிவர் மற்றுமோர் ஹுங்காரத்தால் அப்பூதத்தை அடக்கி அதன் வரலாறு யாதென வினவினார். அது சோமகாந்தனைக் குறிப்பிட்டுக் காட்டி, 'முன்னைப் பிறவியில் இவன் என்னை வெட்டிக் கொலை செய்தான்; அன்றே பிரமஹத்தியாகி இவனைப் பீடித்தேன். இன்றுவரை இவனை விடாதிருந்தேன்; தங்கள் மறையுருவேறிய புனிதப் புனலால் இவனுடலை விட்டு வெளிப்போந்தேன். இப்போது பெரும்பசியால் உழல்கிறேன்; இவர்களை விழுங்கினாலல்லாமல்

*புள் - பறவை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்பசி மாளாது' என இடியோசை போன்ற குரலில் இசைத்தது. அதனைக் கையமர்த்தி, 'உன் பசிக்கேற்ற உணவை யானளிப்பேன்; இம்மரப் பொந்தில் இனிதே அமர்க' எனக்கூறி அருகில் இருந்த தருவொன்றைக் காட்டினார் தவமுனிவர். பூதமும் பணிந்து பொள்ளலில் புகுந்து உள்ளே இருந்தது. அவ்வளவில் அம்மரம் பற்றி எரிந்தது. பூதமும் தன் பூத உடலை விட்டுத் தெய்வ உருவாகி அப்பேரொளிப் பிழம்பினின்றும் வெளிப்பட்டு பிருகு முனிவரின் பாதாரவிந்தங்களில் பணிந்து "கருணையங்கடலே, ஆயுதத்தால் அகால மரணமடைந்து பிரமஹத்திப் பிசாசாய் அலைந்துகொண்டிருந்த எனக்கு விடுதலை அளித்துக் காத்த பேரருட்பிழம்பே; தங்கள் தரிசனம் ஒன்றே எனக்கு இத்தகைய பெரும்பேற்றைத் தருமாயின் தங்கள் பெருமையை விளக்கிக் கூற யாரால் இயலும்?" எனப் பலவாறு புகழ்ந்து போற்றி ஆனந்தக் கூத்தாடியது. அப்போது விநாயகர் உலகினின்றும் விமானம் ஒன்று வந்தது. பூத உடல் விட்டுப் புனித உடல் பெற்ற அத்தேவன் அவ்விமானம் ஏறிக் களிற்று முகக் கணபதியின் உலகெய்தினான். இவ்வதிசயங்களைக் கண்ட அனைவரும் பிருகு முனிவரின் அருள் திறத்தையும் தெய்வீக சக்தியையும் போற்றிப் பணிந்தனர்.

அப்போது பிருகு முனிவர் சோமகாந்தனை நோக்கி, "அரசனே இப்போது உன்னைப் பீடித்திருந்த பிரும்மஹத்தி அகன்றுவிட்டதைக் கண்டாய்; இவ்வாறே உன் உடலை வருத்தி அணு அணுவாய்ச் சிதைக்கும் அருவருக்கத்தக்க பெரு நோயும் பகலவன்முன் பனிபோல அழிந்துவிடும். அதற்கொரு வழி சொல்கிறேன்; கேள்; இடையூறுகள் அனைத்தையும் இல்லாதொழிக்கும் ஸர்வ வல்லமையுள்ள விநாயக மூர்த்தியின் பெருமைகள் யாவற்றையும் விளக்கும் விநாயக விஜயத்தைச் சிரத்தையுடன் கேள்; பக்தியுடன் போற்று; அவ்வரலாறு இம்மையில் வேண்டிய எல்லா நன்மையும் பயக்கும்; மறுமைக்கு வேண்டிய புண்ணியம் யாவும் தரும்; அப்பழம்பெரும் வரலாற்றின் பெருமையெல்லாம் ஆயிரம் நாப்படைத்த அனந்தனாலும் முற்ற எடுத்துக் கூற இயலாது எனின் அதன் பெருமையை நீயே கற்பனை செய்து பார்த்துக்கொள். இச் சிறந்த வரலாற்றைச் சிவபிரான் பிரமதேவருக்கு உரைத்தார்; பிரமதேவர் வேத வியாசருக்கு எடுத்துக் கூறினார்; வசிஷ்ட மஹாமுனிவரின் வழித் தோன்றலான வியாசர் எனக்கு உபதேசம் செய்தார். அதனை இப்போது உனக்கு உபதேசம் செய்கிறேன். நீ சென்று நீராடி நித்யாஹ்நிகங்களை முடித்துக் கொண்டு வருக" எனக் கட்டளையிட்டார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தொழுநோய் தொலைந்தது

சோமகாந்தன் தன் மனைவி சுதன்மையுடனும் இரு அமைச்சர்களுடனும் அருகில் இருந்த பிருகு தீர்த்தத்தை அடைந்தான். அல்லி, செந்தாமரை முதலிய மலர்கள் பூத்து ரமணீயமாக அப்புஷ்கரிணி காணப்பட்டது. அதன் நான்கு கரைகளிலும் ஓங்கி உயர்ந்த மரங்கள் அதற்கு அரணாக நின்று கதிரவன் வெப்பம் காணாத சோலைகளாகப் பரிணமித்தன; பூவையும் கிளியும் இனிய கீதம் பாடின; மயில்கள் ஆங்காங்கு ஆடிப் பயின்றன. இயற்கைத் தாயின் எழிலெல்லாம் ஒருங்கே இணைந்து ஒருருக் கொண்டது போன்ற அவ்விடம் மிக்க மன அமைதியைக் கொடுத்தது, கலக்கம் இல்லாத தெளிந்த பளிங்கு போன்ற தடாக தீர்த்தத்தில் அவர்கள் திருமுழுக்காடி நிமிர்ந்து நின்றார்கள். ஆஹா! எப்பேர்ப்பட்ட அதிசயம்!! தொழுநோயுற்று அணுவளவும் இடமின்றிப் புண்ணால் நிறைந்திருந்த சோமகாந்தனின் உடல்நோயெல்லாம் ஒழிந்தது. அவனுடைய உடலும் அவன் பெயருக்கேற்ப இளநிலாவின் இன்னொளி வீசும் மெய்யாகத் தோற்றமளித்தது; முடைவாடை வீசும் புண்கள் மறைந்து ஸுகந்த மணம் வீசியது. சோமகாந்தன் தானடைந்த பெரும்பேற்றை எண்ணி எண்ணி மனம் விம்மினான்; ஆனந்தக் கூத்தாடினான்; பிருகு முனிவரின் ஆசிரமத்துக்கு ஓடோடி வந்து அவருடைய பாத கமலங்களில் பணிந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கி நின்றான். பின்னர் ஒருவாறு தன்னிலைக்கு வந்து பிருகு மகரிஷியை நோக்கி, "தேவரீர் கருணாவிலாசத்தால் என்னை அண்டிய தீயன யாவும் பெரு நெருப்பில் சிறு தூசுபோல் அழிந்தன; விநாயக விஜயத்தைக் கேட்க வேண்டும் என்ற உறுதி பூண்ட உடனேயே யாவரும் வெறுக்கும் தொழுநோய் அகன்றது; தேவரீர் திருவாக்கால் வினையறுக்கும் விநாயக மூர்த்தியின் பெருமைகளையெல்லாம் கேட்பதால் என் ஜன்மம் ஸாபல்யமாகி மிக உயர்ந்த நிலையை எய்துவேன் என்பது உறுதி. புழுவுக்கும் கீழான அற்பன் யான்; ஆயினும் என்னையும் ஒரு பொருட்டாகக் கருதிச் செய்த உதவிக்கு ஏழேழ் பிறப்பும் கடப்பாடுடையேன். யானும் என்னை வியாஜமாகக் கொண்டு உலகமும் உய்யுமாறு வினையெல்லாம் தீர்க்கும் விநாயகப் பெருமானின் ஸகல கல்யாண குணங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெள்ளிதின் விளங்குமாறு திருவாய் மலர்ந்தருள வேண்டுகிறேன்" எனக் கல்லும் கரைந்துருக வேண்டினான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தவ சிரேஷ்டரான பிருகு முனிவர் மன்னவன் நிலையைக் கண்டு கனிந்த மனத்துடன் அவனை அருகில் அழைத்து அங்க மெல்லாம் ஆதுரத்துடன் தடவிக் கொடுத்து அன்பொழுக மதுரமான வார்த்தைகள் சொல்லி ஆசி கூறினார். அரசனும் அரசியும் அமைச்சர்களும் அருந்தவ முனிவரின் சொல்லமுத மழையில் திளைத்து இன்புற்றனர். முனிவரும் விண்முட்டும் புகழ் வாய்ந்த விநாயகர் பெருமைகளையெல்லாம் முறையாக எடுத்துச் சொன்னார்.

2. வேத வியாசர்

வேத வியாசர் தோற்றம்

முன்னொரு கல்பத்தில் தரணியில் தழைத்து வந்த தருமம் தாழ்ந்தது; மண்ணவர் தருமத்தை மறந்தனர்; மனம்போன போக்கெல்லாம் போகத் தொடங்கினர்; மறமே மிகுந்தது. விண்ணவரும் வித்தகரும் வேத நெறி பிறழ்ந்தனர். பல்லாயிர மாய்ப் பரந்து மலைபோல் குவிந்திருந்த வேதங்கள் யாவற் றையும் ஓதி உணர்ந்து செயற்பட்டு ஞானம் பெற்றுப் பிறவிப் பயன் பெற ஒருவருக்கும் பொறுமை இல்லை. எனவே, நற் செயல்கள் அருகின; தீச்செயல்கள் பெருகின; தெய்வ பக்தி சிதைந்தது; உணவுண்ணலே குறி; உயிர் வாழ்வே குறி; தன்னலமே குறி; பரநலமோ பறியாயிற்று. எனவே பதினான்கு உலகும் முறைதடுமாறி நின்றன; ஆன்ம கோடிகள் அரிதாய பேருண்மையை அறிய அவாக் கொள்ளாது 'கண்டதே காட்சி; கொண்டதே கோலம்' என எண்ணி ஓர் வரையறையின்றி வாழ்ந்து வந்தனர்.

அண்டமெலாம் உண்டாக்கும் கைவண்ணமிக்க அயனும் அவற்றையெல்லாம் காக்கும் பொறுப்புமிக்க நாரணனும் மிகவும் கவலை கொண்டனர். நிலைமையைத் திருத்த முடியாமல் எம்பெருமான் வீற்றிருக்கும் கைலை மலையடைந்து தங்கள் கவலையைப் புகன்றனர். எம்பெருமான் நாரணனை நோக்கி, "உலகை நிலைபெறுமாறு நிறுத்தும் நாரண, நீயே நிலவுலகில் அம்சாவதாரம் செய்து மறைநெறியைப் போற்றி மறைகளை யெல்லாம் தொகுத்தும் வகுத்தும் பிரித்தும் புணர்த்தும் ஓதி மக்களின் அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞ்ஞானத்தை மேம் படுத்துக. மேலும் ஆகமம், பதினெண் புராணம் ஆகியவற்றை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எம்மிடம் நந்தி உபதேசமாகப் பெற்றான்; அந்நந்தியிடம் சனகாதி முனிவர்கள் அவற்றை உபதேசமாகப் பெற்றிருக் கிறார்கள். அம்முனிவர்களிடம் அவற்றை நீயும் உபதேசமாகப் பெற்று லோகோபகாரமாக அவற்றைத் தெளிவாக எடுத்துச் சொல்லி உயிரினங்கள் உயர்வு பெறச் செய்வாயாக'' எனக் கூறினார். திருமாலும் அவ்வாறே செய்வதாகக் கூறினார். பிறகு யாவரும் தத்தம் இருப்பிடம் சென்றனர்.

நிலவுலகில் பராசர முனிவர் ஒருநாள் ஓடத்திலேறிக் கங்கை யைக் கடந்தார். அந்த ஓடக்காரனின் மகள் மச்சகந்தி என் பாளும் அப்படகில் வந்துகொண்டிருந்தாள். அப்போது வானவெளியை ஆராய்ந்த அம்முனிவர் நாள்களும் கோள் களும் விசேஷமாக இணைந்து நல்லதொரு முகூர்த்தத்தை உண்டாக்குவதை உணர்ந்தார். அவ்வேளையில் ஒரு கரு உருவானால், பிறக்கும் குழந்தை பெரிய ஞானியாக இருக்கும் என்பதையும் உணர்ந்தார். ஆகவே ஓடக்காரனை அணுகி அவனோடு பேசி அவன் மகளாகிய மச்சகந்தியை அடைந்தார். பராசர முனிவரின் பைந்திருமேனி படுதலால் பரிமளகந்தி யானாள் மச்சகந்தி. அச்சுப வேளையில் மஹாவிஷ்ணுவின் அம்சத்தோடு கூடிய கருவுண்டாயிற்று. அக்கரு குழந்தையாகிக் பிறக்கும் போதே தண்டம் கமண்டலம் ஆகியவற்றுடன் பிறந்தது. கருவிலே திருவுடைய அக்குழந்தை வேதம் முதலியவற்றை ஓதாதுணர்ந்து 'தவத்திற் சிறந்ததோர் செல்வமில்லை' எனத் தெளிந்தது. அதனால் அக்குழந்தை தன் தாய் தந்தையரிடம், 'தவமியற்றித் தூய்மையுற்று மேதினியோர்க்கு மெய்யறிவூட்ட விழையும் எனக்கு விடை தரல் வேண்டும்' என வேண்டியது. பராசரரும் பரிமளகந்தியும் ஒப்புதல் அளித்தனர். அக்குழந்தைப் பிரான் இலந்தை மரங்கள் நிறைந்த வதரி வனம் சென்றார். அங்கு ஓர் ஆசிரமம் அமைத்துக்கொண்டு அருந்தவம் புரிந்து வந்தார். அதனால் அவருக்கு வாதராயணர் என்ற பெயர் ஏற்பட்டது.

மலைமலையாய் நிரம்பியிருந்த வேதங்கள் யாவும் அவர் அகத்தே ஸ்புரித்தன. ஆதியும் அந்தமும் அற்ற ஆரணங்கள் அனைத்தையும் அவனி மாந்தர் ஓதி உணர்தல் அரிதென உணர்ந்த வாதராயணர் வேதங்கள் யாவற்றையும் முறைப் படுத்தித் தொகுத்து நான்காய் வகுத்து கற்போருக்கு எளிமை யாயிருக்கப் பகுதி பகுதியாகப் பிரித்து பொருள் விசேடம் சிறக்கப் புணர்த்து நிலைப்படுத்தினார். அதனால் வாதராயணருக்கு வேத வியாசர் என்ற பெயரும் உண்டாயிற்று.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பின்னர் அவர் சனற்குமார முனிவரை அடுத்துப் பதினெண் புராணங்களையும் ஓதி உணர்ந்தார். அவற்றையும் சாமான்ய மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் பொருட்டு காவியமாகப் பாடத் தொடங்கினார். ஆனால் அக்காவியங்களின் தொடக்கத்திற்கு உகந்த ஒரு சுலோகத்தைக் கூட அவரால் இயற்ற இயலவில்லை; இயற்றிய சுலோகங்களும் ஒன்றுக்கொன்று தொடர்பற்றும் முரண்பாடு மிகுந்தும் கருதிய கருத்துக்கு எதிரான பொருள்தந்தும் ஐயம் திரிபுகள் மலிந்தும் இருந்தன. கடலெனப் பரந்து கிடந்த வேதங்களுக்குக் கரைகட்டி மெய்ப்பொருள் இன்னதென விளங்கக் கூறிய வேத வியாசர், தாம் சனகாதி முனிவர்களிடம் உபதேசமாகக் கொண்ட புராணங்களை உட்பொருள் விளங்கும் வண்ணம் பாட இயலாது தவித்தார். அந்நிலைபற்றிப் பற்பல நாட்கள் யோசனை செய்தார்; அவருக்குக் காரணம் தெரியவில்லை; மனக்குழப்பம் மிகுதியாயிற்று.

விளக்கமுற்ற வேத வியாசர்

மறை முறைகள் அனைத்தையும் வரைமுறை செய்த வேத வியாசர் தம் ஐயங்களையும் குழப்பங்களையும் தீர்த்துக்கொள்ள எண்ணிச் சத்தியலோகம் சென்றார்; நான்முகப் பெம்மானைப் பணிந்து தம் இடர்ப்பாடுகளை எடுத்தியம்பினார். நான்முகனும் சற்றே தியானம் செய்து பின், ''ஆனை முகத்து அண்ணலை அகத்தில் போற்றினாயோ?'' என்றார். ''இல்லை'' என்ற வாதராயணர் வியப்படைந்தார். அப்போது பிரமன் கூறுவார்:

''மெய்ப்பொருளின் கருவாய் நிற்பவர் கணபதி
மறைகளின் மூலமாய் நிற்பவர் கணபதி
தடைகளைப் போக்கும் தாளாளன் கணபதி
ஐயமும் திரிபும் ஆவார் கணபதி
அவற்றை நீக்கி ஆண்டுகொள்வார் கணபதி
குற்றம் பொறுக்கும் குணபதி கணபதி
பண்ணிய புண்ணியம் பல்கிட கணபதி
எண்ணிய எண்ணம் ஈடேற கண்பதி

ஆகையால் முழுமுதற் கடவுளாகிய கணபதியைப் போற்றித் தொடங்கும் காரியங்கள் யாவும் தடையின்றி முடியும். கணபதியைக் கருதாது செய்யும் செயல்கள் யாவும் இடையில் முறியும்'' எனக் கூறி நிறுத்தினார். வாதராயணரின் முகத்தை நோக்கிய மலரவன் அவர் மனத்துள் கருதிய எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்டார். பிறகு தொடர்ந்து ''ஆதிப் பரமன் அருளிய மறையெல்லாம் வகுத்தளித்தபோது களிற்றுமுகனைப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பேணாதே செய்தேன்; ஆயினும் அஃது 'தெளிவாய் முடிந்ததே' என்று கருதுகின்றாய். அஃது அவ்வாறல்ல; கணபதி பிரணவ ஸ்வரூபி; ஓங்காரம் அவரைப் போற்றும் ஏகாக்ஷர மந்திரம்; வேதத்தைத் தொடங்கும்போதும் முடிக்கும்போதும் ஓங்கார மந்திரத்தைச் சொல்வது மரபு. அம்மரபை ஒட்டியே நீயும் வேதங்களை வகுத்தபோது ஓங்காரத்தை முதலிலும் கடையிலும் நிறுத்தித் தொகுத்து வைத்தாய். ஓங்காரமே கணபதியைத் தொழுததாயிற்று. ஆகையால்தான் அப்போது உன் பணிக்கு எவ்வித இடையூறும் நேரவில்லை. இப்போது நீ புராணங் களைப் பாடத்தொடங்கிய போது ஓங்காரத்தை விலக்கினாய்; அவ்வாறே ஆனைமுகனைக் கருதாது தொடங்கினாய். எனவே குழப்பங்களும் விக்கினங்களும் தோன்றின. ஆனைமுகனை ஆச்ரயித்து விக்கினங்கள் நீங்கிப் பேறு பெற்றவர் பல்லோர். ஆகையால் கணபதியைக் கைதொழுது ஏகாக்ஷர மந்திரத்தை இயம்பி உருவேற்றி மனத்தால் அவருருவைத் தியானித்து மீண்டும் உன் பணியைத் தொடர்க'' என்றார்.

வேதவியாசரும் நான்முகனாரிடத்தில் விநாயகப் பெருமானின் ஏகாக்ஷர மந்திரத்தை உபதேசம் பெற்று நீண்டகாலம் தவம் செய்தார். தவத்திற்குருகிய தந்திமுகன் வியாசருக்கு பிரத்யக்ஷ மாகி அருள் புரிந்தார். வியாசரும் பதினெட்டு புராணங்களையும் பதினெட்டு உபபுராணங்களையும் இயற்றி உலகிற்கு உதவினார்.

3. விநாயகர் விவாஹம்

மும்மூர்த்திகளின் தோற்றம்

பல கோடி கல்பங்கள் தொடங்கி முடிந்துள்ளன. ஒவ்வொரு முடிவும் ஒவ்வொரு ஊழிக்காலம், ஆன்ம கோடிகள் இயங்கி இயங்கி, இளைத்து இளைத்து ஏங்கி நிற்கும் முடிவு. அந்நேரத்தில் பாவம் செய்தவர், புண்ணியம் செய்தவர், யோகிகள், போகிகள் என்றெல்லாம் பாகுபாடு இல்லை. யாவருக்கும் ஒப்பக் களையாற்றுவிக்கும் பெருங்கருணை கொண்ட முழுமுதல் அனைத்தையும் தன்னுள் ஒடுக்கிக் கொள்ளும். அனைத்துப் பொருள்களும் ஒன்றினுள் ஒன்று மறையும். ஒவ்வொரு தத்துவமும் தன்முதலில் இணைந்து இரண்டறக் கலக்கும். இறுதியில் மிஞ்சுவது ஒன்றே. அதுவே பராபரப்பொருள். அசைவற்றது போல் தோன்றும் அசாதாரண நிலை. எல்லாமாய் இருந்தும் ஒன்றும் இல்லாதது போன்ற

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சூன்யநிலை. கண்ணுக்கு எட்டா நிலை. கருத்துக்கு எட்டா நிலை. கற்பனைக்கும் எட்டா நிலை. அப்படிப்பட்ட ஒரு யுகாந்த காலத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி: பிரபஞ்சம் இயக்க மயமானது. எந்நிலைக்கும் ஒரு முடிவு உண்டு; எம்முடிவுக்கும் ஒரு தொடக்கம் உண்டு. முடிவு இது தொடக்கம் இது எனச் சுட்டி அறிவிக்க ஒண்ணாதது. அந்நிலையில் ஆதியும் அந்தமும் அற்ற பராபரப் பொருளில் ஒடுங்கி நின்ற பிரபஞ்சம் விரிந்து வெளிப்பட பராபரப் பொருளான விநாயக மூர்த்தியே திருவுளம் கொண்டார். அத்திருவுளப் பாங்கின்படியே யாவற்றையும் படைப்போனை முன்னே படைத்தார். படைத்த பொருள் களைப் பக்குவமாய்க் காக்கப் பரந்தாமனைப் படைத்தார். படைத்துக் காத்த பொருள்கள் பலவாய்ப் பெருகி வரையறை கடக்காமல் நிற்க அழிக்கும் ருத்ரனைப் படைத்தார். அவ்வாறு படைக்கப்பட்ட மூவரும் "தாம் யார்? எங்கிருந்து வந்தோம்? என் செய வந்தோம்?" என்றெல்லாம் எண்ணி எண்ணிக் குழப்பம் அடைந்து நின்றனர். அக்குழப்பம் நீங்கப் பராபரப் பொருளான ஆனைமுகத்து விநாயக மூர்த்தியைச் சித்தத்தில் நிறுத்தித் தவம் முனைந்தனர். இவ்வாறு ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன.

முத்தொழில்

தவம் முற்றத் தலைப்பட்டபோது தானொருவனேயாகி நின்ற விநாயகப் பெருமான் அவர்கள் முன் தோன்றி அவர்கள் செய்யவேண்டிய பணிகளை வகுத்துரைத்தார். நான்முகனுக்கு சிறிதே அழித்து நிலைமாற்றி பெரிதும் படைக்கும் தொழிலைப் பகுத்தளித்தார். படைத்த பொருளை எல்லாம் சிறுச்சிறிதே நிலைமாற்றி வளர்ச்சி பெறச் செய்து பொதுத்தன்மை மாறாமல் காக்கும் தொழிலை நாரணனுக்கு நல்கினார். படைத்துக் காத்த பொருளெலாம் காலப்போக்கில் பயனற்றுக் குப்பையாய் நிற்கும் காலத்து அவற்றை மீண்டும் புதுப்பிக்கும் புனித மனத் தோடு முற்ற அழித்து மூலப்பொருளாய் மாற்றும், அழிக்கும் தொழிலை ருத்ரமூர்த்திக்கு வழங்கினார். மீண்டும் அம்மூலப் பொருள்கொண்டு படைக்கும் தொழிலைப் பக்குவமாய்ச் செய்ய பிரமனை அறிவுறுத்தினார். ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் ஏற்ற மூவரும் விநாயக மூர்த்தியின் விரைமலர்ப் பாதம் பணிந்தனர். பின்னர் பிரமன் ஆனைமுகத்து அண்ணலை நோக்கி, "படைத்தல் தொழிலைத் தொடங்குவது எவ்வாறு? எவ்வாறு தொடர்வது? எங்குக் கொண்டு முடிப்பது? எவ்வகைப் படைப்புகளைத் தோற்றுவிப்பது? என்றபடி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

யெல்லாம் என் மனம் குழம்புகின்றது. அக்குழப்பம் நீங்க அத்தொழிலின் நுட்பம் அனைத்தையும் யானறிய உணர்த்த வேண்டும்'' என்று வேண்டிப் பணிந்தான்.

விசுவரூபம்

அதனைச் செவியுற்ற விநாயகப் பெருமான் முப்பெரும் தலைவர்களுக்கும் தமது விசுவரூபத்தைக் காட்டக் கருதினார். ஆகையால் முதலில் நான்முகனைத் தம் துதிக்கையால் பற்றி எடுத்து விழுங்கினார். அந்த ஆச்சரியத்தைக் கண்ட நாரணனும் ருத்ரனும் திகைத்து நின்றனர். அப்போது மீண்டும் ஆனை முகத்து எம்பெருமான் ருத்ரனையும் நாரணனையும் பற்றி எடுத்து விழுங்கினார். பராபர முழுமுதலின் உதரத்தில் முத் தொழில் முனைவர்களும் வியப்புடன் இயங்கத் தொடங்கினர். அங்கு அவர்கள் காணாத பொருளில்லை; நோக்காத இயக்கம் இல்லை. உணராத சேர்க்கை இல்லை. அடுக்கடுக்காய் அண்டங் களைக் கண்டனர். எத்துணை தூரம் செல்லினும் ஒரு முடிவில்லை. புதிய புதிய தோற்றங்கள்; புதிய புதிய தத்துவங்கள்; புதிய புதிய சேர்க்கைகள்; எல்லாப் பொருளும் ஒன்றுடன் ஒன்று ஏதோ ஒரு வகையில் தொடர்புற்றதாய் இருந்தன; ஒன்றையொன்று விழுங்குவன; ஒன்றிலிருந்து ஒன்று தோற்றுவன; வித்தின்றி விளைவன; இடமின்றிப் பல்குவன. கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாப் பருப்பொருள்கள்; அணுவாணுப் பொருள்கள். எம் பெருமான் உதர விந்தையை உரைத்தல் ஒருவராலும் இயலாது. நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்த அண்டப்பகுதிகள் யாவும் அசுர வேகத்தில் சுழன்று கொண்டிருந்தன. பிரபஞ்ச சிருஷ்டி தத்துவம் பிரமனுக்குப் புரியத் தொடங்கியது. நாரணனும் காத்தல் தொழிலுக்குச் சித்தனானான். உருத்திரனோ யாவற்றையும் நீறாக்கும் நெறியுணர்ந்தான். அவ்வளவில் ஆனை முகத்து எம்பெருமான் நான்முகனைத் தன் துதிக்கை வழியே வெளிப் படுத்தினார். வலக்காதின் வழியே உருத்திரனையும் இடக்காதின் வழியே நாரணனையும் வெளிப்படுத்தினார். புறவண்டத் துற்ற மூவரும் காணாமுன்னம் விநாயகப் பெருமான் மறைந் தருளினார்.

சிருஷ்டி ப்ராரம்பம்

பிரமன் சிருஷ்டித் தொழிலைச் செய்யத் தொடங்கி விட்டார். சிருஷ்டி தத்துவம் முழுவதும் தான் உணர்ந்துவிட்டதாக எண்ணிச் செருக்குடன் பலபொருள்களைத் தோற்றுவித்தார்; பல உயிர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

களைத் தோற்றுவித்தார்; ஆனால் ஒன்றாவது உருப்படியாய் இல்லை; ஒவ்வொன்றிலும் பல கோணல்கள்; ஒவ்வொரு கோணலும் ஆயிரம் ஆயிரமாகப் பெருகின; நான்முகன் நினைத்த படி எந்த உருவும் அமையவில்லை; விநாயகப் பெருமானின் வயிற்றினுள் கண்ட தத்துவங்கள் யாவும் அவர் நினைவில் நன்றாகவே இருந்தன. ஆயினும் அவரால் தன் இஷ்டப்படி உற்பத்தி செய்ய இயலவில்லை. மீண்டும் மீண்டும் படைத்துப் படைத்துச் சலித்தார்.

பிரமன் கர்வ பங்கம்

இறுதியில் எம்பிரானைச் சரணடைதல் அன்றி வேறு வழி யில்லை எனக்கண்டு, விநாயக மூர்த்தியைத் தியானித்தார். பல்லாண்டுகள் தியானத்தில் கழிந்தன, ஒரு நாள் தியானத்தில் அமர்ந்திருந்த பிரமனின் மனக்கண்ணில் ஆபூர்வமான ஒரு காட்சி தோன்றியது. அக்காட்சியில் எங்கும் கடல் வெள்ளம்; அலைகளின் ஆரவாரம். எங்கெங்கு நோக்கினும் நீர்; நீர்! நீர்!! நீர்!!! நீர் அன்றி வேறொன்றில்லை. நெடு நோக்கு நோக்கிய பிரமன் காலத்துக்கும் எட்டாத தொலைவில் ஒரு சிறு புள்ளி யுருவைக் கண்டார். அப்புள்ளி மெதுவாக நகர்ந்து பிரமனை நோக்கி நெருங்கி வந்தது. அருகில் வர வர அது ஒரு பிரம்மாண்டமான ஆலிலை என அறிந்தார். அவ்வாலிலைமேல் இளங்குழவியொன்று இன்றுயில் கொண்டு விளங்கியது. வியப்புற்ற விரிஞ்சன் விரைந்து சென்று அக்குழந்தையைத் தொட்டார். தொட்ட அளவில் அக்குழந்தை ஆனைமுகத்துடன் மலர்ந்தது. மூவரையும் படைத்த மூவா முதலே தனக்குக் குழந்தையாய்த் தரிசனம் தந்தது எனத் தெளிந்தார் பிரமன். தத்துவாதீதமான பராபரனின் பாதங்களில் பணிந்து படைப்புத் தொழிலில் பாதகமும் இடையூறும் ஏற்படா வண்ணம் அருள்புரிய வேண்டுமென்று பிரமன் பிரார்த்தனை செய்தார்.

குழந்தை உருவில் வந்த விநாயகர் பிரமனை நோக்கி, "படைப்புக் கலையில் வல்லமை பெற்றுவிட்டோம் எனக் கொண்ட செருக்காலேயே நின் படைப்புகள் பயனற்றனவாயின. மேலும் சிறு காரியமாயினும் இடையூறகற்றும் எம்மை வணங்கியே இயற்றத் தொடங்க வேண்டும் என்பதை உணர்ந்தும் மறந்தனையே. நின்தொழில் இடையூறின்றி இனிது நிகழ ஏகாக்ஷர மந்திரத்தால் எம்மைத் தியானம் செய்க. நினக்கு மனப் பக்குவம் வரும்போது நாமே முன் தோன்றி படைப்புத் தொழிலுக்கேற்ற சக்தியைக் கொடுப்போம்" எனக் கூறி மறைந்தார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிரமன் தவம்

மூவா முதலாய் விளங்கும் எம்பெருமானின் கட்டளைப்படி பங்கயத்தோன் ஏகாக்ஷர மந்திரத்தை உருவேற்றத் தொடங்கினார். பன்னிரண்டு வருஷங்கள் ஒற்றைக் காலில் நின்று கடுந்தவம் புரிந்தார். தவத்தின் செவ்வியுணர்ந்த விநாயகப் பெருமான் பிரம தேவருக்குக் காட்சியளித்து வேண்டும் வரங்களைக் கேட்கப் பணித்தார். பிரம தேவர் எம்பிரானைப் பணிந்து, "என்றென்றும் தங்களை மறவா வரம் வேண்டும். என் படைப்புத் தொழில் இடையூறும் இடையீடும் இன்றி இனிதாக நடக்க வரந்தரல் வேண்டும்" என வேண்டினார். விநாயகப் பெருமானும் அருள் கூர்ந்து அவ்வரங்களை அளித்து மேலும், "என் சக்திகளாகிய கிரியா சக்தியையும் ஞான சக்தியையும் உதவியாகக் கொண்டு படைப்பைத் தொடங்குக" எனக் கட்டளையிட்டு மறைந்தார்.

பிரமதேவர் மீண்டும் கிரியா சக்தியையும் ஞான சக்தியையும் குறித்துத் தவம் செய்தார். ஆண்டு பலவாயின. அவருடைய தவத்திற்குக் கட்டுண்ட கிரியா சக்தியும் ஞானசக்தியும் எழிலார்ந்த உருவமும் ஒளி வீசும் தோற்றமும் விளங்கித் தோன்ற இரு கன்னியர் உருவாய் பிரம தேவருக்குக் காட்சியளித்தனர். கன்னியர் உருவில் தோன்றிய சக்திகளைக் கமலத்தோன் பணிந்து, "என்னிடர் தீர்க்க வந்த சக்தி வடிவான கன்னியர்களே, என்னுடைய சிருஷ்டித் தொழில் இடையூறின்றியும் விரைந்தும் அழகுற நடக்க அருள வேண்டும். இப்போது அருள் சுரந்து என்னெதிர் தோன்றிய இன்னருங் கன்னியருருவோடு என் புதல்விகளாய் என்னோடு இருக்க வேண்டும்" என வேண்டினார். விரைமலரோன் வேண்டிய வரங்களை அக்கன்னியர் தந்தனர். அன்று முதல் அவர்கள் பிரமதேவன் புத்ரிகளாய் அவரோ டிருந்தனர். பிரம தேவன் அவர்களுக்கு சித்தி, புத்தி எனப் பெயரிட்டுச் சீராட்டி வளர்த்து வந்தான்.

சித்தி புத்தி விநாயகர்

அப்போது முதல் பிரமதேவர் படைப்புத் தொழிலில் பக்குவம் அடைந்தார். அவருடைய படைப்புகள் அழகுற அமைந்தன. முதலில் ஏழு புத்திரர்களைப் படைத்தார். அவர் களைத் தனக்குப் படைக்கும் தொழிலில் உதவியாக இருக்குமாறு கூறினார். ஆனால் அவர்கள் மெய்யுணர்வு கைவரப் பெற்றவர் களாய் தவயோக நிலையெய்தி முக்தியுற்றார்கள். பின் சனகாதி முனிவர்களைப் படைத்தார். அவர்களும் கைவல்ய நிலையெய்தி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பேறு பெற்றார்கள். அதன்பின் நாரதாதி முனிவர்களைப் படைத்தார். நாரதாதி முனிவர்கள் "பக்திப் பெருவாழ்வே வாழ்வு; படைத்தல் தொழிலை யாம் புரியோம்" என்று கூறிச் சென்று விட்டனர். அதுமுதல் பிரமதேவர் தாமே படைப்புத்தொழிலை முனைந்து செய்யத் தொடங்கினார். பிரபஞ்சங்களை உண்டாக்கினார். அவைகளுக்கு இயக்கம் அளித்தார். இயக்கத்திற்குப் பொதுவான விதி அமைத்தார். தோன்றும் பொருள்களெல்லாம் வளர்வதற்கும் சிதைவதற்கும் விரிவான விதிகள் செய்தார். எப்பொருளும் அவ்விதிகளுக்கு விலக்கில்லை எனக் கட்டுப்படுத்தினார். அவ்விதிகள் பிரபஞ்ச சுபாவம் எனப்பட்டன. ஒவ்வொரு அணுவும் ஒவ்வொரு பொருளும் பிரபஞ்ச சுபாவத்திற்குக் கட்டாயமாக உட்படுத்தப் பட்டது. அதனால் பிரம தேவருக்கு சிருஷ்டித் தொழில் சற்றே எளிதாயிற்று. பிரபஞ்ச சுபாவத்தால் தோற்றமும் வளர்ச்சியும் சிதைவும் முறையாகவும் இயல்பாகவும் நிகழ்ந்தன. அதனால் அதிகம் ஓய்வுபெற்ற நான்முகன் தன் புதல்விகளாகிய சித்தி புத்திகளைப் பற்றிக் கவலை கொண்டார். பிரபஞ்ச சுபாவம் அவரையும் விடவில்லை. அற்புதமான அழகுடன் பொலியும் அருமைப் புதல்விகளை விநாயகப் பெருமானுக்கு வதுவை செய்ய விழைந்தார்.

சிருஷ்டி கர்த்தாவின் கருத்தை அறிந்த நாரதர் கைலையங் கிரிக்குச் சென்றார். கைலையங்கிரியின் முகப்பில் கதிரவன் ஒளியும் இதற்கீடில்லை என்னுமாறு தேஜோமயமாக இருந்த அழகிய மண்டபத்தில் தேவர்களும் பூத கணங்களும் புடைசூழ விநாயகப் பெருமான் நவரத்ன ஸிம்ஹாசனத்தில் வீற்றிருந்தார். நாரதர் ஆதிமுதல்வனை வணங்கி ஸரோருகன் பயந்த சக்தி களின் திறத்தை இலக்கிய வர்ணனையும் ஈடில்லை என்னும்படி அற்புதமாக வர்ணித்தார். மேலும் மலர்வந்த தேவன் மனக் கருத்தைத் தெளிவுறச் சொன்னார். அதுகேட்ட கணத் தலைவ ராகிய களிற்றுமுகன் சித்தி, புத்தி என்ற இரு கன்னியரையும் திருமணம் செய்து கொள்ள மனம் கொண்டார். அவர் மனக்கருத்தை முக பாவத்தால் உணர்ந்துகொண்ட முனிசிரேஷ்டர் சத்திய உலகம் சென்றார். சத்தியவுலகைச் சென்றடைந்த நாரத முனிவர் முன்னே சித்தி, புத்திகளைச் சந்தித்துத் தாம் திருக்கயிலை சென்றுவந்த விவரங்களைக் கூறினார். அவர்களுடைய மனமகிழ்ச்சியை முகப்பொலிவு விளக்க நாரத முனிவர் நான் முகனைச் சென்று கண்டார்; திருக்கயிலை நிகழ்ச்சிகளை அவரிடம் கூறினார். விநாயகப் பெருமான் நெஞ்சுவந்து சித்தி புத்திகளை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மணந்துகொள்ளக் கருதியதால் பெருமை கொண்ட நான்முகன் ஸரஸ்வதியோடும் பல்வகைக் காணிக்கைப் பொருள்களோடும் திருக்கயிலாயம் சென்று பார்வதி பரமேசுவரர்களைப் பார்த்துக் கல்யாணம் சொல்லி அனுக்ரஹம் பெற்றார். அங்கிருந்து வைகுண்டம் சென்று திருமாலைத் திருமணத்திற்கு அழைத்துப் பின் சத்திய உலகம் வந்து சேர்ந்தார்.

பிரமதேவர் தேவதச்சனைக் கொண்டு சிறந்த திருமண மண்டபம் செய்வித்தார்; விருந்தினர்களுக்காக விசாலமான மாளிகைகளும் விளையாட்டுக் கூடங்களும் கட்டுவித்தார்; போஜனசாலைகள் அமைத்தார்; புஷ்கரிணிகளும் வெட்டினார். திருமண நாள் நெருங்கியது. ஏராளமான தேவர்களும் முனிவர் களும் வந்து சேர்ந்தனர்.

மணநாளன்று பிரமதேவரும் ஸரஸ்வதியும் மணமகன் விநாயகரையும் பார்வதி பரமேசுவரர்களையும் மனமுவந்து ஊர்வலமாக வரவேற்றுத் திருமண மாளிகையில் சிறந்த ஆசனங் களில் அமரச் செய்தனர். தாம் வளர்த்த காரிகைகளுக்கேற்ற கணவராகிய கணபதியைக் கண்டு கண்டு மெய்மறந்தனர் ஸரஸ்வதியும் பிரமதேவரும். ஜனக மஹாமுனிவர் திருமணச் சடங்குகளைச் செவ்வனே செய்து முடித்தார். சித்தி புத்தி ஸமேத விநாயகப் பெருமான் பார்வதி பரமேஸ்வரர்களின் பாத கமலம் பணிந்து வாழ்த்துரை பெற்றார். திருமணத்திற்கு வந்திருந்த யாவரும் மனநிறைவெய்தித் தத்தம் இருப்பிடம் சென்றனர். விநாயகப் பெருமானும் சித்தி புத்தியரை அழைத்துக் கொண்டு திருக்கயிலாயம் சென்றடைந்தார்.

4. திருமாலுக்கு அருளிய திறம்

மதுவும் கைடபனும்

ஒரு சமயம் பாற்கடலில் பாம்பணைமேல் பள்ளிகொண்ட பரந்தாமன் பல்லாண்டுகள் நீடு நித்திரை கொண்டார். அப்போது அவருடைய வலக்காதிலிருந்து ஓர் அசுரன் தோன்றினான். அவன் மது எனப் பெயர் படைத்தான். இடக்காதிலிருந்து மற்றோர் அசுரன் தோன்றினான். அவன் கைடபன் எனப் பெயர் கொண்டான். அவ்விரு அசுரர்களும் தாம் தோன்றிய பொழுதே உயர்ந்து பருத்து வளரத் தொடங்கி மிகப் பேருருவமும் எல்லையில்லா வலிமையும் பெற்றனர். இருளெல்லாம் திரண்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒன்றியது போன்றிருந்த அவர்களுடைய கருத்த உடலும் திண்ணிய தோளும் சுருண்டு குழைந்து செவ்வொளி வீசும் பங்கியும் பிறையிரண்டை இருபுறமும் செருகி வைத்தாற் போன்ற கோரப் பற்களும் கண்டாரைக் கதி கலங்கச் செய்தன.

பூவுலகில் புகுந்த அவ்விருவரும் ஆன்றமைந்த பெரியோர் களை அச்சுறுத்தினர்; அருந்தவ முனிவர்களின் ஆருயிர் பறித்தனர்; நிலவுலகு முழுவதும் தமக்கு ஈடு இல்லை என்னும் படிச் சுழன்றனர்; அப்பால் தோள்தினவும் போர்த்தினவும் பெருகச் சுரலோகம் நோக்கிச் சென்றனர்.

மது கைடபர்களின் வருகையையும் வல்லமையையும் கேள்வியுற்ற வானோர் தலைவன் வாடினான்; மறைந்து வாழ இடம் தேடினான்; அமராவதியைவிட்டு ஓடினான். அசுரர் களிடம் அகப்பட்ட தேவர்களோ அவதியுற்றனர்; தேவருலகு நாசமாயிற்று.

பின்னர் அவ்விரு அசுரர்களும் பிரம்மலோகம் நோக்கிச் சென்றனர். போரை வேண்டாத பிரம்மதேவன் விநாயகப் பெருமானின் திருவடிகளைத் தியானித்து அம்முழு முதற் கடவுளின் முற்றிய திருவருளால் 'மாமாயன் திருச்செவிகளினின்றும் தோன்றிய மது கைடபர்களை மாலே சங்கரித்தலல்லால் வேறொருவரால் இயலாது' எனத் தெளிந்தார். உடனே தாம் வாழும் சத்திய லோகத்தை விட்டு நீங்கிப் பாற்கடலை அடைந்து பரமனைக் கண்டார். அவரோ யாதொரு கவலையும் இன்றி நீண்ட உறக்கம் கொண்டிருந்தார். உறங்கும் ஒருவனை உணர்த்துதல் தக்கதன்று என எண்ணிய மலரோன் நித்திரா தேவியை மனத்திருத்தி தியானம் செய்து, "ஸ்ரீதேவி நாயகன் செங்கண் திறந்து அருள்புரிய அருள்புரிவாய்" என வேண்டினார். திருமாலின் திருமேனி முழுவதும் கதுவி நின்ற நித்திராதேவியும் நின்மலன்றன் நளின நயனங்களைத் தழுவி அகன்றாள். அப்போது தேவர்கள் பலர் சூழ இந்திரனும் அங்கு வந்து சேர்ந்தான். உறக்கம் துறந்து நிமிர்ந்து நின்ற நெடுமாலை அனைவரும் பணிந்து போற்றினர்.

அப்போது தேவர்கள் அனைவரும் தத்தம் குறைகளைச் சொல்லித் தங்களைக் காக்குமாறு கடல் வண்ணனை வேண்டினர். அச்சமயத்தில் விரிஞ்சன் அவர்களைக் கையமர்த்தி நாராயண மூர்த்தியை நோக்கி, "தாங்கள் உறங்கும்போது தங்கள் அஞ் செவியினின்றும் தோன்றிய அசுரர் இருவரும் அகில உலகையும் அழிக்க முற்பட்டனர். அவர்களை அடக்கி அழித்தல் ஆழியங்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கையனாகிய தங்களால்தான் முடியும். காக்கும் கடவுளாகிய தாங்கள் உலகம் உய்யும் பொருட்டு அவ்விருவரையும் அழிக்க வேண்டும்; எங்களைக் காத்தருள வேண்டும்'' என நவின்று நாதன் பாதம் பற்றினார்.

அபயம் அளித்த அச்சுதன்

வானவரும் நான்முகனும் வருந்திக் கூறிய வாய்மையைக் கேட்ட வாசுதேவரும் அவர்களுக்கு அபயம் அளித்தார்; வேறு ஒன்றும் எண்ணாது பாஞ்சஜன்யம் என்ற தன் பெருஞ் சங்கை எடுத்துப் போர்முழக்கம் செய்தார். அம்முழக்கம் பிரளய காலத்து மேக கர்ஜனையோ? ஊழிக்காலத்து ஒலிக்கும் கடலின் பேரொலியோ? யாதென எம்மால் இயம்பல் அரிது.

போர் எங்கே எங்கே என்று ஏம்பலுற்றிருந்த மதுகைடபர்கள் சங்கொலி கேட்டுத் தாங்கொணாச் சினத்துடன் பாற்கடல் நோக்கிப் பாய்ந்து வந்தனர். ஒரு கையில் சங்கும் ஒரு கையில் சக்கரமும் ஒரு கையில் வாளும் ஒரு கையில் வில்லும் ஏந்தி நின்ற ஏந்தலைக் கண்டு அண்டம் அதிரப் பெருமுழக்கம் செய்தனர். சாரங்கபாணிக்கும் மதுகைடபர்களுக்கும் போர் தொடங்கியது. நீண்ட நாட்கள் கழிந்தன. வெற்றி தோல்வியின்றி அவர்கள் போரிட்டனர். நாட்கள் வளர வளர அசுரர்களின் பலமும் வளர்ந்தது; மேன்மேலும் உற்சாகம் கொண்டு பெரும் போர் நிகழ்த்தினர். ஆனால் அதிகம் களைத்துவிட்ட அனந்த சயனன் அதன் காரணம் அறியமாட்டாமல் குழம்பினார். அதனால் அழிக்கும் கடவுளாகிய அந்திவண்ணனை அரணாக அடைந்து வெற்றிக்கு ஒரு வழி காண விழைந்தார். அந்நோக்கம் நிறைவேறும் பொருட்டு நெடியோன் போர்க்களத்தினின்றும் திடீரென மறைந்து கயிலையங் கிரிக்குச் சென்று ஒரு கந்தர்வன் உருவில் முக்கண்ணனைப் பாடிப் பரவினார்.

பாட்டிற்குருகிய பரமசிவனும் திருமாலை வரவேற்று, ''பிரபஞ்சமெல்லாம் காக்கும் பெருந்தொழில் இயற்றும் நாரண, அலைமேல் துயிலுதல் நீத்து இம்மலைமேல் வந்து நாத தவம் புரியும் காரணம் யாது?'' என வினவினார். பாலாழி நாதனும், தாம் மால் கொண்டு உறங்கியபோது மதுவும் கைடபனும் தோன்றிய தையும் அவ்விருவரும் உலகையெல்லாம் அழிக்கத் தொடங்கிய தையும் தாம் அவர்களுடன் போரிட்ட திறத்தையும் அவர்களை வெல்ல இயலாமல் கரந்து மாற்றுருக்கொண்டு கயிலையை அடைந்தவாறும் தெளிவாகக் கூறி அவர்களை வெல்லும் உபாயம் வேண்டி நின்றார். மதி சூடிய பெருமான் கடல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வண்ணனை நோக்கி, ''ப்ரணவமாயும் ப்ரணவப் பொருளாயும் ஆதி அந்தம் அற்றவராயும் நம் தோற்றத்துக்கெல்லாம் மூல காரணராகவும் விளங்கும் ஹேரம்ப விநாயகப் பெருமானை மனத்தால் தியானித்து அவர் அருள் பெற்று மீண்டும் போருக்குச் செல்க'' என அறிவுறுத்தினார்.

விஷ்ணுவுக்கு அருளிய விநாயகர்

உடனே திருமாலும் ஊக்கம் கொண்டு விநாயகப் பெருமானின் ஷடாக்ஷரத்தை மனத்தால் உருவேற்றிப் பல்லாண்டுக் காலம் தியானத்தில் அமர்ந்தார். தவத்திற்கு உருகும் தயாளனாகிய விநாயகரும் விஷ்ணுமுன் தோன்றி அருள்புரிந்தார். திருமாலும் விநாயகரை அடிபணிந்து, ''போருக்குப் புறப்படு முன்னமே நின்னடி நினைந்து வழிபடாமல் குற்றம் புரிந்தேன்; அதன் விளைவையும் நன்கு உணர்ந்தேன்; குற்றம் பொறுத்து என் துன்பங்களைப் போக்க வேண்டும். மதுவும் கைடபனும் இயற்றும் கொடுமைகளுக்கு ஒரு முடிவே இல்லை. அண்ட சராசரங்களும் அவர்களால் அலைக்கப்படுகின்றன. அவர்களை வெல்லும் ஆற்றலை ஈந்தருள வேண்டும்'' எனக் குழைந்து வணங்கி நின்றனர். பக்தர்களுக்கு அருளும் பரமனும் அவ்வாறே அருள் புரிந்தார்.

வெற்றி பெற்ற விஷ்ணு

அதன் பின்னர் திருமால் அத்திமுகன் அருளால் அவ்வசுரர்களின் உறையுளை அடைந்து சங்க கோஷம் செய்தார். போர் முழக்கம் கேட்டு வெளிப்போந்த அசுரர்கள், போர்க் களத்தினின்றும் அஞ்சி மறைந்தோடிய மாமாயன் மீண்டும் போர்செய்ய வந்திருப்பதைக் கண்டு வெகுண்டனர். விஷ்ணுவும் விநாயக மூர்த்தியை நெஞ்சகத்தில் நினைத்து போர் தொடங்கினார். போருக்கு ஒரு முடிவே வராது போல் தோன்றியது. அதனால் சினம் கொண்ட துழாய் மார்பன் தும்பிக்கையான் பதம் நினைத்து சங்கரன் அருளிய சக்கரத்தை அவ்வசுரர்மேல் ஏவினார். சக்கராயுதம் தீப்பொறி கக்கிக்கொண்டு விரைந்தது; திண்ணிய அசுரர் தோள்களை வெட்டிச் சாய்த்தது; அவர்களுடைய உடலங்களைக் கண்டதுண்டமாக வெட்டியது. ஆனை முகத்து ஆதிப் பரமன் அருளால் மதுகைடபர் மாண்டொழிந்தனர். மண்ணுலக உயிர்களும் விண்ணுலக வாசிகளும் இடர்க் கடலினின்றும் கரையேறி மகிழ்ச்சிக் கடலில் வீழ்ந்தனர். எல்லாரும் கரிமுகத்துக் கணபதியின் கருணையை வியந்து போற்றி அவரது கோயிலின்கண் புகுந்து அவர் பாதம் பணிந்தனர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

5. வீமன்

விதர்ப்ப ராஜன் வீமன்

எல்லாவகை வளங்களும் இயல்பாகவே பெருகி விளங்குவது விதர்ப்ப தேசம். அந்நாட்டை கவுண்டியம் என்ற சிறந்த நகரின்கண்ணிருந்து வீமன் என்ற வலிமை மிகு பேரரசன் ஆண்டு வந்தான். அவன் மனைவி பெயர் சாருஹாசினி. வீரமும் தயையும், வலிமையும் கொடையும், நீதியும் கருணையும் தவமும் போகமும் என யாவற்றினும் சிறந்திருந்த மன்னனுக்கு ஒரேவொரு குறை, தன் வழி விளங்க ஒரு கான்முளை இல்லையே என்ற குறை. இக்குறையால் மனங்கவன்ற மன்னன் தன் மந்திரிகளில் மூத்த சுமந்த்ரன், மனோரஞ்சிதன் என்ற இருவரையும் விளித்துத் தான் மீண்டு வரும்வரையில் நாட்டை நலிவுறாமல் காக்குமாறு ஆணையிட்டுக் கடுந்தவம் புரியும் கருத்தோடு மனைவியும் தானும் காட்டைச் சார்ந்தான்.

வீமன் விசுவாமித்திரரை அடைதல்

வெகுதூரம் காட்டினுள் சென்றபோது அருள் அரசனும் அழகரசியும் மிக வனப்பு வாய்ந்த ஒரு வனப் பகுதியைக் கண்டனர். அவ்விடத்தில் அமைதி குடிகொண்டிருந்தது; இயல்பில் பகை பாராட்டும் விலங்குகள் கூடத் தம் பகை மறந்து அதிசயமான நட்புறவுடன் வாழ்ந்தன. அவ்விடம் பல அருந்தவ முனிவர்களுக்கு உறையுளாய் அமைந்திருந்தது. ஆங்கோரிடத்தில் தவசிரேஷ்டரான விசுவாமித்திரர் வேதநூல் விளக்கம் கூறியும் அனுபவ யோகமுறை பயில்வித்தும் தம் சீடர்களுக்கு உற்சாகம் அளித்துக் கொண்டிருந்தார். முனிவர் பெருமானைக் கண்ணுற்ற புரவலர் பெருமான் தானும் தன் மனைவியுமாய் அவரது கமல பதங்களில் வீழ்ந்து கண்ணீர் மல்க மீண்டும் மீண்டும் தொழுதான். தவவேந்தர் தரணி வேந்தரைத் தயையுடன் நோக்கி, "விரைவில் உங்களுக்குப் புத்திர ப்ராப்தி உண்டாகட்டும்" என ஆசீர்வாதம் செய்தார். ஆசிபெற்ற அரசனும் அரசியும் அகமும் முகமும் மலர்ந்தனர்; தாங்கள் தேடி வந்த செல்வம் தடையின்றிக் கிடைத்ததென மகிழ்ந்தனர்.

விசுவாமித்திரர் விளம்பிய செய்தி

விசுவாமித்திரர் அவர்களுக்கு முகமன் கூறி இருக்கைகளில் அமர்த்தினார். பின்னர் அவர்களைப் பற்றிய விவரங்களைக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கேட்டறிந்தார். அவர்களின் தன்மையையும் அவர்களுடைய மனத்தை வருத்தும் குறையையும் உணர்ந்த தபோதனர் அதன் மூல காரணம் யாதெனத் தம் ஞான திருஷ்டியிற் கண்டார். பிறகு அவர் அரச தம்பதியரை நோக்கி, "அறவழி பிறழாது அவனி காக்கும் அரசே, உன் வமிசத்து முன்னோர்கள் வழிவழியாக விநாயகரைப் பூசித்து வந்தனர். விநாயகரே முழுமுதற் கடவுளல்லவா? அவர்கள் அவரையே துதித்து இகமும் பரமும் பெற்றார்கள். ஆனால் நீயோ அவ்வாறு செய்யவில்லை. தருமம் தவறாத குணக்குன்றாயிருப்பினும் விநாயக பூஜையை விட்டுவிட்டாய். அதன் பலனே வம்ச விருத்தியின்றாகியது. ஆனால் அதற்காக இப்போது கவல வேண்டா; கருணாகரக் கணபதியைக் கருத்திலிருத்தி ஒருமித்த உள்ளத்தோடு பூசனை புரிக. உங்கள் குலம் வளர்க்கும் உத்தம புத்திரன் ஒருவன் தோன்றுவான்" எனக் கூறினார். மேலும் விநாயகர் பெருமையை விளங்கக் காட்டும் பண்டைச் சரிதத்தைப் பகரத் தொடங்கினார்.

தக்கன் நோய் தீர்த்த தயாபரன்

கன்னட தேசத்துக் காவலன் வல்லவன் என்பான் தன் மனைவி கமலையுடன் களித்து வாழ்ந்து வந்தான். அவர்களின் நல்வினைப் பயனாய் அவர்களுக்கு ஓர் அருமை மகன் பிறந்தான். ஆனால் அம்மகன், ஸஞ்சித கர்மம் அவனைத் தொடர்தலால், பிறவிக் குருடாகவும் செவிடாகவும் ஊமையாகவும் இருந்ததோடன்றித் தொழுநோயாலும் பீடிக்கப்பட்டிருந்தான். கமலை கரைகாணாத் துயரமுற்றாள். வல்லவனும் மனம் வருந்திக் கலங்கினானாயினும் கமலையின் துயர்காணச் சகியாமல் மனம் கனிந்து அவளைத் தேற்றினான். அம்மகனுக்குத் தக்கன் எனப் பெயரிடப்பட்டது. பின்னர் தன் நாட்டில் உள்ள சிறந்த மருத்துவர்களையெல்லாம் வரவழைத்து சிரத்தையோடு பரிகாரங்கள் செய்யத் தொடங்கினான்; மணி, மந்த்ரம், ஔஷதம் என்ற மூவகையிலும் முயன்றான். இவ்வாறு பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தன. கருவூலத்துப் பொருள்களெல்லாம் நிருமூலமாயின; மகனுடைய நோய் மாயவில்லை. மனம் வெறுத்த மன்னவன்றன் நன்மனமும் கன்மனமாயிற்று; நோயுற்ற மகனைப் பெற்ற நங்கையையும் சினந்தான்; துயர்மிகுதி வெறுப்புமிகுதியாயிற்று; வெறுப்புமிகுதி கோபமிகுதியாயிற்று; சிந்தனை தீய்ந்தது; தான்செய்வது யாதெனத் தெளியாது மனம் மருண்டு தற்சார்புநிலை எய்தாத் தனயனையும் அவனைத் தாங்கும் தாயையும் நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மன்னவன் பணியை மறுத்தலும் கூடுமோ? கமலை கதறினாள்; தானும் சேயும் நோயுமாகத் தாங்கவொண்ணாத் துயரோடு வனத்தடம் ஒன்றின் வழியே சென்றாள். அவ்வாறு காட்டு வழியில் செல்லும்போது கள்வர் சிலர் எதிர்ப்பட்டனர். அரசி அணிந்திருந்த ஒளிவீசு மாலையும் குண்டலமும் மங்கல வளைகளும் அவர்கள் கண்ணைப் பறித்தன; எனவே, பொன்னைப் பறித்துக்கொண்டு போய்விட்டார்கள். அரண்மனை மண்டபத்தில் ஆர அமர்ந்து அம்பொான் தட்டத்தில் ஆன்பால் பெய்த அமுதருந்தும் அரசியும் நோயுற்ற பன்னிரண்டு வயது பாலகனும் ஆதரிப்பார் இன்றி அருகிலிருந்த சிற்றூர்களில் ஐயம் ஏற்று ஆருயிர் காத்து வந்தனர்; அண்மையில் இருந்த கோயில் ஒன்றில் தங்கியிருந்தனர். இவ்வாறாகப் பன்னாட்கள் பெருந்துயரில் கழிந்தன.

ஒரு நாள் கமலை, தன் தனயனாகிய தக்கனையும் அழைத்துக் கொண்டு அருகிலிருந்த குண்டினபுரம் என்ற சிற்றூருக்குச் சென்றாள். அப்போது வித்தாகவும் வித்தின் விளைவாகவும் விளங்கும் விநாயகப் பெருமானின் திருவடிகளையே பற்றாகக் கொண்ட முத்கல மாமுனிவர் எதிரே வந்தார். அவருடைய புனித மேனியைத் தழுவித் தவழ்ந்து வந்த தென்றல், நோயால் வாடித் தளர்ந்து வரும் தக்கன் உடலைத் தடவியது. அவ்வளவில் தக்கன் தொழுநோய் அகன்றது; தொல்லை வினையும் அகன்றது; கண்ணும் திறந்தது; காதும் கேட்டது; ஊமைத் தன்மை அழிந்தது. அவன் உடலும் முகமும் சிறந்த தேஜோ மயமாய் ஜ்வலித்தது. கமலை கங்குகரை காணாத களிப்புக் கடலில் ஆழ்ந்தாள்; அந்நாள்காறும் அவதியுற்று உயிர்ப் பிண்டமென உலவிவந்த தக்கனை மிக்க மகிழ்ச்சியோடு உச்சி மோந்து பச்சிளம் பாலகனைக் கொஞ்சுவது போல் கொஞ்சினாள். தன் கணவன் தங்களை 'நாட்டை விட்டுத் துரத்தியதும் நன்மையாய் முடிந்ததே' என மனம் நெகிழ்ந்தாள்.

கைகளும் கால்களும் அழுகிச் சொட்டச் சொட்ட அசைந்து அசைந்து விகாரமாக நடந்து வந்த தக்கனை அணுகாமல் வெறுப்போடு விலகிச் சென்று கொண்டிருந்த சிலர் இந்த திவ்விய காட்சியைக் கண்டு வியந்தனர்; மெய் சிலிர்த்தனர். இஃது ஆதி முதல்வனின் அருள் என்று உணர்ந்தனர்; தக்கனின் பேற்றை எண்ணி எண்ணி இறும்பூது எய்தினர்; கமலையையும் தக்கனையும் தங்கள் இல்லங்களுக்கு அழைத்துச் சென்றனர்; புதிய ஆடைகளும் இனிய அமுதும் கொடுத்துப் போற்றினர். மனத்துக்கும் வாக்குக்கும் கண்ணுக்கும் எட்டாப் பரம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொருளின் பேரருளை நினைந்து நினைந்து பக்திப் பெருக்கால் தாயும் தனயனும் மகிழ்ந்திருந்தனர்.

இவ்வாறு அவர்கள் மகிழ்ந்து வாழும் நாளில் ஒருநாள் ஓர் ஆதிசைவ அந்தணர் அவர்களை நோக்கி வந்தார். அவருடைய தெய்வ ஒளிவீசும் முகத்தைக் கண்ட அவ்விருவரும் அவரடி பணிந்து நின்றனர். அந்தணரும் அவர்கள்மீது அருள் கூர்ந்தார். அக்குமாரன்மீது அவருக்கு இயல்பாகவே பாசம் உண்டாயிற்று. அதனால் அவர்களுக்கு ஆதி மறைக்கும் எட்டா அரும்பொருளான ஆனைமுகக் கடவுள் உவக்கும் ஷடாக்ஷர மந்திரத்தை உபதேசித்தார். அன்று முதல் அவ்விருவரும் விநாயகமூர்த்திக்கு விருப்பமான ஷடாக்ஷர மந்திரத்தை ஒன்றிய சிந்தையுடன் ஓதி வந்தனர்.

கமலையின் கருத்து கூடியது; தக்கனின் தவம் பலித்தது; விண்ணவர்க் கெட்டா விமலன் கமலைக்கும் தக்கனுக்கும் காட்சியளித்தார். அவர்கள் அந்த அரும்பெறல் காட்சியைக் கண்டு ஆனந்த பாஷ்பம் பொழிந்தனர்; பக்திப் பரவசராகி,

"ஆரணா போற்றி அண்டத் துள்ளுரை
காரணா போற்றி காசினி யாவும்
தோற்றுவாய் போற்றி தோற்றிய படியெல்லாம்
போற்றுவாய் போற்றி புரந்து முடிவினில்
நீக்குவாய் போற்றி நிமலா போற்றி
போக்கும் வரவுமில் புராணா போற்றி
தடைகள் தகர்க்கும் எந்தாய் போற்றி
விடைவலான் மகிழும் விநாயகா போற்றி"

எனப் பாடினர்; ஆடினர்.

அவர்களுடைய பக்திக்கு மகிழ்ந்த அற்புதன் முத்கல முனிவரின் தோற்றம் கொண்டு தக்கன் எதிரே இருந்து, "குழந்தாய், இப்போது நீ காணும் உருவம் முத்கல முனிவரின் உருவம்; நானே முத்கலன்; முத்கலனே நான். அன்றொரு நாள் முத்கல முனிவன் மேற்பட்ட காற்றே உன்னுடைய தீவினைகள் யாவற்றையும் போக்கியது; உனக்கு இந்த அழகிய உருவத்தை அளித்தது. குணமென்னும் குன்றேறி நிற்கும் நிறைமொழித் தவ முனிவராகிய முத்கலர், அருகில் உள்ள கானகத்தில் அரிய தவம் ஆற்றுகின்றார். நீ அவரிடம் சென்று அடைக்கலம் ஆகுக. மேலான நிலையெய்தும் சீரான வழியை அவரருளால் பெறுவாய்" எனத் திருவருள் பாலித்து மறைந்தார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முத்கல முனிவரை முந்துற அடைதல்

முத்கல விநாயகர் மறைந்தது கண்ட தக்கன் ஆற்றாது தேம்பினான். அவர் உரைத்த அருளுரைகளை மீண்டும் நினைந்து முத்கல முனிவர் தவம் புரியும் அரிய வனத்திற்குத் தாயுடன் ஏகினான். அவர்கள் தவமே ஓர் உருவம் கொண்டதுபோல் திகழ்ந்த முத்கல முனிவரை அடைந்து அவர் அடிமிசை வீழ்ந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து போற்றினர். முனிவரும் தம்முடைய அருள் வாக்கால் ஆசி கூறி அவர்களுடைய வரலாற்றை வினாவியறிந்தார். "நலிந்தோர்க்குத் தெய்வமே துணை" என்ற பழமொழியை மெய்ப்பித்துத் தாங்கொணாத் துயரில் உழன்ற தக்கனுக்கும் அவன் தாய்க்கும் பிரஸன்னராகி ஆட்கொண்ட ஆனைமுகத்தான் அருட்சிறப்பை எண்ணி எண்ணி இறும்பூது எய்தினார்.

பின்னர் அவர்களை நோக்கி, "உங்கள் துன்பமெல்லாம் தீர்ந்துவிட்டது. பிள்ளையாரின் பேரருளால் பூவுலக இந்திரனென எல்லாச் செல்வமும் இன்பமும் எய்தி இறுதியில் இறைவனோடு ஒன்றும் உன்னத நிலையையும் எய்துவீர்கள்" என இயம்பித் தக்கனை அருகில் அழைத்து அன்புடன் அவன் உடலை வருடி ஓங்கார மூர்த்தியின் ஓரெழுத்து மந்திரத்தை உபதேசித்தார். குருவின் உபதேசம் பெற்ற தக்கனும் அவன் தாயும் அவரிடம் பிரியா விடைபெற்றுத் தவம் புரியத் தகுந்ததோர் இடம் நாடிச் சென்றனர். அவர்கள் விதர்ப்ப தேசத்தில் கவுண்டியம் என்றொரு மாநகரின் அருகில் செல்லும்போது ஓரிடத்தில் சுப சகுனங்கள் தோன்றுவதைக் கண்டனர். தருக்களும் செடி களும் நன்கு மலர்ந்திருந்தன. அவ்விடம் முழுவதும் வண்ணப் பூக்களின் வாசனையால் நிரம்பியிருந்தது. பலவ்கைப் பறவை களும் "ஓம்" என இனிய கானம் இசைத்தன. ஆங்கோர் அழகிய தடாகம் இருந்தது. அதில் சீதேவி வண்ணம் காட்டும் செந்தாமரையும் வாக்தேவி வண்ணம் காட்டும் வெண்டாமரையும் பூத்துக் குலுங்கிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தது. அத்தடாகத்தின் கரையில் அழகு மிகுந்து உயர்ந்தோங்கி நின்ற பழங்கோவில் ஒன்று இருந்தது. அஃது விநாயகப் பெருமான் விரும்பியமர்ந்திருக்கும் கோவில். அதனைக் கண்ட தக்கன் அவன் தாயுடன் அங்கேயே தங்கிப் பக்தியுடன் விநாயகர் பதமலரை நிதம் பரவி வாசனை மலர்கொண்டு பூசனையாற்றி ஏகாக்ஷர மந்திரத்தை ஏகாக்ர சித்தத்தோடு ஜபித்து வந்தான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சந்திரசேனன் மரணம்

அந்நாளில் விதர்ப்ப தேசத்தைச் சந்திரசேனன் என்றொரு அரசன் ஆண்டு வந்தான். அவன் மனைவியின் பெயர் சுலபை. அவன் நீதி வழுவா நெறிமுறை மன்னன். அவன் மனைவியும் நன்மனம் உடையவள். ஆயினும் விதி வசத்தால் ஒரு நாள். சந்திரசேனன் திடீரென்று அகால மரணமடைந்தான். சுலபை அனலிற்பட்ட புழுப்போல் துடித்தாள். விதியை வெல்ல யாரால் இயலும்! மந்திரிகளும் பிரதானிகளும் அரசனிடம் மெய்யன்பு கொண்டவர்கள். அவர்கள் மிக்க வருத்தமடைந் தனர். ஆயினும் சுலபையை ஓரளவு தேற்றி அரசனின் இறுதிச் சடங்குகளை இயற்றி முடித்தனர்.

யாவும் முடிந்த பின்னர் சுலபை மந்திரிகளையும் சேனாபதி களையும் அழைத்து மேல் நடக்க வேண்டியன பற்றி ஆராய்ந்தாள். சுலபைக்கு மகன் இல்லை. மேலும் மன்னராக வருவதற்கு உரிமையுடையார் ஒருவரும் இல்லை. ஆகையால் நெடுநேர யோசனைக்குப்பின் பட்டத்து யானையின் கையில் பூமாலையைக் கொடுத்து அது அப்பூமாலையை யார் கழுத்தில் அணிவிக் கிறதோ அவரையே அரசராக ஏற்றுக்கொள்வதெனத் தீர் மானித்தார்கள்.

தக்கன் தராதிபன் ஆதல்

அவ்வாறே மறுநாள் விடியற்காலையில் பட்டத்து யானையைப் பாங்குடன் அலங்கரித்து அழகியதொரு மலர்மாலையை அதன் கையிற் கொடுத்து அரண்மனை வாயிலிற் கொணர்ந்து அவிழ்த்து விட்டனர். "அவனி புரக்க அருள்மிகு அரசனைத் தேடிக் கொணர்க" எனக் கோஷமிட்டனர்; அவ்வேழமும் புறப்பட்டது. விரைந்து ஓடாமலும் இடையில் தங்காமலும் அந்த யானை அமைதியாகச் சென்றது. பன்னெடும் வீதிகளையும் தாண்டி ஊர்ப்புறத்தை அடுத் திருந்த வனத்தை அடைந்தது. மந்திரிகள் முதலானோர் அதன் பின்னே ஆவலுடன் வந்துகொண்டிருந்தனர். அரசன் ஆகும் பாக்கியம் பெற்ற ஆடவனைக் காண அவ்வூர் மக்களும் அதன் பின்னே வந்தனர். வனத்துள் புகுந்த யானை தடாகத்தில் இறங்கித் தன் தாள்களைச் சுத்தம் செய்து கொண்டு மீண்டு கோயிலினுள் புகுந்தது. அப்போதுதான் விநாயக பூஜையை முடித்தெழுந்த தக்கன் தன்முன்னே நன்மணம் வீசும் மலர்மாலை ஏந்திக் கம்பீரமாக நிற்கும் களிற்றைக் கண்டான். அக்களிறு மலர்த்தாமத்தை அவன் தோளிற் சூட்டிப் பிளிறியது. பின் அவனை அலுங்காமல் தூக்கித் தன் அணிமுதுகின் மேல் அமர்த்தியது. அனைவரும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

'அரசன் வாழ்க' என வாழ்த்திய வாழ்த்தொலி வானத்தைப் பிளந்தது.

தக்கன் *மஞ்சினின்றும் இறங்கித் தாயை வணங்கி ஐங்கரன் அடிபணிந்தான். மதிநலம் மிகுந்த அமைச்சர்கள் தக்கனுக்கு ஏற்பன முகமன் கூறி அரச உடைகளை அணிவித்து ஆனை மேல் அமர்த்தினர்; அவன் தாயை ஒரு சிவிகையில் ஏற்றினர். யாவரும் அரண்மனையை அடைந்தனர். அங்கு அவர்களை வரவேற்பதற்கேற்ற ஏற்பாடுகள் யாவும் மிகப் பொறுப்போடு செய்யப்பட்டிருந்தன. விண்ணவரும் வியக்கும் வரவேற்பால் தக்கனும் அவன் தாயும் மனம் மகிழ்ந்தனர். பிறகு அவர்கள் சந்திரசேனனின் மனைவியாகிய சுலபை இருக்கு மிடம் சார்ந்தனர். அவர்களைக் கண்ட சுலபை மனமகிழ்ச்சியுடன் வரவேற்றாள். தக்கனின் அழகும் தேஜசும் கண்டு வியந்தாள்; அவனைத் தன்மகனாகவே கொண்டாள்; அவர்களை ஆசனங் களில் அமரச் செய்து அரசர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளை எடுத்துச் சொல்லி ஆசி கூறினாள்.

பிறகு தக்கன் தன் குருவாகவும் தெய்வமாகவும் விளங்கும் முத்கல முனிவரை அரண்மனைக்கு அழைத்து வரச் செய்தான். முத்கல முனிவரும் அருள் கூர்ந்து அரண்மனைக் கேகினார். தக்கன் அவரடிகளில் பணிந்து வரவேற்று இருக்கை ஈந்தான். அகம் மகிழ்ந்த அம்மாமுனிவர் அரச நீதிகளை அவன் மனத்தில் பதியுமாறு எடுத்துரைத்தார். நாளும் கோளும் நன்மை பயப்பதாகிய ஒரு நாளில் தக்கனுக்கு மணிமுடி சூட்டி விதர்ப்ப தேசத்து வேந்தன் ஆக்கினார். தக்கன் தவசீலருக்குத் தக்க மரியாதை செய்து அவருடைய பர்ணசாலைக்கு அனுப்பி வைத்தான். அரசி சுலபையையும் அன்பே உருவான தாய் கமலையையும் தக்கன் தினமும் போற்றி வணங்கி வந்தான்.

தக்கன் நோய் நீங்கியதும் முத்கல முனிவர்தம் அருள் பெற்றதும் விநாயகரை வழிபட்ட பெருமையும் விதர்ப்ப தேச வேந்தனானதும் ஆகிய செய்திகளைத் தக்கார் வாயிலாகக் கேட்டறிந்த வல்லவராசன் தன் மகனைக் காணும் ஆவல் மிகுதியால் சேனையோடு புறப்பட்டு விதர்ப்பம் சேர்ந்தான். தன் மகனுடைய மேனிப் பொலிவையும் திருவருட் திறனையும் கண்டான்; பொறுமையே உருவான தன் மனைவி கமலையைக் கண்டான்; மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தான். தக்கனுக்கு வீரசேனன் என்னும் அரசனது திருமகளைத் திருமணம் செய்து வைத்தனர். அவர்கள் இல்வாழ்க்கையை இயல்புற நடத்தியும்

* மஞ்சு - யானை முதுகு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குடிமக்களை வரன்முறை பிறழாது ஓம்பியும் அரசைச் செவ்வனே நெடுநாள் நடத்தியும் வந்தனர்.

தக்கனின் பின்னோர்

நெடுநாள் ஆட்சி புரிந்த தக்கன் இறுதியில் கரிமுகன் திருவடி நீழல் எய்தியபின் அவனுடைய புதல்வன் பிரகத்பானு அரசுக் கட்டிலேறினான். அவனுக்கு மகன் கட்கதரன்; அவன் சுதன் கபாலன்; கபாலன் குமாரன் யதாகரன்; யதாகரன் புத்திரன் வபுத்ரன்; வபுத்ரன் மதலை சித்ரசேனன். இவ்வெழுவரும் விநாயக பூஜையை இடையே விடாமல் தொடர்ந்து செய்து கொண்டு வந்தனர். ஆனால் சித்ரசேனன் மகனான நீ ஆனை முகனை அடியோடு மறந்தாய்; அதனால்தான் உனக்கு இக்குறை எய்தியது. நீயும் இன்றுமுதல் பிரணவப் பொருளாய்ப் பிறங்கித் தோன்றும் பிள்ளையாரைப் போற்றிப் பூசனை செய்க. குறைகள் யாவும் நீங்கி நிறைகள் பலவும் எய்துவாய் என விசுவாமித்திரர் அன்புடன் இசைத்தார்.

வீமன் உபதேசம் பெற்றது

விசுவாமித்திரரின் அருளுரை கேட்ட வீமன் மீண்டும் அவரைப் பணிந்து "விநாயகரை வழிபடும் முறைகளையும் மந்திரங்களையும் உபதேசித்தருள வேண்டும்" என வேண்டினான். விசுவாமித்திரரும் மனம் உவந்து அவனைப் புனித நீராடி வருமாறு கூறினார். வீமன் புனித நீராடி வந்ததும் அவனுக்கு ஏகாக்ஷர மந்திரத்தை உபதேசம் செய்தார். பிறகு விநாயக வழிபாட்டு முறையைச் சாங்கோபாங்கமாக எடுத்துக் கூறினார். மிகவும் மகிழ்ச்சியுற்ற வீமன் தன் மனைவி சாருஹாசினியையும் அழைத்துக் கொண்டு மீண்டும் அரண்மனையை அடைந்தான். அரசனிடம் மிகவும் விசுவாசம் கொண்ட சுமந்த்ரனும் மனோ ரஞ்சிதனும் அவர்கள் வருகையைக் கண்டு களிப்பெய்தினார்கள். அவர்கள் மற்ற மந்திரிகளோடும் படைத் தலைவர்களுடனும் மற்றைப் பெரியோர்களுடனும் சென்று எதிர்கொண்டு அழைத்து வந்தனர். 'மன்னன் மீண்டும் வந்தான்; இனி நாட்டையாள்வான்' என எல்லாரும் மகிழ்ந்தனர். ஆனால் அரசனோ ஏழை எளியவர்களுக்கெல்லாம் பொன்னும் பொருளும் ஈந்து அவர் களை அனுப்பிய பின் தன்னிரு அமைச்சர்களை நோக்கி, "என் முன்னோர்களில் ஒருவரான தக்கமஹாராஜர் பூசித்து வந்த விநாயகரை நானும் சென்று பூசிக்கவே விரும்புகிறேன். அவரருள் பெற்ற பிறகே மீண்டு இங்கு வருவேன். அதுவரை நாட்டை நீங்களே நிர்வாகம் செய்து வர வேண்டும்" என

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேண்டிக் கொண்டு, தக்கன் எழுப்பிய கோயிலுக்குச் சென்றான். அங்கே தன் மனைவி சாருஹாசினியுடன் தங்கி முறைபிறழாது காலம் தவறாது விநாயகரை வழிபட்டு வந்தார்; ஏகாக்ஷர மந்திரத்தை உருவேற்றி வந்தார்.

வீமராஜனின் தவத்தை மெச்சிய விநாயகப்பெருமான் அவனுக்குப் பிரத்யக்ஷமானார், விழியெதிரில் விநாயகரைக் கண்ட வீமராஜன் அவரை அடிபணிந்து மெய்ம்மறந்தான். களிற்று முகத்தோன் அவ்வரசனை நோக்கி, "அன்பா, உன் தவத்தைக் கண்டு மகிழ்ந்தோம். உனக்கு வேண்டும் வரங்களைக் கேட்டுக் கொள்" எனப் புகன்றார். வீமன் மீண்டும் அவரடி களில் பணிந்து, "ஆதியாயும் அநாதியாயும் விளங்கும் பரப்ரஹ்ம ஸ்வரூபியே, என்றும் நின் பொன்னடி போற்றும் பாக்யம் அருள வேண்டும்; நின் பாதத்தை எப்போதும் பற்றி நிற்கும் பக்தி வேண்டும்; என் குலம் விளங்க ஒரு மகன் வேண்டும்; வேறொன்றும் வேண்டிலேன்" என இயம்பினான்.

விநாயகப் பெருமான் வீமனை நோக்கி, "நீ விரும்பிய வண்ணமே உனக்கொரு மகன் தோன்றுவான்; அவன் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்து விளங்குவான்; நின் ஆயுள் முடிவுறுங் காலத்து உனக்கு முக்தியும் உண்டாம்" என வரங்கள் அளித்து மறைந்தார்.

ருக்மாங்கதன் பிறத்தல்

வீமராஜன் மீண்டும் தன் அரண்மனையை அடைந்தான். மகிழ்ச்சிப் பெருக்கால் ஏராளமான தான தருமங்கள் செய்தான். நீதிநெறி தவறாது நாடாண்டான். சின்னாட்களில் பட்டமஹிஷி சாருஹாசினியும் சூலியானாள். தக்க பருவத்தில் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தையின் மேனி நிலவைப் பிழிந்தெடுத்த அமுத வண்ணமாய் இருந்தது. அக்குழந்தைக்கு ருக்மாங்கதன் எனப் பெயரிட்டார்கள். ருக்மாங்கதன் தினந் தினமும் உடல் வளர்ச்சியும் மன வளர்ச்சியும் பெற்று உயர்ந்து வந்தான். வீமராஜனும் அவ்வப்பருவங்களில் குழந்தைக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து முடித்தான். ருக்மாங்கதன் பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தான். வீமன் தானே அக் குமரனுக்குக் குருவாயிருந்து விநாயகப்பெருமானின் ஏகாக்ஷர மந்திரத்தை உபதேசித்தான். அக்குமரனும் நாடோறும் ஏகாக்ஷர மந்திரத்தை உருவேற்றித் தியானம் செய்து வந்தான். அவன் குணநலம் வளர்பிறைச் சந்திரன் போல் மேன்மேலும் பெருகி வந்தது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பட்டாபிஷேகம்

அரசருக்குரிய கலைகளிலெல்லாம் தேர்ச்சி பெற்று நீதியும் நேர்மையும் கொண்டவனாய் இருந்த தன் மைந்தனை எண்ணிச் சாருஹாசினியும் வீமனும் பெருமை கொண்டார்கள். நாட்டு மக்களும் ருக்மாங்கதனிடம் அன்பும் பெருமதிப்பும் கொண்டார்கள். அப்போது வீமன் தன் மனத்துள் பின்வருமாறு எண்ணினான்.

"எனக்கு வயது அதிகமாகி விட்டது; நாட்டு நிர்வாகத்தைச் செவ்வனே செய்வது கடினமாய் உள்ளது; மேலும் தெய்வ வழிபாட்டில் என் மீதியுள்ள நாளைச் செலவிடுவதே சிறப் புடையது. ஆகையால் அரசுப் பொறுப்பு முழுவதையும் அருமந்த புதல்வன்மீது சுமத்தி நாம் ஓய்வு எடுப்பதே நல்லது."

பிறகு இதனைத் தன் மனைவி சாருஹாசினியிடமும் மூத்த அமைச்சர்களிடமும் சொன்னான். அரசன் அரசுப் பொறுப்பை விட்டுச் செல்வது அவர்களுக்கு வருத்தத்தைத் தந்த போதிலும் ருக்மாங்கதனுடைய வலிமையையும் சிறந்த குணத்தையும் அரசியல் அறிவையும் நோக்கி அதற்குச் சம்மதித்தனர். சிறந்த அந்தணர்கள் தேர்ந்தெடுத்த ஒரு நல்ல நாளில் நாட்டு மக்கள் போற்ற நாவலர்கள் வாழ்த்த நானிலம் மகிழ ருக்மாங்கதன் நவரத்ன கசிதமான ஒளிவீசும் உன்னத அரியாசனத்தில் அமர பட்டாபிஷேகம் நடைபெற்றது. ருக்மாங்கதனும் நாடு புகழ நீதி விளங்க நேர்மை ஒளிர நல்லோர் பல்க அல்லோர் அல்க அரிய தாளாண்மையுடன் அரசு செலுத்தி வந்தான்.

6. ருக்மாங்கதன்

ருக்மாங்கதன் வேட்டைக்குச் செல்லுதல்

ருக்மாங்கதன் சீரும் சிறப்புமாக நாட்டையாண்டு வரும் நாளில் ஒரு நாள் பல கிராம மக்கள் அரசரைக் காண வந்தார்கள். அவர்கள் அரசரைக் கண்டு மகிழ்ந்தனர். பின்னர் தங்களுக்கிருந்த சில குறைகளை அரசரிடம் தெரிவித்தனர். அரசரும் அக்குறைகளை நீக்கி அமைதியளிப்பதாக உறுதி கூறினார். மேலும் அவர்கள் காட்டு விலங்குகள் பெருகி நாட்டுக்குள் புகுந்து மக்களுக்குத் துன்பம் விளைவிக்கின்றன எனவும் பயிர் களை நாசம் செய்கின்றன எனவும் அத்தகைய காட்டுப்பன்றிகள், யானைகள் முதலியவற்றைக் கொன்று நாட்டைக் காக்க வேண்டு மெனவும் வேண்டிக்கொண்டார்கள். அரசனும் அதற்கிசைந்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தன் படைகளுடன் வேட்டைமேற் சென்றான். பல விலங்கு களை விரட்டியும் பலவற்றைக் கொன்றும் விலங்குத் தொகையைக் குறைத்தான். அவ்வாறு உற்சாக மிகுதியோடு வேட்டையாடிக் கொண்டே சென்ற ருக்மாங்கதன் தன் படைவீரர்கள் பின்தங்க வெகுதூரம் காட்டினுள் சென்று விட்டான். அடர்ந்த காட்டினுள் சென்ற ருக்மாங்கதன் திரும்பி வரும் வழி தெரியாமல் இரண்டு நாட்கள் அலைந்து திரிந்தான். அவனுடைய படைவீரர்களும் அவனைக் காட்டில் பல பாகங்களிலும் தேடினர். ருக்மாங் கதனைக் காண முடியாததால் அவர்கள் மீண்டு நகரம் சென்றனர்.

முகுந்தையின் மோகமும் கோபமும்

ருக்மாங்கதன் வில்லும் கையுமாய்க் கானகத்தில் அலைந்து கொண்டிருந்தான். அப்போது ஆங்கோர் ஆசிரமத்தைக் கண்டு மகிழ்ந்து அதனை அணுகினான். அந்த ஆசிரமம் கவிமஹா முனிவர் கடுந்தவம் புரியும் இடம்; அவர் தம் மாணாக்கர் களுக்குப் பாடம் கற்பித்தலில் பேரானந்தம் காண்பவர். மாணவர்களை உன்னத நிலைக்கு உயர்த்த வேண்டும் என்ற பேராவல் உள்ளவர். அவர் மனைவி முகுந்தையும் கணவனோடு கருத்தொருமித்தவள்; பேரழகி. பல கலைகளில் வல்லவள். ருக்மாங்கதன் ஆசிரமத்தை அடைந்தபோது கவிமஹாமுனிவரும் அவருடைய சீடர்களும் அங்கு இல்லை. முகுந்தை மாத்திரமே அங்குத் தனித்திருந்தாள். ருக்மாங்கதன் அவளை அணுகித் தண்ணீர் தருமாறு வேண்டினான். அவளோ அவனைக் கண்ட மாத்திரத்தில் மயங்கி நின்றாள். அவனது நெடிய உருவும் சிறந்த வண்ணமும் பருத்த தோள்களும் கம்பீர நோக்கும் கை வில்லைத் தாங்கி நிற்கும் கரவலியும் வீரக் கழலணிந்த வலிமை மிகு பாதமும் அமரரும் வியக்கும் அழகுருவமும் முகுந்தையின் கண்வழிப் புகுந்து கருத்துள் நிலைத்து காமத்தைப் பெருக்கியது. அவள் தன்னை மறந்தாள்; தன்நிலை மறந்தாள்; கவியை மறந்தாள்; கலையை மறந்தாள்; அறம் மறந்தாள்; அறிவிழந்தாள்; எதிரில் நின்றான் இரந்த நீரையும் மறந்தாள். காமமொன்றே கரைகடந்து நின்றது.

அவள் ருக்மாங்கதனை நோக்கி, "ஆடவர் திலகமே, நின் திருமுகவொளியே நின்னைப் பேரரசன் என்பதுணர்த்து கின்றது. இத்தகைய தேஜஸும் அழகு கொழிக்கும் முகத்தை யான் இதுவரை கண்டிலேன். அவை என் மனத்தைக் கவர்ந்து கொண்டன. என் உடலை நின்னதாக்கினேன். என் தாபம் தீர என்னோடிணைந்து இன்பக் கரை சேர்ப்பீர்" என வேண்டி நின்றாள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ருக்மாங்கதன் திகைத்தான். அவளை நோக்கி, ''தாயே, இந்தப் புனிதமான இடத்தையும் ஆச்ரமத்தையும் சூழலையும் கண்டபோதே பெருந்தவ முனிவர் யோகம் பயிலிடம் இது வென்று உணர்ந்தேன். தங்களையும் முனிவர் பத்னியாகவே உணர்கிறேன். தாங்கள் என்னைச் சோதிக்காது அனுக்ரஹம் செய்ய வேண்டும்'' என அதிவிநயத்துடன் கூறி அவ்விடத்தை விட்டு அகல முயன்றான். ஆனால் முகுந்தையோ பலவழிகளில் அவனைத் தன் விழைவுக்கு இசையச் செய்ய முயன்றாள்; ஆனால் தோற்றாள். தோற்ற முகுந்தை அடக்க இயலாத ஆத்திரம் கொண்டு ருக்மாங்கதனை நோக்கி, ''உன் சுந்தர வடிவமல்லவா உனக்கு ஆணவத்தைக் கொடுத்து எனக்கு அவமானத்தை நல்கியது? அவ்வடிவம் தொழுநோயால் பீடிக்கப் படட்டும்'' எனக் கொடுஞ் சாபமிட்டாள். அக்கணமே அவன் அழகிய உடல் முழுவதும் தொழுநோயால் பாதிக்கப்பட்டது; விரல்களும் மேனியும் அழுகிப் புண்களாயின.

உடல் முழுவதும் அழுகிச் சொட்டச் சொட்ட நின்ற ருக்மாங்கதன் அவ்விடம் விட்டு அகன்று அடர்ந்த கானகத்துள் சென்றான். அவன் மீண்டும் தன் நாடு திரும்பி தன் உற்றார் உறவினர்களைக் காண விரும்பவில்லை. அவமானத்தால் குன்றினான்; வருத்த மேலீட்டால் குமைந்தான். விநாயகரை முன்னிலையாக்கி, ''ஆனைமுகத்து அண்ணலே, அடியவர்கருளும் அம்பிகை மகனே, அறம் சிறிதும் வழுவாது அரசியற்றி வந்த என்னை, தகாத விழைவைத் தவிர்த்து வந்த என்னை, மதகளிற்றன் இருபதமலரை நிதம்பரவித் துதித்து வழிபடும் என்னை, முகுந்தை இட்ட சாபம் பற்றலும் அழகோ? இப்பிறவியில் யானேதும் அறிந்த பாவமில்லை; இஃது முற்பிறவியிற் செய்த பாவமோ? முத்தொழில் புரியும் மூவர்க்கும் தேவர்க்கும் ஈசனே! துஷ்டர்களை நிக்ரஹம் செய்து சிஷ்டர் களைப் பரிபாலனம் செய்வதன்றோ தங்கள் இயல்பு. அங்ஙனம் இருக்க துஷ்டை முகுந்தை இட்ட சாபமும் பலிக்கலாமோ? காத்தல் வல்ல களிற்று முகக் கடவுளே, நீ காவாதிருந்தால் என்னைக் காப்பார் யார்? இந்த அடவியிலேயே என் உயிரை விட்டுவிடுகிறேன். இனி யான் நகருக்குத் திரும்பிச் செல்ல மாட்டேன்'' எனப்புலம்பி ஒரு வடவிருட்சத்தினடியில் வந்து சேர்ந்தான். அரசன் வேதனையைக் காணச் சகியாதவன் போல் ஆதவன் மறைந்தான். எங்கும் இருள் கப்பியது. கொடிய விலங்குகள் நிறைந்த அடவியில் தன்னந் தனியனாய் உண்ண உணவின்றிப் பருக நீரின்றி எதிரிலுள்ள பொருள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இன்னதென்று அறிய வகையுமின்றி நோயுற்ற உடலும் அமைதியற்ற மனமுமாய் வேந்தன் தன் தலைவிதியை நொந்துகொண்டு தரைமீது கிடந்தான்.

நாரதர் காட்டிய நல்வழி

இரவு முழுவதும் தூக்கமின்றிப் பனியிலும் குளிரிலும் பரிதவித்துக் கிடந்த பார்த்திபன் அவ்விரவை ஒரு யுகமாய்க் கழித்தான். ஒரு வழியாக இரவு கழிந்தது. அருணோதய ஒளி அவன் கண்ணுக்கு இதமளித்தது. அவன் உள்ளத்திற்கும் உடலுக்கும் இதமளிப்பான்போல ஞாயிறு விரைந்து உதித்தான். ருக்மாங்கதனும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெந்து குமையும் மனத்தில் விநாயகரை நிறுத்திக் கண்களை மேல்நோக்கி நாட்டித் தியானம் செய்தான். வெகுநேரம் தியானம் செய்தபின் மீண்டு இவ்வுலக நிலைக்கு வந்தபோது முப்புவனமும் சுற்றும் முக்காலமும் உணர்ந்த முனிபுங்கவராகிய நாரதர் வானவெளியில் நாரண நாமம் நவின்றபடிச் சென்று கொண்டிருப்பதைக் கண்டான். புறவிருள் போக்கும் கதிரவன் உதிக்கும் காலை வேளையில் அகவிருள் நீக்கும் அருந்தவ முனிவர் அரிநாமம் கூறக்கேட்ட ருக்மாங்கதன் அவரை அண்ணாந்து நோக்கி, ''நாரத முனியே அபயம்! நாத தத்துவ ஞானியே சரணம்! நான்முகன் மதலாய்! நானுன் அடைக்கலம்!'' என்று அலறினான்.

நாரதரும், மந்தியும் அறியா மரமுயர் கானகத்தில் நம்மிடம் அடைக்கலம் வேண்டிக் கதறுவார் யாரென எண்ணி அருள் சுரக்கும் மனத்தோடு கருணைபொழி கண்களால் கானகத்தூடு பார்த்துக்கொண்டே ருக்மாங்கதன் நின்ற இடத்தை அடைந்தார்; அடைக்கலம் என்ற குரல் கேட்ட உடனே ஆன்கன்று அழைத்தவுடன் அகமுருகி ஓடிவரும் பாற்பசு போலே தன்னை நோக்கி வந்த தாபதர் தலைவர் நாரத முனியைச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து அவர் பாதமே கதி என்று பற்றிக் கொண்டான் பார்த்திபன். தன் நாட்டு மக்கள் குறையிரந்ததும் அவர்கள் குறை தீர்க்கத் தான் வேட்டைமேற்கொண்டதும் உற்சாகமிகுதியால் உற்றாரைப் பிரிந்து அடவியுள் புகுந்ததும் வழிதவறி இளைத்ததும் நீர் வேட்கை மிகுந்து ஓர் ஆச்ரமம் அடைந்ததும் முனிவர் பத்னியை நன்னீர் கேட்டதும் பொற்புடை அப்பெண் பொல்லாநெறிப் புகுந்ததும் அல்லவை மறுத்து நல்லவை சொல்லித் தள்ளி வந்ததும் தாபம் மிக்கவள் சாபம் தந்ததும் தன்னுடல் அழுகித் துவண்டு தளர்ந்ததும் தலை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விதியை நொந்துகொண்டு தானிரங்கி நிற்பதுவும் ஆகிய யாவற்றையும் ருக்மாங்கதன் நாரத முனிவரிடம் கூறிக் கதறினான். மேலும், ''விநாயகர் அருளாலே வேத வித்தான தங்களைக் காணும்பேறு பெற்றேன். என் துன்பமெல்லாம் தொலைந்து போம் என்பதற்கு இஃதோர் அறிகுறி. அடைக்கலம் அடைந்த என்னை ஆண்டுகொள்வது உம் பொறுப்பு. என் துயரம் நீங்க ஒரு நல்லவழி சொல்ல வேண்டும்'' என வேண்டி அவர் பாதங்களை மீண்டும் பற்றிக் கொண்டான். அரசன் சொல்லிய சொற்களில் இருந்த உண்மையை உணர்ந்த முனிவரேறு அவ்வரசனுக்கு ஆறுதல் சொல்லி அகலாவகை நோயும் அகன்றொழிய வழியொன்று சொன்னார்:

''ருக்மாங்கத, உன் தொழுநோய் அகற்றும் மருந்து உன் நாட்டிலேயே உள்ளது. அது அருமருந்து. கதம்பவன நகரத்தில் குடிகொண்டிருக்கும் மருந்து. தீராத நோயெல்லாம் தீர்க்கும் மணி மருந்து; பிறவிப் பெரும்பிணியையும் மாற்றும் மந்திர மருந்து; மருந்துகளுள் உயர்ந்த விநாயக மருந்து; கதம்பவன ஆலயத்தில் சிந்தாமணி விநாயகரைப் போற்றிப் பலனடைந்தவர் பல்லாயிரவர். நீயும் அங்கே சென்று சினகரத் தெதிரே உள்ள கணேச குண்டத்தில் திருமுழுக்காடி சிந்தாமணி விநாயகரைச் சிந்தையில் நிறுத்திப் பூசனை செய்து சிந்தாகுலம் தீர்வாயாக. முன்னே ஒரு தொழுநோயாளன் அவ்வாறு செய்து நோய் நீங்கிப் பிறவி மூலமும் நீங்கி தேவ கணங்கள் புடைசூழ மாகவிமானம் ஏறி விநாயகர் உலகு புகுந்து வீறு பெற்ற செய்தி என் கண்ணாற் கண்ட காட்சி.''

இவ்வுரை கேட்ட ருக்மாங்கதன் ருஷிசிரேஷ்டரைப் பணிந்து, ''அடியேன் தன்யனானேன்; நானிலம் போற்றும் நாரத மஹாமுனியின் அருளுக்குப் பாத்திரமாகிப் பெரும் பேறு பெற்றேன். இப்போதே என் நோய் தொலைந்தது போன்ற மகிழ்ச்சி உண்டாகிறது. கருதரிய சிறப்பு வாய்ந்த கதம்பவனக் கணபதியை பிரதிஷ்டை செய்தவர் யாவர்? அப்பெருமானை வழிபட்டுப் பேறுபெற்ற பெரியோர்கள் யாவர்? இவற்றையும் என்மீது கருணைகொண்டு இயம்ப வேண்டும்'' என வேண்டினான்.

வாசவன் செய்த விபரீதம்

ஒரு சமயம் பிரமதேவர் உலகத்து அழகையெல்லாம் திரட்டி ஒரு பெண்ணுருவாக்கினார். அப்பெண்ணுக்கு அகல்யை என்று பெயரிட்டார். அம்மங்கையைத் தவத்திற் சிறந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கௌதமருக்குத் திருமணம் செய்துகொடுத்தார்கள். அவர்கள் இல்லற வாழ்க்கையை இனிதே நடத்திவந்தனர். கற்புக் கரசியாகிய அஹல்யை காலமுணர்ந்து கணவன் மனமறிந்து தவத் தொழிலைத் திருத்தமாகச் செய்ய உதவிவந்தாள். சிறந்த அழகும் செம்மனச் சிறப்பும் கொண்ட அகல்யையும் திடமுற்ற மனமும் ஈடற்ற தவமும் கொண்ட கௌதமரும் மனமொன்றிக் கானகத்தே வாழ்ந்துவரும் நாளில் ஒரு நாள் விண்ணவர்கோன் அப்பேதையின் அழகைக் கேள்வியுற்றான். அப்போதே போதை தலைக்கேற அப்பேதைப் பெண்ணை எவ்வாறேனும் அடையத் துடித்தான்.

கௌதம முனிவர் விடிய ஐந்து நாழிகைக்கே எழுந்து ஆச்ரமத்திற்கு அருகே உள்ள ரமணீயமான பொய்கைக்குச் சென்று நீராடி காலையில் செய்ய வேண்டிய ஜபதபங்களை முடித்துக் கொண்டு சூரியன் உதிக்கும் நேரத்தில் திரும்பி வருவது வழக்கம். இதனை அறிந்த இந்திரன் ஒருநாள் அம்மஹாமுனிவர் வெளியே சென்றவுடன் அவருருவமே கொண்டு ஆச்ரமத்துள் நுழைந்து அஹலிகையின் அருகில் அமர்ந்தான். வெளியே சென்ற கௌதமர் உடனே மீண்டு வந்தார் என்று எண்ணிய அப்பேதை வஞ்சக வேடங்கொண்டு வந்த வாசவனோடு ஸல்லாபித்துக் கொண்டிருந்தாள். நேரம் கடந்ததறியாது இருவரும் மயங்கியிருந்தனர். கௌதமர் திரும்பி வந்தார். தூரத்தில் வரும்போதே ஆச்ரமவாயில் சுத்தம் செய்யப்படாமலும் கோலம்போடப்படாமலும் இருப்பதைக் கண்டு மனச்சஞ்சலத் துடன் வந்தார். இதற்குள் வந்தவன் இந்திரன் என்பதை உணர்ந்த அகல்யை 'மோசம் போய்விட்டேனே' என அலறி வீழ்ந்தாள். இந்திரன் மருண்டு ஒரு பூனை உருக்கொண்டு ஓட முயன்றான். விரைந்து வந்த கௌதமர் ஒளிந்து ஓடும் பூனையைப் பார்த்து வஞ்சகப் பூனை என அறிந்தார். உடனே தம் அதட்டலால் அதனை நிறுத்த, வேறுவழியின்றி வாசவனும் சுய உருவுடன் நின்றான். நிகழ்ந்ததை உணர்ந்த கௌதமர் கோபம் கொண்டு, "ஒரு பெண்குறியை விரும்பிவந்த உன் உடல் முழுவதும் ஆயிரம் பெண்குறி தோன்றட்டும்" எனக் கடுஞ்சாபம் விடுத்தார். வேதனையுற்ற விண்ணவர்கோன் யாரும் காணாமலே விரைந் தோடி ஒரு தாமரைத் தடாகத்துள் தாமரைத் தண்டினூடே புகுந்து வெளிவர நாணி அங்கேயே மறைந்து வாழ்ந்தான்.

பின்னும் கௌதமர் அஹல்யையை நோக்கி, "அன்னியன் ஒருவன் தொடவும் தொடுவுணர்ச்சி பேத முணராது கல்லென

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இருந்த நீயும் கல்லாவாய்'' எனச் சபித்தார். ''அறியாது ஏமாந்து மோசம் போன எனக்கு இத்தனை பெரிய சாபம் ஒல்லாது. என்னை மன்னித்து எனக்குச் சாப விமோசனம் அருள வேண்டும்'' என அகல்யை கதறினாள். அருளுள்ளம் கொண்ட கௌதமரும் அவளை நோக்கி, ''இவ்வழியே மகா விஷ்ணுவின் அம்சமான ஸ்ரீராமபிரான் வருவார். அப்போது அவருடைய பாத தூளி படுதலால் உன் பாவம் தீர்ந்து பாக்கியம் அடைவாய். உன் முன்னையுருத் தோன்றும். அப்போது உன்னை நான் மீண்டும் ஏற்றுக்கொள்கிறேன்'' எனக்கூறிச் சென்றுவிட்டார். அஹல்யை கல்லானாள்.

ஆயிரங்கண்ணன்

தேவர்கள் தங்கள் தலைவனைக் காணாது எங்குந் தேடினர். அவன் இருப்பிடத்தை அறியாமல் இறுதியில் தங்கள் குருவான பிரகஸ்பதியைச் சென்றடைந்தனர். அவருக்கும் தேவேந்திரன் எங்குற்றான் என்பது தெரியவில்லை. எல்லாரும் மிகச் சஞ்சல மாகி இன்னது செய்வதென்றறியாது மயங்கி நின்றனர். அப்போது பிரஹஸ்பதி, திரிலோக சஞ்சாரியான நாரதருக்கு இந்திரன் செய்தி தெரிந்திருக்கக்கூடும் என எண்ணினார். ஆகவே அவர் யாவரையும் அழைத்துக் கொண்டு நாரதரைத் தேடி வந்தார். நாரதரும் இந்திரன் நிலையை எடுத்துக் கூற எல்லாரும் வருத்தமுற்றனர். தேவேந்திரனை எவ்வாறு மீட்பது என்பது ஒருவருக்கும் புரியவில்லை. கடைசியாக நாரதர் மற்றவர்களைப் பார்த்து, ''கௌதமர் அருந்தவ முனிவர்; அந்தணாளர்; எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் சிறந்த ஞானி; குணமென்னும் குன்றேறி நிற்கும் குணாளன்; அவர் கோபம் ஒரு கணமே இருக்கும். ஆயினும் அவ்வொரு கணத்தில் அவர் வெகுண்டு கூறுவன பலித்தே தீரும்; அதனைத் தடுக்க யாராலும் இயலாது; ஆனால் அவர் வெகுளி இப்போது மாறியிருக்கும்; அவரைச் சரணமடைந்தால் இந்திரனுக்குச் சாப விமோசனம் கிடைக்க வாய்ப்புண்டு. ஆகவே, இப்போது நாம் எல்லோரும் கௌதமர் இருக்குமிடம் சார்ந்து அவரை வேண்டுதலொன்றே வழியாகும்'' என்றார்.

நாரதர் கூறிய நன்மொழியைக் கேட்ட மற்றவர்கள் ''அதுவே சரியான வழி'' எனக் கூறினர். பிரஹஸ்பதியை முன்னிட்டுக் கொண்டு நாரதருடன் தேவர்கள் அனைவரும் கௌதமரைச் சரணடைந்தனர். சீற்றம் தணிந்து மீண்டும் தவமேற்கொண்ட தயாளன் விண்ணவர் வேந்தனுக்கு விமோசனம் அளிக்க

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மனம் கொண்டார். ஆகவே, பிரகஸ்பதியை நோக்கி, "ஆதியம் பரமனாகிய கற்பக விநாயகரின் சடாக்ஷர மந்திரத்தை உமக்கு உபதேசிக்கிறேன்; அதனை உருவேற்றி தியானம் செய்க; மந்திர பலிதம் கிடைத்துப் பிறருக்கு உபதேசம் செய்யும் பக்குவம் பெற்றவுடன் அதனைப் புரந்தரனுக்கு உபதேசம் செய்க. புரந்தரன் அம்மந்திரத்தை உபதேசம் பெற்றுத் தியானம் செய்வானாயின் அவனுடலில் தோன்றிய ஆயிரம் பெண்குறி களும் ஆயிரம் கண்களாக விளங்கித் தோன்றும்." எனச் சாப விமோசனம் சாற்றினார். அவ்வாறே பிரகஸ்பதிக்கு கற்பக விநாயகரைக் குறித்த சடாக்ஷர மந்திரத்தை உபதேசம் செய்தார். கற்பக விநாயகப் பெருமானின் ஆறெழுத்து மந்திரத்தை உபதேசமாகப் பெற்ற உம்பர்தம் குரு, கணபதியை உபாஸனை செய்து யோகமூலம் மந்திர பலிதம் பெற்றார். அவ்வாறு மந்திர சக்தி கைவரப்பெற்ற பிரகஸ்பதியும் மற்றைத் தேவர்களும் கௌதம முனிவரிடம் விடைபெற்றுக் கொண்டு வேந்தன் இருப்பிடம் சென்றனர்.

சிந்தாமணி தீர்த்தம்

விண்ணோர் வேந்தன் கதம்பவனத்தில் கமல மலர்கள் பூத்தொளிரும் கல்மஷமற்ற இலஞ்சி ஒன்றில் நளின நாளத்துள் நாணி மறைந்து வதிந்திருந்தான். அவ்விலஞ்சியின் கரையில் தேவர்களும் நாரதரும் பிரஹஸ்பதியின் துணையோடு வந்து நின்றனர். தேவ குருவான பிரஹஸ்பதி கரையில் நின்றபடியே கடவுளர் தலைவனை விளித்து அழைத்தார். வெளியில்வர வெள்கிய அவனைக் குறித்து பிரஹஸ்பதி, "வச்சிரமேந்திய வலாரியே, லச்சையின்றி நீ சிற்றின்பம் விழைந்து சென்று பெருந்தவத்த கௌதமனுக்கு அபகாரம் செய்து பெருந்துயர் கொண்ட செய்தியை யாம் அறிவோம். விண்ணகரம் வேந் தனின்றிப் புலம்புவது கண்டு இரக்கம் கொண்டு மஹா தபஸ்வியான கௌதமரை உன் பொருட்டால் சரணடைந்தோம். கருணாசாகரராகிய அவர் உனக்குச் சாபவிமோசனம் கொடுத் துள்ளார். சாபவிமோசனம் பெற நீ செய்ய வேண்டிய தவமொ ன்றுள்ளது. அத்தவம் முயன்று சாபம் தவிர்ந்து மீண்டும் அண்டர் நாயகனாய் வருவதையே விழைகிறோம். ஆகவே, தாமரைத் தண்டுக்குள் தனித்து வாழும் நிலை தவிர்த்து வெளியே வருக." என ஆணையிட்டார்.

தேவேந்திரனும் மண்டு நாணம் கொண்டு மெல்ல மெல்ல வெளியே வந்தான். தான் செய்த தவற்றுக்குப் பெரிதும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வருந்தியவனாய் தன் குருவின் முன்னிலையில் தலை குனிந்து நின்றான். அவன் மேனியைக் கண்ட தேவர்கள் வெறுப்புற்றுத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டனர். பிரஹஸ்பதி தேவர் காலஹரணம் செய்யாமல் முறைப்படி இந்திரனுக்குக் கற்பக விநாயகரின் சடாக்ஷர மந்திரத்தை உபதேசம் செய்தார். இந்திரனும் விரைந்து உபதேசம் பெற்றுத் தியானம் முதலிய செய்யலானான். அப்போதே அவன் மேனியில் இருந்த ஆயிரம் அல்குலும் ஆயிரம் கண்களாய் உருமாறின.

அண்டர்கோன் அத்தாமரைத் தடாகத்தின் கரையில் அவனி புகழும் ஆலயம் எழுப்பி ஆனைமுகத்து அண்ணலைப் பிரதிஷ்டை செய்து அங்கேயே தவம் புரிந்து வந்தான். இவ்வாறு ஆயிரம் ஆண்டுகள் அகன்றன. ஆயிரங்கண்ணனின் அருந்தவத்திற்கு மகிழ்ந்த களிற்றுக் கடவுள் அவனுக்குப் பிரஸந்நராகிப் பேரருள் புரிந்தார். இந்திரன் தந்திமுகக் கணபதியைப் பணிந்து போற்றி, "எம்பெருமானே, தீராத இன்னலனைத்தும் தீர்த்த எந்தாய், இன்றுபோல் இக்கோயிலில் என்றும் இருந்து அடியார் துயர் தீர்த்து அருள வேண்டும்; சிந்தித்த பொருளெலாம் முந்தியுதவும் சிந்தாமணி விநாயகரெனச் சிறப்புப் பெயர் பெற்று விளங்க வேண்டும். எதிரில் இருக்கும் புண்ணிய புஷ்கரிணி சிந்தாமணி தீர்த்தம் எனப் புகழெய்த வேண்டும். அடியார் வேண்டுவன நல்கி அவர்தம் கொடியவினை தீர்த்து ஆட் கொள்ள வேண்டும்" என மனமுருகி வேண்டினான். விநாயகரும் அவன் பிரார்த்தனை நிறைவேற அருள் பாலித்தார். இந்திரனும் அமராவதி உற்றான்.

ருக்மாங்கதன் வீடு பெறல்

இவ்வாறு நாரத முனிவர் கூற, வியப்பு மேலிட்டு ஆவல் மீதூர அவரை வணங்கிக் கதம்ப வன நகரத்திற்கு வந்தான். சிந்தா மணி விநாயகர் எழுந்தருளியுள்ள சீர்பெறு சினகரம் புகுந்து விநாயகரின் பாதமன்றி வேறொன்றும் கதியில்லை எனக் கதறினான். பிறகு ஒருவாறு தெளிந்தெழுந்து எதிரில் இருந்த பொற்புடைப் பொய்கையில், சிந்தாமணி தீர்த்தத்தில், திரு முழுக்காடி எழுந்து நின்றான். நின்றவன் உடலும் ஒளிவீசியது; தொழுநோய் தொலைந்தது. கதம்பவனத்தைக் காட்டிலும் அரசுக் கட்டில் அவனுக்குப் பெரிதாய்த் தோன்றவில்லை. தினமும் சிந்தாமணி தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து சிந்தாமணி விநாயகரை முறைப்படி போற்றி வழிபாடு செய்துவரலானான். சின்னாட்களில் தேவ கணத்தார் சிலர் கண்ணைப் பறிக்கும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அழகுமிக்க தேவ விமானமொன்றைக் கொணர்ந்து ருக்மாங்கதன் முன் நிறுத்தினர். அதனைக் கண்டு அவன் வியந்தபோது, அவர்கள் அவனை நோக்கி, "அரசனே, இச்சிந்தாமணி தீர்த்தத்தில் ஒருநாள் ஸ்நானம் செய்து இச்சிந்தாமணி விநாயகரை மன மொன்றித் துதித்தாலே விநாயகருலக ப்ராப்தம் உண்டு. தாங்களோ விநாயக பக்தர்; சிறுவயது முதலே மதகளிற்று மாமுகத்தனைப் பணிந்து போற்றிய பெரும்புண்ணியர். ஆகையால் தாங்கள் இவ்விமானத்தமர்ந்து விநாயகருலகுக்கு வரவேண்டும்" என வேண்டினர்.

ருக்மாங்கதன் மெய்ம்மறந்து நின்றான்; அத்தேவர்களை நோக்கி, "விநாயகப் பெருமானின் வியன்பெருங் கருணைத் திறத்தை எவ்வாறு புகழ்வேன்? ஆயினும் தேவர்களே, யான் விநாயகர் உலகடையத் தடையொன்று உள்ளது. நான்மட்டும் பெறற்கரிய பேறு பெற்றுவிட்டால் போதுமா? பெரும்பாடு பட்டு என்னைப் பெற்ற பெரியோர்களை, — அன்னையை அத்தனை — அவர்கள் வலிகுன்றி நிற்கும் அந்திம காலத்தில் தனியே விட்டுவிட்டு நான் மட்டும் விநாயகருலகு வருதல் தகாது. ஆகவே, நான் வரவில்லை" என மறுத்துவிட்டான்.

அப்போது அத்தேவகணத்தார் ருக்மாங்கதனை நோக்கி, "அரசே, உங்களுடைய தாய் தந்தையர்களுக்காக நீங்களே ஸங்கல்பித்துக் கொண்டு இச்சிந்தாமணி தீர்த்தத்தில் நீராடிச் சிந்தாமணி விநாயகரைப் பூஜை செய்யுங்கள். பூஜை முடிவில் பூஜையின் பலனை உங்கள் தாய் தந்தையருக்குத் தத்தம் செய்யுங்கள். அவ்வாறு செய்தால் அவர்களும் விநாயகருலகில் வாழும் பேறு பெறுவார்கள்" என்று கூறினார்கள்.

ருக்மாங்கதனும் விரைந்து அவ்வாறே செய்ய வெவ்வேறு விமானங்கள் அங்குத் தோன்றின. ருக்மாங்கதன், சாருஹாசினி, வீமன் ஆகிய மூவரும் தேஜோமயமான தேகமுற்றுத் தனித்தனி விமானங்களில் ஏறி விநாயகருலகு புக்கனர்.

SIVAGAMA CHOODAMANI
S. GOWRI SHANKAR
SIVACHARIYAR
SRI VAITHIYANATHA SWAMY TEMPLE
SANATORIUM, CHENNAI-600 047.
Cell No : 98845 44083

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

7. முப்புரம் எரித்த முக்கண்ணன்

முகுந்தை ஏமாந்தாள்

ருக்மாங்கதன் தன் ஆசிரமத்திலிருந்து அகன்று சென்று பல நாட்கள் கழிந்த பின்னும் முகுந்தையால் அவனை மறக்க முடியவில்லை. எங்கெங்கு நோக்கினும் விற்பிடித்து நிற்கும் வீரக் கழலணிந்த வேந்தன் ருக்மாங்கதன் உருவமே அவளுக்குத் தோன்றியது. விரக தாபத்தால் விம்மி நின்ற முகுந்தையின் நிலையை ஆயிரங்கண்ணன் அறிந்தான். முன்னமே அவளழகில் ஈடுபட்டு மோகங்கொண்டிருந்த மேகவாஹனன் முந்துற்று அவளை நெருங்கத் தயங்கி நின்றான்; நெருங்க நினைக்கும் போதெல்லாம் முன்னமே ஒரு முனிபத்னி மேல் காதல் வைத்து ஆயிரம் கண்பெற்ற அவலத்தை எண்ணி நடுங்கினான். அந்த இந்திரன் இன்று துணிந்து ருக்மாங்கதன் உருவம் தாங்கி கவி முனிவர் இல்லாத நேரம் கண்டு முகுந்தையின் முன்வந்து நின்றான்.

முகுந்தை அவ்வஞ்சக உருவை நேர்மையே உருவான ருக்மாங்கதன் உருவமென எண்ணினாள்; முன்னே மறுத்துச் சென்றவன் மனம் மாறி மறுபடி வந்தான் என மகிழ்ந்தாள்; விரைந்தோடி எதிர் கொண்டாள்; மீண்டு வந்த மன்னன் மனம் மீண்டும் மாறிவிடுமோ என அஞ்சி வேகம்கொண்டு அவன் ஆகம் தழுவினாள். எண்ணிய எண்ணம் ஈடேறியது என இந்திரன் மகிழ்ந்தான். முகுந்தையின் மோகம் விலகியது. அவள் தன்னிலை அடைந்தாள். உள்ள வெப்பும் உடல் வெப்பும் ஒருங்கே சமன மாயிற்று. இந்திரனோ தான் யாரென்று தெரிவிக்க அஞ்சினான். ஆகவே, அவ்வுருவோடே வெளிச்சென்று மறைந்து தன்னுல கடைந்தான். அவன் சென்றபின் நெடுநேரம் கழித்துக் கவி முனிவர் திரும்பி வந்தார். முகுந்தையும் கவி முனிவருக்குச் செய்யத் தக்க பணிவிடைகளில் யாதுங் குறையாது முன்புபோல் செய்து வந்தாள்.

முகுந்தை கருவுற்று முற்றிய பருவத்தில் ஓர் ஆண் குழந்தையை ஈன்றெடுத்தாள். கவி முனிவர் அக்குழந்தையைத் தம்மால் உதித்த குழந்தையே என எண்ணி மகிழ்ந்தார். 'தாயறியாச் சூலில்லை' என்ற பழமொழியும் பொய்யாயிற்று. அக்குழந்தை இந்திரனால் தோன்றிய குழந்தை என்பதை உணராத முகுந்தையோ அக்குழந்தை ருக்மாங்கதனால் உதித்த குழந்தையே என எண்ணி ஏமாந்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருந்தாள். கவி முனிவர் புண்யாஹவாசனம், நாமகரணம் முதலிய சடங்குகளைச் செய்து முடித்தார். குழந்தையின் நாமம் கிருச்சமதன். ஐந்தாம் ஆண்டில் உபநயனமும் செய்வித்தார். கவி முனிவர் தாமே கலைவலாளன் ஆகையால் கிருச்சமதருக்குத் தாமே பல கலைகளையும் கற்பித்தார்; வேத வேதாங்கங் களையும் கற்பித்தார். கிருச்சமதரும் வேதங்களிலும் கலைகளிலும் சிறந்த வல்லமை பெற்றார்; ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினார். தன் மகனின் நற்குண நற்செய்கைகளையும் கலை வல்லமையையும் கண்ட கவி முனிவர் கிருச்சமதருக்குக் கணபதி மந்திரத்தை உபதேசமாகச் செய்தார். கிருச்சமதரும் வேத வித்தகராய் கலை வல்லுநராய் குணக்குன்றாய் வளர்ந்து விநாயகப் பெருமானின் திருவருள் பெற்று நாற்றிசையும் புகழ் பரவச் சிறந்து விளங்கினார்.

யார் மகன்?

ஒரு நாள் மகத நாட்டரசன் தன் தந்தையின் ஸ்ராத்தத்தை நடத்திக் கொடுக்குமாறு பல முனிவர்களையும் அழைத் திருந்தான். வசிட்டர், அத்திரி போன்ற பல புகழ்பெற்ற முனிவர்கள் அங்குச் சென்றிருந்தனர். கிருச்சமதரும் அங்குச் சென்றிருந்தார். அரண்மனை மண்டபத்தில் அறிஞர்களாகிய முனிவர்கள் பலர் பல கலைகளைப் பற்றியும் வேத நுணுக்கங் களைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது அத்திரி முனிவர் ஒரு கருத்துக் கூற அதனைக் கிருச்சமதர் மறுத்துக் கூறினார். இருவருக்கும் ஏற்பட்ட கருத்துப் பரிமாறல் விவாதமாக உருவெடுத்தது; சற்று நேரத்தில் அது ஒரு சொற்போராயிற்று. வேதங் கரைகண்ட வித்தகர் இருவரிடையே ஏற்பட்ட மோதலில் இடையில் ஒருவரும் புகமுடியவில்லை. ஒருவருக்கொருவர் சளைக்காமல் வெகுநேரம் வாதம் புரிந்தனர். கிருச்சமதருடைய வாதத்தை உடைக்க முடியாத அத்திரி முனிவர் வெகுண்டார். தம்மைக் காட்டிலும் வயது மிகக் குறைந்த கிருச்சமதர் தம்மைக் காட்டிலும் வாதத்தில் மிகச் சிறந்து கலைகளில் மிக உயர்ந்து இருப்பதை அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. வேகம் மிகுந்த அப்பெரியார் விதிக்குப் புறம்பாகப் பேசுகிறோம் என்பதையும் உணராமல் கிருச்சமதரை நோக்கி, "முதலில் ஒன்றைப் புரிந்துகொள்; எங்களோடு ஒத்த முனிவர் குழுவில் சேர்ந் திருக்கும் தகுதி உனக்கில்லை; நீ பிறவிக் குற்றம் உடையவன்; உண்மையில் நீ கவி முனிவரின் மகனே அல்ல; இதைத் தெரிந்து கொள்; நீ ருக்மாங்கதன் என்ற அரசனுடைய குமாரன்; எங்களோடு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விவாதம் செய்தல் உனக்கு ஒவ்வாது'' எனக் கடுமையாகக் கூறினார்.

அத்திரி முனிவர் எவ்வாறோ ருக்மாங்கதன் வந்திருந்த செய்தியை அறிந்திருந்தார். ஆனால் அவன் உண்மையில் ருக்மாங்கதன் அன்று; அவன் இந்திரன் என்ற செய்தியை அவர் அறிந்திருக்கவில்லை. கலை விவாதம் கடைசியில் கிருச்சமதர் 'யாருடைய மகன்?' என்ற வினாவில் போய் முடிந்தது. கிருச் சமதருக்குப் பேரவமானமாயிற்று. அவர் வெகுண்டெழுந்து, ''என் பிறவியை இழித்துக் கூறிய உங்கள் நாவை இன்னே கிழித் திருப்பேன்; ஆயினும் யான் 'கவி முனிவரின் மகனே' என நாட்டிய பிறகே அதைச் செய்ய எண்ணியுள்ளேன்; உம் வார்த் தையை வாதமிடும் திறனின்றிப் பிறவிபற்றிப் பேசும் மோசக் கருத்துக் கொண்ட வார்த்தை என நிறுவுவேன்'' என வஞ்சினம் கூறி வெளிப் போந்தார்.

அத்திரி முனிவர்பாற் கோபமும் அவமானப்பட்டதால் ஏற்பட்ட குழப்பமும் முன்னே செல்ல நடை தளர்ந்து பர்ண சாலையை அடைந்தார் கிருச்சமதர். அவர் நேரே தம் தாயிடம் சென்று கோபம் கொப்பளிக்கத் தம்முடைய பிறப்பைப் பற்றியும் தம் தந்தையார் யாரென்பதையும் ஒளியாமல் உரைக்க என உறுமினார். அவருடைய தோற்றத்தையும் கோபத்தையும் கண்ட முகுந்தை அஞ்சி நடுங்கினாள். பொய்யுரை கூற வாயெழாது மெய்யுரை கூறக் கூசிய முகுந்தை நாத் தழுதழுக்க நடந்தனவற்றை நவின்றாள்; கிருச்சமதர் ருக்மாங்கதன் மகனே எனக் கூறினாள். பாவம் முகுந்தை! உண்மையில் கிருச்சமதர் இந்திரன் மகன் என்பதை அவள் உணரவில்லை. கிருச்சமதர் தலை சுழன்றது. தாம் கூறிய வஞ்சினம் எஞ்சி நிற்பதை உணர்ந்தார். பொங்கிய சினத்தீ அவர் உடலையும் உள்ளத் தையும் வெதுப்பத் தாயை நோக்கி, ''கனிவு மிக்க கணவன் அருகிருக்க நாணம் தபுத்துத் தாபம் மிகுந்து மற்றோர் ஆடவன் உடலைத் தைவந்த நீ, கானப் பறவைகளும் கடித்துண்ணக் கருதாத பேய் இலந்தை மரமாகி நின்றிடுக'' எனச் சபித்தார்.

தன்னைப் பெண்ணென்றும் கருதாமல் ஈன்ற தாயென்றும் தயங்காமல் சந்தர்ப்ப வசத்தால் சமைந்ததோர் சழக்கைப் பெரிதெனக் கொண்டு சினம் பூண்டு சாபமிட்ட தனயனைத் தானும் வெகுண்டு, ''கலைகள் பல கற்றும் பெண்ணின் பேதைமைப் பரிபவத்தைச் சற்றும் உணராது சாபமிட்ட நீ கொடிய குணமிக்க கொலையஞ்சா மகனைப் பெறுவாயாக''

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என எதிர்ச்சாபமிட்டாள். இதற்குள் கிருச்சமதர் இட்ட சாபம் , தன் விளைவைத் தர முகுந்தை ஓர் இலந்தையானாள்.

தன் பிறப்புத் தொடர்பான இழிவுணர்ச்சியால் உந்தப்பட்ட கிருச்சமதர் மனம் குன்றி மானம் கூசினார். தம் உயிர் வாழ்க்கையே ஒரு பெரும் பாரம் என எண்ணினார்; உண்ணும் உணவும் பருகும் நீரும் துறந்து வடபுலம் நோக்கி முகம் காட்டி அமர்ந்து உயிரை விட்டுவிடுதலே உத்தமம் எனக் கருதினார். அந்நிலையில் அசரீரி ஒன்று, ''கிருச்சமத, ருக்மாங்கதன் தவறு செய்யவில்லை; ருக்மாங்கதன் உருவில் வந்த இந்திரன் மகனே நீ என அறிக'' எனக் கூறியது. அசரீரி கூற்றைக் கேட்ட கிருச்சமதர் மேலும் குழம்பினார். இந்திரன் மைந்தன் என்றாலும் ருக்மாங்கதன் புதல்வன் என்றாலும் கவி முனிவரின் மகனல்லவே! இனி, தாயிடமும் விளக்கம் கேட்க இயலாது; அவள்தான் மரமாகி விட்டாளே!

தவத்தால் உயர்ந்த கிருச்சமதர்

இறுதியில் தன்னைப் பலர் முன்னிலையில் அவமானப்படும் படிச் செய்த முனிவரும் அவரோடிருந்த மற்றோரும் தன்னை வந்து கண்டு வணக்கம் செய்யும் நிலைக்குத் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற முடிவோடு அவ்வனத்தை விட்டு வேறொரு வனம் சென்றார். அடைதற்கரிய அடர்ந்த அடவியினூடு நெடுந்தூரம் சென்று ஒரு பூம்பொழிலைக் கண்டார். ரம்யமான அப்பொழிலின் நடுவே ரமணீயமான ஒரு பொய்கை இருந்தது. அப்பொழிலில் வானவில்லின் தன்மை காட்டி வண்ணவண்ண மலர்கள் பத்திபத்தியாய் மலர்ந்திருந்தன. அவற்றின் மணம் அவ்விடத்தை அமராவதியோ என எண்ணச் செய்தது. தண்ணென்றிருந்த அப்பொய்கையின் நீர் கல்மஷமற்று இனிமையாய் இருந்தது. அப்பொய்கையில் செந்திரு வீற்றிருக்கும் சரோஜமும் கலைத்திரு வீற்றிருக்கும் பங்கஜமும் விரவி மலர்ந்திருந்தன. அவ்விடத்தில் நிலவிய அமைதி அருந்தவ முனிவரின் கொந்தளிக்கும் மனத்திலும் அமைதி நிலவச் செய்தது. கிருச்சமதர் அவ்விடத்திலேயே தங்கி ஆனைமுகக் கடவுளைக் குறித்துத் தவம் செய்யத் தொடங்கினார். வலக்காற் பெருவிரலைப் படிமேல் படிவித்து அம்முழந்தாள்மேல் இடப்பாதத்தை இறுக்கி நிறுத்தி உடலை நிமிர்த்தி பூரகரேசகங்கள் சமநிலை எய்த இரு கைகளையும் தோளுக்குமேல் வானோக்கி நீட்டிக் கண்ணிரண்டும் நாசிகாக்ரத்தில் குவியப் புருவ மத்தியில் விநாயக பிந்துவைக் குறித்துப் பிணித்து அசைவின்றி ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கடுந்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தவம் புரிந்தார். அவரது தவாக்னி தேவர் முதலானோரைத் தகித்தது. விநாயகப் பெருமானும் தவமலையாய் தேஜோ மயமாய் விளங்கும் கிருச்சமதருக்குப் பிரத்யக்ஷமானார்.

கோடிசூர்யப் பிரகாசமும் ஈடில்லை என ஒளிவீசும் பரப்ரஹ்ம சொரூபியாகிய களிற்றுமுக விநாயகரைக் கண்ணெதிரில் கண்ட கிருச்சமத முனிவர் அவர் இணையடி பணிந்து, ''என்றுமுள எந்தாய், என்றும் நின் இணையடி பணிந்து வாழும் பேறு நல்க வேண்டும்; எவ்வுலகத்து முனிவரும், தேவரும், யக்ஷரும், சித்தரும், கின்னரரும், நாகரும், கந்தர்வரும், அசுரரும், நரரும், அனைத்து விலங்கினமும் என்னைப் பணிந்து என் ஆணையை மீறாதிருக்க அருள்புரிய வேண்டும்; யான் தவம் புரிந்த இவ்விடம் புஷ்பகவனம் எனவும் இதனை உள்ளடக்கித் தோன்றும் நகரம் புஷ்பக நகரம் எனப் பெயர் பெறுதல் வேண்டும்'' என வேண்டினார். விநாயகப் பெருமானும் கிருச்சமதர் கேட்ட வரங்களை அருளினார்; மேலும், ''உன்னிடம் ஒரு புதல்வன் தோன்றுவான்; அவன் தானே தனக்கொத்த தறுகணான் ஆவான்; சிவபிரானைத் தவிர வேறு எவராலும் அவனை அழித்தல் இயலாது; எம்மிடத்தில் எப்போதும் பக்தனாய் இருக்கும் பாக்கியம் உடையான் அவன்'' எனத் திருவாய் மலர்ந்து மறைந்தார்.

கிருச்சமதர் தாம் தவம் செய்த இடத்தில் ஓர் ஆலயம் நிர்மாணம் செய்து அதில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்தார். எதிரில் இருந்த கமலப் பொய்கையைப் புனித புஷ்கரிணி யாக்கினார். தாம் பிரதிஷ்டை செய்த விநாயகருக்கு வரத விநாயகர் எனத் திருநாமம் செப்பினார். அக்கோயில் நின்ற எல்லைக்குக் கணேச நகரம் எனவும் புஷ்கரிணிக்கு கணேச தீர்த்தம் எனவும் பெயர் வழங்கினார். கிருச்சமதர் நீண்ட நாட்கள் அங்கேயே தங்கி அனவரதமும் ஆனைமுகத்துப் புத்தேளுக்குத் தொண்டு செய்து தியானம் பழகி வந்தார். அவருடைய புகழ் உலகெலாம் பரவியது. முன்னம் அவரை இகழ்ந்த முனிவர்களும் அவர் இருப்பிடம் தேடிவந்து மரியாதை செலுத்தினர். பண்பேறிப் பக்குவமடைந்த கிருச்சமதர் எல்லா ரிடமும் சம நோக்கு உடையவராய் எவ்வுயிரிடத்தும் அருள் காட்டி அனுதினமும் தியான யோகம் புரிந்து அமைதியாக இருந்துவந்தார்.

முகுந்தையிட்ட சாபம்

ஒரு நாள் கிருசச்சமதர் வழக்கம்போலத் தியானத்தில் அமர்ந்தார். நீண்டநேரம் அவ்வாறு அமர்ந்திருந்த பிறகு கண்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

களைத் திறந்தார். அவருடைய கண்களின் மூலம் வெளிப்பட்ட யோகாக்னியிலிருந்து ஓர் அசுரன் தோன்றினான். அவன் அதியத்புதமான அழகும் ஈடில்லாத பலமும் கொடிய மனமும் இடிபோன்ற குரலும் உடையவனாய் இருந்தான். அவனைக் கண்ட உடனேயே கிருச்சமதர் நடுங்கினார். இப்படிப்பட்ட ஒரு மகன் தன் மூலம் உற்பவித்தது தன் தாய் தனக்கீந்த சாபமே என்பதை உணர்ந்தார். மஹா கணபதியைத் தியானம் செய்து கொண்டு கொஞ்சம் நடுக்கம் தீர்ந்து அவனை 'நீ யார்?' என்று கேட்பதுபோல் கூர்ந்து நோக்கினார். அவனும் கிருச்சமதரைப் பணிந்து, ''தந்தையே, எனக்குத் தாயும் தந்தையும் குருவும் தாங்களே. தங்கள் அருள் மாத்திரமே என்னை மூவுலகுக்கும் தலைவனாக்கும். ஆசி தந்து அருள்புரிய வேண்டும்'' எனப் பிரார்த்தித்தான். கிருச்சமதருக்கு இப்போது தெளிவாக ஒன்று புரிந்தது. தாயின் சாபத்தால் கொடூர மனம் உடையவனாயும் கணேசப் பெருமானின் திருவருளால் ஒருவராலும் வெல்லப் படாத பெருவலி உடையவனாகவும் தனக்கு மகனாக அவ்வசுரன் தோன்றியதை உணர்ந்தார். தன் அச்சத்தையும் அவனால் உலகுக்கு நேரப்போகும் துன்பங்களையும் வெளிப்படுத்தாமல் கிருச்சமதர் அவனை நோக்கி, ''மைந்த, உன் பெயர் பலி என வழங்கட்டும். மஹாகணபதியின் அரிய மந்திரத்தை உனக்கு உபதேசிக்கிறேன். அம்மந்திரத்தை உருவேற்றித் தியானம் செய்துவந்தால் எல்லாவகையான சித்திகளும் உனக்கு உண்டாகும்'' என்று கூறி அவனுக்கு மஹாகணபதியின் மந்திரத்தை உபதேசம் செய்தார். பலியும் பேருவகை எய்தித் தன் தந்தையின் பதம் பணிந்து தவம்புரியச் சென்றான். தன் தந்தையைப் போலவே அத்தனயனும் கோர தவம்புரியத் தொடங்கினான். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் கடந்தன. அவன் செய்த தவாக்னி ஸகல லோகங்களையும் தகித்தது. அவன் செய்த தவம் கண்டு களிப்பெய்திய கணேச மூர்த்தியும் தேஜோ மூர்த்தியாய் அவன் கண்களுக்குத் தோன்றினார். அழகாகச் சுருண்டு குழைந்த குஞ்சியும் நெற்றியில் நிலவும் நிலாக் கீற்றும் சந்தன வண்ண மாய்ச் சிறந்து தோன்றும் மெய்வண்ணமும் ப்ரஸன்ன வதனமும் அருள் சுரக்கும் இருகண்ணும் சற்றே தூக்கிய தும்பிக்கையும் பரந்துநிற்கும் இருசெவிகளும் ஏக தந்தமும் கழுத்தில் அணிந் திருந்த முக்தாஹாரமும் உயர்ந்த தோள்களும் நால்வகை ஆயுதங்கள் தரித்த நான்கு நீண்ட கரங்களும் பெருத்த தொந்தியும் உதர பந்தனமும் அரைக் கச்சையும் குறுந்தாளும் தன்னிரு கண்கள் உவப்பக் கண்டு களித்தான். அப்பெருமான் பாதங்களில் பணிந்தான். விநாயகப் பெருமானும் அவன் வேண்டும் வரம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

யாது என, பலி, ''மூவுலகங்களையும் வென்று இந்திராதி தேவர்கள் யான் இடும் கட்டளைக்குப் பணிந்து நடக்க வேண்டும்; நான் எண்ணிய பொருள் இடையூறின்றிக் கிடைக்க வேண்டும்; எண்ணிய செயல்கள் இடையூறின்றி நிறைவுற வேண்டும்; இறுதியில் நான் முத்தியும் பெற வேண்டும்'' என வேண்டினான். கணேச மூர்த்தியும் அருள்புரிந்து, மேலும் முறையே இரும்பு, வெள்ளி, பொன் ஆகிய உலோகங்களால் கட்டப்பட்ட கோட்டையோடு கூடிய மூன்று பறக்கும் நகரங்களையும் அளித்தார். அவை திரிபுரங்கள் எனப்பட்டன. பலியும் திரிபுரன் என வழங்கப்பட்டான். வரமளித்த விநாயகர் மறைந்தபின் பலி தந்தையைக் கண்டு தான் பெற்ற வரங்களைப் பற்றி விளக்கிக் கூறினான்.

திரிபுரனின் திக்விஜயம்

விநாயக பூஜையை விடாமல் செய்துவந்த திரிபுரன் தன்னோடு அவுணப் படைகளைச் சேர்த்துக் கொண்டு பூவுலக மன்னர் களோடு போரிட்டு அவர்களை அழித்தான். தான் சக்ரவர்த்தி யாயினான். பின்னர் பாதலம் முதலிய உலகங்களையும் வென்று அடக்கினான். அண்டத்தின் பல பகுதிகளிலும் வாழ்ந்த அவுணர்கள் இப்போது பலியை அண்டி வந்தனர். திரிபுரனும் அவர்களுக்கு ஏராளமான பொன்னும் பொருளும் அளித்து தன்னோடு இருக்கச் செய்தான். பின்னர் தேவருலகையும் கைப்பற்ற எண்ணிய திரிபுரன் தன் பெருஞ்சேனையோடு தேவருலகை அடைந்தான். இவன் வருகையைக் கேட்ட தேவர்கள் அஞ்சினர். ஆயினும் இந்திரன் திரிபுரனோடு யுத்தம் செய்தான். வெகு நேரம் போரிட்ட பின் அவர்கள் மல்யுத்தம் செய்யத் தொடங்கினர். வெற்றி தோல்வியின்றி அவர்கள் இருவரும் போரிட்டனர். இறுதியில் திரிபுரன் இந்திரனைத் தூக்கி விட்டெறிந்தான். இந்திரன் மயக்கமடைந்து இமயமலைச் சாரலில் வீழ்ந்தான். திரிபுரன் தேவர்களையெல்லாம் துரத்திவிட்டு இந்திரனின் வெள்ளையானை மீதேறி வெற்றி முழக்கம் செய்துகொண்டு பல்வகை வாத்தியங்கள் முழங்க அவுணப் படையோடு அமரா வதியுள் புகுந்து தேவேந்திரனுடைய அரியாசனத்தில் அமர்ந்தான்.

தேவருலகில் இருந்த அமரர்கள் அசுரனின் ஆணைக்கு அடங்கி அவனுக்கு எடுபிடி வேலைகளைச் செய்துகொண்டு வாழத் தொடங்கினர். பலர் அடர்ந்த காடுகளுக்குச் சென்று மலை முழைகளில் மறைந்து வாழ்ந்தனர். சிலர் இந்திரனைத் தேடிக்கொண்டு சென்றனர். இமயமலை அடிவாரத்தில் அயர்ந்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வீழ்ந்துகிடந்த இந்திரனைக் கண்டனர். இந்திராணியும் அங்கே வந்து சேர்ந்தாள். அவர்கள் யாவரும் இமயமலைகளில் உள்ள குகைகளில் யாரும் அறியாத வகையில் மறைந்து வாழ்ந்தனர்.

பிறகு திரிபுரன் சத்யலோகம் சென்றான். திரிபுரன் வருவதைக் கேட்டபொழுதே அஞ்சிய நான்முகன் தன்னுலகை விட்டு வைகுண்டம் சென்றுவிட்டார். சத்யலோகத்தில் தனக்குப் பிரதியாக தன் மானத புத்ரனாகிய சண்டனையும் தேவலோகத்தின் மற்றோர் அசுரனையும் திட்டம் செய்து ஆட்சிப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்த திரிபுரன் அங்கிருந்து புறப்பட்டு வைகுண்டம் சென்றான். இவன் வருவதை முன் கூட்டியே உணர்ந்த நான்முகனும் விஷ்ணுவும் இந்திரன் மறைந்து வாழும் இமயமலைச் சாரலை அடைந்தனர். வைகுண்டத்தையும் கைப்பற்றிக்கொண்ட திரிபுரன் அங்கும் தன்னுடைய பிரதிநிதியாக மற்றொரு மானத புத்ரனாகிய பிரசண்டனை வைத்துவிட்டுப் பூவுலகம் வந்து சேர்ந்தான்.

தவத்தால் சிறந்த திரிபுரன் தன் ஸங்கல்ப மாத்திரத்தால் மூன்று புதல்வர்களை உண்டுபண்ணினான். அவர்களுக்கு வஜ்ரதம்ஷ்ட்ரன், பீமகாயன், காளகூடன் எனப் பெயரிட்டு கரும்பொன், வெண்பொன், செம்பொன் கோட்டைகளுக்கு முறையே அவர்களைத் தலைவனாக்கினான். அவர்கள் தம் இஷ்டப்படி கோட்டைகளில் பறந்து சென்றனர். நினைத்த இடத்தில் இறங்கினர். அக்கோட்டை இறங்குமிடத்தில் ஏதாவது பெரிய நகரம் இருப்பின் அது அதோகதியாகும். இவ்வாறு அவர்கள் கொடுமையாகப் பேரழிவு செய்து வந்தனர்.

விநாயகரை வேண்டல்

திரிபுரனின் கொடுமை தாங்காத திருமால், நான்முகன், இந்திரன் முதலிய தேவர்கள் கைலாயத்தை அடைந்தனர். அங்கே மறைந்து வாழ்ந்து வந்தனர். அப்போது ஒருநாள் அவர்கள் நாரத மஹாமுனிவரைக் கண்டு தங்கள் துன்பங்களுக்கு ஓர் முடிவுகாண வழி கூறுமாறு வேண்டினர். நாரதர் அவர்களை நோக்கி, "மஹா கணபதியின் அருள்பெற்ற திரிபுரனை அழிப்பதென்பது சாமானியமானது அன்று. கைலாசபதியான சிவபிரானால் மட்டுமே அழிவுபெறும் வரம் பெற்றவன் அவன். ஆனால் ஒருபோதும் மறதியின்றி விநாயக பூஜையை விடாமல் செய்யும் அவனை யாரால் என்ன செய்ய இயலும்? விநாயகரே வழிசெய்தாலன்றி வேறு வழியில்லை. ஆகையால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எல்லாரும் விநாயகரைப் போற்றித் துதியுங்கள்; அவரைச் சரணடையுங்கள். உங்கள் கருத்து நிறைவேறும்'' எனக் கூறினார். தேவர்களும் நாரத முனிவரிடம் விநாயக மந்த்ர உபதேசம் பெற்று விநாயகரைத் தியானித்தனர்.

விநாயகரும் அவர்கள் தவத்தைப் போற்றி அவர்கள் முன் பஞ்சமுக கணேசராகத் தோன்றி அருள் புரிந்தார். திருமால் முதலான தேவர்கள் அனைவரும் ஆதிப்பிரானின் அடியிணை பணிந்தெழுந்து தாங்கள் திரிபுரனால் படும் துன்பங்களையும் உலகம் படும் துன்பங்களையும் நல்லோர், அறவோர், எளியோர் ஆகியவர்கள் படும் துயரையும் எடுத்துக் கூறி யாவரையும் காக்க வேண்டும் என வேண்டினர். விநாயகர் அருள் கூர்ந்து அவர்களை நோக்கி, ''திரிபுரனைக் கொல்லுதல் சிவபிரான் ஒருவருக்கே சாத்தியம். வேறொருவராலும் அவன் வெல்லப்படான். சிவபிரானுக்கும் அவனோடு போரிடுவதற்கு ஒரு வியாஜம் தேவை. அதனை நான் உண்டாக்குகிறேன். நீங்கள் யாவரும் சிவபிரானைச் சரணடையுங்கள்'' என்றார்.

தேவர்கள் சிவபிரானைச் சரணடைதல்

விநாயகப் பெருமான் விதித்தபடி தேவர்கள் அனைவரும் கைலைமலைவாசனை விரைந்தடைந்தனர். திருமால் நான் முகன் உட்பட அத்தனை தேவர்களும் அங்கு வந்திருப்பதைக் கண்ட காருண்ய மூர்த்தி அவர்களை வரவேற்று வந்த காரணம் யாதென உசாவினார். அவர்கள் திரிபுரனால் தாம் படும் துயரமெல்லாம் கண்ணீர் மல்க எடுத்துக் கூறினர். திரிபுரனை அழித்தாலன்றி இனி உலகம் வாழாது என உரைத்தனர். இதனைக் கேட்ட சிவபிரான், ''தேவர்களே, நீங்கள் இனி வருந்தற்க. திரிபுரனின் முடிவு காலம் நெருங்குகிறது. விரைவில் உங்கள் துன்பம் துடைப்போம். நீங்கள் யாவரும் உங்கள் இருப்பிடம் சென்று அமைதியுடன் இருங்கள்'' எனக் கூறினார். தேவர் களும் அவ்வாறே தத்தம் இடங்களுக்குத் திரும்பினர்.

தங்கள் இடத்திற்குத் திரும்பிய தேவர்கள், திரிபுரனோடு போர்செய்யும் காலத்தில் சிவபிரானுக்குச் சிறந்ததொரு தேர் வேண்டுமே என எண்ணினார்கள். உடனே அவர்கள் ஒன்று கூடி ஒரு பெருந்தேரை உருவாக்கினார்கள். அத்தேரின் பாகங் களாக சூரியன், சந்திரன், ரித்விக்குகள், சமயங்கள், மாயை, பூவுலகு, சுவர்க்கம், மலைகள், தத்துவங்கள், மேகங்கள், புராணங்கள், சாஸ்திரங்கள், சமுத்திரங்கள் ஆகியவை அமைந்தன. நான்கு வேதங்களும் நான்கு குதிரைகள் ஆயின. பிரமதேவன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சாரதியானார். சாரதியின் கைக்கோல் பிரணவமாயிற்று. மகாமேரு வில்லானது. விஷ்ணு அம்பானார். வாசுகி நாணாயிற்று. அப்பெருந்தேரைக் கொண்டுவந்து சிவபிரான் முன் நிறுத்தினர். அதனைக் கண்ட அவர் மிக வியந்தார்.

விநாயகர் விஷமம்

விநாயகப் பெருமான் வேதம் வல்ல அந்தணர் உருவெடுத்துக் கொண்டு திரிபுரனின் அரண்மனைக்கு வந்தார். அந்தணர் அரண்மனையை அடைந்தது கண்டு திரிபுரன் அவரை வரவேற்றான். அவர் முகவொளியும் தோற்றச் சிறப்பும் திரிபுரனுக்கு அவரிடத்தில் மரியாதையைத் தோற்றுவித்தன. ஆகையால் அவரைச் சிறந்ததொரு ஆசனத்தில் அமரச் செய்து தன்னைத் தேடி வந்த காரணம் என்ன எனக் கேட்டான். அந்தணனாய் வந்த ஆனைமுகத்தர் திரிபுரனை நோக்கி, ''என்னைக் கலாதரன் என அழைப்பர். நான் செல்லாத உலகம் இல்லை; சந்திக்காத பெரியோர் இல்லை; தேவர்கள் இல்லை; முனிவர்கள் இல்லை. ஆகவே, விநாயகர் திருவருள் பெற்றுச் சிறப்பெய்திய நின்னை மரியாதை நிமித்தம் கண்டுசெல்லவே வந்தேன்.'' என்றார். அவருடைய இனிய குரலையும் எதனையும் எதிர்பார்க்காத தோரணையையும் கண்ட திரிபுரன் அப்புண்ணிய புருஷரிடம் அதிக மதிப்புக் கொண்டான். அவரை நோக்கித் திரிபுரன், ''என் அரண்மனைக்கு வந்த அந்தணர் எவரும் வெறுங்கையோடு மீண்டதில்லை. ஆகவே எப்பொருள் கேட்பினும் அதனைத் தருகின்றேன். பெற்றுச் செல்ல வேண்டும்'' எனக் கூறினான். அவன் சொற்களைக் கேட்ட ஆனைமுகத்தர் 'எனக்கு இவ்வுலகில் தேவையான பொருள் ஏதும் இல்லை. ஆகையால் நின்மன நிறைவின் பொருட்டு ஒரு சிறு வேண்டுகோள்: கைலையங்கிரி முகப்பில் சிந்தாமணி விநாயகர் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கிறார். அவரைக் கைலைநாதன் தினமும் வழிபட்டு வருகிறார். உன்னால் முடியுமானால் அச்சிந்தாமணி விநாயகரை வருவித்து எனக்களித்திடுக. வேறொன்றும் வேண்டிலேன்'' என்றார். திரிபுரன் உடனே தன் தூதுவர் சிலரை அழைத்தான். அவர்களிடம், ''நீங்கள் விரைந்து சென்று கைலையை அடைந்து, சிவபிரானைப் பணிந்து போற்றுங்கள். பிறகு அவரிடம் அளவிலாப் பெருமை மிக்க சிந்தாமணி விநாயகரைத் திரிபுரன் தனக்கு வேண்டுமென்று விரும்புகிறான். ஆகையால் அவரை உடனே அனுப்ப வேண்டும் எனப் பணிவுடன் பகருங்கள். அவர் மறுத்துரைப்பாராயின் 'திரிபுரன் நேரில் வந்து அச்சிந்தாமணி விநாயகரை எடுத்துச் செல்வான்' என எச்சரியுங்கள்'',

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்று கூறி அனுப்பினான். உள்ளத்துள் கிளுகிளுத்துச் சிரித்துக் கொண்ட விநாயகர் திரிபுரனை நோக்கி, "நின் தூதுவர் சிந்தாமணி விநாயகருடன் திரும்பி வரும்வரையில் நான் இவ்வூருக்கு வெளியே உள்ள சிறுகுடிலில் தங்கியிருக்கிறேன்" எனக் கூறி விடைபெற்றுச் சென்றார்.

சிந்தாமணியைச் சிந்தித்த சிவபிரான்

இந்திராதி தேவர்களுக்கு அபயமளித்த கைலையங்கிரிவாசன் திரிபுரனுடன் போர்தொடுக்க முகாந்திரம் ஒன்று வேண்டுமே எனக் கவலை கொண்டார். அக்கவலை நெடுநாள் நீடிக்கவில்லை. சின்னாட்களிலேயே திரிபுரன் அனுப்பிய தூதுவர் வந்தனர். சிவபிரானைப் பணிந்து போற்றிய அவர்கள் திரிபுரன் சொல்லி விட்ட செய்தியைக் கூறினர். இதனைக் கேட்ட ஐம்முகக் குரிசில் திரிபுரனுடன் போர்தொடுக்கக் காரணமொன்று கிடைத்த தென்று மகிழ்ந்தார். சற்றுநேரம் யோசிப்பார் போன்று அமர்ந் திருந்த வள்ளல், "சிந்தாமணி விநாயகரைப் பிரிந்து என்னால் இருக்க இயலாது. ஆகவே சிந்தாமணி விநாயகர் இவ்விடமிருந்து செல்ல அனுமதிக்க மாட்டேன்" எனக் கூறினார். சிவபிரான் விடையைக் கேட்ட தூதுவர் 'திரிபுரனின் ஆணையை மறுக்கும் தேவரும் உளரோ?' என வியந்தனர். கொஞ்சம் திகைப்படைந்தனர். பின்னர் சிவபிரானை நோக்கி, "சிந்தாமணி விநாயகரை எங்களுடன் அனுப்பவில்லை எனில், திரிபுரன் தானே நேரில் வந்து பலாத்காரமாக எடுத்துச் செல்வார்" என்று சொன்னார்கள். சொன்னவுடன் வெடிச்சிரிப்புச் சிரித்த சிவபிரான், "வரட்டும்" எனக் கூறி அவர்களை அனுப்பி விட்டார்.

பிறகு சிவபிரான் சிந்தாமணி விநாயகரை அணுகித் துதித்து ஏகாக்ஷர மந்திரத்தைத் தியானம் செய்தார். மனமொன்றிச் செய்த கடுந்தவமாதலின் சிவபிரானின் ஐந்து முகங்களிலிருந்தும் ஐவகை ஜோதிகள் வெளிப்பட்டு மூலத்தில் ஒன்றாய் இணைந்து ஐந்து முகங்களாய்ப் பரிணமித்து ஒவ்வொரு முகத்திலும் ஒரு துதிக்கை விளங்க ஓங்கார ஸ்வரூபியாய்ப் பஞ்சமுக கணபதி தோன்றினார். பிரணவ ஸ்வரூபியாய் பஞ்சமுக விநாயகரைத் தன் எதிரே பிரத்யக்ஷமாகக் கண்ட பரமேசுவரன் ஆனைமுகத் தண்ணலுக்கு ஐம்முகமும் உண்டோ என அயிர்த்துத் திகைத்து நின்றார். பஞ்சமுகப் பெருமானும் சிவபிரானை நோக்கி, "நின் ஐந்து முகங்களும் தனித்தனியாய் எம்மைத் தியானம் செய்த மையின் யாமும் தனித்தனியே தோன்றி ஒன்றாய் இணைந்து உமக்குத் தரிசனம் கொடுத்தோம். ஒன்றாய் முளைத்துப் பலவாய்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அரும்பும் என் இயல்பு யாவரும் அறிந்ததே. பலவாய் அரும்பினும் ஒன்றாய் இணையும் இயல்பும் எமதே என்பதை யாவருக்கும் அறிவுறுத்தவே இவ்வாறு நும் ஐந்து முகங்களினின்றும் தோன்றினோம். இனி உமக்கு வேண்டும் வரங்களைப் பெற்றுக் கொள்க'' என அருளினார். சிவபிரான் மீண்டும் பஞ்சமுக விநாயகரைப் பணிந்து போற்றி, ''திரிபுரன் என்ற அசுரன் தங்கள் வரபலத்தால் திரிலோகமும் நடுங்கச் செய்கிறான். யான் தினமும் பூசனை புரியும் தங்கள் திருவுருவையும் எடுத்துச் செல்ல விழைகிறான். என்னை அழிக்கும் கடவுளாய் நிருமித்த தாங்கள் என்னாலேயே திரிபுரனும் அழிய வேண்டும் என விதித்துள்ளீர்கள். அத்திரிபுரனை அழிக்கும் வல்லமையையும் அடியேனுக்கு அருள வேண்டும்'' என வேண்டி நின்றார். பஞ்சமுக கணேசர் தம் மூலமந்திரத்தையும் பீஜாட்சரத்தையும் சிவபிரானுக்கு உபதேசம் செய்தார். திரிபுரனை அழிக்க ஆயுதம் ஏவுமுன் நூறு முறை மூலமந்திரத்தை பீஜாட்சர ஜபத்துடன் உருவேற்ற வேண்டும் எனவும் ஏவும்போது ஒரு முறை ஜபிக்கவேண்டும் எனவும் நியமம் கூறி மறைந்தார்.

திரிபுர தகனம்

தான் அனுப்பிய தூதர்களின் வரவை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் திரிபுரன். சின்னாட்களில் தூதுவரும் திரும்பி வந்தனர். திரிபுரன் எதிர்பார்த்ததுபோல் சிவபிரான் சிந்தாமணி விநாயகரைக் கொடுத்தனுப்பவில்லை. தான் விடுத்த எச்சரிக்கையையும் சிவபிரான் பொருட்படுத்த வில்லை என்று அறிந்த போது அவன் கோபத்தால் கொதித்தான். இன்னே சென்று ஈசனை அழித்து எடுத்து வருவேன் சிந்தாமணி விநாயகரை எனச் சூளுரை பகன்று தன் படைஞரைக் கூவி அழைத்தான். திரிபுரங்களுக்குத் தலைவர்களாகிய தன் மூன்று மானத புத்திரர்களையும் அழைத்தான். விரைவில் எல்லாரும் வந்து சேர்ந்தனர். சண்டனும் பிரசண்டனும் கூட வந்திருந் தனர். அசுரர் பெரும்படை அவனி நெளிய கைலைமலை நோக்கிச் சென்றது. கைலை நாதரும் அவுணப் பெரும்படை அவரைக் குறித்து வருவதை உணர்ந்து நந்தியெம்பெருமானை நோக்கி, ''பூதகணப் பெரும்படையைத் திரட்டுக'' எனக் கட்டளை யிட்டார். அதனைக் கண்ட உமையம்மை தானும் போரைக் காணக் களத்திற்கு வர அனுமதி கேட்டார். அத்தனும் இசைந்து அமரர்கள் உருவாக்கிய அதிசயத் தேரின்மீது அம்மையுடன் ஏறி அமர்ந்தார். பூத கணப்படை ஏழு கடல்போல் பரந்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நின்றது. பரந்துநின்ற படையின் ஒரு சிறகில் முருகப்பிரானும் ஒரு சிறகில் நந்திதேவரும் ஒரு சிறகில் புஷ்பதந்தரும் ஒரு சிறகில் இலக்கவீரரும் ஒரு சிறகில் வீரபத்திரரும் ஒரு சிறகில் இந்திரனும் தலைமை தாங்கி நின்றனர். சிவபிரான் தன் தேரைத் திரிபுரன் நின்ற இடம்நோக்கிச் செலுத்தினார். திரிபுரனும் அவர் முன்னே வில்லை வளைத்துப் பல்லாயிரம் அம்புகளை எய்தான். பெரும் போர் தொடங்கியது. முருகப்பிரான் முன் பிரசண்டன் தோன்றிப் போரிட்டான். மஹாபலிஷ்டனாயும் கொடியவனாயும் விளங்கிய அவனை முருகப்பிரான் அம்பு மாரியால் துளைத்துவிட்டார். இறுதியில் ஐம்முக அரவுருவில் அமைந்த சிலீமுகத்தை ஏவினார். அஃது அவன் உயிரைக் குடித்தது. பிரசண்டன் மாண்டான். நந்திதேவர் தலைமையேற்று நின்ற பக்கத்தில் அவரைச் சண்டன் எதிர்த்துப் போரிட்டான். சண்டன் தன் சாபத்தை வளைத்து எய்த பகழி எண்ணாயிரம். அவை பூத் கணத்தவரைப் பொளிந்தன. கணப்படைகள் களத்தில் நிற்க முடியாமல் கலைந் தோடின. நந்தி தேவர் சினம் பெருகியது; வில்லை வளைத்துச் சோனை மாரிபோல் அவுணப்படைமீது அம்புமழை பொழிந்தார். முத்தலைப் பகழியொன்று எடுத்துச் சண்டன் உரமடிய உய்த்தார். சண்டன் களத்தில் வீழ்ந்து மாண்டான். கனக துர்க்கத்தோடு வந்த காள கூடனைப் புஷ்பதந்தர் கொன்றார் வெள்ளிக்கோட்டைத் தலைவன் பீமகாயனை இலக்கவீரர் கொன்றார். இரும்புக்கோட்டைத் தளபதி வஜ்ரதம்ஷ்ட்ரனுக்கும் வீரபத்திரருக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. வீரபத்ரர் வஜ்ரதம்ஷ்ட்ரனைக் கொன்றார். திரிபுரனின் மந்திரியை வாசவன் வஜ்ராயுதத்தால் வதைத்தான். சிவன்படைத் தலைவர் களுக்கும் திரிபுரன் படைத் தலைவர்களுக்கும் நிகழ்ந்த போரில் திரிபுரனின் படைத்தலைவர்கள் அனைவரும் மாண்டனர். திரிபுரனின் மைந்தர்கள் இறந்தமையால் அவன் மிகவும் மனம் வெதும்பினான். தானே மூன்று வடிவம் கொண்டு மூன்று கோட்டைகளையும் இயக்கிக் கொடுமையான போரிட்டான். இவ்வாறு பல நாட்கள் போர் நிகழ்ந்தது. தேவர்கள் செய்த சிறந்த தேரில் அமர்ந்து உமையம்மையும் போர் நிகழ்ச்சிகள் அனைத்தையும் பார்த்தாள். திரிபுரனின் வலிமையும் தீரமும் கண்டு வியந்தாள். அப்போது திரிபுரனின் அட்டஹாசத்தைப் பொறுக்க முடியாத தேவர்களும் கணங்களும் எம்பெருமானை நோக்கி, "வாசுகியை மலைவில்லுக்கு நாணாகவும் அரியை அம்பாகவும் கொண்ட சங்கரா, உன் வலிமைக்குத் திரிபுரன் எம்மாத்திரம்? ஓரம்பு போதாதோ அவனை ஒழிப்பதற்கு? அவன் விடுக்கும் அம்புகளையும் அஸ்திரங்களையும் எங்களால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தாங்க முடியவில்லையே!'' என்று வேண்டினர். சிவபிரான் உடனே விநாயகக் கடவுள் உபதேசித்த மூலமந்திரத்தை நூறு முறை ஜபித்தார். கையில் மேரு வில்லிருக்க வாசுகி நாணிருக்க அரியே அம்பாய் அமர்ந்திருக்க அவற்றைத் தொடாது முத்தலைச் சூலமொன்றெடுத்து கணபதி மூலமந்திரம் கூறி உயரத் தூக்கினார். அவ்வளவில் திரிபுரம் வெந்து நீறாய்த் தணிந்தது. சூலம் சென்றதோ வென்றதோ எரித்ததோ எதையும் இமையாக் கண்ணுடைய அமரர்களாலும் காண இயலவில்லை. சென்ற சூலப்படை மீண்டு வருமுன் திரிபுரன் ஆன்மா ஜோதி வடிவாய்ச் சிவனடி சேர்ந்தது. திரிபுரம் எரித்த சிவபெருமானை யாவரும் புராரி எனவும் திரிபுராரி எனவும் திரிபுராந்தகன் எனவும் முப்புரம் எரித்த முன்னோன் எனவும் கொண்டாடினர். இது நிகழ்ந்தது புரட்டாசித் திங்கள் பூர்ணிமை அன்று. ஆகவே அந்நாள் ஒரு பொன்னாள் ஆகும். போற்றத் தகுந்த நாள் ஆகும். சிவபிரான் தன் கணங்களோடும் தேவர்களோடும் மீண்டும் கைலையடைந்தார். உலகம் திரிபுரனின் பிடியினின்றும் விடு பட்டது. யாவரும் தேவதேவனைத் துதித்துத் தத்தம் இருப்பிடம் சென்றனர்.

8. மலைமகள்

தக்கன் செய்த யாகம்

நான்முகப் பெருமானின் மைந்தர்களில் ஒருவன் தக்ஷன். மற்றைப் புதல்வர்கள் பெருந் தவமியற்றிய முனிபுங்கவர்களாய் எய்தற்கரிய பெரும்பேறு எய்தினர். தக்ஷனும் சிவபிரானைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தான். காயிலை தின்றும் கானில் உறைந்தும் தீயிடை நின்றும் அவன் செய்த தவத்தின் பெருமையை எடுத்துச் சொல்லல் எளிதன்று. அன்பிற்கு உருகித் தவத்திற்குக் கட்டுணும் எம்பெருமான் தக்ஷன்முன் தோன்றினார். பார்வதி நாதனின் பாதம் பணிந்த தக்ஷன் உலகத் தலைமை முதலான பல வரங்களைப் பெற்றான். இறுதியாக, ''உலகம் ஓங்க இன்சக்தியாய் விளங்கும் எம்பிராட்டி என்மகளாய் வரல் வேண்டும்; அம்மங்கையை நான் நினக்கே திருமணம் செய்விக்க வேண்டும்; இவ்வரம் அருளல் வேண்டும்'' எனப் பிரார்த்தித்தான். ''அவ்வாறே ஆகுக'' என்ற அண்ணல் மறைந்தார். உமையம் மையும் அவன் வேண்டுகோளுக்கு இணங்க அவனுக்கு மகளாய்த் தோன்றினாள்; அப்பெருமாட்டி தாக்ஷாயணி எனப் பெயர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெற்று அழகு பிம்பமாய்க் கலைச் செல்வியாய் நாளும் ஒரு சிறப்புற்று நன்கு வளர்ந்தாள். அப்போது தக்ஷனும் சில முனிவர்களைக் கைலைக்கு ஏகச்செய்து திருமணம் பேசி முடித்தான். பிறகு தன் மகளாகிய தாக்ஷாயணியைப் பல்வகைச் சிறப்புகளுடனும் சிவபிரானுக்குத் திருமணம் செய்வித்தான். சிவபிரானும் தாக்ஷாயணியைத் தன் எருத்து வாகனத்தின் மீது ஏற்றிக் கொண்டு கைலையை அடைந்தார்.

பிறகு ஒருநாள் தக்ஷன் தன் மகளைப் பார்த்து வர வேண்டுமென்ற ஆவலோடு திருக்கைலை சென்றான். அவன் மனத்தில் அப்போது பெருஞ் செருக்குத் தோன்றியது. சிவபிரான், மாமனாகிய தன்னைக் கண்டதும் எழுந்தோடி வந்து எதிர் கொண்டழைத்துப் பாதங்களில் பணிந்து மரியாதை செய்ய வேண்டுமென்று எதிர்பார்த்தான். சிவபிரான் அவ்வாறு செய்யவில்லை; அவர் தக்ஷனைப் புன்முறுவலால் வரவேற்றார். தக்ஷனின் செருக்கு கோபமாய் மாறியது. தன் மருமகன் எனவும் கருதாமல் வாய்போனபடியெல்லாம் பழித்துப் பேசினான்; இழித்துக் கூறினான். உடனே திரும்பித் தன் அரண்மனை வந்து சேர்ந்தான். தன் மருமகனாகிய சிவபிரானை எவ்வாறு இகழ்வது; அவரை விட உயர்ந்த நிலையை எவ்வாறு அடைவது என ஆழ்ந்து யோசித்தான். கடைசியாக ஒரு சிறந்த வேள்வி செய்வது எனவும் அவ்வேள்விக்கு திருமால் முதலான தேவர்களையெல்லாம் அழைப்பது எனவும் சிவபிரானை அழைக்காது விட்டுவிடுவது எனவும் தீர்மானம் செய்தான்.

அம்முடிவின்படியே தக்ஷன் பெரியதொரு வேள்வி செய்யப் புகுந்தான். நான்முகனும் திருமாலும் இந்திராதி தேவர்களும் அவ்வேள்வி காண வந்தனர். தன் தந்தை சிறந்ததொரு வேள்வி செய்வதைக் கேள்வியுற்ற எம்பெருமாட்டியும் அவ்வேள்வியைக் காண விழைந்து எம்பெருமானை அணுகினாள். சிவபெருமான் அம்மையை நோக்கி, "இவ்வேள்வி என்னை இகழ்வதற்காகவே செய்யப்படுவது; நீ அங்குற்றால் அவமானப்படுவாய்; மேலும் நமக்கு அழைப்பு இல்லை" எனக் கூறினார். ஆனால் தந்தைபால் பாசம் கொண்ட தாக்ஷாயணி, "அழைப்பு இல்லை எனினும் நாம் செல்வதில் தவறில்லை" எனக் கூறவும் சிவபிரான் எம்பெருமாட்டியை மட்டும் அனுப்பி வைத்தார். ஆனால் தாக்ஷாயணி வேள்விச் சாலையை அடைந்த போது அவளை 'வா' என அழைப்பார் யாருமில்லை. அவள்தாய் வேதவல்லி கூட அவளை அழைக்கவில்லை; மகிழ்முகம் காட்டிப் பேசவில்லை; தாயும் தந்தையும் ஏசி இகழ்ந்தனர். இதனால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வெகுண்ட தாக்ஷாயணி, "விதி வழி மறுத்த இந்த யாக சாலை கூளியும் அலகையும் கூத்தாடும் சுடலையாகட்டும்" எனச் சபித்துக் கைலைக்கு மீண்டார். பாலநேத்திரனைக் கண்டு வெம்பி அழுதார். "தன் மனைவிக்குச் செய்த பங்கம் தனக்கே செய்த இழிவு" எனக் கருதிய கைலைமலை வாசன் உருத்து எழுந்தார். அவர் முகத்தினின்றும் கொப்பளித்த கோபத் தீயிலிருந்து வீரபத்திரர் தோன்றினார். சிவபெருமான் வீரபத்திரரை நோக்கி, "நீ விரைந்து சென்று தக்ஷன் செய்யும் யாகத்தை அழித்து அங்குக் குழுமியிருப்போரைத் தண்டித்து வா" என ஆணையிட்டு அனுப்பி வைத்தார். வீரபத்திரரும் விரைந்து வேள்விச் சாலையை அடைந்தார்; சிவனையிகழ்ந்து யாகம் செய்யும் தக்ஷனை ஆதரித்துக் குழுமியிருந்த தேவர், முனிவர், மனிதர், அவுணர் முதலிய யாவரையும் புடைத்தார். வேள்விக்களம் போர்க்களமாயிற்று. கடுங்கோபம் கொண்ட தக்ஷன் தன் படைகளுடன் வீரபத்திரரை எதிர்க்கலானான். வீரபத்திரர் அவன் படைகளைச் சிதற அடித்து அவன் தலையையும் வெட்டிவிட்டார். தக்ஷன் தலை தரையில் உருண்டது. வானோரும் ஏனோரும் தம் தலை தப்பியது போதுமென விரைந்தோடினர். நாரணனும் கலைப்பூரணனும் வீரபத்திரரைப் பணிந்தனர். வீரபத்திரரின் கோபம் சற்றே தணிந்தது. அப்போது சினந்தணிந்த சிவபிரானும் அங்குத் தோன்றினார். அவரைக் கண்ட நான்முகனும் நாரணனும் வேதவல்லியை முன்னிலையாக்கித் தக்ஷனை மீண்டும் உயிர்ப் பிக்குமாறு வேண்டினர். தக்ஷன் உடல்மட்டுமே அங்கிருந்தது. அவன் தலை எங்குத் தேடியும் கிடைக்கவில்லை. ஆகவே அங்குக் கிடந்த ஓர் ஆட்டின் தலையை அவனுடலிற் பொருத்தி அவனை உயிர்பெற்றெழச் செய்தார். இவை யாவற்றையும் கண்ட எம்பிராட்டி தக்ஷன் மகளாய்ப் பிறந்த இழிவைப் போக்கிக் கொள்ள விரும்பியவராய் யோகமுறையில் தீயெழுப்பி நீறானார்.

மலையான் மகள்

அக்காலத்தில் இமயமலைச் சாரலை இமவான் என்றொரு மலையரசன் ஆண்டு வந்தான். அவன் ஈசனாரிடத்துப் பெரும் பக்தி கொண்டவன். அவன் மனைவி மேனை என்பாள்; கணவனோடு கருத்தொருமித்த காரிகை. அவர்கள் செய்த அருந்தவத்தால் எம்பிராட்டி அவர்களுக்கு மகளாய்த் தோன்றினார். பர்வதராஜன் தன் குமாரிக்குப் பார்வதி எனப் பெயரிட்டான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மணப்பருவம் எய்திய மங்கை தன் தந்தையை நோக்கி 'என் எண்ணம் ஈடேற ஏற்றதொரு விரதத்தை இயம்புவீர்' என வேண்டினாள்..இமவானும் இசைந்து விநாயகர் விரத மகிமை யையும் விரதம் அனுஷ்டிக்கும் முறையையும் விளக்கிக் கூறினார். மேனைமகள் மீண்டும் இமவானை நோக்கி 'இத்தகைய விரதத்தை இதற்குமுன் மேற்கொண்டவர் உளரோ' என வினவ இமவான் உரைப்பதானார்:

''முன்னொரு காலத்தில் தேவரும் யோகரும் போற்றக் கைலையங்கிரியில் சிவபிரான் உயர்ந்ததோர் ஆசனத்தில் அமர்ந் திருந்தார். அப்போது அருகில் இருந்த முருகன் அண்ணலை நோக்கி, 'விரைந்து பயனளிக்கும் விரதங்களுக்குள் உயர்ந்த விரதம் எது' என்று கேட்டார். அண்டர் நாதன் பாலகுமரனை நோக்கி, 'விரதங்களில் சிறந்தது விநாயக சதுர்த்தி விரதமே. அதனை ஆவணி மாதம் சுக்லபக்ஷ சதுர்த்தியில் தொடங்க வேண்டும். மிக்க சிரத்தையுடன் ஒரு வேளையே ஊண் உண்டு மூன்று ஜாமமே துயில்கொண்டு முப்பது நாட்கள் தொடர்ந்து செய்ய வேண்டும். அடுத்த சுக்ல பக்ஷ சதுர்த்தியில் விரதமுடிவு செய்ய வேண்டும்'. ''இது கேட்ட முருகன் நகைசெய்து, தங்களைக் குறித்துச் செய்யும் எத்தனையோ நோன்புகள் இருக்கத் தங்கள் மகனை, என் தமையனை, குறித்துச் செய்யும் நோன்பு சிறந்ததெனக் கூறுவது எவ்வாறு?'' என்றார்.

சிவபிரானும் களிகூர்ந்து முருகவிழ் திருமுகத்து மதலையை நோக்கி 'ஏதோ ஒரு கல்பத்தில் ஏதோ ஒரு காரணம் பற்றி விநாயகப் பெருமான் என் மகனாய்த் தோன்றினார். அஃதேயன்றி முழு முதற் கடவுள் விநாயகனே. விநாயகர் அருளின்றேல் முத்தொழில் நடைபெறாது. மூவரும் இல்லை. மூவரையும் தோற்றுவித்து முத்தொழில் புரிய மூள்வித்தவர் மூவா முதலாப் பரம் பொருளாகிய விநாயகரே. வித்தின்றி விளைந்த பரமானந்த மூர்த்தி அவர். அவரைக் குறித்த விநாயக விரதமே சிறந்தது. திரிபுரத்தை எரித்தபோது விநாயக மூர்த்தியை வணங்கிப் புறப்பட்டேன்; முனிவர்கள் பலரும் முன்னவனைப் போற்றி வழிபட்டுப் பேரின்பம் எய்தினர். நீயும் விநாயக விரதம் மேற்கொண்டு குறையின்றி முடித்து வேண்டிய வேண்டியாங்கு எய்துக' என இசைத்தார்.''

முருகப் பெருமானும் மெய்யுணர்ந்து முன்னவன் அருள் போற்றி விரதம் முற்றி வெற்றி கொண்டு விம்மிதம் எய்தினார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வரலாற்றைக் கேட்ட ஏந்திழையாளும் இமவான் தாள் பணிந்து உயர்வற உயர்நலம் அருளும் விநாயக விரதம் மேற் கொண்டு முற்றமுடிக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டினாள். மெய்யன்பனாகிய பர்வதராஜனும் பார்வதி விநாயக விரதம் அனுஷ்டிக்கத் தேவையான பரிகரங்கள் யாவும் பக்குவமாய்ச் சேமித்துக் கொடுத்தான். பார்வதியும் ஆவணி மாதம் சுக்ல பக்ஷம் சதுர்த்தி திதியில் விநாயக விரதத்தைத் தொடங்கினார். தினந்தோறும் விடிய நான்கு நாழிகைக்கே எழுந்து புனித கங்கையில் நீராடி மடியுடுத்துத் திருவெண்ணீ றணிந்து அதன்மேல் குங்கும திலகம் அணிந்து ருத்ராக்ஷமாலை தரித்து முறை பிறழாது முப்பது நாளும் மூவருக்கும் மேலான ஆனைமுகத்தானைப் பூசனை புரிந்து விரத நிறைவேற்றமும் செய்தார். விரதம் முடிந்த தினத்தில் ஏழைகள், எளியோர்கள், அந்தணர்கள் முதலியோருக்கு அறுசுவை உண்டி அளித்தார். பல்வகைத் தான தருமங்கள் செய்தார். இவ்வாறு விநாயக விரதம் மேற்கொண்ட புனிதச் செயலின் பயனாகவே தான் விரும்பிய வண்ணமே மலைவில்லாளனைத் தலைவனாகப் பெற்றார்.

9. கர்த்தமன்

மிகப் பழங்காலத்தில் கர்த்தமன் என்றொரு மன்னன் உலகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டுவந்தான். அவனை எதிர்ப்பார் யாருமிலர். தூற்றுவார் யாருமிலர். மக்கள் நலம் வேண்டி மாநிலம் புரந்த வள்ள்ல் கர்த்தமன். ஒருநாள் அப்பேரரசன் அவைக்கு ஆனைமுகக் கடவுளின் அணுக்கத் தொண்டராகிய பிருகு முனிவர் வந்தார். வந்த முனிவரை எதிர்கொண்டழைத்த கர்த்தம ராஜன் அவருக்கு முறைப்படி பாத்யம் அர்க்யம் ஆசமனம் முதலியன அளித்து அடிபணிந்து அவரைச் சிறந்ததோர் ஆசனத்தில் அமர்த்தினான். முனிவரும் அம்மன்னவனை ஆசீர்வதித்தார். அப்போது கர்த்தமன் முனிவரை நோக்கி, ''முக்காலமும் உணர்ந்த முனிபுங்கவ, 'ஓரிடத்திலும் நில்லோம் நில்லோம்' என்னும் செல்வம் என்னிடம் மாத்திரம் நிலைத்து நிற்கின்றதே; நான் பிறந்ததுமுதல் இன்று வரை என் செல்வம் வளர்ந்தவண்ணம் உள்ளதே அன்றித் தளர்ந்த தில்லை. ஏழை எளியவர்களுக்கு அள்ளிக்கொடுத்த வண்ணம் உள்ளேன். கருவூலம் நிறைந்தே உள்ளது. இதன் காரணம் யாது?'' என வினவினான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சற்று நேரம் கண்ணை மூடி அமைதியுடனிருந்த பிருகு முனிவர் கண்களைத் திறந்தார். அரசனை அன்புடன் நோக்கி, "அரசனே, நிலையிலாச் செல்வம் குறித்து விலையிலா வினா வொன்று தொடுத்தாய். நன்று! நன்று!! நிலைத்த செல்வம் படைத்த நின் முற்பிறப்பை நீ அறியாய். அதனை உனக்கு யான் தெரியச் சொல்வேன்; கேளாய். முற்பிறப்பில் நீ ஒரு வறுமை யுற்ற வைசியனாகத் தோன்றியிருந்தாய்; இலம்பாடு உன்னைக் கொடும்பாடு படுத்தியது. உற்றார் உறவினர் உன்னை மதிக்க வில்லை. திரவியம் சேர்க்கத் தெரியாதவன் என்றும் எத்தொழில் செய்யவும் தகுதியற்றவன் என்றும் ஏமாளி என்றும் சோம்பேறி என்றும் தூற்றினர். உன்னைச் சமூகத்தினின்றும் ஒதுக்கி வைத்தது போல உறவைத் துண்டித்துக் கொண்டனர். கருத்தை உறுத்தும் கண்ணியமற்ற பேச்சுகளைப் பேசினர். மானம் மிக்க நீ மறுகினாய். உன் பெருமையை மீட்டுக் கொள்ள முடியாமல் தத்தளித்தாய். முடிவில் நகரில் வாழ விரும்பாது ஒருவரிடத்தும் சொல்லாமல் ஒருவருக்கும் தெரியாமல் அருகில் இருந்த காட்டுக்குள் ஓடி விட்டாய். திக்குத் தெரியாத காட்டினிலே எங்கும் சுற்றி அலைந்து களைத்துச் சவுபரி முனிவர் ஆசிரமத்தை அடைந்தாய். மாணாக் கர்களிடையே மாணிக்கம்போலச் சவுபரி முனிவர் அமர்ந் திருந்தார். அம்முனிவரைக் கண்டதும் நீ அவர் பாதங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தாய். கான் வழிகளில் பழக்க மற்ற உன்னைக் கண்டு இரக்கம் கொண்ட சவுபரி முனிவர் உன் வரலாற்றைக் கேட்டறிந்தார். உன் வறுமையைப் போக்கத் திருவுளம் கொண்டார். அதனால் உனக்கு அபயம் அளித்து அன்றிரவு உன்னை அங்கேயே தங்கச் செய்தார்; மறுநாள் காலையில் நிர்மலமான தடாகத்தில் நீராடி வரச் செய்து விநாயக மந்திரத்தை உபதேசம் செய்தார். நீயும் பக்தியும் ஆவலும் மீதூர விநாயக மந்திரத்தை அனுதினமும் உருவேற்றி வந்தாய். பகவான் உன் பக்கம் இருந்தார். அப்போது விநாயக சதுர்த்தி வந்தது. முனிவர் உன்னோடு இருந்து உன்னைத் தூண்டி முப்பது நாட்கள் விநாயக சதுர்த்தி விரதம் அனுஷ்டிக்கச் செய்தார். விரதமும் இனிது முடிந்தது. அப்போது நகரத்திலிருந்த உன் சிறிய வீடு மாளிகையாயிற்று. அதில் பொன்னும் பொருளும் நிறைந்தன. மனைவி மக்களும் உயர்ந்த வகை உடைகளும் அணிகலன்களுடம் பெற்று மகிழ்ந்திருந்தனர். இந்நிகழ்ச்சிகள் உனக்குத் தெரியாது. ஆனால் சவுபரி முனிவர் அவற்றைத் தம் ஞானதிருஷ்டியால் உணர்ந்து உனக்குத் தெரிவித்தார். உன்னையும் மீண்டு நகரத்திற்குச் சென்று தரும சிந்தனையுடன் வாழும்படி ஆசி கூறி அனுப்பி வைத்தார். நீ திரும்பி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வந்தபோது உன் வீட்டையே உனக்கு அடையாளம் தெரிய வில்லை. ஒருவாறு அனுமானம் செய்து கொண்டு வீட்டை அடைந்தாய். உன்னுடைய மனைவியும் மக்களும் நீ திரும்பி வந்தது கண்டு மிகவும் மனம் மகிழ்ந்தார்கள். அவர்கள் மகிழ்ச்சி இரட்டிப்பாயிற்று. நீயும் அன்றுமுதல் தருமம் தவறாது ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி வாழ்ந்து வந்தாய். முன்னே உன்னை விலக்கிய உறவினரும் உற்றாரும் இப்போது மீண்டும் உன்னோடு வந்து சேர்ந்து கொண்டனர். நீயும் பகைமை பாராட்டாமல் பழமை பாராட்டி அவர்களுடன் நட்புக் கொண்டாய். அதனால் உன் புகழ் உயர்ந்தது. அப் பிறப்பில் உன் காலம் முடிந்தபின் விநாயக சதுர்த்தி விரதத்தின் மகிமையால் இப்பிறவியில் ஓர் அரசனாகத் தோன்றினாய். உலக முழுவதும் காக்கும் பேரரசனாய் வாழ்ந்தாய். அறநெறி ஓம்பி மறநெறி ஒழித்து நடுவுநிலைமை தவறாது ஆட்சிபுரிந்து வந்தமையாலும் விநாயக சதுர்த்தி விரதத்தின் பலத்தாலும் உன் செல்வமும் புகழும் நாள்தோறும் வளர்ந்து கொண்டே வருகிறது. ஆகையால் நீ விநாயக சதுர்த்தி விரதத்தைத் தொடர்ந்து ஆண்டுதோறும் ஆவணி மாதம் சுக்லபக்ஷ சதுர்த்தி முதல் முப்பது நாட்கள் கடைப்பிடித்து வருவாயாக" எனக் கூறி விடை பெற்றுச் சென்றார்.

பிருகு முனிவர் கூறிய மெய்யுரைகளைக் கேட்ட கர்த்தமன் விநாயக பூஜையைத் தொடர்ந்து செய்து வந்தான். ஆண்டுதோறும் விநாயக சதுர்த்தி விரதத்தைச் சிறப்பாகச் செய்தான். வயதேறித் தளர்ச்சியடைந்த போது தன் மகனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்து விநாயக சதுர்த்தி விரதத்தை விடாது கடைப்பிடிக்கு மாறு அறிவுரை கூறி அரசுப் பொறுப்பினின்று விடுபட்டான். இறுதியில் விநாயகருலகு புக்குப் பேரின்பமெய்தினான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

10. நளன்

கிருத யுகத்தில் நீர்வளமும் நிலவளமும் மிக்க நிடத நன்னாட்டை நளன் என்றோர் அரசன் ஆண்டு வந்தான். அவன் நன்றே நினைக்கும் மனமுடையான்; பிற உயிர்களிடத்து அருள் காட்டும் பண்பினான். வலிமை மிக்கான். குன்றாத செல்வமும் பிந்தாத கொடையும் நந்தாத படையும் உடையான். அவ்வரசனின் சபைக்கு ஒருநாள் தவச்செல்வரான கௌதமர் வந்தார். முனிவரின் வருகையைக் கேட்ட நளன் தன் அரியணை யினின்றும் இறங்கி முன்சென்று அரண்மனை வாயிலில் அவரை எதிர்கொண்டான். சிறந்த அரச மரியாதைகளோடு அவரை வரவேற்று உண்டி முதலியன அளித்து உபசரித்தான். அரசனின் பணிவையும் விருந்தோம்பலையும் கண்ட கௌதமர் மனம் கனிந்து வாழ்த்துரை கூறினார். அப்போது நளன் அம்முனிவரின் பாதங்களில் நமஸ்கரித்து, எத்தனையோ ஜன்மங்களில் நான் செய்த புண்ணியத்தாலேயே இப்போது தங்களைக் காணும் பேறு பெற்றேன். இவ்வாறே எத்துணை பிறவி எடுத்தாலும் பெரியோர்கள், அருந்தவ முனிவர்கள் ஆகியவர்களுடைய ஆசியும் செல்வச் சிறப்பும் கொடைத்தன்மையும் அருள் பாலிப்பும் குறையாதிருக்குமாறு ஓர் உபாயம் கூற வேண்டும்'' என வேண்டினான்.

திரிகாலக்ஞானியான கௌதம முனிவர் புன்னகை பூத்தார். ''இப்போது நீ பெற்றிருக்கும் செல்வமெல்லாம் முற்பிறப்பிற் செய்த நல்வினையினாலேயே ஆகும். உன் முற்பிறவியைப் பற்றி நீ அறியாய். அதனை உனக்கு விளங்கக் கூறுவேன். கேள்'' எனத் தொடங்கினார். நளன் அவரை மீண்டும் பணிந்து தன் முற்பிறவி வரலாற்றைக் கேட்க ஆவல் கொண்டான்.

கௌதமர், ''அரசனே, நீ முற்பிறவியிலும் அரசனாகவே இருந்தாய்; அப்போது கௌட தேசத்தை ஆண்டவன் நீ. உன் நாடு காட்டரணும் மலையரணும் நீரரணும் கொண்டிருந்தது. ஆயினும் உனக்குப் பகைவர்கள் சிலர் இருந்தனர். அவரால் உனக்கும் நாட்டு மக்களுக்கும் அடிக்கடி சிறு சிறு துன்பங்கள் உண்டாயின. எவ்வளவோ எச்சரிக்கைகள் செய்தும் அப் பகைவர்கள் தங்கள் வஞ்சகச் செயல்களை விடுவதாயில்லை. அதனால் அவரோடு போர் தொடுத்து அவர்களை அழிக்க

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நினைத்தாய்; பெரும் படையைத் திரட்டிக்கொண்டு ஒரு காட்டின் வழியே சென்று கொண்டிருந்தாய். அக்கானகத்தில் கௌசிகர் என்ற பெயருடைய முனிவரர் தவமாற்றிக் கொண்டிருந்தார். அங்கு அம்முனிவர் தவம் செய்து கொண்டிருத்தலை அறிந்த நீ அவருடைய தவத்திற்கும் தவச் சாலைக்கும் ஊறு ஏற்படாவண்ணம் உன் படைகளை ஒதுங்கிச் செல்லுமாறு கட்டளையிட்டாய். கட்டுப்பாடும் பண்பும் மிக்க உன்படை அவ்வாறே ஒதுங்கிச் சென்றது. நீ மட்டும் தனியே அம்முனிவருடைய தவச்சாலையை அடைந்து அவரை வணங்கி அவரருள் பெற்றாய். உன்னுடைய சிறந்த குணங்களையும் பணிவுடைமையையும் கண்ட கௌசிகர் உனக்கு விநாயகக் கடவுளைக் குறித்த விநாயக சதுர்த்தி விரதத்தையும் விநாயக மந்திரத்தையும் உபதேசம் செய்தார். அது முதல் விநாயக மந்திரத்தை அனுதினமும் ஓதி ஜபித்து வந்தாய். பிறகு பகைமேற்சென்று பகைவர்களை அடக்கினாய்; அவர்கள் மீண்டும் அத்தகைய சிறுசிறு துன்பங்கள் இடையூறுகள் செய்வதற்கு அஞ்சுமாறு செய்தாய்.

அதன் பின்னர் நின் நெடிய படைகளோடு கௌட நன்னாடடைந்து வெகுகாலம் ஆட்சி புரிந்தாய். ஒவ்வொரு ஆண்டும் ஆவணித் திங்கள் சுக்ல பக்ஷ சதுர்த்தியில் விநாயக சதுர்த்தி விரதத்தைத் தொடங்கி முப்பது நாளும் முறைப்படி பசி நோக்காது கண்துஞ்சாது மெய்வருத்தி விரத பரிபாலனம் செய்துவந்தாய். அதன் பயனே இப்பிறவியிலும் நீ பேரரசனாகப் பிறந்தாய். ஆகையால் அரசே, விநாயக சதுர்த்தி விரதத்தைப் போற்றி மேற்கொள்வாயாக. அவ்விநாயக சதுர்த்தி விரதத்தைக் காட்டிலும் உயர்ந்ததொரு விரதம் மேதினியில் இல்லை" எனக் கூறி முடித்தார்.

அது கேட்ட நளன், அதிசயமடைந்து கௌதம முனிவருக்கு மீண்டும் கௌரவம் பல செய்து வழியனுப்பி வைத்தான். அன்று முதல் விநாயக மந்திரத்தை ஜபித்தலும் ஆண்டுதோறும் விநாயக சதுர்த்தி விரதத்தை விமரிசையாகச் செய்தலும் இடைவிடாமல் புரிந்து வந்தான். இம்மையிற் பெற வேண்டிய செல்வம் அனைத்தும் பெற்று முக்தியும் அடைந்தான். ஆகவே விநாயக சதுர்த்தி விரதத்தை விஞ்சியதோர் விரதமில்லை; விநாயகருக்கு மேலான தெய்வமும் இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

11. சந்திராங்கதன்

நானில வளமும் நனிமிகுந்து விளங்கும் நாடு மாளவ நாடு. அந்நாட்டை அறநெறி போற்றிச் சிறப்புற ஆண்டுவந்த அரசன் சந்திராங்கதன்; மனம், மொழி, மெய்களால் தூயவன்; வீரத்தில் சிறந்தவன்; ஏகபத்னி விரதம் கொண்டவன். அவன் மனைவியின் பெயர் இந்துமதி; கணவனிடம் பேரன்பு கொண்டவள்; கற்புக் கரசி. நாட்டு மக்களின் நலத்தில் இருவரும் கண்ணும் கருத்துமாய் இருந்துவந்தனர். அவ்வாறு வாழும் நாளில் ஒரு நாள் நகரப் பெரியோர்கள் பலர் அரசவையை அடைந்து அண்டையில் உள்ள காட்டில் வாழும் கொடிய விலங்குகள் பல அடிக்கடி நாட்டுக்குள் வந்து துன்பம் விளைப்பதாயும் காட்டு விலங்குத் தொகை அதிகமாகியிருப்பதே அதற்குக் காரணமென்றும் அவை காட்டெல்லையைக் கடக்க அஞ்சும்படி வேட்டையாடிப் பல விலங்குகளை அழிக்க வேண்டும் என்றும் விண்ணப்பம் செய்தனர். அதனைக் கேட்ட சந்திராங்கதன் வேட்டைமேற் செல்ல விருப்பம் கொண்டான்; தன்னுடைய மந்திரிகளையும் படைத்தலைவர்களையும் அழைத்து வேட்டைக்குச் செல்ல வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்யும்படிக் கட்டளை யிட்டான். மறுநாள் காலையில் வீரமும் ஆற்றலும் விளங்கு தோற்றமும் கொண்ட படைவீரர் பலருடன் வேட்டைக்குப் புறப்பட்டுச் சென்றான். காட்டிற்குள் புகுந்து கடும்புலி, யானை, சிங்கம், சிறுத்தை போன்ற பல்வகைக் கொடிய விலங்குகளையும் கொன்று குவித்தான். மன்னன் பிடித்த வில்லுக்கு அஞ்சிய வேங்கை முதலான விலங்குகள் கடிதே விலகிக் காட்டின் உட்புறத்தே அடர்ந்த பகுதிகளில் அடங்கி நின்றன; நாட்டின் எல்லைக்கு வர நடுங்கின. வேட்டை ஒருவாறு முடிந்த வேளையில் நாட்டை நோக்கித் திரும்பினான். ஆனால் அச்சமயத்தில் அரக்கர்கள் சிலர் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர். சந்திராங்கதனும் அவன் படைகளும் வலிமை வாய்ந்த அவ்வரக்கர்களோடு போரிட வேண்டியிருந்தது. போர் சில நாட்கள் நீடித்தது. இறுதியில் சந்திராங்கதன் அவ் வரக்கர்களைக் கொன்றான். அதனைக் கண்ட ஓர் அரக்கி சந்தி ராங்கதன் மீது பாய்ந்தாள். ஒரு பெண்ணோடு போரிடுதல் தனக்குத் தகுதியன்று என்று எண்ணிய சந்திராங்கதன் விலகிச் சென்றான். ஆனால் அவள் விடுவதாயில்லை. தொடர்ந்து அவனோடு போரிட முனைந்தாள். அதனால் அவ்வரசன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அருகில் இருந்த ஓர் ஆழமான மடுவில் குதித்தான். அவ்வரக்கி மற்ற வீரர்களுடன் போரிடத் தொடங்கினாள்.

சந்திராங்கதன் குதித்த மடுவில் நாக கன்னியர் சிலர் நீராடிக் கொண்டிருந்தனர். மடுவில் அவன் குதித்த அதிர்ச்சியில் சற்று நேரம் திகைத்தனர். அவ்வரசன் நீந்திக் கரையேற முயன்ற போது அவனைக் கண்ட அவர்களில் சிலர் 'உலகத்து அழகெல்லாம் இவனிடமே உறைந்து விட்டதோ?' என்றனர்; சிலர் 'வையகத்து வீரமெல்லாம் இவன் ஒருவனிடமே சேர்ந்ததோ?' என்றனர்; சிலர் 'தேவர், தானவர், நரர் முதலிய எல்லாருடைய வலிமையும் இவன் பாலதேயோ?' என்றனர். அவனைச் சூழ்ந்துகொண்டு அவன் மெய்யழகில் ஈடுபட்டுப் பரவசமாயினர். பிறகு அவ்வரசனைத் தம்முடன் நாகருலகுக்கு விருந்தினனாய் வரவேண்டும் என வேண்டி வலிந்து அழைத்துச் சென்றனர்.

சந்திராங்கதனின் படைவீரர்கள் அவனை மடு முழுவதும் தேடினர்; இரண்டு மூன்று நாட்கள் தேடினர். அவன் அகப்பட வில்லை. அதனால் மடுவில் குதித்த மன்னவன் மாண்டான் எனக் கருதி நகரத்திற்குத் திரும்பிச் சென்றனர். அரசன் இறந்தான் எனக் கருதிய அனைவரும் மிக வருந்தினர். அவன் மனைவி இந்துமதி மனம் நொந்தாள். கைம்மை விரதம் பூண்டு காலத்தைக் கழித்து வந்தாள்.

நாகருலகுக்கு விருந்தினனாய்ச் சென்ற சந்திராங்கதன் அவ்வுலகின் செல்வ வளம் கண்டு வியந்தான். அவனை அழைத்துச் சென்ற நாக கன்னியர்கள் அவனிடம் மோகம் கொண்டு தங்களைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தினர். ஆனால் சந்திராங்கதன் தான் திருமணம் ஆனவன் என்றும் ஏகபத்னி விரதம் பூண்டவன் என்றும் எடுத்துக் கூறித் தன் நிலையைத் தெளிய அறிவுறுத்தினான். ஆனால் அவர்களோ அவன் மனத்தை மாற்ற முயன்றனர். அரசனோ உறுதி படைத்த நெஞ்சினனாய்ச் சலனமற்று இருந்தான். காலப்போக்கில் அவன் மனம் மாறும் என எண்ணிய நாககன்னியர் அவனை மீண்டு செல்ல விடாமல் சிறை வைத்ததுபோல் காத்து வந்தனர். இவ்வாறு பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தன.

ஒரு நாள் நாரத முனிவர் மாளவ நாடு சேர்ந்து அரண்மனையை அடைந்தார். கைம்மை நோன்பு கைக்கொண்டு காசினி புரந்து வரும் இந்துமதியைக் கண்டார். இந்துமதியும் நாரத முனிவரை நன்கு வரவேற்று பலவகை உபசாரங்களும் செய்து பணிந்தார். அவ்வரசியின் பணிவைக் கண்ட நாரதர் மனம் மகிழ்ந்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவளை நோக்கி, "அரசர்குலப் பெண்மணியே, நின் கணவன் இறந்துவிடவில்லை. அவனை நாக கன்னியர் அழைத்துச் சென்று காவலில் வைத்துள்ளனர்; அவன் விரைவில் வந்து சேருவான்" எனக் கூறினார். அது கேட்ட இந்துமதி பரபரப் படைந்து, "எப்போது வருவார்? எவ்வாறு வருவார்? என்று கேட்டாள். நாரதர் நிதானமாக, "சந்திராங்கதன் நாகலோகத்தை நீங்கி இங்கு வரவேண்டுமாயின் விநாயகப் பெருமானின் பேரருள் வேண்டும். விநாயகப் பெருமானைக் குறித்துச் சதுர்த்தி விரதமிருந்தால் அவரருள் கிட்டும்" என்றார். இந்துமதி அவரடிகளில் மீண்டும் வீழ்ந்து வணங்கி, "சதுர்த்தி விரதம் இருக்க வேண்டிய முறைகளை விளக்கமாக உபதேசிக்க வேண்டும்" என்று வேண்டினாள். நாரத மஹாமுனிவர் இந்துமதிக்கு சதுர்த்தி விரதம் இருக்கவேண்டிய முறைகள், பூஜா விதிகள் ஆகியவற்றைத் தெளிவாக எடுத்துச் சொல்லி ஏகாக்ஷர மந்திரத் தையும் உபதேசம் செய்தார். பிறகு அரசியிடம் விடைபெற்றுக் கொண்டு தம் வழிச்சென்றார்.

விநாயக சதுர்த்தி தினம் வருவதற்குப் பல நாட்கள் முன்ன தாகவே இந்துமதி பூஜைக்கு வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்யத் தொடங்கினாள். தினமும் ஏகாக்ஷர மந்திரத்தை ஜபித்து உருவேற்றி வந்தாள். விநாயக சதுர்த்தியும் வந்தது; விநாயக பூஜையை விஸ்தாரமாகச் செய்தாள்; விரதத்தைக் கடுமையாகக் கடைப்பிடித்தாள்; ஏகாக்ஷர மந்திரத்தை இடை விடாது ஜபித்தாள். இந்துமதியின் பக்தியையும் மன உறுதி யையும் தவச் சிறப்பையும் போற்றிய விநாயக மூர்த்தி அவளுக்குத் தரிசனம் கொடுத்து 'கருதிய காரியம் விரும்பிய வண்ணம் ஈடேறும்' என அருளி மறைந்தார்.

பன்னிரண்டு ஆண்டுக் காலம் சந்திராங்கதனைப் பல படியாய் உபசரித்தும் வேண்டியும் பழகியும் அவன் மனம் மாறவில்லை என்பதை நாககன்னியர் உணர்ந்தனர். என்றுமுள இறைவனாகிய விநாயகப் பெருமானை இந்துமதி பூசித்த பூசனையின் பலனே இது. அவன் மனத்தை மாற்றல் இயலாது என்பதைக் கண்ட அப்பாவையர் அவனது சிறந்த குணங்களை, குறிப்பாக ஏகபத்னி விரதத்தை, போற்றிப் பெருஞ் செல்வத்தைக் காணிக்கையாயளித்து அம்மடுக் கரைக்கே அவனைக் கொண்டு வந்து விட்டனர். அவனுக்கு ஒரு குதிரையையும் பரிசாகக் கொடுத்து அனுப்பினர். மனம் மாறிய மங்கையர்களின் உதவியால் மீண்டும் மண்ணுலகடைந்த சந்திராங்கதன் விரைந்து தன் அரண்மனையை அடைந்தான். அரசனைக் கண்ட அனைவரும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெருமகிழ்ச்சி எய்தினர். அரசனும் தான் மடுவில் குதித்ததி லிருந்து திரும்பி வரும்வரை நிகழ்ந்த நிகழ்ச்சிகளை விவரமாகக் கூறினாள்.

இப்போது புதியதொரு சங்கடம் தோன்றியது. ஒரு கணவனும் மனைவியும் பன்னிரண்டு ஆண்டுகள் ஒருவரை ஒருவர் பாராமலும் ஒருவரைப் பற்றி ஒருவருக்கு விவரம் தெரியாமலும் இருப்பின் அவர்களைத் தம்பதியர்களாக சாஸ்திரம் ஒப்புக் கொள்ளாது. சந்திராங்கதன் நாட்டிலுள்ள சாஸ்திர வல்லுநர் களை எல்லாம் அழைத்து அந்நிலையில் செய்ய வேண்டியது யாது என ஆலோசனை செய்தான். சாஸ்திர விதிகளையெல்லாம் நன்கு ஆய்ந்த அறிவாளர்கள் சில பிராயச்சித்த சடங்குகளைச் செய்யவேண்டுமென்று கூறினார்கள். சந்திராங்கதன் விதிப்படி பிராயச்சித்தங்கள் செய்து முடித்தான். பிறகு முன்போலவே இந்துமதியோடு இணைந்து நாட்டை நன்முறையில் ஆண்டு வந்தான். ஆண்டுதோறும் சந்திராங்கதனும் இந்துமதியும் விநாயக சதுர்த்தியை விரும்பி விசேஷமாகக் கொண்டாடினர். நாள்தோறும் ஏகாக்ஷர மந்திரத்தை பக்தி சிரத்தையுடன் ஜபித்து வந்தனர். இவ்வாறு நீண்டநாள் ஆட்சிக் கட்டிலில் அமர்ந் திருந்து இறுதியில் இணையில்லா முக்தி எய்தினர்.

12. முருகனுக்கு அருளிய முன்னவன்

தாருகன் தவம்

பல கல்பங்களுக்கு முன்னால் தாருகாசுரன் என்றோர் அசுரன் இருந்தான். அவன் சிவபிரானைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தான். பல ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. அவன் செய்த தவத்தால் ஏற்பட்ட வெப்பம் தேவலோகத்தைத் தாக்கியது. சிவபிரான் மகிழ்ந்து மனங்கனிந்து தாருகன் முன் தோன்றி அவன் விரும்பிய வரங்களை எல்லாம் கொடுத்தார். மேலும் மூன்று புவனங் களையும் நூற்றெட்டு யுகம் ஆட்சி புரியும்படி அனுக்ரஹம் செய்து மறைந்தார். அவ்வாறே தாருகன் முப்புவனங்களையும் வென்றான். தேவர் முதலியோரைச் சிறைபிடித்துக் கொடுமைப் படுத்தினான். அறவோரும் முனிவோரும் அவனால் அவதிப் பட்டனர். இந்திரனும் திருமாலும் பிரமனும் அவன் கைக்கு அகப்படாமல் எவ்வாறோ தப்பித்து மேருமலையை அடைந்து அங்கே மறைந்து வாழ்ந்தனர்; சிவபிரானைக் குறித்துத் தவம் புரிந்தனர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காமதகனம்

இந்திராதி தேவர்கள் இவ்வாறு ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்தனர். அப்போது வானத்தில், "மங்கை பாகன் மகிழ்ந் தளிக்கும் சேய்தன்னால் சிறுமை தீரும்" என்றொரு குரல் கேட்டது. அவ்வொலியைக் கேட்ட அமரர் யாவரும் அகம் மகிழ்ந்தனர். உடனேயே நான்முகனும் திருமாலும் இந்திரனும் திருக்கயிலை சென்று சிவபிரானை வணங்க விழைந்தனர். ஆனால் அவர்கள் திருக்கயிலையை அடைந்தபோது அங்கே சிவபிரான் இல்லை. அவர்கள் ஏமாற்றமுற்றனர். மிக்க துயரத் தோடு அவர்கள் திரும்ப எண்ணியபோது எதிரே உமையம்மை காட்சியளித்தார். ஒருவாறு ஆறுதல் பெற்ற அவர்கள் அம்பிகையை அடிபணிந்து தமக்கேற்பட்ட தாழ்வையெல்லாம் சொல்லிப் புலம்பினர். தாங்கள் மேரு மலைச் சாரலில் தவம்புரிந்துகொண் டிருந்தபோது கேட்ட அசரீரி வாக்கையும் கூறினர். அவற்றைக் கேட்ட அம்பிகை அவர்களை அனுதாபத்துடன் பார்த்து, "ஐயன் இப்போது கோளகிரியில் ஸனகாதி முனிவர்கள் நால்வருக்கும் யோகத் தத்துவங்களை, தானே யோகத்தில் அமர்ந்து மௌனியாகி போதித்துக் கொண்டிருக்கிறார். இப்போது அவர் யோகத்தில் ஆழ்ந்திருக்கும் நிலையை நோக்கின் இன்னும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அவர் யோக நிலையினின்றும் மீண்டு கண்விழிக்க மாட்டார் என்று தோன்று கிறது. அசரீரி வாக்கு நிறைவேற அனந்தகோடி ஆண்டு காத் திருக்க வேண்டும். அவர் யோக நிலையை நீத்து போக நிலைக்கு இறங்கி வந்தாலன்றி அவர் மகிழ்ந்தளிக்கும் சேய் தோன்றாது. அதற்கான தவமுயற்சியை நீங்கள் மேற்கொள்ளுங்கள்" எனத் திருவாய் மலர்ந்தருளினார். அம்பிகையை மீண்டும் வணங்கி விடைபெற்றுக்கொண்ட நான்முகன் முதலான மூவரும் கோள கிரியை அடைந்து கல்லால மரத்தடியில் ஸநகர், ஸநந்தனர், ஸநத்குமாரர், ஸநத்ஸுஜாதர் என்ற நான்கு தவசிரேஷ்டர் களுக்கும் மேலான குருவாய் யோக நிலையில் வாயால் விளக்கிச் சொல்லாமல் குறிப்பாய் காட்டி மனத்துள்ளே ஸ்புரிக்கும் படிச் செய்து மெய்ப்பொருளை உணர்விக்கும் தற்பரனாகிய ஞானமூர்த்தியைக் கண்ணாற் கண்டு களித்தனர்; அண்ட சராசரங் களையும் மறந்து ஆன்ம யோகத்தில் அடங்கிக் கிடக்கும் நித்தனை அந்நிலையிலிருந்து எவ்வாறு எழுப்புவது என ஆலோசனை புரிந்தனர்.

இறுதியில் மாரனின் மலரம்பும் கரும்புவில்லுமே யோகத்தைக் குலைத்துப் போகத்தை ஊட்டுமென உணர்ந்து கந்தர்ப்ப

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேளை நெஞ்சிற் பதித்து நினைத்தனர். அவ்வளவில் வண்டுளரும் நாண்வலித்த கரும்பு வில்லோடும் பூவாளி ஏந்திய கரத்தோடும் அவர்கள் முன் நின்றான் அதிசய அழகு வாய்ந்த மதனன். அம்மூவரும் அவனை நோக்கி, "உலகம் உய்ய தாருகன் அழிய தேவர்கள் மீண்டும் அமராவதி புக சிவபிரானை யோக நிலையி லிருந்து விழித்தெழச் செய்ய வேண்டும். விழித்தெழுவது மட்டும் போதாது. போக நிலைக்கு மனம்கொள்ள வேண்டும். அப்போதுதான் அரக்கரை அழிக்கும் ஆற்றல் வாய்ந்த சேய் தோன்ற வழி பிறக்கும். அதனால் நீ நின் ஐவகை அம்பையும் அஞ்சாது அந்திவண்ணன்மீது செலுத்த வேண்டும். இச்செயல் தேவர்களுக்கெல்லாம் நன்மை செய்யும் செயலாகும்; உலகம் உய்ய உதவும் உத்தமமான உபகாரமாகும்" எனக்கூறி நின்றனர். இதனைக் கேட்ட மன்மதன், "நானோ இதற்கு நாயகமானேன். சிரித்துப் புரம் சுட்ட செம்மல் என்னைக் குறித்து விழித்தால் நான் நீறாக மாட்டேனோ? ஆபத்து நிறைந்த இதனைச் செய்ய நான் ஆளாக மாட்டேன்" எனக் கூறினான். அம்மூவரும் அவனுக்கு மேலும் தைரியமளிக்கும் சொற்களைக் கூறி உலக நன்மையை உத்தேசித்து அதனைச் செய்ய வேண்டும் என வற்புறுத்தினர். மன்மதனும் ஒருவாறு ஒப்புக்கொண்டு ஞான மூர்த்தி யோக நிலையில் அமர்ந்திருக்கும் வளாகத்தை அடைந்தான்; விருத்தர்களாகிய நான்கு முனிவர்களும் எதிரில் கண்களை மூடித் தியானத்தில் அமர்ந்திருக்க இளைஞராகிய எம்பெருமான் யோகநிலையில் சின்முத்திரை காட்டி அந்நான்கு முனிவர்களும் அதன் பொருளை அகக்கண்ணால் கண்டு உணரச் செய்யும் அற்புதக் காட்சியைக் கண்டு தன்னை மறந்து நின்றான்; பின்னர் தன்னிலை தேறி பஞ்ச பாணங்களையும் மஞ்சரியாய்ப் பிணைத்து வெஞ்சமனும் வெருவும் வேத முதல்வன்மீது நெஞ்சுறச் செலுத்தி நிமிர்ந்தான். பூந்துணர் நெஞ்சிற்பட்டுருவலும் புராரி சினந்து நுதற்கண் விழித்தார்; காமன் நெருப்பிற் கரைந்து நீறானான். அச்சமயத்தில் உமையம்மை அங்கே தோன்றி உருத்திரன் சினம் தணிய வேண்டினாள்; நான்முகனும் இந்திரனும் திருமாலும் அங்கே வந்து தங்கள் துன்பங்களையெல்லாம் தொகுத்துக் கூறினர். அதனால் சினம் தணிந்த சிவபிரானும் அவர்களுக்கு அபயம் அளித்துப் பின் மலைமகளோடு கயிலை அடைந்தார். தங்கள் கருத்து முற்றுப் பெற்றதென்றும் விரைவில் வீரமகன் தோன்றுவான் என்றும் தாருகன் தளர்ந்து உயிர்விடுதல் திண்ண மென்றும் அமரர்களுக்கு ஆகூழ் வந்துற்றதென்றும் மன மகிழ்ந்து மூவரும் மீண்டு மேரு மலைச்சாரலுக்கு வந்தனர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. தாருகனைக் கொல்லும் தனிவலி படைத்த சிறுகுழவி தோன்றவில்லை. எல்லாரும் எதிர்பார்த்து எதிர்பார்த்துப் பொறுமை இழந்து நின்றார்கள்.

முருகன் தோற்றம்

இந்திரன் முதலான மூவரும் பிறகு ஆலோசனை செய்து தம் குறைகளைச் சிவபிரானுக்குக் குறிப்பாக உணர்த்த எண்ணினர். அச்செயலை நிறைவேற்றத் தக்கவன் அக்னி தேவனே எனத் தேர்ந்து அவனைத் திருக்கயிலைக்கு அனுப்பினர். அக்னி தேவனும் ஒரு துறவி வேடம் பூண்டு திருக்கயிலையைச் சார்ந்து அம்மையப்பன் வீற்றிருக்கும் இடம் சேர்ந்தான். அருளும் ஞானமுமாய் அமர்ந்திருந்த உமாமஹேஸ்வரரிடம் துறவுப் பண்பினின்றும் வழாது மும்முறை இரந்து நின்றான். வந்திருப்பவன் அக்னி தேவன் என்பதையும் அவன் வந்திருக்கும் காரணத்தையும் குறிப்பால் உணர்ந்த குன்றவில்லியார் தம்மிட மிருந்து தேஜஸ் மிகுந்த வீரியத்தைத் தம் பங்கில் அமர்ந்திருக்கும் பார்வதி தேவியாரிடம் அளித்தார். அவரும் அதனை முறை யாக ஏற்று ஆசி கூறி அதனை அக்னிதேவனிடம் கொடுத்து அனுப்பினார். அக்னிதேவன் அவ்வீரியத்தைத் தாங்கி எடுத் துக்கொண்டு வந்தான். சற்று நேரத்தில் அது அவனால் தூக்க முடியாத அளவுக்குக் கனமும் வெப்பமும் கொண்டு பூரித்தது. அப்போது அவன் கங்கையில் தருப்பைப் புதர்கள் சூழ்ந்த மிகக் குளிர்ந்த சரவணப் பொய்கையில் அதனை விடுத்தான். அச்சக்தி ஆறு குழந்தைகளாகப் பரிணமித்து விளையாடத் தொடங்கின. நான்முகன் முதலான தேவர்கள் அதனை அறிந்து தம் கலி தீர்க்க வந்த இளங்குழவியைக் காண ஓடோடி வந்தனர். கார்த்திகைப் பெண்கள் அறுவரையும் அழைத்து ஆறு குழந்தைகளையும் பராமரிக்குமாறு ஆணையிட்டனர்; திருக்கயிலைக்கும் சென்று அக்னிதேவன் சரவணப் பொய்கையில் விடுத்த சக்தி ஆறு குழந்தைகளாய்த் தோன்றியிருப்பதைக் கூறினர். உடனே சிவபெருமானும் பார்வதியும் அக்குழந்தைகளைக் காண விரைந்து வந்தனர். அக்குழந்தைகளைக் கண்ட பார்வதி ஆறு குழந்தைகளையும் ஒரு சேர அணைத்துத் தூக்கினார்; அவ்வாறு குழந்தைகளின் உடல்களும் ஒன்றாய் இணைந்து இரண்டு பாதங்களும் ஆறு முகங்களும் பன்னிரண்டு கரங் களுமாய் ஒரே குழந்தை ஆயிற்று; ஆறாத வெம்மை ஆறிச் செம்மை படர்ந்தது. பரமேஸ்வரர் உமையுடனும் ஸ்கந்த னுடனும் ஸோமாஸ்கந்த பரமேஸ்வரராய் மீண்டு திருக்கயிலையை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அடைந்தார். கந்தப் பெருமானும் தினமொரு விளையாடல் புரிந்து யாவரையும் மகிழ்வித்து வளர்ந்து வந்தார்.

ஒருநாள் நாரணனும் நான்முகனும் இந்திரனும் திருக்கயிலை வந்து பன்னிருகைச் செம்மேனி எம்மானைக் கண்டு தாருகன் ஆதிய அசுரர்கள் செய்யும் கொடுமைகளை எல்லாம் கூறித் தம் துன்பம் போக்க வேண்டுமென வேண்டினர். முருகப் பெருமானும் அவர்களுக்கு ஆறுதல் கூறி விரைவில் அவ்வசுரர்களை அழிப்பதாக அருளினார். அவர்கள் சென்றதற்பின் முருகர் தம் தமையனா ராகிய விநாயகப் பெருமானைக் குறித்து சதுர்த்தி விரதமிருந்து விநாயகப் பெருமானை சடாக்ஷர மந்திரத்தால் போற்றி ஜபித்தார். பலநாட்கள் மந்திர உரு ஏற்றியபின் களிற்றுமுகக் கணபதி அவர்முன் தோன்றி, "நீ நினைந்த காரியம் இடையூறின்றி நிறைவேறுக; என் வாகனமாகிய மயிலையும் உனக்கு அளிக் கிறேன்; அசுரர்களை அழித்து வெற்றிமாலை சூடி வருக" என ஆசீர்வதித்துப் பல மேலான வரங்களையும் அருளினார். முருகப் பெருமான் தமக்கு விநாயகர் காட்சியளித்த இடத்தில் ஓர் அழகிய கோயிலை நிர்மாணம் செய்து அதில் விநாயகப் பெருமானைப் பிரதிஷ்டை செய்து லக்ஷம் அறுகுகளும் பல் வகை மலர்களும் கொண்டு அர்ச்சனையும் ஆராதனைகளும் புரிந்து அவரருள் பெற்றுத் தம் பெற்றோரை வந்தடைந்தார். (முருகப் பெருமான் கோயில் கட்டிய இடம் மயூரேசம் என வழங்கப்பட்டது) பார்வதி பரமேஸ்வரரைப் பணிந்து தாரு கனுடன் போருக்குச் செல்ல அனுமதி வேண்டினார். சிவ பிரானும் முருகப்பெருமானை ஆசீர்வாதம் செய்து வேற்படை ஒன்று அருளினார். பிறகு முருகப்பெருமான் திருநந்தி தேவரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு பூத கணப்படை சூழ தேவப் படை சூழ தாருகனுடன் போர்புரியப் புறப்பட்டார். கடும் போர் நிகழ்ந்தது. கணபதியின் அருள்பெற்று மயில்மீது வந்த கந்தன் கையில் ஞானசக்தியாய் ஒளிர்ந்த வேலை எடுத்துத் தாருகாசுரன் மீது வீசினார். அது அவ்வசுரன் உயிரைக் குடித்துக் கடலில் மூழ்கி முருகன் கைக்கு மீண்டது. வானோரும் ஏனோரும் மகிழ்ச்சிக் கடலில் திளைத்து முருகனிரு பாத மலர் பணிந்து போற்றினர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

13. ரதிபதி

காமன் மீண்டும் உயிர்பெறுதல்

காமன் கனலிற் கரைந்தது கண்ட ரதிதேவி வருத்தத்தில் உருகினாள். முற்றிய யோக நிலையில் இருந்த முக்கண்ணன், நெற்றிக் கண்ணைக் காட்டுவான் என்று ஒருவரும் எதிர் பார்க்கவில்லை. ரதி சிவபிரான் பாதங்களில் வீழ்ந்து கதறினாள். தேவர்களின் துயர் தீர்க்க விழைந்து மலரம்பு ஏந்திய மன்மதன் சிவபிரானை தியானித்தே செயல்பட்டான். தேவர்கள் துயர் தீர்க்க வந்து தன் உடலும் உயிரும் இழந்தான். அம்மையை அப்பனோடு இணைக்கக் கருதிக் கரும்புவில்லை வளைத்தான்; என்னைப் பிரிந்தான்; என் மதனை உயிர்ப்பித்துக் கொடுக்க வேண்டும்'' எனப் பதைத்துக் கூறினாள்.

ரதியின் வருத்தம் மதிசூடியின் மனத்தை இளக்கியது; மன்மதனின் தியாகம் மகேசனின் மனத்தைக் கவர்ந்தது; மன் மதனும் ரதியும் செய்யும் சிறந்த செயலே சிருஷ்டிக்கு மிக உதவியாய் அமையும்; ஸம்ஹாரத்திற்கும் அதுவே உதவும். இதனை எண்ணிய இறைவன் ரதியை நோக்கி, ''மன்மதனை உயிர்ப் பிக்கிறேன்; ஆனால் அவன் உன் கண்ணுக்கு மாத்திரமே புலனாவான். மற்றையோர் கண்களுக்குப் புலனாகான்'' எனக் கூறி நீறாய் நிறைந்திருந்த குவியலை நோக்கினார். சாம்பல் குவியலினின்றும் சித்தசன் எழுந்து வந்தான்; பரமனைப் பணிந்தான்; ரதி மகிழ்ந்தாள்.

பரமனைப் பணிந்த மன்மதன், ''என் கரும்பு வில்லின் ஆற்றலும் மலரம்பின் மஹிமையும் முன்போலவே வலிமை படைத்து விளங்க வேண்டும். ஆற்றல் மிக்கோரும் என் வில்லாற் றலில் குழைய வேண்டும்'' என வேண்டினான். மஹாதேவர் மன்மதனை நோக்கி, ''ஐங்கணைக் கிழவ, ஐங்கர மழவிளங் களிற்று முகக் கணபதியை அடைக்கலமாக அடைக. அவரையே தியானிக்க. அவரால்தான் நீ விரும்பும் ஆற்றலை அளிக்க இயலும்'' எனக்கூறி அம்மாரனுக்கு ஓரெழுத்து மறையை உபதேசித்தார். மீனக் கொடியோனும் ரதி தேவியும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர்.

மன்மதன் ரதி தேவியுடன் புறப்பட்டு முருகப் பெருமான் விநாயகரைப் பூசித்த மயூரேசத்தை அடைந்தான். அங்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சதுர்த்தி விரதம் இருந்து விநாயகரை ஏகாக்ஷர மந்திரத்தால் ஜபித்து பல்லாண்டுக் காலம் தவம் புரிந்தான். தவம் முற்றிய போது விநாயகப் பெருமான் மன்மதனுக்குக் காட்சி கொடுத்து வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறினார். மன்மதனும் தான் அரூபியான நிகழ்ச்சிகளைக் கூறித் தன் பஞ்ச பாணங்களும் வேழ வில்லும் மற்றெந்த ஆயுதங்களைக் காட்டிலும் வலிமை பெற்றிருக்க வேண்டுமென்றும் தன்னுடைய அருவம் மிக்க அழகுடைய உருவமாக வேண்டுமென்றும் வேண்டினான். விநாயகப் பெருமான் மன்மதனை நோக்கி, "உன்னுடைய மென்மலரம்புகள் வன்மையான அஸ்திரங்களைக் காட்டிலும் வலிமையுடையதாகுக. இனிய கரும்புவில் பொருப்பு வில்லைக் காட்டிலும் சிறப்புடையதாகுக. இனி, பூவுலகில் திருமால் கிருஷ்ணனாக அவதாரம் செய்வார். அப்போது அவருக்கு மகனாகி அழகிய திருவுருவம் பெறுவாய்" என்று அருளிச் செய்தார். மன்மதனும் ரதியும் முன்போலவே தம் கடமையைச் செய்து வந்தனர்.

மகரமீன் பெற்ற மங்கை

இவ்வாறு இருக்கும் நாளில் திருமால் கிருஷ்ணனாகவும் லக்ஷ்மி தேவி ருக்மணியாகவும் அவதாரம் செய்தனர். முன்னர் விநாயகர் அருளியவாறே மன்மதன் அவர்களுக்குத் திருமகனாக அவதரித்தான். அவனுடைய அற்புத அழகும் யாவரையும் கவரும் தேஜஸும் கண்ட பெற்றோர்கள் மிகவும் மகிழ்ந்தனர். அக்குழந்தைக்கு பிரத்யும்நன் என்று பெயரிட்டுக் கண்ணும் கருத்துமாய் வளர்த்து வந்தனர். பிரத்யும்நன் கலைகளிலும் கல்வியிலும் ஆயுதப் பயிற்சிகளிலும் நல்ல தேர்ச்சி பெற்றான். வலிமையும் அழகும் அறிவும் ஒரு சேர நின்ற இளைஞன் ஆயினான்.

மன்மதனைப் பிரிந்து தனியே வாழ்கிறாள் ரதிதேவி என்பதை அறிந்த சம்பரன் என்றோர் அசுரர் தலைவன் தேவருலகை அடைந்தான். சமயம் பார்த்து ரதி தேவியைக் கவர்ந்துகொண்டு வான மார்க்கமாக விரைந்து தன் இருப்பிடம் நோக்கிச் சென்றான். ஆகாயத்திலேயே ரதிதேவி திமிறி அவனிடமிருந்து விடுபட முயன்றாள். அச்சிறு மோதலில் அசுரன் கை நழுவ ரதி கடலில் வீழ்ந்தாள். வீழ்ந்த அவளை ஒரு மகர மீன் விழுங்கியது. அசுரனும் குதித்து அவளைத் தேடினான். தன்னால் முடிந்தவரை தேடியும் அவள் அகப்படாததால் அம்முயற்சியைக் கைவிட்டு விட்டுத் தன் நகரை அடைந்தான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மகரமீனின் வயிற்றுட்பட்ட ரதியின் உடல் கரைந்தது. அரக்கன் தொட்ட உடல் கரைய நின்ற அவள் மீனின் கருப்பையுள் மீண்டும் ஒரு பெண்ணாய் வளரத் தொடங்கினாள். முழுவளர்ச்சி குழந்தையாய் ஆகியபோது ஒரு மீனவன் அம்மீனைப் பிடித்து விட்டான். பிடித்த அந்த மீனின் அழகையும் ஒளியையும் கண்ட அவன் வியப்பெய்தி அதனைத் தன் அரசனாகிய சம்பரனிடம் கொண்டு சேர்த்தான். சம்பரனும் அதனைக் கண்டு வியப் பெய்தி அதனை இரு துண்டாக வெட்டினான். உள்ளே அழகிய பெண் குழந்தையொன்று இருப்பதைப் பார்த்தான். அக் குழந்தையின் அழகும் ஒளியுமே அந்த மீனுக்கு அழகும் ஒளியும் கொடுத்ததென்பதை உணர்ந்தான். அக்குழந்தையின்மீது அவனுக்கு அளவிலா அன்பு உண்டாயிற்று. அதனால் தானே அக்குழந்தையை வளர்த்துவரலானான். அக்குழந்தையும் "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து ஈடற்ற அழகும் இணையற்ற குணமும் ஒப்பற்ற அறிவும் பெற்று மங்கையாயினாள்.

ரதியை மீட்டல்

ஒருநாள் நாரதர் கிருஷ்ணருடைய அரண்மனைக்கு வந்தார். அவர் பிரத்யும்நனைக் கண்டு அவன் சிவபிரான் சினத்தால் அருவமான மன்மதனே என்பதையும் ரதி தேவி சம்பரனால் கைப்பற்றப்பட்டு சாகரத்தில் வீழ்ந்ததையும் மீனொன்று அவளை விழுங்க அதன் வயிற்றிலேயே அவள் கருவாகிக் குழந்தையாய் வளர்ந்ததையும் அம்மீனைப் பிடித்த மீனவன் ஒருவன் அதனைச் சம்பரனிடம் கொடுக்க அதன் வயிற்றில் அழகிய அப்பெண் குழந்தையை அவன் கண்டதும் அப்பெண் குழந்தையிடம் அவன் மிகவும் அன்பு கொண்டு வளர்த்து வருவதையும் அப்பெண் தற்போது மங்கையாகி அழகும் உருவும் அறிவும் சிறந்து விளங்குவதையும் எடுத்துரைத்தார். அதனைக் கேட்ட பிரத்யும்நன் உடனே சென்று ரதியை மீட்டுக்கொண்டு வரவேண்டும் என எண்ணினான். நாரதரும் ஆசி புகன்று அகன்றார்.

பிரத்யும்நன் பெருஞ்சேனையுடன் சம்பரன் நாட்டுக்குச் சென்றான். போர் மூண்டது. பல நாட்கள் வெற்றி தோல்வி யின்றி யுத்தம் நடந்தது. போருக்குச் சென்ற மகன் பல நாட் களாகியும் திரும்பாததை எண்ணி அவன் தாய் ருக்மிணி மிகவும் மனக்கிலேசம் அடைந்தாள். தன் மகன் சுகமாகத் திரும்பி வர வேண்டுமென்று வேண்டி விநாயக சதுர்த்தி விரதத்தை மேற் கொண்டாள். ஆறாவது நாளில் அசுரரின் பலம் குறையத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தொடங்கியது; பிரத்யும்நன் வெற்றி பெற்றான். சம்பரன் போரில் இறந்தான். அதனால் மன்மதனுக்குச் சம்பராரி என்ற பெயர் ஏற்பட்டது. வெற்றிபெற்ற பிரத்யும்நன் ரதிதேவியை அழைத்துக்கொண்டு துவாரகை அடைந்தான். அங்கே அவர்களுடைய திருமணம் கோலாகலமாய் நடந்தது.

உஷாவும் அநிருத்தனும்

அவர்களுக்கு அதிரூப லக்ஷணமுடைய ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு அநிருத்தன் எனப் பெயரிட்டனர். அவன் உடல் பலத்திலும் கலை நுணுக்கங்களிலும் மிகச் சிறந்திருந்தான். அவன் மன்மதனையும் விட அதிக அழகு உள்ள வாலிபனாக வளர்ந்தான். அக்காலத்தில் ஆயிரம் கரங்களையுடைய மிகப் பெரு வீரனான வாணாசுரன் என்றோர் அரக்கன் இருந்தான். அவனுக்கு உஷா என்றொரு மகள் இருந்தாள். அவள் அழகில் ரதிக்கு நிகரானவள்; அறிவில் சரஸ்வதிக்கு ஒப்பாவாள். ஒருநாள் அவள் தூங்கும்போது ஆணழகன் ஒருவனைத் தன் கனவில் கண்டு மோகம் கொண்டாள்; அன்றுமுதல் ஊண் உறக்கம் தவிர்த்து அவனையே எண்ணி எண்ணி ஏங்கினாள். அவள் நிலையைக் கண்ட அவளுடைய தோழி அந்த ஆணழகனை வர்ணிக்கும்படிக் கூறினாள். அவள் வர்ணித்த அந்த ஆண் மகனுடைய உருவத்தைச் சித்திரத்தில் எழுதி அவளிடம் காட்ட உஷா மயங்கினாள். உஷாவின் தோழி அச்சித்திரத்தை வைத்துக்கொண்டு அந்த ஆணழகன் அநிருத்தன் என்பதைக் கண்டுபிடித்து அவன் அரண்மனையில் தூங்கிக் கொண்டிருக்கும் போது அவன் தூக்கம் கலையாமல் மென்மையாய்த் தூக்கிக் கொண்டுவந்து யாரும் அறியாமல் உஷையின் அந்தப்புரத்தில் சேர்த்தாள். அநிருத்தனைக் கண்ட உஷா மிகவும் மகிழ்ந்தாள். உஷாவைக் கண்ட அநிருத்தனும் மோகம் கொண்டான். இந் நிகழ்ச்சி உஷாவின் தோழிக்கு மாத்திரமே தெரியும். பலநாட்கள் அநிருத்தன் உஷாவின் அந்தப்புரத்தில் ஒருவரும் அறியாதபடி உஷாவுடன் தன்னை மறந்து களியாட்டம் ஆடிக்கொண்டிருந்தான். பலநாள் கள்ளம் ஒருநாள் வெடிக்கும் என்பது மெய்யாயிற்று. இச்செய்தி வாணாசுரனுக்குத் தெரிந்துவிட்டது; தன் மகளின் அந்தப்புரத்தில் யாரும் அறியாமல் புகுந்த ஆணழகன் அநிருத்தனைச் சிறையில் அடைத்தான்.

அநிருத்தனைக் காணாமல் எங்கெங்கும் தேடிச் சலித்த பிரத்யும்நன் மிகக் கவலையோடு அரண்மனையில் அமர்ந் திருந்தான். அப்போது அவன் தாய் ருக்மிணி தேவி அவனை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நோக்கி, ''பிரத்யும்னா, நீ சம்பரனோடு போரிடச் சென்றபோது இவ்வாறுதான் நானும் கலங்கினேன். அப்போது விநாயக சதுர்த்தி விரதம் இருந்து விநாயகப் பெருமானை ஏகாக்ஷர மந்திரத்தால் போற்றினேன். அடுத்த ஆறாவது நாள் நீ உனக்கேற்ற கன்னிகையையும் அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தாய். ஆகையால் இப்போது நீ விநாயக சதுர்த்தி விரதம் இருந்து பகவானை ஆராதனை செய். உன் மகனும் விரைவில் திரும்பி வருவான்'' என்று கூறினார். பிரத்யும்நனும் தாயின் சொற்கேட்டு விநாயக சதுர்த்தி விரதம் மேற்கொண் டான்.

அப்போது கிருஷ்ணபகவான் துவாரகையில் இல்லை. நாரதர் கிருஷ்ண பகவானைக் கண்டு உஷா நிமித்தத்தால் அநிருத்தன் வாணாசுரனால் சிறை வைக்கப்பட்டிருப்பதைக் கூற பகவான் வாணாசுரன் நகரத்திற்குச் சென்றார். வாணாசுரனுக்கும் கிருஷ்ணருக்கும் கோர யுத்தம் நிகழ்ந்தது. கிருஷ்ணன் சக்ராயுதத் தால் வாணன் ஆயிரம் புயங்களையும் அறுத்து வெற்றி கொண்டு தன் பேரனாகிய அநிருத்தனையும் உஷாவையும் அழைத்துக் கொண்டு துவாரகை திரும்பினார். பிரத்யும்நன் முதலியோர் மகிழ்ச்சிக் கடலில் துளைந்தனர். பிரத்யும்நன் சதுர்த்தி விரதத்தைக் கோலாகலமாக முடித்து உஷாவுக்கும் அநிருத்தனுக்கும் சிறப்பாகத் திருமணமும் செய்து வைத்தார்.

14. அனந்தனுக்கு அருளிய ஆனைமுகன்

வானளாவிய கைலையங்கிரி, அதன் சிகரம் முழுவதும் வெள்ளை வெளேரென்ற பனியால் மூடப்பட்டிருந்தது; சூரிய கிரணம் அதன்மீது படிந்து பார்ப்போர் கண்ணைப் பறித்தது; வெள்ளியை உருக்கி வார்த்ததுபோல ஒளிவீசித் திகழ்ந்தது. அதன் சரிவில் அழகியதொரு மண்டபம். மண்டபம் இடமகன்று முப்பத்துமுக்கோடி தேவர் வந்தாலும் அவர்கள் அனைவரும் இருந்து மகிழ்வதற்கு ஏற்றதாயிருந்தது. ஆங்கே நவரத்தினங் களும் பதிக்கப்பட்டு அழகாகச் செய்யப்பட்ட அரியாசனத்தில் அந்திவண்ணன் அம்மையுடனாக அமர்ந்திருந்தார். அவர் அரையில் புலித்தோல்; தோளில் யானைத்தோல்; ஒரு கையில் மான்; ஒரு கையில் மழு; ஒரு கையில் உடுக்கை; ஒரு கை சின் முத்திரை; கழுத்தில் கபாலமாலை; கண்மணி மாலை; தலையில் கங்கை; கங்கை மேல் போர்த்து நிற்கும் ஆதிசேஷன். அம்மையோ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சர்வாலங்கார பூஷிதையாக எம்பெருமான் அருகே எம்பெருமான் சக்தியாய் அமர்ந்திருந்தார். அப்போது தேவர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள், நாகர்கள் முதலிய பல தேவகணத்தவரும் அங்கே வந்து சிவபிரானையும் பிராட்டியையும் பக்தியுடன் பணிந்து பேரருள் பெற்றுச் சென்றனர்.

பல்வகைச் சக்திகளும் மிக்க பல்வகைத் தேவர்களும் தெய்வநாயகனைப் பணியும்போது அவர் தலையில் அணியாய் இருந்த ஆதிசேஷன் அனைவரும் தன்னையும் வணங்குவதாய்ப் பெருமிதம் கொண்டான். பணிபவரின் எண்ணிக்கை பெருகப் பெருக அவன் பெருமிதம் இறுமாப்பாய் மலர்ந்தது. அஃதுணர்ந்த சங்கரன் ஆதிசேஷன் செருக்கைச் சிதைக்கத் திருவுளம் கொண்டு அவனைத் தம் கையால் பற்றி இழுத்துத் தரையில் மோதினார். மோதிய வேகத்தில் ஆதிசேஷன் தலையில் ஆயிரம் பிளவு உண்டாயிற்று. அவன் வலியிழந்து சோர்ந்து மயங்கித் தரையில் கிடந்தான். அவனால் நகரவும் முடியவில்லை. அவன் பொறாமை வெறுமையாயிற்று. சற்றே மயக்கம் தெளிந்தபோது, தன் கர்வத்தால் தனக்கு ஏற்பட்ட கதியைப் பற்றி எண்ணி எண்ணி வருந்தினான். அப்போது அவ்வழி வந்த நாரதர் அனந்தனின் அனந்தர் கண்டு இரக்கம் கொண்டார். அவனையணுகி அவ்வாறு அல்லற்பட்டுப் பாறைமேல் மயங்கிக் கிடக்கக் காரணம் யாதென்று வினவினார். ஆனால் அனந்தனோ தான் செருக் குற்றதையும் தன் செருக்கையுணர்ந்த சங்கரன் செருக்கறுத்த பாணியையும் தன் வலியடங்கித் தரைமீது கிடக்கும் அலங் கோலத்தையும் தன் நாவாற் கூற நாணித் தலைகவிழ்ந்து கிடந்தான். ஞானக் கண்ணால் நிகழ்ந்தவை யாவற்றையும் உணர்ந்த நாரதர் அனந்தனைத் தேற்றி ஆனைமுகனைப் போற்றும் ஆறெழுத்து மந்திரத்தை அவனுக்கு உபதேசித்து அருள் செய்தார். நாரத முனிவரின் அருள் வலிமையும் மதகளிற்றன் மந்திர வலிமையும் அனந்தனுக்கு மனவலிமை யையும் மெய்வலிமையையும் கொடுத்தது. அவன் நாரதரைப் பணிந்து பின்னர் அவ்விடத்தினின்றும் நீங்கிப் பிரவாளம் என்றொரு புனித இடத்தை அடைந்து மெய்வருத்தம் பாராது கண் துஞ்சாது பசிக்குப் பணியாது அகமெல்லாம் ஆனை முகத்தவனுக்கேயாக்கி ஷடாட்சர மந்திரத்தைச் சதாகாலமும் உருவேற்றி வேறு சிந்தனையின்றிப் பேறு தரும் பெருந்தவம் புரிந்தான்.

உரக அரசன் உஞற்றிய தவத்திற்கு உவந்த ஓங்கார மூர்த்தி ஆதிசேஷனுக்குப் பிரத்யட்சமாகினார். கடல்போல் கம்பீரம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொண்ட மடங்கலின் முதுகில் அமர்ந்த வண்ணம் பத்துவகைப் படைக்கலங்கள் பத்துக் கைகளிலும் துலங்கித் தோன்ற, சித்தி புத்தி என்ற தன் இரு சக்திகளும் இருமருங்கும் இலகி ஒளி வீச அனந்தன் செய்த பாவம் அகன்று பாக்கியம் பெருக ஆனைமுகத்து அண்ணல் பன்னக அரசன்முன் தோன்றினார். பன்னக அரசன் மெய்யெலாம் நடுங்கிக் கண்ணீர் வாரத் தந்தி முகன் தாள்பணிந்து தன்னை மறந்து கிடந்தான். அருள்பெருகு வேழ முகத்தோன் அரவரசை நோக்கி, ''ஆயிரம் பிளவாய்ப் பிளந்த உன் தலையின் ஒவ்வொரு பிரிவும் ஒரு தலையாகுக. அவனியெலாம் தாங்கும் ஆற்றல் அன்றுபோல் என்றும் நிலை பேறடைக. ஐம்முகத் தண்ணலின் ஜடா முடியின் மேல் ஐம்முக அரவாய்ப் பணம் காட்டி நிழல் செய்திடுக. இந்த இவ்வுருவோடு என் உதரபந்தனம் ஆகுக'' எனக் கூறி அவனைத் தம் கையில் எடுத்தார். அனந்தனும் அகம் மகிழ்ந்து படமெடுத்து அப் பண்ணவனை நீடு நோக்கினான். அவ்வளவில் மேலும் அருள் புரியத் திருவுளம் கொண்ட எம்பெருமான் பேருருவாய் வளரத் தொடங்கினார். அப்போது வானத் திருந்த பிறைச்சந்திரன் முதலில் அவருக்குத் தலையணியாயிற்று; அடுத்து மார்பின் முத்தாரமாயிற்று; பின்னர் உதரபந்தனமாயிற்று; மேலும் காலில் கழலாயிற்று. அழகு ஒழுகும் வேழ முகத்தண்ணலின் விசுவரூபத்தைக் கண்டு பரவசமடைந்தான் பன்னக அரசன். பிள்ளையாரும் ஆதிசேஷனை அவ்வாறே தன் வயிற்றைச் சுற்றி இறுகப் பண்ணினார். அல்லல் நீங்கிய மாசுண மன்னன் தான் தவம்புரிந்த பிரவாளம் என்ற புனிதத் தலத்தில் களிற்றுமுகக் கணபதிக்குக் கோயிலெழுப்பித்தான். உலகோர் அனைவரும் உத்தமக் களிற்றை ஏத்தித் தொழுது பேறடைய வழிசெய்தான்.

15. இந்திர விமானம்

எல்லா வளங்களும் இயல்பாகவே நிறைந்த நகரம் ஸஹஸ்ரபுரி. அதனாலேயே அதற்கு அப்பெயர் ஏற்பட்டது. அந்நகரைச் சூரசேனன் என்ற புகழ் வாய்ந்த அரசன் ஆண்டு வந்தான். அவன் கல்வி கேள்விகளில் சிறந்தவன். நேர்மையாளன். தன்னுயிர் போல் மன்னுயிர் காக்கும் தயாளன். அவன் மனைவியும் குணசீலி. அதனால் ஸுசீலா எனவும் புண்யசீலா எனவும் அழைக்கப்பட்டாள். ஒருநாள் அவர்கள் அமைச்சர், பிரதானியர், பெரியோர் நிறைந்த சபையில் நாட்டுவளம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பற்றியும் நாட்டுக்குச் செய்ய வேண்டிய நன்மைகள் பற்றியும் ஆய்ந்துகொண்டிருந்தனர். அப்போது திடீரென்று பெரிய சத்தம் கேட்டது. எல்லாரும் திடுக்கிட்டனர். உடனே அரசன் அனுமானத்தால் வான்வழிச் செல்லும் ஒரு தேவ விமானம் ஏதோ ஒரு காரணத்தால் நிலம் தட்டி நின்றிருக்க வேண்டும். உடனே நாற்புறமும் சென்று அதனை அறிந்து வருக'' என ஏவலரை நோக்கிக் கட்டளையிட்டான். ஏவலர் விரைந்து நகர்ப் புறத்தின் நாற்புறமும் சென்று ஆய்ந்தனர். அரசனும் தானே புறப்பட்டுக் குதிரை மீதேறி ஒலிவந்த திசையை ஒருவாறு ஊகித்துக்கொண்டு அத்திசை நோக்கிச் சென்றான். அங்கே பூர்ண சந்திரனின் பொலிவோடு ஒரு தேவ விமானம் தரையிறங்கி நின்றுகொண்டிருந்தது. சூரசேனன் விரைந்து விமானத்தருகே சென்று பார்த்தபோது அதில் அமர்ந்திருப்பவன் இந்திரன் என்று உணர்ந்தான். சூரசேனன் மகிழ்ச்சி கொண்டு, தேவேந்திரனை வணங்கி, "வானோர் தலைவன் எங்கள் நகருக்கு வந்தது நாங்கள் செய்த பெரும் பாக்யம்; தாங்கள் இப்பூவுல கிற்கு வந்த காரணத்தை அறியும் விருப்பமுடையேன்; என்னால் ஆக வேண்டிய காரியம் ஏதேனும் உளதோ? அதனை உடனேயே நிறைவேற்றுகிறேன்; எங்கள் அரண்மனைக்கு வந்து ஓய்வு கொள்க'' எனக் கூறினான்.

தேவேந்திரன் சூரசேனனை நோக்கி, "நான் இப்போது அரண்மனைக்கு வர இயலாது. சீக்கிரமே இவ்விடமிருந்து புறப் பட வேண்டும். சில நாட்களுக்கு முன் எம் சபைக்கு நாரத மஹாமுனிவர் வந்தார். அவர் உலகம் முழுவதும் பயணம் செய்து வந்த அனுபவங்களை எங்களிடத்தில் சொல்லிக்கொண் டிருந்தார். அப்போது புருசுண்டி என்ற சிறந்த முனிவரைப் பற்றி எடுத்துச் சொன்னார். அந்த மஹாமுனிவர் தண்டக வனத்தில் வாழ்வதாகவும் விநாயகப் பெருமானைக் குறித்துப் பல ஆண்டுகள் தவம் புரிந்தவர் எனவும் இந்நிலவுலகிலேயே ஸாரூப நிலை பெற்றவரென்றும் அத்தகைய மஹான்கள் கோடி ஆண்டுக்கொருமுறைதான் தோன்றுவரென்றும் கூறினார். மேலும் அவருடைய பெருமைகளாக அபூர்வமான செய்திகளை யெல்லாம் கூறினார். அதனைக் கேட்ட நாங்கள் புளகாங்கிதம் அடைந்தோம். அத்தகைய மஹானை நேரில் கண்டு ஆசி பெற்று வர விரும்பியே தண்டக வனத்தை அடைந்தோம். தவசிரேஷ்டராகிய புருசுண்டி முனிவரைக் காண்பது பெரும் பாக்யம். அவரைப் பணிந்து அவருடைய ஆசியைப் பெறுதல் அதைவிடப் பெரும் பாக்யம். இத்தகைய பாக்யங்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எங்களுக்குக் கிடைத்தன. அப்பெருந் தவமுனிவரிடமிருந்து விடைபெற்றுத் திரும்பும்போது இவ்விடத்தில் மஹாபாவியும் தீராத நோயுள்ளவனும் ஆகிய ஒருவனுடைய திருஷ்டி விஷத்தால் இவ்விமானம் மேலே செல்லாமல் புனிதத்தன்மை இழந்து கீழே இழிந்தது. இனி இது மேலெழும்ப வேண்டுமாயின் மீண்டும் இது புனிதத்தன்மை பெற வேண்டும்; இந்நகரில் விநாயகரைக் குறித்துச் சங்கட சதுர்த்தி விரதம் கைக்கொண்ட ஒருவனால்தான் அத்தகைய புனிதத்தன்மை ஏற்படும்; அப்போதுதான் இவ்விமானம் மீண்டும் கிளம்பி மேல்நோக்கிச் செல்லும். அதுவரை நான் இவ்விடத்திலேயே தங்கியிருக்கத் தீர்மானித்துள்ளேன்'' என்று கூறினான்.

சுரபதி கூறியதைக்கேட்ட சூரசேனன், "புருசுண்டி முனிவரின் பெருமைகள் எல்லாவற்றையும் விஸ்தாரமாகக் கூற வேண்டும்'' என அவனை வேண்டினான். மகபதியும் மகிழ்ந்து, "புருசுண்டி முனிவரின் பெருமைகளை எடுத்துச் சொல்வதற்கே பெரும் பாக்யம் செய்திருக்க வேண்டும். அத்தகைய பாக்யம் எனக்கு இருந்ததால்தான் என் விமானம் இங்கே இறங்கியது போலும்; அவர் வரலாற்றைச் சிரத்தையுடன் கேட்பாயாக'' எனக் கூறிப் பின்வரும் வரலாற்றைக் கூறினான்.

16. புருசுண்டி முனிவர்

வேடன் விப்பிரதன்

தண்டகாரண்யப் பிரதேசத்தில் நந்துரம் எனப் புகழ்பெற்ற ஒரு நகரம் எல்லா வளங்களும் பெற்றுத் திகழ்ந்தது. அவ்வூரை ஒட்டி வேடர்கள் வாழும் பகுதி இருந்தது. அக்குலத்தவர் பலரும் வேட்டையாடுதல், தேன் சேகரித்தல் போன்ற தொழிலில் ஈடுபட்டிருக்க விப்பிரதன் என்ற ஒருவன் மட்டும் கொலை கொள்ளைத் தொழில்களில் இறங்கினான். அவன் காட்டு வழியில் செல்வோரை எல்லாம் வழிமறித்து அவர்களிடம் உள்ள பொருள்களைப் பிடுங்கிக் கொள்வான்; மிகக் கொடியவன்; அடித்தும் குத்தியும் வருத்தியும் மற்றவர் மறைத்து வைத்திருக்கும் பொருளையும் வெளிப்படுத்தி அபஹரிப்பதில் வல்லவன்; இரக்கம் என்ற பொருள் இம்மியும் இல்லாதவன்; பொருளைப் பறித்துக்கொண்டபின் அவர்களைக் கொல்வதற்குத் தயங்கான். பொருள் ஒன்றும் கொண்டுவராவிடினும் 'ஏன் கொண்டுவரவில்லை?' என்று சித்திரவதை செய்து கொல்வான். காட்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வழியில் வருபவர் உயிரோடு திரும்பிச் செல்ல அவன் விடுவதே இல்லை. அத்தகைய பயங்கரமான காட்டுவழியில் விஷயம் தெரியாத அந்தணன் ஒருவன் தனியே வந்தான். அவனைக் கண்டதும் பொருள் பறிக்கும் பேராவலால் உந்தப்பட்ட வேடன் கையில் வாளெடுத்தான்; அவன் வாளெடுக்கும் குறிப்பை அந்த அந்தணன் கண்டுகொண்டு ஓடத் தொடங்கினான். உடனே வேடன் அவன் பின்னே துரத்திக் கொண்டு ஓடினான்; விப்பிரன் உயிருக்காக ஓடினான்; விப்பிரதன் பொருளுக்காக ஓடினான். விப்பிரதனால் விப்பிரனைப் பிடிக்க முடியவில்லை. நெடுநேர ஓட்டத்திற்குப்பின் சோர்ந்த வேடன் வழியில் ஒரு தெள்ளிய நீர் நிறைந்த தடாகத்தையும் அதன் கரையில் ஒரு பிள்ளையார் கோவிலையும் கண்டான்; தன் உடல் வெப்பம் தீர அக்குளத்தில் குளித்து அந்நீரை அருந்தி அருகில் இருந்த ஒரு மரத்தடியில் படுத்துச் சற்றே இளைப்பாறினான்.

அந்த நேரத்தில் அவ்வழியாக முத்கல முனிவர் வந்தார். வழிப்போக்கர் ஒருவர் வருவதைக் கண்ட விப்பிரதன் விருட்டென்று எழுந்து கையரிவாளுடன் அவரை நோக்கி ஓடி வந்தான். அவ்வேடன் விரைந்து ஓடி வருவதைக் கண்ட முத்கலர் சற்றே நின்றார்; பார்த்தவுடனே அவன் கொலையஞ்சாப் பாதகன் என்று புரிந்துகொண்டார். ஆகவே, அவர் தம்நிலை பெயராது நின்று அக் கிராதகனைத் தம் இருவிழியாலும் இமையாது நோக்கினார். அவருடைய பார்வையில் இருந்த உக்கிரம் அக்கொலை வேடனையும் தகித்தது. அவன் கையிலிருந்து வாள் நழுவியது; மனச்சுமை அகன்றது; கொடுமனம் கழன்றது; இரக்கம் ஊறியது; அறிவு தெளிந்தது; தீவினை தேய்ந்தது; பக்குவ நிலை எய்தினான். அவர் பாதங்களில் வீழ்ந்தான். முத்கல முனிவர் அவனை அருள் நோக்குடன் பார்த்தார். அவ்வேடன், ''அறியாமை இருளில் அமிழ்ந்திருந்த என்னைக் கைதூக்கி விட்ட ஞான பாநுவே, இவன் கொடியன் என்று எண்ணி ஒதுக்காமல் நான் கடைத்தேற அருள்புரிய வேண்டும்'' என வேண்டிப் பணிந்தான். முத்கல முனிவர் அவ்வேடனுக்கு அருள்புரிய எண்ணினார். ஆகையால் அவனை நீராடி வரச் செய்தார்; புனித மந்திரங்களால் அர்ச்சிக்கப்பட்ட வருணபாதோதகத்தை அவன்மீது புரோக்ஷணம் செய்து அவனைப் புனிதமுறச் செய்தார். பிறகு அவனுக்குக் கணேச மந்திரத்தை உபதேசித்தார். உபதேசம் பெற்ற வேடன் புடமிட்ட பொன்போல் விளங்கினான். முத்கல முனிவர் ஒரு தடியைப் பூமியில் நட்டு வைத்து அவனை நோக்கி, ''இத்தடிக்குத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தினமும் கணேச மந்திரத்தைக் கூறித் தண்ணீர் ஊற்ற வேண்டும்; காலை, நண்பகல், மாலை என்ற மூன்று வேளைகளிலும் அவ்வாறு செய்து வரவேண்டும். தினமும் விடியற்காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு நீராடிப் புனித மடைந்து இத்தடியின் அருகில் அமர்ந்து கணேச மந்திரத்தை உருவேற்றி வரவேண்டும்; இத்தடி தளிர்க்கும் வரையில் இவ்வாறு செய்து வர வேண்டும். அவ்வாறு செய்தால் முக்தியுண்டு'' என அறிவுறுத்திச் சென்றார். அவ்வேடனும் அன்றுமுதல் கானகத்தில் கிடைத்த காய், கனி, கிழங்கு போன்றவைகளை உண்டு கணேச மந்திரத்தை உருவேற்றுவதில் கண்ணாயிருந்தான். இவ்வாறு ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன; தடியும் தளிர்த்தது; பூவும் தோன்றியது. வேடனுடைய துர்க்குணங்கள் யாவும் அழிந்தன; அவன் மனத்தில் இயல்பாகவே எல்லா உயிரிடத்தும் கருணை தோன்றியது. கணேச மூர்த்தியின் பரம பக்தனானான்.

வியத்தகு விப்பிரதன்

அப்போது முத்கல முனிவர் மீண்டும் அங்கு வந்தார். தாம் நட்டுவைத்த தடி தளிர்த்திருப்பதைக் கண்டார். வேடன் காட்டிய மனஉறுதி அவருக்கு வியப்பளித்தது. அவர் வந்த போது அந்த வேடன் அம்மரத்(தடி) தருகில் அமர்ந்து கணேச மந்திரத்தை உருவேற்றிக் கொண்டிருந்தான். முத்கல முனிவர் தம் கமண்டலத்தினின்றும் தம் கையில் நீரை ஊற்றிக்கொண்டு ஏகாக்ஷர மந்திரத்தால் மந்திரித்து அவ்வேடன்மீது புரோக்ஷணம் செய்தார். கணேச மந்திரத்தின் மஹிமையாலும் முத்கல முனிவர் புரோக்ஷணம் செய்த புனித தீர்த்தத்தாலும் அவ்வேடனுடைய சஞ்சிதமான தீவினைகள் யாவும் நீங்கின. விப்பிரதன் கண்ணை விழித்தான்; எதிரில் முத்கல முனிவர் நிற்பதைக் கண்டான். அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. விப்பிரதன் புருவ மத்தியினின்றும் நாசி பெருக்கத் தொடங்கியது; பிறகு நீண்டது; அதுவே ஆனைமுகத்து அண்ணலாரின் துதிக்கை போன்று அமைந்தது; சற்று நேரத்தில் விப்பிரதன் முழுவதும் பிள்ளையார் உருவமே பெற்றான். இவ்வுலகில் இம்மையிலேயே ஸாரூபம் பெற்றான். முத்கல முனிவர் அதனைக் கண்டு பேரதிசய மடைந்து அவ்வேடனை அப்படியே அணைத்துக் கட்டிக் கொண்டார். புருவ மத்தியில் துண்டி (துதிக்கை) தோன்றியதால் அவருக்கு புருசுண்டி எனத் திருநாமம் சாத்தினார். புருசுண்டி முனிவர் வளர்த்த மரம் கற்பக விருக்ஷமாகி வேண்டினர்க்கு வேண்டினவெல்லாம் நல்கியது. முத்கல முனிவர் புருசுண்டி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முனிவருக்கு விநாயகப் பெருமானின் ஏகாக்ஷர மந்திரோபதேசம் செய்து அம்மந்திரத்தை உருவேற்றுமாறு கூறித் தம் வழியே சென்றார். புருசுண்டி முனிவரும் மற்றுமோர் ஆயிரம் ஆண்டுகள் ஏகாக்ஷர மந்திர ஜபம் செய்தார். அவருடைய தவத்தின் தீவிரத்தைக் கண்ட பிள்ளையார் அவர் எதிரில் தோன்றி வேண்டிய வரங்களைக் கேட்குமாறு கூறினார். ஆனால் முனிவரோ, 'ஆதி விநாயக மூர்த்தியின் அடிநிலைப்பேறல்லால் வேறேதும் வேண்டா' என்றார். விநாயகப் பெருமான் புருசுண்டி முனிவரை, நோக்கி, "பிறவாப் பேரின்பப் பெருநிலையான திருவடி சங்கமம் வேண்டுவோர் பல படிகளைத் தாண்டி வரவேண்டும். அப்படிகளைத் தாண்டச் சாதனமாக இருப்பவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. அம்முறைகளைக் கடைப் பிடித்து ஒழுகி இறுதியில் என் திருவடி வந்தடைவாயாக" என அருளி மறைந்தார். அன்று முதல் புருசுண்டி முனிவர் ஜீவன் முக்தராக உலக விஷயங்களில் பற்றற்று எப்போதும் எம்பிரானை மனத்திருத்தி ஸோஹம்அஹம்ஸ: எனப் பரிபக்குவம் பெற்று தண்டகாரண்யத்தில் வாசம் செய்கிறார்.

இந்தப் புண்ணிய சரிதத்தைக் கேட்ட சூரசேனன் மிகுந்த வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டான். பிறகு தேவேந்திரனை மீண்டும் நோக்கி, "சங்கட ஹர சதுர்த்தி விரதம் பரிபாலித்த ஒருவனுடைய தூய நோக்கால் மட்டுமே இவ்விமானம் மீண்டும் மேலே எழுந்து செல்லும் என எனக்குக் கூறப்பட்டதே. அவ்விரதம் சிறந்த மஹாத்மியம் உள்ளதாக இருக்க வேண்டும். அதன் மஹிமையை எனக்குச் சொல்லியருள வேண்டும்" எனப் பிரார்த்தித்தான். இந்திரனும் பின்வருமாறு கூறலானான்.

நாரதர் நரகத்தைக் காணல்

ஒரு சமயம் நாரத முனிவர் தருமராஜரின் உலகுக்குச் சென்றார். மாமுனிவரின் வருகையைக் கேட்ட வைவஸ்வதன் எதிர் கொண்டழைத்து வரவேற்று முறையாக உபசாரம் செய்தான். நாரதரும் வழக்கம் போலவே தான் சென்று வந்த உலகங்களில் கண்ட அதிசயங்களையெல்லாம் யமனிடம் கூறினார். பிறகு யமனை நோக்கி, "இவ்வுலக அதிசயங்களையும் காண விரும்பியே நான் இப்போது இங்கு வந்தேன்" என்றார். அது கேட்ட தர்மராஜன் நாரதரை அழைத்துக் கொண்டு போய் யமலோகம் முழுவதும் உள்ள சிறப்புகளையும் செல்வ வளங் களையும் காட்டினான். அவை யாவற்றையும் கண்டு மகிழ்ந்தார் நாரதர். பிறகு தர்மராஜனை நோக்கி, "தர்ம விருத்தமான

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செயல்களைச் செய்பவர்கள் பலவகை நிரயங்களில் துன்பம் அனுபவிப்பர் என்பதைக் கேட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நிரயங்களையோ துன்பானுபவங்களைக் கொடுக்கும் இடங்களையோ நான் பார்க்கவில்லையே. அப்படிப்பட்ட இடங்கள் வேறு உலகங்களில் உள்ளனவோ?" என வினவினார். தருமராஜன் சிரித்துக் கொண்டே, "துன்பானுபவங்களைக் கொடுக்கும் நிரயங்களைப் பார்த்தலே பாவத்தின் பலனல்லவா? ஒரு பாவமும் அறியாத தாங்கள் அவற்றைப் பார்க்க வேண்டாமென்று எண்ணினேன். அதனால்தான் அப்பகுதிகளுக்குத் தங்களை அழைத்துச் செல்லவில்லை. மேலும் நிரயத்தில் வீழ்ந்து துன்பப்பட்டுக் கொண்டிருப்பவர் நமக்கு நண்பர்களாக இருக்கலாம்; உறவினர்களாக இருக்கலாம்; அப்படிப்பட்டவர்களைப் பார்க்கும்போது நம் மனம் மிகவும் துன்புறும். அதுவே ஒரு நரகமல்லவா? அதனால்தான் அப்பகுதிகளுக்குத் தங்களை யான் அழைத்துச் செல்லவில்லை" என்று கூறினான். நாரதரோ அப்பகுதிகளையும் பார்க்க வேண்டுமென்று வற்புறுத்தினார். மஹாமுனிவரின் விருப்பத்தை தர்மராஜன் நிறைவேற்ற வேண்டியிருந்தது. அதனால் யமன் அவரை அழைத்துக்கொண்டு நிரயப் பகுதிகளுக்குச் சென்றான். அங்குப் பலவிதமான பாவங்களைப் பல கோணங்களில் பல பரிணாமங்களில் செய்த பலர், செய்த பாவத்திற்குத்தக நிரய வாசம் செய்து துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்தனர். அருள்மிகு மனமுடைய நாரதர் அவர்களைப் பார்த்து துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்தார். மேலும் அந்நிரயத்தில் மஹாபுருஷரான புருசுண்டி முனிவரின் முன்னோர்களில் சிலரும் உறவினர்களில் சிலரும் நிரயத்தில் வாடுவதைக் கண்டார். அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஒருவாறாக அவற்றைப் பார்த்து முடித்து வெளியேறினார். யமதருமன் அவ்வரமுனிக்கு ஏற்ற மரியாதைகளைச் செய்து அனுப்பி வைத்தான். அங்கிருந்து புறப்பட்ட நாரதர் நேராக பூவுலகம் வந்து சேர்ந்தார்; தண்டகாரண்யத்தை அடைந்து புருசுண்டி முனிவரைக் கண்டு அவருடைய முன்னோர்களும் உறவினர்களும் நிரயத்தில் கிடந்து உழலுவதை எடுத்துக் கூறி அவர்கள் நிரயத்தினின்றும் விடுதலை பெறுவதற்காக முயற்சி செய்யுமாறு கூறிச் சென்றார்.

சங்கடசதுர்த்தி விரதம்

நாரதர் கூறியவற்றைக் கேட்ட புருசுண்டி முனிவர் மிகவும் வருந்தினார். பிறகு நரகத்தில் வாடுவோரைக் கரையேற்ற

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செய்ய வேண்டிய கருமம் யாது என ஆராய்ந்தார். சங்கடஹர சதுர்த்தி விரதத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று உணர்ந்தார். உடனே காலஹரணம் செய்யாமல் சங்கடஹர சதுர்த்தி விரதத்தை மேற்கொண்டு முறையாகச் செய்து முடித்தார். விரத முடிவில் அவ்விரத பலனை 'நிரயத்து வீழ்ந்திருக்கும் முன்னோர்களும் உறவினர்களும் கரையேற' எனக் கூறி விநாயகப் பெருமானின் திவ்ய கரங்களில் தத்தம் செய்தார். தத்தம் செய்த அப்பொழுதே நிரயத் தழுந்திய முன்னோர்களும் உறவினர்களும் நிரயத் துன்பத்தினின்றும் விடுபட்டனர். தேவ விமானம் யமலோகம் சென்று அவர்களை மீட்டுக்கொண்டு வந்து தேவருலகை அடைந்தது. இவ்வாறு புருசுண்டி முனிவரின் முன்னோர்களும் உறவினர்களும் பெரும்பேறு பெற்றார்கள்.

தேவேந்திரன் மேலும் கிருதவீரியன் வரலாற்றையும் கூறினான்.

17. கிருதவீரியன்

சையமலைச் சாரலில் காவிரிக் கரையில் வளமான ஒரு நாட்டை கிருதவீரியன் என்ற ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவ்வரசனுக்கு ஏற்ற மனைவியாக சுகந்தை என்பவள் வாய்த்தாள். அரச காரியங்களில் தன் கணவனுக்கு உதவியாக இருந்தாள் சுகந்தை. நாட்டு மக்களின் நலத்தில் இருவருமே நாட்டம் கொண்டவர். அதனால் நாடு சுபிட்சமாக இருந்தது. அவர்கள் எல்லாவகை நலன்களும் பெற்றிருந்த போதிலும் அவர்களுக்குப் பிள்ளை இல்லாத குறை பெரிய குறையாக இருந்தது. அரசும் செல்வமும் அதிகாரமும் அவர்களுக்குச் சலித்துப் போயின. ஆகவே, கிருதவீரியன் ஐம்பெரும் சுற்றத்திடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துத் தானும் தன் மனைவியுமாய்க் கானகம் சென்றனர். மனிதர்கள் எளிதில் வரமுடியாத அடவியில் தக்கதொரு வசதியான இடத்தில் ஆச்ரமம் ஒன்று அமைத்துக் கொண்டு தவம் புரியத் தொடங்கினர். நீண்ட காலம் கடந்தது.

கிருதவீரியனும் அவன் மனைவியும் பிள்ளைப் பேற்றை விரும்பிக் கானகத்தில் கடுந்தவம் மேற்கொண்டதை நாரதர் அறிந்தார். ஸர்வலோக ஸஞ்சாரியான நாரதர் ஒருமுறை பிதிர் லோகம் சென்றார். அங்கே கிருதவீரியனுடைய தந்தையைக் கண்டார். அவரிடத்தில் கிருதவீரியன் புத்ர பாக்யம் வேண்டித் தவம் செய்வதையும் அத்தவம் பலிக்காமற் போகுமாயின்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவ்விருவரும் வம்ச விருத்தியின்றி மரிப்பர் எனவும் அவர்கள் குலம் அத்துடன் அஸ்தமித்துவிடும் எனவும் கூறினார். அதனைக் கேட்ட பிதுர்த்தேவன் தன் வம்சம் ஓங்கிச் செழிக்காமை அறிந்து மிகவும் வருந்தினான். வம்சம் வளர்வதற்கு வழியென்ன என்று யோசனை செய்தான்; ஒன்றும் தோன்றாமல் நான்முகன் உலகு சென்று பிரம்மதேவனை வணங்கினான். பிரம்மதேவனும் பிதுர்த்தேவனை நோக்கி, "முகவாட்டத்துடன் வந்திருக்கின்றாய்; உனக்கு உற்ற துன்பம் யாது?'' எனக் கேட்டான். பிதுர்த்தேவன் நான்முகனை நோக்கி, ''என் மகன் கிருதவீர்யனுக்குப் புத்திரப்ராப்தி இதுவரை இல்லை. அதனால் அவன் மனம் வருந்தி அரண்மனையை விட்டு வெளியேறி அரண்யம் புகுந்து அருந்தவம் புரிகின்றான். அவனுக்குப் புத்திரர்கள் தோன்றாமல் போனால் என் வம்சமே முழுவதும் அழிந்துவிடும். அவனுக்குப் புத்திரன் தோன்றுவதற்குச் செய்ய வேண்டிய விரத தானாதிகள் ஏதாவது இருப்பின் அதனை அறிவுறுத்த வேண்டும்'' எனப் பணிந்து வேண்டினான். நான்முகன் கிருதவீரியனின் தந்தையைப் பார்த்து, ''கிருதவீரியனுக்குப் பிரம்மஹத்தி தோஷம் உள்ளது; அதனால்தான் அவனுக்குப் புத்ரோத்பத்தி கிட்டவில்லை'' என்று கூறிப் பின்வரும் வரலாற்றைச் சொன்னான்:

கிருதவீரியன் முற்பிறப்பு

கிருதவீரியன் முன் பிறப்பில் மிக ஏழையாய் இருந்தான். அப்போது அவன் பெயர் சாம்பன்; அவன் அவ்வப்போது பல தொழில்கள் செய்தும் வியாபாரம் செய்தும் பிச்சை எடுத்தும் தன் காலத்தைக் கழித்து வந்தான். அவனுக்கு ஒரு மகன் இருந்தான். அவனுக்குக் கணேசன் எனப் பெயர் வைத்திருந்தான். வறுமையால் வாடிய அவர்கள் பல நாட்கள் பட்டினி கிடக்க நேர்ந்ததுண்டு. ஆனால் ஒரு சமயம் அவர்கள் மூன்று நாட்கள் உண்ண உணவு ஏதும் கிடைக்காமல் பட்டினி கிடந்தனர். சாம்பன் கொள்ளையடித்தாவது பொருள் கொண்டுவந்து தன் மகனுக்கு உணவளிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்தான். அதனால் காட்டை அடுத்திருந்த பெருவழிப் பாட்டைக்குச் சென்று காத்திருந்தான். மாலையில் அவ்வழியே பன்னிரண்டு அந்தணாளர்கள் பயணமாக வந்துகொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் சாம்பன் ஓர் உலக்கையால் அனைவரையும் அடித்துக் கொன்றுவிட்டு அவர்கள் வைத்திருந்த பொருள்களை எல்லாம் ஒன்று சேர்த்து எடுத்துக் கொண்டு வீடு நோக்கி விரைந்து வந்தான். அப்போது இரவு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நேரமாகி விட்டது. வீட்டுக் கதவு சாத்தித் தாளிடப்பட்டிருந்தது. வெளியே நின்றபடியே சாம்பன் "கணேசா, கணேசா" எனப் பலமுறை கத்தினான். கதவு திறக்கப்படவில்லை. அதனால் சாம்பன் சுவரேறிக் குதித்து உள்ளே சென்று பார்த்தபோது அவன் மகன் உயிரோடு இல்லை. பசி அவன் உயிரைப் பறித்து விட்டிருந்தது. சாம்பன் தலையில் அடித்துக் கொண்டு அழுதான். துக்கம் நெஞ்சை அடைத்தது; பசிக் கொடுமை அதிகமாயிற்று; தூக்கம் வரவில்லை; அந்தணர்களைக் கொன்றதால் பிரம்ம ஹத்தி பீடித்தது; மயங்கி விழுந்தான்; நீண்டநேரம் மயங்கிக் கிடந்தவன் இறுதியில் இறந்தான். அன்று சங்கட ஹர சதுர்த்தி தினம். சங்கட ஹர சதுர்த்திக்கு முன்தினம் முழுவதும் உணவின்றி இருந்து இறந்த கணேசனை அழைத்துச் செல்ல தேவவிமானம் வந்தது. அவன் விநாயகருலகு புக்குப் பேரின்பம் எய்தினான். ஆனால் சாம்பனோ அவ்வாறு பேரின்பம் எய்த வில்லை. அவனும் சங்கடஹர சதுர்த்திக்கு முன்தினம் உணவின்றி இருந்தானேனும் அந்தணர்களைக் கொன்றமையால் அவனுக்குப் பிரம்மஹத்தி தோஷம் உண்டாயிற்று. அதனால் தேவருலகு புக அருகதை இல்லாமல் போய்விட்டது. ஆயினும் சங்கடஹர சதுர்த்தி நாளில் உபவாசமிருந்து (அறிந்தோ அறியாமலோ) இறந்த காரணத்தால் அரசிளங் குழவியாகப் பிறந்தான்; பிரம்மஹத்தி தோஷத்தால் அவனுக்குப் புத்ரோத்பத்தி இல்லை. அவனுக்குப் புத்திரன் உண்டாக வேண்டுமாயின் சங்கடஹர சதுர்த்தி நோன்பிருந்து பிரம்மஹத்தி தோஷத்தை விலக்கிக் கொள்ள வேண்டும். அது தவிர வேறு வழியில்லை.

இதனைக் கேட்ட பிதுர்த்தேவன், "சங்கடஹர சதுர்த்தி விரதத்தை எவ்வாறு தொடங்க வேண்டும்? அதற்குரிய முறைகள் யாவை" என நான்முகனை வினவ, நான்முகன் பின்வருமாறு கூறினார்.

சங்கடஹர சதுர்த்தி விரதமுறை

மாசி மாதத்தில் தேய்பிறையில் செவ்வாய்க் கிழமையும் சதுர்த்தியும் ஒன்றாகக் கூடிய தினத்தில் விரதத்தைத் தொடங்க வேண்டும். விடியற்காலையிலேயே எழுந்து கதிரவன் தோன்றும் சமயத்தில் ஸ்நானம் செய்து சிவ சின்னங்களை முறைப்படி அணிந்துகொண்டு விநாயகப் பெருமானின் திரு வுருவத்தின் முன் அமர்ந்து மனத்தைச் சாந்தமாக ஒருமுகப் படுத்தி வைத்துக்கொண்டு விநாயக மூர்த்திக்கு உரிய மந்திரங் களில் உபதேசமாகப் பெற்ற ஒரு மந்திரத்தைக் காலை முதல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாலை வரை ஜபித்து உருவேற்ற வேண்டும். மாலையில் சந்திரன் தோன்றியபொழுது விநாயகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து அன்பர்களுக்கு அன்னமிடல் வேண்டும். அன்னதானம் மிகவும் முக்கியம். பிறகு வேத முதல்வரான விநாயகப் பெருமானின் அளவிடற்கரிய சிறப்பு வாய்ந்த திருவிளையாடல்களைப் பக்தியுடன் படித்துக் கொண்டே இரவினைக் கழிக்க வேண்டும். விரதத்தை இவ்வாறு தொடங்கிய பின் ஒவ்வொரு மாதமும் சதுர்த்தி தினத்தில் இவ்விரதத்தை மிகக் கடுமையாகப் போற்றிக் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு ஓராண்டு கடைப்பிடித்தால் புத்திரன் இல்லாத வர்களுக்குப் புத்திரன் உண்டாகும்; செல்வமற்றவர் செல்வம் பெறுவார்கள்; நீயும் இவ்விரதத்தைக் கடைப்பிடித்தால் உன் வம்சம் விளங்கக் கான்முளை தோன்றும் எனக் கூறினான். பிதுர்த்தேவனும் அவ்வாறே செய்வதாகக் கூறினான்.

பிறகு பிதுர்த்தேவன் நான்முகனை நோக்கி, ''சதுர்த்தி விநாயகப் பெருமான் அவதரித்த நாளாகலின் உயர்ந்ததே. ஆனால் செவ்வாய்க்கிழமையில் வரும் சதுர்த்தி உயர்ந்தது எனக் கூறிய காரணம் என்ன? அதனை எனக்குச் சொல்ல வேண்டும்'' என்று வேண்டினான்.

அங்காரகன் பிறப்பு

பாரத்வாஜ முனிவர் நர்மதா நதி தீரத்தில் ஓர் ஆச்ரமம் அமைத்துக் கொண்டு அமைதியாகத் தவம் புரிந்து வந்தார். ஒரு நாள் அவர் நீராடும் பொருட்டு ஆற்றுக்குச் சென்றார். அவர் சென்றபோது ஸர்வாங்க சுந்தரியான ஒரு பெண் நீராடிக் கரையேறி வருவதைக் கண்டார். முற்றத் துறந்த முனிவராகிய பாரத்வாஜருடைய மனமும் அவளழகில் லயித்துக் காம வேதனையை உண்டாக்கியது. அப்போதே அவருடைய ரேதஸ் வெளியாகித் தரையில் விழுந்தது. பாரத்வாஜர் தம் பலஹீனத்தைக் கண்டு தாமே நாணிக் கூசினார். பிறகு நீராடித் தம்மைத் தூய்மை செய்துகொண்டு ஆச்ரமத்திற்குச் சென்றார்.

அவ்வாறு நிலத்தில் விழுந்த ரேதஸ் அழகிய ஆண் குழந்தை யாகப் பரிணமித்தது. பூமி தேவி அக்குழந்தையின் அழகைக் கண்டு ஆனந்தம் கொண்டாள். அதனால் அக்குழந்தையைத் தானே எடுத்து வளர்த்து வரலானாள்; செக்கச் செவேரென்று சிவந்திருந்த மதலைக்குச் செவ்வாய் என்று பெயரிட்டாள்; வலமாகச் சுழன்று மேல்நோக்கி எரியும் செந்தீக் கடவுளின் வண்ணம் பெற்றிருந்த அக்குழந்தையை அங்காரகன் என்றாள்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பூமியில் விழுந்தும் விரயமாகாமல் பூமி தேவியால் பாதுகாக்கப் பட்ட குழந்தையாதலால் பூமகன் என்றும் அக்குழவிக்குப் பெயருண்டாயிற்று.

செவ்வாய் ஒரு நாள் தன் தாயைப் பார்த்து, ''அம்மா, நான் பிறந்தது முதலே என் தந்தையாரைப் பார்த்ததில்லையே! என் தந்தையார் யார்? அவர் எப்படிப்பட்டவர்? அவர் எங்கே வாழ்கிறார்? அவர் என்னை வந்து காணாத காரணம் என்ன?'' எனப் பற்பல வினாக்களைத் தொடுத்தான். அவள் அங்காரகனை நோக்கி, ''என் அன்புக்கு உரிய மகனே, உன் தந்தையார் பாரத்துவாஜர் என்ற சிறந்த முனிவர்; அவருடைய இயல்பு களையெல்லாம் நீயே கண்டறிந்துகொள். நான் உன்னை அவரிடம் கொண்டு சேர்ப்பிக்கிறேன்'' என்று கூறினாள். பிறகு பூமகனைத் தன்னோடு அழைத்துக்கொண்டு பாரத் வாஜருடைய ஆச்ரமத்துக்கு வந்தாள். தேஜோமயமான திருவுருவம் கொண்ட பாரத்வாஜ மகரிஷி அப்போது நிஷ்டையில் இருந்தார். நிலமகளும் தனயனும் சற்று நேரம் காத்திருந்தனர். மகரிஷி தன் நிஷ்டை கலைந்து எழுந்தபோது இருவரும் அவரை வணங்கினர். முனிவரும் அவர்களை அன்புடன் வரவேற்று அவர்கள் யாரென வினவினார். நிலமகள் பூமகனை முன்னே நிறுத்தி, ''இவன் தங்களுடைய புதல்வன்; அவனை யானே இதுவரையில் பாதுகாத்து வந்தேன். இன்றோ அவன் தந்தை யாரென வினவுகிறான். ஆகையால் இனியும் எதையும் ஒளிக்க இயலாது அவனைத் தங்களிடம் அழைத்து வந்தேன்'' என்றாள். முனிவரும் மிக்க மகிழ்ச்சியோடு அவனை ஏற்றுக் கொள்ள பூமி தேவி மறைந்தாள்.

பூமகனுக்கு அருளிய புண்ணியன்

பாரத்துவாஜ மாமுனிவர் அங்காரகனுக்குப் பல கலை களையும் கற்பித்தார். உபநயனம் செய்து வேதங்களைக் கற்பித்தார். மிகவும் தீட்சண்யமான புத்தியுள்ள பூமகன் விரைவில் யாவற் றையும் கற்றுக் கொண்டான். கல்வி நிரம்பிய பொழுது முனிவர் அக்குமாரனுக்கு விநாயகப் பெருமானின் மந்திரத்தை உபதேசித்துத் தினமும் உருவேற்றி வருமாறு உத்தரவிட்டார். அங்காரகன் தன் தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை எனக் கொண்டு ஒரு தனியிடம் சார்ந்து ஓர் ஆச்ரமம் அமைத்துக்கொண்டான்; அதிலிருந்துகொண்டு தினமும் காலைக் கடன்களை முடித்து நீராடிப் புனிதம் பெற்று விநாயக மந்திரத்தை உருவேற்றி வந்தான். இவ்வாறு ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆனை முகத்து அண்ணல் ஆயிரம் ஆண்டு அருந்தவம் முடித்த அங்காரகனுக்கு அற்புதக் காட்சி அளித்தார். கணபதியைக் கண்ணாரக் கண்ட பூமகன் விரைந்து எழுந்தான்; அவரிரு பாதம் பற்றித் தொழுதான்; அன்பும் பக்தியும் மீதுரக் கண்ணீர் வார நின்றான்; பரவசமானான். மஹாகணபதி அவனை நோக்கி அருள் கூர்ந்து, ''செவ்விய மகனே, உடல் வருத்தம் உன்னாது, மனச்சுமை மதியாது நாடோறும் பொருந்தி நற்றவம் புரிந்தாய். நீ வேண்டும் வரங்களை எல்லாம் கொடுக்கவே உன்முன் தோன்றினேன்; வேண்டும் வரங்கள் யாவும் கேட்பாயாக'' எனத் திருவாய் மலர்ந்தார்.

அங்காரகன் மீண்டும் அண்ணல் அடிபணிந்து, ''என்றும் உனை மறவாதிருக்க வரம் தரல் வேண்டும்; அமரர் தம்மோடு அமர்ந்து அமிழ்துண்ணும் பேறு தரல் வேண்டும்; அடியவர்க்கு இரங்கும் ஆரமுதே, மணியொளி வீசும் திருமேனி காண இன்று நான் பாக்கியம் செய்தேன்; விண்ணில் வலம் வரும் கோள்களில் ஒன்றாய் நான் திகழ்ந்திடல் வேண்டும்; என்னோ டொன்றிய பெயருடை நாளில் நின்னோடொன்றிய சதுர்த்தியும் பொருந்தி நிற்கும் சிறந்த நாளில் தங்களைப் போற்றி வழிபடும் அன்பர் சங்கடங்கள் யாவும் தீர்த்திடல் வேண்டும்'' என வேண்டினான்.

அன்பர்கள் வேண்டும் அனைத்தையும் அளிக்கும் எம் பெருமான் அங்காரகன் வேண்டிய வரம் யாவும் ஈந்தான். அங்காரகன் கணேச மூர்த்தியைத் தான் பிரத்யக்ஷமாகக் கண்ட அவ்விடத்தில் அழகிய கோயிலொன்று நிர்மாணித்துக் கணேச மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து சிந்தாமணி விநாயகர் என்று பெயரிட்டு அண்டர்களும் வந்து வந்து தொழச் சிறப்புகள் பல செய்தான். ஆகையால் அந்நாள் விநாயகருக்கு மிகவும் மகிழ்ச்சியூட்டும் நாள். எனவே, செவ்வாய்க் கிழமையில் வரும் சதுர்த்தி மிகவும் விசேஷமானது; சங்கடங்களை எல்லாம் போக்கும் வல்லமை உள்ளது. ஆகையால் அத்தினத்தைச் சங்கட ஹர சதுர்த்தி தினம் எனவும் அங்காரக சதுர்த்தி எனவும் கூறுவர்.

இவ்வாறு நான்முகன் பிதிர்த்தேவனுக்குக் கூற, பிதிர்த் தேவன் மீண்டும் நான்முகனை நோக்கி, ''சந்திரன் தோன்றிய பின் அங்காரக சதுர்த்தியை மேற்கொள்ளத் தக்க காரணம் என்ன? அதனை எனக்குச் செவ்வையாய்த் தெளிவிக்க வேண்டும்'' என்றான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சந்திரன் பெற்ற சாபம்

கிருதவீரியனுடைய தந்தையான பிதுர்த்தேவனின் ஆர்வ மிக்க விநயமுள்ள வினாவைக் கேட்ட பிரமதேவன் மனமுவந்து பின்வரும் வரலாற்றைக் கூறினார்.

ஒரு சமயத்தில் நான் சிவபிரானைப் பணிந்து தரிசனம் செய்வதற்காகத் திருக்கயிலைக்குச் சென்றேன். அப்போது சிவபிரான் தன் கணங்கள் சூழ முனிவர்கள் வேதம் முழக்க மற்றைத் தேவர்கள் ஹரஹர முழக்கம் செய்ய உமையொருபால் இருப்ப . விநாயகரும் முருகரும் இருபுறமும் நிற்ப அரிய சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார். நான் சிவபிரானுக்கு மிக அருகில் நின்று கொண்டிருந்தேன். அப்போது அங்குப் பதினான்கு உலகங்களிலும் இடையறாது சஞ்சரித்துக் கொண் டிருக்கும் நாரத மஹாமுனிவர் வந்தார். அவர் கையுறையாக ஒரு மாம்பழத்தைக் கொண்டுவந்திருந்தார். அம்மாம்பழத்தை அந்திவண்ணப் பெருமானிடம் அளித்து இனிய சாமகானம் பாடி இறைவனை மகிழ்வித்தார். எல்லாரும் சாமகானத்தில் மயங்கி நின்றனர். கானம் முடிந்தவுடன் இறைவன் என்னை நோக்கி, "நாரதர் ஒரு பழம் கொண்டுவந்திருக்கிறார். அதனை விநாயகரிடம் தருவதா? முருகனிடம் தருவதா?" எனக் கேட்டார். யானும் சிறிதும் யோசிக்காமல் 'இளைய பிள்ளை யாரிடத்தே கொடுக்கலாம்' என்றேன். அவரும் கொடுத்து விட்டார். உடனே மூத்த பிள்ளையார் என்னைச் சினந்து நோக்கினார். நோக்கிய நோக்கில் நான் விலவிலத்துப் போனேன். உடனே மூலமும் நடுவும் ஈறும் அற்ற எம்பிரானாகிய விநாயக மூர்த்தியின் உபய பாதங்களைப் பணிந்து மன்னிக்குமாறு வேண்டினேன். விநாயகரின் முகம் ப்ரஸன்ன முகமாயிற்று. எவ்வளவு சடுதியில் சினம் பொங்குகிறதோ அவ்வளவு விரைவில் கோபம் மறைந்து அருள் சுரக்கும் ஆனை முகத்தான்தன் பேரருளை எண்ணி மீண்டும் நமஸ்காரம் செய்தேன். அப்போது என் நிலையைக் கண்ட சந்திரன் எள்ளி நகைத்தான். நகை யொலி கேட்ட நாயகன் சந்திரன் சிரித்ததைப் பார்த்துவிட்டார். சிருஷ்டி கர்த்தாவான நான்முகனையும் தன்னையும் சற்றும் மதியாமல் பல்லார் கூடியிருக்கும் பெரிய சபையில் எள்ளி நகையாடிய இந்துவை நோக்கி, "உன் ஒளி முழுவதும் குன்றி உன் கலைகளும் தேய்ந்தழிக; உன்னைக் காண்பவரும் பெருந் துன்பம் உற்றுப் பேரழிவு எய்துக" எனச் சாபமிட்டார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அடுத்த கணமே அவன் அங்கமுழுவதும் தேய்வடைந்து ஒளியிழந்து கலையிழந்து விண்வெளிச் சஞ்சாரமிழந்து மன மொடிந்து மறைவிடமொன்றில் தனித்துக் கிடந்தான். சந்திரனோ அமிர்தவர்ஷி; ஸஸ்யாதிபதி; அவன் சஞ்சாரமொழிந்ததால் அமிர்தப் பெருக்கு அடைபட்டது; பயிர்களின் வளர்ச்சி குன்றியது. அதனால் அமுதம் இன்றி அமரர் அல்லலுற்றனர்; உலகோர் உணவின்றித் துன்பமுற்றனர். 'உண்டி முதற்றே உலகம்' ஆதலின் உலகம் அழிவின் எல்லையை அடைந்துவிட்டது. எனவே, இந்திராதி தேவர்கள் செய்வதறியாது திகைத்தனர். விநாயகருடைய சாபத்தை வேறெவராலும் மாற்ற முடியா தென்பதை நன்குணர்ந்து, தேவர்கள் அனைவரும் கைலையின் முகப்பில் கம்பீரமாக அமர்ந்திருந்த களிற்றுமுகக் கணபதியைச் சரணடைந்தனர்.

எம்பெருமான் இன்முகத்துடன் அவர்களுக்கு அபயம் அளித்து வந்த காரியம் யாதென வினவினார். விண்ணோர் கோமான் விநய பாவம் முகத்தில் விளங்க விநாயகப் பெருமானை நோக்கி, ''பூவுலகில் தானியங்கள் செழித்து வளர்வதும் தேவருலகில் அமுத ஊற்று பெருகுவதும் சந்திரனின் சஞ்சாரத் தாலேயே. அத்தகைய அதிகாரத்தை அவனுக்கு அளித்ததும் தங்கள் திருவருளே; அறியாமையாலோ ஓர் அவதியிற் பிழைத்த மன நெகிழ்வாலோ அருந்தவ முனிவரும் அந்தணரும் தேவரும் வீற்றிருந்த மண்டபத்தில் பரிகசித்துச் சிரித்துவிட்டான்; அவன் செய்தது தவறே எனினும் அவனுக்குத் தாங்கள் அளித்த சாபம் சரியே எனினும் அதன் விளைவு எங்கள் துன்பம்; உலக அழிவு. இதனால் நான்முகன் தொழிலும் நாரணன் தொழிலும் செயல் படவில்லை. ஆகையால் அருள்கூர்ந்து அம்புலிக்கு இட்ட சாபத்தைப் போக்கியருள வேண்டும்'' எனப் பொன்னடி பணிந்து போற்றி நின்றான்.

சந்திரன் சாப நீக்கம்

வேந்தனை முன்னிட்டு வந்த விண்ணோர்கள் கோரிக்கையை விநாயகர் ஏற்றுக்கொண்டு அவர்களை நோக்கி, ''அமுத மயமான அம்புலியின் அகங்காரத்திற்கு ஒரு தண்டனையும் தரல் வேண்டும்; அதன் காரணமாக உலக இயக்கம் முடங்காமலும் இருக்க வேண்டும்; ஆகவே பதினாறு கலைகளைப் பெற்றிருக்கும் சந்திரன் தினந்தோறும் ஒவ்வொரு கலையிழந்து ஒரு கலையாய் அருகியும், பின்னர் நாடோறும் ஒவ்வொரு கலையாய்ப் பெருகிப் பூரணம் ஆகியும் குறைதலும் நிறைதலும் மாறிமாறிப் பெற்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வானவெளியில் ஊர்ந்து வருக. முன்னைக் காட்டிலும் அதிக ஒளியுடன் அவன் விளங்குவான் ஆகுக. ஆயினும் ஆவணி மாதத்துச் சுக்ல பக்ஷத்துச் சதுர்த்தியன்று அவனை ஒருவரும் கண்ணாற் காணாது ஒழிக; அன்று அவனைக் காண்போர் ஓர் எல்லையில்லாத் துன்பமுற்று நிரயத்தில் வாடுவர்'' எனச் சாபநீக்கம் தந்தருளினார்.

சாபநீக்கம் வேண்டிப் பெற்ற வானோரும் வானோர் தலைவனும், மனம் குன்றி மாசடைந்து தியங்கித் தனித்து மறை விடத்தில் வாழும் சந்திரனைத் தேடிக் கண்டு அவனிடம் அவனுக்குச் சாபநீக்கம் பெற்று வந்திருப்பதைக் கூறினர். சந்திரனும் தெளிவுற்று விநாயகக் கடவுளின் பேரருளை எண்ணி விம்மிதம் உற்றான். தேவர் கோனும் சுதாகரனை நோக்கி, ''விநாயகனை விஞ்சிய விறல்மிகு தெய்வம் வேறொன்றில்லை; மும்மூர்த்திகளும் விநாயகனே; வெவ்வேறு காலங்களில் வெவ் வேறு காரணத்தால் விநாயகரே வெவ்வேறு நிலைகளில் காணப்படுகிறார். அப்பரமனைப் பணிந்து வாழ்தலே மிகச் சிறந்த பெருமை தரும். ஆகவே அவரைப் பூசித்து நன்மை களெல்லாம் எய்துக'' என அறிவுரை கூறி அவன் கடைத் தேறுமாறு விநாயகரின் ஏகாக்ஷர மந்திரத்தை உபதேசம் செய்தான். உபதேசம் பெற்ற உடுபதி தேவர்களையும் தேவர் கோனையும் வணங்கி, 'ஒளியிழந்து மாழ்கிநின்ற என்னை மீண்டும் ஒள்ளொளியோனாக்கிய உங்களுக்கு என்ன கைம்மாறு செய்வேன்? உங்களிடம் நன்றி பாராட்டிக் கூற எத்தனை நா இருந்தாலும் போதாது'' எனக் கண்ணீர் மல்கக் கூறினான். வாசவனும் மகிழ்ந்து உம்பர்கள் சூழ அமராவதியை அடைந்தான்.

உடுபதி பெற்ற உயர்வு

விண்ணவர் ஏகியபின் தண்ணவன் மந்தாகினி நதி தீரத்தில் சர்வஸித்தி நகரத்தில் ஓரிடம் தேர்ந்து ஆங்கே அமைதியுடன் அமர்ந்தான். விநாயகக் கடவுளுக்குரிய ஏகாக்ஷர மந்திரத்தை இடைவிடாது இருபத்திரண்டு ஆண்டுகள் மனமொன்றி ஜபித்தான். பசுங்கதிர்ப் பண்ணவன் பண்ணிய தவத்தால் தந்திமுகப் பெருமானும் மகிழ்ந்து வந்து அவன் விழியெதிர் நின்றார். விழியெதிர் வந்த விநாயகரைக் கண்டு விரைந்தெழுந்து அவர் பதம் பணிந்தான் விண்மீன் தலைவன். ''சிறியோர் செய்த சிறு பிழை எல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனேயன்றோ? தாங்களோ யாவர்க்கும் பெரியர். ஆகையால் யான் செய்த சிறு குறும்புகளை ஒரு பொருட்டாகக் கருதாமல் என் குற்றம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொறுத்து ஏற்றம் அருள வேண்டும்'' எனக் கண்கள் நீர்வார மெய்ம்மயிர் பொடிப்ப மீண்டும் அவர்தம் பதம் பணிந்தான். விநாயகப் பெருமானும் உள்ளம் மகிழ்ந்து, "அன்று தேவர்கோன் வேண்ட உனக்குச் சாப விமோசனம் கொடுத்தோம். இன்று உன் தவத்தை மெச்சி உனக்கொரு வரம் கொடுப்போம். துன்ப நீக்கம் வேண்டிய தூயவர்கள் அங்காரக சதுர்த்தி தினத்தில் நீ வெளிப்பட்டுத் தோன்றும் நேரத்தில் என்னையும் உன்னையும் ஒருசேர வணங்கித் துன்பம் துடைத்திடுக. யாவரும் உன்னை வணங்குமாறு உன் கலைகளில் ஒன்று என் தலைமேல் நெற்றியை யடுத்து நிலைபெற்றிருந்திடுக. முன்னிலும் ஒளி பெற்று முன் போல் விண்ணில் சஞ்சரித்திடுக'' என நவின்று மறைந்தார்.

தான் தவம் புரிந்த இடத்தில் சந்திரன் ஒரு சினகரம் செய்தான். அதன் கருவறையில் கணபதியைப் பிரதிஷ்டை செய்தான்; அப்பெருமானுக்குப் பாலசந்திர (நெற்றியில் சந்திர கலையைப் பெற்றிருக்கும்) விநாயகர் என நாமம் செய்து வழி பட்டான். பின்னர் தான் உலகுக்கு ஆற்றவேண்டிய பயிர் வளர்க்கும் பணியையும் அமுது சுரக்கும் பணியையும் மேற் கொண்டு விண்வழிப் படர்ந்தான்.

18. அறுகம் புல்

சந்திரனுக்குச் சாப விமோசனம் கிடைத்த வரலாற்றைக் கேட்ட கிருதவீரியன் தந்தை மனநிறைவு பெற்றான்; பிறகு பிரம்மதேவனை நோக்கி, ''இந்தப் பிரபஞ்சத்தில் அழகும் மணமும் மிக்க எத்தனையோ மலர்கள் உள்ளன; பசுமையும் குளுமையும் மிக்க பச்சிலைகள் பலவுள. ஆயினும் ஆனை முகத்து அண்ணலுக்கு அறுகின்மேல் அதிகப் பிரியம் உண்டாகி யிருப்பதைக் காண்கிறோம். அறுகில் அத்தகைய விசேஷம் அல்லது சிறப்பு என்ன இருக்கிறது? அதனை எனக்கு விளக்கிக் கூறி அருள வேண்டும்'' என வேண்டினான். நான்முகனாரும் பின்வரும் வரலாற்றைக் கூறத் தொடங்கினார்.

காளையும் கழுதையும் கன்னிப் பெண்ணும்

சிறந்த நகரங்கள் ஏழனுள் ஒன்றான அவந்தி நகரத்தை அறிவும் ஒழுக்கமும் அருளும் கொண்ட சுலபன் என்றோர் அரசன் ஆண்டுவந்தான். அவன் தன் நாட்டு மக்களை நன்னெறியிற்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செலுத்தி அறம் தவறாது ஆட்சி புரிந்து வந்தான். அவன் மனைவி கலைவாணிக்கு ஈடானவள். அழகும் அறிவும் தவமும் நிறைந்தவள். அரச காரியங்கள் யாவினும் அன்புக் கணவனுக்குக் கைகொடுத்து நிற்பவள். அவள் பெயர் சுபத்ரை. ஏழை எளியவர்களிடத்தில் இருவருமே எப்போதும் கருணைகொண்டு அவர்கள் துன்பத்தை விரைவிற் போக்குவர். அந்தணாளர்கள் முனிவர்கள் ஆகியவர்களிடம் அன்பும் மரியாதையும் கொண்டு போற்றும் தன்மை உடையவர்கள். நாட்டு மக்களால் மனதாரப் போற்றப்பட்ட அரச தம்பதியர் அவர்கள்.

ஒருநாள் அரச சபைக்கு அந்தணன் ஒருவன் வந்தான். அவன் பெயர் மதுசூதனன்; அவன் கந்தையுடுத்தியிருந்தான்; மெலிந்து குச்சிபோல் காணப்பட்டான். அரசனிடம் தன் வறுமை தீரப் பொருள்பெற்றுச் செல்ல எண்ணி வந்தான். அவனை அரச சபையிற் கண்டவுடன் அவன் தோற்றம் அரசனுக்குச் சிரிப்பை உண்டுபண்ணியது. விதிவசத்தால் சிரித்து விட்டான். அதைக் கண்ட அந்தணன் பெருஞ்சினம் கொண்டான். 'ஆறுவது சினம்' என்பதையும் மறந்தான்; சினம் ஓர் இருதலை அம்பு என்பதையும் அது எய்தவனிடமே மீண்டு பாயும் என்பதையும் மறந்தான். ஈசனிடத்தில் எல்லையற்ற பக்தி கொண்டவனாய் இருந்தும் வேத நெறிவழி நடப்பவனாய் இருந்தும் ஒரு கணத்தில் தோன்றிய சினத்தால் தன் நிலை மறந்து, "இலம்பாடு அலைப்ப இரந்து வந்த ஏழையேனைக் கண்டு இரக்கம் ஏதுமின்றிப் பண்பாடழியப் பல்லைக் காட்டிப் பரிகாசச் சிரிப்புச் செய்து காளைபோல் நிற்கும் காவல, நீயொரு காளையேயாகித் துன்புற்று உழல்வாயாக" எனச் சபித்தான். அதனைக் கேட்ட காவலன் துணுக்குற்றான். அவன் மனைவி சுபத்திரை வெகுண்டாள். அவ்வந்தணனை நோக்கி, "குற்றம் ஏதும் செய்யாத கோமகனை, குணமென்னும் குன்றின் மேல் ஒளிவீசும் நந்தா விளக்கை, மக்களின் நல்வாழ்வே தன்வாழ்வு என நிதமும் அறவழி போற்றி ஆட்சி செய்யும் அருளரசனை அறிவின்மையாற் சபித்தாய்; கழுதை போலும் அறிவறை போகிய அந்தணனே, நீ ஒரு கழுதையாகி வெம் பாரம் சுமந்து அடிமைப்பட்டு அல்லற்படுவாயாக" எனச் சபித்து விட்டாள். சினம் கிஞ்சித்தும் குறையாத அவ்வந்தணனும் மேலும் வெகுண்டு, "குற்றம் உங்கள்பால் இருக்க என்னிடம் குற்றம் கண்டு கொடுஞ்சாபம் கொடுத்த பேதாய், நீ ஓர் இழிகுலப் பெண்ணாகி ஏழ்மையாய் வாடி அவலமுற்று ஒழிக" எனச் சபித்தான். வேதம் ஓதிய வாயான் கொடுத்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சாபமும் கற்புக்கரசி கண்ணீர்விட்டுக் கொடுத்த சாபமும் உடனேயே தத்தம் விளைவுகளைத் தந்துவிட்டன.

அறுகம்புல்லால் அர்ச்சனை

கடல் சூழ் உலகை ஆண்டு வந்த காவலன் காளையாயினான். மன்னுயிர்த் துன்பம் கண்டு மனம் நெகிழாத உழவன் ஒருவன் அக்காளையைத் தனதாக்கிக் கொட்டிலில் அடைத்தான். நாள் முழுவதும் நன்கு வேலை வாங்கினான். ஓய்வென்பதே அறியாது உழன்றுகொண்டிருந்தது அக்காளை. வறுமையைப் போக்கி வளமையைப் பெருக்கிக் கொள்ள வந்த விப்பிரன் கழுதை ஆயினான். அக்கழுதையும் அழுக்குத் துணிகளை அணியணியாய் எடுத்துச் சென்று ஆற்றில் தோய்த்து அழுக்கையும் கறையையும் போக்கும் வண்ணான் ஒருவனிடம் அகப்பட்டு அல்லற்பட்டுக் கொண்டிருந்தது. அனிச்ச மலர்படினும் நெருஞ்சி முள்ளெனத் துடிக்கும் மென்மைமிகு பாதங்களை உடைய அரசியும் அனாதையாய் இழிகுலமகளாய் கண்டோர் யாவரும் சீ சீ என இகழ ஒருவேளை உணவும் அரிதாய் 'நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு' என்னுமாப்போலே அவல வாழ்வு வாழ்ந்தாள். தினம் புல் அறுத்துக் கொண்டுபோய் விற்றுவரும் காசால் உயிர்வாழ்க்கை அமைந்தது.

ஒருநாள் அந்தக் காளை பகல் முழுவதும் கடுமையாக உழைத்தது. மாலையில் அந்த உழவன் அதனை அவிழ்த்து ஆற்றங்கரையில் மேயவிட்டான். அன்று கழுதைக்கும் அபரிமிதமான வேலை. பலமுறை நகரத்திற்கும் ஆற்றங்கரைக்கும் மூட்டைகளைத் தூக்கிச்செல்ல வேண்டியிருந்தது. அன்றே அவ்விழி குலப் பெண்ணுக்கும் உணவேதும் கிடைக்காமல் வருந்தினாள். தன்னால் முடிந்தவரை ஆற்றங்கரையில் புல்லறுத்துக் கட்டினாள். மாலை நெருங்கியது. அந்தக் காளையும் மிகவும் களைத்துப் பசியால் வாடியது; கழுதையும் அவ்வாறே; அந்நிலையில் திடீரென்று வானம் கருத்தது; சூறாவளி வீசத் தொடங்கியது; காளையும் கழுதையும் அப்பெண்ணும் மழைக் கொதுங்க இடந்தேடி அங்குமிங்கும் ஓடினார்கள். ஆற்றங் கரையில் ஓர் அழகிய விநாயகர் கோயில் அமைந்திருந்தது. அக்கோயிலின் பிராகாரத்தின் ஒரு பக்கம் அப்பெண் தன் புல் கட்டை வைத்துவிட்டு மழைக்கொதுங்கினாள். அந்தக் காளையும் அவ்விடமே தேடி வந்தது; அக்கழுதையும் அவ்விடமே வந்தது. மூவருக்கும் பசி. பசிய புல்கட்டைக் கண்ட காளை அதனை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இழுத்து உருவித் தின்னத் தொடங்கியது. இதனைக் கண்ட கழுதையும் மற்றொரு புறத்தில் புல்லைத் தின்னத் தொடங்கியது. அப்பெண்ணுக்கோ அப்புற்கட்டை விற்றால் தான் சோறு. ஆகையால் அவள் சீறி அக்காளையை ஒரு குச்சியால் அடித்தாள். காளை விரைந்து பின்வாங்கிக் கழுதைமேல் மோதியது. நகர்ந்தோட இடமின்மையால் 'அம்மா' என அலறியது. காளை மோதியவுடன் கனன்ற கழுதை அதனைத் தன் பின்னங்கால்களால் பலங்கொண்ட மட்டும் உதைத்தது. காளை திரும்பி அப்பெண் நின்ற பக்கமாக ஓடி வந்தது. அப் பெண் அஞ்சி பிராகாரத்தைச் சுற்றி ஓடினாள். அந்தக் காளையும் ஓடியது; அந்தக் கழுதையும் ஓடியது. ஒரு முறை சுற்றி வந்த வுடன் மீண்டும் அந்தக் காளை ஒருவாய் புல்லை உருவிக் கொண்டது. கழுதையும் அவ்வாறே செய்தது. அன்று விநாயக சதுர்த்தி. கோயிலினுள் அருமறை தெரிந்த அந்தணர்களும் மறைவழி வாழும் முனிவர்களும் விநாயக மூர்த்திக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து கொண்டிருந்தனர். வெளிப் பிராகாரத்தில் இவ்வாறான குழப்பமும் கூச்சலும் சத்தமும் அவர்களுடைய வழிபாட்டுக்கு இடையூறாய் இருந்தன. ஆகையால் அவர்கள் ஓர் ஏவலனை அனுப்பி அவைகளை விரட்டச் சொன்னார்கள். ஏவலன் விரட்ட விலங்கு இரண்டும் வெளிப்போந்தன. அப் பெண்ணே அப்பிராகாரத்தில் ஓர் மூலையில் ஒடுங்கி நின்றாள். வெளியில் சூறைக் காற்றுச் சுழித்து வீசியது. போக்கிடமற்ற அவ்விரு விலங்குகளும் மீண்டும் அப்பிராகாரத்துக்கே வந்தன. இப்போது அவை ஏதும் சத்தம் செய்யாமல் அமைதியாக பிராகாரத்தைச் சுற்றி வந்தன. மீண்டும் புல்கட்டிலிருந்து புல்லை உருவின. அப்பெண்ணோ மயங்கிக் கிடந்தாள்; பசி மயக்கம்; என் செய்வாள் பேதை! அப்போது சூறைக்காற்று மிகவும் வலுத்தது. புல்கட்டு பறந்தது; அதிலிருந்த சில அறுகம் புற்கள் ஆனைமுகத்து அண்ணலின் திருமுடிமீது சிதறியது. அந்தக் காளையின் வாயிலிருந்து ஓர் அறுகம்புல் பறந்தது. அதுவும் உள்நோக்கிச் சென்று களிற்றுமுகக் கடவுளின் துதிக்கை மேல் தங்கியது. அந்தக் கழுதையின் வாயினின்றும் சிதறிய ஓர் அறுகம்புல் தந்திமுகக் கணபதியின் தாளின் மேல் வீழ்ந்தது.

பூசனை செய்துகொண்டிருந்த பெரியோர்கள் இதனைக் கண்டனர். கண்ட இடங்களில் முளைத்துக் காலால் மிதிபட்ட அறுகம்புல், மாடுதின்று மிஞ்சிநின்ற அறுகம்புல், கழுதை கடித்துத் தேறிய அறுகம்புல் ஆதியும் அந்தமும் அற்ற எம் பெருமான்மேல் வந்து வீழ்ந்து எச்சிற்படுத்தி அசுத்தமாக்கியதை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எண்ணி வருந்தினர். அதனால் மீண்டும் விநாயகருருவைச் சுத்தம் செய்து புனித நீராட்டிப் புண்யாஹவாசனம் செய்து பூசனை முடித்தனர். பூசை முடிந்ததற்பின் அவர்கள் கோயிலுக்கு வெளியே வந்தனர். அங்கு வெளிப் பிராகாரத்தில் காளையும் கழுதையும் கன்னிப்பெண்ணும் பசியாலும் களைப்பாலும் பரிதவித்து .சூறைக்காற்றால் தாக்கப்பட்டு உயிர்போன நிலையிற் கிடந்தனர். புயலாலும் மழையாலும் இருக்க இடமின்றிப் பிராகாரத்தை அவர்கள் சுற்றிச்சுற்றி வந்ததைப் பிரதஷிணம் செய்ததாகவும் அவர்கள் மெய்பட்டுக் காற்றில் பறந்து சென்று தலையிலும் தும்பிக்கையிலும் தாளிலும் அறுகு வீழ்ந்ததை அறுகால் செய்த அர்ச்சனையாகவும் அறுகெச்சில் தீர்க்க அந்தணாளர்கள் செய்த திருமுழுக்கை அவர்களே செய்த அபிஷேக மாகவும் கொண்ட விநாயகர் அம்மூவரையும் தம் உலகுக்கு அழைத்து வருமாறு தம் கணங்களுக்குக் கட்டளையிட்டார். அவ்வாறே தேவ கணங்கள் அம்மூவருக்கும் தனித்தனியே விமானங்களைக் கொணர்ந்து அவற்றில் அவர்களை ஏற்றிக் கொண்டு புறப்படத் தயாராயினர். அதனைக் கண்ட அருந்தவ முனிவர்களும் அருமறை போற்றிய அந்தணாளர்களும் பேரருள்மிக்க பெரியோர்களும் அத்தேவ கணத்தாரை நோக்கி, "அறிவற்ற விலங்குகள்ாகிய காளையும் கழுதையும் கணேசப் பெருமானிடம் பக்தி கொண்டவையல்ல; ஏன்? பெருமானை வணங்கவும் இல்லை; அப்பெண்ணோ வயிற்றுக் கவலை ஒன்றே கொண்டவள். பக்தி மேலீட்டால் பரமனைப் பாடிப் போற்றியவள் அல்லள். அங்ஙனமிருக்க அம்மூவருக்கும் கணேசருலகு கிடைக்கும் பாக்கியம் ஏற்பட்டதெவ்வாறு?" என வினவினார்.

அத்தேவ கணத்தாரும் அவர்களை நோக்கி, "இழிகுலப் பெண்ணாயினும் பகுத்தறிவற்ற விலங்காயினும் விநாயக சதுர்த்தியன்று விநாயகர் கோயிலை பிரதக்ஷிணம் செய்தார்கள்; அறிந்தோ அறியாமலோ செய்த பிரதக்ஷிணத்தாலும் அவர்கள் மெய்பட்ட அறுகம்புல் அற்புதன் உடலத்தை அலங்கரித்தாலும் அவர்கள் தேவருடல் பெற்றுத் தேஜோ மயமாகி உம்பர் விமான மேறி கணேசருலகை அடைகிறார்கள். அறுகம்புல் அர்ச்சனையே அவர்களுக்கு அத்தகைய பெருமையை அளிக்கிறது" என்று உரைத்தார்கள்.

உடனே அவ்வந்தணர்களும் முனிவர்களும், "அருகம்புல் அருச்சனைக்கு அத்தனை மகத்துவம் உள்ளதை இதுவரை நாங்கள் உணரவே இல்லையே. அறுகம்புல் எவ்வாறு விநாயகருக்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உகந்த அருச்சனைப் பொருளாயிற்று? அதனை விளக்கமாக எங்களுக்கு எடுத்தியம்ப வேண்டும்'' என வேண்டினர். அத் தேவ கணத்தினரும் அறுகம்புல்லின் அருமை பெருமைகளை அறியத் தொடங்கினர். அவர்கள் கூறிய வரலாறுகளை நான்முகன் பிதுர்த்தேவனுக்குக் கூறினர்.

அனலாசுரன்

தாபரம் என்றோர் அழகிய சிற்றூர் முன்னொரு காலத்தில் புகழ்பெற்றிருந்தது. அந்நகரை அடுத்துச் சலசலத்தோடும் தெள்ளிய ஓடைக் கரையில் கவுண்டின்ய முனிவர் எளிமையான ஆச்ரமம் ஒன்று அமைத்துக்கொண்டு தம் மனைவியுடன் தவம் புரிந்து கொண்டிருந்தார். அவர் தினந்தோறும் பதினாயிரம் அறுகம்புல் கொய்து கொண்டு வந்து விநாயக மூர்த்திக்கு அருச்சனை புரிந்து வந்தார். கொஞ்சமும் சோம்பலின்றி யோகம் புரிவது போன்ற சிரத்தையுடன் தினமும் தன் கணவர் செய்துவரும் அறுகு அர்ச்சனையைக் கண்குளிரக் கண்டு உளமகிழ்ந்த அவருடைய மனைவி ஒருநாள் அவரை நோக்கி, ''ஓடைக் கரையில் எத்தனையோ மணமிக்க மலர்கள் இருக்க வாசனை மிக்க புத்தம்புதிய பத்திரங்கள் இருக்க அவற்றையெல்லாம் விட்டு விட்டு மனிதர்களின் காலடியிலும் விலங்குகளின் காலடியிலும் மிதிபட்டு இழிந்த நிலையில் தரைமீது படர்ந் திருக்கும் அறுகைக் கொண்டு தாங்கள் விநாயக பூஜையைச் செய்வது யாது காரணம் பற்றி என்பதை எனக்கு விளக்கமாகத் தெரிவிக்க வேண்டும்'' என வேண்டி நின்றாள். தினமும் அறுகு எடுத்துக் கொண்டு வருதல் முதல் பூஜைக்கு வேண்டிய பல முயற்சிகளிலும் பங்கு கொண்டு பணிபுரிந்து வந்த தன் மனைவி இவ்வாறு கேட்டதும் அம்முனிவர் அம்மங்கையை நோக்கி, ''என் உயிருக்கு உயிராய் விளங்கும் தேவியே, அறுகால் அர்ச்சனை செய்வது ஓர் இரகசியம். இந்நாள் உலகத்தோர் இதனை அறிந்த தில்லை. இன்று உன் மூலம் இவ்வுலகத்தவர் இவ்வரிய இரகசியத்தை அறிந்து பேறு பெறல் வேண்டும் என்ற கணேச மூர்த்தியின் கருணையே உன்னை இன்று இவ்வாறு கேட்கத் தூண்டியிருக்க வேண்டும். அதனைச் சொல்கிறேன்; சிரத்தையுடன் கேட்பாயாக'' எனக் கூறிப் பின்வரும் வரலாற்றை விளம்பினார்.

ஆயிரக் கணக்கான கல்பங்களுக்கு முன்னால் ஒரு சமயம் ஒரு திருவிழா நாளில் யமதருமன் திருவோலக்கத்தில் அமர்ந் திருந்தான். சபையில் சித்திரகுப்தன் முதலான ஞானிகளும் பல தேவர்களும் முனிவர்களும் அமர்ந்திருந்தார்கள். அப்போது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சபையில் தேவ மாதர்கள் நடனமாடினர். அவ்வாறு நடனம் ஆடியவர்களில் திலோத்தமையும் ஒருத்தி. அவள் அழகைப் புகழ்ந்து எடுத்துச் சொல்லுதல் மிகவும் அரிய செயல். ஒரு சமயம் பிரமதேவன் மிகச் சிறந்த அழகுள்ள ஒரு பெண்ணைப் படைக்க எண்ணினான். அதற்காக உலகத்தில் உள்ள ஒவ்வொரு அழகான பொருளிலிருந்தும் ஓர் எள்ளளவு அழகுத் தன்மை யைப் பிரித்தெடுத்து ஒன்றாக்கித் திலோத்தமையை உருவாக் கினான். அத்தகைய பேரழகு வாய்ந்த திலோத்தமை நடனமாடிக் கொண்டிருந்தபோது வைத்தவிழி வாங்காமல் அவளையே நோக்கிக் கொண்டிருந்தான் யமதருமன். ஆட்ட வேகம் உச்ச கட்டத்தை அடைந்தபோது காற்றுக் கொஞ்சம் வீசி அடித்தது. திலோத்தமையின் மேலாடை பறந்து நழுவி விட்டது. அவள் மேலழகை முற்ற நோக்கிய யமதருமன் பெருவிரகம் கொண்டான். திலோத்தமை நாணமுற்றுச் சபையைவிட்டு அகன்றாள். விரக தாபத்தோடு அச்சபையில் அமரமாட்டாத யமன் விருட் டென்று எழுந்து தன் அந்தப்புர முன்வாயிலை அடைந்த போதே அவன் வீரியம் வெளிப்பட்டது. வெளிப்பட்ட மாத் திரத்தில் அதனின்றும் ஓர் அசுரன் தோன்றினான். அவன் நெடி துயர்ந்த வடிவமும் நெருப்பெனப் பொங்கும் செவ்வுருவமும் தீக்கதிர்களென நீண்டு விளங்கும் பங்கியும் மலைகளை எடுத்துப் பந்தாடும் வலிமையும் யானைகளைச் சிற்றுண்டி எனக் கருதும் பசியும் கொடுங்கை எனத் தோன்றும் கோரப் பற்களும் குகையென விளங்கும் வாயும் இடியும் இடிந்து மடங்கும் குரலோசையும் கொண்டிருந்தான். தோன்றிய பொழுதே கொடுங்கோபம் கொப்பளிக்கும் முகம் காட்டி யமனை நோக்கினான். காலனும் அந்நோக்கை எதிர்நோக்க இயலாது கதிகலங்கினான்; அச்சம் மிகுதலால் அந்தப்புரக் கதவைச் சாத்தித் தாளிட்டான். 'மலை முழுங்கி மஹாதேவனுக்குக் கதவு ஒரு அப்பளம்' என்பதுபோல் கோபக் கனல் வீசிக் கொடுமை செய்ய முனைந்திருக்கும் அவ்வசுரனுக்குக் கதவை உடைத்து உள்ளே புகுதல் ஓர் அரிய செயலன்று. ஆயினும் தான் தோன்றக் காரணமாயிருந்த ஜனகன் என்பதால் கொஞ்சம் தயங்கி யமனுக்கு இடையூறு ஏதும் செய்யாமல் திரும்பினான். வெகுதூரம் கனல் வீசித் தீம்பிழம்பாய் நிற்கும் அவ்வசுரன் அனலாசுரன் எனப்பட்டான். யமனுலகினின்றும் புறப்பட்ட அவன் முதலில் பூவுலகை அடைந்தான். எதிரில் கண்ட பொருள்களை எல்லாம் அழித்தான்; உயிர்களை எல்லாம் உண்டான். அங்கிருந்து தாவி வானுலகு நோக்கிச் சென்றான். வானவர்களை அழித்துப் புசிக்க ஆர்வம் கொண்டான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவன் வருகையைக் கேள்வியுற்ற வானவர்கள் அஞ்சி நடுங்கினார்கள்; தம்மால் அவனை வெல்ல முடியாதென்பதை உணர்ந்து அமராவதியை நீத்து வைகுண்டத்தை அடைந்தார்கள்.

அனலாசுரன் அழிந்தான்

அங்கே நாராயண மூர்த்தியைச் சரணாகதியடைந்து அனலாசுரனிடமிருந்து தப்ப அருள்புரிய வேண்டினார்கள். நாராயண மூர்த்தி அனலாசுரனின் தோற்றத்தையும் வலிமையையும் உணர்ந்தார். அவனை வென்றழித்தல் தம்மால் இயலாத காரியம் எனக் கண்டுகொண்டார். ஆகவே அனைவரையும் நோக்கி 'ஆதிப்பரம்பொருளாய், அடியவற்கெளியராய், அதர்மத்தை அழித்து தர்மத்தை ரக்ஷிப்பவராய் விளங்கும் விநாயகப் பெருமானை அல்லால் வேறொருவராலும் அவனை அழித்தல் இயலாத செயல். ஆகையால் நாம் எல்லாரும் இணைந்து விநாயகப் பெருமானின் பாதமிரண்டையும் போற்றிச் சரண்புக வேண்டும்' எனக் கூறினார். யாவரும் அவ்வாறே விநாயகரைத் துதித்தனர். வேண்டிய அடியார்கட்கு வேண்டியவாறே அருள்புரியும் ஆனைமுகத்து விநாயகர் அங்கே ஒரு மாணி உருவாய்த் தோன்றினார். மனம் கவரும் மாணியின் மாண்புமிகு தோற்றத்தைக் கண்டவுடனே விநாயகப் பெருமானே அவ்வுருவில் வந்துள்ளார் என்பதுணர்ந்த தேவர்களும் நாராயண மூர்த்தியும் அவரிரு பாதம் பணிந்து அனலாசுரன் வலிமையையும் கொடுமையையும் கூறினர். அவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும் போதே வானிற் பெருத்த இடிக்குரலொன்று, "அண்டமெலாம் தேடியும் அகப்படாமல் ஒளிந்துகொண்ட தேவர்களே, ஒரு சேர இப்போது என்னிடம் அகப்பட்டீர்கள். அனைவரையும் ஒட்டுமொத்தமாக உண்பேன் இப்போதே" என்று கர்ஜித்தது. ஆம்! அது அனலாசுரனின் குரல்தான். அண்டர்கள் யாவரும் நடுங்கினர்; முனிவர்கள் மயங்கினர்; விநாயகப் பெருமானின் பின்னே சென்று அஞ்சி நின்றனர். அவர்களுக்கு அபயமளித்த எம்பிரான் இனிய பேருருக் கொண்டு அவ்வனலாசுரன் முன்னே நின்றார். தூரத்தில் அவன் நின்றபோதே வெப்பக் கதிர் வீசியது. யாவரும் அவ்வெப்பத்தைத் தாங்க முடியாமல் தத்தளித்தனர். அவன் இன்னும் கொஞ்சம் நெருங்கி வந்தால் அனைவரும் பஸ்மமாவது நிச்சயம் என எண்ணினர்.

அப்போது களிற்றுமுகக் கணபதி தம் நீண்ட துதிக்கையை நீட்டி ஆரவாரம் செய்துகொண்டு வந்த அனலாசுரனை வளைத்துப் பிடித்து அரைநொடியில் விழுங்கிவிட்டார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஐயனின் வியத்தகு செயலைக் கண்ட அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். அணுகவும் முடியாத அனலாசுரனை ஐயன் வயிற்றில் அடக்கினார். அண்டமெலாம் நடுங்க வந்த அனலா சுரன் தந்திமுகன் வயிற்றில் அடங்கினான். தேவரும் முனிவரும் விநாயகர் அடிபோற்றிப் பணிந்தனர். அனலாசுரன் அழிந்தான் என்று மகிழ்ந்தனர்; ஆனால் ஒன்றை மறந்தனர்.

வயிறு குளிர்ந்தது

அண்டமெலாம் தானேயாய் அணுவெலாம் தானேயாய் சராசரப் பொருள்கள் அனைத்தும் தானேயாய் தன்னையன்றி வேறொன்றில்லையாய் நிற்கும் பராபரப்பொருள் கணேச மூர்த்தி என்பதை மறந்தனர். அக்கணேச மூர்த்தியின் அகட்டினுள் அனலாசுரன் நுழைந்தவுடன் அவர் வயிறு முழுவதும் கொதித்தது. அவ்வாறே எல்லாத் தேவர்களின் வயிறுகளிலும் வெப்பம் எழுந்து வாட்டியது. முனிவர்களும் வயிற்றினுள் வெப்பம் தாங்காமல் வேதனை உற்றனர். உலகத்தில் உயிரினங்கள் யாவும் வயிற்றுள் தோன்றிய வெப்ப மிகுதியால் வருந்தினர். ஏது செய்தால் இவ்வெப்பம் தீருமென்று இமையவர்கள் ஆய்ந்தனர். இந்திரன் சந்திரனை நோக்கி விநாயகக் கடவுளின் முடிமீது அமிர்தத்தை வர்ஷிக்கும்படி ஆணையிட்டான். சந்திரனும் அமிர்தத்தை வர்ஷித்தான். வெப்பம் குறையவில்லை. கணேசப் பெருமானின் வயிற்று வெப்பம் தணிந்தால்தான் அண்ட சரா சரங்களிலும் வாழும் உயிர்களின் வயிற்று வெப்பம் தணியும் என்பதை யாவரும் உணர்ந்தனர். கிரியா சக்தியும் ஞான சக்தியும் விநாயகப் பெருமானின் இருபாலும் நின்று இதம் செய்ய முயன்றனர். திருமாலோ தண்ணென்ற தாமரைப் பூவால் தந்தி முகன் உடல் முழுவதையும் தடவிக் கொடுத்தார். குளிர்ச்சி மிக்க உடல் வாய்ந்த அரவப் பணிகளை எல்லாம் அரனார் ஐயன்மீது அணிவித்தார். எத்தைச் செய்தும் வெப்பம் நீங்க வில்லை. கூடியிருந்த முனிவர்கள் வெப்பம் நீங்க வழி நாடினர். நெடிய ஆய்வுக்குப்பின் ஒவ்வொரு முனிவரும் இருபத்தொரு அறுகம்புல் எடுத்து வந்து ஐயனின் உச்சிமுதல் உள்ளங்கால் வரை போர்த்தனர். அங்கு வந்து கூடியிருந்த முனிவரர் எண்பதாயிரம் பேர். அத்தனை பேரும் அறுகம்புல்லால் எம் பெருமான் திருவுருவை அணிசெய்து மறைத்தனர். அறுகம் புல்லின் குளிர்ச்சி அனலாசுரனின் வெப்பத்தை அடக்கியது. ஐயன் அகடு குளிர்ந்தது. அனைத்து உயிர்களின் வயிறும் குளிர்ந்தது. அப்போது களிற்றுமுகக் கணபதி யாவரையும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முகமலர்ந்து நோக்கி, "அன்பர்கள் சொரிந்த அறுகம்புல்லே அதிதமான வெப்பத்தை அடக்கியது. அதுபோல் கழிதற்கரிய பாவங்களும் அறுகம்புல் அர்ச்சனையால் கழியும். எத்தகைய மணமலரிட்டு எம்மை அருச்சித்தாலும் அறுகம்புல் இன்றிச் செய்யும் அர்ச்சனை வீணேயாகும். ஏராளமான அறுகம்புல் எடுத்துவந்து வழிபாடு செய்ய இயலாதவர் இருபத்தோரு அறுகம்புல்லாவது எடுத்து வந்து அர்ச்சனை புரிய வேண்டும். அறுகுக்கு நிகரான அலரோ தளிரோ இல்லை" எனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

விநாயகப் பெருமான் நின்ற அவ்விடத்தில் தேவர்கள் ஒரு கோயில் எழுப்பினர். ஐயனின் திருவுருவைக் கருவறையில் பிரதிட்டை செய்து காலானலப் பிரசமனர் என்று நாமமிட்டு அனுதினமும் வழிபாடு செய்து வரலாயினர். அறுகம்புல் அர்ச்சனை அளவிலாப் பயன்தரும் என்பதை அன்றுதான் அமரரும் முனிவரும் உணர்ந்தனர்.

ஜனகனும் நாரதரும்

மிதிலை நன்னகரம் வளமான நகரம். நீர்வளம் நிறைந்தது, நிலவளம் சிறந்தது; உணவுப் பொருட்குத் தட்டு இல்லை. நவமணிகளும் கொழிக்கும் நகரம். காடுபடு செல்வங்கள் கணக்கில்லாமல் கிடைக்கும் நகரம். அந்நகரை அறிவிலும் கொடையிலும் சிறந்த ஜனகன் என்பான் ஆண்டுவந்தான். அவன் வேதங்கள் உபநிஷத்துகள் ஆகியவற்றில் மிகத் தேர்ச்சி உடையவன். வேதாந்த தத்துவ ஞானி. ஆனால் தானும் பிரம்மமும் ஒன்றே எனவும் தன்னையல்லாது பிரம்மம் என்ற ஒன்று தனித்தில்லை எனவும் தவறான கருத்துக் கொண்டிருந்தான். அத்தவறான கருத்தை மாற்றி ஜனக ராஜனுக்கு உண்மையை உணர்த்த வேண்டும் என்று எண்ணிய நாரத மஹாமுனிவர் ஒருநாள் ஜனக மன்னனுடைய சபையை வந்தடைந்தார். தானே மேலான பரம்பொருள் என்ற எண்ணத்தால் ஜனகன் நாரதரை எதிர்கொண்டழையாமலும் பணிந்து வழிபடாமலும் அலட்சியமாக அமர்ந்திருந்தான். அவனுடைய அலட்சியத்தையும் அகந்தையையும் கண்டு நாரதர் சினம் கொள்ளவில்லை. அவனுடைய தவறான கருத்தை மாற்றித் திருத்துவதற்காக வந்தவரல்லவா? ஆகையால் அவனை நோக்கி, "எல்லாம் வல்ல இறைவன் அருளால் எவ்வகைச் செல்வமும் எல்லாச் சிறப்பும் எய்தி வாழ்க" என வாழ்த்தினார். அவ்வாழ்த்துரையைக் கேட்ட மன்னன் மாமுனியை நோக்கி, "என்னையல்லால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேறுமொரு தனித்தலைமைத் தெய்வமுண்டோ? அல்லது தனித்தலைமைத் தெய்வமென்ற ஒன்று என்னின் வேறாகி நிற்பதுண்டோ? சிறப்பான பொருட்களை எய்த வைப்பதும் எய்துவதும் எய்தியதை அனுபவிப்பதும் யானே அல்லவா? என்னையல்லால் என்னிலிருந்து பிரிந்து நிற்கும் பரம்பொருள் வேறில்லை. ஆகையால் 'இறைவன் திருவருளால்' என என்னை வாழ்த்தியது பொருளற்றது; பொருந்தாதது'' என வாதிட்டான். நாரதர் கொஞ்சமும் கோபம் கொள்ளாமல் மன்னனை நோக்கி, ''மன்னா, சாதாரண விலங்குகளைக் காட்டிலும் ஒரு சாதாரண மனிதன் உயர்ந்தவன்; ஒரு சாதாரண மனிதனைக் காட்டிலும் ஒரு கற்றறிந்த மனிதன் உயர்ந்தவன்; ஒரு கற்றறிந்த மனிதனுக்கு ஒரு துறையே நன்கு தெரியும். பல துறைகள் தெரிந்த மனிதன் அவனைக் காட்டிலும் உயர்ந்தவன் அல்லவா? அது போலவே யாவும் உணர்ந்தவன் அவனைவிடப் பெரியவன்; அப்படியாயின் யாதும் உணர்ந்தவனாய் யாவையும் ஆகி எங்கும் நிற்கும் ஒரு பொருள் இருக்கத்தானே வேண்டும். அங்ஙனமாயின் ஒன்றை விட ஒன்று உயர்ந்ததான பொருட்கள் முடிவின்றி முறைப்பட்டு அடுக்கடுக்காய் அமையுமல்லவா? அவ்வாறு நுணுகிச் செல்லும் அடுக்கில் ஒவ்வொரு நிலையிலும் தானேயாய் நிற்கும் தனிப்பொருள் தொடர்ச்சியாய் இருக்க வேண்டுமே. அத்தொடர்ச்சியான பொருளே யாவற்றுக்கும் மேலான பொருளாகும்; இறைமையுடைய பொருளாகும்; தெய்வமாகும்; உன்னையும் என்னையும் விட மேலான ப்ரம்மம் ஆகும். இதனை உனக்கு நான் நிரூபித்துக் காட்டுகிறேன்'' எனக் கூறி விடைபெற்றுச் சென்றார்.

மிதிலை நகரத்தினின்றும் புறப்பட்ட நாரதர் கவுண்டின்ய முனிவர் வாழும் கானகத்தை அடைந்தார். கவுண்டின்ய முனிவர் கணேச மூர்த்தியை எப்போதும் வழிபட்டு வரும் உத்தம பக்தர். அவருக்குக் கணேசர் ப்ரத்யக்ஷம். அத்தகைய பெரியாரின் ஆசிரமம் நோக்கிச் சென்றார் நாரதர். நாரதர் வருவதை தூரத்திலிருந்தே கண்ட கவுண்டின்ய முனிவர் எதிர் கொண்டு ஓடி வந்தார்; அன்புடன் வரவேற்றுத் தம் ஆசிரமத்துள் அழைத்துச் சென்றார். அன்புடன் அடிசில் படைத்து உண்ணச் செய்தார். பிறகு அவர்கள் வேதாந்த பரமான பல சத்விஷயங் களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது அனு தினமும் கவுண்டின்யர் வழிபட்டுவரும் ஆனைமுகத்தான்தன் அருவுருவைக் கண்டார்; கண்கள் பனிப்ப, உடலெல்லாம் புளகாங்கிதம் அடைய ஐயன் அடி வீழ்ந்து பணிந்தார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

யாழெடுத்து மீட்டி, தன் குரலை அதனோடு இசைவித்து தேவ கானத்தால் தந்திமுகன் பெருமையெல்லாம் திரட்டித் திகட்டாமல் புகழ்ந்து பாடிப் பரவினார்; பாட்டுக்கு உருகிய பரம்பொருள் வேட்டது யாதென வினவினார். நாரதரும் தன்னையல்லால் சிறந்த பொருளில்லை எனத் தவறாக எண்ணும் மன்னவன் ஜனகனுக்கு மெய்யறிவு புகட்டித் திருவருள் புரிய வேண்டும் என வேண்டினார். விநாயகப் பெருமானும் அவ்வாறு செய்வ தாக இயம்பினார். நாத ப்ரம்மத்தில் லயித்து வாழும் நாரதரும் பணிந்து விடைபெற்றார். கவுண்டின்ய மஹாமுனிவர் வியப்பும் விம்மிதமும் எய்தி நாரதரை வழியனுப்பி வைத்தார்.

கடும்பசி கொண்ட கணபதி

நாரத மஹாமுனிவர் சென்றபின், நந்தா உலகனைத்தும் தன் உதரத்துள் பொதிந்து வைத்திருக்கும் விநாயக மூர்த்தி, ஜனக மகாராஜனின் புல்லிய கடவுட் கொள்கையைப் போக்கித் தெள்ளிய முழுமுதலுணர்வைப் புகட்ட விரும்பினார். ஆகையால் விநாயகப் பெருமான், உடல் மெலிந்து நடை தளர்ந்து முகம் வாடி அருநோயால் அவதியுறும் அந்தணன்போல் வடிவு தாங்கி பிச்சையை எதிர்பார்த்துப் பரபரக்கும் கண்களோடு அரசன்றன் அரண்மனை முகப்பை அடைந்தார். ஆங்கே வாயிலிற் காவலிருந்த ஏவலரை நோக்கி, "அந்தணர் ஒருவர் அரசரைக் காண வந்துள்ளார்" என அறிவிக்கக் கோரினார். ஏழ்மையே உருவெடுத்து வந்தாற்போன்ற தோற்றத்துடன் மிடுக்கான சொற்பேசும் அவரை நோக்கிய வாயிற் காவலர்கள் வியந்தனர். உடனே சென்று அரசரிடம் அவ்வந்தணரின் தோற்றத்தையும் நிலையையும் சொல்லாற்றலையும் எடுத் தியம்பினர். அதைக் கேட்ட அரசன் அவ்வந்தணரைத் தன்முன் அழைத்து வருமாறு ஆணையிட்டான். அவ்வாறே ஏவலர்களும் சென்று அவ்வேதியனை அழைத்து வந்தனர். அவ்வேதியனின் களைமிகுந்த முகத்தில் கவலை படிந்திருப்பதைக் கண்ட பார்த்திபன்- அவரை மனங்கனிந்து வரவேற்று அழகியதோர் ஆசனத்தில் அமரச் செய்து பின்னர் அவரை நோக்கி, "வேதக் கடல் புக்குத் திளைத்துக் கரையேறிய வித்தகரே, தாங்கள் என்னை நாடி வந்த நோக்கத்தைத் தெரிவிக்க வேண்டும்" என வேண்டினான். வந்த வேத முதல்வரோ ஜனக மன்னனிடம் வேறொன்றும் பேசாது, "பல காவதம் கால்நடையாய் நடந்து மிதிலையை அடைந்தேன். நின் பேரும் புகழும் கொடையும் கேள்வியுற்று அதனைக் கண்ணாற் காண்பான் வந்துற்றேன். நீண்ட தூரம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நடந்து வந்ததால் பசி மேலிட்டுக் களைப்புடன் இருக்கிறேன். இன்னே என்பசி தீர ஏற்ற உணவளிக்க வேண்டும்'' என்றார்.

உடனே அரசன் தன் அருமந்த புதல்வனை நோக்கி அந்தணருக்கு அன்னம் அளித்து உபசரிக்குமாறு கூறினான். அரச குமாரனும் அருங்கலை வல்ல அந்தணாளரை அடிசிற் சாலைக்கு அழைத்துச் சென்று குருத்துக் கதலியிலை பரப்பி ஆரமுது எனப் புரிந்த பொங்கலும் பாயசமும் அன்னமும் கறிகளும் அப்பமும் வடையும் லட்டுகமும் மோதகமும் இன்ன யாவும் இலை நிறையப் பரிமாறினான். அரை நொடியில் அவற்றை உண்ட அந்தணர் அவை போதாவென்று அடுக்களையுள் நுழைந்தார். ஆங்கே நீர்நிறைந்த வாவி போலப் பாயசம் நிறைந்த பாத்திரங்கள் பல இருந்தன; சர்க்கரைப் பொங்கல் ஒரு குன்றுபோல் நிறைந்திருந்தது; அன்ன மலையோ இமய மலைபோல் காட்சியளித்தது; இமய மலையைச் சுற்றிச் சிறு சிறு மலைகள் காண்பது போல் அன்னமலையைச் சுற்றி அப்பமலை, வடையடுக்கல், லட்டுகசைலம், மோதகக்குன்று, பல்வகைக் கறிவெற்புகள் ஆகியவை காட்சியளித்தன. அவற்றையும் மிச்சமின்றி உண்டு முடித்தார் அந்தணர்; நெய்யும் பாலும் தயிரும் குடம் குடமாய்க் குடித்து முடித்தார். மேலும் 'பசி பசி' எனப் பறந்தார். அரிசிக் களஞ்சியத்துள் புகுந்து அரிசியாய்த் தின்றார்; பருப்புச் சாலையுள் புகுந்து பருப்பெலாம் புசித்தார்; உணவுப் பொருட்கள் வைத்திருந்த உள்ளிடமெல்லாம் சென்று உண்டு முடித்தார்; மேலும் உள்ள ஒரு பொருளும் இன்மை கண்டு 'பசி பசி' என்று குரலெடுத்துக் கூவினார். அரசன் அயர்ந்தான்; குடிமக்களின் வீடுகளில் இருந்த உணவுப் பொருட்களை எல்லாம் கொணரச் செய்தான்; நாட்டில் இருந்த உணவுப்பொருள்கள் யாவும் தீர்ந்தன. அவர் பசி தீர்வதா யில்லை. அரசன் அதிசயம் உற்றான். அவர் பசியைப் போக்க வழியறியாது திகைத்தான். வேறுவழியின்றி அந்தணரை அணுகி நாட்டிலுள்ள உணவுப்பொருள்களெல்லாம் தீர்ந்து விட்டதை உணர்த்தி உண்ட உணவுடன் அமைதியுறுமாறு கூறினான். ஆனால் அவ்வந்தணரோ அரசனை நோக்கி, ''ஓர் ஏழை அந்தணனின் ஒரு சாண் வயிற்றுப் பசியைப் போக்க இயலாத நீயோ பேரரசன்? நீயோ பெருங்கொடையாளன்? நீயே பிரம்மம் என்று தருக்கி நிற்கின்றாயே! அரை வயிற்றுப் பசியும் போக்க இயலாத நீயோ பிரம்மம்? கொஞ்சம் உணவளித்து என் பசித் தீயைத் கொழுந்துவிட்டு எரியச்செய்து விட்டாயே; பிரம்ம தத்துவமும் பிரம்ம சுபாவமும் இவ்வளவுதானே?''

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எனச் சினந்து கூறிச் சரேலென்று அவ்விடத்தை விட்டு நீங்கினார். ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்ற ஜனகன் அவர் விரைந்த நடையுடன் வெளியே செல்வதைப் பார்த்துக்கொண்டே இருந்தான். அவர் சென்றதும் அவர் கூறிய சொற்கள் அவன் காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்தன. 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்பதைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டதை உணர்ந்தான். ஆயினும் அவனுக்கு 'மேலான உண்மை' புலப்படவில்லை. தான் கொண்ட கடவுட் கொள்கை தவறென்பது தெளிவாயிற்று; ஆனாலும் மெய்யுணர்வு தோன்றவில்லை. ஆகையால் நாணமும் வருத்தமும் கொண்டான்; சிந்தனையில் ஆழ்ந்தான்; பிரம்மத்தின் தன்மையை உணரத் தியானம் செய்யத் தலைப்பட்டான்.

அரும்பசி தீர்த்த அறுகு

அரண்மனையினின்றும் வெளிப்போந்த அந்தணர் அந் நகரில் ஏழ்மைப் பிணியால் அவதியுற்று ஒவ்வொரு நாளும் உணவுக்குத் திண்டாடும் ஓர் அந்தணன் வீடு நோக்கிச் சென்றார். அவ்வந்தணன் பெயர் திரிசிரன்; மறைகளை மாண் புறக் கற்றவன்; ஒழுக்கத்திற் சிறந்தவன்; நாள்தோறும் ஆனை முகக் கடவுளை ஆராதித்து வருபவன்; அவன் மனைவியின் பெயர் விரோசனா. அம்மங்கையும் ஆனைமுகப் பெருமானிடம் ஆரா அன்பு கொண்டவள்; கணவன் செய்யும் கணபதி பூஜைக்குக் கைகொடுத்து உதவுபவள்; கொண்ட கொழுநன் சொல்லே மறைமுடிவு எனக்கொண்ட உத்தமி. வேடதாரியான அந்தணர் திரிசிரன் வீட்டை அடைந்தபோது அவன் விநாயக பூஜையை முடித்து எழுந்தான். அந்தணர் வரவைக் கண்டு அன்பு மீதூர இருகையும் எடுத்துத் தலைமேற் குவித்து வந்தனம் செய்து பணிந்து நின்றான். அருள் குடியிருக்கும் கண்ணனாகிய ஆனைமுகத்து அண்ணல் அவ்வந்தணனைத் தம் கண்ணால் திருநோக்கு நோக்கினார். பின்னர் அவனை நோக்கி, "திரிசிர, ஜனக மகாராஜனுடைய செல்வ வளத்தையும் கொடைத் தன்மையையும் கேட்டுணர்ந்த நாம் எம் பசியைப் போக்கிக் கொள்ள கருதி அவனிடம் சென்றோம். அவன் தன் அரண்மனையிலிருந்த அனைத்து உணவுப் பொருளையும் அளித்தான்; வெளியிலிருந்தும் உணவுப் பொருள்களை வரவழைத்துக் கொடுத்தான்; எம் பசி சிறிதே குறைந்தது. அவனிடம் அளிப்பதற்கு வேறு உணவுப் பொருள் இல்லை; அதனால் எஞ்சிய பசியையும் உண்டு ஒழிக்க உன்னை நாடி வந்தோம். எம் பசி தீர எமக்கு உணவிடுக" எனத் திருவாய் மலர்ந்து நின்றார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அருகில் நின்ற விரோசனா அந்தணர் கூறிய சொற்கேட்டு அயர்ந்தாள். அகத்தில் ஓர் உணவுப்பொருளும் இல்லாத அந்நேரத்தில் ஜனகன் இட்ட சோற்றால் பசி தணியவில்லை எனக் கூறி வந்த அந்தணரைக் கண்டு அதிசயமும் அச்சமும் அடைந்தாள். அவரைப் பணிந்து, "ஐயனே, இன்று வீடு *நிறைந் திருக்கிறது; ஆனைமுகத்து அண்ணலை இப்போதுதான் பூஜித்தோம்; அர்ச்சனை செய்ததும் அறுகம்புல்லாலே; நிவேதனம் செய்ததும் அறுகம்புல்லையே. அரசன் இட்ட அடிசில் உண்டும் அடங்காப் பசி எனில் வறுமை வெயிலில் வாடும் எங்களால் இயல்வது யாது?'' என மனம் வருந்திக் கூறினாள்.

அதுகேட்ட அந்தணர், ''அந்த அறுகம் புல்லின் பெருமையை நீங்கள் அறியமாட்டீர்கள்; நிவேதனம் செய்த அறுகம்புல்லை எனக்கு அளியுங்கள்; அதுவே எனக்குப் போதும்'' என்றார்.

விரோசனா மனம் மகிழ்ந்து மெய்யன்போடு அந்த அறுகம் புல்லைக் கொண்டுவந்து விருந்தினராய் வந்த அந்தணர் முன் வைத்தாள். அந்தணரும் அதனை ஆவலோடு எடுத்து மலர்ந்த முகத்தோடு வாயிற் போட்டுக் கொண்டு நன்றாக மென்று விழுங்கினார். விழுங்கின உடனே பசித் துன்பம் அகன்றது; திரிசிரன் பசியும் பறந்தது; விரோசனாவின் வயிறு குளிர்ந்தது. திரிசிரனும் விரோசனாவும் உடனே 'வந்தவர் விநாயகரே' என்பதைப் புரிந்து கொண்டு விட்டனர். அவருடைய பாதங் களில் வீழ்ந்து வணங்கி நின்றனர். எம்பெருமானும் அவர்களுக்குத் தம் திருவுருவக் காட்சியளித்தார். திரிசிரனும் விரோசனாவும் மீண்டும் மீண்டும் அவரைப் பணிந்து, ''என்றும் எம்பெருமான் பாத சேவை பண்ணும் பாக்கியம் அருள வேண்டும்'' என வேண்டினர். விநாயக மூர்த்தி அவர்களுக்குத் திருவருள் புரிந்தார். அவ்வேழை மறையவர் வாழ்ந்திருந்த குடிசை மாடமாளிகை யாயிற்று. அம்மாளிகை முழுவதும் பொன்னும் மணியும் தானியங்களும் ஏராளமாக நிறைந்தன. அவ்வாறே ஜனகன் அரண்மனையிலும் பல்வகை வளங்களும் ஓங்கின. அந்நாட்டு மக்களின் வீடுகளிலும் செல்வம் கொழித்தது. ஜனகன் மிக வியப்பெய்தினான். தன்னிடம் உணவு வேண்டி வந்த அந்தணர் அண்டர்குலத்துக்கெல்லாம் நாயகர் என்பதுணர்ந்தான். திரிசிரன் வீட்டில் அவ்வந்தணர் உள்ளார் என்பதை அறிந்து அவ்விடத்

*'வீடு நிறைந்திருக்கிறது' என்ற தொடர் 'வீட்டில் ஒன்றும் இல்லை' என்பதை மங்கல வழக்காகக் குறிக்கும் மரபு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திற்கு விரைந்தோடி வந்த ஜனகன் அவர் பாதங்களில் பணிந்து, "வேத தத்துவத்தைத் தவறாகப் புரிந்து கொண்ட என்னை, அதனால் ஆணவம் கொண்ட என்னை, துன்பக் கடலில் வீழ்ந்து அழியாமல் காத்த அருங்கருணைப் பெருவள்ளலே, மெய்ப்பொருள் இன்னதெனக் காட்டித் திருவருள் புரிய வேண்டும்" என வேண்டினான். விநாயக மூர்த்தியும் மெய்ப் பொருள் விளக்கம் காட்டி ஆணவ மலம் போக்கி அருள் புரிந்து மறைந்தார். ஜனக மகாராஜனும் அன்று முதல் களிற்றுமுகக் கணபதியைக் கைதொழுது பூஜித்துப் போற்றி வந்தார். இறுதியில் விநாயகர் உலகை அடைந்தார்.

நிறைகாணா அறுகு

மிதிலாபுரி மன்னனுக்கு மெய்ப்பொருள் அருளிய களிற்று முகன் மீண்டும் கவுண்டின்ய முனிவரின் ஆச்ரமத்துக்கு எழுந் தருளினார். கவுண்டின்ய முனிவர் வழக்கம்போலவே தம்முடைய விநாயக பூஜையை முடித்து விட்டுத் தம் மனைவியிடம் விநாயக மூர்த்தி அந்தணருருவாய் ஜனகனை அடைந்ததும் திரிசிரனிடம் அறுகம்புல் பெற்றுப் பசியாறியதும் மிதிலையைச் செல்வச் செழிப்புள்ளதாக்கித் திரிசிரனையும் வளமை மிகுந்தவனாகச் செய்ததையும் மனம் நெகிழ்ந்து எடுத்துக் கூறினார். அதனைக் கேட்ட அவருடைய துணைவியார், ஆசிரியை, அவரை நோக்கி, "அன்பொழுகு செம்மனத் துணைவரே, ஓர் அறுகு பெற்று ஏராளமான பொன்னும் பொருளும் திரிசிரனுக்கு ஈந்த வரலாற்றைக் கேட்டேன். ஆனால் எனக்கொரு சந்தேகம் தோன்றுகிறது. தினமும் நாம் பதினாயிரம் அறுகு கொண்டு பூஜை செய்து வருகிறோம். ஆனால் நாம் முற்றிலும் ஏழ்மையில் தானே வாழ்கிறோம். அப்படிப்பட்ட கருணையை ஆனைமுகக் கடவுள் நம்மேல் காட்டாத காரணம் யாதென அறியமாட்டாமல் குழம்புகிறேன் நான். அதன் பொருளை எனக்குத் தெளிய விளக்க வேண்டும்" என வேண்டி நின்றாள். அப்போது கவுண்டின்ய முனிவர் தம் மனத்துள் எண்ணினார்: "உலகெலாம் மலரும் உத்தமன்றன் பாதம் நிதம்பரவி என்றும் உலவாத பேரின்பப் பெருவாழ்வு பெறவிழைந்து பூஜை புரிவதல்லால் புல்லிய பொன்னுக்கும் பொருளுக்கும் ஆலாய்ப் பறந்து அமைதியிழந்து அற்ப வாழ்வு வாழவோ பூசனை? என்னோடு பலகாலம் துணையாய் இருந்து இவள் கற்றதெல்லாம் இவ்வளவு தானோ? பேரறிவு பெற்ற பெண்ணாயிருப்பினும் 'பொன்' என்றால் நெஞ்சம் சஞ்சலமாமோ? 'பெண்மதி என்பது பெரும் பேதமைத்தே'

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்பது இவள் விஷயத்தில் மெய்யாயிற்றே! இதோ இப்படி ஒரு காரியம் செய்து இவளை அறிவுறுத்துகிறேன். அது தான் சரியான வழி உலகிற்கும் இஃதொரு பாடமாய் அமையும்.''

பிறகு கவுண்டின்ய முனிவர் ஆசிரியையை நோக்கி அன்பு மிகுந்து, ''நாளும் உடனிருந்து நல்லறுகு தேர்ந்து நந்தாத அருள்பொழியும் கந்துக முகக் கணபதிக்குச் சாத்தி அருச்சனை புரிய அருந்துணையாய் நின்ற என் பெருந்துணையே, இதோ இந்த விநாயகப் பெருமானின் பாதத்தில் பக்தியுடன் அருச்சித்து இட்ட எளிய இவ்வறுகம் புல்லை எடுத்துக்கொண்டு இந்திரனிடம் செல்வாயாக. அங்கு இந்திரனிடம் நான் உன்னை இந்த அறுகம்புல்லின் எடைக்குச் சரியான பொன்னை வாங்கிக் கொண்டு வருமாறு சொன்னதாகச் சொல். அவன் கொடுக்கும் பொன்னைப் பெற்றுக் கொண்டு வா'' எனக் கூறினார். கணவன் சொல் கடவாத காரிகையும் அவ்வாறே அவ்வறுகம் புல்லை எடுத்துக் கொண்டு இந்திரலோகம் சென்றாள். அருந்தவ முனிவரின் இல்லத்தரசி வந்திருப்பதை அறிந்த இந்திரன் உடனே அவரை அவைக்கு அழைத்து வரச் செய்து வந்த காரியம் யாதென உசாவினான். ஆசிரியை இந்திரனை நோக்கி, ''வானவர் தலைவ, அவாவறுத்த நன்னெஞ்சத் தபோதனர் இந்த அறுகம் புல்லின் நிறைக்கு ஈடான பொன்னைத் தங்களிடம் பெற்று வருமாறு என்னை அனுப்பினார்'' என்றார். அதுகேட்ட இந்திரன் அதிசயம் அடைந்தான். சிறிதே மனத்துள் எண்ணினான். பிறகு ஆசிரியையை நோக்கி, ''பொன்னுக்குத் தலைவன் குபேரன்.'' அவனிடத்துச் சென்று வேண்டிய மட்டும் பொன் பெற்றுக் கொள்க எனக் கூறி ஆசிரியைக்குத் துணையாகச் சில தூதுவர்களையும் அனுப்பி வைத்தான். அத்தூதுவர்கள் மிகவும் சிரத்தையுடன் ஆசிரியையைக் குபேரனிடம் அழைத்துச் சென்று இந்திரன் கட்டளையையும் தெரிவித்தார்கள்.

குபேரனும் வியந்து ரிஷிபத்னியை நோக்கி, ''அம்மா, இங்கு ஏராளமாகப் பொன்னும் பொருளும் உள. தாங்கள் விரும்பும் அளவுக்குப் பொன்னை எடுத்துக் கொண்டு செல்லுங்கள். அறுகு நிறைக்குப் பொன் என்றால் அவனியெலாம் சிரிக்கும்'' எனக் கூறினான். ஆனால் கொண்டான் மொழியல்லால் கொள்ளாத குணமங்கை குபேரனை நோக்கி, ''அறுகு நிறை கண்டு அம்பொன் கொண்டு வருக'' என்று அவர் உரைத்த சொல்லை யான் மீறுதல் எவ்வாறு? ஆகையால் அறுகு நிறைக்கு அம்பொன் அளித்திடுக. அதிகம் வேண்டா'' என்றாள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அளகேசனும் அதிசயித்துச் சமன் செய்து சீர்தூக்கும் துலாக் கோல் ஒன்றைக் கொணரச் செய்து அதன் ஒரு தட்டில் அறுகை யிட்டான். மற்றொன்றில் ஒரு சிறு கனக குண்டை வைத்தான். அறுகிருந்த தட்டம் அசையாது நிற்க தங்கம் வைத்த தட்டம் மேலெழும்பி நின்றது. வடதிசை வள்ளல் மேலும் மேலும் பொன் கொணர்ந்து தட்டில் போட்டான். அறுகு தட்டு அசைய வில்லை. பொன் கொண்ட தட்டு மேல்நோக்கி நின்றது. ஏராளமான பொன்னைக் கொணர்ந்து போட்டான்; அறுகு அலுங்காமல் அப்படியே இருந்தது. நாட்டிலுள்ள பொன்னை யெல்லாம் கொண்டு வந்து போட்டான். பயனில்லை. வியப் படைந்த குபேரன் அதனை ஏதோவொரு வேத ரகசியம் எனவும் தெய்வச் சோதனை எனவும் உணர்ந்தான். மலை மலையாய்க் கிடந்த பொற்பாளங்கள் எல்லாம் ஒரு தட்டில் கிடந்தும் அறுகு நிறை காணாமல் அத்தட்டு மேலெழும்பி நின்றது. 'அறுகு நிறைக்கு அம்பொன் தருவேன்' என்றுரைத்த வாக்குக்கு நாணிய குபேரன் திகைத்து இந்திரனை மனத்தால் ஊன்றி நினைத்தான்.

நினைந்த அளவில் வந்தெதிரே நின்றான் இந்திரன்; நிலைமையை உணர்ந்து நாணினான்; செய்வதறியாது திகைத்து நின்றான்; முத்தேவர்களையும் முறையாய்த் தியானம் செய்தான். அவர்களும் அங்குத் தோன்றினார்கள். அனைவரும் பொன்னிருந்த தட்டில் தாமும் ஏறி அமர்ந்தனர். அப்போதும் தட்டுகள் சமமாகவில்லை. அதனைக் கண்ட முத்தேவர்களும் தங்கள் ஞான திருஷ்டியால் அறுகின் பெருமையை உணர்ந்தார்கள். ஆனைமுகனை அன்புடன் அருச்சித்து ஆதரவாய் இட்ட அறுகம் புல்லுக்கு அகில உலகமும் ஈடாகாதே. இதனை உணர்ந்தவுடன் அவர்கள் யாவரும் தாங்கள் பெருந்தவறு இழைத்துவிட்டதாக எண்ணி வருந்தினார்கள். அனைவரும் உடனே புறப்பட்டுக் கவுண்டின்ய மாமுனிவர் வாழும் ஆச்ரமத்தை அடைந்தார்கள். அங்கே கவுண்டின்ய முனிவரைக் கண்டு வணங்கி, "அனந்தமான நிறைகொண்ட அறுகம் புல்லுக்கு அண்ட சராசரங்களிலும் ஒப்பான பொருளில்லை. இதனை யாவருக்கும் அறிவுறுத்தவே இவ்வாறு செய்தீர் போலும்" என முகமன் பல கூறி விநயத்துடன் நின்றனர். முனிவரும் அத்தேவர்களைப் போற்றினார். சிவபிரான் முனிவரை நோக்கி, "இன்று முதல் கற்பகத் தாருவும் காமதேனுவும் சிந்தாமணியும் நின் சிந்தையறிந்து பணிபுரியும்" என வரமளித்தார். யாவரும் சென்ற பின்னர் ஆசிரியை தன் கணவனை அன்புடன் நெருங்கி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அகம் குழைந்து அழுதாள்; விம்மினாள்; "ப்ரஸன்ன வதனப் பெருமானுக்குப் பக்தியுடன் இட்ட அறுகின் நிறை அறியாது புல்லிய பொன்னின்மேல் பற்று வைத்தேனே, களிற்றுமுகக் கணபதிக்கு அன்புடன் இட்ட அறுகுக்குப் பொன் வாங்க எண்ணிய குறுமதி படைத்தேனே" எனக் கதறினாள். கவுண் டின்ய முனிவரும் தம் மனைவிக்குத் தேறுதல் கூறி நெடுங்காலம் விநாயக பூஜையை அறுகுடன் செய்து வந்தார்.

19. வன்னி பத்ரம்

பிதுர்த்தேவன் வினா

பிதுர்த்தேவன் நான்முகனை நோக்கி, "ஏதேனும் ஒரு காரணத்தால் அறுகு கிடைக்காமல் போகுமாயின் அதற்குப் பிரதியாக எப்பொருளைக் கொண்டு விநாயக பூஜையைச் செய்ய வேண்டும்? இதனை எனக்கு விளக்கமாகக் கூற வேண்டும்" என வேண்டிக் கொண்டான். நான்முகனும் பின் வரும் வரலாறுகளைக் கூறினார்.

அறுகு இன்றேல் வன்னி

விதர்ப்ப தேசம் விஸ்தாரமானது. பல்வகை வளங்களும் பல்கி நிற்கும் நாடு. அதன்கண் அழகு மிகுந்த அருமையான நகரம் ஒன்று உண்டு. அதன் பெயர் ஆதேயம். ஆன்றோர் பலர் வாழ்ந்த அந்நகரில், தவமிகு பெரியோர் பலர் வாழ்ந்த அந்நகரில் சுய நலமே உருவான இரக்கமே அற்ற வேடன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் வீமன்; அவன் கொலைகள் செய்ய அஞ்சான். பிறரைத் துன்புறுத்துவது அவனுக்குப் பொழுது போக்கு. வஞ்சமறியா விலங்குகளைக் கொஞ்சமும் இரங்காது வீணாக வதைப்பான். யாவர் சொல்லையும் கேளான்; மனம் போன போக்கெல்லாம் நடக்கும் வெறி கொண்டவன்; கொடுமையான சொல்லும் கடுமையான முகமும் கொண்டவன்; அவன் பெயரைக் கேட்டவர் அஞ்சுவர்; அவனைக் கண்டவர் மருள்வர்.

அவ்வூரில் அழகிய சிவன் கோயிலில் திருவிழா ஒன்று நடந்தது. திருவிழாவுக்குப் பல திசைகளிலிருந்தும் பல்லாயிர மக்கள் திரண்டு வந்திருந்தனர். திருவிழா முடிந்தபின் சில அந்தணர்கள் கோயிலிலேயே தங்கி ஓய்வு கொண்டனர். திருவிழாக் கூட்டம் கலைந்து சென்ற பிறகு அவர்களும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புறப்பட்டுத் தம் ஊருக்குப் பயணமாயினர். அவர்கள் ஆதே யத்தைக் கடந்து செல்லத் தொடங்கினர். ஊருக்கு வெளிப்புறம் ஆகையால் அங்கு மக்கள் கூட்டம் இல்லை. அவ்வந்தணர்கள் ஒருவருக்கொருவர் துணையாய்ச் சென்றுகொண்டிருந்தனர். அவர்களைக் கண்ட அக்கொடிய வேடன் அவர்களை வழி மறித்தான். அவனுடைய சிவந்த கண்ணும் சினம் காட்டும் முகமும் வாள்பிடித்த கரமும் வார்சுற்றிய காலும் இடியென உரப்பும் குரலும் அவர்களுக்கு நடுக்கம் உண்டாக்கியது. சிலர் தளர்ந்து கீழே விழுந்தனர்; சிலர் விரைந்து ஓட முயன்றனர்; சிலர் அவனை வணங்கி துன்புறுத்த வேண்டாமென்று வேண்டினர்; சிலர் ஒன்றும் புரியாமல் அழுதனர்; சிலர் கைப்பொருளை எல்லாம் கீழே போட்டுவிட்டுக் கதறினர். அவை ஒன்றையும் வீமன் கருதினானல்லன்; தன் கைவாளுக்கு அவர்களை இரையாக்கி அவர்கள் வைத்திருந்த பொருள்களை எல்லாம் அபகரித்துக் கொண்டான். இவன் செய்கைகளை எல்லாம் சற்றுத் தூரத்தில் இருந்த அரக்கன் ஒருவன் பார்த்துக் கொண்டிருந்தான். வீமன் இறந்த அந்த அந்தணர்களிடமிருந்த பொன்னையும் பொருளையும் பறித்துத் தொகுத்தெடுத்துக் கொண்டதைப் பார்த்த அவ் வரக்கன் அவற்றையெல்லாம் தான் கைக்கொள்ள வேண்டும் என்ற பேராசை கொண்டான். ஆகவே அவன் வீமனை நோக்கி விரைந்து வந்தான். அரக்கன் விரைந்து வருவதை வீமன் பார்த்தான்; அவன் நோக்கம் அவனுக்குப் புரிந்தது. தான் பறித்த பொருள்களை இழக்க அவன் விரும்பவில்லை; அவ்வரக்கனோடு போர் புரியும் மனஉறுதியும் உடலுறுதியும் அவனுக்கு இல்லை. ஆகையால் வீமன் தான் கொள்ளை கொண்ட பொருள்களை எல்லாம் தூக்கிக்கொண்டு அருகி லிருந்த காட்டுக்குள் ஓடினான். அரக்கனும் அவனை விடாமல் துரத்தினான்.

நெடுந்தூரம் ஓடிய வீமன் இருண்ட ஓரிடத்தில் திடீரென்று வேறு புறமாகத் திரும்பிச் சென்று, அரக்கன் தன்னைக் காண மாட்டான் என்று எண்ணி, அருகில் இருந்த ஒரு வன்னி மரத்தின் மீதேறி மறைந்து கொண்டான். அவ்வாறு அவன் ஏறியபோது ஏற்பட்ட அதிர்ச்சியில் சில வன்னி இலைகள் உதிர்ந்தன. அவை அம்மரத்தின் கீழே வாமனரால் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த விநாயகப் பெருமான்மேல் வீழ்ந்தன. கன இருளிலும் கண்ணால் பார்க்கும் வலிமை மிக்க அரக்கன் வீமனைப் பார்த்துவிட்டான். அவனும் அம்மரத்தடிக்கே ஓடி வந்து விரைந்து தாவி மரத்தின்மேல் ஏறினான். அப்போது ஏற்பட்ட அதிர்ச்சியால் சில வன்னியிலைகள் உதிர்ந்து வாமன விநாயகர்மேல் வீழ்ந்தன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவ்விருவரும் மரத்தின்மேலேயே துவந்த யுத்தம் செய்தனர். ஒரு கையால் மரக்கிளையைப் பிடித்துக் கொண்டு ஒருவரை ஒருவர் காலால் உதைத்தும் ஒரு கையால் குத்தியும் நெடுநேரம் சண்டையிட்டனர். இறுதியில் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்துக் கழுத்தை நெரித்துக் கொல்லப் புகுந்தனர். அப்போது இருவர் கையும் மரக்கிளையை விட்டுவிட இருவரும் மரத்தின் மேலிருந்து கீழே பாறைகள் சிதறிக் கிடந்த தரைமீது விழுந்தனர். விழுந்த வேகத்தில் அவ்விருவரும் உடலம் புண்ணாகிச் சடலம் ஆயினர். அவ்விருவரும் மரத்தில் ஏறிய அவசரத்தில் அதிர்ந்து தம் மீது வீழ்ந்த வன்னியிலைகளை அவர்கள் அருச்சனை செய்து அளித்ததாகவே கருதினார் எம்பெருமான். அதனால் அவ்விரு வரும் இறுதி நிலை அடைந்தபோது எண் திசையும் ஒளிபாய்ச்சி எழில் மிக்க தெய்வத் தேரொன்று அங்கே வந்திறங்கியது. அவ்விருவருடைய சூக்ஷ்ம உடலும் தேஜோமயமாய்க் காட்சி யளித்து அத் திருத்தேரில் ஏறி விநாயகருலகு புக்கன.

வேடனும் அரக்கனும் வன்னி மரத்தில் ஏறியது அவர்கள் பூர்வ ஜன்மத்தில் செய்த புண்ணியமே. அப்புண்ணியம் மிகக் குறைந்ததெனினும் பலன் பெரிது. அவர்களுடைய பூர்வ ஜன்ம விருத்தாந்தங்களை இப்போது சொல்கிறேன்; கேட்பா யாக எனக் கூறி நான்முகன் மேலும் தொடர்ந்தார்.

முற்பிறவியில் வீமனும் அரக்கனும்

விண்ணவரும் வியந்து போற்றும் விதர்ப்ப நன்னாட்டைப் புண்ணிய கீர்த்தி என்றொரு புரவலன் அறநிலை தன்ழக்க ஆண்டு வந்தான். நீண்ட நாட்கள் நல்லாட்சி செய்தபின் அவன் பொன்னாடு புக்கான். அவன் மனைவி மதனாவதியும் அவன் பிரிவு தாங்காமல் உயிர் நீத்தாள். அவர்களுக்குப் புதல்வர்கள் இல்லை. அதனால் நாடு அரசனில்லா நாடாயிற்று. நாட்டு நன்மையைக் கருதிய சிறந்த மந்திரிகளும் பெரியோர்களும் அரசனுக்கு அடுத்த வாரிசாக விளங்கிய துத்தரிட ராஜனின் மகனான சாம்பனை அரசனாக்கினார்கள்.

துத்தரிட ராஜன் புண்ணிய கீர்த்திக்கு நெருங்கிய உறவினனாக இருந்த போதிலும் பொறுப்பற்ற வாழ்க்கை நடத்தி வந்தான். அவன் மனைவியும் பொறுப்பற்றவளே. அவர்கள் கள்ளுண்ணல், வஞ்சக மனத்தாருடன் நட்புக் கொள்ளல், சூதாடுதல் போன்ற தவறுகளைத் தயங்காமல் செய்துவந்தார்கள். அவர்களுக்கு வெகு நாட்களாக புத்ரபாக்யம் இல்லாமலிருந்தது. ஒரு சமயம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

துத்தரிட ராஜனின் மனைவி ஒரு மீனவனைச் சந்திக்க நேர்ந்தது. அவன் கட்டுடலும் நெட்டுருவும் அவள் மனத்தைப் பிழிய ஒரு நாள் அவனோடு இருந்தாள். அதன் பயனாக அவளுக்குச் சாம்பன் பிறந்தான். இந்நிகழ்ச்சியை வேறு யாரும் அறிந்திலர். துத்தரிட ராஜனின் மகனே சாம்பன் என எல்லாரும் எண்ணி னார்கள். இவ்வாறு பிறவியில் குற்றம் உற்ற சாம்பன் அரசனான பின் தன் மனம் போல அரசாட்சியை நடத்தத் தொடங்கினான். சிறந்த மந்திரிகளின் ஆலோசனைகளை நிராகரித்தான்; ஆன்ற மைந்த பெரியோர்களின் வார்த்தைகளை அலட்சியம் செய்தான். இச்சகம் பேசும் வஞ்சகக் கும்பலைத் தன்னோடு வைத்துக் கொண்டான்; நாடு நலம் கெட்டது. அவனுக்கு துர்புத்தி என்றொரு மந்திரி இருந்தான். இச்சகம் பேசுவதில் இவனை வெல்வோர் இச்சகத்தில் இல்லை என்னுமாறு வல்லமை படைத் தவன் அவன். சமயோசிதமாகப் பேசுவதில் வல்லவன். அவன் சொல்வதே நாட்டின் சட்டமாயிற்று; அவன் செய்வதே அரசனுக்குச் சம்மதமாயிற்று. அரசன் செயலை விமர்சனம் செய்தவர் தலை உருண்டது. நீதி கேட்க வந்தவர் நிலையாகச் சிறைபுக்கனர்.

அக்கொடுங்கோலன் ஒருநாள் வேட்டையாடக் கானகம் சென்றான். இரண்டு மூன்று நாட்கள் காட்டில் தங்கி வேட்டை யாடியபின், தன் அமைச்சனாகிய துர்புத்தியோடும் படை களோடும் மீண்டு வந்துகொண்டிருந்தான். வரும் வழியில் காட்டின் இடையே இருந்த விநாயகர் கோயிலைக் கண்டான். அக்கோவில் ஞானேந்திரரான வசிட்ட மஹாமுனிவரால் கட்டப்பட்டது. அக்கோவிலில் அவரே விநாயகரைப் பிரதிட்டை செய்திருந்தார். அன்று ஏதோ ஒரு விசேஷ நாளாயிருந்தது. அங்கு பக்தர்கள் பலர் கூடியிருந்தனர். கூட்டத்தினரைக் கண்ட சாம்பன் தன் மந்திரியோடு அக்கூட்டத்தில் நுழைந்தான். யாவ்ரும் விநாயகக் கடவுளைப் போற்றி வணங்குவதைக் கண்டான். தானும் விளையாட்டாக அவ்விநாயகரை வணங் கினான். தான் கொண்டு வந்திருந்த பழங்களை நிவேதனமாக அளித்தான். துர்புத்தியும் அவ்வாறே செய்தான். பிறகு அவர்கள் தங்கள் நாட்டை அடைந்தனர். இறுதி வரையில் கொடுங்கோல் ஆட்சி செலுத்திய சாம்பனும் துர்புத்தியும் தம் வாழ்நாளைக் கழித்தனர். இயமனுலகு புகுந்த இருவரும் பல்வகை நிரயங்களில் பல்லாயிரம் ஆண்டுகள் அவதியுற்று பல பிறவிகள் எடுத்து இறுதியில் வேடனும் அரக்கனும் ஆயினர். ஒரு பிறவியில் ஒரு முறை வசிட்டரால் பூஜிக்கப்பட்ட விநாயகரை விளையாட்டாக

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வணங்கிய காரணத்தால் அவ்விருவரும் அன்று வாமனர் பூஜித்த வன்னி விநாயகரைச் சேர்ந்தனர். அவர்கள் எண்ணாமலே வன்னியிலைகள் விநாயகர் மீது விழுந்ததால் பெரும்பேறு பெற்றனர். ஆகையால் வன்னியிலை மிகப் பெருமை வாய்ந்தது. அம்மரத்தடியில் இருக்கும் விநாயகரின் பெருமையோ அளவிடற் கரியது.

பிதுர்த்தேவன் கேள்வி

"வன்னியிலையின் பெருமை விளக்கமாகக் கூறியருளினீர். இப்போது வாமனர் என்பவர் யார் என்பதையும் அவர் வன்னி மரத்தின் கீழே விநாயகரை ஏன் பிரதிஷ்டை செய்தார் என்பதையும் விஸ்தாரமாகக் கூற வேண்டும்" என்று பிதுர்த் தேவன் நான்முகனாரைக் கேட்டான். நான்முகனாரும் பின்வரும் வரலாற்றைக் கூறத் தொடங்கினார்.

விஷ்ணு வணங்கிய விநாயகன்

காச்யபர் என்ற தவசீலர் சிறந்த சிவபக்தர். பஞ்சாட்சர மந்திரத்தைப் பன்முறை உருவேற்றிப் பயன் கைக்கொண்டவர். உயர்ந்த ஞானி. அவருக்கு இரண்டு மனைவியர்; ஒருவர் பெயர் அதிதி; மற்றொருவர் பெயர் திதி. அதிதியும் திதியும் சகோதரிகளே; ஆயினும் அதிதியைக் குறித்துத் திதி மிகப் பொறாமை கொண்டாள். அதிதி மிக நல்லவளாகவே விளங்கினாள். அவள் இந்திரன் முதலிய தேவர்களைப் பெற்றெடுத்த பாக்கியம் உள்ளவள். அவர்களுக்குத் துணையாய் அமைந்து அவர்களுக்கு எந்த இன்னலும் உண்டாகாமல் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் திருமாலே தனக்கு மற்றொரு மகனாய் வந்து தோன்ற வேண்டுமென்று விரும்பினாள். அதற்காகத் தவம் புரியத் தொடங்கினாள். திதி வாசுகி முதலான நாகர்களைப் பெற்றவள். தன் சகோதரியின் பிள்ளைகளைக் காட்டிலும் சிறப்பும் செல்வமும் வலிமையும் மிக்க பிள்ளைகளைத் தான் பெறவேண்டுமென்று கருதித் தன் கணவனைச் சார்ந்தாள். முக்காலமும் உணரவல்ல காச்யபர் அவளை நோக்கி, "இந்த நேரமும் நாழிகையும் கொடிய மனமுள்ள குழந்தைகளை உண்டாக்கும் தன்மை வாய்ந்தன. வேறு நல்லதொரு நேரம் நாடி நம் கருத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்" எனக் கூறினார். ஆனால் திதி அதனை ஒப்புக்கொள்ளவில்லை. காச்யப முனிவரும் அவள் பிடிவாதம் கண்டு 'நடப்பது நடந்தே தீரும்' என உட்கொண்டு அவளுக்குக் குழந்தைச் செல்வம் அருளினார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இரு குழந்தைகள் அசுர நேரத்தில் பிறந்தன. ஒரு குழந்தைக்கு ஹிரண்யகசிபு எனவும் மற்றொரு குழந்தைக்கு ஹிரண்யாக்ஷன் எனவும் பெயரிட்டார்கள்.

ஹிரண்யகசிபு சிவபிரானை நோக்கித் தவம்புரிந்து அரிய பல வரங்களைப் பெற்றான்; அண்ட முழுவதும் அடக்கியாளும் வலிமை பெற்றான். அசுரனாதலால் இயற்கையாகவே தேவர் களைப் பகைத்தான்; அவர்களுக்கு மிகவும் கஷ்டங்களைக் கொடுத்தான். பல முனிவர்களையும் தேவர்களையும் சிறைப் படுத்திக் கொடுமை செய்தான். தேவர்கள் யாவரும் ஹிரண்ய கசிபுவைக் கொல்ல வேண்டுமென்று திருமாலை வேண்டினர். தேவர்களுக்கு உதவ எண்ணிய திருமால் ஹிரண்யகசிபுவை எவ்வாறு கொல்வது என்று புரியாமல் குழம்பினார். அவன் பெற்ற வரங்கள் அப்படி. அக்குழப்பம் தீரும் பொருட்டுத் திருமால் பூவுலகு அடைந்து அமைதி மிகுந்ததோர் அடவியிடையே ஒரு வன்னி மரத்தடியில் விநாயகக் கடவுளைப் பிரதிஷ்டை செய்து ஆகம முறைப்படி வழிபாடு செய்து வந்தார்; ஐம்புலனும் அவையவை சார்ந்த உணவு விலக்கி அடங்கி நிற்க விநாயக மூர்த்தியின் மூலமந்திரத்தை ஜபித்துச் சித்தம் ஒரு முனைப்பட்டுக் குவிய உருவேற்றினார். திருமாலின் தவத் திற்கு மகிழ்ந்த களிற்று முகன் அவர் முன்னே தோன்றினார். விஷ்ணுவும் அப்பரமனின் பாதம் பணிந்து போற்றி, "ஐயனே, ஹிரண்யகசிபு என்றோர் அசுரன் சிவபிரானை வழிபட்டுப் பெருவரங்கள் அருளப் பெற்றான். அவன் மனிதனாலும் இறவான்; விலங்காலும் இறவான். அவன் வரபலத்தால் பகலிலும் இறவான்; இரவிலும் இறவான். வீட்டின் உள்ளும் இறவான்; வெளியிலும் இறவான். பூமியிலும் இறவான்; அந்தரத்திலும் இறவான்; எந்த ஒரு ஆயுதமும் அவனைக் கொல்லாது, அவன் உடலிலிருந்து குருதி வெளிப்பட்டுத் தரையில் விழுந்தால் ஒவ்வொரு சொட்டு ரத்தத்திலிருந்தும் ஓர் ஹிரண்யகசிபு தோன்றுவான்; அவன் விண்ணோர்க்கும் மண்ணோர்க்கும் பெருந்துன்பம் செய்கின்றான். அவனைக் கொன்று தேவர்களைக் காக்கும் ஆற்றலை எனக்கு அருள வேண்டும்" என வேண்டினார். விநாயகப் பெருமானும் திருமாலை நோக்கி, "மனிதனும் விலங்குமல்லாத ஓர் உருவம் கொண்டு இரவென்றும் பகலென்றும் பகுத்துக் கூற இயலாத சந்தி வேளையில் உட்புறமென்றும் வெளிப்புறமென்றும் சொல்ல முடியாத வாயிற்படியில் நிலமென்றும் விண்ணென்றும் சொல்ல இயலாத நின்மடிமீது அவ்வசுரனைக் கிடத்தி ஆயுதம் என்றும் ஆயுதம் அல்ல என்றும் சொல்ல இயலாத நின்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விரல் நகத்தால் அவனுடலைக் கீறி ஒரு சொட்டு இரத்தமும் தரையில் விழாமல் உறிஞ்சிக் கொன்றுவிடுக'' என அறிவுரை கூறி அதற்கேற்ற ஆற்றலும் அளித்து மறைந்தார். அவ்வாறே விஷ்ணுவும் நரசிம்ம வடிவாய்த் தோன்றி ஹிரண்யகசிபுவைக் கொன்றார்.

வன்னி விநாயகர் அருள் பெற்று திருமால் சுவேத வராஹ மாய்த் தோன்றி ஹிரண்யாக்ஷனையும் அழித்தார்.

விரோசனன்

ஹிரண்யாக்ஷனுக்கு விரோசனன் என்ற மகன் இருந்தான். அவன் சூரியனைக் குறித்துத் தவம் புரிந்தான். பல்லாண்டுகள் செய்த தவத்தின் பயனாய் கதிரவன் விரோசனனுக்குப் பிரத்யக்ஷமாகி அவன் விரும்பிய வரங்களை எல்லாம் கொடுத்தான். பின்னர் ஆணிப் பொன்னால் நிருமிக்கப்பட்ட சிறந்த கிரீடம் ஒன்றளித்து, 'இந்தக் கிரீடத்தை எப்போதும் அணிந்திருப்பாயாக. கிரீடம் அணியாத உன் வெறுந்தலைமீது யாரேனும் கை வைத்தால் உன் தலை நூறு சுக்கலாகப் பிளந்து தெறித்து விழும்' என்று கூறி மறைந்தார். வரபலம் மிக்க விரோசனன் தன் தந்தையும் சிறிய தந்தையும் ஆண்ட அண்டங்கள் யாவற்றையும் ஆளத் தொடங்கினான். தேவர்கள் வஞ்சகத்தால் தன் தந்தையையும் சிறிய தந்தையையும் கொன்றார்கள் என்று கருதிய அவன் தேவர்களைப் பழி வாங் கினான். அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியாத அளவுக்குத் தொந்தரவுகள் கொடுத்தான். மீண்டும் தேவர்கள் விஷ்ணுவை அடைந்து தங்களுக்குற்ற இன்னல்களை இயம்பிக் காக்குமாறு வேண்டினர். அவர்களுடைய முறையீட்டைக் கேட்ட விஷ்ணுவும் மீண்டும் வன்னி விநாயகரைச் சிந்தித்துப் போற்றினார். பிறகு பேரழகு வாய்ந்த பெண்ணுருவம் கொண்டு விரோசனன் உல்லாசமாகப் பொழுது போக்கும் நந்தவனத்தை அடைந்தார். அப்போது அந்த நந்தவனத்தில் இருந்த விரோசனன் அந்த மோஹினியைப் பார்த்து விழைவு எய்தினான். மோஹினியோ அவனைப் பார்த்தும் பார்க்காததுபோலச் சென்று கொண்டிருந் தாள். விரோசனன் அவள் பின்னே செல்லத் தொடங்கினான். இதனை எதிர்பார்த்திருந்த மோஹினி திரும்பி அவனைப் பார்த்துச் சிரித்தாள். அவன் அவளை நோக்கி நிற்க அவளும் அவன் குறிப்பறிந்தாள். அவனை நிமிர்ந்து நோக்கி, ''சகல புவனங்களிலும் ஆட்சி செலுத்தும் சக்கரவர்த்தியின் விருப்பத் தைப் பூர்த்தி செய்ய விரும்பாதவரும் இருப்பரோ? தங்கள் விருப்பத்தை முழுவதுமாகப் பூர்த்தி செய்வேன்; ஆனால் தங்களுடைய செல்வத்தையோ அதிகாரத்தையோ உத்தேசித்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நான் இணங்க மாட்டேன்; தங்களுடைய அதிரூப லாவண்யமும் திரண்ட வலிமை மிக்க தோள்களும் அகன்று பரந்த மார்பும் கம்பீரத் தோற்றமும் ஒளிவீசும் முகமண்டலமுமே என்னைத் தங்கள்பால் ஈர்த்தது. எனினும் நான் தங்களோடு இசைய ஒரு நிபந்தனை உண்டு'' என்றாள். விரக தாபத்தால் வெந்து கொண் டிருந்த விரோசனன் மோஹினியை வைத்தகண் வாங்காமல் நோக்கி, "அந்த நிபந்தனை யாது?" என்றான். அதற்கு அவளும், "நிபந்தனை மிகவும் அற்பமானதே. தைல ஸ்நானம் செய்து தூய்மையுற்றவரோடு தான் நான் இணங்கி நிற்பேன்; என்னுடைய இந்த அற்பமான நிபந்தனையைப் பூர்த்தி செய்தால் நான் முழுவதும் தங்களுடையவளே. தங்கள் இச்சைப்படியெல்லாம் நான் நடப்பேன்'' என்றாள். மோஹாந்தகாரத்தில் மூழ்கி யிருந்த விரோசனன் உடனே ஏவலர்களை அழைத்துப் பல்வகை வாசனைத் திரவியங்களும் கலந்து நன்கு காய்ச்சிய சிறந்த தைலம் கொண்டுவரும்படிக் கூறினான். அவர்கள் அவ்வாறே இமைப்பொழுதிற் கொணர்ந்தனர். அருகே ஒய்யாரமாக நின் றிருந்த மோஹினி, "திரிபுவன சக்கரவர்த்திக்கு எண்ணெய் தேய்த்துவிடும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமோ?'' என்றாள். மோஹ விடம் தலைக்கேறி மயங்கியிருந்த விரோசனன் அவள் குரல் கேட்டுத் தன் வசம் இழந்தான்; தனக்கு அவள் எண்ணெய் தேய்க்க அனுகூலமாகத் தன் தலையை முன்னே நீட்டினான்; கிரீடத்தை எடுத்து அப்பால் வைத்தான். மோஹினியும் விரைந்து மிக்க லாகவத்தோடு தன் கையில் எண்ணெய் எடுத்து விரோசனன் தலைமீது வைத்தாள்; விரோசனன் தலை வெடித்துச் சிதறியது. அமரர்கள் ஆரவாரம் செய்தனர்; அனந்த சயனனின் அடிகளில் வீழ்ந்து கொண்டாடினர். விஷ்ணுவும் தாம் கருதி வந்த செயல் முடிந்த திருப்தியோடு மோஹினி வடிவத்தை மாற்றிக் கொண்டு சுய உருவோடு வைகுண்டம் திரும்பினார்.

மஹாபலி மாமன்னனாதல்

விரோசனன் மறைந்த பிறகு அவனுடைய மகன் மஹாபலி அரசனானான். மஹாபலி மஹா சிவபக்தன்; பல நூறு ஆண்டுகள் தவம்புரிந்து சிவபிரானிடமிருந்து ஏராளமான வரங்கள் பெற்றவன். நாட்டை அறநெறி தவறாமல் ஆண்டு வந்தான். அவன் ஒருநாள் தன் குலகுருவான சுக்ராசாரியரை அணுகி, "ஆசாரிய ப்ரபோ, காச்யப முனிவர் எங்கள் குல மூலவர். அவருடைய இருமனைவியரில் அதிதியின் பிள்ளைகளான இந்திரன் முதலியோர் விண்ணுலகாட்சி புரிந்து அன்று முதல் இன்று வரை சுகமாக வாழ்கிறார்கள். ஆனால் திதியின் மைந்தர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

களான எங்கள் முன்னோர்கள் பெருவீரர்களாயும் பராக்ரம சாலிகளாகவும் இருந்தும் எப்போதும் அமைதியற்றும் போரை எதிர்நோக்கியும் இருக்கக் காரணம் யாது? இந்நிலையை மாற்றுதல் இயலாதா?'' என வினவினான்.

முக்காலமும் உணர்ந்த சுக்ராசாரியார் மஹாபலியை அன்புடன் நோக்கி, ''மஹாபலியே, நீ பாக்யவான். அமைதி நிறைந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்று நீ எண்ணும் எண்ணமே அதற்குச் சான்று. பிரமன் அண்டங்கள் எல்லாவற்றையும் சிருஷ்டி செய்யும்போது பொதுவான ஒரு விதியை இயற்றி அதனை உலக நியதியாக இருக்குமாறு செய்தான். அவரை விதை நட்டால் அவரையாய் முளைக்குமே அன்றி வேறொன்றாய் ஆவதில்லை. தினை விதைத்தவன் எவ்வாறு தினையையே அறுவடை செய்வானோ அதுபோலவே வினையைச் செய்தவன் அவ்வினையின் பயனையே அடைவான். கொடுந்தெழில் செய்தபின் மன அமைதியை நாடினால் பயனென்ன? அறப் பயனே இயற்கையான என்றுமுள இன்பமாகும். அறத்தைக் கெடுத்து அடையும் இன்பமெல்லாம் உள்ளது போலத் தோன்றிக் கெடும். அவை உண்மையான இன்பமன்று; அமைதி அன்று. இந்திரன் அறத்திற்கு மாறாக நடக்கவில்லை; கொடுந்தொழில்கள் செய்யவில்லை; மற்றவர் திறத்து பயனற்ற போர் தொடுப்ப தில்லை. அதனால் அவனால் வேதங்களில் கூறியபடி அசுவமேத யாகம் செய்ய முடிந்தது. அவ்வாறு அவன் நூறு அசுவமேத யாகங்களைச் செய்து முடித்திருக்கிறான். நூறு அசுவமேத யாகம் செய்தவன் இந்திரனாவான்; தேவர் தலைவன் ஆவான்; என்பது விதியல்லவா? அவ்விதிப்படி இந்திரன் தேவர்கள் தலைவனாகி யாவராலும் கொண்டாடப்படுகிறான். இதற்கு முன் எத்தனையோ பேரரசர்கள் இந்திர பதவி பெற வேண்டு மென்ற பேராசையில் அசுவமேத யாகங்கள் தொடங்கிச் செய் திருக்கிறார்கள். ஆனால் நூறு யாகங்களையும் செய்தவர் ஒருவரும் இலர். ஏதாயினும் இடையூற்றால் இடையே யாகத் தொடர்ச்சி அறுந்துபோகும். இந்திரன் அனுபவிப்பது போன்ற சுகானுபாவங்களை நீயும் பெற விரும்புவாயேயானால் நூறு அசுவமேத யாகங்களைச் செய்து முடிக்க வேண்டும். யாக விதிகளை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். புறத் தூய்மையும் அகத்தூய்மையும் இன்றியமையாதன. மனம் மொழி மெய்களால் ஒருமைப்பட்டு நிற்க வேண்டும். உன்னால் இயலுமாயின் அத்தகைய நூறு வேள்விகளைச் சிறப்பாகச் செய்து முடி'' என்று கூறினார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குல குருவின் கூற்றைக் கேட்ட மஹாபலி அப்போதே அசுவமேத யாகம் செய்யத் தீர்மானித்தான். வசிட்டர், வாம தேவர், ஜமதக்னி போன்ற தபோதனர்களை வருந்தி வரவழைத்து அசுவமேத யாகம் செய்யும் முறைகளைக் கற்றறிந்தான். அம்முனிவர்களையும் குலகுருவான சுக்ராசாரியாரையும் முன்னிட்டு ஒன்றன்பின் ஒன்றாக யாகங்கள் செய்து வந்தான். ஒவ்வொரு யாகத்திற்கும் பல வருடங்கள் கழிந்தன. மனம் தளராமல் முயற்சியைக் கைவிடாமல் யாகவிதிகளுக்குப் புறம் போகாமல் அறநெறி திறம்பாமல் மஹாபலி தொண்ணூற் றொன்பது அசுவமேத யாகங்களைச் செய்து முடித்தான். அதனால் அவ்வசுரகுலத் தோன்றல் அரசர்களுக்கெல்லாம் அரசன் என்னும்படிப் புகழ்வாய்ந்தான்.

வாமனர் தோன்றுதல்

மஹாபலி தொண்ணூற்றொன்பது யாகங்கள் முடித்ததை அறிந்த அமரர் வேந்தன் அகத்துள் கவலை கொண்டான். நூறாவது யாகமும் செய்து முடிப்பானேயாகில் இந்திரபதவி அவனைச் சென்றடைந்து விடும். மஹாபலிஷ்டனும் அறநெறி வழுவாதவனும் ஆகிய மஹாபலி சக்ரவர்த்தி நூறாவது யாகம் செய்துமுடிக்க முடியாமல் செய்வது எவ்வாறு என எண்ணி மறுகினான்; வைகுண்டத்திற்குச் சென்று விஷ்ணுவைப் பிரார்த் தித்து ஒரு வழி காண எண்ணி வைகுண்டம் சென்றான். அங்கு ஸ்ரீநாராயண மூர்த்தியைக் கண்டு வணங்கி மஹாபலி சக்ரவர்த் தியைப் பற்றியும் அவன் தொண்ணூற்றொன்பது யாகங்கள் செய்து முடித்தது பற்றியும் கூறினான்; அதனால் தன்னுடைய பதவிக்கு ஆபத்து வந்திருப்பது பற்றியும் சொன்னான். வைகுண்டவாசர் வாசவனுக்கு ஆறுதல் கூறினார். மேலும் மஹாபலியின் எண்ணம் நிறைவேறாமல் செய்வதாக வாக் களித்தார். வானவர்கோன் சென்றபின் விஷ்ணு மஹாபலியைப் பற்றிச் சிந்தித்தார். நியமங்களிலிருந்தும் அறநெறியிலிருந்தும் தவறாதவனாக இருந்தமையின் அவனை வெல்வதற்கு உரிய உபாயம் காணல் எளிதாக இல்லை.

அதிதி தேவியின் அருந்தவத்திற்குப் பலன் கொடுக்க எண்ணிய பரந்தாமன் அவருக்கு மகனாகத் தோன்றினார். மிகவும் குள்ளமான உருவுடன் இருந்த அவருக்குக் காச்யபர் வாமனர் எனப் பெயரிட்டு அருமை பெருமையாக வளர்த்து வந்தார். ஐந்து வயதிலேயே அவருக்கு உபநயனம் செய்வித்து வேத வேதாங்கங்களைக் கற்பிக்கத் தொடங்கினார். கருவிலே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருவுடைய வாமனர் அவற்றையெல்லாம் ஓதாது உணர்ந்தார். அச்சமயத்தில் மஹாபலி சக்ரவர்த்தி நூறாவது அசுவமேத யாகம் செய்யத் தொடங்குவதாகச் செய்தி வந்தது. வாமனராக வந்த விஷ்ணு அதனை நிறைவேறாதபடி செய்ய எண்ணினார். அதற்குரிய உபாயம் ஒன்றும் தோன்றாத நிலையில் அவர் தம்முடைய தந்தையாராகிய காச்யப முனிவரிடம், "தந்தையே, இப்போது மஹாபலி சக்ரவர்த்தி நூறாவது பரிவேள்வியைத் தொடங்கியிருக்கிறான். இவ்வேள்வி முற்றுப் பெறுமாயின் என் தமையனாகிய இந்திரன் தன் பதவி இழப்பான். மஹாபலி இந்திர பதவியை அடைவான். அவ்வாறு நிகழாமல் இந்திரனைக் காப்பது எவ்வாறு? அதற்குத் தக்கதோர் உபாயத்தைக் கூற வேண்டும்" எனப் பணிந்து வேண்டினார். காச்யப முனிவர், "நீதியும் நேர்மையும் தவறாதவனும் மஹா பலசாலியும் பல வேள்விகளைச் செய்து சிரேயஸ் பெற்றவனும் ஆகிய மஹாபலி சக்ரவர்த்தியை வெல்லுவது எளிதன்று. பல வேள்விகள் செய்து செய்து பழகிய அவன் வேள்வி இயற்றும் முறைகளை நன் கறிவான். அவற்றில் தவறு உண்டாகாமல் மிகவும் எச்சரிக்கை யாகவும்இருப்பான். அவ்வேள்விக்கு இடையூறு உண்டாக்குவது சாத்தியமன்று. ஆயினும் பிரபஞ்ச மூல காரணனாகிய விநாயகருடைய திருவருளைப் பெற்றால் அஃது சாத்தியம் ஆகும்" என்று கூறினார். அதுகேட்ட வாமனர் விநாயகப் பெருமானின் திருவருளை எவ்வாறு பெறுவது என வினவ, காச்யபர் விநாயகப் பெருமானின் சடாக்ஷர மந்திரத்தை வாமனருக்கு உபதேசம் செய்தார். வாமனரும் ஒரு வன்னி மரத்தடியில் விநாயக மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து பூஜை முதலியன செய்து ஷடாக்ஷர மந்திரத்தை ஓராண்டுக் காலம் உருவேற்றி வந்தார். ஓராண்டு முடிவில் விநாயகரும் வாமனருக்குத் தரிசனம் தந்து 'நீ விரும்பும் வரம் யாது?' எனக் கேட்டார். வாமனர் செல்வகணபதியின் சீர்மிகு பாதங்கள் இரண்டையும் பற்றிக்கொண்டு பலமுறை தொழுதார். பின்னர், "உலகெலாம் மலர்ந்த உன் சீரடியை என்றும் மறவாதிருக்க வேண்டும்; அமரர்கோன் என்றும் நிலையான வாழ்வு பெற வேண்டும்; நான் எண்ணிய எண்ணமெல்லாம் இனிது கூட வேண்டும்; அறியாமையால் தவறு செய்வேனாயின் அவற்றையும் பொறுத்தருள வேண்டும்." என வேண்டினார். விநாயகப் பெருமானும் அவ்வாறே வரமளித்து மறைந்தார். அவ்விநாயகருக்கு அன்று முதலாக வன்னி விநாயகர் எனவும் வாமன விநாயகர் எனவும் பெயர்கள் வழங்கின. விநாயகரின் அருள்பெற்ற வாமனர் தொடர்ந்து ஷடாக்ஷர மந்திரத்தை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஜபித்து வந்தார். விநாயகர் அருளால் அவருக்குத் திடீரென ஓர் உபாயம் தோன்றியது. உடனே வாமனர் மஹாபலி சக்ரவர்த்தி வேள்வி செய்யும் சாலைக்குப் புறப்பட்டுச் சென்றார். குள்ளமான உருவமும் சிவந்த மேனியும் ஒளிவதனமும் கொண்ட வாமனரைக் கண்ட மஹாபலி அவரை மகிழ்ச்சியுடன் வர வேற்று ஆசனம் முதலியன அளித்துக் கௌரவித்தான். பிறகு அவரை நோக்கித் தன்னைக் குறித்து வந்த காரியம் யாதென வினவினான்.

ஓங்கி உலகளந்த உத்தமன்

வாமனராக வந்த விஷ்ணு மஹாபலியை நோக்கி, "தன்னிக ரில்லாத தானவப் பெருந்தகையே, நான் காச்யப முனிவருக்கு அதிதியிடம் தோன்றியவன்; என் பெயர் வாமனன். என் தந்தையாரிடம் வேதங்களை முறையாகக் கற்றேன்; இப்போது தனியொரு இடத்தில் இருந்துகொண்டு தவம்புரிய விழை கின்றேன்; அதற்கேற்றதோர் இடத்தில் எனக்கு என் கால்களால் மூன்றடி இடம் தர வேண்டும். இதுவே என் விண்ணப்பம்" என்றார். இதனைக் கேட்ட மஹாபலி ஆச்சர்யம் அடைந்தான். அவரை நோக்கி, "தங்கள் காலடியால் மூவடி மண் என்பது தாங்கள் அமர்வதற்கும் போதாத இடமன்றோ? அவ்வளவு சிறிய இடத்தைத் தானமாகத் தருவதால் எனக்கும் பெருமை இல்லை; தங்களுக்கும் பயன் இல்லை; ஆகையால் கூச்சமின்றித் தேவையான பொருள்களெல்லாம் கேட்க; தாங்கள் கேட்பதைத் தருகிறேன்" என்றான். ஆனால் வஞ்ச உருவில் வந்த வாமனரோ, "எனக்கு மூவடி மண் தவிர வேறேதும் வேண்டா" எனக் கூறி விட்டார்.

அரசனும் மூவடி மண் தானம் தர இசைந்தான். அப்போது, வந்தவர் யாரென அறிந்து கொண்ட குலகுருவாகிய சுக்ரா சாரியர் அரசனைத் தனியே அழைத்து, "வந்திருப்பவன் உண்மையான குள்ளன் அல்ல; அவன் கள்ளன்; மஹாவிஷ்ணுவே இவ்வுருவில் வந்திருக்கிறார்; இதில் ஏதோ சூது இருக்கிறது. இவருக்குத் தானம் செய்யாதே" என்று அறிவுறுத்தினர். அதைக் கேட்ட மஹாபலியின் அகமும் முகமும் மலர்ந்தது; தன் குல குருவை நோக்கி, "எந்தத் தேவர்களுக்கு இணையாக நாம் வாழ வேண்டும் என்று எண்ணுகின்றோமோ அவர்களுக்குத் தலை வனாகவும் அவர்களைக் காட்டிலும் அதிகனாகவும் இருக்கும் மஹாவிஷ்ணுவே நம்மிடம் சிரம் தாழ்த்திக் கரம் தாழ்ந்து தானம் பெறுவார் எனில், நாம் எவ்வளவு உயர்ந்த நிலையை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வகிக்கிறோம்? ஆகையால் இந்தத் தானத்தை அளித்தே தீருவேன்; கொஞ்சமும் தயக்கம் காட்டமாட்டேன்'' எனக் கூறினான். சுக்ராசாரியார் மிகவும் வருத்தமுற்றார். மஹாபலியோ தானத்தைத் தாரை வார்த்துக் கொடுப்பதற்காக நீர் நிறைந்த கெண்டியைக் கையிலெடுத்தான். மஹாபலிக்கு அழிவு நேர்ந்து விடுமோ என அஞ்சிய சுக்ராசாரியார் கெண்டியின் மூக்கு வழியே நீர் வராமல் தடுக்க ஒரு சிறு வண்டாகி அடைத்துக் கொண்டார். தாரை நீர் தடைப்பட்டது. குண்டிகையினின்றும் நீர் விழாததைக் கண்ட மஹாபலி திகைத்தான்; வாமனரோ வராத காரணத்தை உணர்ந்தார். உடனே தம் பவித்திர விரலில் அணிந்திருந்த தருப்பைப் புல்லால் இயன்ற பவித்திரத்தின் நுனியைக் கெண்டியின் மூக்கின்வழிச் செலுத்திக் குடைந்தார். அது வண்டுருவில் நின்ற சுக்ராசாரியாரின் ஒரு கண்ணைக் குத்திவிட்டது: குருதி கொப்பளித்தது; அவர் துன்பம் தாங்காமல் துவண்டு வெளிப்பட்டார். கொடுப்பதை விலக்கிய கொடியவராகிய சுக்ராசாரியார் கண்ணொன்றை இழந்தார். பிறகு மஹாபலி தாரை நீர் வார்த்துத் தானம் செய்து முடித்தான். தானத்தைப் பெற்ற வாமனர் விரைந்து வளரத் தொடங்கினார்; அண்டமுகடு முட்டமிகப் பேருருக்கொண்டு நின்றார். அண்ட சராசரங்கள் அனைத்தையும் இரண்டடியால் அளந்துவிட்ட அரவணைச் செல்வன் மூன்றாம் அடி அளக்க இடமெங்கே என்றார். ''மூன்றாம் அடி அளக்க இடமில்லை என்பது எவ்வாறு? இன்னும் அளக்காத இடம் ஒன்றுள்ளது'' என்றான் மஹாபலி. அளவிலா வியப்படைந்த விசுவரூப மூர்த்தி ஆச்சர்யத்துடன் அவனை நோக்கினூர். மஹாபலியோ முகம் கோணாது, ''ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் திருப்பாதங்களைத் தாங்கும் பாக்கியம் பெற்ற தலையே இன்னமும் அளக்கப்படாத இடம்'' என்றான். சிவபக்திச் செல்வனுகிய மஹாபலி இவ்வாறு கூறியவுடன் பேருருக்கொண்ட பெம்மான் அவன் வாய்மையையும் நேர்மையையும் மனோபலத்தையும் போற்றித் தம் வலக்காலை அவன் தலைமீது வைத்துச் சற்றே அமுத்தினார். மஹாபலி பாதலம் புக்கான். திருமாலுக்குத் தானமளித்த பெருமையாலும் சிவபிரானை அனுதினமும் வழிபட்டு வந்த புண்ணியத்தாலும் வாய்மை நெறி தவறாத நேர்மைக் குணத்தாலும் மஹாபலிச் சக்ரவர்த்தி மேன்மையுற்றான்; இந்திரனும் தனக்கு நிகரில்லை என்னுமாறு பாதலம் ஏழையும் பாங்குறப் பரிபாலித்து அறநெறி ஓங்க வாழ்ந்திருந்தான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கன்னியர் முன்னிய வன்னியிலை

உலகனைத்தும் ஈன்றும் கன்னியென விளங்கும் உமையம்மையும் சங்கார காரணனாய்த் தோன்றும் தனிமுதலான சங்கரனும் முன்னொரு கல்பாந்த காலத்தில் வெள்ளி வேதண்டத்தின் ஒருபால் ஏகாந்தமுற்றிருந்தனர். அப்போது அவர்களுக்குப் பிள்ளையெனத் தோன்றிய மூத்த பிள்ளையாரின் பெருமையெலாம் பேசிக் களித்தனர். அவ்வுரையாடலினூடே அம்மையார் அந்திவண்ணப் பெருமானை நோக்கி, "பூதலத்தில் எத்தனையோ புகழ்பெற்ற பொருள்கள் உண்டு; எழிலுற்ற பொருள்கள் உண்டு; பயன்மிகு பண்டங்கள் உண்டு; நறுமண மலர்கள் உண்டு; பிணிதீர்க்கும் முறிபல உண்டு. ஆயினும் இவையொன்றிலும் நாட்டம் கொள்ளாது நம் நால்வாய்க் குழவி வன்னியிலையை விரும்பிடக் காரணம் யாதோ?'' எனக் கேட்டாள். கண்ணுதற் பண்ணவனும் மேகம் கண்ட கேகயம் போல் நகைமுகம் கோட்டி நின்ற நங்கை சிவகாமியை நோக்கிப் பின்வரும் வரலாற்றைப் புகன்றார்.

பூவுலகில் ஒரு காலத்தில் பிரியவிரதன் என்றொரு வேந்தன் ஆட்சி புரிந்துவந்தான். தோள்வலியும் துணைவலியும் மிக்கிருந்த அவன் நானிலம் புகழச் செங்கோல் செலுத்தி வந்தான். அவனுக்கு மனைவியர் இருவர்; மூத்தவள் கீர்த்தி என்பாள்; பட்டத்து மகிஷி; பதிசொற் கடவாத பாவை. மற்றொருத்தி பிரபை என்பாள்; அழகு மிகுந்தவள்; தன் பெண்மைச் சேஷ்டைகளால் பிரியவிரதனைத் தன் அந்தப்புரத்திலேயே அடைந்து கிடக்கும்படிச் செய்தாள். அகங்காரம் மிக்க அவளுக்கு அழகிய புத்திரன் தோன்றினான். அவனும் வளர்ந்து பருவம் முதிர்ந்து பாஞ்சாலன் மகளைத் திருமணம் செய்துகொண்டான். இதனாலெல்லாம் பிரபையின் செருக்கு மேன்மேலும் பெருகியது.

ஒருநாள் தன் கணவனைக் காண வேண்டி பிரபையின் அந்தப்புரத்திற்குக் கீர்த்தி வந்தாள். அவளைக் கண்ட பிரபை பெருஞ்சினம் கொண்டு அவளை வாயில் வந்தபடியெல்லாம் வைது காலால் உதைத்து வெளியே தள்ளினாள். இவற்றையெல்லாம் கண்ணாற் கண்டும் காதாற் கேட்டும் மன்னவன் வாய்திறந்தானில்லை. பிரபைமீது கொண்ட மையல் அவனை ஊமையாக்கியது; குருடனாக்கியது; செயலற்றவனாக்கியது. தன்னை இவ்வாறு நடத்தியதைக் கீர்த்தியால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை; நெஞ்சு நைந்தது; உடல் வாடியது; மானம் கூசியது; அரண்மனையினின்றும் வெளியேறி உயிர்விடத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

துணிந்தாள். அச்சமயத்தில் அருளே உருவான அந்தணர் ஒருவர் அங்கு வந்தார். தன் துன்பத்தையெல்லாம் மனத்துள் பொதிந்துகொண்ட கீர்த்தி வந்த அந்தணரை வரவேற்று வந்த காரியம் யாதென வினவினாள். ஆனால் அந்தணரோ அவ் வனிதையின் அழகிய முகம் வாடியிருப்பதையும் உடல் தளர்ந் திருப்பதையும் கண்டு அவள் உள்ளத் தளர்ச்சியையும் புரிந்து கொண்டார்; அவளை ஆசீர்வதித்து ஆதரவுடன் பேசி அவளுக்குற்ற துன்பத்தைக் கண்டறிந்தார். பின்னர் அவ்வரசியை நோக்கி, ''அகங்காரம் அழியும் காலம் வந்துவிட்டது; நின் கீர்த்தி பெருகும் காலம் வருகிறது. ஆகவே, கவலை கொள்ள வேண்டா; ஐங்கரச் செம்முக விநாயகரை அடிபணிந்து போற்றி நியமத்துடன் நாள்தோறும் பூசனையாற்றி வருக. இன்பம் எய்தும் காலம் விரைவில் வரும்'' என அன்புடன் கூறி பூசை பண்ணும் முறைகளையும் போதித்துத் தன்வழிச் சென்றார்.

கீர்த்தியும் மகிழ்ந்து தன் தோழியரை அழைத்து பூசைக்கு வேண்டிய பரிகலங்கள் யாவும் திருத்தச் சொன்னாள். நந்தன வனத்தில் மந்தார மரத்தடியில் சிந்தாகுலம் தீர்த்துப் பிந்தா வளம்தரும் தந்திமுகப் பெருமானை அறுகு கொண்டு அனு தினமும் அந்தணர் அருளிய அம்முறையே கடைப்பிடித்து மனம் மொழி மெய்கள் ஒன்ற வழிபாடும் அர்ச்சனையும் ஆராதனையும் செய்து வந்தாள். இவ்வாறு பலநாட்கள் கழிந்தன. ஒரு நாள் பூஜா திரவியங்களைச் சேகரித்து வைத்த தோழியர் எங்கெங்கும் அலைந்து தேடியும் அருச்சனைக் குரிய அறுகம்புல் கிடைக்க வில்லை. எங்கும் திரிந்து இளைத்த அத்துணைவர்கள் தம் எதிரில் கண்ட வன்னிமரத்தையணுகி அதிலிருந்து இலைகளைப் பறித்து வந்து வைத்திருந்தனர். பூசனை புரிய வந்த அரசி அறுகு காணாது அயர்ந்தாள். தோழியர் எங்கும் அறுகு கிடைக்கவில்லை என்பதை எடுத்துக் கூறி விநாயகர் வழிபாடு இடையூறின்றி நிகழும்பொருட்டு வன்னி பத்திரம் கொண்டு வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அதுகேட்ட அரசி ஒருவாறு மனம் தேறி வன்னியிலை தூவி அருச்சனை புரிந்து வழிபாடு செய்து முடித்தாள். ஆயினும் அறுகு கொண்டு அர்ச்சனை புரியாமை அவள் அகத்தை வாட்டியது. அதனால் அவள் அறுகு எடுத்து ஆராதனை புரியாத பாவம் நீங்க அன்று உணவொழித்து விரதம் இருந்தாள். அன்றிரவு அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும்போது களிற்றுமுகக் கடவுள் அவள் கனவில் தோன்றி, ''அறுகம் புல்கொண்டு வழிபாடு செய்யவில்லையே என மறுகும் மங்கையே, நின் மனவருத்தம் ஒழிக; வன்னியிலை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தூவிச் செய்த வழிபாடு முற்றிலும் முறையானதே. நின் வழிபாடு எமக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது. விரைவில் உனக்கொரு மகன் தோன்றுவான். அவனுக்குக் கிப்பிரபிரசாதன் எனப் பெயரிடுக. நான்காம் ஆண்டில் அவனுக்கு ஒரு விஷகண்டம், உண்டு. அதுவும் யோகி கிருச்சமதருடைய பேரருளால் நீங்கும்; நன்மைகள் மேன்மேலும் ஓங்கும்" எனத் திருவருள் பாலித்து மறைந்தார். வேதனை நீங்கிய வேந்தன் மனைவி விநாயகர் அடியிணையை விடாது போற்றி வந்தார்.

நாள் பல கழிந்தன. பிரபையின் களிமுகம் ஒளி மாழ்கியது; பிணிமுக அழகொழிந்து பிணி வந்தெய்தியது. வந்த பிணி தீராப் பிணியாய் கண்டார் வெறுக்கும் தகையவராயிற்று. பிரியவிரதன் அவளை விட்டுப் பிரிந்தான்; கீர்த்தியிடம் பிரியம் வைத்தான்; நெடுநாள் பிரிந்திருந்த பேதை கீர்த்தியும் பிரியவிரதனும் மீண்டும் கூடினர். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? விரைவில் அவர்களுக்கு ஓர் ஆண்மகவு தோன்றியது. கீர்த்தியும் மறவாது அக்குழந்தைக்குக் கிப்பிரபிரசாதன் எனப் பெயரிட்டு அருமையுடன் வளர்த்து வந்தாள்.

பட்டத்து மகிஷிக்குப் பாலகன் தோன்றியதை எண்ணி எண்ணி இளையவள் பொறாமை கொண்டாள். அப்பாலகன் தோன்றியதால் தன் மகனுக்குப் பட்டம் கிடைக்காதே என விம்மினாள். தன் மகனுக்குப் பட்டம் கிடைக்க என்ன செய்ய வேண்டும் என்று பல நாட்கள் தன் மனத்துள் ஆராய்ந்து வந்தாள். பொறாமை பெருகியதே அன்றி வழியொன்றும் புலப்படவில்லை. கிப்பிரபிரசாதனுக்கு நான்கு வயதாயிற்று! திடீரென்று பிரபைக்கு ஒரு கொடிய வழி தோன்றியது. கிப்பிர பிரசாதனைக் கொன்று விடத் துணிந்தாள். அவன் உண்ணும் உணவில் யாரும் அறியாமல் நஞ்சைக் கலந்துவிட ஏற்பாடு செய்தாள். அச்செயலும் நிறைவேறியது. கீர்த்தியும் அது நச்சுணவு என்று அறியாது நான்கு வயது பாலகனுக்கு ஊட்டினாள். பசித்த பாலகன் அதனை உண்டான். உணவில் நின்ற விஷம் குருதியிற் கலக்கத் தொடங்கியது. அவன் மதி மயங்கியது. சற்று நேரத்தில் தன் நினைவிழந்து தரைமீது சாய்ந்தான். காரணம் புரியாத கீர்த்தி கதறினாள். முதுபெரும் மருத்துவர்கள் விரைந்து வந்தனர். குழந்தையைச் சோதித்த அவர்கள் கொடிய விஷம் குருதியிற் கலந்ததை உணர்ந்தனர். முறிப்பு மருந்துகள் கொடுத்தனர். ஆயினும் அக்கொடிய விஷம் தலைக்கேறி விட்டது. அப்போதுதான் கீர்த்திக்குப் பொறி தட்டியது. 'குழந்தைக்கு உண்டாகும் விஷகண்டம் கிருச்சமதரால் நீங்கும்' என்ற அருள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வாக்கு நினைவுக்கு வந்தது. குழந்தையைத் தூக்கிக் கொண்டு கிருச்சமதர் ஆச்ரமம் நோக்கி ஓடினாள் கீர்த்தி. நிகழ்ந்தன வற்றை ஞான திருஷ்டியால் உணர்ந்த அம்முனிவரும் புறப்பட்டு எதிரில் வந்தார். அம்முனிவர் கீர்த்தியை இடைவழியிற் கண்டு, ''அம்மா, ஒருமுறை நீ விநாயகப் பெருமானை வன்னியிலை கொண்டு வழிபட்டாய் அல்லவா? அந்தப் பூஜையின் பலனை இப்பாலகனுக்குத் தத்தம் செய்து கொடு. அவன் பிழைத்தெழுவான்'' என்றார். அவளும் அவ்வாறே செய்ய உறங்கியவன் விழித்தெழுந்தாற்போல எழுந்தான் அப் பாலகன். கீர்த்தி பாலகனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்; கிருச்சமதரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினாள். பிறகு ''வன்னியிலை கொண்டு செய்த வழிபாட்டுக்கு இவ்வளவு மகிமை உண்டு என யான் அறியேன். அதன் காரணத்தையும் மற்ற மகிமைகளையும் எனக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்'' எனக் கீர்த்தி பணிந்து வேண்டினாள்.

சமியும் மந்தாரனும்

கீர்த்தியின் பணிவுரையால் மகிழ்ந்த கிருச்சமதர் பின்வரும் வரலாறுகளை அவளுக்கு எடுத்துக் கூறினார்.

முன்னொரு காலத்தில் ஔரவர் என்றொரு தவசீலர் தம் தர்மபத்னி சுமேதையுடன் இல்லற தர்மம் வழுவாமல் தவமியற்றி வந்தார். அவர் நந்திகோத்திரர் என்ற பெருந்தவ முனிவரின் புதல்வர். ஆகவே இயல்பாகவே அவர் எவ்வுயிரும் தம்முயிர் போல் கருதி வந்தார்; வேத வேதாங்கங்களில் சிறந்த பயிற்சி பெற்று யோகம் கைவரப் பெற்றிருந்தார். அவருக்கு அருமை யாக ஒரு மகள் தோன்றினாள். அம்மகளுக்கு சமி எனப் பெயரிட்டுக் கண்போற் காத்து இனிது வளர்த்து வந்தார். சமியும் தன் புத்தி சாதுர்யத்தால் பலகலைகளைக் கற்று அழகாலும் அறிவாலும் உயர்ந்திருந்தாள்.

அக்காலத்தில் ஆசார்ய சிரேஷ்டரான சௌனக முனிவர் பல மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தார். அத்தகைய மாணாக்கர்களில் முதல் மாணாக்கனாய்த் திகழ்ந்தவன் மந்தாரன் என்பவன். அவன் தௌமிய முனிவரின் தனயன் ஆவான். கல்வி அறிவு ஒழுக்கம் ஆகிய மூன்றிலும் சிறந்தவன். தேக வலிமையும் காந்தியும் மிக்கவன். ஔரவர் தம் மகளை மந்தாரனுக்குத் திருமணம் செய்வித்தார். மந்தாரன் தன் மனைவியை அவளுடைய பெற்றோர்களின் பாதுகாப்பில் விட்டுவிட்டு மீண்டும் சௌனக முனிவரை அடைந்து மேலும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கல்விப்பயிற்சி பெற்றான். கல்விப்பயிற்சி முடிந்தபின் தன் ஆசிரியரிடம் அனுமதி பெற்றுச் சமியை அழைத்து வரச் சென்றான். சமியின் பெற்றோர்களின் வீட்டை அடைந்து அவர்களால் நன்கு உபசரிக்கப் பெற்ற மந்தாரன் தன் மனைவியை அழைத்துக் கொண்டு தன் ஆசிரியர் ஆச்ரமம் நோக்கிப் புறப்பட்டான்.

அவர்கள் இருவரும் கானகத்தினூடு இயற்கைக் காட்சிகளைக் கண்டு ரசித்துக் கொண்டே பயணம் செய்தனர். இளமை முறுக்கும் வித்யா கர்வமும் கொண்ட அவர்கள் மிகவும் உல்லாசமாகச் சென்றனர். அப்போது அவர்கள் எதிரே புருசுண்டி முனிவர் வந்தார். அவருடைய புருவ மத்தியிலிருந்து தும்பிக்கையொன்று தொங்குவதும் வயிறு மிகப்பெருத்து இருப்பதும் அவர்களுக்கு மிகவும் விநோதமாய் இருந்தது. அவர்கள் அம்முனிபுங்கவரின் பெருமையை அறியவில்லை. ஆனால் அவருடைய உருவத்தைக் கண்டு நகையாடினர். முக்காலமும் உணர்ந்த யோக முனியான புருசுண்டியை அவர்கள் அலட்சியம் செய்தார்கள். அவர்களுக்கு இயல்பாயிருந்த அடக்க குணம் அதீத உற்சாகத்தால் அழிந்து விட்டது. இளமை வேகம் விவேகத்தை அழித்துவிட்டது. புருசுண்டி முனிவருக்குக் கோபம் பொங்கியது. ஆனைமுகத்து அண்ணலுக்கு ஈடான அவர் அவர்களை நோக்கி, "என் உருவைக் கண்டு எள்ளி நகையாடிய நீங்கள், என் உணர்வைப் புண்படுத்திய நீங்கள், உணர்ச்சியற்ற மரங்கள் ஆகுக" எனச் சாபமிட்டார்.

சாப உரை கேட்ட சமியும் மந்தாரனும் திகைத்தனர். தம் தவற்றை உணர்ந்து தவமுனியின் திருவடி சார்ந்து மன்னிக்குமாறு வேண்டினர். அவர்களின் நிலைகண்டு இரக்கம் கொண்ட அருளாளர் அவர்களை நோக்கி, "சுண்டி நீண்ட என் முகத்தையும் தொங்கும் தொந்தியையும் கண்டல்லவா என்னைப் பரிகசித்தீர். ஆகையால் அவ்வுருவமே தாங்கிவரும் களிற்று முகக் கணபதி உங்களிடம் அணுகும்போது உயர்வு பெறுவீர்கள்; என்றும் இம்மர வடிவாகவே இருந்து அனைவராலும் போற்றி வணங்கப் படுவீர்; இறுதியில் முக்தியும் உண்டு" என்றருளிச் செய்து போயினார். குணமென்னும் குன்றேறி நின்ற பெரியோர் வெகுளிக் கூறினும் அருளிக் கூறினும் அவ்வாறே பலித்தல் உண்மையன்றோ? அவர்கள் வெகுளி கணநேரமே நிற்கும் எனினும் அக்கணத்தில் உண்டாகும் அழிவை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. மந்தாரன் மநதார மரமாகவும் சமி சமி மரமாகவும் மாறி நின்றனர். பற்பல நாட்கள் கழிந்தன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தன் மனைவியை அழைத்துக்கொண்டு வருவதாகச் சொல்லிச் சென்ற மந்தாரன் வராததைக் கண்டு சௌனக முனிவர் கவலை கொண்டார். தம் மாணாக்கர்களில் சிலரை ஔரவரிடம் அனுப்பி வைத்தார். ஔரவர் அம்மாணாக்கர்களிடம் மந்தாரன் தன் மனைவியை அழைத்துக் கொண்டு மீண்டு சென்றுவிட்டதாகக் கூறவே அம்மாணாக்கர்கள் விரைந்து தம் ஆசிரியரை அடைந்தனர். ஔரவரும் பின்னே புறப்பட்டுத் தம் மகளையும் மருமகனையும் தேடிக் கொண்டு வந்தார். சௌனக முனிவர் தம் ஞான திருஷ்டியால் மந்தாரனுக்கும் சமிக்கும் நேர்ந்த கதியை அறிந்தார். ஔரவரும் அவ்வாறே உணர்ந்து சமியையும் மந்தாரனையும் மீட்கும் பொருட்டு விநாயக மூர்த்தியை நோக்கிப் பன்னிரண்டு ஆண்டுக் காலம் தவமியற்றினார். மந்தாரனின் தந்தையார் நிலை கேட்டு மனம் மாழ்கி மரணம் அடைந்தார்.

அவர்களுடைய தவத்திற்கு விநாயகப் பெருமான் ப்ரஸன்ன முகம் ஒளி வீச பத்துப் படைகள் தாங்கிய பத்துக் கரங்களும் பத்துத் திசை குறித்து நிற்க அருள் கொழிக்கும் கண்கள் அழகாகத் துலங்க கம்பீர நடைகாட்டும் சிம்ஹ வாஹனத்தின் மேல் சிறப்புறத் தோன்றி அவர்களுக்குக் காட்சியளித்தார். பரவசமடைந்த அவர்களை நோக்கி எம்பிரான், ''என் வாக்குப் பொய்த்தாலும் என் அடியார் வாக்குப் பொய்க்காது; என் வாக்கை மாற்றினாலும் என் அடியார் வாக்கை மாற்ற இயலாது; சகல தேவர்களும் முனிவர்களும் செய்த தவங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த் தாலும் புருசுண்டி முனிவர் இயற்றிய தவத்துக்கு ஈடாகாது; ஆகையால் மந்தாரனும் சமியும் மர உருவிலேயே இருப்பர். அதனை மாற்ற இயலாது. ஆயினும் புருசுண்டி முனிவர் அருள் செய்தமையாலும் நீங்களும் பெருந்தவம் செய்து முயன்றமையாலும் அவ்விருவரும் மர உருவிலேயே சகல போகங்களையும் பெறுவர்; யாவராலும் போற்றிக் கொண் டாடத்தக்க நிலை எய்துவர். அவர்கள் நிழலில் யாம் அமர்ந் திருப்போம். வன்னிபத்திரங் கொண்டு மந்தார மரத்தடியில் என்னை வழிபடுபவர்கள் ஏழேழ் பிறவியிலும் நரகம் புகார். அவர்தம் தீவினை யாவும் எரியிற் பஞ்சென இமைப்போதில் அழியும்'' எனப் புகன்று அம்மந்தார மரத்தடியில் வன்னிமரத் தருகே ரத்னமயமான பொன்னரியாசனத்தில் வீராசனமிட்டு அமர்ந்தார்.

சமியின் தாய் வன்னி விநாயகரை ஆச்ரயித்து விண்ணுலகம் அடைந்தார். சமியின் தந்தையோ தம் யோக மகிமையால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சூக்ஷ்ம சரீரம் பெற்று சமியின் கருப்பந்துட்புக்கு சமீகர்ப்பர் ஆனார். வேள்வித் தீ உண்டாக்கும் பெருமை வன்னி மரத்திற்கே உண்டாயிற்று. வேள்வித் தீ மூலம் விண்ணவர்க்கு ஆக்கும் ஹவிர்ப்பாகத்தை எடுத்துச் செல்லும் பேறு சமீகர்ப்பருக்கு உண்டாயிற்று. சௌனகாதி முனிவர்கள் களிற்றுமுகக் கடவுளை மந்தார நீழலில் வன்னி பத்ரம் கொண்டு வழிபாடு செய்து பெறும் பேறு அடைந்தார்கள்.

இதனைக் கேட்டு மகிழ்ந்த கீர்த்தி கிருச்சமதரைப் போற்றி வணங்கினாள். கிருச்சமதரும் ஆசி நல்கி மற்றொரு வரலாற்றையும் பின்வருமாறு விரித்துரைத்தார்.

வன்னியிலை வேட்ட விநாயகர்

முன்னொரு யுகத்தில் பிரமதேவன் சிவபிரானைக் குறித்த யாகம் ஒன்று செய்ய எண்ணினார். உலகம் முழுவதும் ஆராய்ந்து அதற்குரிய இடம் பொதிகை மலையே எனத் தேர்ந்து ஆங்கே ஓரிடத்தைப் புனிதம் செய்து யாகசாலை அமைத்தார். யாகத்திற்கு வேண்டிய சாமக் கிரியைகள் எல்லாம் தொகுத்தார். யாகம் காண வந்தவர்களுக்கெல்லாம் இனிய உண்டி அளிக்கும் சாலைகள், தங்குமிடங்கள், ஸ்நாநம் ஜபம் முதலியன செய்வதற்கேற்ற சிறந்த இடங்கள், அனைத்தையும் பாதுகாப்பதற்குத் தேவையான துணைவர் கூட்டம் ஆகிய யாவற்றையும் மிக நல்ல முறையில் ஏற்பாடு செய்தார். யாகம் தொடங்க வேண்டிய நாள் நெருங்கியது. பிரமதேவர் தன் இரு மனைவியருள் காயத்ரியை மட்டும் யாகசாலைக்கு அழைத்துச் சென்றார். யாகம் செய்பவருக்கு யஜமானன் என்று பெயர். யஜமானன் எந்த ஒரு காரியம் செய்வதாயினும் தன் மனைவி களோடு கலந்துகொண்டு அவர்களையும் கூடவே வைத்துக் கொண்டு யக்ஞத்தை முடிக்க வேண்டும் என்பது விதி. ஆனால் விதி யாரை விட்டது? பிரமதேவர் சாவித்ரியை இல்லத்தில் இருத்தி காயத்ரியை மாத்திரம் யாகசாலைக்கு அழைத்துவந்து வேள்வியைத் தொடங்கினார். இந்திராதி தேவர்களும் மகா விஷ்ணுவும் யக்ஷர் நாகர் கின்னரர் முதலியவர்களும் பூவுலக மாந்தரும் முனிவர்களும் யோகிகளும் வேள்விச் சாலையில் நிறைந்திருந்தனர். அப்போது மூவுலகும் நடுங்குமாறு மூர்த் தண்யமான கோபத்துடன் சாவித்ரி தேவி உள்ளே நுழைந்தாள். யாவரும் நிலைகுலைந்தனர். என்ன விபரீதம் நேருமோ என எல்லாரும் விதிர் விதித்தனர். சாவித்ரி தேவியோ நேராக பிரமதேவர் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்தார். அவரை நோக்கி,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

"என்னை ஒதுக்கி வைத்து இவ்வேள்வி இயற்றுதல் முறையாகுமோ? வேதச் சடங்குகளை முறைப்படுத்திய நான்முகன் இது செய்வது தகுமோ?" என வினவினாள். பின்னர் கோபம் பொங்க ஆங்கே வீற்றிருந்த நாரணன், இந்திரன் முதலானவர்களை நோக்கி, "முறைபிறழ்ந்து நான்முகன் செய்யும் இவ்வேள்விக்கு உடன் பட்டு வந்த நீங்கள் யாவரும் நீரெனக் கரைந்து பள்ளம் கண்ட இடமெல்லாம் பாய்ந்து பரிதவிப்பீர்" எனக் கடுஞ்சாபம் இட்டார். அவ்வளவில் அனைத்து தேவர்களும் நீராகி ஓரிடத்தில் நிற்க முடியாமல் நிலைகொள்ளாமல் பள்ளம் நோக்கிப் பாய லானார்கள். அப்பெரு வெள்ளத்தில் யாகசாலை முழுகிவிட்டது. சேமித்து வைத்திருந்த பொருளெல்லாம் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. இச்செய்தி உலக முழுவதும் பரவியது.

நீராய்ப் பெருகியோடிய இந்திராதி தேவர்களின் இல்லத் தரசிகள் நான்முகனிடம் கூட்டமாய் வந்து சேர்ந்தனர். தங்கள் தங்கள் கணவர்களை மீட்பதற்குரிய வழி யாதென மிக்க வருத்தத் தோடு கேட்டனர். பிரமதேவரோ யாதொன்றும் கூறத் தோன்றாமல் பிரமை பிடித்தவரானார். வழியொன்றும் புலப் படாதவராகி நெடுநேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். இறுதியில் சிவபிரானைச் சரணடைந்து ஒரு வழி காண்போம் எனத் தேறினார்; லக்ஷ்மிதேவி முதலானவர்களை நோக்கி, "விரைவில் இந்நிலைமையை மாற்றுவதற்குச் செய்ய வேண்டுவன செய்வேன்" என உறுதியளித்து அவர்களைச் சமாதானம் செய்து அனுப்பி வைத்தார்.

பிறகு நான்முகனார் பெண்ணொரு பாகனாகிய பிறை யணிந்த பெருமானைத் தம் சிந்தையிற் பிணித்துக் கடுந்தவம் புரிந்தார்; தவத்திற் குருகிய தங்கமலை வில்லோன் ரிஷபா ரூடராக அம்பிகை ஸமேதராகக் காட்சியளித்தார். சிருஷ்டித் தொழிலை உரிமைத் தொழிலாகக் கொண்டிருந்த பிரஜாபதி உலகெலாம் மலர் சிலம்படியை இருகைகளால் பற்றிப் பாடிப் பரவித் தொழுது "சிவபெருமானே, நின்னை நோக்கிச் செய்யத் தொடங்கிய வேள்வி தொடங்கா முன்னமே அழிந்தது. வேள்வி காண வந்த தேவரும் முனிவரும் நீராயினர். நல்லதை எண்ணி நல்லதைச் சொல்லி நல்லதைச் செய்ய எண்ணினேனேயல்லாமல் வேறு முறை பிறழ்ச்சி உளதோ? சாவித்திரியையும் அழைத்துச் சென்று என் அருகில் இருத்தி யாகம் தொடங்காதது என் குற்றம் தான். அக்குற்றத்திற்குத் தண்டனை அனுபவிக்க வேண்டியவன் யானே. அங்ஙனமிருக்க அத்தனை தேவர்களும் அவர்களுடைய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பத்தினியர் வாட நீரானமைக்குக் காரணம்தான் யாதோ? அனைவரும் மீண்டும் தத்தம் சுய உருப்பெற அருள வேண்டும். எடுத்த வேள்வி இனிது முடிய இன்னருள் பாலிக்க வேண்டும்'' எனப் பலவாறு வருந்தியும் பணிந்தும் வேண்டினார்.

நீர் தலை மண்டிய நின்மலன் நான்முகனை நோக்கி, ''ஆரணம் முற்றும் அடங்கக் கற்றும், ஆதியம்பரமாய் அனைத்துக்கும் காரண முதலாய், காணும் நடுவாய், மறையும் முடிவாய் சிந்தைக்கும் அறிவுக்கும் எட்டாத் தத்துவமாய் விளங்கி நிற்கும் விநாயகப் பெருமானை வணங்கியே நற்கருமம் யாவும் தொடங்க வேண்டும் என்பதனை மறந்தாயே. சர்வித்திரியின் சினமொன்றோ இவ்விடையூற்றை உண்டாக் கியது? அன்று! அன்று!! வேள்வி தொடங்குமுன் விநாயகரைச் சிந்திக்காமல் தொடங்கிய செய்கையே சாவித்திரியின் சினமாய் பரிணமித்து விக்கினம் பல செய்தது. ஆகவே களிற்றுமுகக் கடவுளைக் குறித்துத் தவம் செய்க. விக்கினங்கள் நீங்கும். விண்ணவரும் முன்னுருப் பெறுவர்'' என அருளி மறைந்தார்.

உற்சாகமுற்ற சிருட்டிக் கடவுள் லக்ஷ்மி முதலான தேவ மாதர்களை மீண்டும் வரச்செய்து சிவபிரான் அருளிய மெய் யுரையைக் கூறினார். பிறகு அவர்கள் யாவரும், பல்லாண்டு களுக்கு முன் பாற்கடல்நாதன் மந்தாரமரத் தடியிற் போற்றிப் பணிந்து வழிபட்ட வக்ரதுண்ட விநாயகரைச் சேர்ந்து மனத்தாலும் சொல்லாலும் மெய்யாலும் ஒன்றி புத்தியும் ஆன்மாவும் இழைந்து நிற்க முறைபிறழாது வழிபட்டனர். இவ்வாறு பல்லாண்டுகள் கழிந்தன; பலனேதும் இல்லை; அனைவர் மனத்திலும் தளர்ச்சி உண்டாயிற்று; வழிபாட்டு முறையில் குறைபாடு உள்ளதோ? எனக் கவன்றனர். அப்போது வான்கீறி வந்ததொரு வாய்ச்சொல்: ''சமீ பத்ர அர்ச்சனை சங்கடம் தீர்க்கும் பூசனை''. யாவரும் வியப்புற்றுப் புனித நீராடி வேத கோஷம் முழங்க விநாயக மந்திரம் துலங்கக் களிற்றுமுகனை முன்னி வன்னியிலை தொகுத்துப் பத்தி முற்றி அர்ச்சனை ஆற்றினார்கள். அகம் மகிழ்ந்த ஆகுவாகனரும் அவர்கள்மீது அருள்நோக்கம் செலுத்தி அவர்களுடைய புறக் கண்ணுக்குப் புலனாயினர். அனைவரும் மகிழ நீராய்ச் சஞ்சலித்து நின்ற நாரணன் முதலான தேவர்கள் தத்தம் உருவைத் தாங்கொள அருளிச் சாப விமோசனம் செய்தார். இவ்வாறு சாப விமோசனம் பெற்ற தேவர்கள் தம் உலகில் வெள்ளை மந்தார மரம் வளர்த்து அதன் நிழலில் ஐங்கரத் தண்ணலைப் பிரதிட்டை செய்து வக்ரதுண்ட விநாயகர்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஹேரம்ப விநாயகர் எனப் பெரும் பெயர் சூட்டி வன்னிபத்திரம் தொகுத்து அருச்சனை புரிந்து ஐயன்பதம் நிதம்பரவிப் பேரின்பமெய்தினார்கள்.

நான்முகப் பெருமான், மந்தார நீழலில் மகிழ்ந்தமர்ந்த மதகளிற்றை மேலும் பன்னிரண்டு ஆண்டுகள் வழிபட்டு சமீபத்ர அர்ச்சனை புரிந்தார். வன்னியிலையின் குளிர்ச்சியால் மனம் குளிர்ந்த விநாயகப் பெருமானின் அருளாகிய குளிர் நீரால் சாவித்திரி தேவியின் சினத்தீ அவிந்தது. போதனும் சாவித்திரி தேவியின் மனத்தைக் கனிவித்தார். பிறகு பொதிகை மலைச் சாரலில் சாவித்ரி, காயத்ரி ஆகிய இருவரையும் தம் பக்கம் இருக்கச் செய்து தாம் முன்பு நினைந்த வேள்வியைச் செம்மை யாக முற்றுவித்து மனநிறைவுடன் சத்தியவுலகு புகுந்தார்.

20. கிப்பிரபிரசாதன்

கிருச்சமத முனிவரின் அருளாசி

வன்னியிலை அர்ச்சனையின் பெருமைகளை நன்கு கேட்டறிந்த கீர்த்தியும் கிப்பிரப்பிரசாதனும் மீண்டும் கிருச்சமத முனிவரை வணங்கினர். கீர்த்தி முனிவரை நோக்கி, "அருட்கடலே, தங்கள் அருளால் பிழைத்தெழுந்த என் புதல்வனுக்கு அவன் வாழ்க்கையில் எவ்வித இடையூறும் இல்லாமல் இருக்க வேண்டும். மிகச்சிறந்த புத்தி பலமும் தேக பலமும் வாய்ந்தவனாகவும் யாராலும் வெல்லப்படாதவனாகவும் இருக்க வேண்டும். எவ்வுலகத்தாரும் இவனுக்கு அடங்கி இவனாணையை நிறைவேற்ற வேண்டும். அத்தகைய சக்தியைப் பெறும் வண்ணம் தாங்கள் அருள்புரிய வேண்டும்" என்று பிரார்த்தித்தாள். கிருச்சமத முனிவர் அவ்வாறே ஆகுக என ஆசி கூறி கிப்பிரப்பிரசாதனை நோக்கி, நீராடி நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துத் தூய்மை பெற்று வருமாறு கூறினார். கிப்பிரப்பிரசாதனும் அவ்வாறே புனிதனாகி விரைந்து வந்தான். முனிவர் அவன் நெற்றியில் தம் கையால் திருநீறு சாத்தி வலப்புறம் அமர்த்தி விநாயகப் பெருமானின் திருமந்திரத்தை அன்புடன் உபதேசித்தருளினார். பிறகு அம்மந்திரத்தின் தன்மையையும் வலிமையையும் விளக் கினார்; அதனை உருவேற்றும் முறையைத் தெளிவித்தார். கிப்பிரப்பிரசாதனும் ஜபம் செய்ய வேண்டிய நுணுக்கங்களை எல்லாம் தெரிந்து கொண்டான். அதன்பிறகு அம்மஹாமுனிவர் கிப்பிரப்பிரசாதனிடம், "ஸக்ல தேவர்களும் விரும்பி வந்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விசுவநாதரை தரிசித்துப் பேறு பெறும் சிறந்த க்ஷேத்ரமாகிய காசி நகரத்தை அடைந்து விசுவநாதரின் திருமுன்பு அமர்ந் திருக்கும் துண்டி விநாயகர் சந்நிதியில் இருந்து இம்மந்திரத்தை உருவேற்றுக'' என ஆணையிட்டார். கிப்பிரப்பிரசாதனும் அவ்வாறே செய்வதாக ஒப்புக் கொண்டான்.

அப்போது கீர்த்தி மீண்டும் முனிவரைப் பார்த்து, ''இப் பூவுலகில் எண்ணற்ற புண்ணிய க்ஷேத்திரங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றாகிய காசி க்ஷேத்திரத்தை மாத்திரம் மிகவும் உயர்வாக மதிக்கக் காரணம் என்ன?'' என்று கேட்டாள்.

காசியின் பெருமை

கிருச்சமதர் பொறுமையுடன் கூறத் தொடங்கினார்: மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று வகைகளிலும் காசி மிக உயர்ந்த க்ஷேத்திரமாகும். காசித்தலத்தில் மரணாவஸ்தையில் உள்ள உயிரினங்களுக்கு சிவபிரான் தானே முன்னின்று மணிகர்ணிகை தீர்த்த புரோக்ஷணம் செய்து பிரணவ மந்திரத்தை அருளிச் செய்து சகல பாவங்களையும் ஹரணம் செய்து சாரூப பதவி அளித்து எப்போதும் தன்னருகில் இருக்கும்படிச் செய்கிறார். விசுவநாதப் பெருமானே முன்வந்து பிரணவ மந்த்ரோபதேசம் செய்வதால் மூர்த்தி விசேஷமும் இத்தலத்தில் மரணாவஸ்தை ஏற்படுதலால் மட்டுமே விசுவநாதப் பெருமான் வெளிப்பட்டு வருதலால் தல விசேஷமும் மணிகர்ணிகை நீரால் புரோக்ஷணம் செய்து புனிதமாக்குதலால் தீர்த்த விசேஷமும் கொண்டது அவிமுக்தம் என்று வழங்கப்படும் காசி க்ஷேத்ரம்.

மணிகர்ணிகை

அவிமுக்த நகரில் ஒரு காலத்தில் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி விசுவநாதப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட விரும்பினார். அதற்காகப் பாதல கங்கை பொங்கி வரும்படி மிக ஆழமான தடாகம் ஒன்று உண்டாக்கினார். அப்புனித நீரால் விசுவநாதப் பெருமான் மகிழும்படி அபிஷேகம் செய்தார். ஆராதனை முடிந்தபின் அத்தடாகக் கரையில் அமர்ந்து பல்லாண்டுகள் தவம் புரிந்தார். விஷ்ணுவின் தவம் கண்டு மகிழ்ந்த எம்பெருமான் உமாதேவியுடன் ரிஷபாரூடராகக் காட்சி தந்தார். விசுவநாதப் பெருமானைப் பிரத்யக்ஷமாகக் கண்ட பேரானந்தத்தில் திருமால் விரைந்தெழுந்து அவர் மலர்ப்பாதம் பற்றி வணங்கினார். திருமாலின் பக்தியை மெச்சிய பரமன் உமையை நோக்கித் தலையைச் சற்றே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வளைத்து அசைத்தார். அவ்வசைவால் அவர் காதில் இருந்த குண்டலம் விரைந்தாடியது. குண்டலத்தில் பதிக்கப்பட்டிருந்த ஓர் ஒளி உமிழும் மணி ஒன்று தெறித்து மின்னல் ஒன்று துள்ளித் தண்ணீரில் முழுகுவதுபோல் அத்தடாகத்தில் விழுந்தது. சிவபிரான் காது (கர்ணம்) தாங்கியிருந்த மணி தடாகத்தில் கலந்ததால் அத்தடாகத்திற்கு மணிகர்ணிகா தீர்த்தம் என்று பெயர் ஏற்பட்டது. பிற்காலத்தில் அயோத்தி அரசனான பகீரதன் பெரும்பாடுபட்டு பூவுலகிற்குக் கொண்டுவந்த தேவகங்கையை அத்தடாகத்தில் பாயுமாறு செய்தான். அதனால் அத்தடாகம் பாகீரதி எனப்பட்டது. மணிகர்ணிகா தீர்த்தம் பட்ட மாத்திரத்தில் பஞ்சமர்பாதகங்களும் அழிந்து முக்தி உண்டாவது திண்ணம்.

துண்டி விநாயகர்

இத்தகைய பெருமை வாய்ந்த காசியம்பதியில் விசுவநாதப் பெருமான் வீற்றிருக்கும் இடத்திற்கு நேர் எதிரே துண்டி விநாயகர் அமர்ந்திருக்கிறார். அவருடைய சந்நிதியில் தவம் புரியுமாறு கிருச்சமதர் மீண்டும் கிப்பிரப்பிரசாதனுக்குக் கூறி கீர்த்திக்கும் அவள் மகனுக்கும் விடைகொடுத்தனுப்பினார். தாயும் மகனும் உடனே பயணம் மேற்கொண்டு காசி நகரை அடைந்தனர். ஆழமும் அகலமும் கொண்டு தெளிந்து நிற்கும் மணிகர்ணிகையைக் கண்டு மகிழ்ந்தனர். அதைப் பார்த்த உடனேயே தங்கள் பாவங்களெல்லாம் கழிந்ததாக உணர்ந்தார்கள். அத்தடாகத்தில் அமிழ்ந்து நீராடினர்; உள்ளும் புறமும் தூய்மை பெற்றனர்; விசுவநாதப் பெருமானின் திருக்கோயிலை அடைந்து துண்டி விநாயகர் சந்நிதி அடைந்து வழிபட்டனர். பிறகு தாங்கள் விரதம் மேற்கொள்ள வேண்டிய நாளை எதிர்நோக்கித் தினமும் துண்டி விநாயகரைத் தொழுது வந்தனர். மாசித் திங்கள் தேய்பிறைச் சதுர்த்தியில் விடியற் காலையிலேயே விழித்தெழுந்து நித்ய கர்மானுஷ்டானங்களை நியமத்துடன் செய்தனர். பிறகு வன்னி மரத்தடியில் அமர்ந்து விநாயகருக்குரிய நான்கெழுத்து மந்திரத்தைப் பக்தியுடன் ஜபித்து உருவேற்றத் தொடங்கினர். அன்று பகற்போது முழுவதும் உணவின்றி இருந்தனர்; இரவு எட்டு நாழிகைக்குச் சந்திரோதயம் ஆயிற்று. முன்னமேயே ஆராதனைக்கு வேண்டிய பொருள்கள் யாவும் சேமித்து வைத்திருந்தனர். ஆகையால் சந்திரோதய காலத்தில் அறுகம்புல் வன்னிபத்ரம் மந்தார புஷ்பம் முதலான பல்வகைப் பத்திரங்களும் புஷ்பங்களும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொண்டு துண்டி விநாயகரை அர்ச்சித்தனர்; மனத்தை ஒரு முகப் படுத்தி விநாயகரைத் தியானம் செய்துகொண்டே இருந்தனர். அவர்களுடைய பக்தியைப் போற்றிய பரமன் பஞ்ச முகமும் தசக்கரமும் கொண்டு சிம்ஹ வாகனத்தின்மீது காட்சி யளித்தார். கீர்த்தியும் கிப்பிரப்பிரசாதனும் காணக் கிடைக்காத அப்புனிதக் காட்சியைக் கண்டு மெய்ம்மறந்தனர்; விரைந் தெழுந்து பாதம் பணிந்து போற்றினர். காட்சியளித்த எம்பிரான் அவர்களைப் பார்த்து, அவர்கள் விரும்பும் வரங்களைக் கேட்கு மாறு கூறினார்.

கீர்த்தி விநாயகரைப் பணிந்து, "ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதியே, எங்கள் கண்கள் தங்களைக் காணும் பாக்கியம் பெற்றனவே. இது ஒரு வியப்பு. எங்கள் தவம் பலனுடையதாயிற்று. என் மகன் கிப்பிரப்பிரசாதன் எக்காலத்திலும் எந்த இடையூறும் இல்லாமல் வாழ வேண்டும். எவ்வகைச் செல்வமும் பெற்று இனிது வாழ வேண்டும். என்றும் தங்கள் திருவடி மறவாத திறம் வேண்டும்" என வேண்டினாள்.

விநாயகப் பெருமான் கீர்த்தியை நோக்கி, "கீர்த்தியே, உன் மகன் கிப்பிரப்பிரசாதன் ஆயிரம் ஆயிரம் பிறைகண்டு வாழ்வான்; சிறந்த அரசனாய் தருமத் தலைவனாய் வாழ்வான்; இறுதியில் மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்று எமதடி அடைவான்" என வாழ்த்துக் கூறி வலிமை வாய்ந்த வஜ்ராயுதம் ஒன்றை கிப்பிரப் பிரசாதனுக்கு அளித்தார்; அவன் பெயரையும் பரசுபாணி என மாற்றி மறைந்தருளினார். தேடிவந்த தவப்பயன் பெற்ற மகிழ்ச்சியோடு தாயும் மகனும் மறுநாள் காலையில் கங்கையில் நீராடி துண்டி விநாயகரையும் விசுவநாதரையும் அன்னபூரணித் தாயையும் வழிபட்டுத் தம் நாடு நோக்கித் திரும்பி வந்தனர்.

பரசுபாணியின் செங்கோலாட்சி

தன் மனைவியும் மைந்தனும் சிறந்த வரங்கள் பெற்று நாட்டுக்குத் திரும்பி வருவதைக் கேள்வியுற்ற பிரியவிரதன் அவர்களை உரிய முறையில் வரவேற்றான். கீர்த்தியைச் சிவி கையில் ஏற்றிவரச் செய்தான்; பரசுபாணியை யானைமேல் வரச் செய்தான். இருவரும் அரண்மனையை அடைந்து அரசனைப் பணிந்தனர். பிரியவிரதன் தன் மனைவியையும் மகனையும் மீண்டும் கண்டதில் பேருவகை அடைந்தான். அவர்கள் நாட்டை விட்டுச் சென்றது முதல் திரும்பி வந்தது வரை நடந்தனவற்றைக் கேட்டு மகிழ்ந்தான். பிறகு கிப்பிரப்பிரசாதனாகிய பரசுபாணிக்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மணிமகுடம் சூட்டி அரசுப் பொறுப்பை அவனிடம் அளித்துத் தான் தவம்புரியக் கானகம் ஏகினான். பரசுபாணி செவ்வொளி உமிழும் சிறந்ததொரு மணியைத் தேர்ந்தெடுத்து ஐங்கரக் கொண்டலின் அழகிய உருவை அதில் செதுக்கித் தன் மாலையில் கோத்து எப்போதும் அணிந்து கொண்டான். 'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்றதற் கிணங்கச் செங்கோலோச்சி ஆயிரம் ஆயிரம் தண்பிறைக் கதிர்கண்டு ஆயிரம் வேள்வியியற்றிப் புகழ் மொண்டு வாழ்ந்தான். வயதேற ஏற ஞானம் முற்றிப் பழமாயினான். இறுதியில் விநாயகருலகினின்றும் தேவ விமானம் ஒன்று இறங்கிவந்தது. பரசுபாணி அதில் ஏறி விநாயகருலகடைந்து அவரருகில் இருக்கும் பேறு பெற்றான்.

21. கார்த்தவீரியன்

கிருத வீரியன் கனவு

இவ்வாறு சங்கடஹர சதுர்த்தி நோன்பின் உயர்வுகளைக் கேட்ட பிதுர்தேவன் நான்முகனை வணங்கி, ''நோன்பினைத் தொடங்கி கடைப்பிடிக்கும் முறைகளைத் தேவரீர் அருளத் தெரிந்துகொண்டேன்; அதனை எவ்வாறு முடிப்பது என்பதையும் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். நான்முகனும் அவற்றையெல்லாம் தெளிவாகக் குறிப்பிட்டான். கிருத வீரியனின் தந்தையாகிய பிதுர்த்தேவன் நான்முகன் கூறிய சங்கடசதுர்த்தி விரத முறைகள் முழுவதையும் ஏட்டில் வரன்முறைப்படுத்தித் தெளிவாக எழுதினான். பிறகு கிருத வீரியன் உறங்கும்போது அவன் கனவில் தோன்றி தான் எழுதிய ஏட்டை அவனிடம் கொடுத்து அதில் எழுதியுள்ளபடி விநாயகப் பெருமானைக் குறித்து பக்தியுடன் சங்கடஹர சதுர்த்தி விரதத்தை அநுஷ்டித்தால் புத்திரப்பேறு உண்டாகு மெனக் கூறி மறைந்தான்.

விழித்துக் கொண்ட கிருத வீரியன், கனவிற்கண்ட ஏடு கையிலிருப்பதைப் பார்த்தான். தன் அன்புத் தந்தையை நனவில் பார்க்க இயலவில்லையே என மனம் நெகிழ்ந்தான்; தான் கண்ட கனவைத் தன் மனைவியிடம் கூறினான்; மனக்கவலை விட்டான். பிறகு அவனும் அவன் மனைவியும் நாடு திரும்புவது பற்றி யோசித்தான். இருவரும் நாட்டிற்குச் சென்று ஏட்டில் உள்ளபடி சதுர்த்தி விரதத்தைக் கடைப்பிடிப்பது எனத் தீர்மானம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செய்தனர். உடனே தன் அமைச்சர்களுக்கும் மற்றவர்களுக்கும் இச்செய்தியைச் சொல்லி அனுப்பினான். அவர்கள் மகிழ்ந்து அரசனையும் அரசியையும் எதிர்கொண்டழைத்து வந்தனர். பிறகு சாஸ்திர விற்பன்னர்கள் அரசன் கொண்டுவந்த ஏட்டை ஊன்றிப் படித்தனர். சங்கடஹர சதுர்த்தி விரதம் கடைப் பிடிக்க வேண்டிய முறைகளை நன்கு அறிந்தனர். பிறகு குல குருவாகிய அத்திரி முனிவரை முன்னிட்டு சங்கட சதுர்த்தி விரதத்தை நிறைவேற்றினான். பல தூய பெரியோர்களுக்குத் தானம் வழங்கினான். மன நிறைவெய்தி மீண்டும் ஆட்சி புரியத் தொடங்கினான்.

கார்த்தவீரியன்

கிருத வீரியனின் மனைவி சின்னாட்களில் கருவுற்றாள். உரிய பருவத்தில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தை கையும் காலுமற்ற பிண்ட உருவாய் இருந்தது. பெற்றோர் மனம் நொந்தனர். உடல் வருத்திச் சோம்பலின்றித் தவம்பல புரிந்து சங்கடஹர சதுர்த்தி விரதமிருந்து பெற்ற குழந்தை காலும் கையுமற்றது எனில், யாரால்தான் வருந்தாமல் இருக்க முடியும்? ஆயினும் கிருத வீரியன் மனம் தளரவில்லை. புத்திரப் பேறளித்த விநாயகப் பெருமான் அப்புதல்வனின் முடத்தன்மையையும் தீர்ப்பார் என்றே நம்பினான். குழந்தைக்குச் செய்ய வேண்டிய புண்யாஹவாசனம் முதலியவற்றைத் திருத்த முறச் செய்தான். அக்குழந்தைக்குக் கார்த்தவீரியன் என்று பெயரிட்டான். குழந்தையும் கையும் காலுமில்லாமலே பன்னிரண்டு ஆண்டுகள் வளர்ந்து விட்டது.

ஒருநாள் பெருந்தபஸ்வியான தத்தாத்ரேயர் கிருதவீரியனுடைய அரண்மனைக்கு வந்தார். அவர் வருகையை உணர்ந்த அரசன் அவரை எதிர்கொண்டழைத்து வந்தான்; ஆசனத்தில் அமர்த் தினான்; உபசாரங்கள் பலவும் செய்து உணவருத்தினான். பிறகு பொதுவாகப் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண் டிருக்கும்போது கிருதவீரியன் மனம் குமைந்து மாதவனை நோக்கி, ''நான் செய்த தவத்திலோ விரதத்திலோ ஏதேனும் குறை நேர்ந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் கையும் காலும் இல்லாத முடக்குழந்தை இப்படி பிறந்திருக்குமா. ஊரார் சிரிக்க, பகைவர் பரிஹசிக்க என் நிலைமை இப்படியாயிற்றே!'' என வருந்திக் கூறினான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கார்த்தவீரியன் முடநீக்கம் பெறல்

தத்தாத்ரேயர் அப்பிள்ளையைத் தன்முன் கொண்டுவரச் செய்தார். நல்ல அறிவு வளர்ச்சியுடனிருந்த அப்பாலகனைப் பார்த்தவுடன் அவருக்குக் கனிவு உண்டாயிற்று. அவனுக்குக் கணேச மூர்த்தியின் ஏகாக்ஷர மந்திரத்தை உபதேசித்து இடை விடாமல் ஜபித்துவருமாறு கூறிச் சென்றார். தத்தாத்ரேயர் சென்றபின் கார்த்தவீரியன் தன் தந்தையை நோக்கி, "தந்தையே, கையும் காலுமற்று நான் இவ்வாறு உழன்றுகொண்டிருப்பதால் ஒருவருக்கும் பயனில்லை. ஆகையால் தத்தாத்ரேய முனிவர் அருளால் அடைந்த விநாயக மந்திர உபதேசத்தைப் பலமாகக் கொண்டு தவம் செய்ய விரும்புகிறேன். ஆகையால் என்னைக் காட்டில் கொண்டுபோய் விட்டுவிட வேண்டுகிறேன். என் தவம் பலித்து முடம் நீங்கி மீண்டு நான் வருவேன் என்பதில் ஐயமில்லை. இப்போதிருக்கும் நிலையில் நான் யாருக்கும் பார மாக இருக்க விரும்பவில்லை. தயவுசெய்து என்னைக் கானகத்துக்கு அனுப்புங்கள்" என வேண்டினான். கிருத வீரியனும் விநாயகப் பெருமானை மனத்தால் நினைந்து வாயால் போற்றி மெய்யால் வணங்கிப் பின் தவம் செய்து பெற்ற பிள்ளையைக் கானகத்துக்கு அனுப்பி அவன் தவம் செய்வதற்கு வேண்டிய சாதனங்களைச் செய்து கொடுத்தான். கார்த்த வீரியன் பன்னிரண்டு ஆண்டுகள் அகோர தவம் செய்தான். அவன் தவத்தை மெச்சிய தந்திமுகத் தூயோன் அருகில் இருந்த தடாகத்தில் தேவகணங்களுடன் தோன்றி அவனுக்குத் தரிசனம் தந்தார். பவள மேனியனாய் ப்ரஸந்ந வதனனாய் மதிமிலைச்சிய முடியினனாய் அருள் கொழிக்கும் கண்ணினனாய் எம்பெருமான் கார்த்தவீரியனுக்குக் காட்சி தந்தருளினார். எழுந்தோடி வந்து விரைமலர்ப் பாதம் பணிய விரும்பினான் கார்த்தவீரியன்; எழக் காலில்லை; வணங்கக் கையில்லை; கண்களே ஆர்வம் மிகுந்து எழுந்தன; கண்களே குளமாகிக் கரைந்து வணங்கின; மனம் அத்திமுகத்தான் திருமேனி அழகில் அமிழ்ந்து ஊறியது; பத்திப் பரவசத்தால் யாவற்றையும் மறந்தது. தடாகத்தில் தோன்றிய பிள்ளையார் அருட்கடலாகி ஒரு கரமும் இல்லாத அவனுக்கு ஆயிரம் கரமளித்தார்; ஒரு காலும் இல்லாத அவனுக்கு இரு காலும் அளித்தார். ஈடிணையற்ற வலிமை அளித்தார். அவருடன் பரிவாரமாய் வந்திருந்த தேவர்களும் கார்த்தவீரியன் கணபதி மேல் வைத்த பக்தியைக் கண்டு மகிழ்ந்து அவனை நோக்கி, "பல்லாயிரம் ஆண்டுகள் நோய் நொடி இன்றி வாழ்ந்து செந்தண்மை பூண்டு நாடாண்டு யாவருக்கும் நன்மை செய்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பகையின்றி வாழ்க'' என வாழ்த்தினர். அதுவே அவனுக்குக் கிடைத்த வரமும் ஆயிற்று. விநாயகரும் அவருடன் வந்த பரிவார தேவர்களும் மறைந்தனர். கடின உழைப்பினால் சம்பாதித்த சிறந்த மணியைக் கைதவற விட்ட கயவன்போல் கார்த்தவீரியன் கலங்கினான்; மலங்கினான்; ஒருவாறு தேறி நாடு நோக்கி நடந்து வந்தான். தன் தாய் தந்தையரை மகிழ்வித்துத் தான் தவம் புரிந்த இடத்திற்கு மீண்டான். அங்கே பவள வண்ணப் பிள்ளையாருக்கு அரியதொரு கோயில் கட்டினான். அதில் பிள்ளையாரை பிரதிஷ்டை செய்து பவள வண்ணப் பிள்ளையார் என்றும் தரணிதரப் பிள்ளையார் என்றும் பெயரிட்டு நாடோறும் வணங்கி வந்தான். அக்கோயிலைச் சுற்றி ஒரு நகரமும் சமைத்தான். அந்த நகரத்திற்கு தரணிதர நகரம் எனப் பெயர் சூட்டினான்.

''இவ்வாறு சங்கடஹர சதுர்த்தி விரதம் இருந்து பேறு பெற்றவர் பலர். அத்தகைய விரத பலனின் ஒரு நாள் பலனை யாரேனும் எனக்குத் தத்தம் செய்தால் இவ்விமானம் மேலெழும்'' என இந்திரன் சூரசேனனுக்குச் சொன்னான்.

22. சூரசேனன்

மற்றொரு தேவ விமானம்

சூரசேனன் தேவராசனுக்கு உதவி புரிய எண்ணினான். ஆகையால் தன்னுடைய வீரர்களை நகரமுழுவதும் சங்கடஹர சதுர்த்தி விரதம் ஏற்று நிறைவேற்றியவர் யாரேனும் உளரோ? என வீடுவீடாகச் சென்று விசாரிக்கச் செய்தான். அவ்வாறு சூரசேனனுடைய தூதுவர்கள் நகரில் ஒரு பகுதியில் சென்ற போது மற்றொரு தேவ விமானம் பூமியை வந்தடைவதைப் பார்த்து அதிசயமுற்றனர். அவ்விமானத்தினின்றும் தேவ கணத்தினர் சிலர் இறங்கி வந்தனர்; அவ்விடத்தில் புலாலுண்டும் கள்ளுண்டும் தறிகெட்டு வாழ்ந்து கொண்டிருந்த ஓர் ஏழைப் பெண்ணுக்குத் தெய்வ யாக்கை தந்து தேவ விமானத்தில் ஏற்றினர். உடனே அத்தூதர்கள் அவ்விடத்திற்கு வந்து அத் தேவர்களைப் பார்த்து, ''நன்றேதும் செய்யாத இந்த நங்கைக்கு இத்தகைய பேறு வந்ததெங்ஙனம்? முற்பிறவியில் செய்த புண்ணியமோ? யாதோ? எங்களுக்கு விளங்க உரைக்க வேண்டும்'' என வேண்டினர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அத்தேவர்கள் அத்தூதுவர்களை நோக்கி, ''இப்பெண் இம்மையிற் செய்த நற்கருமம் ஏதுமில்லை. நாயிறைச்சி, பூனை யிறைச்சி போன்றவற்றை உண்பாள்; கள்ளுண்டு மயங்கிக் கிடப்பாள்; காமம் வந்துற்றபோது கண்டாரைத் தழுவுவாள். தறிகெட்ட வாழ்க்கை வாழ்ந்தாள். ஏழ்மையில் மூழ்கித் தத்தளித்தாள். அவளுடைய முற்பிறப்பைக் கேளுங்கள்; இவள் போன ஜென்மத்தில் சுந்தரி என்னும் பெயருடையவளாய்ப் பெயருக்கேற்ற பேரழகு கொண்டிருந்தாள்; அரசர் குலத்தில் பிறந்து அரசர் குலத்தில் புகுந்தாள். ஆயினும் தான் அழகி என்ற மமதையால் பலரையும் மயக்குவாள்; தீயொழுக்கம் நிரம்புவர்ள். அவள் கணவன் சித்திரன் என்ற இளவரசன். அவனுக்கு இவள் தீயொழுக்கம் வெளிப்படவும் அவளை அந்தப்புரத்தில் அடைத்து வைத்துக் காவலும் இட்டான். தன்னிச்சைப்படி வெளியில் சுற்றி வர முடியாமல் சுந்தரி வேதனைப்பட்டாள். துரோகம் செய் வதால் உண்டாகும் திருட்டு இன்பமே பெரிதென நினைத்தாள். அதனால் ஒருநாள் சித்திரன் நித்திரை செய்துகொண்டிருந்த போது அவனை வாளால் குத்திக் கொன்றாள். ஆனால் காவலர் அவளைக் கையும் களவுமாய்ப் பிடித்துவிட்டனர்; அரசனிடம் அவளை அழைத்துச் சென்று நிறுத்தி நிகழ்ந்ததைக் கூறினர். அடங்காக் கோபம் கொண்ட அரசன் அவளை வெட்டிக் கொல்லுமாறு ஆணையிட்டான். அவ்வாறே அவள் வெட்டிக் கொல்லப்பட்டாள். கணவனைக் கொன்ற காரிகை பல்லாண்டுக் காலம் பாழ்நிரயத்தில் ஆழ்ந்து கொடிய துன்பங்களை அனுபவித்தாள். பிறகு மீண்டும் புவியில் பிறப்பு எய்தினாள். ஆனால் இப்பிறப்பில் அவள் இறக்கும் தறுவாயில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. ஏழ்மையால் அவள் நேற்று முழுதும் உணவுண்ணவில்லை; மயங்கிக் கிடந்தாள்; இன்று சங்கடஹர சதுர்த்தி விரதநாள்; சங்கடஹர சதுர்த்தி விரதம் முடித்த பெரியோர்கள் உண்டு மிகுந்த சோற்றை இலையோடு வெளியே எறிந்தார்கள்; அப்போது சற்றே மயக்கம் தெளிந்திருந்த இவள் அவ்வெச்சிலை எடுத்து உண்டாள். அப்போது அப்பெரியோர்கள் ''விநாயகா, விநாயகா, விநாயகா'' எனப் பலமுறை எம் பெருமான் திருநாமம் சொல்ல அச்சொற்கள் இவள் காதில் விழுந்தது. இவளும் அப்பெயரை முணுமுணுத்தாள். ஆனை முகத்தான் அடியார்கள் உண்ட மிச்சத்தை உண்டதாலும், சங்கடஹர சதுர்த்தியின் முடிவில் கணேசரின் திருநாமத்தை உரைத்ததாலும் அவளியற்றிய பாவங்கள் பெருநெருப்பில் பஞ்சு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

போல் தீய்ந்தன. பரம காருண்ய மூர்த்தியாகிய எம்பெருமான் இவளை அழைத்து வருமாறு எங்களுக்கு ஆணையிட்டார். அதனாலேயே இவளைத் தெய்வயாக்கை அளித்து விமானத்தில் ஏற்றி அழைத்துச் செல்கிறோம்'' எனக் கூறினர்.

இந்திர விமானம் எழும்பிச் சென்றது

சூரசேனனின் தூதுவர்கள் அதனைக் கேட்டவுடன் அவர்களைப் பார்த்து, ''எங்களுக்கு ஓர் உதவி செய்ய வேண்டும்'' என மிக்க விநயத்துடன் கேட்டனர். அத்தேவர்கள் யாதெனக் கேட்பார் போல அவர்களைத் தலைசாய்த்துப் பார்த்தனர். அத்தூதுவர்கள் தொடர்ந்து, ''இந்நகரத்தின் எல்லையில் இந்திரன் வந்த விமானம் தடைபட்டு இறங்கிவிட்டது. மாபாவி ஒருவன் பார்வை பட்ட பாவத்தால் அவ்வாறு நிகழ்ந்து விட்டது. அவ்விமானம் மீண்டும் விண்ணில் எழுந்து பயணம் தொடருமாறு உதவ வேண்டும்'' என்றார்கள். ஆனால் அத்தேவர்கள் ''எம் பெருமான் இட்ட கட்டளையன்றி வேறேதும் செய்தல் எங்களுக்குப் பணிமுறை அன்று'' என்று கூறித் தம் விமானத்தை விண்ணில் எழுப்பிப் பறந்தனர். அப்போது சங்கடஹர சதுர்த்தி விரதப் பலன் பெற்ற அப்புனிதப்பெண் மண்ணில் இழிந்து நின்ற இந்திர விமானத்தைப் பார்த்தாள்; பார்த்த பார்வையில் திட்டி விடம் கழிய இந்திரன் விமானமும் மேனோக்கி எழும்பியது. சூரசேனனும் மக்களும் அவ்விரு விமானங்களும் விண்வழிச் செல்லும் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு களித்தனர். அவற்றை திக்கு நோக்கி தெண்டனிட்டனர்.

சூரசேனனின் சதுர்த்தி விரதம்

அன்றுமுதல் சூரசேனன் தன் மனத்தகத்தே விநாயக மூர்த்தியைப் பிரதிஷ்டித்து எப்போதும் அவரை ஆறெழுத்து மந்திரத்தால் தியானித்து வந்தான். அதன் பயனாக அவன் நெஞ்சம் முழுவதும் தெய்வ மயமாகி கணபதி மணத்தால் நிறைந்தது. கணாதிபரின் பேரருளைப் பெற வேண்டும் என்ற அவா பெருகியது. தன் குலகுருவான வசிஷ்ட பகவானைச் சரணடைந்து பிறவாப் பெருநெறி அருளும் பிள்ளையாரைக் குறித்துச் சதுர்த்தி விரதம் அனுஷ்டிக்க வேண்டும் என்ற தன் விருப்பத்தைத் தெரிவித்தான். வசிஷ்ட மஹா முனிவரும் அரசனுக்கு ஆசி அளித்து மாசி மாதம் கிருஷ்ண பக்ஷம் சதுர்த்தி செவ்வாய்க் கிழமை ஆகிய நான்கும் ஒருங்கு கூடிய உத்தமமான நாளில் சங்கடஹர சதுர்த்தி விரதத்தை முறைப்படி போதித்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இடைவிடாது அனுஷ்டிக்கும்படிக் கூறியருளினார். அன்று முதலாகச் சதுர்த்தி தோறும் சூரசேனன் கணநாதரைக் குறித்து விரதம் கைக்கொண்டான். நாடோறும் கணபதி மஹாமந்திரத்தால் தியானம் செய்து இடைவிடாது வழிபாடியற்றி வந்தான்.

சூரசேனனுடைய பக்தியையும் சிரத்தையையும் மெச்சி விநாயகர் அவ்வரசனைத் தன்னுலகிற் சேர்க்கத் திருவுளம் கொண்டார். உடனே தேவகணங்களைச் சிறந்த விமானத்துடன் சூரசேனனிடம் அனுப்பி அவனை அழைத்துவரக் கட்டளை யிட்டார். தேவகணத்தினர் பொன்மயமான சிறந்த விமானத்தி னின்றும் இறங்கிவந்து சூரசேனனிடம் விநாயகப் பெருமானின் கட்டளையை எடுத்துரைத்தனர். மன்னவன் ஆனந்த வாரிதியில் மூழ்கினான். ஆயினும் அவன் தன் குடிமக்கள் யாவரையும் இவ்வுலகிலேயே விட்டுவிட்டுத் தான்மட்டும் புண்ணிய உலகம் புக விரும்பவில்லை. ஆகையால் அவன் அத்தேவ கணத்தினரை நோக்கி, ''மேன்மை மிக்கவர்களே, என் தேசத்தில் வாழும் பிரஜைகள் என்னை விட்டுப் பிரிந்திருக்க விரும்பமாட்டார்கள்; யானும் அவ்வாறே அவர்களை விட்டுப்பிரிந்து சொர்க்க போகங்களை அனுபவிக்க விரும்பவில்லை. ஆகையால் என் பிரஜைகள் எல்லாருமே என்னுடன் விநாயகர் உலகுக்கு வர அனுமதிக்க வேண்டும்'' என்று வேண்டினான். தேவ கணத்தினர் அரசனுடைய அன்பையும் சுயநலமற்ற தன்மையையும் கண்டு மகிழ்ந்து அந்நகரத்துப் பிரஜைகள் அனைவரும் தேவ விமானத்தில் ஏறிக் கொள்ள அனுமதித்தனர். அரசனும் தன்னுடைய மந்திரி, பிரதானியர், உறவினர், பிரஜைகள் முதலிய யாவருடனும் தேவ விமானத்தில் ஏறி அமர்ந்தான். பின்னர் தேவ கணத்தினர் அவ்விமானத்தை மேலே செல்லுமாறு உந்தினார்கள். ஆனால் அவ்விமானம் மேலே கிளம்பாமல் பூமியில் அழுந்தி நின்றது. அதன் காரணத்தை அவர்கள் ஆராய்ந்த போது அங்கம் முழுவதும் அழுகி ஒழுகும் பெருநோய் கொண்ட வணிகன் ஒருவன் அதில் ஏறி இருப்பதுதான் காரணம் எனக் கண்டறிந் தனர். அவர்கள் அரசனை நோக்கி, ''அருள்மிகு அரசே, இவ்வணிகன் மஹாபாவியாதலால் விமானம் மேலே எழாமல் பூமியில் அழுந்தி நிற்கின்றது. அவன் ஒருவனை விட்டுவிட்டால் விமானம் மேலே புறப்பட்டுச் செல்லும்; இல்லையேல் எழாது'' என்று கூறினார்கள். அப்போது அரசன் தேவ கணங்களை நோக்கி, "இத்தனை பேரும் செய்யாத எந்தக் கொடிய பாவத்தை அவன் செய்துவிட்டான்? ஒருவனாயினும் அவனை விட்டுச் செல்வதை என் மனம் ஏற்றுக்கொள்ளாது'' என்று கூறி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வருந்தினான். தேவ கணத்தினர் அப்போது அரசனை நோக்கி அவ்வணிகனுடைய பூர்வ விருத்தாந்தங்களை எடுத்துச் சொல்லத் தொடங்கினார்கள்:

புதனின் கோணல் புத்தி

முன்னொரு காலத்தில் கௌட தேசத்தில் வேத வேதாங்கங்களை எல்லாம் நன்கு உணர்ந்த சீலரான அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் தவசீலர். அவர் மனம் கோணாது அவருடைய வைதிக வாழ்க்கைக்கு அனுசரணையாக இருந்த அவருடைய தர்மபத்னி ஜானகி. அவர்களுக்கு மிகவும் புத்தி சாலியான ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு புதன் எனப் பெயரிட்டார்கள். அவன் சிறு வயதிலேயே கற்கவேண்டிய நூல்கள் அனைத்தும் கற்று சாஸ்திரக்ஞர்களால் போற்றப் பட்டான்; உரிய வயதில் உயர்ந்த குலத்தில் தோன்றிய அழகிலும் குணத்திலும் சிறந்த சாவித்ரி என்ற கன்னிகையைத் திருமணம் செய்துகொண்டான். இவ்வளவு பேறுகளைப் பெற்றிருந்த போதிலும் — ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டுவதாலோ, முற்பிறப்பிற் செய்த தீவினையோ, யாதோ? — அவன் விலை மாதரை நாடிச் சென்று அவர்கள் மோஹத்தில் வீழ்ந்தான். கள்ளுண்டல் முதலிய கெட்ட பழக்கங்களும் சேர்ந்து கொண்டன. தாசி வீடே கதியெனக் கிடந்தான்; தன் கைப்பொருளையெல்லாம் இழந்து வறியனும் ஆனான்.

தந்தை கொலை

அவனுடைய தந்தையார் மிக வயோதிகர் ஆனார். தன் மகன் தன் வீட்டுக்கு வராததை எண்ணி ஏங்கினார். ஒருநாள் அவர் தன் மகன் இருக்குமிடத்தைத் தேடிக் கொண்டு அலைந்தார். இறுதியில் புதன் ஒரு தாசி வீட்டில் இருப்பதைக் கேள்வியுற்றுப் புத்திர பாசத்தால் அங்குச் சென்று அவனைக் கூப்பிட்டார். அவன் அவர் எதிரே வந்ததும் மகனைப் பார்த்த மகிழ்ச்சியில் திளைத்தார்; அவன் செய்யும் தீவினைகளை எண்ணி வருத்தத்தால் கண்ணீர் சிந்தினார். பிறகு புதனைப் பார்த்து, "குழந்தாய், வீட்டில் எல்லா நலமும் இனிதமைந்த இல்லாள் இருக்க எவ்வாறு இவ்வேசையர் இல்லத்திருக்க எண்ணினாய்? வேத வேதாங்கங்கள் யாவற்றையும் கற்றுச் 'சான்றோன்' எனப் புகழ் பெற்றாயே; அக்காலத்தில் எங்களைக் காட்டிலும் மகிழ்ச்சியுற்றவர் யார் இருக்க முடியும்? அப்படிப்பட்ட எங்களை, இவ்வயோதிகத் தசையில் தள்ளாடிக் கொண்டிருக்கும் எங்களை எப்படி மன

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மொப்பித் தனித்து விட்டு வந்தாய்? சிறந்த அழகும் நிறைந்த குணமும் கொண்ட நின் மனைவி சாவித்ரியைப் பிரிய எப்படி உனக்கு மனம் வந்தது? பொய்யொழுக்கம் நிறைந்த பேதையர் கூட்டத்தில் எவ்வாறு அகப்பட்டாய்? இவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்து இன்னே என்னுடன் புறப்பட்டு நம் இல்லத்திற்கு ஏகுவாய்'' என்று கல்லும் கரையக் கனிந்துரை செய்தான்.

ஆனால் தர்ம விருத்தமான காம மோஹத்தில் மதி மயங்கி நிற்கும் புதனுக்குத் தந்தைமீது பெருங்கோபம் உண்டாயிற்று. "எனக்குப் புத்தி சொல்லவா இங்கு வந்தாய்? வயதேற ஏற மதிமயக்கம் கொண்டு உளறுகிறாயோ?'' என ஆத்திரத்துடன் கூறிக்கொண்டே தன் தந்தையைத் தன் கையால் ஓங்கி அடித்தான். அந்த அடியைத் தாங்காது அவன் தந்தை அங்கேயே கீழே விழுந்து மாண்டார். மாண்ட தந்தையை நோக்கிய புதன் இரங்கவும் இல்லை; மனவருத்தம் கொள்ளவும் இல்லை. அரச தண்டனை கிடைக்குமே என்ற அச்சம் ஒன்றே கொண்டு விரைந்து ஒரு பெரும் பள்ளம் வெட்டித் தந்தையின் உடலைப் புதைத்து விட்டான்.

தாய்க் கொலை

பிறகு தந்தையின் செல்வத்தை எடுத்துக் கொண்டு வந்து தன்னிச்சைப்படிச் செலவு செய்து வாழலாம் என்ற எண்ணத்தோடு வீட்டிற்குச் சென்றான். வீட்டில் அவன் தாயும் மனைவியும் இருந்தார்கள். அவர்களுக்குத் தவசீலர் இறந்தது தெரியாது. புதனைக் கண்டவுடன் அவன் தாய் மிக மகிழ்ந்து, "அப்பா புதா, இத்துணை நாட்களாக எங்கே சென்றிருந்தாய்? உன்னைக் காணாத உன் தந்தையார் மிகவும் ஏக்கமுற்றார்; இப்பொழுது கூட உன்னைத் தேடிக்கொண்டுதான் வெளியே போயிருக்கிறார்; எவ்விடத்தில் எல்லாம் அலைகிறாரோ? அவருக்கு அன்னமும் இறங்கவில்லை; உன்னைப் பற்றிய நினைவாகவே இருக்கிறார்...'' என மேலும் சொல்லலுற்றாள். ஆனால் இவை யாவற்றையும் பொறுமையுடன் கேட்பதற்காகவா அவன் வீட்டிற்கு வந்திருக் கிறான்? அவனுக்குப் பெருங்கோபம் உண்டாயிற்று. சினம் கொண்டவர் தாம் செய்வதை அறியார். புதனும் சினவெறியில் தாயையும் அடித்துக் கொன்றுவிட்டான்.

தாரக் கொலை

அதனைக் கண்ணாற் கண்ட சாவித்ரி பதைபதைத்தாள்; நடுங்கினாள்; நாக் குழறினாள்; செய்வதறியாது திகைத்தாள்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புதனைப் பார்த்து, "பரத்தையர் மையலில் மயங்கியவர் தாய்க் கொலையும் புரிவர்; தந்தைக் கொலையும் புரிவர்; தாரக் கொலையும் புரிவர்; கள்ளுண்ட மயக்கமோ சற்று நேரமே இருக்கும்; ஆனால் காம மயக்கம் சாகும் வரை போகாது. பரத்தையர் தரும் பொய்யின்பத்திற்கு ஆசைப்பட்டு அவர்களுக்கு அடிமையாய் அங்கிருந்தீர்; அவர்கள் கொடுத்த இன்பம் யாவும் நீர் கொடுத்த பொருளுக்குத் தானே; உம்மையா மதித்து இன்பம் தந்தனர்? பொருட் பெண்டிரைப் பேணி இன்பம் நுகர்தல் கண்ணால் பார்க்க முடியாத இருட்டில் முன்பின் அறியாத ஒரு பிணத்தைத் தழுவி நிற்பது போன்றதல்லவா? ...." எனக் கத்தினாள்.

ஆனால் புதன் எதையும் காது கொடுத்துக் கேட்கும் நிலையில் இல்லை. சாவித்ரியின் கத்தல் அவன் சினத் தீயில் நெய் வார்த்ததுபோல் ஆயிற்று. அடங்காக் கோபம் கொண்ட அவன் அவளையும் அடித்துக் கொன்று அவள் உடலையும் அவன் தாயின் உடலையும் ஒருவரும் அறியாவண்ணம் குழி தோண்டிப் புதைத்து விட்டு வீட்டிலிருந்த பெரும்பொருளையும் வாரிக்கொண்டு மீண்டும் தன் ஆசை நாயகியின் வீட்டை அடைந்தான். அவ்வேசி புதன் செய்த காரியங்களை அறிந்து நடுங்கினாள். அரசன் அறிந்தால் தன்னையும் ஒறுப்பானே எனப் பதறினாள். அதைக் கண்ட புதன் அவளைச் சமாதானம் செய்து அப்பொழுதே அந்நகரை நீங்கிச் சென்று விடலாம் என்று யோசனை கூறினான். அவளும் அதற்கு இணங்கினாள். இருவரும் தம் செல்வம் யாவற்றையும் திரட்டிக்கொண்டு அவ்விரவே வேறு நகரத்திற்குப் புறப்பட்டார்கள்.

குஷ்டம் பிடித்த புதன்

அவர்கள் போகும் வழியில் ஒரு ரம்யமான கானகம் இருந்தது. அக்கானகத்தை அடைந்த போது அவ்வேசி களைப் படைந்து உண்ண உணவு கொணருமாறு புதனை ஏவித் தான் தனியே ஒரு மரத்தடியில் அமர்ந்தாள். புதனும் தனியனாய்த் தன் காதலிக்கு உணவு தேடி அலைந்தான். ஆங்கோரிடத்தில் ஓர் ஆசிரமத்தைக் கண்ணுற்றான். அந்த ஆசிரமத்தில் தாலவன முனிவர் தம் பத்னியான சுலபையோடு வசித்து வந்தார். புதன் சென்ற சமயம் தாலவன முனிவர் ஆச்ரமத்தில் இல்லை. புதன் அம்முனிபுங்கவருடைய தர்ம பத்னியைத் தன் கண்களால் கண்டான். சுலபை மிக்க இளமையும் பேரழகும் படைத்தவள். அவள் கற்பு அவ்வள் அழகுக்குக் கொஞ்சமும் குறைந்ததன்று. இத்தகைய பெண்ணரசியைக் கண்ட புதனுக்குக் காம விகாரம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேலோங்கியது; அறிவு காத தூரம் ஓடியது. முனிபத்னி என்ற எண்ணமோ அச்சமோ இன்றி அப்பெண்ணணங்கின் மென்கை பற்றி வலிந்திழுத்தான். சுலபை திடுக்கிட்டுத் தன் கண்களில் கனல் தெறிக்க புதனை உதறி எறிந்தாள்; எழுந்த கோபத்தில், "இச்சை வயப்பட்டு எதனையும் செய்யத் துணிந்த அற்பனே, பெண்ணின்பத்தைப் பெற முடியாத பெருநோயால் உழன்று உருக்குறைந்து உருக்குலைந்து உள்ளம் நொந்து அழிக" எனக் கடுஞ்சாபம் இட்டாள். அவ்வளவில் அவன் அங்கங்களெல்லாம் அழுகி உருக்குலைந்து உடல் முழுவதும் புண்ணீரும் செந்நீரும் வடிய மனம் நொந்து தரையில் விழுந்தான்; மீண்டு எழுந்தான்; அழகு ஒழுக உயர்ந்து திரண்டிருந்த புயங்கள் அழுகி ஒழுகுவதைக் கண்டான்; உடுபதியின் ஒளி போல நிலவு வீசும் அழகிய தன் வதனத்தில் ஆங்காங்கே திட்டுத் திட்டாகக் களங்கம் படிந்திருப்பதை உணர்ந்தான்; விரைவும் வலிமையும் மிக்கிருந்த தன் கால்கள் தள்ளாடி நடக்கவும் இயலாத நிலையில் சரிந்து குறைந்திருப்பதைக் கண்டான். அவ்வொரு கணத்திலேயே பல்லாண்டு நரக வேதனையை அனுபவித்துவிட்டான். பின்னர் ஒருவாறு தேறித் தன் ஆசைநாயகி அமர்ந்திருந்த இடம் நோக்கி வந்தான். அவனைக் கண்ட மாத்திரத்திலேயே அவள் அஞ்சி நடுங்கினாள்; 'அருகில் வராதே' என்று அலறினாள்; அவன் கொண்டு வந்திருந்த பொருள்கள் யாவற்றையும் எடுத்துக்கொண்டு தன்னுடைய நகரத்திற்கு விரைந்து சென்று விட்டாள். புதன் வனத்தில் அனாதையானான். அவனுக்கு உணவும் நீரும் கிடைக்காமல் துன்புற்றான்; இறுதியில் இறந்தொழிந்தான்; ஆனால் இறந்த பின்னும் முனிபத்னியின் சாபம் அவனை விடவில்லை; மறு ஜன்மத்திலும் தொடர்ந்தது; பாதியாய் அழுகிய கால் கையனாய் வணிகர் குலத்தில் தோன்றி முன்னே விட்ட குறையைத் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறான். அவன் செய்த பாவங்கள் எத்தனை ஜன்மங்கள் எடுத்துத் துன்பம் அனுபவித்தாலும் தீராது.

மாபாதகனும் உய்ந்தான்

இவ்வாறு அவன் வரலாற்றைத் தேவகணங்கள் எடுத்துரைக்கச் சூரசேனன் அவர்களை நோக்கி, "அற்புத ஆற்றல் பெற்ற கற்பகக் கரிமுகத்தோன் தூதுவர்களே, கணேச மூர்த்தியின் அருள்பெற்ற பெரியார்மீது பட்ட காற்றே எத்தகைய நோயையும் தீர்க்குமாயின், 'கணபதி கணபதி' என்று பொருளறியாது புலம்பிய புலைச்சி செய்த பாவங்கள் பொசிந்து போகுமாயின்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பரம்பொருளான விநாயகரின் வழியடியாராகிய தங்கள் எல்லாரையும் தரிசிக்கும் பேறு பெற்ற இவ்வணிகன் தீவினை மட்டும் தீராதோ? 'பெருநெருப்புக்கு ஈரமில்லை' என்பர். இவ்வணிகன் தீவினையையும் மாற்றி இவனையும் நம்மோடு விநாயகர் உலகுக்கு ஏற்றுதல் வேண்டும்'' என்று மனமுருக வேண்டிக் கொண்டான்.

அரசனுடைய அருட்கனிவைக் கண்டு ஆச்சரியமடைந்த அமரர்கள் அப்பொழுதே அவ்வணிகன்மீது அருட்பார்வை செலுத்தி அருந்தீவினைகள் யாவும் அறச்செய்து அவன் அனுபவித்த அந்நோய் அகற்றி அவன் காதிலே கணபதி மஹா மந்திரத்தை மும்முறை ஓதி உபதேசம் செய்து அவனைப் புனிதனாக்கினார்கள். பின்னர் அவ்வணிகனும் அருமைமிகு தேவ விமானத்தில் ஏற விமானம் யாவரையும் சுமந்துகொண்டு விநாயகப் பெருமானின் உலகு புக்கது. யாவரும் விநாயக மூர்த்தியைத் தரிசனம் செய்து அணுக்கத் தொண்டர்களாயிருந்து சகல பாக்யங்களையும் பெற்று அவருடைய பாதாரவிந்தங்களை இடைவிடாது போற்றிப் பேரானந்தத்தில் திளைத்தார்கள்.

23. பரசுராமன்

ஜமதக்னி முனிவர் விருந்தோம்பல்

கிருதவீரியன் தன் மகன் கார்த்தவீரியனுக்குப் பட்டம் கட்டி ஆட்சிப் பொறுப்பை அவனிடம் அளித்துத் தவம் செய்யும் பொருட்டுக் கானகம் சென்றான். கார்த்தவீரியனும் நாட்டை மிக நன்றாக ஆண்டான். செங்கோல் தவறாத மன்னனாய் இருந்தான். ஒரு சமயம் அவன் வேட்டையாடும் பொருட்டுக் கானகம் சென்றான். இரண்டு மூன்று நாட்கள் வேட்டையாடிய பின் திரும்பி வந்து கொண்டிருந்தான். வரும் வழியில் ஜமதக்னி முனிவரின் ஆச்ரமம் இருந்தது. அதனால் அவன் தன் படையை ஓரிடத்தில் நிறுத்திவிட்டுத் தான் மாத்திரம் முனிவரைத் தரிசிக்க வந்தான். முனிவரை வணங்கி ஆசி பெற்ற கார்த்தவீரியன் புறப்பட விடை வேண்டியபொழுது ஜமதக்னி முனிவர் உணவுண்டு செல்லும்படிக் கூறினார். கார்த்தவீரியன், ''நான் தனியாக வரவில்லை; என்னோடு ஏராளமான படைவீரர் வந்துள்ளனர்; ஆகையால் நாங்கள் விரைந்து நாட்டுக்குச் சென்றுவிடுவோம்'' என்று கூறினான். ஜமதக்னி முனிவர்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

"உன்னுடைய படைகளையும் இங்கு அழைத்து வருக; யாவரும் உணவுண்டு செல்லலாம்" எனக் கூறினார். முனிவரை மறுத்து ரைக்க இயலாத கார்த்தவீரியன் தன் படைகளை அழைத்துக் கொண்டு வருவதாகக் கூறிச் சென்றான்.

அவன் சென்றதும் ஜமதக்னி முனிவர் தம் தவ வலிமையால் காமதேனுவை வரவழைத்தார். காமதேனுவிடம் அரசனுக்கும் அவன் படைக்கும் உணவளிக்க வேண்டும் என விண்ணப்பித்தார். காமதேனு உடனே யாவரும் அமர்ந்து உண்ணும் பொருட்டும் ஓய்வு கொள்ளும் பொருட்டும் ஒரு சிறு நகரத்தையே உண்டாக்கி விட்டது. அரசனும் அவனுடைய படைவீரரும் திரும்பி வந்த போது மிகவும் ஆச்சரியம் அடைந்தனர். காமதேனுவால் தரப்பட்ட சிறந்த உணவு வகைகளை உண்ட அரசனும் படை வீரர்களும் மிக மகிழ்ந்தனர். அப்போது கார்த்தவீரியனுக்குக் காமதேனுவைத் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றுவிட வேண்டுமென்று தோன்றியது; மகரிஷியை அணுகிக் காமதேனுவைத் தனக்குத் தருமாறு வேண்டினான். முனிவர் மன்னனை நோக்கி, "என் வேண்டுகோளுக்கு இணங்க இங்கே எனக்கு உதவி செய்ய வந்த காமதேனுவைப் பிறருக்குத் தானம் செய்யும் உரிமை எனக்கு இல்லை. ஆகையால் அதனைத் தர இயலாது" எனக் கூறினார். அரசனோ அக்காமதேனுவை வலிந்து இழுத்துச் செல்ல முனைந்தான். தன் வீரர்களை அழைத்து அதனைப் பிணிக்கும் படிக் கூறினான். வீரர்கள் காமதேனுவை நெருங்கியதும் அது உடம்பைச் சிலிர்த்துக் கொண்டது. அதனுடைய ஒவ்வொரு மயிர்காலிலிருந்தும் ஓராயிரம் வீரர் தோன்றினர். கார்த்த வீரியனுடைய வீரர் சிதறியோடினர். கார்த்தவீரியன் பெருந் தோல்வி அடைந்து தன் நகரத்திற்குத் திரும்பினான்.

கார்த்தவீரியனின் கொடுஞ்செயல்

அத்தோல்வி அவன் மனத்தை அரித்துக் கொண்டே இருந்தது. அதனால் அவன் ஒருநாள் ஜமதக்னியின் ஆச்ரமத்துக்கு மீண்டும் வந்தான். அப்போது ஜமதக்னியின் மகனான ராமன் அங்கு இல்லை. ஜமதக்னி நிஷ்டையில் இருந்தார். அவரைக் கண்ட உடனே கடுங்கோபம் கொண்ட அவன் தன் வாளை உருவி அவர் தலையைச் சீவிவிட்டான். அவனைத் தடுப்பதற்காக ஜமதக்னி முனிவரின் மனைவி ரேணுகா தேவி ஓடிவந்தாள். சினத்தால் கண்ணிழந்த கார்த்தவீரியன் அவளை இருபத்தொரு பாணங்களால் அடித்து வீழ்த்தினான். அவள் குத்துயிரும் கொலையுயிருமாய்க் கிடந்தாள். கார்த்தவீரியன் தன் நாட்டுக்குத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திரும்பினான். அப்போது ராமன் அங்கே வந்தார். அவருடைய வருகைக்காகவே காத்திருந்தாற்போல ரேணுகா தேவி தன் மகனிடம் கார்த்தவீரியன் செய்கையைக் கூறி உயிர் துறந்தாள். தாய் தந்தையருக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களைச் செய்து முடித்த ராமன், "கார்த்தவீரியனுடைய வமிசத்தில் இருபத்தொரு தலைமுறை மன்னர்களைக் கொல்லுவேன்" என்று சூளுரைத்தான்.

ராமன் சபதத்தை நிறைவேற்றல்

ராமன் கயிலை மலையை அடைந்து சிவபிரானைத் தியானித்தான். சிவபிரான் அவன்முன் தோன்றி அவனுடைய விருப்பம் நிறைவேற விநாயக மூர்த்தியைத் தியானிக்க வேண்டும் எனக் கூறி அவனுக்குச் சடாக்ஷர மந்திரத்தை உபதேசித்தார். ராமன் மயூரேசம் என்னுமிடத்தை அடைந்து விநாயகரைக் குறித்துத் தவம் செய்தார். விநாயகப் பெருமானும் அருள் கூர்ந்து அவன் முன் தோன்றியருளினார். ராமன் விநாயகரைப் பணிந்து, "கருதியவர்க்குக் காரியம் கைகூட்டுவிக்கும் கணேச மூர்த்தியே, ஒரு பாவமும் செய்யாத என் தந்தையையும் தாயையும் அநியாயமாகக் கொன்ற கார்த்தவீரியனையும் அவன் வம்சத்தையும் இருபத்தொரு தலைமுறைக்கு அழிப்பதாகச் சபதம் செய்தேன். அச்சபதங்கள் நிறைவேற எனக்கு அனுக்ரஹம் செய்ய வேண்டும்" என வேண்டினான். அவன் விருப்பம் நிறைவேற அருள் புரிந்த விநாயகப் பெருமான் அவருக்குப் பரசு என்ற ஆயுதத்தையும் அளித்தார். அன்று முதல் அவர் பரசுராமன் என்றழைக்கப் பட்டார். பரசுராமன் கார்த்தவீரியன் வம்சத்தை இருபத்தொரு தலைமுறை அழித்துத் தன் சபதத்தை நிறைவேற்றினார். பூபாபலர் பலரையும் கொன்று குவித்துச் சற்றே மனநிம்மதி அடைந்தார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

24. கோகர்ண இலிங்கம்

இராவணன் பெற்ற இலிங்கம்

பல்வகை வளங்களும் பல்கிக் கொழிக்கும் இலங்கையை ஆண்டவன் இராவணன். அவன் மிக வலிமை வாய்ந்தவன்; அரக்க குலத்தைச் சேர்ந்தவன்; பரம சிவபக்தன். ஒரு சமயம் அவன் திருக்கயிலையைச் சார்ந்து இயற்கை அழகும் பேரமைதியும் நிறைந்ததோர் தனியிடத்தில் சிவபெருமானைக் குறித்துச் சிறந்த தவம் செய்தான். பல்லாண்டுகளாக அவன் செய்த தவத்தை மெச்சிய பரமன் அவனுக்குக் காட்சியளித்தார். இராவணன் இறைவனைக் கண்ணுற்ற பெருமகிழ்ச்சியோடு எழுந்து பரமனின் பாதாரவிந்தங்களில் படிந்து பக்திப் பரவசனாகிக் கண்ணீர் பனிப்ப நின்றான். சிவபிரான் இராவணனை நோக்கி, "விரும்பிய வரமெலாம் கேட்க" என்றார். இறைவன் திருவாய் மொழியைக் கேட்ட இராவணன் மீண்டும் நித்தனைப் பணிந்து, "அண்டமெலாம் அழியும் அக்காலத்தும் தென்னிலங்கை சிதறாமல் அழியாமல் நிலையாய் இருந்திட அருள வேண்டும்" என வேண்டினான். இராவணன் வேண்டிய வரத்தை ஈந்த ஈஸ்வரன் அவனிடம் அழகிய சிவலிங்கம் ஒன்றைக் கொடுத்து, "இந்த இலிங்கத்தை மிக்க தூய்மையுடன் இலங்கைக்கு எடுத்துச் செல்க; இடையில் எங்கும் கீழே வைத்துவிடாதே; கீழே வைத்துவிட்டால் அவ்விடத்திலேயே அது வேர்விட்டு நிலைத்து நின்றுவிடும்; அதனை மீண்டும் அவ்விடத்தைவிட்டு எடுத்தல் இயலாது. இலங்கையில் இதனைப் பிரதிஷ்டை செய்து தினமும் பூசனை புரிந்துவருதல் வேண்டும்; அங்குச் சிறப்பும் பூசனையும் நடக்கும் வரையில் உன்னை ஒருவராலும் வெல்ல இயலாது; இலங்கையையும் அழிக்க இயலாது" என்று கூறி மறைந்தார். சிவபிரானைக் கண்ணாற் கண்ட மகிழ்ச்சியாலும் சிவலிங்கம் பெற்ற நம்பிக்கையாலும் இராவணன் விரைந்து இலங்கை நோக்கிச் சென்றான்.

இந்திரன் கவலை

இலங்கை வேந்தனாகிய இராவணன் ஈசனிடம் வரம் பெற்றதும் இலிங்கம் பெற்றதும் இலங்கைக்கு அழியாநிலை பெற்றதும் கேள்வியுற்ற இந்திரன் பெரிதும் கவலை கொண்டான். 'இராவணன் இலிங்கததை இடையூறின்றி இலங்கைக்கு எடுத்துச் சென்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிரதிஷ்டை செய்து விட்டால் அதன்பின் அவன் அதனை இடைவிடாது பூசனை செய்வது திண்ணம். இலிங்க பூசை இடையீடின்றி நடப்பின் இராவணனை வெல்ல ஒருவராலும் இயலாது; இலங்கையும் அழியாது; இராவணனோ தேவர் களுக்கு வைரி; தேவர்களுக்குக் கொடுமை பலவும் செய்வான்; அடிமைப் படுத்துவான்; ஆகையால் அவன் சிறந்து வாழ்வதோ அவன் நாடு நிலைத்து நிற்பதோ தேவர்களுக்கு மிகவும் ஆபத்து; இதனைத் தவிர்ப்பது எவ்வாறு?' என்று மனத்துள் மிகவும் ஆலோசனை செய்தான். ஒரு வழியும் தோன்றாமற் போகவே தேவர்கள் புடைசூழப் புறப்பட்டுக் கயிலையங் கிரியை அடைந்தான். ஆங்கே முகப்பில் கோயில் கொண்டிருந்த ஆனைமுகத்து அண்ணலை 'அபயம்' எனச் சார்ந்து அடி வீழ்ந்தான். களிற்றுமுகக் கணபதியும் கருணை பெருக ஆயிரங் கண்ணனை நோக்கி அவன் வந்த காரியம் யாதென வினவினார். இந்திரன் இராவணன் பற்றிய வரலாற்றையும் எதிர்பார்க்கும் இன்னல்களையும் எடுத்துக் கூறி, தேவர்களைக் காக்க வேண்டும் என்று வேண்டினான். அதுகேட்ட ஆகுவாகனர் இந்திரனை அச்சமின்றி இருக்கும்படிக் கூறினார்.

தந்திமுகன் செய்த தந்திரம்

கரிமுகத்துக் கணபதி விரைந்து செல்லும் இராவணனைத் தொடர்ந்து அந்தணச் சிறுவன் உருக்கொண்டு சென்றார்; வருணனை அழைத்து இராவணனுக்குத் தாங்க முடியாத சிறு நீர் உபாதை உண்டாக்குமாறு ஆணையிட்டார். வருணனும் அவ்வாறே செய்ய, இராவணன் உபத்திரவம் பொறுக்க முடியாமல் நாற்புறமும் நோக்கினான். சற்றுத் தூரத்தில் ஓர் அந்தணச் சிறுவன் வந்துகொண்டிருப்பதைப் பார்த்து அவனிடம், "சிறுவனே, நான் சிறுநீர் கழித்து வரும்வரையில் இந்த இலிங்கத்தைக் கையிலேயே வைத்துக்கொண்டிரு. கீழே வைத்துவிடாதே. இலிங்கம் மிகவும் புனிதமானதாகையால் கீழே வைக்காமல் ஜாக்கிரதையாய் இரு. விரைவில் நான் வந்து வாங்கிக்கொள்கிறேன்" எனக் கூறினான். ஆனால் அந்தப் பொல்லாத அந்தணச் சிறுவனோ, "நானும் விரைந்து வெகுதூரம் செல்ல வேண்டியவன்; கடமைகள் பல உள; நிற்பதற்கு எனக்கு நேரம் இல்லை; மேலும் வலிமையற்ற யான் இந்த இலிங்கத்தை எவ்வளவு நேரம் கையில் வைத்திருக்க இயலும்? இருந்தாலும் உனக்கு உதவ எண்ணுகிறேன். என் கையில் வலி உண்டாகும் வரையில்தான் வைத்திருப்பேன்; வலி உண்டாகு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாயின் உன்னை மும்முறை கூப்பிடுவேன். அதற்குள் நீ திரும்பி வந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் இலிங்கத்தை இந்த இடத்திலேயே இறக்கி வைத்து விடுவேன்'' என்றான். உபாதை பொறுக்க முடியாத இராவணன் அதற்கு ஒப்புக்கொண்டு அவ்வந்தணச் சிறுவனிடம் இலிங்கத்தைக் கொடுத்துவிட்டு உபாதை போக்க ஓடினான். அவன் சற்று தூரம் சென்றவுடனேயே அச்சிறுவன் 'இராவணா' எனக் கூப்பிட்டான்; சிறுநீர் கழிக்க அமர்ந்த உடனே மீண்டும் 'இராவணா' என்றான்; அவன் விரைந்து எழுந்து வருவதற்குள் மூன்றாம் முறையும் 'இராவணா' என்றான்; உடனே இலிங்கத்தையும் கீழே வைத்துவிட்டான். வைத்த உடனே அவ்விலிங்கம் வேரூன்றி நின்று உறுதிப்பட்டது. விரைந்தோடி வந்த இராவணன் இலிங்கம் கீழே வைக்கப்பட்டுவிட்டதைக் கண்டு வெகுண்டான். விரைந்து அதனைத் தூக்கினான்; தூக்க முடியவில்லை. சுற்றிலும் தோண்டித் தன் பலம் கொண்ட மட்டும் முயற்சி செய்தான். இலிங்கத்தின் மேற்பகுதி பசுவின் காதுபோல் குழைந்து வளைந்து அசைந்ததேயன்றி இலிங்கம் அசையவில்லை. தாங்கொணாச் சினத்தால் இராவணன் அந்த அந்தணச் சிறுவனை ஓங்கிக் குட்டினான். அவனுக்கொரு பாடம் கற்பிக்க விரும்பிய விநாயகர் உடனே தம்முடைய உண்மை உருக்கொண்டு தம் துதிக்கையால் இராவணனைத் தூக்கிப் பன்முறை எறிந்து பந்தாடினார்; பலமுறை சுழற்றினார்; பலமுறை புரட்டினார்; பலமுறை தம் காலால் எற்றினார்; பலமுறை பாதலம் புகுமாறு அழுத்தினார். அவ்விராவணன் என்பெலாம் நொறுங்க உடலெலாம் புண்ணாக வலி தாங்காமல் கதறி விநாயகரின் பாதத்தைப் பற்றிச் சரணாகதி அடைந்தான்.

அரக்கன் சரணாகதி அடைய ஐங்கரப் பெருமான் இரங்கி அவன் உடல் துன்பம் நீங்க அருளி உயிர்ப்பிச்சை அளித்தார். பிறகு அவனை நோக்கி, ''நம் தலையில் நீ எவ்வாறு குட்டினாயோ அவ்வாறே உன் தலையில் இப்போது குட்டிக்கொள்'' எனக் கூறலும் அரக்கர் தலைவன், ''அறியாது செய்த பிழை அத்தனையும் பொறுக்க வேண்டும்; ஆதி மூலப் பழம்பொருளே, அண்ட சராசரங்களாய் விளங்கும் அத்தனையையும் உண்டாக்கி காத்து அழிக்கும் சர்வ வல்லமை படைத்த களிற்றுமுகனே, நின் பாதமே கதி; நின்னைச் சரணடைந்தேன்'' எனப் பன்முறை கூறித் தன் தலையில் குட்டிக் கொண்டான். எம்பெருமானும் மனத்தால் மகிழ்ந்து அவனுக்குப் பல வரங்கள் அளித்து அவனை இலங்கைக்குச் செல்லுமாறு விடுத்தார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கயிலையிலிருந்து வந்த இலிங்கம் அங்கேயே தங்கி விட்டது. அமரர் எண்ணிய எண்ணம் நிறைவேறியது. இலிங்கத்தின் மேற்பகுதி பசு(கோ)வின் கர்து (கர்ணம்) போல் குழைந்து நின்றதால் அம்மூர்த்திக்கு கோகர்ண நாதர் எனப் பெயர் உண்டாயிற்று. அக்கோயில் உள்ள பகுதி கோகர்ணம் எனப் பட்டது. அரக்க பலம் வாய்ந்த இராவணனாலும் எடுக்க முடியாத பலம் வாய்ந்து நின்றமையின் அவ்விலிங்கப் பெருமானுக்கு மஹாபலேஸ்வரர் என்பது திருநாமம் ஆயிற்று.

25. காவிரி தந்த கணபதி

சீகாழியில் சுரபதி

முன்னொரு யுகத்தில் சூரபத்மன் என்ற ஓர் அசுரன் இருந்தான். அவனுக்குத் தாரகன், சிங்கமுகன் என்ற தம்பியர் இருவர். அம் மூவரும் சிவபிரானைக் குறித்துப் பல்லாண்டுக் காலம் பயங்கர தவம் புரிந்தனர்; உண்மையில் மிகக் கொடுந்தவம் புரிந்தனர். பரமசிவனாரும் அவர்களுக்குத் தவம் முற்றிய நிலையில் காட்சி யளித்தார். அவ்வசுரர்கள் பரமேஸ்வரரைப் பன்முறை பணிந் தனர்; பரவசமடைந்து நின்றனர். எம்பெருமான் அவர்களை நோக்கி, ''நீங்கள் செய்த கடுந்தவத்திற்கு யாம் மகிழ்ந்தோம். நீர் வேண்டின வரங்களை ஈவோம்; விரும்பிய வரங்களைக் கேளுங்கள்'' எனப் பணித்தார். அவ்வசுரர்களும் தங்களுக்குத் தோன்றிய வரங்களையெல்லாம் கேட்டனர். அதன் பயனாக அவர்கள் ஆயிரத்தெண்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்கள் ஆட்சி செய்யும் பெரும் பேற்றினையும் ஈசன் சக்தியல்லால் வேறொன்றால் இறவாத வரத்தினையும் பெற்றனர்.

பின்னர் சூரபத்மன் தன் தம்பியரோடு பூவுலக முழுவதையும் வென்றான்; தேவருலகு புகுந்து போர்முழக்கம் செய்தான். அவ்வசுரனுடைய வலிமையையும் படை பலத்தையும் உணர்ந்த இந்திரன் ஒருவருக்கும் தெரியாமல் ஓடிப் பூவுலகில் சீகாழி என்னுமிடத்தில் மறைந்து வாழ்ந்தான். அவ்வசுரர்கள் பின்னர் மற்ற எல்லா அண்டங்களுக்கும் சென்று அவற்றையெல்லாம் வெகு எளிதில் வென்று ஆளத்தொடங்கினர். தேவர்கள் பல ரையும் சிறைபிடித்து வந்து சித்திரவதை செய்தனர்; மறைந்து வாழ்ந்துகொண்டிருந்த மாகத் தலைவன் மனம் மறுகினான்; செய்வதறியாது சித்தம் கலங்கினான். இறுதியில் கயிலையங்கிரி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வாசனாகிய முக்கண்ணனே அருள்புரிந்தாலல்லாமல் துன்பத்திற்கு ஒரு முடிவில்லை என்று தெரிந்துகொண்டான். ஆகையால் சீகாழியிலேயே ஒரு சிவலிங்கம் தாபித்துத் தினந்தோறும் பூஜை முதலியன செய்து போற்றித் துதித்துவந்தான்.

இந்திரனையும் சிறைபிடிக்க எண்ணிய சூரபத்மன் பல திசைகளிலும் இந்திரனைத் தேட அசுரர்களை ஏவினான். அவர்களும் பல இடங்களிலும் தேடிப் பயனின்றி மீண்டனர். சூரபத்மனுக்கு ஒரு யோசனை உதித்தது: 'இந்திரன் பூவுலகிலேயே ஒளிந்து தவமும் பூஜையும் இயற்றிக் கொண்டிருப்பான். ஆகையால் பூவுலகில் மழையின்றிச் செய்துவிட்டால் அவனிருக்குமிடத்தை எளிதில் கண்டறியலாம்'. உடனேயே ஸப்த மேகங்களையும் வரவழைத்து அவ்வசுரன் அவைகளுக்குப் 'பூவுலகில் மழை வர்ஷிக்கக் கூடாது' எனக் கட்டளையிட்டான். மேகங்களும் சூரபத்மனின் ஆணைக்கு அஞ்சிப் பல்லாண்டுக் காலம் மழை பெய்யாது தவிர்த்துவிட்டன. வளமிகு தரையெல்லாம் வற்கடம் பூண்டன. சிவபூஜைக்கு உதவும் பொருட்டுச் சிறியதொரு நந்தவனம் வைத்துப் பராமரித்து வந்தான் விண்ணவர் கோமான், மழை பெய்யாது பொய்த்துவிட்டதால் நந்தவனம் காய்ந்து உலர்ந்து விட்டது. உலகமே காய்ந்து உலர்ந்தது எனில் இச்சிறு நந்தவனம் ஒரு பொருட்டோ?

இந்திரன் மிகவும் கவலை கொண்டான். சிவனாருக்கு அபிஷேகம் செய்யத் தீர்த்தம் இல்லை; பூசனை புரிய புஷ்பம் இல்லை; நிவேதனம் செய்ய ஓதனம் இல்லை; பழம் இல்லை; பாக்கு இல்லை; வெற்றிலையும் இல்லை. , என் செய்வான் இந்திரன்? எல்லாம் ஈசன் செயலே என எண்ணி மனமுருகி நெஞ்சுருகி இறைவனைச் சரணடைந்தான். அப்போது, "இந்திரா, உன் நந்தவனம் ஓங்க அருள் தந்தனம்; விரைவில் நீர்ப்பெருக்கு உண்டாகும்" என ஓர் அசரீரி விளம்பியது. அது கேட்ட இந்திரன் மனம் மகிழ்ந்தான்; அசரீரி வாக்கு எவ்வாறு பலிக்குமென்று எதிர்பார்த்திருந்தான்; இறைவன் அடி மறவாதிருந்தான்.

நாரதர் நவின்ற நல்லுரை

சின்னாட்களில் அவ்வழியே நாரதர் வந்தார். அவரைக் கண்ட இந்திரன் எதிர்கொண்டழைத்துச் சென்று பல்வகை உபசாரமும் செய்து பணிந்தான். பிறகு அவரிடம் தனக்குற்ற துன்பங்களனைத்தையும் எடுத்துச் சொன்னான். அதுகேட்ட நாரதர் அவனைத் தேற்றி, "விரைவில் நல்ல காலம் வரும். வருந்தற்க. கயிலைநாதன் பேரருட் கட்டளையால் மிகத்தெளி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கேள்வி அகத்தியனார் தென்னாடு நோக்கி வருகின்றார்; சைய மலையில் இப்போது தங்கியிருக்கின்றார்; சிவபெருமானின் ஜடாமுடியில் தங்கிச் சுழன்று கொண்டிருக்கும் தேவகங்கை யின் ஒரு கிளையைத் தம் கமண்டலத்துள் அடக்கி வைத்திருக் கிறார்; தென்றல் தோன்றும் பொதியமலை சென்று எம்பெரு மானை அக்கரக நீரால் புனித நீராட்டிப் பூசனை புரிந்து அவர்தம் திருமணக் கோலம் காணிய விழைகின்றார். அக் கரண்டக நீரைக் கவிழ்த்துவிட்டால் அந்நீர் ஆறாகப் பெருகி அவனிக்கு உயிரூட்டும்; உன் நந்தவனத் தருகாக ஓடிப் பூம் பொழிலைச் செழிப்பாக்கும். உன் பூசனை தொடரும்; கவலை தீரும்'' எனக் கூறினார்.

தேவராஜன் மகிழ்ந்து மீண்டும் அவரை வணங்கி, ''தமிழ் முனிவன் கொண்டுவரும் கமண்டலத்தைக் கவிழ்ப்பதெவ்வாறு?'' எனக் கேட்டான்.

நாரதர் வாசவனை நோக்கி, ''மிகத்திறம் கொண்ட அகத்தியர் கமண்டலத்தைக் கவிழ்த்து விடுதல் அவ்வளவு எளிதன்று; அதனை அவர் மிக்க அக்கறையுடன் பாதுகாத்து எடுத்து வருகிறார். அதற்கொரு ஊறு செய்து காவிரி யாக்கும் வல்லமை கணபதி ஒருவருக்கே உண்டு. கணபதியின் கருணை யின்றி இது நிறைவேறாது. ஆகவே கணபதியைக் குறித்துத் தவம்புரிக. உன் கருத்து நிறைவேறும்'' எனக் கூறிச் சென்றார்.

இந்திரன் இரவு பகல் பாராது உண்டியும் இல்லாது பன்னாட்கள் தவமிருந்து விநாயகரைப் போற்றினான். அவன் வழிபாட்டுக்கு மகிழ்ந்த விநாயகர் அவனுக்குக் காட்சியளித்தார். வானவர் கோன் விநாயகரின் பாதங்களில் பணிந்து அசுரரால் தனக் கேற்பட்ட துன்பங்களையும் சிவபிரான் பூசனைக்குத் தீர்த்தமும் பூவும் இல்லாத குறைகளையும் மிகுந்த வருத்தத்தோடு கூறினான். அருள்மிகு ஆனைமுகத்தோன் அவன் அல்லல்களைத் தீர்ப்ப தாகக் கூறி மறைந்தார்.

கமண்டலம் கவிழ்ந்தது

சைய மலையில் அருணோதயத்தில் காலை வந்தனமும் ஜபமும் செய்துகொண்டு கம்பீரமாக அமர்ந்திருந்தார் என்று முள தென்றமிழ் இயம்பி இசைகொண்ட அகத்தியனார். அவர் அருகே நீர் நிறைந்த கமண்டலம் இருந்தது. மனத்தை ஒருமுகமாக்கி ஈசன் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த முனிவர் அருகில் காகமொன்று வந்ததைக் கவனிக்கவில்லை. வந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காகம் கமண்டலத்தின் நுனியில் அமர்ந்து நீரைக் குடித்தது. அப்போது அதனைப் பார்த்த முனிவர் தம் கரத்தை யோச்சி அதனைத் துரத்தினார். அக்காகமும் அஞ்சியதேபோன்று தன் இருகால்களாலும் கமண்டலத்தின் ஒருபக்க நுனியை உதைத் தெழுந்து பறந்தது. கமண்டலம் கவிழ்ந்தது. கரண்டகநீர் காவிரி யாயிற்று. காவிரியாறும் சையமலையினின்றும் துள்ளிக் குதித்துப் பள்ளம் நோக்கிப் பாய்ந்தது. வெகுண்டெழுந்த வித்தக முனிவர் காக்கையை நோக்கினார். ஆங்கோர் அதிசயம்! பொல்லாக் காகம் நல்ல மாணி உருவம் தாங்கி நின்றது. பார்த்தார் குறுமுனிவர்; அசுரனோ என அயிர்த்தார்; உண்மையைத் தெளிகுவோம் என எண்ணி அப்பிள்ளையைத் துரத்திக் கொண்டு ஓடினார்; அப்பிள்ளை அகப்பட்டால் அவ்னைக் குட்டக் கையை ஓங்கிக் கொண்டு போனார். அவர் கையில் அகப்படும் பிள்ளையோ அப்பிள்ளையார்? நெடுநேரம் அப் பிள்ளையைத் துரத்திக் கொண்டு ஓடியதால் முனிவர் களைத் தார்; உடலெல்லாம் வலித்தது; கோபம் தோன்றியது. அக்கணமே மாணி உருத் தாக்கிவந்த மதகளிற்று மாமுகத்தோன் தன்னுருக் காட்டி நின்றார். தபோதனர் திகைத்தார்; அவரைக் குட்ட ஓங்கி வந்த கையால் தம் தலையில் குட்டிக்கொண்டார். பாலகனாய் வந்த பரம்பொருளைப் பணிந்து நின்றார். பின்னர் ஆனைமுகத்து அண்ணலை நோக்கி, ''பிறைசூடிய பெம்மானைப் பொதிய மலைச் சாரலிலே போற்றித் திருமுழுக்காடி வழிபட்டு அவர் தம் திருமணக்கோலத்தைக் கண்குளிரக் காணும் பொருட்டுக் கமண்டலத்தில் காவிரியை அடக்கிக் கொண்டு வந்தேன். அதனை இங்கே கவிழ்த்தது நன்றோ?'' எனக் கண்ணீர் மல்கிக் கலங்கிக் கூறினார்.

அடியவர்க் கிரங்கும் ஆனைமுகத்தோன் அன்பரை நோக்கி, ''வருந்தற்க, சீகாழியில் இந்திரன் நந்தவனம் நீரில்லாமல் வாடுகிறது. உலகம் மழையின்றி அழிகிறது. இவ்விடர்களை நீக்கவே வான்பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியை இங்குக் கவிழ்த்தேன். இனி இந்திரன் சிவபூஜையைச் சிறக்கச் செய்வான்; உலகம் வாழும். காவிரி சீகாழியில் பொன்னியாகும். பொன்னி பொதியமலையில் பொருநை ஆகும்.'' எனக்கூறி விரைந்தோடும் காவிரியில் கொஞ்சம் தடுத்துக் கமண்டலத்தை நிரப்பித் தமிழ்முனிவன் கையிற்கொடுத்தார். அகத்தியரும் மகிழ்ந்து பொதியமலை நோக்கிப் புறப்பட்டார். வெள்ளமாய்ப் பெருகிவந்த காவிரி வழியெல்லாம் ஊற்றுக்கண் திறந்து குளமெலாம் நிரப்பி ஏரியெலாம் வழியப் பல்கால்களாய்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பரந்தோடிச் சீகாழியடைந்து இந்திரன் செய்த நந்தவனம் பல்கப் பாய்ந்து கடலையடைந்தது. இன்றுவரை அப்பொன்னி நதி பொன்கொழிக்கும் நதியாய் விளங்கி வருகிறது.

26. காச்யபர்

தோற்றம்

பிரம்ம தேவன் ஒரு கல்பத்தில் ஏழு புத்திரர்களைப் படைத்தார். அவர்களுள் சிறந்து விளங்கியவர் காச்யபர். அவருக்கு விநாயகப் பெருமானின் ஓரெழுத்து மந்திரத்தை பிரம்மதேவன் உபதேசம் செய்து தவம்புரியும்படிக் கூறினார்.

காச்யப முனிவர் ஆயிர வருட காலம் அருந்தவம் புரிந்தார். அவருடைய தவத்தை மெச்சிய கணேசப் பெருமான் மூஷிக வாகனத்தில் அவருக்குப் பிரத்யக்ஷமானார். காச்யபர் அப் பெருமானைக் கண்குளிர தரிசனம் செய்து, ''எம்பெருமானே, என் தந்தையார் என்னை சிருஷ்டித் தொழிலைச் செய்யுமாறு பணித்துள்ளார். அதற்கேற்ற சக்தியை எனக்களித்தருள வேண்டும்'' என வேண்டினார்.

விநாயகப் பெருமானும் அவ்வாறே அருள் புரிந்து மறைந்தார். காச்யபர் பிறகு பதினான்கு பெண்களைத் தம் பத்னிகளாக ஏற்றுக் கொண்டு மிகச் சிறிய ஈ எறும்பு முதல் மிகப்பெரிய விலங்குகள் ஈறாக ஏராளமான விலங்கு வகைகளையும் தேவர், மனிதர், முதலானோரையும் அசரங்களாகிய மலை; கடல் முதலியவற்றையும் உற்பத்தி செய்தார்.

அவைகளும் காச்யபரிடம் உபதேசம் பெற்று விநாயக மூர்த்தியை நோக்கி நெடுங்காலம் தவமிருந்து அவரருள் பெற்றன. இவ்வாறு காச்யபர் சிருஷ்டித்த சராசரப் பொருள்கள் விருத்தியடைகின்றன.

ஆனைமுகத்தானுக்கு ஆயிரம் பெயர்கள். தினமும் அவற்றைச் சொல்லி வணங்குபவர் நீடித்த ஆயுளும் திடமான உடலும் செல்வமும் சிறப்பும் பெற்று விளங்குவர். தினமும் ஆயிரம் திருப்பெயர்களையும் சொல்ல இயலாதவர் பின்வரும் பன்னிரண்டு பெயர்களையேனும் தினமும் மனமுருகிச் சொல்லித் துதிக்க வேண்டும்:-

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

1. சுமுகன்
2. ஏகதந்தன்
3. கபிலாய
4. கஜானன்
5. லம்போதரன்
6. விகடன்
7. விக்நராஜன்
8. கணாத்யக்ஷன்
9. பாலசந்த்ரன்
10. ஹேரம்பன்
11. மஹோத்கடன்
12. அனந்த ஆனந்தபரன்

விநாயகனைப் போற்ற விலகும் துயரம்
கணாதிபன் காப்பான் கனிந்து.

27. விநாயகர் அவதாரங்கள்

யுகங்கள் தோறும் விநாயகப் பெருமான் பல அவதாரங்கள் எடுத்துப் பல திருவிளையாடல்கள் புரிந்துள்ளார். அவற்றை எல்லாம் விவரித்து உரைத்தல் இயலாது; ஒரு மனித ஆயுள் போதாது; ஆகவே, எல்லா அவதாரங்களையும் எடுத்துரைக்கும் முயற்சியைக கைவிட்டுச் சிவபெருமான் முருகனுக்குக் கூறிய மிகச் சிறந்ததான பன்னிரண்டு அவதாரங்களை மட்டும் கூறுவோம். அப்பன்னிரண்டு அவதாரங்களாவன:

1. வக்ரதுண்ட விநாயகர்
2. சிந்தாமணி விநாயகர்
3. கஜானனர்
4. விக்நராஜர்
5. முந்திய மயூரேச விநாயகர்
6. பிந்திய மயூரேச விநாயகர்
7. தூமகேது
8. கணேசர்
9. கணபதி
10. மஹோத்கடர்
11. உடுண்டி விநாயகர்
12. வல்லமை விநாயகர்

28. வக்ரதுண்ட விநாயகர்

விநாயகப் பெருமானின் இந்த அவதாரமும் திருவிளையாடலும் அத்யாயம் 19-ல் வன்னியிலை வேட்ட விநாயகர் என்ற பகுதியில் கூறப்பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

29. சிந்தாமணி விநாயகர்

அறம் பெருக்கிய அபிஜித்

ஒரு காலத்தில் பரத கண்டத்தின் தென் பகுதியை அபிஜித் என்றோர் அரசன் ஆண்டுவந்தான். அவன் மனைவி குணவதி தன் பெயருக்கேற்ற நற்குணங்கள் மிகுந்தவள். நடுவுநிலை தவறாது நாடாண்ட அபிஜித்துக்கு நீண்ட நாட்களாக மகப்பேறு இல்லை. அதனால் மனம் வருந்திய அவன் அரச போகத்தை நீத்து அடவி சென்று அருந்தவம் புரிய விழைந்தான். குணவதியும் அவ்வாறே மனம்கொள்ள, அபிஜித் தன் அமைச்சர்களிடம் அரசு பாரத்தைச் சுமத்தித் தான் மீண்டு வரும்வரையில் 'நாட்டு மக்களை ஒரு துன்பமும் நணுகாவண்ணம் நனி காக்க' என ஆணையிட்டு நாடு நீங்கித் தன் நிழல்போல் தன்னைத் தொடரும் இல்லாளுடன் வனம் புகுந்தான்.

அருங் கானகத்துள் நெடுந்தூரம் சென்ற அவர்கள் ஆங்கோர் அழகிய ஆசிரமத்தைக் கண்டனர்; ஆதித்தன் கிரணமும் ஊடுபாய்ந்து வருதல் அரிதான அடர்த்தி மிகு அடவியில் உறைவிடம் அமைத்து அமைதி ஓங்க அருந்தவம் ஆற்றி வரும் பெருந்தவ முனிவரான வைசம்பாயனரைக் கண்டனர்; திருமேனி மறையத் திருநீறு சாத்தித் தவநிறையைப் பன்மடங்கு பெருக்கும் ருத்ராக்ஷ மாலை அணிந்து சிவப் பிழம்பாய்த் தோன்றிய தவமலையைக் கண்களாற் கண்டனர்; கழிபேருவகை எய்தினர்; தம் கரும வினைகள் யாவும் கழிந்தன எனக் களித்தனர்; மாதவத்தோன் மலரடிகளில் அடியற்ற மரமென வீழ்ந்தனர்; பணிந்து கிடந்தனர்.

பணிந்து வீழ்ந்து பாதம் பற்றி மீண்டெழ முனையாது கண்ணீர் மல்கக் கலங்கிச் சரணடைந்த அவர்களுக்கு மாதவக் குன்றெனப் பொலியும் வைசம்பாயனர் அகம் கனிந்து ஆசி புகன்றார். வேத வித்தாய் தவத் தருவாய் அன்பு மலராய் அருட்கனியாய் விளங்கும் வைசம்பாயனர் தம் பாதம் பணிந்த தம்பதியர் ஏழாமை கண்டு அவர்கள் குறையை ஞானக் கண்ணால் உணர்ந்தார்; உணர்ந்த அக்கணமே "உங்களுக்குப் புத்திரப்ராப்தி உண்டாகுக" என மனம் நெகிழ்ந்து மீண்டும் வாழ்த்துரை வழங்கினார். ஆசி பெற்ற அரச தம்பதியர் அகமும் முகமும் மலர ஆனந்த பரவசமெய்தி அருந்தவ முனிவர் எதிரே இருகையும் கூப்பி அடக்கத்துடன் நின்றனர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஐந்தவித்தான் அருள்பெற்ற அபிஜித்

வைசம்பாயனர் அபிஜித்துக்குப் பஞ்சாட்சர மந்திரத்தைப் பாங்குடன் உபதேசம் செய்தார். பிறகு சற்றுத் தொலைவில் ஆறும் கட்லும் கலக்கும் கூடலுக்கு மேற்புறமாய் இருந்த அழகு கனிந்த புறவத்தில் தங்கி, இரண்டு ருதுக்கள் முடியும்வரை பஞ்சாட்சர மந்திரம் ஜபித்துப் பரமனைக் குறித்துத் தவம் செய்யுமாறும், அக்காலவெல்லை முடியும்போது பஞ்சாட்சர மூல மந்திரத்தால் ஹோமம் முதலியன செய்து தவத்தை முடிக்குமாறும், தவம் முடிந்தபின் நகரத்திற்குத் திரும்பிச் செல்லுமாறும் பணித்தார். அவ்வாறே அபிஜித் மன்னனும் அவன் மனைவியும் எழில்மிகு இளமரக்காவை எய்தி ஒரு தெண்ணீர்த் தடாகக் கரையில் பர்ணசாலை அமைத்துக் கொண்டு பஞ்சாட்சர மந்திரம் ஜபித்துப் பரமனை நோக்கித் தவம் செய்யத் தொடங்கினர். அப்போது அப்பொழிலின்கண் அண்டமெலாம் உண்டாக்கும் வண்ணம் கண்ட நான்முகப் பெருமானும் சகல கலா வல்லியாகிய அவர் மனைவி ஸரஸ்வதியும் நோன்பு பூண்டு கடுந்தவம் செய்து கொண்டிருந்ததைக் கண்டு அதிசயித்தனர்.

விரிஞ்சன் விரகம்

இவ்வாறு அவர்கள் தவவொழுக்கம் மேற்கொண்டு புவி யின்பம் விழையாது ஐந்தவித்து மனமொன்றித் தியானமும் ஜபமும் செய்துவரு நாளில் ஒரு நாள்:

இளவேனிற் பருவத்து எழில் நிலா முழுமதியாய்த் தோன்றியது. அன்று அபிஜித்தும் குணவதியும் உவா நோன்பு இயற்றும் பொருட்டுக் கடல் நீராடச் சென்றனர். அப்போது இளந் தென்றல் தேரேறி வந்த இரதி மணாளன் கரும்பு வில்லெடுத்துக் களிவண்டு நாண்பூட்டி அஞ்சம்பில் ஓரம்பைத் தொடுத்து அன்னைக் கலைமகளின் அகலம் உருவியோட விடுத்தான்; கலைமகள் நெஞ்சில் காமம் விஞ்சியது. மற்றுமோர் மலரெடுத்து மலரவன் நெஞ்சில் மாரன் பாய்ச்சினான். அலரம்பால் அடியுண்ட அயனும் வெண்டாமரையில் குடியிருக்கும் வேதமொழியாளை விழைந்து நோக்கினான். நோக்கிய நோக்கால் தோன்றிய வெப்பம் வாணியையும் பிரமனையும் வாடச் செய்தது: தன் நிலையும் தவ நிலையும் கெடா நிலை வேண்டிய விரிஞ்சனும் வாணியும் தெண்ணீர்த் தடாகம் நோக்கி விரைந்தனர். வெப்பம் தீர முழுகிக் களித்தனர். அவ்வளவில் வெளிப்பட்ட அயன்றன் வீரியம் அப்பிற் கலந்தது. உள்ளமும் உடலும் ஒருங்கே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தூய்மையாக இருவரும் மீண்டு இருப்பிடம் சென்றனர். உவர் நோன்பு முடித்துத் திரும்பிவந்த அபிஜித்தும் அவன் மனைவியும் நீர் வேட்கை மிகக்கொண்டு அத்தடாகத்தின் பளிங்கு போன்ற நீரைப் பருகினர். அப்போது அந்நீரில் கலந்திருந்த விரிஞ்சன்றன் வீரியத்தால் குணவதி பயனடைந்தாள்.

கணன் தோற்றம்

இளவேனிற் காலம் கழிந்ததும் அபிஜித் பஞ்சாட்சர ஹோமம் முதலியன இயற்றித் தவத்தைப் பூர்த்தி செய்து வைசம்பாயனரை வணங்கித் தன் நகரம் ஏகினான். குணவதியும் கருவுற்றாள். மன்னன் மகிழ்ந்தான். அரசி உரிய பருவத்தில் ஓர் ஆண் குழந்தையை ஈன்றாள். யாவரும் மகிழ்ச்சியடைந்தனர். அரசன் ஏழை எளியவர்களுக்கும் அந்தணர்களுக்கும் ஏராளமான பொன்னும் பொருளும் ஈந்தான். முறைப்படி ஜாதகர்மா முதலியவற்றைச் செய்தான். ஆன்றோர்கள் ஆய்ந்து அம்மகனுக்கு கணன் எனப் பெயரிட்டனர். கணன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான். அவன் உடல் வலிமையும் மேனி வனப்பும் தோற்றப் பொலிவும் வீர நெஞ்சும் ஈர மனமும் நிறைந்த கல்வியும் சிறந்த அறிவும் உயர்ந்த ஒழுக்கமும் தெய்வ பக்தியும் கொண்டு விளங்கினான்.

கணன் ஆற்றிய கடுந்தவம்

தவத்திற் சிறந்தது யாதொன்றுமில்லை என்பதை நன்குணர்ந்த கணன் தன் தந்தையின் தாள் பணிந்து தவம் புரிய அனுமதி வேண்டினான். அரசனும் மகிழ்ந்து அரன் ஐந்தெழுத்தை அவனுக்கு அன்புடன் உபதேசித்து அரணியம் செல்ல அனுமதித் தான். உண்ணும் உணவின்றிப் பருகும் நீரின்றி ஓடும் காற்றைக் கட்டுப்படுத்திக் கணனும் கானகத்தில் கடுந்தவம் புரிந்தான்; யோகநிலை எய்தினான். யோக நிலையில் தோன்றிய தேஜஸ் வெப்பமாகப் பரிணமித்தது. அவ்வெப்பம் அமரருலகை அடைந்து தாக்கியது. அவ்வெப்பத்திற் காற்றாத இந்திராதியர் விரைந் தோடிக் கைலையங்கிரியை அடைந்து பரமேசுவரனின் பாதார விந்தங்களைப் பற்றி அடைக்கலமாயினர். பார்வதி பரமேசுவரர் ரிஷபாரூடராகக் கணன் முன்பு தோன்றினர். கண்கொள்ளாக் காட்சி கண்ட கணன் மெய்சிலிர்த்தான்; பார்வதி பரமேசுவரரைப் பன்முறை வலம் வந்து பணிந்தான். அவன் பக்திக்கு நெகிழ்ந்த பரமன் அவனை நோக்கி, "நீ விரும்பிய வரங்களைக் கேட்பாயாக" என்றார். கணன் காலகண்டரை மீண்டும் நமஸ்காரம் செய்து,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''வள்ளலே, என்றும் தங்களிடம் மாறாத பக்தி பூண்டொழுகும் ஆற்றல் அருள வேண்டும்'' எனப் பிரார்த்தித்தான். அவன் பிரார்த்தனையைக் கேட்டு மகிழ்ந்த எம்பெருமான், ''அவ்வாறே ஆகுக'' என வரமீந்து மேலும் ''திரி புவனங்களிலும் உனக்கு நிகர் ஒருவரும் இல்லை. பிரமன் முதலிய எவராலும் உன்னை வெல்ல இயலாது; கொல்ல இயலாது'' எனப் பல சிறந்த வரங்கள் அளித்து வெள்ளிமலைக்கு ஏகினார்.

ஒப்பற்ற வரங்களைப் பெற்று உயர்வடைந்த கணன் தன் நாட்டிற்குத் திரும்பி வந்து தந்தையையும் தாயையும் வணங்கினான். கணனுடைய அறிவு ஆற்றல்களைக் கண்ட அபிஜித் அவனுக்கேற்ற ஒரு கன்னிகையை மணம் புரிவித்து பட்டாபிஷேகம் செய்து ஆட்சிப் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தான்; தானும் தன் மனைவியும் அரசுப் பொறுப்புகளினின்றும் நீங்கி அரனிடம் இடையறா அன்பு பூண்டு பூஜை செய்வதிலும் தியானம் செய்வதிலும் தங்கள் காலத்தைப் பயன்படுத்தினர்.

அமராவதியை வென்றது

''அறம் நிரம்பிய அருளுடை அருந்தவ ரேனும்
பெறலரும் திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்''

என்றபடி, கணன் அரசனான சின்னாட்களிலேயே 'பேரரசனாக வேண்டும்' என அவாக் கொண்டான்; மண்ணுலக மன்னர்களை எளிதில் வென்று வாகை சூடினான். அவன் ராஜ்யம் பெரிதாகப் பெரிதாக அவன் ஆசையும் வளர்ந்தது. யாராலும் வெல்ல முடியாத வரபலம் அவன் ஆசைக்குத் தூபமிட்டது. உடனே கணன் தன் படைக் கணங்களுடன் புறப்பட்டான் விண்ணவர் வேந்தை வெற்றி கொள்ள. உம்பர் உலகில் கற்பகச் சோலையில் புகுந்த கணன் அங்கு உச்சைச்சிரவம் என்ற உயர்ந்த குதிரையைக் கண்டான். அது இந்திரனுடையது. கணன் அதனைக் கைப்பற்றித் தனதாக்கிக் கொண்டான். கணனின் வலிமையைக் கணத்தில் உணர்ந்துகொண்ட உச்சைச்சிரவம் முரண்டு பிடிக்காமல் அடங்கி நின்றது. தனக்குரிய குதிரையைக் கணன் வலிந்து கைப்பற்றிக் கொண்டதைக் கேள்வியுற்ற வாசவன் வெகுண்டெழுந்தான்; வெள்ளை வாரணத்தின் மீதேறிக் கொண்டு தேவ கணம் சூழ கணனை நோக்கி வந்தான்; உச்சைச் சிரவத்தின்மீது ஆரோகணித்து அலட்சியப் பார்வையுடன் அமர்ந்திருந்த கணனைக் கண்டபோதே அவன் நெஞ்சு துணுக்குற்றது. கணனை வெற்றிகொள்வது கடினம் என்பதை உணர்ந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வானோர் கோமான் கணனை நோக்கி, "நிலவுலகம் புரக்கும் நிருபர்தலைவ, அந்தி வண்ணனை அனவரதமும் போற்றும் அன்புடை பக்த, அரச நீதி உணர்ந்து அவனிவாழ் மக்களுக்கு அணுவளவும் துன்பம் உண்டாகாமல் கண்ணை இமைகள் காப்பதுபோல் காத்து வருகிறாய். சீரிய ஒழுக்கமும் உயர்ந்த பண்பும் நிறைந்த வலிமையும் பெற்ற நின்னோடு பொருது வெல்வார் ஒருவருமிலர். அத்தகு குணவானாகிய நீ என் குதிரையை அபகரித்துக்கொள்வது தகாது. அதனை விட்டிடுக" என நயவுரை நிகழ்த்தினான்.

இந்திரன்றன் இன்னுரை கேட்ட கணன் திக்கெட்டும் வெடிபடச் சிரித்தான், "அமராவதியையும் அதன்கண் உள்ள தாவர ஜங்கமப் பொருள்களையும் என்னதாக்கிக் கொள்ள வந்தேன் யான்; நீயும் எனக்கடங்கிய சிற்றரசனாக இருக்க இணங்குவையாயின் அமராவதியில் உனக்கிடமுண்டு; இன்றேல் உன்னையும் உன்னைச் சேர்ந்தவர்களையும் சிறைபிடித்து வைத்துச் சித்திரவதை செய்வேன்" என இடிபோல் முழங்கினான். விண்ணவர் தலைவனும் வெகுண்டெழுந்தான். கடும்போர் தொடங்கியது. தேவர்படை திணறியது; போர்க்களத்தினின்றும் சிதறி ஓடியது; இந்திரனுடைய வஜ்ராயுதம் பொடிப்பொடி யாயிற்று. கணனும் இந்திரனும் மல்யுத்தம் செய்யத் தொடங் கினர். இந்திரன் தலையில் கணன் ஓங்கி ஒரு குட்டு குட்டினான். இந்திரன் மயங்கி விழுந்தான்; சற்று நேரத்தில் மூர்ச்சை தெளிந்து எழுந்தான்; அச்சம் அவனை ஆட்கொண்டது. வேறு வழியின்றி இந்திரனும் கணனுக்கு அடங்கி நடப்பதாக ஒப்புக் கொண்டான்; திரை செலுத்துவதாக உறுதியளித்தான். கணனும் பெருமிதத்தோடு அவனை அமராவதிக்கு அரசனாய் இருக்குமாறு விட்டுவிட்டுத் தன்பெருஞ் சேனையோடு பிரமலோகம் நோக்கிச் சென்றான்.

கமலத்தோன் கலக்கம்

கணன் வருகையைக் கேட்ட கமலத்தோன் விதிர்விதிர்த்துப் பலவகைக் காணிக்கைப் பொருள்களோடு எதிர்கொண்டு வந்து முகமன் பலகூறிச் சிறந்ததோர் ஆசனத்தில் இருத்தி உபசாரம் பலவும் செய்தார். சிறந்த உபசாரங்களாலும் இனிய மொழி களாலும் குதூகலம் அடைந்த கணன் சத்தியலோகத்தை வென்றோம் என்று பெருமை கொண்டு தன்னகருக்குத் திரும்பி வந்தான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேட்டைக்குச் செல்லல்

திக்விஜயத்தை முடித்துக் கொண்டு தன்னகருக்குத் திரும்பி வந்த கணன் முதலில் தன் பெற்றோர்களை வணங்கித் தான் திசைதோறும் சென்று வென்றுவந்த செய்தியெல்லாம் கூறித் தனக்குக் காணிக்கையாகக் கிடைத்த பொருளையெல்லாம் இருமுது குரவர் இணையடியில் சமர்ப்பித்தான்; நேர்மை தவறாது குடிகளுக்குக் குறையுண்டாகாமல் தீயோர் நடுங்க நல்லோர் வாழ்த்த நாடு புகழ நானிலம் காத்து வந்தான். அத்தகு சிறந்த நாட்களில் ஒருநாள் குடிமக்கள் பலர் அரசவை அடைந்து காட்டு விலங்குகள் கணக்கில்லாதன நாட்டினுள் புகுந்து மக்களைத் துன்புறுத்துகின்றன எனவும் பயிர்களை நாசம் செய்கின்றன எனவும் கூறித் தங்களைக் காக்க வேண்டு மென முறையிட்டனர். அதுகேட்ட கணன் உடனே தன் சேனை யோடு வேட்டைக்குப் புறப்பட்டான். வேட்டையில் அவன் கொன்ற விலங்குகள் எண்ணிலடங்கா. வன விலங்குகள் வெருவி ஓடின; அடர்ந்த காட்டினுள் சென்று பதுங்கிக் கொண்டன; நாட்டுப் பக்கம் நடமாட்டம் ஒழிந்தன. மக்கள் நலனில் மனத்தைச் செலுத்தி மாக்களை ஒரு கட்டுக்குள் வைத்து மாநகர் நோக்கிப் புறப்பட்டான் கணராஜன்.

அப்போது முறுகிய வெயிலேற முந்தெங்கும் நீர்காணாது நிருபனும் அனிகமும் அலமந்தனர். நீண்ட தூரம் அலைந்து தவித்தனர். இறுதியில் நெருங்கி அடர்ந்த பயங்கர அடவியில் இன்சுவைப் புனல் பொங்கும் ஏரியைக் கண்டனர். நீர்வேட்கை தீர நிர்மலமான பொய்கை நீரை அள்ளிக் குடித்தனர். தாகந் தீர்ந்து தருநிழலில் தங்கினர். பசியால் வாடிய அவர்கள் நாட்டுக்குச் செல்லும் வழியை ஆய்ந்தனர். அப்போது அந்தப் புஷ்கரிணியில் தீர்த்தம் முகந்துசெல்ல வந்த மாணி ஒருவன் அவர்களைக் கண்டான். தோண்டியில் புனல் மொண்டு சென்ற அச்சிறுவன் தன் குருவாகிய கபில முனிவரிடம் தான் கண்டன வற்றை வியந்து உரைத்தான். அது கேட்ட கபிலர் தம்மாணவர் களை நோக்கிக் கணனையும் அவன் சேனையையும் அழைத்து வரப் பணித்தார். அவர்கள் உடனே அரசன் இருந்த இடம் சென்று மாதவக் கபிலர் மகிழ்ந்து உரைத்தவற்றை விருப்புடன் கூறி வேந்தனையும் சேனையையும் ஆச்ரமத்திற்கு அழைத்து வந்தனர்.

சிந்தாமணி கண்டு. சிந்தை பொங்கியது

காசினி போற்றும் கபில முனியைக் கண்ட கணராஜன் அவர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கழல் பணிந்து அருள்வேட்டு நின்றான்; தானையும் தானைத் தலைவரும் அவ்வாறே தாள்பணிந்து நின்றனர். தவராஜரும் வாழ்த்துரை கூறி அவர்கள் கானகம் போந்த காரணம் யாதென வினவி அறிந்தார்; அவர்கள் யாவரும் நல்விருந்துண்டு செல்ல வேண்டுமென அன்புக் கட்டளையிட்டார். அரசனும் இசைந்தான்; அனைவரும் மகிழ்ந்தனர்.

கபில முனிவரிடம் சிந்தாமணி என்றொரு திவ்ய மணி இருந்தது. அது சிந்தித்ததெல்லாம் தரும் சக்தி வாய்ந்தது. அரசரையும் சேனையையும் விருந்துக்கு அழைத்த அருந்தவர் சிந்தாமணியை முறைப்படி பூஜித்து அனைவருக்கும் விருந்தளிக்க வேண்டுமென வேண்டினார். சிந்தாமணியும் சற்று நேரத்தில் சிறந்ததொரு மாளிகை அமைத்து அனைவரும் அமர்ந்துண்ணத் தானங்கள் திருத்தித் தலைவாழையிலையைக் கலனாக வைத்து அறுசுவை உண்டி அளித்தது. விருந்துண்ட வீரரும் வேந்தனும் அதுவரையில் அவ்வளவு சுவைமிக்க உணவை உண்டதேயில்லை என ஆச்சரியம் அடைந்தனர்; விருந்துண்டபின் நெடு நேரம் ஓய்வு கொண்டனர். அப்போது கணன் மனத்தில் விரும்பியதையெல்லாம் அளிக்கும் சிந்தாமணியைத் தான் பெற வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதனால் கபில முனிவரைப் பணிந்து சிந்தாமணியைத் தனக்களிக்குமாறு வேண்டினான். ஆனால் முனிவர் மறுத்துவிட்டார். அதனால் சினம் கொண்ட கணன் முனிவரிடம் இருந்த மணியை வலியப் பறித்துச் சென்றான். வெகுண்ட தபோதனர் அவனை விரைவில் அழியுமாறு சபித்துவிட்டார்.

குணக்குன்றின் கோபம்

கபில முனிவரால் சிந்தாமணியை மறக்க இயலவில்லை. அதனால் கணராஜனை விரைவில் அழிக்கும் பொருட்டு உதிர்ந்த சருகொழிய உணவில்லை என்று கொண்டு கடுமையான தவம் புரியத் தொடங்கினார். தவாக்னியின் உக்ரம் விரைந்து ஏறியது. அப்போது அண்டமுழுவதும் நெருப்பு போர்த்தது போலத் தோற்றமுண்டாயிற்று. கபிலரைச் சுற்றிலும் தீப்பிழம்பு சூழ்ந்தது. அதுகண்ட கபிலர் அஞ்சினார். 'ஈதென்ன விந்தைத் தோற்றம்' என வியந்தார். தம் தவத்தைக் கலைக்கும் இடையூறோ என எண்ணினார். அப்போது மாயனின் மாயாசக்தியாகிய சாருஹாசினி அசரீரியாய்ப் பின்வருமாறு கூறினாள்:

"உணவும் கொள்ளாது கண்ணும் உறங்காது கடுந்தவமியற்றும் கபில முனிவரே, அழிந்து பட வேண்டும் என்று நீர் விரும்பும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அந்தக் கணராஜன் பரமேசுவரன் அருளால் பல வரங்கள் பெற்றவன். அவனை அழித்தல் ஆனைமுகப் பரமனுக்கே சாத்தியம். வேறொருவராலும் அவனை அழித்தல் இயலாது. ஆகவே, ஆதிமூலப் பொருளாய் விளங்கும் ஆனைமுகத்தோனைக் குறித்து அருந்தவம் புரிக.''

கேட்டு மகிழ்ந்த கபிலர் மாயையின் கருணைக்கு உருகி குரல் வந்த திக்குநோக்கித் தண்டனிட்டு மூலப் பொருளாயும் முதல் வனாயும் விளங்கும் விநாயகப் பெருமானைக் குறித்துத் தவம் செய்ய வேண்டிய முறைமைகளை விளக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்தார். சாருஹாசினியும் கபிலமஹாமுனிவரின் சத்தியவிநயத்தைக் கண்டு மனமிளகி விநாயகப் பெருமானைக் குறித்த மந்திரங்கள், மந்திரப் பிரயோகங்கள், ஹோம திரவியங்கள், ஹோமங்கள், தியான முறை, தவமுறை, ஜபமுறை ஆகியவற்றை விளக்கிக் கூறி விடைபெற்றாள்.

கணன் கண்ட கனா

பின்னர் கபில மஹாமுனிவர் தன் மனத்தை ஒருமுகப்படுத்தி ஆனைமுகத்து அண்ணலைக் குறித்து அருந்தவம் ஆற்றினார். முனிவர் முனைந்து ஆற்றிய தவத்திற்கு உருகிய தயாளமூர்த்தி தவராஜர் முன்னே தோன்றி வேண்டும் வரமெல்லாம் அருளினார்; கணனை அழித்துச் சிந்தாமணியை மீட்டுத் தருவதாய் இயம்பி மறைந்தார். அன்றிரவு கணன் உறங்கும்போது தீக்கனா ஒன்று கண்டு திடுக்கிட்டெழுந்தான். அவன் உடலெல்லாம் நடுங்கியது. அவன் நிலையைக் கண்ட அவன் மனைவி அஞ்சி நடுங்கினாள். பொழுது விடியும்வரை கணனால் பொறுக்க முடியவில்லை. உடனேயே மந்திரிகளை அழைத்துவரச் செய்தான். எதிர்பாராத அழைப்பைக் கண்ட மந்திரிகள் காரணமறியாது குழம்பினர். மந்திரிகள் மிக்க அவசரத்துடன் அரண்மனைக்கு வந்ததை அறிந்த கணனுடைய தாய்தந்தையரும் அவனுடைய இரு புதல்வர்களும் கணனைக் காண விரைந்தோடி வந்தனர். ஆனால் ஒருவருக்கும் உண்மைக் காரணம் தெரியவில்லை. யாவரும் கணன் எதிரில் வந்து நின்றனர். ஆனால் கணனோ ஏதும் பேசாது மூகன் போலவும் பிரமை பிடித்தவன் போலவும் பாழ் வெளியைப் பார்த்து அமர்ந்திருந்தான். கணனோடு உசாவி உண்மைச் செய்தி அறிய ஒருவரும் துணியவில்லை. இறுதியாக, அபிஜித் மன்னன் கணனைத் தொட்டுக் குலுக்கினான். அப்போது உணர்வு பெற்ற கணன் தந்தையை நோக்கி, ''ஐயனே, நான் கண்ட கனவை என்னென்று சொல்வேன்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தருநெருங்கிய கானகத்தில் தன்னந் தனியனாய் அமர்ந்து தவம் புரியும் தாபதன் கபிலன் எண்ணிறந்த ரத கஜ துரக பதாதி சேனைகளுடன் என் நாட்டில் புகுந்து என் அரண்மனையை வளைத்துக் கோர யுத்தம் புரிந்தான். என் தானைத் தலைவர் மடிந்தனர். என் களிறும் இவுளியும் கதறி வீழ்ந்தன. என் கைவாள் என்னை அறியாமலேயே என் கரத்தினின்றும் நழுவி வீழ்ந்து உடைந்தது. காரணமின்றியே என் மகுடம் தரையில் உருண்டது. என் புதல்வர் இருவரும் கட்டுண்டு வடதிசை நோக்கிச் சென்றார்கள்; இந்திரன் முதலானோர் என்னை நோக்கி இடிக்குரலில் சிரித்தார்கள்; என் படை துவம்சமாகி எங்கும் பிணக் குவியல்; எங்கெங்கு நோக்கினும் கூளிகளும் பேய்களும் கூத்தாடின, கபிலன் பக்கத்தில் நெடிதுயர்ந்த ஒருவன் நின்றுகொண்டிருந்தான். அவனுக்கு நான்கு கரங்கள் இருந்தன. அவன் பார்வையின் உக்ரம் என்னைக் கலக்கியது. அவன் வினோதமான ஓர் ஆயுதத்தை என்மீது எறிந்தான்; என்தலை தோளினின்றும் நழுவித் தரையில் உருண்டது; களம் முழுதும் ஒப்பாரி. இந்நிலையில்தான் நான் விழித்துக் கொண்டேன். நான் இனி எவ்வாறு நிம்மதியாக இருப்பேன். இக்கனா என்னை இனி உறங்கவிடாது; விழித்திருக்கும் போதும் என் உடல் விதிர்விதிர்க்கிறது. என் வாழ்நாள் இத்துடன் முடிந்து விட்டதோ? என்னெனக் கருதுவேன்? இனியான் என் செய்வேன்?'' எனக் கதறினான். அவன் உடலே உருகி வழிவது போன்ற வியர்வை வெள்ளத்தில் உழன்றான்.

நல்வழி துறந்த நரபதி

அதுகேட்ட அபிஜித் மன்னன் அயர்ந்தான். அமைச்சர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய்த் தேறுதல் கூறினர். சிலர் செய்யத்தக்க காரியம் இதுவெனச் செப்பினர். ஓர் அமைச்சர், கணன் கபில முனிவரிடமிருந்து சிந்தாமணியைக் கைப்பற்றிய நிகழ்ச்சி அவன் மனத்தில் நெருடுதலால் வந்த ஒரு கனா அது என்றும் அதற்குத் தனியே பொருளொன்றும் இல்லையென்றும் அந்நினைவையும் கனாவையும் புறக்கணித்து ஒதுக்கி விட வேண்டுமென்றும் ஆலோசனை கூறினார். மற்றோர் அமைச்சர் இக்கருத்தைப் பொதுவாக ஒப்புக்கொண்ட போதிலும் அக் கனாவிற்குப் பொருளில்லை என்பதை அவர் ஒப்புக்கொள்ள வில்லை; சிந்தாமணியைப் பறிகொடுத்த கபிலர் 'வாளா இரார் எனவும் கணனுக்கு ஊறு விளைத்தோ அவனைக் கொன்றோ சிந்தாமணியை மீட்டுக்கொள்ளவே முனைவார் எனவும் இக்கனா நாம் வருமுன் காப்போனாக இருக்கவேண்டுமென்பதைக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குறிப்பாக உணர்த்துகிறது எனவும் கூறினார். மேலும் இப்போதே நால்வகைப் படையுடனும் கபிலர் வாழும் கானகம் சென்று தற்கொல்லியை முற்கொல்லி என்றாற்போல அவரை அடியோடு அழித்து ஒழித்துவிடுதல் சாலச் சிறந்ததெனச் சாற்றினார். இக்கருத்து கணனின் மனநிலைக்கு மிகவும் உகந்ததாயிருந்தது. அதனால் அவன் 'நால்வகைப் படையும் எழுக' என இயம்பிப் போர்க் கோலம் கொள்ள முனைந்தான்.

இதனைக் கண்ட அபிஜித் மன்னன் அருந்துயரெய்தி அன்பு மகனை நோக்கி, "அரும் பெறல் மைந்த, கபிலர் ஒரு மஹா புருஷர்; குணமென்னும் குன்றேறி நின்ற கோமான்; அவர் அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வாறே பயன் தரும். அவரிடமிருந்து சிந்தாமணியை நீ பறித்துக்கொண்ட அன்றே உன்னைச் சொல்லால் சுட்டு அழித்திருக்கக் கூடிய ஆற்றல் பெற்ற ஆன்றோர் அவர். ஆகையால் நீ எடுத்த முடிவு இம்மைக்கும் நலம் பயவாது; மறுமைக்கும் பயன்படாது; என்றும் இடும்பை தரும். ஆகையால் சினத்தைத் தள்ளி அன்பு கொண்டு கபில முனிவரை அடைந்து முன்பு பறித்துக்கொண்ட சிந்தாமணியை அவர் திருமுன்பு வைத்து அவரருள் கேட்டுப் பணிவாயாக. இதுவே உய்யும் வழியாகும். ஆன்றோர் வெகுளி அரைக் கணமும் நில்லாது. ஆகவே கபிலர் உன்மீது கொண்ட கோபத்தை உடனே மாற்றிக்கொள்வார். அன்பு செய்து ஆசியும் வழங்குவார். இதுவே செய்யத்தக்க செயல்; வேறேது செய்யினும் வினையாய் முடியும்" என அறிவுரை கூறினார்.

நாசம் வந்துற்ற போது நல்லோர் சொல்லில் நாட்டம் பிறவாது. கணனும் தந்தை சொல்லைத் தட்டிக் கழித்தான். பெரும்படையோடு விண்ணும் மண்ணும் அதிர கபிலாச்ரமத்தை அடைந்தான். கணன் வருகையைக் கபிலர் கண்டார். அவன் கருத்தும் உணர்ந்தார். கணபதி பாதமே கதியென்று விநாயகப் பெருமானைச் சரணடைந்தார். விநாயகப் பெருமானும் சித்தி புத்தி ஸமேதராக முனிவர் முன்தோன்றி அபயம் அளித்தார். விநாயகப் பெருமான் போருக்குப் புறப்படுவது கண்ட சித்தி தேவியார் பரமன் அடிபணிந்து தான் போருக்குச் செல்ல விருப்பம் தெரிவித்தார். விநாயகப் பெருமானும் சித்தி தேவியாருக்குத் திருவருள் பாலித்துப் போருக்கு அனுப்பினார்.

தனயர்கள் சிறைப்பட்டது

தேவியாரின் தெய்வத் தன்மையைக் கணன் உணரவில்லை. பெண்ணொருத்தி தன்னந்தனியளாய் திரிபுவனத்தையும் வென்ற

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தன்னோடு பொர வருவது கண்டு நகைத்தான்; அவனருகில் நின்ற அவன் மக்கள் இருவரும் நகைத்தனர்; மூத்தமகன் சூலபாணி தானே முன்சென்று வெற்றி கொண்டு திரும்ப விடை கேட்டான்; இளைய மகனான சுலபனோ தானே முன் சென்று வாகை சூடவேண்டுமென விடை கேட்டான். அவர்கள் போரிட அனுமதி வழங்கிய கணன் பாசறைக்குத் திரும்பினான். கணன் புதல்வர்கள் வியக்கும் வண்ணம் சித்தி தேவியார் லக்ஷாபலக்ஷம் வீரர்களைத் தோற்றுவித்தார். சூலபாணியின் படை சூறாவளியில் அகப்பட்ட பஞ்சுபோல் சுழன்றது. சுலபன் படை அவலம் அடைந்தது. அப்போது நெடிதுயர்ந்த உருவமும் அனல் கக்கும் கண்களும் இலக்கம் ஆயுதங்கள் தரித்த இலக்கம் கரங்களும் கொண்ட பெருவீரன் ஒருவனைச் சித்தி தேவியார் தோற்றுவித்தார். அவனைக் கண்ட படைவீரர் பலதிசையிலும் ஓடினர். படைமுழுவதும் எரிமுன் பஞ்சுபோல் அழிந்தது. சூலபாணியும் சுலபனும் போர்க்களத்தில் துணையேதுமின்றித் துவண்டு நின்றனர். இலக்கன் அவர்கள் இருவரையும் பிடித்து இறைவன் முன்னிலையில் நிறுத்தினான்.

கணன் தலை உருண்டது

தன் மக்களிருவரும் சிறைப்பட்டமையறிந்த கணன் பெருஞ் சினம் கொண்டான். பலமும் திறமும் வாய்ந்த தன் பெருஞ் சேனையைத் திரட்டிக் கொண்டு பிரளயகால வெள்ளம்போல் கபிலாச்ரமம் நோக்கிச் சென்றான். அப்போது கபிலர் கண பதிக்குப் பூசை செய்துகொண்டிருந்தார். நிலவொளிபோன்ற இதமான வண்ணமும் கம்பீரமான உருவமும் அருள் குடியிருக்கும் கண்களும் ஆனைமுகமும் அழகு வடியும் அங்கங்களும் அமைந்த விநாயக மூர்த்தியைக் கணன் கண்ணிற் கண்டான். ‘கதி கெடும் முன்னே மதி கெடும்’ என்றாற்போல என்றும் மூவா முழு முதல்வனைக் கண்ணாற் கண்டும் கருத்தில் தெளிவு தோன்றாமல் தன்னைக் கொல்லக் கபிலரால் சிருஷ்டி செய்யப்பட்ட விநோத மான உருவம் இதுவென்று எண்ணிக் குரோதம் மிகுந்து வலிமை மிகுந்த பாணங்களை ஐயன்மீது ஏவினான். ஆனால் அக் கணைகள் நீறாகி வீணாயின.

சிங்க வாகனத்தில் சிறக்க வீற்றிருந்த செங்கண் களிற்றுமுகப் பிள்ளையார் சினக்குறிப்புத் தோன்றப் புன்சிரிப்புக் காட்டி கரத்திருந்த மழுவைக் கணன் கழுத்து நோக்கி வீசினார். கணன் தலை தரையில் உருண்டது; புலவோர் பூமாரி பொழிந்தனர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கணன் தலையை உருட்டிய மழு கடலிற் குளித்துப் புனித கங்கையில் நீராடி எம்பெருமான் கையில் வந்து அமர்ந்தது.

அபிஜித்துக்கு அருளியது

கணன் பட்டதை அறிந்த படைவீரர்கள் பயந்து ஓடினார்கள்; மந்திரிகள் மயங்கினார்கள்; தூதுவர் ஓடி அபிஜித்திடம் கூறினார்கள். அருமை மகன் தலை அறுபட்டு உயிர்நீத்த செய்தி கேட்ட அபிஜித் கலங்கினான்; புலம்பினான்; அழுதான்; விழுந்தான்; துடித்தான்; அமர்க்களம் நோக்கி ஓடினான்; தலையற்ற உடலைக் கண்டான்; தரைமீது உருண்ட மகனுடைய தலையைக் கண்டான். கதறினான். பின்னர் ஒருவாறு தேறி மகனுக்கு ஆற்றவேண்டிய ஈமக்கடன்களை ஆற்றினான். கபிலருடைய சிந்தாமணியைக் கவர்ந்ததாலல்லவா தன் வமிசமே அழிந்துவிட்டது எனக் கவன்றான். பின்னர் இன்னுயிர் நீத்த தன் மகன் கணனும் தன் பௌத்ரர்களும் நற்கதியடைய வேண்டும் என எண்ணிய அபிஜித் கபிலரின் மன்னிப்பைக் கோருவதெனத் தீர்மானித்தான்.

எனவே, சிந்தாமணியை எடுத்துக்கொண்டு அபிஜித் மன்னன் கபிலாச்ரமத்தை அடைந்தான். தபோதனராகிய கபிலரைக் கண்டதும் அவரது பாதங்களில் பணிந்து தன்மகன் செய்த இன்னாச் செயலை மன்னித்தருள வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொண்டான்.

'ஆன்றோரின் சினம் அரைக் கணமே'. கபிலரும் மனம் மகிழ்ந்தார். சூலபாணியையும் சுலபனையும் ஆங்கு வர வழைத்து அபிஜித்திடம் அவர்களை ஒப்படைத்தார். தன் பேரர்களைக் கண்ட அபிஜித் கரைகாணா மகிழ்ச்சி கொண்டான்; தான் செய்த தவம் வீண்போகவில்லை எனக் குதூகலம் அடைந்தான். தன் சந்ததிகள் மேன்மேலும் சிறப்புறும் என நம்பிக்கை கொண்டான். மீண்டும் கபிலரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி நின்றான். பிறகு பிரஸன்ன வதனன் பேரருளை எண்ணி வியந்த அபிஜித் தன் பேரர்களை நாட்டிற்கு அழைத்துச் சென்று அந்நாட்டை இரு கூறாக்கி இருவருக்கும் முடிசூட்டிப் பெருமகிழ்வெய்தினான்.

சிந்தாமணி விநாயகர்

கபிலர் பெருமான் சிந்தித்ததெல்லாம் தரும் சிந்தாமணியை சித்தி புத்தியுடன் தோன்றிய களிற்றுமுகக் காளைக்குக் காணிக்கையாக்கினார். களப வக்த்ர கருணைக் கடலும் தம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கண்டமாலையில் சிந்தாமணியைக் கோத்து அணிந்தார். அன்று முதல் ஆதி நாயகன் சிந்தாமணி விநாயகன் எனப் புகழ் பெற்றார். கணன் தன் கணைகளால் துளைத்தபோதும் முகம் மாறாதிருந்த முழுமுதல் சுமுக விநாயகன் எனப் போற்றப் பெற்றார். கபிலாச்ரமத்தில் தோன்றி சுமுகத்தோடு சிந்தாமணி யணிந்த செல்வனைக் கபிலவிநாயகன் எனக் கட்டுரைத்துக் களிப்பெய்தினர் புவியோர்.

இப்போது வாசகர்களுக்கு 'கபில முனிவருக்குச் சிந்தாமணி எவ்வாறு கிடைத்தது?' எனத் தோன்றும். அவ்வரலாற்றைக் கூறுவோம்.

ஒரு சமயம் இந்திரன் தன் பரிவாரங்களோடு பிரபஞ்சத்தின் எழில்காணப் பல இடங்களுக்கும் பயணம் செய்தான். அப்போது ஒரு நாள் சிவபக்த சிகாமணியாகிய கபில முனிவர் தவம்புரியும் சோலையைக் கண்டான். முனிவரைப் பணிந்து அவருடைய ஆசியைப் பெறும் நோக்கத்துடன் அவரது பர்ணசாலையை அண்டந்தான். இந்திரனைக் கண்ட கபிலர் முகமலர்ந்து வர வேற்றார். இந்திரனும் அவன் பரிவாரங்களும் உணவுண்டு செல்ல வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். இந்திரனும் இணங்கினான். மஹா சிவபக்தராகிய கபிலர் சிவபிரானைத் தியானித்து அவரருளால் பல்வகைப் பக்குவான்னங்களும் பக்ஷணங்களும் படைத்துப் பெருவிருந்து சிறப்புறச் செய்தார். அவரது விருந்தோம்பும் பண்பினையும் பக்திச் சிறப்பையும் தவ ஆற்றலையும் கண்டு வியந்த விண்ணவர் கோமான் தன் கருவூலத்திருந்த சிறந்த சிந்தாமணியை விரைவில் எடுத்துவரச் செய்து அத்தாபதருக்கு அன்பளிப்பாய் அளித்தான்; பிறகு விடைபெற்றுத் தேவலோகம் சென்றான். அந்தச் சிந்தாமணியே இப்போது எம்பிரான் மார்பில் ஒளிவீசித் திகழ்கிறது; சிந்தாமணி விநாயகர் என்ற பெயரும் படைத்து விளங்குகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

30. கஜானனர்

சிந்தூரன் பெற்ற வரம்

எத்தனையோ கல்பங்கள்; எத்தனையோ கல்பாந்தங்கள். அவற்றில் ஒன்றில் ஒருநாள் பிரமதேவன் களைப்பு மிகுதியால் கொட்டாவி ஒன்று விட்டான். விட்ட கொட்டாவியினின்றும் வெளிப்போந்தான் ஒரு களிப்பு மிக்க அரக்கன். செக்கச் செவேர் என்ற நிறமும் பத்துத் தலையும் எண்டிக்கும் வீசும் இயற்கை மணம் வாய்ந்த எழில்மிகு மேனியும் கொண்ட அவ்வரக்கனை நிமிர்ந்து நோக்கிய பூமகன் வியந்தான். அவன் தோற்றம் துணுக்கம் செய்தது. ஆயினும் தன் கொட்டாவியினின்றும் தோன்றிய வழித்தோன்றல் ஆதலின் அவன்மீது அன்பு கொண்டு அவனை நோக்கி, ''செவ்வரத்த மலரை நிகர்த்துச் செவ்வொளி வீசும் செம்மேனிக் குழந்தாய், நின்னைச் சிந்தூரன் என நாம மிட்டு நந்தா வலிமையும் அஞ்சா நெஞ்சமும் ஆயுதங்களால் அழியாத் தன்மையும் நம் ஆணையால் அளித்தோம். நின்னை யக்ஷர், கின்னரர், நாகர், தேவர் முதலிய யாவராலும் வெற்றி கொள்ள முடியாது. மேலும் நீ சினம் கொண்டு யாவருடலைக் கட்டித் தழுவுகின்றாயோ அவருடல் அக்கணமே நீறாகும். என் அருமைப் புதல்வனாதலின் உனக்கு இவ்வரம் தந்தனம். உன் மனத்திற் குகந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து அவ்விடத்தே நீடு வாழ்க'' என வாழ்த்தி விடையளித்தார்.

வரபலத்தைச் சோதிக்க வந்த சிந்தூரன்

விடைபெற்றுத் தான் சாருமிடம் தேடிச் சென்ற சிந்தூரன் சிறிது தூரம் சென்றதும் அவன் மனத்தில் பின்வருமாறு எண்ணச் சுழல்கள் தோன்றின. 'நான் ஏதும் தவம் செய்யவில்லை; விரதம் முதலியவற்றை அறியேன்; விழுமிய ஞானி அல்ல; கெழுமிய தானமும் செய்தறியேன்; அறமும் மறமும் அறிந்தேனில்லை. ஆயினும் பிதாமகன் எனக்குப் பெருவரங்கள் அருளியுள்ளார். என் தகுதியும் இவ்வரங்களின் மிகுதியும் ஏறுமாறாக உள்ளன. இவ்வரங்கள் பலிப்பது மெய்யோ பொய்யோ?' சுழலில் அகப் பட்ட சிந்தூரன் திணறினான். இறுதியில் இவ்வரங்களின் தன்மையைச் சோதித்தறிவதே செய்யத் தக்கது எனக் கருதி மீண்டு தந்தையிடம் சென்றான். வந்த மைந்தனைத் தந்தையும் நோக்கி, ''வேறு வரங்கள் வேண்டுமோ?'' என வினவினார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

"வேறேதும் வரம் வேண்டலன்; வேண்டாது பெற்ற வரங்கள் வேண்டிய பலன் விளைக்குமோ என அறிய விழைந்து வந்தேன். தங்களைத் தழுவிப் பார்த்து வரத்தின் தராதரம் அறிவேன்" என விடை கூறிக் கண்களில் தீப்பொறி பறக்க பிரமனைக் கட்டித் தழுவ நெருங்கினான். மலர்வந்த தேவன் நெருப்பை மிதித்தாற் போலத் துள்ளிக் துணுக்கமெய்தினார். 'வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி ஆனேனே' எனக் கொதிப்புடன், 'தீட்டிய மரத்தில் கூர்பார்க்கும் கொடியோனே, உன்னை முழுமுதலான முக்கட் களிற்று முகத்தோன் விரைவில் ஸம்ஹாரம் செய்க' எனச் சபித்து அந்தர்தியானமர்னார்.

ஆழி அண்ணல் அறிவுரை

கமலச் செல்வனைக் காணாத சிந்தூரன் ககனமெங்கும் பறந்து காசினியெங்கும் அலைந்து தேடினான். ஆனால் அவரோ திருப்பாற் கடலையடைந்து அறிதுயிலில் அமர்ந் திருக்கும் அண்ணலை உணர்த்தி நிகழ்ந்தது நவின்றார். அவர்கள் இருவரும் என்ன செய்வது என ஆராய்ந்து கொண்டிருந்த போதே சிந்தூரன் அங்குத் தோன்றிச் சிங்கம்போல் கர்ஜனை செய்தான். படைக்கும் பரமனும் காக்கும் கடவுளும் சேர்ந்து அங்கு இருப்பதைக் கண்ட சிந்தூரன் சினம் மிகக்கொண்டு செங்கண் மாலை அறைகூவிப் போருக்கு அழைத்தான். மாமாயனோ மலர்ந்த முகம் மாறாது மண்டு சினம் கொண்ட சிந்தூரனை நோக்கி, "ஒத்த உருவும் ஒத்த உரமும் ஒத்த படையும் கொண்ட இருவர் பொருவதே யுத்த தர்மம் அல்லவா? யானையொன்று பூனையுடன் போர்செய்யலாமோ? சிறந்த ஆகிருதியும் நிறைந்த வன்மையும் உயர்ந்த வரங்களும் பெற்றுள்ள நீ ஒன்றுக்கும் ப்ற்றாத எங்களோடு போர் செய்வ தால் பெறப்போகும் புகழ் ஏது? பிரமன் எவ்வளவு மெல்லியன் என்பதைப் பார். காற்று அசைந்தால் கமலம் ஆடும்; கமலம் ஆட கமலத்தோன் அஞ்சி விதிர்விதிப்பான். என்னைத் தான் கருதிப் பாரேன். அலையில் அசைந்தசைந்து அலைப்புறும் ஆலிலைமேல் வேறு எங்கும் சென்று சேர இயலாத எறும்பு போல் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன். நாங்கள் இருவரும் உனக்கொரு பொருட்டோ? நளிர்முடிக் கைலையில் வாழும் நம்பனைக் காண். ஸகல புவனங்களையும் ஸம்ஹாரம் செய்யும் அதிவல்லமை படைத்தவர் அவர். அவனிடம் சென்று உன் வல்லமையைக் காட்டுக. அதனால் உனக்குப் பேறும் புகழும் உண்டாகும். அதைவிட்டு எங்களிடம் உன் வலிமையைக் காட்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வதால் பயன் யாது? கீர்த்தி பெருக கிருத்திவாஸனோடு பொருக. அவரே உனக்கு ஈடு'' என்றார்.

நயமுடன் மாயன் நவின்ற மாய்மால வார்த்தைகளில் மயங்கிய சிந்தூரன் கயிலையங்கிரி வாசனோடு கடும்போர் உள்ளி வெள்ளிமலை நோக்கித் துள்ளிச் சென்றான். மாயனும் மலரவனும் சற்றே நிம்மதி அடைந்தனர். மேல்விளைவு என்னாகுமோ என எண்ணி அகத்தில் அமைதி இழந்தனர்.

சிவபிரானும் சிந்தூரனும்

கயிலை மலையை அடைந்த சிந்தூரனைக் கண்ட சிவ கணங்கள் சிதறி ஓடினர். அவன் உருவும் தோற்றமும் வலிமையும் அஞ்சாதாரையும் அஞ்சுவித்தன. சிவபெருமானோ நிஷ்டையில் ஆழ்ந்திருந்தார். வெளியில் நின்றிருந்த இமவான் மகளைக் கண்டான் சிந்தூரன். உமையம்மையின் எழுல்மிகு உருவம் அவனை உன்மத்தனாக்கியது. அண்டமெல்லாம் ஈன்றெடுத்தும் என்றும் கன்னியாகிய அன்னையிடம் தவறு செய்கிறோம் என எண்ணாது அவரைக் கவர்ந்துசெல்ல முயன்றான். அவ்வளவில் மலைமகள் மஹாதேவனைச் சரணடைந்தாள். நிஷ்டை கலைந்த நிமலன் சூலம் ஏந்திய கையராய் வெகுண்டு நின்றார். அது கண்ட சிந்தூரன் அவரைத் தன்னோடு அணைத்துக் கொண்டு சாம்பராக்கிட முனைந்தான். இந்நிலையில் இருவருக்குமிடையே அந்தணர் ஒருவர் தோன்றினார். தோன்றிய அந்தணர் சிந்தூர னுக்கும் சிவபிரானுக்கும் இடையே மழுப்படை ஒன்றை நாட்டினார். பின்னர் அவர்களை நோக்கி 'அஸ்திர சஸ்திரங்கள் அளவின்றி இருக்க, ஆயுதங்கள் பலவிருக்க அவற்றை மறந்து மல்யுத்தம் புரிதல் மாண்புறு செயலன்று; யுத்த மரபும் அன்று; ஆகவே உங்கள் அஸ்திர பலத்தையும் ஆயுத பலத்தையும் காட்டிப் போர் புரியுங்கள்' எனக் கூறினார். அது கேட்ட சிந்தூரன் அதுவே சரியென்று ஆயுதப் போர் தொடங்கினான். அந்தி வண்ணப் பெருமானும் சிந்தூர நிறத்தானும் ஒருவர் மீது ஒருவர் படைக்கலங்களையும் அஸ்திரங்களையும் ஏவி நீண்டநேரம் போர்புரிந்தனர். அஸ்திரங்களால் அஞ்சுமுகனை அழிக்க முடியாதென உணர்ந்த பத்துமுகன் பாய்ந்து சென்று அவரைத் தழுவ முயன்றான். பாய்ந்த அளவில் இடைநின்ற மழுப்படை எரிந்து பொங்கிச் சிந்தூரன்மேல் சாய்ந்தது. மழுப்படையை மீறி மறுபக்கம் செல்லச் சிந்தூரன் செய்த முயற்சியெல்லாம் சிந்தின. அப்போது அந்தணர் உருவில் நின்ற ஆதிப்பிரான் அரக்கனை நோக்கி, ''செம்முகம் ஐந்து கொண்ட சிவபிரான்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதுவரை திரிசூலத்தை ஏவி உன் இன்னுயிர் சிந்த எண்ணினா ரில்லை. இப்போது அவர் சூலமெடுத்து வீசுவராயின் நின் தலைபத்தும் நிலத்திடை உருளும். உன் உயிர்வேண்டின் உடனே ஓடி மறைந்திடுக" என அறைந்தார். அதுகேட்ட அரக்கன் அச்சம் மிகக் கொண்டு அமர் தவிர்த்து அவனியை அடைந்தான்.

அந்தணராய் வந்த ஆனைமுகத்தர்

அஸ்திரமும் சஸ்திரமும் கொண்டு அண்டமெலாம் நடுங்க அவ்விருவரும் அமர்புரிந்தமை கண்ட உமையம்மை திகைத்து நின்றார். சிந்தூரன் மறைந்து சென்றபின் திகைப்பு நீங்கிய எம்பெருமாட்டி அந்தணரை அணுகி அவர் யாவரென உசாவினார். அந்தணரும் அவ்வுரு மறைத்துச் சித்தி புத்தி ஸமேத விநாய கராய்த் தோன்றி, "சிந்தூரனைச் செற்று மூவுலகும் புரக்க நின் மணிவயிற்றில் பாலகனாய் வந்து தோன்றுவோம்" எனக்கூறி மறைந்தார். உமையம்மை அடைந்த ஆனந்தத்திற்கு ஓர் எல்லை இல்லை; மகாதேவனும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார்.

சிந்தூரனின் வெறித்தனம்

பூவுலகு சென்ற சிந்தூரன் புண்ணிய சீலரையெல்லாம் குரோதத்துடன் கட்டித் தழுவிச் சாம்பராக்கினான்; அநேக அரசரை அழித்தான்; அறிவாளரை எல்லாம் அழித்தான்; எதிர்த்தவரை எல்லாம் அழித்தான்; எதிர்க்காதவரையும் அழிக்கும் இன்பம் வேண்டி அழித்தான்; எதிர்ப்பட்டவர் எவராயினும் அழித்தான்; பூவுலகம் சுடுகாடாயிற்று. பின்னர் அவ்வரக்கன் தேவருலகு நோக்கிச் சென்றான். இவன் வருவது கேள்வியுற்ற வாசவன் கலங்கினான். தேவர்களும் தேவர் கோனும் அமராவதியை விட்டு அகன்றனர்; வானுலகம் பாழ்பட்டது. யாவரும் நான்முகனையடைந்து முறையிட்டனர். நான்முகன் கலங்கினான். பின்னர் அனைவரும் ஒருவாறு தேறி மன மொன்றிக் களிற்றுமுகக் கடவுளைத் தோத்திரம் செய்தார்கள். அவர்கள் செய்த தோத்திரத்தால் மகிழ்ந்து வேழமுகக்கடவுள் அவர் களுக்குப் பிரத்யட்சமாகி அனுக்கிரஹம் செய்தார். அனைவரும் அகமகிழ்ந்தனர்; சிந்தூரனுக்குப் பயந்து மறைந்து வாழ்ந்தனர்.

பிரியலி வனவாசம்

ஆனைமுகத்தோன் அம்பிகைக்கு வாக்களித்தபடி அவர்தம் மணிவயிற்றில் அற்புதக் கருவாய் உருவாயினார். அஃதுணர்ந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அம்மையும் அப்பனும் ஆனந்தமடைந்தனர்; அம்மையின் உடலில் வெப்பம் மிகுதலான் அதைச் சமனப்படுத்தும் பொருட்டுப் பூவுலகில் பிரியலி என்ற ஓர் அடர்ந்த காட்டில் அழகியதொரு தண்டலைக்கு வந்து சேர்ந்தனர். ஆங்கே இயல்பாகவே இன்னொளி வீசும் நவரத்தினங்களும் குயிற்றிக் கவின்மிகு மாடம் அமைத்து ஆங்கே இன்புற்றிருந்தனர். எப்போதும் போல எம்பெருமான் நிஷ்டையில் அமர எம்பெருமாட்டி தண்டலை முழுதும் சேடியர் சூழச் சென்று விளையாடி மகிழ்வாராயினர்.

பத்திமிகு கஜமுகன்

இன்னணம் அவர்கள் இனிது வாழ்ந்திருக்கும் நாளில் ஒரு நாள் கஜமுகாசுரன் என்றொரு கரிமுகத் தூயோன் அங்கு வந்தான். காட்டினிடையே கவின்மிகு மாடம் கண்ட அவன் மதம் கொண்டோடி மண்டபத்தைத் தன் கொம்பால் குத்தி மத்த கத்தால் தள்ளிச் சாய்த்தான். அதுகண்ட உமையும் தோழியரும் வீரிட்டனர்; அக்கொடூர சத்தம் அரன் காதிற் பட அவர் நிஷ்டை கலைந்தார். எதிரே வீழ்ந்து கிடக்கும் மண்டபத்தைக் கஜமுகாசுரன் மேலும் மேலும் மோதித் தள்ளுவதைக் கண்டார்; வெகுண்டார்; சூலம் எடுத்தார்; குஞ்சரம் நோக்கி எறிந்தார். அச்சூலம் கஜமுகாசுரனின் தலையைத் துண்டித்து மீண்டது. அவன் தலை தரைமேல் விழுமுன் 'சிவாய நம' வென்று செவ்வொலி எழுப்பினான். அவ்வொலி கேட்ட அரன் 'அன்புடை பக்தனை அழித்துவிட்டோமே' எனக் கவன்றார். தலையும் உடலும் தனித் தனியே கிடந்த கஜமுகாசுரனை அணுகி எம்பெருமான், "அன்பனே உன்னை உணராது சூலம் எறிந்தேன். ஆயினும் நீ விரும்பிய பொருளெலாம் தருவேன்; வேண்டுவன வேண்டுக" என்றார். ஆனால் அறிவுமிகு கஜமுகன் அண்ணலை நோக்கி, "நின்னை ஒரு கணமும் பிரியாதிருக்கும் வரம் தரல் வேண்டும்; என்றும் அழியாத முத்தி தரல் வேண்டும்; வேறொன்றும் வேண்டுகிலேன்" என்றான். சங்கரனும் மகிழ்ந்து சயிலம் என வீழ்ந்து கிடந்த கஜமுகனுக்குத் தன்னுருவே அளித்து எப்போதும் தன் பக்கலில் இருக்குமாறு அருளினார். அவ்வசுரன்றன் ஆனை உருவ உடலின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டார்; அதனால் கிருத்தி வாஸன் என்றொரு பெயரும் பெற்றார். அருகே கிடந்த அவ்வன்பனின் தலையை அருளுடன் எடுத்துத் தனியே சேமம் செய்து வைத்தார். பிறகு, வீழ்ந்த மண்டபத்தை மீண்டும் எடுப்பித்து அம்பிகையும் தோழியரும் ஆடல் பாடல்களில் திளைத்து மகிழச்செய்து தான் நிஷ்டையில் அமர்ந்தார் தயாள மூர்த்தி.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அசரீரி மொழி

இவ்வாறு இங்கு இவர் இருப்ப, ஒரு நாள் சிந்தூரன் சிங்காசனத்தில் சிறக்க வீற்றிருந்தான்; சேனைத் தலைவரும் நண்பரும் மந்திரிகளும் அவனைப் புடைசூழ்ந்திருந்தனர். அப்போது அனைவரும் திடுக்கிடுமாறு அசரீரி . ஒன்று, "செருக்குற்றிருக்கும் சிந்தூரனே, உன்னைக் கொல்லும் பொருட்டு உமையம்மையின் திருவுதரத்தில் களிற்றுமுகக் கடவுள் கருவுருவாய் வளர்ந்து வருகிறார்" எனக் கரைந்தது. அசரீரி வாக்கைக் கேட்ட சிந்தூரன் அதிர்ந்தான்; உள்ளம் குலைந்தான்; தன்னைக் கொல்ல வளர்பவனைக் கருவிலேயே காதுதல் வேண்டுமெனக் கருத்துட்கொண்டான்; உடனே விரைந்து கயிலையை அடைந்தான்; ஆங்கு அவர்கள் இன்மை அறிந்து வெறுத்தான்; தேவருலகும் நாரணனுலகும் சத்திய வுலகும் சென்று தேடினான்; யாண்டும் தேடி மீண்டும் பூவுலகம் புகுந்தான்; மேகமண்டலத்தைத் தாங்க வளர்ந்ததுபோல் நெடி துயர்ந்த மரங்கள் நெருங்கியிருந்த பிரியலி வனத்தைக் கண்டான். அவ்வனத்தின் எழிலும் செழிப்பும் அவன் மனத்தைக் கவர்ந்தது; மலைமகள் தங்கி வாழும் வனம் அதுவெனக் கண்டு கொண்டான்; வாயு உருக்கொண்டு மணிமண்டபச் சாலை புகுந்தான்; ஆங்கே பரமனை நிஷ்டையில் பார்த்தான்; பார்வதியை நித்திரையில் பார்த்தான்; யாரும் அறியாவண்ணம் அம்பிகையின் அகடு புகுந்து அற்புதமாய் வளர்ந்து வரும் அருட் கருவின் சிரம் கொய்து வெளிவந்தான்; கொய்த சிரத்தைப் பச்சிம திசைநோக்கிப் பாயும் நருமதையின் பக்கலில் எறிந்தான். காதகன் சிரத்தை எறிந்த இடம் கணேச குண்டமெனப் பொலிந் தது. சிரத்தினின்றும் பெருகிய குருதியாறு சோணா நதியென மிளிர்ந்தது. சிந்தூரன் செய்த அரக்கச் செயலை அவனும் ஆதிப்பரமனுமே அறிவர். அன்னை பார்வதியும் அறியாள்; அத்தன் கிருத்திவாஸனும் அறியான்; ஆயினும் தலையற்ற அத்தெய்வக்கரு தடையின்றி வளர்ச்சி பெற்றது. வயாப் பருவம் முற்றியதும் பார்வதி பரமேசுவரர் கைலையங்கிரிக்கு மீண்டனர்.

தலையற்ற மதலை

அங்கு ஆவணி மாதத்தில் சுக்ல பட்சத்தில் சதுர்த்தி தினத்தில் மலைமகள் தலையற்றதோர் ஆண்மகவை ஈன்றாள். தலையற்ற மதலையைக் கண்டு தேவியார் தெருமரல் உற்றாள்; சிவனாரோ சிந்தாகுலம் அடைந்தார். தலையற்ற குழவி பிறந்த செய்தியை நான்முகன் அறிந்தார்; நாரணனும் அறிந்தார்; இந்திரனும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிந்தான். யாவரும் கைலையங்கிரிக்கு விரைந்தனர். 'எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்' என்பர். எனவே சிரமற்ற குழந்தையைக் கண்ட யாவரும் அதிசயமெய்தினர். அப்போது அவ்வருட் குழந்தை கம்பீரமான இனிய குரலில், 'முக்கட் பரமனை முனியாது எப்பொழுதும் போற்றிப் பரவும் கஜ முகாசுரன் தலையை வெள்ளிமலை வள்ளல் காத்தோம்பி வைத்துள்ளார். அதனை எடுத்து வந்து என் உடல்மீது பொருத் துங்கள். அனவரதமும் அரனைப் பணிந்து அரன் ஐந்தெழுத்தை இயம்பி அரனுருவேயான கஜமுகாசுரன் தலை அனைவ ராலும் போற்றிப் பணியத் தக்கது. அத்தலையுடனே சென்று ஆணவம் மிக்க சிந்தூரனை அழிப்பேன்' என இயம்பியது. வாயற்ற குழவி பேசிய பேச்சைக் கேட்ட வானோரும் மற்றோரும் விம்மிதம் எய்தினர்; விரைந்து சென்று கஜமுகாசுரனின் தலையைக் கொணர முயன்றனர். ஆனால் அத்தலையைத் தூக்குவது எளிதாயில்லை. அனைவரும் சேர்ந்து தூக்கியும் தூக்க இயலாமல், அக்குழந்தையிடம் தம் இயலாமையைக் கூறினர். உடனே அக்குழந்தை அத்தலையைத் தன்பால் வரச் செய்தது. அத்தலை அவ்வுடலில் அமைந்து பொருந்தியது. வடிவமைந்து அழகொழுகும் திருமேனி மீது யானை முகம் அமைந்து விநோதமாய்த் தோன்றியது; அதனால் அப் பெருமான் விகடர் எனவும் கஜானனர் எனவும் பிரஸன்ன வதனர் எனவும் வேழ முகத்தோன் எனவும் களிற்றுமுகக் காளை எனவும் பக்தர்களால் அழைக்கப்படுகிறார். சிந்தூரனைக் கொல்ல வந்த சிறு குழந்தை வெள்ளிமலைச் சாரலில் விளையாடி வையகம் போற்ற வளர்ந்து வந்தது.

நாரதரும் சிந்தூரனும்

ஒரு நாள் திரிலோக சஞ்சாரியான நாரத முனிவர் சிந்தூரனின் அரண்மனைக்கு வந்தார். சிந்தூரன் அவரைக் கண்டதும் முகமன் கூறி வரவேற்று ஆசனத்தில் இருத்தினான். நாரதர் அவனை நோக்கி, "நான் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பிர பஞ்சம் முழுவதும் சுற்றி வருகிறேன். ஆங்காங்குள்ள அரசர்கள், முனிவர்கள். தேவர்கள், அசுரர்கள், முதலிய யாவரையும் கண்டு பழகி வருகிறேன். ஆயினும் உன்போன்று விருந்தோம் புநரை யாண்டும் கண்டிலேன். அதுபோலவே உன்போன்ற வலிமையும் வீரதீரமும் கொண்ட பேரரசனை எங்கும் காண வில்லை. நின் நகரம் தேவநகரங்களை விடச் சிறந்து விளங்கு கிறது" எனக் கூறினார். அக்கூற்றைக் கேட்ட அரக்கன் பெரு மிதம் கொண்டு செருக்கோடு அம்முனிவரை நோக்கி, "தாங்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சென்றுவந்த உலகங்களில் ஏதேனும் அதிசயம் கண்டீர்களா?'' என விநயத்தை வருவித்துக்கொண்டு கேட்டான்.

''ஆம், கண்டேன்; அது புதுமை; மிகப்புதுமை.''

''எங்குக் கண்டீர்கள்?''

''திருக்கைலாயத்தில்.''

''கைலாயத்திலா? அங்குச் சிவபிரானும் இல்லை; உமையம்மையும் இல்லையே!''

''எங்குச் சென்றார்கள்? அங்குதான் அவர்களைக் கண்டேன்.''

''பிரியலி காட்டில் அல்லவா மறைந்து வாழ்கிறார்கள்!''

''சிந்தூரா, நீ அவர்களை எப்போது கண்டாய்?''

''போன மாதத்தில்; அவர்கள் எனக்கு அஞ்சிக் கைலையை விடுத்து எளிதில் நுழைய முடியாத காட்டினுள் மணிமண்டபம் ஒன்று கட்டிக்கொண்டு மறைந்து வாழ்கிறார்கள்.''

''அப்படியானால் அவர்களைப் பற்றிய செய்தி யொன்றும் உனக்குத் தெரியாது என நினைக்கிறேன்.''

''முனிவரே, அப்படி என்ன அதிசயமான செய்தி?''

''சிந்தூரா, மலைமகளும் சிவபிரானும் திருக்கைலைக்கு மீண்டும் எழுந்தருளினார்கள்; அங்கு உமையம்மை அழகான ஓர் ஆண் உடலை ஈன்றெடுத்தாள். அப்பிண்டம் தலையற்றிருந் தது. அதுகண்ட சிவபிரான் தான் முன்னமே சேமம் செய்து வைத்திருந்த யானைத்தலையொன்றை அப்பிண்டத்தின்மீது பொருத்தி அப்பிண்டத்தை அழகியதொரு குழந்தையாக்கி விட்டார். அடடா, அக்குழந்தையின் அழகைக் காணக் க்ண் கோடி வேண்டும். அம்மதலையின் வடிவழகைப் புகழ்வதா? வண்ணவொளியைப் புகழ்வதா? ஆனைமுகத்தின் கம்பீரத்தைச் சொல்வதா? அம்முகத்தில் காணும் தேஜஸை இயம்புவதா? பெருத்த வயிற்றின் பண்பைப் பேசுவதா? யாதென்றுரைப்பேன்?''

இவ்வாறு கூறிய நாரதர் கண்களை மூடிக்கொண்டு அக் குழந்தையின் அழகை மனக்கண்ணால் ரசிப்பவர்போல் தோன்றினார். பிறகு மேலும் தொடர்ந்தார்:

''அக்குழந்தை தலையின்றி எவ்வாறு பிறந்தது? அவ்வாறு தோன்றக் காரணமென்ன? அவ்வாறு தோன்றிய குழந்தை எவ்வாறு உயிருடன் இருந்தது? சிரமற்ற குழந்தைக்குச் சிந்துரத் தலையைப் பொருத்துவானேன்? இவை யாதொன்றும் எனக்கு விளங்கவில்லை?''

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மீண்டும் கண்களை மூடிக்கொண்டார் நாரதர்; அக் குழந்தை தோன்றிய அதிசயத்தை மீண்டும் மீண்டும் எண்ணிச் சுவைப்பவர்போல் தோன்றினார்.

அப்போது சிந்தூரன் வெகுண்டெழுந்து கண்களில் கனல் தெறிப்ப, "அவனே என் பகைவன்; இன்னே அவனைக் கொல்லுவேன்; எனக்கஞ்சியன்றோ அரனும் உமையும் மறைந்து வாழ்கிறார்கள்; செடியாயிருக்கும்போதே முள்மரத்தை வெட்டிவிட வேண்டும்; சிறுவனாயிருக்கும் போதே அச்சிந்துர முகனை அழித்துவிட வேண்டும்" எனக் கர்ஜனை புரிந்தான்.

அஞ்சியவர்போல நாரதர் நடுங்கி, "பச்சைப் பாலகனைக் கொல்வது பண்பல்ல" என்றார்.

சிந்தூரனுக்கு அச்சொற்கள் எரிகிற கொள்ளியில் எண்ணெய் ஊற்றியது போன்றாயிற்று. நாரதர் தான் வந்த காரியம் தடையேதுமின்றி முடிந்ததென்று மகிழ்ந்து அரக்கனிடம் விடைபெற்று வெளியேறினார். விரைந்து கயிலையங்கிரிக்கு வந்து சிந்தூரன் சினந்துவரும் செய்தியைச் சிவபிரானிடம் சொல்லிச் சென்றார். அவர் சென்ற ஒரு நாழிகைப் போதில் சிந்தூரன் வந்து சேர்ந்தான்; இடி போன்ற சிங்கக் குரலில், "என்னைக் கொல்லும் எண்ணத்தோடு இங்கு வளரும் பிள்ளை யார்? உள்ள உரம் இருப்பின் ஓடி வரட்டும் என்னெதிரில். இப்போதே அவனைக் கொன்று கைலையையும் பொடிப்பொடி யாக்குவேன்" என முழங்கினான்.

முழக்கம் கேட்ட பூத கணாதியர் அஞ்சினர்; முனிவர் முதலோர் மருண்டனர். அப்போது களிற்று முகத்தண்ணல் கதுமென் வெளிப்போந்து, "உன்னை ஒழித்து உலகைக் காக்க உறுதி பூண்டு தோன்றியவன் யானே" என நிமிர்ந்து நின்றார்.

சிந்தூரன் சந்தனமானான்

விநாயகரின் குழந்தை உருவைக் கண்ட சிந்தூரன் அண்டம் வெடிபடச் சிரித்தான்.. "அமரர் உலகு புரக்கும் இந்திரனும் சிருஷ்டி கர்த்தாவான நான்முகனும் காத்தல் தொழிலை மேற்கொண்ட நாரணனும் என் பேர் கேட்டு நடுங்குவர்; நீயோ என்னுடன் போரிட வந்த பெருவீரன்? நீயோ என்னை வெல்லும் ஆற்றல் உடையவன்? நீயோ என்னைக் கொல்லும் வன்மை உடையவன்? இளங்கன்று பயமறியாது; அதனால்தான் நீ என்முன் வந்து நிற்கிறாய். உன்னைப் பார்த்தால் இரக்கமே பெருகுகிறது. என் முன் நில்லாதே. ஓடிச் சென்று உன் தாய்க்குப் பின்னால் ஒளிந்துகொள்" எனப் பரிகாசக் குரலில் பகர்ந்தான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அக்கணமே ஆதி மூலமாகிய அப்பெருமான் அண்டமெலாம் ஓர் அணு என்னுமாறு பேருருக் கொண்டார். அப்பேருருவின் உள்ளும் புறமும் சிந்தூரன் காணாத அண்டங்கள் பல இருந்தன. அவ்வுருவைக் கண்ட சிந்தூரன் மயங்கி நின்றான். மயங்கி நின்ற அவனைத் தம் துதிக்கையால் வாரி எடுத்து மத்தகமே கல்லாக வைத்துச் சந்தனம் குழைப்பதுபோல் குழைத்துத் தம் உடல் முழுவதும் பூசிக்கொண்டு சிந்தூர விநாயகர் ஆயினார். இயற்கை மணம் பொருந்திய அவன் உடலினின்றும் தோன்றிய மணம் எல்லாத் திசைகளிலும் பரவியது. அவன் ஆன்மா ஆதிமூலப் பெருமானாகிய களிற்றுமுகன்றன் கழலிணையில் ஒன்றியது. விசுவரூபம் கொண்ட விநாயகரும் முன்போற் குழந்தையாயினார். அந்தர வானத்தவர் எல்லாம் அவரடி பணிந்து போற்றினார்கள். நான்முகனும் நாரணனும் தங்களுக்கு ஏற்பட்ட தடையெல்லாம் நீங்கியது கண்டு மகிழ்ந்தனர். தடை நீக்கிய விநாயகரின் தாள்பணிந்து தம் கடமையைத் தொடர்ந் தனர். களிற்றுமுகன் யாவருக்கும் அருள்பாலித்து மறைந்தார்.

கஜமுகன் வரலாறு

இப்போது வாசகர்களுக்கு ஓர் ஐயம் எழும். சிவ பக்தனான கஜமுகாசுரன் உமாதேவி வாழும் மணிமண்டபத்தை இடித்துத் தள்ளியது ஏன்?

முன்னொரு காலத்தில் மயேச்வரன் என்றோர் அரசன் இருந்தான். அவன் தன் நாட்டை நன்கு பரிபாலித்து வந்தான். அவன் அரண்மனைக்கு ஒரு நாள் தேவ குருவான பிரகஸ்பதி வந்தார். மயேச்வரன் அவரை முறைப்படி வரவேற்று வழிபாடு செய்தான். அரசன் பிரகஸ்பதியின் தாள் பணிந்தபோது மிக மகிழ்ந்த தேவகுரு "என் தாளை வணங்கிய உன் தலையை முனிவரும் தேவரும் மனிதரும் மற்றோரும் வணங்கி நிற்பர்" என அருளினார். மகிழ்ச்சியடைந்த மன்னன், "அச்சிறப்பு எப்போது கிடைக்கும்" என வினவினான்.

"நீ யானையாய்ப் பிறக்கும் பிறவியில்; அப்பிறவியிலேயே
முக்தியும் பெறுவாய்" என்றார் குரு தேவர்.

பிறகு மஹா சிவபக்தனான அம்மன்னனிடம் விடைபெற்றுக் கொண்டு பிரகஸ்பதி தம் இடம் சார்ந்தார்.

பின்னொரு நாள் சிவபக்த சிகாமணியான மயேச்வரன் நாட்டு நிலைமை அறிந்துகொள்ளும் பொருட்டு மந்திரி பிரதா னியர் புடைசூழ புறப்பட்டுச் சென்றான். அப்போது அவன்

CC-0. In Public Domain: Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எதிரே நாரத முனிவர் வந்தார். இயல்பாகவே பெரியோரைக் கண்டால் பணிந்து போற்றும் மயேச்வரன் நாரதரைப் பணியாது சென்றான். குருதேவர் குறிப்பிட்ட காலம் குறுகியது போலும். நாரதர் சினந்து "மதயானைபோல் யாரையும் மதியாது சென்ற மன்னன் யானையாகப் பிறக்கட்டும்" எனச் சபித்தார். உணர்ச்சி பெற்ற மயேச்வரன் மாமுனிவர் தாள் பணிந்து மன்னிப்புக் கேட்டார். மனமிளகிய முனிவர், "யானையாய்ப் பிறந்த போதிலும் முன் ஜன்ம நினைவு முழுவதும் நிரம்பி யிருக்கும்; பரமேச்வரனை எப்போதும் தியானித்துக் கொண்டே யிருக்கும் பண்பு வளரும்; பரமேச்வரன் கையால் இறுதியில் முக்தியும் கிடைக்கும்" எனச் சாப விமோசனம் அளித்தார்.

அதன் பயனாகவே அவ்வரசன் பிரியலி வனத்தில் யானை யாகத் தோன்றினான். சதாகாலமும் சிவனைத் தியானம் செய்வதில் ஈடுபட்டிருந்தான். கஜமுகாசுரன் என்ற பெயரையும் பெற்றான். பூர்வ ஜன்ம நினைவுகளாலேயே பார்வதி தேவியார் வாசம் செய்த மாளிகையை முட்டித் தள்ளினான். நாரத முனிவர் நவின்றபடி முக்தி அடைந்தான். குருதேவர் கூறியபடி ஆதிப்பிரான் அவன் தலையைத் தன் தலையாக்கிக் கொள்ள யாவரும் அக்களிற்று முகத்தைப் பணிந்து போற்றினர்.

31. விக்னராஜர்

கிரௌஞ்சனின் அடாத செயல்

ஹிமகிரியின் ஒருபால் முன்னொரு காலத்தில் சவுபரி என்ற தவசிரேஷ்டர் தம் தர்மபத்னியான மனோரமையுடன் தவம் இயற்றி வந்தார். வேதாங்கங்களும் வேதாந்தமும் அவருக்குக் கைவந்த கலைகள். மனோரமை மணாளனுக் கேற்ற மங்கை; கற்பின் கொழுந்து. ஒருநாள் சவுபரி முனிவர் உஷக் காலத்தில் ஸ்நானம் செய்யும் பொருட்டு நதியை நோக்கிச் சென்றார். மனோரமை முன்றிலைப் பெருக்கிச் சுத்தம் செய்து வண்ணக் கோலங்கள் வரைந்து கொண்டிருந்தாள். அப்போது வானவீதியில் கிரௌஞ்சன் என்றவொரு கந்தர்வன் சென்று கொண்டிருந்தான். அவன் மனோரமையின் ஒளிமிக்க எழில் மேனியையும் அங்கங்களின் அழகையும் விரைந்த செயற் பாட்டையும் கண்டு மயங்கினான். மோகம் மீதூறச் செய்வன சிந்தியாது பர்ணசாலையின் முன்வந்திழிந்து பண்புடைப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பத்தினியை முன்கை பிடித்து இழுத்தான். முதலில் திகைத்த மனோரமை பொங்கிச் சீறினாள்; அவன் கையை உதறினாள். நீராடச் சென்றிருந்த தபோதனர் திரும்பி வந்தார். கிரௌஞ்சன் செய்கையை நேரில் கண்டார். அதனால் வெகுண்ட அவர் அவனைப் பெருச்சாளி யாகெனச் சபித்தார்.

சாபமொழியைக் கேட்ட கிரவுஞ்சன் தபோதனர் பாதங்களில் வீழ்ந்தான்; அறியாமையாற் செய்த பிழைபொறுத்துச் சாப விமோசனம் செய்யுமாறு கெஞ்சினான். இரக்கம் கொண்ட தபோதனர், ''பொய்யாத வாக்கு என் வாக்கு; ஆயினும் செய்த பிழையுணர்ந்து வருந்தி நிற்கும் உனக்குச் சாப விமோசனம் சொல்கிறேன். விரைவில் விநாயகப் பெருமான் பராசுவ முனிவரின் ஆச்ரமத்தில் அவதாரம் செய்யப் போகிறார். அப்போது அவருக்கேற்ற சிறந்த வாகனமாகி அனைவரும் வணங்கப் பெருமை அடைவாய். இறுதியில் முக்தியும் பெறுவாய்'' என்றார். இதற்குள் வெகுளிக் கூறிய வசவுரை பலன் காட்ட கிரௌஞ்சன் பெருமலையன்னதோர் பெருச்சாளியாயினான்; கண்டார் அஞ்சக் ககனமும் புவியும் கலக்கி வந்தான்.

அக்காலத்தில் ஏமவதி என்றோர் நகரததை அபிநந்தனன் என்றோர் அரசன் ஆண்டு வந்தான். பல யாகங்கள் செய்து பழகிய அவன் இறுதியாக ஓர் உயர்ந்த யாகம் செய்ய விழைந்தான். அந்த யாக முடிவில் அவனுக்கு இந்திரனாகும் பேறு கிட்டும். ஆதலால் அதற்குத் தேவையான ஏராளமான உபகரணங்களைச் சேகரித்தான். உலகின் பல பாகங்களிலிருந்தும் வேத விற்பனர் களையும் யாக வல்லுநர்களையும் வரவழைத்தான். சிறந்ததொரு யாக மண்டபம் அமைத்து அதற்கு ஏமம் செய்து யாகத்தைத் தொடங்குவதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்தான். ஆனால் இந்திரனை அழைக்கவில்லை. இவற்றையெல்லாம் உணர்ந்த நாரத முனிவர் விரைந்து சென்றார் அமராவதிக்கு. ஆங்குச் சுகபோகங்களில் மூழ்கியிருந்த அமரர் தலைவனைக் கண்டார். நாரத முனிவரைக் கண்ட வானோர் பெருமான் எதிர்கொண்டழைத்து அணி ஆசனத்தில் இருத்தி விதிப்படி பூசை புரிந்து வந்த காரணம் யாதென வினவினான்.

''இந்திரா, பூவுலகில் யாகாதிகள் பெருகி வருகின்றன.''

''நன்மைதானே, நாரதரே!''

''அபிநந்தனன் மீண்டும் ஒரு யாகம் செய்ய ஏற்பாடுகள் செய்துள்ளான்.''

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

"ஏமவதி அரசன் அபிநந்தனன் தானே?"

"ஆம், இந்திரா."

"ஏமவதி மன்னன் பல யாகங்கள் செய்தவன்; வேள்வி இயற்றும் வழி முறைகளும் வேள்வியின் பெருமையும் அதன் பயனும் உணர்ந்தவன்; அவன் மீண்டும் ஒரு வேள்வி இயற்றுவதில் வியப்பென்ன?"

"வானுலகம் புரக்கும் வாசவ, அபிநந்தனன் அனைவருக்கும் அழைப்பிதழ் அனுப்பிவிட்டான்."

"எனக்கு இன்னும் அழைப்பிதழ் வந்து சேரவில்லை, முனிவரே."

"வராது, வராது. உன்னைத் தவிர உலகுக்கெல்லாம் அழைப் பிதழ் அனுப்பியாகிவிட்டது. உனக்கு வரவே வராது."

"அபிநந்தனன் இயற்றிய அனைத்து வேள்விகளுக்கும் என்னை அழைத்திருந்தானே; இப்போது என்மீது என்ன கோபம்?"

"கோபமில்லை, அமரர் தலைவா, கோபமில்லை, உன் பதவிமீது மோஹம்."

"என்ன இயம்பினீர், முனிவரே, என்பதவிமீது ஆசையா?"

"ஆம், சசி மணாள, முதல்நாள் வேள்வி முடிந்த உடனே உன் இந்திரபதவி போய்விடும். எல்லையில்லாத் துன்பமுற்று இடர்க்கடலில் வீழ்வாய். எவ்வாறு நீ உய்வாய் எனக் கவலை கொள்கிறேன்."

"முனிவரே, அதற்கோர் உபாயம் தாங்களே அருள வேண்டும்."

"நானும் நன்கு யோசித்துப் பார்த்துவிட்டேன்; அந்த வேள்வியை அழிப்பதைத் தவிர வேறுவழியில்லை."

"அவ்வேள்வியை அழிப்பதெப்படி?"

"அமரருலகு புரக்கும் ஆற்றல் மிக்க அரசே, அச்செயலை நீயே ஆலோசித்துச் செயல் வேண்டும். நாரணன்மேல் பாரம் போட்டு நானிலமுற்றும் சுற்றி வரும் நாரதன் யாது அறிவான்? நான் சென்று வருகிறேன்."

நாரதர் தம் இருக்கையினின்றும் எழுந்து விடைகொண்டு புவியினை வலம்வரப் புறப்பட்டார்.

அபிநந்தனன் இயற்றும் வேள்வியை எவ்வாறு அழிப்பது என இந்திரன் ஆழ்ந்து யோசனை செய்தான். தேவராஜனுக்குக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காலரூபியின் நினைவு வந்தது. உடனே தேவராஜன் காலரூபியைத் தன்னிடம் வருமாறு எண்ணினான். எண்ணிய அக்கணமே காலரூபி இந்திரன் எதிரில் நின்றான். காரணமற்ற கோபத் துடனும் கொடூரமான உருவத்தோடும் எதிரே நின்ற கால ரூபியை நோக்கி, "பூவுலகில் வேள்வி பல செய்து என் பதவியைப் பறிக்கப் பலர் முயல்கிறார்கள். ஏமவதி மன்னன் அபிநந்தனனும் அவருள் ஒருவன். அவன் இயற்றத் தொடங்கும் வேள்வியை அழித்து அவனையும் அழித்திடுக" என ஆணையிட்டான்.

உடனே காலரூபி பல்லாயிரக்கணக்கான படுகோர உருவங்கள் கொண்டு பூவுலகிற் புகுந்தான். 'கல்லுளி மங்கன் போன வழி காடுமேடெல்லாம் தவிடு பொடி' என்றாற்போல காலரூபி சென்ற வழியெல்லாம் பேரழிவு செய்துகொண்டே போனான். அபிநந்தனன் யக்ஞத்தின் பொருட்டு சேமித்து வைத்திருந்த பண்டங்களையெல்லாம் சிதறவடித்தான்; வந்திருந்த வேதியர் களைத் துரத்தினான்; அவனைக் கண்ட முனிவர்கள் முதலானோர் அச்சுற்று அவதியுற்றனர். வேள்விக் களம் அமர்க்களம் ஆயிற்று. அபிநந்தனனின் படைவீரர்களையெல்லாம் ஒரு நொடியில் அழித்த காலரூபி அபிந்தனனையும் கொன்றான். புனித வேள்விச் சாலை கொடிய சுடலைச் சாலையாயிற்று. காலரூபி அத்துடன் நிற்கவில்லை. அன்று முதல் எங்கு வேள்வி இயற்ற யாவர் முற்படினும் அதனைத் தடைசெய்யத் தொடங்கினான். விக்கினங்கள் பல உருவில் வருமாறு செய்தான். அதனால் காலரூபிக்கு விக்கினன் என்றொரு பெயரும் உண்டாயிற்று.

விக்கினன் தொல்லையைத் தாங்க முடியாத முனிவர்கள் விநாயக மூர்த்தியை உபாசித்தனர். விநாயகரும் அவர்கள் முன் தோன்றினார். முனிவர்கள் விநாயகரைத் துதித்து, 'மஹாப்ரபோ, நாங்கள் எங்கள் நித்ய கர்மானுஷ்டானங்களைக் கூட செய்ய முடியாமல் விக்கினம் செய்கிறான் அந்தக் காலரூபி. எங்கும் ஒரு யக்ஞமும் நடைபெறவில்லை. வேள்வி நடத்துவதற்கு எடுக்கும் எந்த ஒரு முயற்சியையும் இடையே தடுத்து விடுகிறான். அவனை மீறி எந்த ஒரு நன்முயற்சியும் செய்ய இயலவில்லை. தாங்களே எங்களுக்குக் கதி; எங்களுக்குத் தடைகள் ஏதும் ஏற்படாமல் எங்களைக் காப்பாற்ற வேண்டும்' எனக் கூறிச் சரணடைந்தார்கள். விநாயகமூர்த்தியும் அவர்களுக்கு அபயம் அளித்தார்.

அக்காலத்தில் வரேணியன் என்றொரு மன்னன் ஆண்டு வந்தான். வரேணியன் 'நற்குண் நற்செயல்கள்ளால் சிறந்தவன்; தானம் செய்தலிலும் தருமத்தின்பால் நிற்றலிலும் தன்னிக

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ரற்றவன்; தவசிலன்; தேவர்களும் வணங்கத் தக்க தகுதி கொண்டவன். அவன் மனையாள் புஷ்பகா. கணவன் கருத் தன்றித் . தனக்கென வேறு கருத்துக்கொள்ளாக் கற்பரசி. நிறைந்த செல்வமும் சிறந்த குணமும் உயர்ந்த பக்தியும் கொண்ட அத்தம்பதிகளுக்கு நீண்ட நாட்களாகப் புத்திரப்பேறு உண்டாகவில்லை. அதனால் மிகவும் மனவருத்தம் உற்றிருந்த அவர்களுக்கு ஆனைமுகன் அருள் கிடைத்தது. புஷ்பகா கருவுற்றாள். ஐயிரு திங்கள் அகன்றதற்பின் அருமைக் குழந்தை யொன்றை ஈன்றாள். ஈன்ற அப்போதே எம்பெருமான் தண்ணருள் காட்டி யாவரும் அறியாவண்ணம் பிறந்த குழந்தையை மறைப் பித்து அவ்விடத்தில் தாமே குழந்தை வடிவாக இருந்தார். ஆனால் சாதாரண குழந்தை வடிவில் அல்ல; மதியொளி வீசும் மாசிலா முகமும் நால்வகைப் படைகள் ஏந்திய நான்கு திருக் கரங்களும் நான்கு கரங்களுக்கும் துணையாய்த் தும்பிக் கையும் உலகத்தையே உள்ளடக்கியதுபோன்ற உதரமும் குறுகிய கால்களும் மின்னொளி வீசும் சந்தனக் குழம்புபோன்ற மேனி வண்ணமும் கொண்டு அண்ணல் ஐங்கரன் குழவியாய்க் கிடந்தார். அருகில் இருந்த புஷ்பகா குழந்தையின் அழகில் ஈடுபட்டு அரக்கக் குழந்தை என்று அஞ்சி ஓடினார்கள். குழந்தையின் அருகில் இருந்த புஷ்பகை குழந்தையின் அழகில் ஈடுபட்டு மகிழ்ந்தாளாயினும் உலகில் இல்லா உருவில் குழந்தை தோன்றியது கண்டு கவன்றாள். அப்போது குழந்தையைக் காணவந்த வரேணியன் துணுக்குற்றான். இயல்பல்லாக் குழந்தை பிறந்ததால் தனக்கும் தன் நாட்டிற்கும் கேடு வரும் என அஞ்சினான். எல்லாம் வல்ல ஆதிப் பரமனை அருகே குழந்தையாய்ப் பெற்றும் அக்குழந்தையின் தன்மையை அவர் களால் அறிந்துகொள்ள இயலவில்லை. தும்பிக்கையான் தோற்று வித்த மாயையை அறிவார் யார்? மன்னன் கலங்கிப் பணியாளர் களை அழைத்து, ''யாரும் அறியாமே இக்குழந்தையைக் கொண்டுபோய் இரவோடிரவாகக் கானகத்தில் போட்டுவிட்டு வந்து விடுங்கள். இச்செய்தியை ஒருவரும் அறியாமே மறைத்து விடுங்கள்'' எனக் கட்டளையிட்டான். அன்றிரவு பணியாளர்கள் பச்சிளம் பாலகனைத் தூக்கிச் சென்று கானகத்தில் ஓர் ஏரிகரையில் நீண்ட புற்களையும் மெத்தென்ற தழைகளையும் பரப்பி அதன்மீது தெய்வக் குழந்தையைப் படுக்கவைத்துவிட்டுத் திரும்பிச் சென்றனர். தெய்வக் குழந்தையின் மேனி ஒளியால் அப்போது அப்பிரதேசம் முழுதும் ஒளிர்ந்து விளங்கியது. கான விலங்குகளும் கானப் பறவைகளும் மான முனிவர்களும் மற்றுள்ளன யாவும் கதிரோன் உதித்தான் எனவே கருதினர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அந்நீர்நிலையருகே பராசுவ முனிவர் என்றோர் அருளாளர் பர்ணசாலை ஒன்று அமைத்துக்கொண்டு தம் இல்லறத் துணையான வீரியவற்கலையோடு ஒன்றியிருந்து அருந்தவம் ஆற்றிவந்தார். அவர் திடீரென்று தோன்றிய ஒளிகண்டு தாம் வைகறையில் எழாது மிகுவுறக்கம் கொண்டுவிட்டோமே என்று கவன்று விரைந்தெழுந்து காலைக் கடன்களை ஆற்றுவான் வேண்டி ஏரிக்கரையை அடைந்தார். தெய்வத் திருவருளால் ஆங்கே ஐங்கரக் குழந்தையைக் கண்டார்; ஆனந்தம் கொண்டார்; ஐயன் அருளியவற்றை எண்ணி எண்ணி மகிழ்ந்தார்; இதனைப் பெற்றோர் இக்குழந்தையின் பெருமை உணராது ஏரிக்கரையில் விட்டுச் சென்றனரே என வருந்தினார்; குழந்தையை இரு கைகளாலும் அள்ளி எடுத்து உச்சி மோந்து மென்மையாகத் தம் பர்ணசாலைக்குக் கொண்டுவந்தார்; பேரொளிப்பிழம்பாய் அழகு கனிந்து ஒழுகும் மேனியனை ஐங்கரத்து விநாயகனை அருள் கொழிக்கும் கண்ணானைப் பாசத்துடன் பார்த்தாள் பராசுவர் தேவி. தெய்வத் திருக்குழந்தையை இருகையாலும் அள்ளி மார்போடணைத்து அக்குழந்தையைப் பெற்ற தாயே தானென மகிழ்ந்து சீராட்டிப் பாலூட்டினாள். விண்ணோரும் மண்ணோரும் வியக்க விநாயகக் குழந்தையை வளர்க்கும் பேறு வீரியவற்கலைக்குக் கிடைத்தது.

பக்தர்களுக்கு அருளும் பரமன், விநாயகக் குழந்தை, பராசுவ முனிவரின் பர்ணசாலையில் வீரியவற்கலையின் அரவணைப்பில் அற்புத விளையாட்டுகளை விளையாடிக் கொண்டும் குழலும் தோற்கும் மழலை மொழியில் பேசியும் யாவரையும் மகிழச் செய்து தினே தினே நிலவு வளர்வதுபோல் நிரம்பி வளர்ந்து வந்தது. அவ்வாறிருக்கும் நாளில் ஒரு நாள் அவர்கள் இல்லத்திற்கருகே தொல்லை உருவாயிற்று. அன்றொரு நாள் முனிபத்தினிமேல் மோகம் கொண்டு சாபம் பெற்ற கிரௌஞ்சப் பெருச்சாளி இப்போது இங்கு வந்து எண்ணிலாத் துன்பம் தந்தது. ஒருநாள் அது பர்ணசாலையின் தரை முழுவதும் உழுது வைத்திருக்கும்; ஒருநாள் உணவுப் பொருள்களையெல்லாம் வீணடித்திருக்கும்; ஒருநாள் அண்டையில் உள்ள மரவேரை அறுத்துத் தள்ளி மரத்தைச் சாய்த்திருக்கும்; பூஜைக் கேற்க வைத்த பூச்செடிகளையெல்லாம் வெட்டிச் சாய்த்திருக்கும்; வெளியில் வைத்த சுவடிகளையெல்லாம் குதறித் தள்ளியிருக்கும்; அக்னி குண்டங்களைத் தோண்டி நாசம் செய்திருக்கும். ஒவ்வொரு நாளும் புதிய புதிய குண்டங்கள் அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முனிவரரின் இயல்பான வாழ்க்கைக்கு மிகவும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இடைஞ்சலாயிற்று. பெருச்சாளியோ பெருமலைபோல் தோன்றியது. அதன் வலிமை அதிகமாய் இருந்தது. அவ்வளவு வலிமையும் வேகமும் வாய்ந்த விலங்கை அவர்கள் கண்டதே இல்லை. அத்தொல்லையிலிருந்து விடுபடுவதெவ்வாறு எனத் தவத் தம்பதியர் வருந்தி நின்றனர்; இன்னமும் என்னென்ன தொல்லை கொடுக்குமோ என எண்ணிக் கலங்கினர்.

அப்போது அயலிலிருந்த ஆதி விநாயகர் தம்மை வளர்த்த தாய் தந்தையரை நோக்கி, ''இன்னே அம்மூடிகத்தை இழுத்து வந்து அடக்குவோம்; புடைத்து ஒடுக்குவோம்; இவ்விடத்தை விட்டு ஓட்டுவோம்'' எனப் புகன்று தம் கைப் பாசத்தைக் கருமூடிகத்தின்மீது எறிந்தார். பாசம் பாய்ந்து பற்ற வருவதைக் கண்ட பண்டைப் பெருச்சாளி விரைந்து ஓடியது; பூவுலகம் தாண்டிக் கீழுலகம் சென்றது; பாசமும் விடாமல் பின்னே சென்றது; விண்ணும் மண்ணும் கடலும் திடலும் தாண்டிக் குதித்து ஓடியது அப்பெருச்சாளி; எங்குச் சென்றாலும் பின்னோடு சென்று பற்ற முனைந்தது பாசம். மூடிகம் மூச்சுத் திணறிக் களைத்தது; உடல் சோர்ந்தது; உள்ளமும் சோர்ந்தது; ஆருயிர் அகன்றுவிடுமோ என அஞ்சி அயர்ந்தது. அப்போது பாசம் அதனைப் பிணித்தது; காடு மலை என்றும் மேடு பள்ளம் என்றும் நிலம் நீர் என்றும் பாராமல் கடுவிரைவில் மூடிகத்தைக் கனன்று இழுத்து வந்தது. மலையில் முட்டிச் சிலையில் முட்டி மரத்தில் மோதி நிலத்தில் மோதி உடலெல்லாம் புண்ணாக உயிரொன்றும் உண்டாக ஓய்ந்து நின்றது உந்துரு. எதிரே நின்ற இறைவன் கழலில் அலறி வீழ்ந்து 'அபயம் அபயம்' என ஓலமிட்டுச் சரணடைந்தது. அப்போது கந்தர்வன் என்று கருவம் கொண்டு கற்புடைத் தேவியின் கைப்பிடித்திழுத்ததும் வெய்ய முனிவர் வெகுண்டுரைத்த கூற்றும் ஐயன் மனமிளகி அருளிய வார்த்தையும் மூடிகத்தின் மனத்தே முகிழ்த்தது. பஞ்சக் கரக் களிற்றுக் கன்றைப் பணிந்து பாசம் பிணித்த துன்போடு பரமன் நம்மைக் காப்பான் என்ற நம்பிக்கை கொண்டது. ஐங்கரத்து வள்ளல் அம்மூடிகத்தை நோக்கி, ''அஞ்சற்க, சவுபரி முனிவர் மனமிளகியுரைத்த சாபவிமோசனத்தை யானறிவேன்; இன்று முதல் நீ எமக்கு ஊர்தியாகி உய்வாயாக'' எனக் கருணை மிகு சொற்களைச் சொன்னார். கிரௌஞ்சனாகிய மூடிகமும் மிக்க மகிழ்ச்சியோடு அத்தனை, அத்திமுகத்தனை, ஆனந்த உருவைத் தன் முதுகின்மீது கொண்டு பல இடங்களுக்கும் சென்று பவனி வந்தது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விநாயகரின் விளையாடல்களைக் கண்ட பராசுவ முனிவர், ஆதிபகவன் தானே குறுமதலையாகித் தன் சிறு குடிலில் அமர்ந்துள்ளார் என உணர்ந்தார். அதனால் அவ் அருட்குழந்தையை நோக்கி, ''அன்புக் குழந்தாய், காலரூபி என்றொரு கள்ளன் வேள்வி செய்ய விரும்புவோரையெல்லாம் கொல்லுகிறான். அதனால் பரமனுக்கு விழா எடுத்தலும் நின்றுவிட்டது; தினப்பூசையும் நின்றுவிட்டது; இன்னும் சில நாளில் உலக இயக்கமே நின்றுவிடுமோ என அஞ்சுகிறேன். அவனைத் தொலைத்து அவனியைக் காத்து தேவரையும் முனிவரையும் புரந்து ரக்ஷிக்க வேண்டும்; லோகோபகாரமான இதனை விரைவில் செய்ய வேண்டும்'' என வேண்டினார். வேண்டிய வேண்டியாங்கு அளிக்கும் விநாயகப் பெருமான் அவ்வாறே செய்வதாக அருள் மொழி கூறினார்.

காலரூபியால் அவியுணவின்றி அவதியுறும் தேவர்களும் தேவராஜனும் நான்முகப் பெருமானை அடைந்து தங்களுக்கேற்பட்ட துன்பங்களைக் கூறி முறையிட்டார்கள். நான்முகன் அவர்களை நோக்கி, ''முன்னமே முழுமுதற்காரணனான விநாயகர் காலரூபியை அழிப்பதாக முனிவர்களுக்கு வாக்களித்திருக்கிறார். இப்போது அவர் பராசுவ முனிவரின் பர்ணசாலையில் அருட்குழந்தையாக வளர்ந்து வருகிறார். நாம் எல்லாரும் அங்குச் சென்று நம் குறைகளை அவரிடம் கூறுதல் நல்லது. வருக, செல்வோம், எழுக'' என்றார்.

அவ்வாறே அனைத்து வானோரும் பராசுவ முனிவரின் பர்ணசாலைக்கு வந்தனர். பராசுவ முனிவரும் அவர்களை வரவேற்று முகமன் கூறி மகிழ்வித்து அமரச் செய்தார். அனைவரும் ஆனைமுகத்துச் செம்மலை அகம் பூரிப்பக் கண்டனர்; கண்கள் செய்த பாக்கியம் என மகிழ்ந்தனர். கார்மா முகச் சிறுவன் பெருமையெலாம் பேசிப் பணிவுடன் தாம் வந்த காரியம் நவின்றனர். காலரூபியை அழித்து ககனமும் புவனமும் காக்க வேண்டும் எனப் போற்றித் துதித்தனர்.

தெய்வ விநாயகர் யாவருக்கும் திருவருள் பாலித்தார். தம் கையின்கண் நின்ற அங்குசத்தை விடுத்துக் காலரூபியைக் கட்டியிழுத்து வர ஆணையிட்டார். அங்குசமும் விரைந்தது; காலனையும் கதிகலங்கச் செய்யும் காலரூபியைக் கணப்பொழுதில் சூழ்ந்து இழுத்து வந்து களிற்றுமுகன் முன்னே நிறுத்தியது. விக்கினன் அசைவற்று நின்றான். பிறகு தேறி கொடும்போர் செய்து இப்பிள்ளையை வெல்ல எண்ணினான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அதனால் தானே நீருருவாகிப் பிரளயகால வெள்ளம்போல் பெருகி அகில உலகும் முழுகுமாறு நின்றான். விக்கினன் மாயையை விநாயகர் ஒரு கைநீட்டி மாற்றினார். வெள்ளம் சுவறியது. உடனே விக்கினன் வாயஸ உருவம் கொண்டு மர மெல்லாம் முறியச் சிறகடித்தான். அவன் செய்த பேரொலியில் அண்டமுகடெல்லாம் ஆடியது. உலகோர் மருண்டனர்; தேவர் அஞ்சினர். பிள்ளையாரோ தம் கைத்தலத்திருந்த கமலப்பூவைக் காகத்தை நோக்கிக் கடாவினார். காக்கையும் உருமாறி வடவைத் தீயாய்ப் பரிணமித்தது. உடனே மதகளிறன் மழையாய் மாறித் தீயை அணைத்தார். காலரூபியோ பிரளயகால சூறைக் காற்றாகி உலகெலாம் நிலைகுலையச் செய்தான். கருணாகரனோ பெருமலையாய் நின்று சூறைக் காற்றைத் தடுத்தார். விக்கினன் ஆயிரம் ஆயிரம் வஜ்ர உளிகளாய் மாறிப் பெருமலையைப் பொளிந்தான். விரைவில் போரை முடிக்கக் கருதிய பிள்ளை யார் சிறந்ததொரு வேலெடுத்து 'விக்கினனை வென்றுவா' என்று கூறி விடுத்தார். வேலாயுதம் விக்கினன் ஆயுதங்களை யெல்லாம் பொடியாக்கியது; அவன் செய்யும் மாயையை எல்லாம் மாற்றியது; அவன் ஆற்றலைச் சிதைத்து அவன் மார்பு நோக்கிப் பாய்ந்தது. காலரூபி அச்சமுற்று பல இடங்களுக்கும் ஓடி மறைந்தான். வேலோ தொடர்ந்தது. அவன் பிராணபயம் தோன்ற விரைந்து ஓடி வந்து விநாயகர் கழல்பற்றிச் 'சரணம் சரணம் சரணம்' என மும்முறை அலறினான். 'என்னைக் காத்தருள வேண்டும்' எனக் கதறினான். 'சரணம்' என்றால் 'அரண்' ஆகும் எம்பிரான் சினம் நீங்கி வேலைத் தடுத்துக் கருணை செய்தார்.

தன்னடியில் வீழ்ந்து தளர்ந்து நின்ற விக்கினனை எழுப்பி, "எச்செயலைப் புரியு முன்னும் எம்மைத் துதித்துத் தொடங்கு வோர்க்கு எத்தகைய விக்கினமும் இனிச் செய்யாதே" என அறிவுரை கூறி ஆட்கொண்டார். எம்பெருமான் பெருமையை உணர்ந்த விக்கினன் அவரைப் பலபடியாய்ப் போற்றி "தங்கள் பெயருடன் என் பெயரையும் இணைத்து என்றென்றும் என்னை எல்லாரும் நினைவிற் கொள்ளுமாறு செய்ய வேண்டும்" என வேண்டினான். அன்று முதல் விநாயகர் விக்கின விநாயகர் ஆனார்.

விநாயகரின் பெருமையெல்லாம் கேள்வியுற்ற வரேணிய ராஜன் தன் மனைவி புஷ்பகாவுடன் கானகம் போந்து பராசுவ முனிவரின் பர்ணசாலை அடைந்து பிள்ளையாரை வணங்கி பூஜை முதலிய இயற்றிப் பெரும்பேறு அடைந்தான். பராசுவ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முனிவருக்கும் வீரியவற்கலைக்கும் பேரருள் செய்து தம்முலகம் அளித்தார்.

பின்னர் பிள்ளையார் தம் உலகுக்கு எழுந்தருளி யாவருக்கும் அருள் கூர்ந்தார்.

32. முந்திய மயூரேச விநாயகர்

தேவர்களும் அசுரர்களும்

ஏதோ ஒரு கல்பத்தில் அறிதுயிலில் அமர்ந்திருக்கும் அச்சுதனின் திருவுந்திக் கமலத்தில் நான்முகன் தோன்றினான். ஆதியும் அந்தமும் அற்ற வேதக் கருப்பொருளையெல்லாம் அந்திவண்ணப் பெருமான் நான்முகனுக்கு உபதேசம் செய்தார். அவற்றை யெல்லாம் நன்கு கிரஹித்துக் கொண்ட பிரம்மா சிருஷ்டித் தொழிலைத் தொடங்கினார். சரப்பொருள்கள் அசரப் பொருள்கள் உயிருள்ள பொருள்கள் உயிரற்ற பொருள்கள் ரூபமுள்ளவை ரூபமற்றவை எனப் பல்வகைப் பொருள்களையும் விதிப்படிச் சமைத்தார். நாள்தோறும் வேத வந்தனம் செய்து வந்தார். பிரம்ம தேவனுடைய படைப்பில் தோன்றிய உயர்நிலை உயிர்களில் சில ஸத்துவ குணம் மிகுந்தும் சில ரஜோகுணம் மிகுந்தும் சில தாமஸ குணம் மிகுந்தும் அக்குணங்கள் பல்வேறு அளவுகளில் ஒன்றோடொன்று கலந்தும் விளங்கின. ஸத்துவ குணம் மிகுந்தவர் தேவர்கள் எனவும் தாமஸ குணம் மிகுந்தவர் அசுரர்கள் எனவும் வழங்கப்பட்டனர். முக்குணங்களும் ஒன்றோடொன்று பல அளவுகளில் கலந்துள்ளனவே அன்றித் தனியான குணமுள்ள பொருள் எதுவும் இல்லை.

இந்த தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் தொடக்க முதலே பகைமை உண்டாயிற்று. வேத வேதாங்கங்கள் யாவருக்கும் பொதுவாயினும் தேவர்கள் அதனைச் சிறப்பாகப் போற்றி வந்தனர். அசுரர்கள் அதனை அவ்வளவு சிறப்பாகப் போற்றுவதில்லை. மேலும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஏதேனும் ஒரு காரணம் பற்றி அடிக்கடி சண்டையேற்பட்டது. அப்படி யேற்பட்ட சண்டைகள் ஒன்றில் அசுரர்கள் தேவர்களைப் படுதோல்வி அடையுமாறு செய்தனர், தேவர்கள் ஆற்றல் முழுவதும் அழிந்துவிட்டது. பெருந்தோல்வியைத் தழுவிய தேவர்கள் ஓரிடத்தில் ஒன்றாகக் கூடி என்ன செய்வதென்று யோசித்தனர். இறுதியாக வேத வாக்யங்களையே தியானத்தால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வலுவாக்கி பிரம்மாஸ்திரத்துடன் பிணைத்து அசுரர்கள்மீது ஏவவேண்டும் என்று தீர்மானித்தனர். அவ்வாறே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து மீண்டும் போர் புரியத் தலைப்பட்டனர். அசுரர்கள் பெருவீரம் காட்டிப் போர் புரிந்த போதிலும் தேவர்கள் புதிதாகத் தோற்றுவித்த அஸ்திரபலத்திற்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அசுரப் படைகள் சிதறின. தத்தம் படைக் கருவிகளைக் களத்திலேயே போட்டுவிட்டு அசுரர்கள் அஞ்சி ஓடினர்.

அஞ்சி ஓடிய அசுரர்கள் சங்காசுரன் கமலாசுரன் என்ற இரு சகோதரர்களைச் சரணடைந்தனர். அவ்விருவரும் மிக்க பலமும் மாயையும் கொண்டவர்கள். சங்காசுரனைக் காட்டிலும் கமலாசுரன் அதிமாயை உடையவன். அசுரர்களின் ஓலத்தைக் கேட்ட அவர்கள் அசுரர்களுக்கு உதவ எண்ணினர். நீண்ட விவாதம் ஆராய்ச்சிகளுக்குப் பின்னர் தேவர்களுக்கு அத்தகைய அஸ்திரபலம் எங்கிருந்து கிடைத்தது என்பதைக் கண்டறிந்தனர். அவர்களுடைய அஸ்திரபலத்துக்குக் காரணமாக இருந்த வேதங்களை மறைத்து விட்டால் அவர்களால் அசுரர்களை வெல்ல முடியாது எனக் கண்டறிந்தனர். ஆகவே சங்காசுரன் தன் தம்பியாகிய கமலாசுரனை நோக்கி, ''பிரம்ம தேவன் வேதம் முழுவதையும் எப்போதும் தன் எதிரில் மிக்க பாதுகாப் புடன் வைத்திருக்கிறான். அதுவே மூலமான சுவடி, வெளியில் பலரும் கற்றிருப்பவை அவ்வெல்லையில்லா வேதத்தின் சிறு சிறு பகுதிகளே. ஆகையால் மூலச் சுவடியை எடுத்து மறைத்து விட்டால் மற்றவை தானே அழிந்துவிடும். தேவரும் முனிவரும் வலி குன்றுவர். அப்போது அசுரர்களின் பலம் ஓங்கும். தேவர்களை வெல்வது எளிதாகும். ஆகையால் எவ்வாறேனும் அவ்வேதச் சுவடிகளைக் கைப்பற்றிக் கொண்டு வரவேண்டும் எனக் கூறினான்.

வேதச் சுவடிகளைக் களவாடல்

தமையன் கட்டளையைச் சிரமேற் கொண்ட தம்பி கமலா சுரன் சூக்ஷ்ம உருவம் கொண்டு பிரம்மலோகம் சென்றான். பலத்த காவலுக்கிடையே தனியொரு பூஜையிடத்தில் வேதச் சுவடிகள் இருப்பதைப் பார்த்தான். அவற்றின் எதிரில் நான் முகன் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் ஆழ்ந்திருந்தார். எவர் கண்ணிலும் படாமல் அவ்விடத்தை அடைந்த கமலாசுரன் வேதச்சுவடிகளை யாதும் சுவடுபடாமல் எடுத்து வந்து தன் தமையனிடம் ஒப்படைத்தான். சங்காசுரன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவற்றையெல்லாம் கடலுக்கடியில் கொண்டுபோய் மிகப் பத்திரமாக வைத்துக் காவலும் இட்டான். அனந்தமான வேதம் அருஞ்சிறையில் உறங்கியது. தியானத்திலிருந்து மீண்ட பிரமன் தன் எதிரில் வேதச் சுவடிகளைக் காணாமல் திடுக் கிட்டார்.

பிறகு ஞானதிருஷ்டியால் வேதச் சுவடிகள் மறைந்த காரணத்தை உணர்ந்தார். அவை தற்போது எங்கே உள்ளன என்பதையும் உணர்ந்தார். கட்டுக்காவல் மிகுந்த கடலுக்கடியில் சென்று சங்காசுரனை மீறி அவற்றை எவ்வாறு எடுத்து வருவது? ஒன்றும் புரியாமல் தவித்தார். பிறகு திருமாலைக் கண்டு ஒரு வழி காண விழைந்து திருமால் இருப்பிடம் சென்றார். திருமாலோ பாலாழியுள்புக்கு பன்னகவரசனைப் பாயாகக் கொண்டு யோக நித்திரையில் ஆழ்ந்திருந்தார். அவரை அப்போது எழுப்புவது இயலாத செயல் என்றுணர்ந்து அவ்விடத்தினின்றும் நீங்கிக் கயிலை மலையை அடைந்தார். கயிலையங்கிரி வாசன் கமலத்தோன் வந்தது கண்டு வர வேற்றார். நான்முகன் சிவபிரானைப் பார்த்து, "சிருஷ்டிக்கு வித்தாய் விளங்கும் வேதச் சுவடிகளையெல்லாம் கமலாசுரன் தன் மாயையால் களவாடிச் சென்றான். அவற்றை எல்லாம் கடலுக்கு அடியில் பெருத்த காவலுக்கிடையே வைத்துள்ளான். அவையின்றி மேலும் சிருஷ்டி செய்வது முடியாது. மேலும் உலக நியதிகள் ஸ்தம்பித்து விடும். குழப்பங்கள் மிகும். துன்பங்கள் மிகும். தீவினைகள் மிகும். இதற்கு யான் என் செய்வேன்? சங்காசுரனோடு என்னால் போரிட முடியாது. தாங்கள்தான் அவனை அழித்து வேத கிரந்தங்கள் யாவற்றையும் மீட்டுத் தர வேண்டும்" என்று வேண்டினார். சிவபிரான் நான்முகனை நோக்கி, "பன்னகப் பாயில் படுத்துறங்கும் பரந்தாமன் ஒருநாள் யோக நிலை நீங்கி விழித்தெழுவார். அப்போது அவரிடம் விண்ணப்பம் செய்யலாம். அவரும் சங்காசுரனோடு போரிட்டு வேத சாகைகள் அனைத்தையும் மீட்டுத் தருவார்" என்றார்.

விநாயகர் அருள் வேண்டல்

நான்முகன் சிவபிரானை நோக்கி, "திருமால் துயிலுணர்வது எப்போது? நமக்கு விடிவு ஏற்படுவது எப்போது? அதுவரை வேத பூஜை நிற்பதா? சிருஷ்டித் தொழில் நிற்பதா? குழப்பம் நிலைபெறுவதா? என் செய்வது?" எனக் கூறிக் கவன்றார். அப்போது சிவபிரான் நான்முகனை நோக்கி, "வேதச் சுவடி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

களை ஒருவரும் அறியாமல் எடுத்துச் சென்றவன் சங்காசுரன் தம்பி கமலாசுரன். அவற்றைச் சங்காசுரன் காத்து வருகிறான். கமலாசுரன் மிகமிக வலிமை வாய்ந்தவன். அவனை வெல்லுதல் விநாயக மூர்த்தி ஒருவருக்கு மட்டிலுமே சாத்தியம். ஆகையால் விநாயக மூர்த்தியைத் தஞ்சமடைந்து அவரருள் பெறுக.'' எனக் கூறினார். நான்முகனும் தம்முலகை அடைந்து விநாயகப் பெருமானைத் தம் மனத்தில் நிறுத்தி தியானம் செய்தார். பிறகு ஏகாக்ஷர மந்திரத்தை ஜபித்துத் தவம் செய்தார். தவம் முற்றிய நிலையில் விநாயகப் பெருமான் பிரம்மதேவனுக்கு வெளிப்பட்டுத் தோன்றினார். ''வேதங்களைத் திருடிச் சென்ற அசுரர்களைக் கொன்று வேதங்கள் உலகில் நிலைபெறுமாறு செய்வோம்'' என அருளி மறைந்தார்.

மல்லாலர்

பிறகு கணேசப் பெருமான் வேதியர் வடிவம் தாங்கி ஏராள மான சீடர்கள் பின்தொடர சுந்தர வனத்திற்கு வந்தார். அவ் வனத்தில் கௌதமர் முதலான பல முனிவர்கள் தனித்தனியே ஆசிரமங்களில் தங்கி யோகமும் நிஷ்டையும் பயின்று வந்தனர். வேதம் களவாடப்பட்ட நாளிலிருந்து வேத நிந்தனையும் தெய்வ நிந்தனையும் பெருகி நற்செயல்கள் அருகி வருவதை அம்முனிவர்கள் கவலையுடன் கவனித்து வந்தனர். அந்நிலையை மாற்ற என்ன செய்வது என யோசித்துக்கொண்டிருந்த நேரத்தில் அங்கு விநாயகப் பெருமான் தோன்றினார். அவருடைய முக வொளியையும் தோற்றப் பொலிவையும் அவரைச் சுற்றி வரும் சீடர் குழுவையும் கண்டு வியந்த அவர்கள் அவரை அன்புடன் வரவேற்று, ''தங்களைக் காணும்போது வேத முதல்வனைக் காணும் உணர்ச்சி தோன்றுகிறது; தங்கள் வரவு நல்வரவாகுக; தாங்கள் இவ்விடம் வருவதற்குரிய நிமித்தமும் ஏதுவும் யாவை?'' என வினவினர்.

வந்த வேதியர் அவர்களை நோக்கி, ''நானிலத்திற்கு நன்மை பயக்கும் நால்வேதமும் மறைந்ததால் நவையுற்ற மக்களும் தேவரும் வேதநெறி மறந்து புன்னெறி பற்றி மயங்கி நிற்கின்றனர். அவர்களுக்கு உதவும் வண்ணமே இப்போது நாம் இங்கே வந்துள்ளோம். வேதாகம புராணங்கள் அனைத்தும் எம்மிடம் உள்ளன. அச்சுவடிகளே இவை. இவற்றைப் பெற்றுக் கொண்டு முன்போலவே நற்கருமங்கள் யாவற்றையும் நவையறச் செய்வீர் களாக; எம்மை மல்லாலர் என அழைப்பர்; எமக்கும் இங்கே தவம்புரிய ஓரிடம் தந்து துயரமும் அகன்று வாழ்வீராக'' என்றார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மல்லாலரும் அவருடன் போந்த அளவற்ற சீடர்களும் அங்கே தங்கி வேத கோஷம் செய்தனர்; வேத விசாரணை செய்தனர்; மற்ற முனிவர்களுக்கு ஏற்பட்ட ஐயங்களைப் போக்கினர். வேத நெறி தழைத்தோங்கத் தொடங்கியது. முனிவர்கள் உலகின் பல திசைகளுக்கும் சென்று மக்களுக்கு உண்மைப் பொருளை உபதேசித்தனர். வேதம் மறைந்த செய்தி வெறுங்கதை ஆயிற்று. அவற்றைக் கண்ட கமலாசுரன் தன் தமையனை அணுகி, "சுந்தர வனத்தில் ஓர் அந்தணர் மறைந்த வேதங்களனைத்தையும் மீண்டும் எழுதி யாவருக்கும் கற்பித்து வருகிறார். எங்கிருந்து அதனைப் பெற்றார் என்பது தெரியவில்லை. அதனால் யாக யக்ஞங்கள் குறைவின்றி நடை பெறுகின்றன, தேவர்கள் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். நாம் வேதங்களை எடுத்துக்கொண்டு வந்தும் பயனில்லையே" என்றான்.

கமலாசுரன் தோல்வி

சங்காசுரன் தன் தம்பியை நோக்கி, "மும்மூர்த்திகளும் நமக்கு இணையாக மாட்டார்கள். அங்ஙனமிருக்கப் புல்பிடித்து வாழும் ஓர் அந்தணனுக்கா நாம் இளைத்தவர்கள். நீ உடனே புறப்பட்டுச் சுந்தர வனம் சென்று அவ்வந்தணனைக் கொன்று அவனிடமிருக்கும் வேதச் சுவடிகளைக் கொணர்க" என்றான்.

கமலாசுரன் தன் நால்வகைப் படைகளையும் திரட்டிக் கொண்டு சுந்தர வனம் நோக்கிப் புறப்பட்டான். அப்போது சுந்தரவனத்தில், "மல்லாலரையும் உங்களையும் மாய்க்க வருகிறான் கமலாசுரன்" என்றொரு சொல் வானிற் கேட்டது. அதனைக் கேட்ட முனிவர்கள் நடுங்கினார்கள்; கமலாசுரன் தங்களை எல்லாம் ஒரு நொடியில் அழித்துவிடுவான் எனக் கலங்கினார்கள்; செய்வதறியாது மல்லாலரை அண்மிச் சரண டைந்தார்கள். மல்லாலர் அவர்களைத் தேற்றி, "என்னைச் சாதாரணமான ஓர் அந்தணன் என்று மாத்திரமே நீங்கள் அறிவீர்கள் — வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பதை உணருங்கள்; நீங்கள் மனம் குன்றாமல் வேதநெறி பிறழாமல் உங்களுடைய கர்மானுஷ்டானங்களைச் செய்து கொண்டிருங்கள்; கவலையை ஒழியுங்கள்" எனக் கூறித் தம் சுயவுருவுடன் அவர்களுக்குத் தரிசனம் தந்தருளினார். விநாயகப் பெருமானின் திருவுருவைக் கண்ட அவர்கள் அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர்; ஆனந்த பரவசமடைந்தனர். எம்பெரு மானும் முன்போல் அந்தணர் உருவம் கொண்டார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸங்கல்ப மாத்திரத்தால் கணபதி நாற்படைகளும் தோற்று வித்தார். தானும் ஸர்வாயுத தரராய்க் கமலாசுரன் படையை எதிர்நோக்கிச் சென்றார். பெரும்போர் நிகழ்ந்தது. மல்லுக்கு மல், வாளுக்கு வாள், பாணத்திற்கு பாணம், அஸ்திரத்துக்கு அஸ்திரம் என்று அவர்கள் போர் புரிந்தனர். கமலாசுரன் ஏவிய பாசுபதாஸ்திரமும் பயனற்றுவிட்டது. கமலாசுரன் கலங்கிப் போர்க்களத்தினின்றும் திடீரென்று மறைந்து விட்டான். மறைந்த கமலாசுரன் தன் தமையனான சங்காசுரனைக் கண்டு நிகழ்ந்ததைக் கூற அவன் கமலாசுரனுடைய வரபலத்தை நினைவூட்டி மீண்டும் போருக்குச் சென்று வெல்லுமாறு கூறினான்.

மயூரேசர்

மறுநாளும் போர் நிகழும் என்பதை மல்லாலர் உணர்ந்தார்; சுந்தரவனத்து முனிவர்களை நோக்கி, "நாளை நிச்சயம் மீண்டும் போர் நிகழும். அப்போரில் கமலாசுரனைக் கொன்று அசுரர் களை வெல்லத் தக்கதொரு தந்திரத்தை நீங்கள் சொல்ல வேண்டும்'' என்றார். அப்போது கார்க்கி என்ற முனிவர், "கமலாசுரன் பெருந்தேர் மீதேறி நின்று போர் புரிவான்; தாங்களோ தரையில் நின்று போர் புரிய வேண்டியிருக்கிறது. தாங்களும் ஒரு வாகனத்திலேறிப் போரிட்டு அவனை வதைத்தல் சிறந்ததாகும்'' என்றார். யாவரும் ஆலோசனை செய்து பிறகு ஒரு சிறந்த வேள்வி இயற்றத் தொடங்கினர். விநாயகப் பெருமான் சித்தி புத்திகளோடு சேர்ந்திருந்து வேள்வியை முடித்துப் பூர்ணாகுதி செய்தார். பூர்ணாகுதி முடிந்ததும் அவ்வேள்விக் குண்டத்தி னின்றும் மயிலொன்று தோன்றியது. அது கடலினின்றும் வெளிப்பட்ட மைநாக மலைபோல் காணப்பட்டது: விநாயக மூர்த்தி அதன்மேல் ஏறியமர்ந்தார். தேவர்கள் இன்னியம் முழங்கினர்; கீதம் பாடினர்; மலர்மாரி பொழிந்தனர். முனிவர்கள் அவரை மயூரேசர் எனக் கொண்டாடினர்.

இலாபன்

மறுநாள் காலையில் கமலாசுரன் பெருஞ்சேனையோடு வரும் ஒலிகேட்டது. மயூரேசர் போருக்குப் புறப்படுமுன் புத்தி தேவியார் எம்பெருமானை வணங்கித் தான் போர்முனைக்குச் செல்ல அனுமதிக்குமாறு கேட்டாள். மயூரேசரும் வாழ்த்தி அனுப்பினார். புத்தி தேவியார் தன் சக்தியால் ஏராளமான பூத கணங்களைத் தோற்றுவித்தார். போர் தொடங்கியது. முதலில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பூதகணங்கள் வென்ற போதிலும் நேரம் ஆக ஆக அவை அஞ்சத் தொடங்கின. அதனைக் கண்ட புத்தி தேவியார் வெகுண்டார். அக்கோபத்தீயினின்றும் ஒரு பெரு வீரன் தோன்றினான். அவனுடைய ஆற்றல் அளவிடற்கரியதாய் இருந்தது. அவன் தன் தாயாகிய புத்தி தேவியைப் பணிந்தெழுந்தான். பிறகு தன் தந்தையையும் பணிந்து ஆசி பெற விரும்பினான். புத்தி தேவியார் அவனிடம், ''அருகில் உள்ள சுந்தரவனத்தில் முனிவர்கள் புடைசூழ மயூராரூடராய் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானே நின் தந்தை; நீ சென்று அவரடி பணிந்து ஆசி பெற்று வருக'' என்றார். அம்மாவீரனும் அரை நொடியில் அவ்விடம் சென்று ஆனை முகத்தானைக் கண்ணுற்றான். அவனைக் கண்ட முனிவர்கள் அஞ்சி ஒடுங்கினர். விநாயகப் பெருமான் அவர்களுடைய அச்சத்தைப் போக்கி, ''இவ்வீரன் எமக்கு மகன்; இவனால் நீங்களும் உலகமும் அடையப் போகும் லாபம் ஏராளம்; ஆகையால் இவனுக்கு இலாபன் என்றே பெயரிடுவோம்'' எனக் கூறி இலாபனை ஆசீர்வதித்துப் போர்களத்திற்கு அனுப்பினார்.

இலாபனும் கமலாசுரனும் ஆறுநாட்கள் வெற்றி தோல்வியின்றிப் போரிட்டனர். இறுதியில் இலாபனை எதிர்த்துப் போர்புரிய இயலாத கமலாசுரன் மாயையால் மறைந்தான். அவன் மறைந்தபின் போர்க்களத்தை நோக்கிய இலாபன் திடுக்கிட்டான். விநாயகர் உட்பட வீரர் யாவரும் மோஹனாஸ்திரத்தால் மயங்கிக் கீழே வீழ்ந்து கிடந்தனர்; உடனே ஞானாஸ்திரப் பிரயோகம் செய்து யாவரையும் மீண்டும் உயிர்ப்பித்தான்; ஆனால் விநாயகர் மாத்திரம் எழவில்லை. அதுகண்ட இலாபன் ''யான் இருக்க எந்தை விழுந்து கிடத்தல் அழகோ! யானும் இன்னே எரியுட் புகுவேன்'' என எரிமூட்டினான். அவன் எரியில் விழ முயன்றபோது விநாயகப் பெருமான் விரைந்தெழுந்து அவன் கையைப் பிடித்துத் தடுத்து, ''நின் அன்பை உலகோர் உணரவே மயங்கியது போலக் கிடந்தேன்'' எனக்கூறி மீண்டும் அவனை வாழ்த்தினார்.

கமலாசுரன் வதம்

தோற்றோடி மறைந்த கமலாசுரன் மீண்டும் புதிய வலிமை பெற்றுப் போருக்கு வந்தான். மயூரேசர் தாமே போர்க்களம் சென்றார். அழகிய மயிலின் மீதேறி அனைவரும் போற்றக் களத்தில் நின்றார். கமலாசுரன் பல்வகைப் போர்களும் புரிந்தான். விநாயகர் தண்டாயுதத்தால் அவன் மார்பில் ஓங்கி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அடித்தார்; இரத்தம் பெருக்கெடுத்தது; கீழே விழுந்த ஒவ்வொரு துளி இரத்தத்திலிருந்தும் ஒவ்வொரு வீரன் தோன்றினான். அசுர வீரர்களின் எண்ணிக்கை மிக அதிகமாயிற்று. இலாபன் தன் அன்னையர்களைச் சிந்தித்தான். இருவரும் போக்களம் வந்தனர். ஏராளமான பூத கணங்களை உற்பத்தி செய்தனர். அப்பூத கணங்கள் அவ்வரக்க வீரர்களின் இரத்தம் எங்கும் சிந்தாமல் அப்படியே அவர்களை விழுங்கின. அசுரர் அனைவரும் அழிந்தனர்.

கோபம் கொண்ட கமலாசுரன் குதிரை மீதேறி விநாயகரை நோக்கி வந்து இரும்புலக்கை கொண்டு தாக்கினான். தம் வச்சிரப் படையால் அதனை விலக்கிய விநாயகர் சூலப்படை எடுத்து அவனைக் குத்தினார். பெருகிய இரத்தம் எதுவும் சிந்தாமல் பூதங்கள் உறிஞ்சின. கமலாசுரன் மாண்டான். அவன் எல்லாம் வல்ல இறைவனாகிய விநாயகப் பெருமான் கையால் மடிந்த தால் முத்தி பெற்றான்.

தேவர்களும் முனிவர்களும் நான்முகனும் திருமாலும் இந்திரனும் மற்றோரும் விநாயக மூர்த்தியைப் போற்றி வழி பட்டனர்.

33. பிந்திய மயூரேச விநாயகர்

மைதல தேசம் என்றோர் தேசம் இருந்தது. அதன் தலை நகரம் ஸ்ரீகண்டபுரம். ஒரு காலத்தில் அத்தேசத்தை ஆண்டுவந்த சக்ரபாணி என்ற அரசன் நீதிமான்; கருணையுள்ளவன்; தெய்வ பக்தி உள்ளவன்; தான தருமங்கள் பலவும் செய்து வேள்வி யியற்றி விரதம் முடித்துப் பெருமை கொண்டவன். அவன் மனைவி பெயர் உக்ரை. உக்ரை கணவன் சொற்கடவாக் காரிகை. அவர்கள் இல்லறப் பயனாக அவர்களுக்கு குழந்தைகள் பிறந்ததேனும் அவை உடனுக்குடனே மரித்தன. அரசியும் அரசனும் மனம் நொந்தனர். அரசுக்கட்டில் அவர்களை உறுத்தியது. அரசபோகம் அதிருப்தியை விளைவித்தது. அதனால் அவர்கள் நாட்டைத் துறந்து காட்டிடை உறைந்து தவத்தில் நிலைபேறடைய மனத்தில் எண்ணினர். அதற்கேற்பத் தம் மந்திரிகள் முதலானோரை அழைத்து நாட்டுப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைப்பது பற்றி ஆலோசனை நடத்தினார்கள்.

அச்சமயம் சவுனக முனிவர் அரண்மனைக்கு வந்தார். முனிபுங்கவரைக் கண்ட சக்ரபாணி முன்னே சென்று அவரை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எதிர்கொண்டழைத்து வந்து அழகியதோர் ஆசனத்தில் அமர்த்தி அர்க்கியம் முதலிய சோடசோபசாரங்களும் செய்து வணங்கினான். மனமகிழ்வெய்திய மாமுனிவர் அரசனை நோக்கி, "புதல்வர்ப் பெறல் வேண்டிக் கானகம் சென்று கடுந்தவம் புரிய விரும்பினை போலும். நீ அடவி சென்று அல்லலுற வேண்டா. விதிப்படி சூரிய நமஸ்காரமும் சூரியநாராயண பூஜையும் செய்து விரதமுடிப்பின் புத்திரப் பேறு அடைவாய்" என அறிவுறுத்தி அவற்றை இயற்றும் முறைகளையும் அடைவாகக் கூறிப் புறப்பட்டுச் சென்றார். அருமறையோன் அறிவுரை கேட்ட அரச தம்பதியர் விம்மிதம் எய்தினர்; அமைச்சர் முதலானோர் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவு இல்லை.

சக்ரபாணியும் உக்ரையும் ஒரு நல்ல நாளில் விரதத்தைத் தொடங்கி விதி வழுவாமல் உடல் அசதி நோக்காமல் இயற்றி வந்தனர். ஒரு மாதம் முடியும் தறுவாயில் ஒருநாள் உக்ரை எழுகதிர்ச் செல்வனை இன்பக் கனவிற் கண்டு பேரருள் பெற்றாள். கனவென உற்றதைக் கணவனிடம் கூற அவனும் மகிழ்ந்து விரதத்தை முறைப்படி முடித்து அரசப் பொறுப்புகளைக் கவனிக்கத் தொடங்கினான்.

உக்ரையும் கருக்கொண்டாள்; நந்தவனங்களில் விளையாடியும் பூம்பொய்கைகளில் குடைந்தாடியும் பல இடங்களுக்கும் சென்று அதிசயங்கள் பல கண்டு மனமகிழ்ந்தும் பொழுது போக்கினாள். அவளுடன் எப்போதும் தோழியரும் தாதியரும் இருந்தனர். ஒரு நாள் உக்ரை சிந்து நதிக்கரையில் தன் தோழியருடன் இனிது விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது அவளுக்கு வயாவருத்தம் தோன்றியது. ஆங்கே சிந்து நதிக் கரையில் உக்ரை ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அக் குழந்தை செக்கச்செவேரென்ற முடிச்சடையும் திரிநேத்திரமும் தீயோனெனச் செவ்வொளி வீசும் திருமேனியும் ஒரு கரத்திற் சூலமும் மற்றொரு கரத்தில் சக்ராயுதமும் ஏந்தி இடிபோல் முழக்கமிட்டுத் தோன்றியது. அக்குழந்தையின் தோற்றத்தைக் கண்ட தோழியர் அரக்கனோ என அஞ்சி ஓடிவிட்டனர். அதன் குரலைக் கேட்ட தாதியர் அது ஒரு குறும்பூதமோ என பீதியடைந்து மறைந்தோடினா. கதிரவன் அருளால் பெற்ற கான்முளையும் தானுமாய் சிந்து நதிக்கரையில் தன்னந் தனியளாய்க் கிடந்தாள் உக்ரை. அதுகண்ட வருணன் ஆங்கோர் அந்தணனாய்த் தோன்றி மெல்லியலாள் மெலிவு தீர்த்து மனித இயல்புக்கு மாறுபட்ட குழந்தையைத் தன்னிரு கரத்தாலும் தாங்கி எடுத்துக்கொண்டு உக்ரையோடு அரண்மனையை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அடைந்து அரசனை நோக்கி, ''சிந்து நதிக்கரையில் தோன்றிய இவனுக்குச் சிந்து என்றே பெயர் வழங்குக'' எனக் கூறி ஆசீர் வதித்துச் சென்றார்.

குழந்தை சிந்து சுக்ல பட்சத்துச் சந்திரனைப் போல நன்கு வளர்ந்து வந்தான்; இயல்பாகவே மனவலிமையும் உடல் வலிமையும் மிக்கிருந்தான். அவன் தன்மைகளை அளந்தறிந்த அசுர குருவான சுக்ராசாரியர் அவனிடம் அதிக அன்புகொண்டு பல மந்த்ரோபதேசங்கள் செய்தார். அவற்றின் பயனாக அவன் மேலும் அதிக வலிமை பெற்று எடுத்த செயலை முடிக்கும் உரன் கொண்டவனானான். இதனைக் கண்ட சுக்ராசாரியர் அவனுக்கு சிவபெருமானுக்குரிய சிறந்த மந்திரங்கள் பலவற்றை உபதேசம் செய்து சிவபெருமானைக் குறித்துச் சீரிய தவம் செய்யும்படி அறிவுரை கூறினார். அவ்வறிவுரைகளை அவ்வாறே ஏற்றுக்கொண்ட சிந்து கைலையங்கிரிவாசனைக் குறித்துக் கடுந்தவம் செய்தான். அவன் செய்த தவம் பலிதமாயிற்று. சிவபிரான் அவனெதிரில் தோன்றி அவன் விரும்பிய வரங்களை எல்லாம் அளித்தார். அயன் அரி அரன் முதலிய எத்தேவர் களாலும் அழியாத வரம் அவன் பெற்றான். பின்னர்த் தன் தந்தையாரைக் காண ஸ்ரீகண்ட நகரம் சென்றான். அவன் தந்தை மிகவும் மனம் மகிழ்ந்தான். மகனுக்கு மகுடாபிஷேகம் செய்து நாட்டை அவனிடம் ஒப்படைத்தான். மேலும் அவனுக்கேற்ற அழகிற் சிறந்த நங்கையைத் திருமணம் செய்வித்தான். அவர் களுக்கு தர்மன், அதர்மன் என்ற இரு புதல்வர்கள் தோன்றினர்.

சிந்து அரசனாயினான். அவன் பேரரசனாக வேண்டுமென விருப்பம் கொண்டான். ஆகையால் அண்டை நாடுகள் மீது படையெடுத்து அவ்வரசர்களை வென்று அல்லது கொன்று அவற்றைத் தனக்குத் திறை செலுத்தும் நாடாக்கினான். தன் படையை விரிவாக்கிப் பெருவீரர்களைத் தளபதிகளாக்கினான். தனக்கு அடங்காத தானவர்களையும் அசுரர்களையும் போரிட்டு அடக்கினான். முதலில் சிந்துவின் வலிமையை உணராதிருந்த அசுரர்கள் அவன் வலிமையைக் கண்டபின் அவனையே தங்கள் தலைவனாகக் கொண்டார்கள். இவ்வாறு பூவுலகில் தன் தலைமையை நிலைநாட்டிய சிந்துவின் கவனம் விண்ணுலகை நோக்கியது. தானவப் படையுடன் தேவலோகம் நோக்கிப் புறப்பட்டான். தேவர் தலைவன் தன் பெருஞ்சேனையோடு சிந்துவை எதிர்த்துப் போரிட்டான். ஆனால் அவனெதிரில் தேவப்படைகள் சிதறுண்டன. சிந்துவுக்கு ஆற்றாத இந்திரன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாயையால் மறைந்து ஓடி ஒளிந்தான். அமராவதியில் அசுரத் தலைவனை அரசனாய் அமர்த்தி நாடு திரும்பினான் சிந்து.

இந்திரன் மீண்டும் திருமாலின் . உதவியுடன் அசுரத் தலைவனோடு போரிட்டான். அதுகேட்ட சிந்து விரைந்து அமராவதிக்கு வந்தான். சிந்துவைப் போரில் வெல்ல முடியாது என உணர்ந்த திருமால் அவனுடன் இதமாகப் பேசி இந்திராதி தேவர்களின் இடுக்கண் துடைக்க எண்ணினார். அதனால் அவனை நோக்கி, "அசுரகுலத் தோன்றலே, உன்னுடைய வீரமும் வலிமையும் கண்டு மிகவும் மெச்சுகிறோம். உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்க" என்றார். அச்சுதனின் அத் தந்திரத்தைப் புரிந்துகொண்ட சிந்து வணங்குவான் போல நின்று, "பரந்தாம, நீயும் மற்றுமுள்ள இந்திராதி தேவர்களும் எம் நகரத்திற்கு வந்து எம் அரண்மனையில் யாம் இடும் பணிகளைச் செய்துவர வேண்டும்" என வேண்டினான். தான் விரித்த வலையில் தானே அகப்பட்டுக் கொண்டாற்போல திருமாலும் இந்திரனும் தேவர்களும் சிந்துவின் அரண்மனைச் சேவகர்கள் ஆயினர். நீண்டநாட்கள் இவ்வாறு துன்புற்று ஒரு நாள் பிரஹஸ்பதியைப் பார்த்து "இத்துன்பத்திற்கு ஒரு முடிவே இல்லையோ?" என அழுது ஒரு வழி கூறுமாறு பிரார்த்தித் தார்கள். குருபகவான் அவர்களை நோக்கி, "சிவபிரானிடம் வரம் பெற்ற சிந்துவை வெல்லல் சிவகுமாரனான கணபதியை யல்லால் வேறொருவராலும் இயலாது. ஆகையால் அவரைச் சரணடையுங்கள்" என்றார். அதுமுதல் தேவர்கள் விநாயகரை எப்போதும் தியானம் செய்துவந்தனர்; விநாயக சதுர்த்தி விரதத்தை மானசீகமாகச் செய்தனர். விநாயகப் பெருமானும் அவர்களுக்குக் காட்சியளித்து விரைவில் அவர்கள் துயர் தீர்ப்பதாய்க் கூறியருளினார்.

இதற்கிடையே திரிசந்தி க்ஷேத்ரத்தில் சிந்துவுக்கு அஞ்சித் தம் மெய்யுரு மறைத்துப் பல தபோதனர் தவம் செய்து வந்தனர். அவர்கள் சிவபிரானைக் குறித்துத் தவம் செய்ய, சிவபிரானும் அவர்கள் முன் தோன்றினார். முனிவர்கள் தம் குறைகளை எல்லாம் அவரிடம் எடுத்துக் கூறி அவரைத் தங்களுடனே இருந்து காப்பாற்ற வேண்டும் என வேண்டினர். சிவபிரானும் அவ்வாறே அபயம் அளித்தார். அழகிய ஒரு ஆலயம் அமைத்தனர் அருந்தவத்தோர். அதில் அம்மையப்பனாக எழுந்தருளிய எம்பிரான் அம்பிகையைப் பார்த்துப் பன்னிரண்டு ஆண்டுக்காலம் ஏகாக்ஷர மந்திர ஜபத்தால் விநாயகப் பெரு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மானைத் தியானித்து வந்தால் விநாயகரே உன்னிடம் குமாரனாக அவதரிப்பார் என்றருளித் தாம் நிஷ்டையில் அமர்ந்தார்.

அம்பிகையும் அவ்வாறே தவமிருக்க விநாயகப் பெருமான் அவருக்கு விசுவரூபக் காட்சியளித்தார். அத்தகைய ஒரு காட்சியைக் கண்டு அஞ்சிய உமையம்மை அருட்கடலை நோக்கி, ''யான் வளர்ப்பதற்குகந்த பாலகனாய் ஆக வேண்டும்'' என வேண்டினாள். விநாயகப் பெருமானும் அழகிய பாலகன் உருவம் கொண்டு அம்மையின் மடியிற் கிடந்தார். அப்போது தேவர் இருந்த இடங்களில் நல்ல சகுனங்கள் தோன்றின. அசுரர் இருந்த இடங்களில் கெட்ட சகுனங்கள் தோன்றின; உற்பாதங்கள் நிகழ்ந்தன.

நிகழ்ந்த உத்பாதங்களைக் கண்ட சிந்துராஜன் பல ஒற்றர் களை உலக முழுவதும் அனுப்பி அரிய நிகழ்ச்சி ஏதேனும் உண்டா என அறிந்துவரச் சொன்னான். திரிபுவனங்களில் திரிந்த ஒற்றர்கள் மீண்டுவந்து சிந்துராஜனை நோக்கி, ''அரசே, திரிசந்தி என்ற இடத்தில் பார்வதியும் பரமேஸ்வரரும் தங்கி யிருக்கிறார்கள்; பார்வதி தேவியார் ஏதோ ஒரு விரதம் இருந்து ஓர் அதிசயக் குழந்தையைப் பெற்றெடுத்திருக்கிறார். முனிவர்கள் கூட அக்குழந்தையைப் போற்றி வருகிறார்கள்' என்றனர். அப்போது வானம் கீறி ஓர் ஒலி கேட்டது: ''சிந்துவைக் கொல்லும் குழந்தை திரிசந்தியில் வளர்கிறது.''

சிந்து கலங்கினான்; பெருஞ்சினம் கொண்டான்; கண்கள் தீக் கங்குகள் ஆயின. சீறி எழுந்தான். ''இப்போதே சென்று அக் குழந்தையை வெட்டிக் கொன்றுவிட்டு வருகிறேன்'' எனக் கர்ஜித்தான். அதனைக் கண்ட அமைச்சர்கள், ''ஒரு சிறு குழந் தையைக் கொல்லத் தாங்கள் செல்ல வேண்டுமா? தங்கள் கட்டளையைச் சிரமேற்கொண்டு செய்து முடிக்க நாங்கள் காத்திருக்கிறோம். வலிமை மிக்க அசுரர்களில் ஒருவரை அனுப்பி அக்குழந்தையைக் கொல்லுவதே நல்லது'' என்றனர். சிந்துவும் சினம் தணிந்து கிருத்திரன் என்பானை நோக்கி, ''ஒருவரும் அறியாவண்ணம் விரைவில் அக்குழந்தையைக் கொன்று மீண்டு வருக'' என ஆணையிட்டான்.

கிருத்திராசுரன்

பச்சிளம் குழந்தையான பால விநாயகர் கைகளையும் கால்களையும் உதைத்துக்கொண்டு நன்றாக அழுவார். கைகளை மேலே தூக்கிப் பத்து விரல்களையும் பிரித்து மூடுவார். கையால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாவு பிசைவதுபோல் மூடி மூடித் திறப்பார். எப்போதும் அவரைச் சுற்றி உமையம்மையின் தோழியர் இருப்பார்கள். குழந்தையோ தாயின் மடியில் அமர்ந்து அனைவரையும் மாறிமாறி அழகாகப் பார்ப்பார். அப்பார்வையை ரசிப்பதற்கே எல்லாரும் அவர் பக்கலில் இருப்பர் ஒரு நாள் உமையம்மை ஏதோ ஒரு காரணத்தால் பால விநாயகரைத் தன் மடியை விட்டிறக்கி முற்றத்தில் விட்டுவிட்டுச் சென்றார். உமையைத் தொடர்ந்து அவர் தோழியரும் சென்றனர். பூத கணத் தலைவர்கள் சற்றுத் தூரத்தில் காவலாக இருந்தனர். அப்போது திடீரென்று பெருங்காற்று தோன்றியது; சூரிய ஒளி மறைந்தது. பூத கண நாதர்கள் இன்னதெனத் தேர்வதற்குள் வானத்தையே மறைக்கும்படி மிகப்பெருங் கழுகு உருக்கொண்டு கிருத்திராசுரன் என்பான் விரைந்து பறந்து வந்தான். அவன் வந்த வேகத்தில் பாறைகள் பறந்தன; மரங்கள் முறிந்தன; மக்கள் நிலை குலைந்தனர்; முனிவரும் தேவரும் திகைத்து நின்றனர்; பறந்து வந்த பாதகன் பச்சிளம் பாலகனை வளைந்த நகங்களோடு கூடிய வலிமை மிக்க தன் கால்களால் பற்றி எடுத்துக் கொண்டு வானத்திற் பாய்ந்தான். அப்போது எங்கும் புகைமண்டலம் போல் புழுதி மூடியது. ஒருவராலும் நடந்ததைக் காண இயல வில்லை. சற்றே புழுதியடங்கியதும் குழந்தை இருந்த இடத்தை நோக்கி யாவரும் ஓடிவந்தனர். அங்குக் குழந்தை இல்லை. பெருங்கழுகு வருவதை முன்னமே பார்த்த பூத கணத்தவரில் ஒருவர் அக்கழுகே குழந்தையைத் தூக்கிச் சென்றிருக்க வேண்டு மென இயம்பினார். பூத கணத்தவர் அனைவரும் ஆகாயத்தில் பாய்ந்தனர்; குழந்தையைத் தேடிக் கண்டுபிடித்துக் கொணர முனைந்தனர். அப்போது மூவுலகும் வெடிபடப் பெரிய ஓலம் எழுந்தது. அவ்வொலியைக் கேட்ட அனைவரும் திகைத்து நின்றனர். ஒரு மாதம் கூட நிரம்பாத பால விநாயகர் கிருத்திரா சுரக் கழுகைக் கழுத்தைப் பிடித்து நெரித்ததால் மரண வலியால் துடித்து மாய உரு நீங்கி மண்ணின்மேல் வீழ்ந்து மாய்ந்தான் அவ்வசுரன். பல யோஜனை தூரம் பரந்து கிடந்த அவன் உடல் மீது யாதொன்றும் நிகழாததுபோல் அச்சமின்றி ஐங்கரக் களிறு அமர்ந்திருந்தது. அது கண்ட உமாதேவியார் கடிது சென்று அக்குழந்தையை அணைத்து எடுத்துக் கொண்டு வந்து கண்ணேறு கழித்துத் தன் மடியில் வைத்துக் கொண்டாள். சிறு குழந்தையைக் கொல்லவந்த பெருந்தானவனையும் மாயை வல்ல அசுரனை மாளச் செய்த குழந்தையின் திறத்தையும் கண்ட யாவரும் ஆதியும் அந்தமும் இல்லாத அருமைப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிள்ளையை ஏத்தித் துதித்தனர். கிருத்திராசுரன் கதியைச் சிந்துராசன் அறிந்தான்.

கேமாசுரன், குசலாசுரன்

பால விநாயகருக்கு ஒரு மாதம் பூர்த்தியாயிற்று. குழந்தையும் தன் விளையாட்டால் யாவரையும் மகிழ்விக்கத் தொடங்கியது. அப்போது ஒரு நாள் சிந்துராசன் ஆணையால் கேமாசுரன் குசலாசுரன் என்ற இரு அசுரர்கள் பால்மணம் மாறாப் பால விநாயகரைக் கொல்ல வஞ்சக வழியொன்று கண்டனர். வலிமையும் மாயமும் மிக்க அவர்கள் யாரும் அறியாமே யானை முகத்தானை அழிக்க எண்ணி ஆகு வடிவம் கொண்டனர். இரு ஆகுகளும் ஆனைபோல் பெருத்திருந்தன. அவ்விரண்டும் ஒன்றுடன் ஒன்று சண்டையிடுவதுபோலப் பொருதுகொண்டே குழந்தை இருந்த இடத்திற்கு வந்தன. அப்போது மலைப் புறத்திருந்த பாறைகள் சரிந்தன. எலிகள் இரண்டும் உருண்டன. திடீரென்று அவை ஐயன்மேல் பாய்ந்து புரண்டன. ஐயனோ அரியதோர் பூசையாய் மாறி எலியிரண்டையும் சிதைத்தார். அவை தம் மாய உருவம் நீங்கி அரக்க உடலோடு ஆங்கே வீழ்ந்தன. யாவரும் அச்சமும் அதிசயமும் அடைந்தனர். ஆனை முகக் குழந்தைக்கு அரண் அமைத்தனர்; குழந்தையின் தெய்வத் தன்மையையுணர்ந்து போற்றித் துதித்தனர். குழந்தையோ எப்போதும் போல் இனிய முகத்துடன் இயல்பாக விளையாடிக் கொண்டிருந்தது.

குரூராசுரன்

களிற்றுமுகக் குழந்தைக்கு மூன்றாவது மாதம் பிறந்தது. தவழ்தல் நீந்துதல் போன்ற விளையாட்டுகளால் தன் பெற்றோரையும் மற்றோரையும் மகிழ்வித்தது அக்குழந்தை. அக் குழந்தையைக் கண்டவர் தம் கவலைகளை மறந்தனர். அக்குழந்தையின் சிறு கால்களில் கிடந்த கழல்களையும் இடுப்பிற் கிடந்து இன்னொளி வீசும் பொன்னரைஞாணையும் மார்பிற் கிடந்த மதாணியையும் கண்டு மகிழ்வெய்தினர். அப்போது கேமாசுரனும் குசலா சுரனும் மண்ணானதைக் கேள்வியுற்ற சிந்துராஜன் குரூரா சுரனை அழைத்து அக்குழந்தையைக் கொன்று வருமாறு ஆணையிட்டான். குரூராசுரனும் கோபம் மிகுந்து திரிசந்தியை அடைந்தான். விநாயகப் பெருமான் இற்புலியாய் மாறி எலியாய் வந்த அசுரர்களைக் கொன்றமையால் தானும் வெரு காய் மாறி விநாயகக் குழந்தையைக் கொல்ல எண்ணி ஒரு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பூனை ஆயினான். பூனை உருக்கொண்ட பொல்லா அரக்கன் வருகையை உணர்ந்த ஓங்கார மூர்த்தி, நான்மறையைத் தன் மனத்து எண்ணினார். எண்ணிய அளவில் நான்கு வேதங்களும் நான்கு ஞமலியாய் நாற்புறமிருந்தும் பாய குரூரன் நடுநடுங்கித் தன் மாயமெலாம் மறைய அரக்க உருவோடு அவனிமேல் வீழ்ந்தான். அவன் ஆருயிர் அகன்றது. சிந்து ராஜனுக்குச் செய்தி எட்டியது.

பலாசுரன்

குரூராசுரன் கொலையுண்டதைக் கேட்டுக் கொடுங்கோபம் கொண்ட சிந்து, பலாசுரன் என்பானை நோக்கி, 'பாலகனைக் கொன்று வா' என ஆணையிட்டு அனுப்பினான். திரிசந்தி க்ஷேத்திரத்தில் முனிவர் பலர் வாழ்ந்திருந்தபடியால் அவ்வசுரன் யாரும் அயிர்க்கா வண்ணம் ஒரு முனிவர் குமாரன் போல மாய உருவம் கொண்டு மதலை படுத்திருந்த இடத்திற்கு வந்தான். அப்போது குழந்தைக்கு மூன்றாம் மாதம் முடிந்து நான்காம் மாதம் பிறந்திருந்தது. குழந்தை தன் கை கால்களை நீட்டியும் மடக்கியும் உதைந்தும் தன் அருகில் வருவோரை முகம் பார்த்தும் சிரித்தும் நன்றாக விளையாடிக் கொண்டிருந்தது. தவழ்ந்து வரும் தயாமூர்த்தியைக் கண்ணாற் கண்ட பலாசுரன் தானும் குழந்தையும் விளையாடுவதே போன்று விளையாடினான். வஞ்சகனின் மாயையை நெஞ்சகத் துணர்ந்த நின்மலன் தானும் ஊக்கம் மிகுந்து விளையாடுவார் போன்று அவன் மார்பில் உதைத்தார். அவ்வளவில் அவன் மாயம் நீங்கி அசுர காயம் வெளிப்பட மண்மேல் வீழ்ந்து ஆவி துறந்தான். ஒற்றர் ஓடிச் சென்று சிந்துராஜனிடம் பலாசுரன் பலியானதைப் பகர்ந்தனர்.

வியோமாசுரன்

சிந்துராஜன் கொதித்தெழுந்தான். பச்சைப் பிள்ளையிடத்து எச்சரிக்கை அடைந்தான். அதிபலம் வாய்ந்த அசுரர்கள் அழிந்தனரே எனப் பருவரல் கொண்டான். அரசனின் அடங்காச் சினம் கண்ட வியோமாசுரன் என்பான் தான் சென்று அக் குழந்தையைக் கொன்று வருவதாய்க் கூறித் திரிசந்தி க்ஷேத் திரத்திற்குச் சென்றான். அப்போது அக்குழந்தைக்கு நான்காம் மாதம் முடிந்து ஐந்தாம் மாதம் பிறந்திருந்தது. அவ்வசுரன் உமையம்மையும் குழந்தையும் உல்லாசமாய்ப் பொழுது போக்கும் உத்யான வனத்தையடைந்து ஒரு மாமரமாகிக் கண்ணைக் கவரும் நச்சுக் கனிகள் குலுங்க நின்றான். அங்கு விளையாடிக்

8

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொண்டிருந்த இளஞ்சிறார்களை அக்கனிகளின் வண்ணமும் வாசனையும் கவர்ந்திழுத்தன. அச்சிறுவர்கள் அப்பழங்களைப் பறித்து உண்ட உடனே மயங்கி விழுந்து மாய்ந்தனர். உமையம்மையும் தோழிகளும் திகில் கொண்டனர். சிறுவர்களின் பெற்றோர்கள் ஓடி வந்தனர். துன்ப மேலீட்டால் கதறினர். அவற்றைக் கண்ட ஐம்முகச் செம்மல் மெல்ல மெல்லத் தவழ்ந்து அம்மரம் நோக்கிச் சென்றார். அகன்ற அடிமரத்தில் பொள்ளல் ஒன்று இருந்தது. பிள்ளையார் பொள்ளென அப் பொந்தில் புகுந்தார். உடனே பொந்து மூடிக்கொண்டது. உமையம்மை நிலை குலைந்தாள். தோழியர் துன்புற்று அலறினர்; செய்வதறியாது திகைத்தனர். அப்போது யாவரும் வியக்கும் வண்ணம் அம்மாமரம் மளமள என்று முறிந்து மண்ணின்மேல் சாய்ந்தது. மரத்தைப் பிளந்துகொண்டு மறைக்கொழுந்து வெளிப்பட்டது; மாமுனிவர்களின் மதலைகளை அருள் குடியிருக்கும் கண்களால் நோக்கியது. இறந்த சிறுவர்கள் எழுந்து நின்றனர். உயிர்பெற்று ஓங்கிய தம் பிள்ளைகளைக் கண்ட முனிவர்களும் அவர்தம் மனைவியரும் பெருமகிழ்ச்சி கொண்டனர். களிற்றுமுகக் குழந்தை ஆனைமுகத்தவனான ஆதியம் பரமனே எனப் போற்றித் துதித்தனர்.

சதமஹிஷ பக்ஷிணி

மாமரமாகி நின்ற மாயம் வல்ல வியோமாசுரன் மாய்ந்தது கேட்ட சிந்துராஜன் மனத்தில் அச்சமும் கோபமும் மாறி மாறித் தோன்றின. 'சிறு குழந்தைக்கு இவ்வளவு வலிமையா?' என அதிசயித்தான். ஆங்காரம் கொண்ட அவ்வசுரன் சதமஹிஷ பக்ஷிணி என்ற ஒரு கொடிய அரக்கியை வரச் செய்தான். அவ்வரக்கி ஒரே சமயத்தில் நூறு எருமைகளை உணவாகத் தின்னும் பெரும்பசி உடையாள். இரக்கம் என்பதை அறியாத அரக்கி. அக்குழந்தையைக் கொன்றுவர அவளை ஏவினான் சிந்துராஜன். அப்போது அக்குழந்தையின் வயது ஆறுமாதம். உலகத்துக் கொடுமை எல்லாம் ஒருருக் கொண்டு வந்ததென விளங்கிய அவ்வரக்கி, ஐம்புலனும் அடக்கிய அருந்தவ முனிவரும் அகம் பேதலித்துத் தடுமாறும் வண்ணம் அழகியதோர் அணங்குருவம் கொண்டாள். அயிராணியின் அழகும் அம்மங்கையின் அழகுக்கு ஈடாகாது என யாவரும் புகழ உமையம்மையும் தும்பிக்கை மதலையும் இருந்த இடம் எய்தினாள். நெஞ்சகத்து வஞ்சகம் கொஞ்சமும் வெளிப்படாது முகபாவம் செய்து முக்கணான் துணைவியை நெருங்கினாள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பார்வதி தேவியும் அவளை நோக்கி யாரென வினவ, மன ஆழத்தில் கிடந்த வருத்தமெல்லாம் வெடித்து உருகிப் பொங்கிக் கண்ணீராய் வெளிப்பட்டதுபோல் குமுறி அழுது, "யான் ஓர் அரமகள்; என் கணவனைச் சிந்துராஜன் கைப்பற்றிச் சிறை யிட்டான்; என்னையும் சிறைப்பிடித்துத் துன்புறுத்த வீரரை ஏவினான்; என் பெண்மையை எண்ணி யார் கண்ணிலும் படாமல் தப்பி இங்கு வந்து நின்னடி சேர்ந்தேன். இனி யான் உன் அடைக்கலம்" என்று கல்லும் கரையக் கவன்று கூறினாள். அதைக் கேட்ட அம்பிகையும் அவளுக்கு அபயம் அளித்துத் தன் அருகே இருக்க அனுமதித்தாள். அம்பிகையின் நம்பிக்கையைப் பெற்ற அக் கள்ள அரக்கி ஒருநாள் விநாயகக் குழந்தையை விருட்டென்று பற்றி விண்ணிற் பாய்ந்தாள். அருகில் இருந்த மெல்லியலார் அதிர்ச்சி அடைந்தனர். நடந்த நிகழ்ச்சியை அவர்கள் நன்கு அறியும் முன்னமே களிற்றுமுகக் குழந்தை காதகியின் காதுபற்றி வலிந்து இழுத்தது. வலி தாங்காத வஞ்ச அரக்கி தன் மாய உடல் மாய உண்மை உருவம் வெளிப்படத் துவண்டு ஒரு பாறைமேல் மற்றொரு பாறை வீழ்ந்ததுபோல் வீழ்ந்தாள். அரக்கி பிணமானாள்; குழந்தையோ குதூகலித்து அவள் உடல்மேல் குதித்து விளையாடியது. பேரச்சம் கொண்ட பெண்டிரும் திகைத்து நின்ற மற்றோரும் வியந்து விம்மிதம் எய்தினர். களிற்று முகக் குழந்தையைக் கைகளால் அள்ளி அணைத்துக்கொண்டாள் கௌரி.

கமடாசுரன்

குழந்தை விநாயகருக்கு ஏழாம் மாதம் தொடங்கியது. சதமஹிஷ பக்ஷிணியின் உயிர் அவள் சடலத்தை விட்டு ஓடியதைக் கேட்ட சிந்துராஜன் சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு கமடா சுரன் என்ற ஒரு கபட அரக்கனை விளித்துக் கணேசரைக் கொன்று வரப் பணித்தான். அவனும் பார்வதி பரமேசுவரர் அருந்தவ முனிவருடனும் ஐங்கரக் குழவியுடனும் அகமகிழ்ந்து வீற்றிருக்கும் திரிசந்தி க்ஷேத்திரத்தைச் சென்றடைந்தான்; யாரும் ஐயுறா வண்ணம் ஆமையுருக் கொண்டு ஆதி முதலான அக்குழந்தை அருகில் சென்றான். அப்போது அங்கு ஒருவரும் இல்லை. எல்லாம் வல்ல இறைவனாகிய அக்குழந்தை ஆமை யரக்கனைக் கண்டு தன் சிற்றடியால் உதைத்தது; அவன் முதுகின்மேல் குதித்தது; அவனைக் குப்புறத் தள்ளியது; அரக்கன் நிலை தளர்ந்தான்; நின்மலனாகிய குழந்தை கள்ள அரக்கன் மீது சதிர் ஆடியது. அரக்கன் வேதனை தாளாமல் வீறிட்ட லறினான். அப்பேரொலி கேட்டு அனைவரும் ஸ்தம்பித்தனர்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிறகு உணர்ந்து குழந்தை நின்ற இடத்திற்கு ஓடி வந்தனர். மதகரியொன்று உடலம் சிதைந்து தரையிற் கிடப்பதுபோல் கருத்த உடலும் சிவந்த பங்கியும் பெருத்த உருவுமாய் ஆமை யுருக்கொண்டு வந்த அரக்கன் வீழ்ந்து கிடந்ததைக் கண்டனர். வியப்பும் அச்சமும் மேலிட்ட முனிவரர்கள் அக்குழந்தையைத் தூக்கிக் கொண்டு உமாதேவியிடம் சென்று ஒப்படைத்தனர். கள்ளமில்லாச் சிரிப்போடு கணேசர் அம்பிகையின் மார்பில் தவழ்ந்தார்.

கற்பகாசுரன்

கச்சப உருவில் வந்த கமடாசுரன் கதியை அறிந்த சிந்துராஜன் குரோதம் மிகுந்து கமடனைக் காட்டிலும் பன்மடங்கு வலிமை வாய்ந்தவனும் மாயையில் வல்லவனும் ஆகிய கற்பகாசுரனை வருவித்துக் களிற்றுமுகனைக் கொன்றொழிக்க ஏவினான். அப்போது மதகளிற்று மாமுகனுக்கு வயது எட்டு மாதம். கற்பகாசுரன் கவின்மிகு குதிரையுருக் கொண்டான். அக் குதிரை ஏழு முழ உயரமும் இரும்புச் சலாகை போன்று நீண்டு வலிமை வாய்ந்த கால்களும் பரிதியைப் பழிக்கும் வெண்மை நிறமும் வாழைப் பூவின் மடல்போல அமைந்த செவிகளும் கொண்டு கண்டோர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது; அது கனைத்தபோது அண்டமெல்லாம் கிடுகிடுத்தது. அதன் விரைந்த நடையால் காடு மேடெல்லாம் தவிடுபொடியாயிற்று. இறுதியில் திரிசந்தி க்ஷேத்திரத்தை அடைந்து மெல்லியலார் பூக்கொய்து அசதியாடி விளையாடும் நந்தவனத்தருகில் வந்து நின்றது. பார்வதி அதன் அழகைப் பார்த்தாள். அது படிறு மிக்க பரி என்று எண்ணாது அதன் அருகில் ஐங்கரக் குழவியோடு வந்து நின்றாள். மற்ற மகளிரும் அசுவ லட்சணங்கள் அனைத்தும் பொருந்திய அக்குதிரையின் அழகைக் காண அங்குற்றனர். குழந்தை கணேசனும் குதிரையின்மீது அமர விழைவார் போன்று அதன் முதுகில் தட்டினார். அது உடலைச் சிலிர்த்துக் கொண்டது. ஆயினும் அவ்விடத்தை விட்டு அகலவில்லை. அது கண்ட அம்மையார் அக்குதிரை பழகிய பண்பட்ட குதிரை எனக் கருதினார். அதனால் அக்குழந்தையை அதன் முதுகில் அமர்த்தினார். குழந்தை அமர்ந்ததும் குதிரை குதித்துத் துள்ளியது. எல்லாரும் அதிர்ச்சி அடைந்தனர். குழந்தைக்கு அபாயம் உண்டாகிவிடுமே எனக் கவன்றனர். ஆனால் அச் சிறு குழந்தை அப்புரவியின் உளைமயிரை இறுகப் பற்றியது. அசுவமாக வந்த அரக்கன் பாய்ந்து ஓடினான். குழந்தை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விநாயகரும் உளைமயிரை இறுகப் பற்றியவாறு அக்குதிரையை உலகெங்கும் சுற்றி ஓட்டினார். விண்ணும் மண்ணும் ஓடிச் சாடிய குதிரை மலைகள் குன்றுகள் ஆறுகள் காடுகள் ஆகிய இடமெல்லாம் பாய்ந்து துள்ளியது; அக்குழந்தையைக் கீழே தள்ளி மிதித்துக் கொன்றுவிடப் பெருமுயற்சி செய்தது. ஆனால் அக்குழந்தையோ அப்புரவியை ஓரிடத்தும் நிற்க விடாமல் உளைமயிரை இழுத்து ஓட்டியது. குரகதம் வலி பொறுக்காமல் வேகமாக ஓடியது; அதன் வாயிலிருந்து நுரை தள்ளியது; மிகவும் களைத்தது. குழந்தையோ உளைமயிரை இழுத்துப் பெருத்த வலியை உண்டாக்கியது. குதிரை நிற்கவும் முடியாமல் ஓடவும் முடியாமல் தவித்தது. மூச்சு முட்டியது; குடல் அறுந்தது; இறுதியில் நிற்பதற்கும் பலமின்றி வாய்வழியே குருதி கொப் பளித்து உயிரும் மாய உருவும் நீங்கி மண்ணில் வீழ்ந்தது. கண்டோர் அனைவரும் கணேசரின் வன்மையையும் பெருமை யையும் உணர்ந்து போற்றினர். கற்பகாசுரன் காலன் உலகு அடைந்ததை அறிந்து சிந்துராஜன் வெம்பினான்.

துந்துபி

மனம் வெம்பிய சிந்துராஜன் துந்துபி என்ற ஓர் அசுரனை அழைத்தான். துந்துபி மாயங்கள் புரிவதில் வல்லவன். அவன் குரலெடுத்துப் பேசினால் குவலயம் முழுவதும் கேட்கும். வேண்டும்போது வேண்டும் வடிவம் கொள்ள வல்லன். அணுவை விடச் சிறிய உருவம் கொள்ளவும் அவனால் முடியும். அண்டத்தை விடவும் பெரிய உருக்கொள்ளவும் அவனால் முடியும். சிந்து ராஜன் அவனிடம் அக்குழந்தையைக் கொல்ல வேண்டுமென்று கட்டளையிட்டான். பல கொலைகள் செய்து பழக்கப்பட்ட துந்துபி மகிழ்ச்சியுடன் அக்கட்டளையை ஏற்றுக் கொண்டான். பிறகு துந்துபி திரிசந்தி க்ஷேத்திரத்தை அடைந்து ஐயத்திற்கு இடம் கொடாமல் அழகிய முனிகுமாரன் வேடம் தாங்கி ஐயன் இருக்குமிடம் வந்தான்; வீரியம் மிக்க விஷத்தை நாவற் பழமாக்கி நம்பிக்குக் கொடுத்தான். அப்போதே அதனை உணர்ந்த ஆனைமுகத்தான் உமையம்மை நல்கிய அமிழ்தத்தில் ஊறிய மோதகம் ஒன்று எடுத்து அம்முனி குமாரனிடம் கொடுத்தான். கொஞ்சமும் ஐயம் கொள்ளாத அவ்வரக்கன் அம்மோதகத்தை உண்ண அண்ணலும் நாவற்பழத்தை ருசித்துச் சாப்பிட்டார். ஆனால் நாவற்பழத்து நஞ்சு மோதகத்துக்கும் மோதகத்து அமிர்தம் நாவற்பழத்துக்கும் மாறியது. நஞ்சு தலைக்கேறிய நிருதன் நிலத்திற் சாய்ந்தான்; அவன் மாய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உருவமும் மறைந்தது. உயிர் நீங்கி அரக்க உருவோடு தரையிற் கிடந்தான். நிகழ்ந்த துணர்ந்த தாயரும் மற்றோரும் கணேசரின் உயிர்பற்றிக் கவலை கொண்டார்கள். அப்போது அக்குழந்தைக்கு ஒன்பதாம் மாதம் முடிந்தது.

அசகாசுரன்

பத்து மாதம் கூட நிறையாத பாலகன் மாயம் வல்ல துந்துபியைக் கொன்றானெனின் அப்பாலகனின் வலிமையை என்னென்று எண்ணுவது? சிந்துராஜன் சிந்தித்துச் சிந்தித்து மனம் புண்ணானான். பிறகு தேறி நரமாமிசம் உண்டு நாச்சுவை தேறிய அசகாசுரன் என்பானை அழைத்து எவ்வகையிலேனும் களிற்றுமுகனைக் கடிதிற் கொன்றுவர வேண்டுமென்று கட்டளையிட்டான். அசகாசுரனும் அகமொன்றித் திரிசந்தி க்ஷேத்திரத்திற்குச் சென்றான்; அண்ணலும் தாயரும் விளையாடும் இடம் நண்ணினான்; மலை முழையில் வாழும் மாசுணமாய் வடிவமெடுத்து மெல்ல மெல்ல ஊர்ந்து வந்து யாவரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஆனைமுகக் குழந்தையை அப்படியே விழுங்கிவிட்டான். அனைவரும் 'ஐயோ' என அலறினார்கள். ஆனால் அடுத்த கணமே ஐயன் அரவின் உடல் பிளந்து தன் உடல் முழுவதும் ரத்த மயமாயிருக்க வெளிப்பட்டுத் தோன்றினார். அசகாசுரன் அழிந்தொழிந்தான்; மாய மலைப்பாம்பு வல்லரக்கன் உருவாய்த் தரைமேல் கிடந்தது. பாலவிநாயகரை யாவரும் போற்றிப் பரவினர். சிந்துவுக்கும் செய்தி சென்றது.

கமலாசுரன்

பால விநாயகருக்குப் பதினொராம் மாதம் நடந்து கொண்டிருந்தது. பத்து அசுரர்களைக் கொன்ற அப்பாலகனைச் சூழ்ந்துகொண்டு ஒருநாள் உமையம்மையும் முனிவர்களின் மனைவியரும் சிறு விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் இருந்த சோலை மிகக் குளிர்ந்து மெல்லென்ற காற்று வீச புஷ்பங்களால் நிறைந்து நறுமணம் மிகுந்து விளங்கியது. அச்சமயத்தில் ஆறாச் சினம் கொண்ட அசுரன் சிந்துராஜன் கமலாசுரன் என்ற வல்லமை மிக்க அசுரனை பாலகணேசரைக் கொன்றுவருமாறு பணித்து அனுப்பினான். அவ்வசுரன் சிங்கத்தையும வெல்லும் திறல்வாய்ந்த சிம்புட் பறவையாய் உருவெடுத்து வந்து அக்குழந்தையும் ஆயமும் தாயும் விளையாடிக் கொண்டிருந்த எழில்மிகு பொழிலைக் கண்டான்: கொதிக்கும் கோபம் பொங்க இரவியையும் மறைத்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இரவெனத் தோன்றுமாறு தன் பரந்த சிறகை விரித்து வெகு வேகமாகப் பறந்துவந்தான். தகவிலன் வந்த வேகத்தில் தருக்களெல்லாம் முறிந்து வீழ்ந்தன; சண்டமாருதம்போல் காற்று வீசியது. பொழில்வாய்ப் புள்ளெல்லாம் அஞ்சிப் பதுங்கின. தவமகளிரும் அரமகளிரும் மலைமகளும் அஞ்சி நடுங்கினர். அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. நெடுங்கைக் களிற்றுமுகன் தன் மென்கரங்களால் அவ்வரக்கன் வன்தாள் பற்றிச் சூறைக் காற்றில் சுழலும் இலவம்பஞ்செனச் சுழற்றி ஆண்டிருந்த ஒரு பெரும் பாறையின் மீது மோதினார். சிம்புட் பறவையின் சிரம் சுக்குநூறாகியது. அரக்கன் உயிர் ஓட அவன் மாயம் அகன்றது. அவன் சடலம் ஆங்கே நீண்டு வீழ்ந்தது. யாவரும் பிழைத்தோம் என்று மகிழ்ந்து தத்தம் இருப்பிடம் சென்றனர்.

வீமாசுரன், சலாசுரன், சிலாசுரன்

காலகாலனாகிய எம்பெருமான் கையால் எளிதில் அழிந்த கமலாசுரனை எண்ணி அழுதான் சிந்துராஜன்; பன்னிரு அரக்க வீரர்களைப் பறிகொடுத்த துக்கம் மீதூற உள்ளம் வெறுத்தான். பாலகணேசருக்கோ பிராயம் வளர்ந்துகொண்டே வந்தது; பிராயம் ஏற ஏற வலிமையும் மிகுமே என்ற எண்ணம் தோன்றியது; ‘முள் மரத்தைச் செடியாய் இருக்கும்போதே வெட்டி விடுக’ என்ற மூதுரையை எண்ணினான்; அப்பாலகனை அப்போதே அழித்துவிடத் தீவிரம் கொண்டான். ஒரு வயது முற்றுப் பெறாத உமாசுதனை அழிக்க மூன்று அசுரர்களை ஏவினான். அவர்கள் வீமாசுரன், சலாசுரன், சிலாசுரன் என்பவர்கள். அவர்கள் ‘‘பன்னிரு அசுரர்களைப் பருவரல் செய்து அவர்கள் இன்னுயிர் போக்கிய பாலனை இன்னே கொன்று தின்று வருவோம்’’ என்று சூளுரை பகன்று திரிசந்தி க்ஷேத்திரத்தை அடைந்தார்கள். அடைந்த அவர்கள் ஆனைமுகத்தான்தன் ஆருயிர் பறிக்க அரியதொரு திட்டம் தீட்டினார்கள். சலாசுரனும் சிலாசுரனும் சிலம்புகளாய் மாறி ஐயன் கழல்களில் அமர்ந்து அவரை அசைய முடியாமல் செய்ய வீமாசுரன் விரைந்து அவர் கழுத்தை நெரித்துக் கொன்றுவிடுதலே அத் திட்டம். அதன்படி வீமாசுரன் விசுவகர்மனாக உருவெடுத்தான். சலாசுரனும் சிலாசுரனும் சிலம்பாயினர். விசுவகர்ம வேஷதாரி அம்பொற் சிலம்பிரண்டையும் அங்கையில் ஏந்திச் சென்று அருளாளனை அடைந்தான். அவன் பார்வதி பரமேசுவரரை பவ்யமாக வணங்கிச் சின்ன நடை நடந்து பழகிய பால கணேசரைக் கண்டு அவர் பாதங்களில் அச்சிலம்புகளைப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பூட்டினான். சிலம்பின் ஒளி மாதிரமெங்கும் வீசியது. அவற்றின் அழகையும் வேலைப்பாட்டையும் கண்டு அனைவரும் வியந்தனர். அணி சிலம்பு பெற்ற அகமகிழ்வால் ஆடுவார் போன்று அருள் மிகு விநாயகர் நர்த்தனம் புரியத் தொடங்கினார். பெருத்த தொந்தி குலுங்க சிறுத்த கால்கள் அடைவமைதி காட்ட நான்கு கரங்களும் நளினமாய் அபிநயம் பிடிக்க செஞ்சாந்துக் களிற்றுமுகம் சந்திர ஒளிவீசப் புன்னகை பூத்து மென்மையாய் ஆடத்தொடங்கிய ஆனைமுகத்து அண்ணல் நேரம் ஏற ஏற முடுகு காட்டிச் சுழன்றாடினார்; பிரளய காலத்து உருத்திரன் பாண்டரங்கக் கூத்து ஆடுமாப்போலே அண்டமெலாம் கிடு கிடென ஆட சூரிய சந்திரர் நடுங்க தேவரும் முனிவரும் திகைக்க முடுக்கத்தின் எல்லைகாட்டிச் சுழன்றாடினார்; காலிற் சிலம்பாய் வந்த கள்ள அரக்கர்கள் கதிகலங்க மதிசுழல அதி வேகமாய்ச் சுழன்றாடினார். கூத்து முடிவில் முத்தாய்ப்பு வைத்தாற்போல அடுத்தடுத்து பாதங்களை எடுத்து வீசினார். வீசிய வீச்சால் கழன்ற சிலம்புகள் விசுவகர்ம வேஷதாரியின் முகத்திலும் தலையிலும் மோதின. பகை கொண்ட நெஞ்சோடு வந்த வல்லரக்கர் மூவரும் தலைதெறித்து உடல்முறிந்து உயிர் விட்டனர். அவர்கள் மாயமும் விட்டது; மெய்யுடல் மண்ணிற் கிடந்தது. இந் நிகழ்ச்சியைக் கண்ட தேவரும் முனிவரும் நிமலன் தாள்பணிந்தேத்தினர். சிந்துவும் செய்தியறிந்து உரம் குலைந்தான்.

ஆவிசயன்

சித்தம் கலங்கிய சிந்து ஆவிசயன் என்றொரு அரக்கனை விளித்து பாலகணேசரை உடனே கொன்றுவர வேண்டும் என ஆணையிட்டு அனுப்பினான். அவனும் விரைந்து திரிசந்தி க்ஷேத்திரத்தை அடைந்தான். அங்கு ஒரு வயதுப் பாலகனாகிய பால விநாயகர் முனிகுமாரர்கள் பலர் சூழ இருந்து விளையாடிக் கொண்டிருந்தார். அதுகண்ட ஆவிசயன் மத்தயானை வடிவம் தாங்கி மரம் செடி கொடிகள் எல்லாவற்றையும் முறித்துத் துகைத்துக் கொண்டு வெகுவேகமாக வந்தான். அதுகண்ட முனிகுமாரர்கள் அஞ்சி அலறி ஓடினர். பாலகணேசரோ புன் முறுவல் கொண்டு தம் அங்குசத்தை அவ்யானையை நோக்கி வீசினார். அது யானையின் மதம்பாய் சுவட்டையும் செவி யடியையும் குத்தித் தாக்கியது; மத்தகத்தில் மொத்து மொத் தென்று மொத்தியது; யானையின் தலை சுற்றியது; வலிமை குன்றியது. குழந்தை கணேசரோ அதன் வேசகம் பற்றியேறி மஞ்சை அடைந்தார்; யானையின் இருபுறத்தையும் தன் கால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

களால் உதைத்துக் குத்தி மத்தகத்தை அங்குசத்தால் பொத்தி அதனைக் கடாவினார். வலியும் வேதனையும் தாங்காத அவ் வயமா குழந்தை செலுத்திய பக்கமெல்லாம் சென்றது. அக் கரியால் அண்ணலுக்கு அடங்கிச் செயல்படுவதைத் தவிர வேறு வழியில்லை. கொழுவிய சேறு மிகுந்த ஏரிகளின் வழியே யானையைச் செலுத்தினார் ஐயன்; சேற்றில் கால்கள் புதைய மீண்டும் அடியெடுத்து வைக்க மீண்டும் புதைய அரக்கக் கரி பெருந்துன்பம் உற்றது; முழந்தாள் தளர்ந்தது; ஏரி கடந்தபின் பரற்கற்கள் பரந்து கிடைக்கும் பாலைவனப் பகுதியில் ஓடவிட்டார்; நின்றால் அங்குசம் குத்தும்; ஓடினால் பரற்கற்கள் குத்தும்; என் செய்வான் பாவம் அவ்வரக்கன்! யானையின் கால்கள் புண்ணாயின; நடக்க முடியாமல் தள்ளாடியது. பிள்ளையார் அதனை மீண்டும் திரிசந்தி க்ஷேத்திரத்திற்குத் துரத்தி வந்தார். வரும்போதே தன்னுடைய கனத்தை மேலும் மேலும் அதிகமாக்கிக் கொண்டே வந்தார். யானை களைத்துத் தும்பிக்கை வழியே நுரையொழுக்கியது; வாய்வழி குருதி கொட்டியது; இறுதியில் திரிசந்தி க்ஷேத்திரத்தை அடைந்த போது அதன் பலமெல்லாம் அடங்கி மூச்சும் அடங்கித் தரையில் சாய்ந்தது. தரையில் விழுந்த உடனே கயமா உருமாறி அரக்க உருவாகியது. பாலகணேசரோ துன்பம் ஏதுமின்றித் தன் தாயைச் சென்றடைந்தார். திரிசந்தி க்ஷேத்திரத்தில் மகிழ்ச்சி நிலவியது.

கூடாசுரன்

ஆவிசயன் அழிவை அறிந்து சிந்து பதறிக் கோபித்தான். ஆனைமுகக் குழந்தைக்கு இரண்டாம் வயது தொடங்கிவிட்டது என்பதை உணர்ந்ததும் அவன் கோபம் உச்சநிலை அடைந்தது. கூடாசுரன் என்றொரு கொடிய அசுரனை அழைத்து எவ் விதத்திலாவது ஆனைமுகக் குழந்தையை அழித்து வா என ஆணையிட்டான். தலைவன் நிலைமையையும் துன்பத்தையும் புரிந்துகொண்ட கூடாசுரன் எவ்வாறேனும் ஆனைமுகக் குழந் தையைக் கொன்றுவிடத் தீர்மானம் செய்தான். முன்னே சென்ற அசுரர் யாவரும் எவ்வாறு அழிந்தார்கள் என்பதை ஆராய்ந்தான். 'அவர்கள் யாவரும் பாலகணேசரின் எதிரில் சென்றார்கள்; அல்லது அவர் பிடியில் அகப்பட்டார்கள். ஆகவே இறந்து பட்டனர். தான் அவர் எதிரிலும் செல்லாமல் பிடியிலும் அகப் படாமல் இருப்பின் அவரை அழிப்பது திண்ணம்' என எண்ணினான். ஆகவே அத்றகேற்ப ஓர் உபாயத்தைத் தேர்ந்தான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திரிசந்தி க்ஷேத்ரத்தில் உள்ளார் உண்ணும்படிக்கு ஊருணி ஒன்று இருந்தது. அதைக் கண்டதும் அசுரன் ஊருணியில் கொடிய விஷத்தைக் கலந்துவிட்டான். பிறகு அதன் விளைவை அறிய மேக மண்டலத்திற்கு அப்பால் மறைந்து நின்று பார்த்துக் கொண்டிருந்தான். சில முனிகுமாரர்கள் அவ்வூருணிக்குச் சென்று நீர் அருந்தினர்; சில முனிவர்களும் அவ்வூருணி நீரைப் பருகினர். ஆனால் பருகிய அக்கணமே கடுவிடம் தலைக்கேறத் தரையிற் சாய்ந்தனர். ஆங்கு வாழ்ந்துகொண்டிருந்த அனைத்து முனிவரரும் அவர்தம் குடும்பங்களும் அரமகளிரும் மற்றும் எல்லாரும் ஊருணிக்கரையை அடைந்தனர். ஊருணிக் கரையில் இருந்த மரங்களும் கடுகாளத்தின் நாற்றம் பெறலால் காய்ந்து போயின. இறந்த குழந்தைகளை எண்ணி எல்லாரும் கதறி அழுதனர். அவர்கள் துன்பைக் கண்ட நெடுந்துண்ட முகத்து நாயகர் அருள் கொப்பளிக்க அவ்வூருணியை நோக்கினார்; வெந் நஞ்சு அமிழ்தாகியது; காய்ந்த மரமும் தழைத்தது; இறந்தவர் எழுந்தனர். அப்பால் பருகு நீரில் நஞ்சு கலந்த பாவி யாரெனத் தெளிந்தார்; நெற்றிக் கண்ணைத் திறந்து வானத்தூடு வெந் நோக்கு நோக்கினார்; அவ்வளவில் கூடாசுரன் சாம்பராயினான். கூடாசுரன் அழிந்தமை அறிந்த சிந்து வாட்டம் கொண்டான்.

விகிர்தாசுரன்

ஆனைமுகக் குழந்தைக்கு இரண்டாம் பிராயம் முடிந்து மூன்றாம் பிராயம் தொடங்கியது. திரிசந்தி க்ஷேத்திரத்தில் யாவரும் துன்பின்றித் தம் நோன்புகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தனர். ஆனைமுகக் குழந்தையைக் கொல்ல அனுப்பிய அசுரர் அனைவரும் அழிந்ததால் அதிக துக்கமும் அதிக கோபமும் கொண்டிருந்தான் சிந்துராஜன். அக்குழந்தை மேலும் வளர வளரத் தனக்கே பேரபாயம் என உணர்ந்த சிந்துவால் அமைதியாய் இருக்க இயலவில்லை. விகிர்தாசுரன் என்றொரு வெஞ்சம வீரனைத் திரிசந்தி க்ஷேத்திரத்திற்கு அனுப்பினான். அவனும் பாலகணேசர் செல்லுமிடந்தோறும் அவர் அறியாமல் பின்சென்றான். ஒருநாள் பாலகணேசரும் மற்றும் சிலரும் ஒரு தண்டலை சூழ்ந்த தாமரைத் தடாகத்தின் கரையில் மலர் கொய்து மகிழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தனர், அப்போது பாலகணேசரைப் பற்றிக் குளத்துள் இழுத்துக் கொல்ல எண்ணிய அவ்வசுரன் மீன் உருக்கொண்டு நீருட்புக்கான். அதனால் தடாகத்தில் பேரொலி உண்டாயிற்று; பேரலை உருவாயிற்று; இடையிடையே மலைபோல் மேனிகொண்ட மகர மீனொன்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

துள்ளித் திரிந்தது. கண்டார் கணேசர்; புன்னகைத்தார். மீனாக வந்து தானாக என் கைப்பட்டாய் எனக் கூறி அதனைப் பிடித்து இறுக்கிப் பிழிந்து கரைக்கண் கிடந்த குறும்பொறைமேல் மோதினார். ஆவி அகன்ற மீன் உடல் அசுர உடலாகி அங்கே கிடந்தது.

இடும்பாசுரன்

விநாயகரும் விளையாட்டுப் பிள்ளைகளும் மீனாய் வந்த அரக்கன் அழிந்தபின் தங்கள் தங்கள் அகம் நோக்கிப் புறப் பட்டார்கள். ஆனால் செல்லும் வழியில் மலையாய் நின்றான் ஓர் அசுரன். அவன் பெயர் இடும்பாசுரன். இளஞ்சிறார்கள் தப்பிச் செல்ல எத்திசையிலும் இடமில்லை என்னும்படி விலங்கல் உருக்கொண்டு இறுமாந்து நின்றான் இடும்பாசுரன். பிள்ளை யாரைக் கொல்லுவதே அவன் குறிக்கோள். அம்மலையைப் பார்த்த ஐங்கரச் செம்மல் மனத்துட் சினந்து ஹுங்காரம் செய்தார். ஹுங்கார ஒலி வெளிப்பட்ட அக்கணமே வானுற்று வயங்கிய மாமலை வெடியுற்றுப் பிறங்கலாகிப் பாறையாகிப் பரலாகி மணலாகி அறலாகி இருந்த சுவடும் தெரியாமல் அழிந்தொழிந்தது. இடும்பாசுரன் இறந்தான்.

அனைத்தும் ஆனைமுகனே

இவ்வாறு பல அசுரர்களையும் பாலகனாகிய களிற்றுமுகன் வென்றழித்துப் பல விளையாடல்கள் புரிந்து யாவரையும் மகிழ்வித்தார். திரிசந்தி க்ஷேத்திரம் முனிவர்களுக்கு மிகவும் பாதுகாப்பான இடமாய் அமைந்தது. பிள்ளையாருக்கு நான்காம் பிராயம் வந்தது. அங்கு மறைந்து வாழும் முனிவர்களையும் தேவர்களையும் போலவே உமையம்மையும் பரமேசுவரரை நித்தமும் முறைப்படி பூஜித்து வந்தார். ஒருநாள் உமையம்மை அவ்வாறு பூசனை புரிந்துகொண்டிருக்கும்போது மூத்த பிள்ளையார் எம்பிராட்டியின் மடிமீது அமர்ந்து ஸ்தன்யபானம் வேண்டினார். தேவியோ பூசனை செய்யும் ஆர்வத்தில் குழந் தையைத் தரையில் விட்டுவிட்டு மீண்டும் சதாசிவ சொரூபியைத் தியானம் செய்யத் தொடங்கினார். அவ்வெல்லையில் அன்பருக்கு அருளும் பரம பாவன மூர்த்தி தானே சதாசிவமாய் உமையம் மைக்குக் காட்சி அளித்தார். "ஆனைமுகத்தோனே சதாசிவன்; ஆனைமுகத்தோனே பரப்ரஹ்மம்; ஆனைமுகத்தோனே உருத்திரன்; ஆனைமுகத்தோனே விஷ்ணு; ஆனைமுகத்தோனே பிரமன்; ஆனைமுகத்தோனே அண்டமெலாம்; ஆனைமுகத்தோனே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உள்ளதுமாய் இல்லதுமாய் எங்கும் நிறைந்தவனாய் மன்னும் ஆனந்தமூர்த்தி'' என்ற மெய்யுணர்வு பெற்ற மலைமகள் ஐயனைப் பிழைபொறுக்க வேண்டினாள். அன்றுமுதல் ஆனை முகன் காட்டிய அச்சதாசிவ வடிவையே மனத்துள் நிறுத்தித் தியானம் செய்துவரலானார்.

கர்த்தமன்

ஒரு நாள் இனிய மாலைப் போதில் உமையம்மையுட் முனிபத்னியரும் தங்கள் தங்கள் குழந்தைகளோடு வெளிமுற்றத்தில் அமர்ந்து மகிழ்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது இனித்த முகமும் எடுப்பான தோற்றமும் மிடுக்கான நடையும் கொண்ட புதியவன் ஒருவன் அங்கே வந்தான். அவன் அவர்களை நோக்கி, ''நான் பற்பல தேசங்களையும் சுற்றி வருகிறேன்; இதுபோன்ற ரம்யமான ஓரிடத்தை இதுவரை கண்டதில்லை; நான் இங்கேயே தங்க விரும்புகிறேன். எனக்கு ஏராளமான வித்தைகள் தெரியும். அவற்றால் குழந்தைகளையும் மற்றோரையும் மகிழ்விப்பேன்'' எனக்கூறிச் சில வித்தைகள் செய்துகாட்டினான். மண்ணை எடுத்து அவர்கள் கையில் கொடுத்து மூடிக்கொள்ளும்படிக் கூறுவான்; சற்று நேரம் கழித்து அதைத் திறந்து பார்க்கும்படிக் கூறுவான்; அது அப்போதலர்ந்த மணமிகு மல்லிகையாய் இருக்கும். பரற்கற்களை எடுத்து ஒவ்வொருவர் கையிலும் ஒன்று கொடுப்பான். அவை அவர் அவர் வேண்டின வேண்டின இனிப்புப் பண்டமாய் மாறும். யாவரும் அவன் செய்த வித்தைகளையெல்லாம் கண்டு அதிசயித்தனர். பிறகு அவன் ஒரு குழந்தையைத் தூக்கி விழுங்கி விட்டான். யாவரும் ஹாஹா என்று திகிலடைந்து கொதித்து எழுந்தனர். அவன் சிரித்தபடியே அக்குழந்தையை வெளிப்படுத்தினான். அக்குழந்தை உடல் முழுவதும் மணக்க உற்சாகத்தோடு குதித்துக் கும்மாளமிட்டது. அதைப்பார்த்த மற்றொரு குழந்தை ''என்னையும் எடுத்து விழுங்கி விடு'' என்றது. அவனும் அக்குழந்தையை அன்புடன் தூக்கி விழுங்கினான். சற்று நேரத்தில் மீண்டும் வெளிப்படுத்தினான். இவற்றை எல்லாம் பார்த்த பெண்களும் குழந்தைகளும் அதிசயித்தனர். ஆனால் அனைத்தும் அறிந்த ஆனைமுகக் குழந்தையோ அவனைப் பார்த்தபடியே அமர்ந்திருந்தது. அப்புதியவன் பிள்ளையாரைப் பார்த்து ''உன்னையும் விழுங்கி வெளிப்படுத்துகிறேன்! வா'' என்றான். உலகெலாம் உண்டு உமிழ்ந்து காத்து அளித்து அழிக்கும் எம்பிரான் இசைந்தனன்போல் எழுந்து வந்தார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவனும் அவரை ஆர்வத்துடன் தூக்கி வாயினுள் போட்டுக் கொண்டான். சிறிது நேரத்தில் அவன் குழந்தையை வெளிப் படுத்துவான் என்று எல்லாரும் எண்ணிக்கொண்டிருக்க அவ் வஞ்சகன் திடீரென்று விரைந்தோடலானான். எல்லாரும் கலங்கிக் கூக்குரலிட்டனர். "ஐயோ! விளையாட்டு என எண்ணி மோசம் போனோமே! செப்பிடு வித்தையென்று மதிகெட்டு எண்ணினோமே!! ஆனைமுகக் குழந்தையை அநியாயமாய் இழந்தோமே!!!" எனக் கதறினர். அப்போது கலங்கி நின்ற தேவியின் முகத்தில் களிற்றுமுகன் ஆவிர்பவித்து மெல்ல மடிமீது அமர்ந்தார்; மாயம் வல்ல அந்த வஞ்சகனைத் தும்பிக் கையாற் பற்றியிழுத்தார்; அவன் கன்னத்தில் ஓர் அறை அறைந்தார். அவன் தலை சுற்றியது; உயிர் வற்றியது; ஆயுள் முற்றியது; கபட உடல் கடுகி மறைந்தது; மெய்யான அரக்க உடல் வெளிப்பட்டுக் கிடந்தது; அவன் கணேசரைக் கொல்லு வதற்காகச் சிந்துவால் அனுப்பப்பட்ட கர்த்தமன் என்ற அசுரன். இவ்வாறு பல லீலைகளைச் செய்துகொண்டிருந்த விநாயகருக்கு வயது ஐந்து பூர்த்தியாயிற்று.

கடகாசுரன்

கர்த்தமன் அழிந்தது கேட்ட சிந்து கடகனை அனுப்பினான். கடகனோ ஒட்டக வடிவெடுத்து திரிசந்தி க்ஷேத்திரம் நோக்கி வந்தான். ஒட்டகம் விரைந்து எல்லையில் வருவதை வித்தக விநாயகர் அறிந்தார்; அதனை நோக்கி வேடிக்கை காண வருவார்போன்று விரைந்து வந்தார்; அசுரன் தன்னைக் குறி வைத்து அணுகும் முன்னம் அவன் தலையைக் குறிவைத்துத் துதிக்கையாற் பற்றித் திருகினார்; துணியை முறுக்கிப் பிழிவது போல தலையைப் பிடித்துக் கழுத்தை முறுக்கினார். அவ்வசுரகன் மூச்சு முட்டிக் கால்களை உதைத்துக்கொண்டு காசினியில் வீழ்ந்தான். ஒட்டக உடல் மாறி அசுர உருவாய் அவன் உடல் அங்கே கிடந்தது.

சாயாசுரன்

சின்னாட்களில் கடகாசுரன் கதி சிந்துவுக்குத் தெரிந்தது. சினந்த சிந்து, ஒருவனுடைய நிழலையே பிடித்து அவனை இழுத்து ஒடுக்கி அழிக்கும் வல்லமை வாய்ந்த சாயாசுரன் என்பானை திரிசந்தி க்ஷேத்திரத்திற்கு அனுப்பினான். அவனும் அவ்விடத்தை அடைந்து மாலைப் போதில் நீண்ட நிழல் விழுமளவும் காத்திருந்து ஐயனது நிழலைப் பற்றி வலிந்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இழுத்தான். அன்பர்களுக்கு நம்பிக்கையாய் விளங்கும் தும்பிக்கை விநாயகர் 'தம்மை இழுப்பார் யார்?' எனப் பார்ப்பார் போல அவன் நின்ற திசைநோக்கி விழித்துப் பார்த்தார். விழித்த பார்வை சுட்டிட வெந்து நீறானான் நீசக் கருநிருதன்.

சஞ்சலாசுரன்

சாயாசுரன் உடல் நீறாய்ச் சாய்ந்தது கேட்டு உள்ளம் சரிந்தான் சிந்து; மனம் சஞ்சலமடைய இனமானம் மிக மேல்விளைவு நோக்காது சஞ்சலாசுரன் என்பானை சடுதியில் விளித்துப் பிள்ளையார் உயிரைக் கொள்ளை கொண்டுவா என்று மீறுதற்கரிய ஆணையிட்டு அனுப்பி வைத்தான். அவனும் திரிசந்தி க்ஷேத்திரத்தை அடைந்து 'எவ்வாற்றான் அப்பெரு வயிற்றோன் உயிர் வெளவுவேன்?' என எண்ணிக்கொண்டு நின்றிருந்தான். அப்போது பால கணபதியும் அவருடைய தோழர்களும் பந்தெடுத்துக் கொண்டு வந்தார்கள். அவ்வசுரனும் ஒரு முனி குமாரன் உருவெடுத்துக் கொண்டு அவர்களோடு பந்து விளையாடினான். அவனை அரக்கன் என்று அறிந்துகொண்ட ஆனைமுகர் அவனைப் பந்தால் அடித்து உயிர் பறித்தார். சிந்துவின் நெஞ்சம் நொந்தது.

சிறு விளையாடல்

இவ்வாறு ஐந்து பிராயத்து ஐங்கரன் அதிசய விளையாடல்கள் புரிந்துவரும் நாளில் ஒருநாள் விளையாட்டாக ஒரு முனிவர் வீட்டுக்குச் சென்று தாங்க முடியாத கொட்டமடித்து விளையாடிக் கொண்டிருந்தார். முனிவர் த்யானம் செய்ய முடியாமல் பிள்ளையார் கத்தினார்; கும்மாளம் அடித்தார்; அவர் மனத்தை ஒருமுகப்படுத்த முடியாமல் திண்டாடினார். ஆனால் அக்குழந்தையின் அழகிய பிரகாசமான மலர்ந்த முகத்தைப் பார்த்தபோது அக்குழந்தையிடம் பற்று மிகுந்தது. அக்குழந்தையோ அங்கிருந்த பொருள்களை எல்லாம் இடம் மாற்றி வைத்தது; வெல்லம் முதலிய இனிப்புப் பொருள்களைச் சுவைத்துத் தின்றது. முனிவரின் மனைவி இவற்றை எல்லாம் மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டே இருந்தார். பிறகு முனிவரால் தியானம் ஜபம் முதலியன செய்ய முடியாமல் இருப்பதைக் கண்டு அக்குழந்தையைப் பிடித்துக் கொண்டு, "வா, உன்னை உன் அம்மாவிடம் கொண்டுபோய் விட்டு நீ செய்த விஷமங்கள் எல்லாவற்றையும் சொல்கிறேன்; பார்" என்று சொல்லிக் குழந்தையை அழைத்துக் கொண்டு தேவியின் இல்லம் சென்றார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அங்கு உமாதேவியிடம் குழந்தையை விட்டுவிட்டு மீண்டு தம் குடிலுக்கு வந்தார். என்னே அதிசயம்! அங்குப் பிள்ளையார் விளையாடிக் கொண்டிருக்கிறார். அவள் இந்த அதிசயத்தைத் தன் தோழியுடன் பகிர்ந்து கொள்ள எண்ணித் தோழியின் வீட்டிற்குச் சென்றாள். அவள் தோழியோ அவளை முந்திக் கொண்டு இதே அதிசயத்தைக் கூறினாள். மிக்க அதிசயம் அடைந்த இருவரும் மற்றொரு தோழி வீட்டிற்குச் செல்ல அத் தோழி வியப்பு உமிழும் விழிகளோடு எதிரே வந்தாள். அவளும் இதே அதிசயத்தைக் கூற எல்லாருக்கும் பெரு வியப்பு உண்டா யிற்று. இந்தப் பிள்ளையார் எல்லா வீடுகளிலும் ஒரே சமயத்தில் இப்படியொரு சிறு குறும்பு செய்திருக்கிறார் என்பதுணர்ந்த திரிசந்தி க்ஷேத்திர வாசிகள் வியப்பும் விம்மிதமும் அடைந்தனர். ஐயனின் அளவற்ற பெருமையை உணர்ந்து புளகாங்கிதம் அடைந்தனர். அம்மங்கையர்கள் அத்தெய்வக் குழந்தைக்கு அப்பமும் மோதகமும் செய்து மகிழ்வுடன் அளித்தனர். ஒரே சமயத்தில் எல்லார் இல்லங்களிலும் ஆனைமாமுகத்துடன் ஆடல்செய்து களித்த ஐயன் அனைவருக்கும் அருள் புரிந்தார்.

நால்வகை ஆயுதம்

திரிசந்தி க்ஷேத்திரத்தில் சீரும் சிறப்புமாய் வளர்ந்துவரும் ஐயன் விநாயகருக்கு ஆறாம் வயது தொடங்கியது. அப்போது கைலைநாதனையும் மகேஸ்வரியையும் கண்டு பணிந்து செல்ல விருப்பம் கொண்ட விசுவகர்மா திரிசந்திக்கு வந்தார். பெரியோர் களையும் தெய்வத்தையும் காண வெறுங்கையோடு செல்லக் கூடாது என்பார்கள். விசுவகர்மா சூரியாம்சம் பொருந்திய சூலம், பரசு, பாசம், பங்கஜம், அங்குசம் என்ற வடிவங்களில் அமைந்த ஐந்து அற்புதமான ஆயுதங்களைச் செய்து எடுத்துக் கொண்டு வந்தார். சாந்தி நிலவும் திரிசந்தி க்ஷேத்திரத்தை அடைந்து ஆனைமுகத்து ஐயனையும் அம்பிகையையும் பரமனையும் பணிந்து காணிக்கைகளாகக் கொண்டு வந்த ஆயுதங்களை அவர்கள் எதிரே வைத்தார்; பரசு, பாசம், பங்கஜம், அங்குசம் ஆகிய நான்கையும் பாலகணேசருக்கு அர்ப்பணம் செய்து சூலத்தைப் பிநாகபாணிக்கு அர்ப்பணம் செய்தார். பாலகணேசரும் விசுவகர்மாவுக்கு ஆரருள் புரிந்தார்.

விருகாசுரன்

விசுவகர்மா வணங்கிச் சென்றபின் பாலகணேசரும் தம்முடைய தோழர்களுடன் மகிழ்ந்து விளையாடி இனிமை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

யாகப் பொழுதுபோக்கி வந்தார். சஞ்சலாசுரன் சாவுற்ற செய்தியைக் கேட்ட சிந்து விருகாசுரன் என்ற வலிமை மிக்க அரக்கனை ஐயனைக் கொன்று வருமாறு அனுப்பினான். அவனும் திரிசந்தி க்ஷேத்திரத்தை அடைந்து பாலகணேசரும் அவருடைய நண்பர்களும் விளையாடிக் கொண்டிருக்குமிடத்தை அடைந்து எவ்வுபாயத்தால் ஆனைமுகத்தானை அழிக்கலாம் என ஆலோசித்தான். இறுதியில் செந்நாய் உருவம் கொண்டு ஆனைமுகச் செம்மலை நோக்கிப் பாய்ந்து வந்தான். பால கணேசர் அங்குசப் படையை எடுத்து அந்நாயின்மீது எறிந்தார். அங்குசத்தின் அடியும் குத்தும் தாங்காது அவ்வரக்கன் அக் கணமே இறந்தான். அவன் பூத உடல் பூமியில் கிடந்தது. விசுவ கர்மா அளித்த படைக்கலங்களில் ஒன்றன் வலிமையைச் சோதித்தது போல் ஆயிற்று அந்நிகழ்ச்சி. ஆனைமுகருக்கு ஏழாம் வயது தொடங்கியது.

கலாப கணபதி

வினதையும் கத்துருவும் காசியபர் என்ற முனிவருடைய மனைவியர். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் தீராப் பகை கொண்டவர்கள். வினதைக்கு ஜடாயு, சம்பாதி, சேனன் என்ற மூவரும் புதல்வர்கள். மூவரும் பறந்து செல்லும் ஆற்றல் மிக்க கழுகரசர்கள். கத்துரு நாகர்களைப் புத்திரர்களாகப் பெற்றவள்.

ஒரு சமயம் வினதையைக் கத்துரு சிறைவைத்திருந்தாள். காலப் போக்கில் வினதை விடுபட்டுத் தனியே வாழ்ந்து வந்தாள். அப்போது கத்துரு வினதையின் இருப்பிடத்திற்கு வர அவளை வரவேற்காமல் புறக்கணித்தாள். வினதையின் பிள்ளைகளும் அவளை வரவேற்காமல் விரட்டிவிட்டார்கள். அதனால் ஆத்திர முற்ற கத்துரு வினதையின் பிள்ளைகளைப் பிடித்துவந்து சிறை வைக்கவேண்டுமென்று தன் பிள்ளைகளைப் பார்த்துக் கூறினாள். அவள் மூத்த மகனாகிய ஆதிசேஷனும் உடனே பெரும்படை யோடு புறப்பட்டுச் சென்றான். அவனுக்குத் துணையாக வாசுகி முதலான எட்டு நாகங்களும் தம்படையுடன் சென்றன; கடுமையான போருக்குப்பின் பறவையரசர்களாகிய மூவரையும் பிடித்துவந்து சிறையிட்டனர்.

வினதை மிக்க மனவருத்தம் கொண்டு தன் கணவராகிய காசியப முனிவரைச் சரணடைந்தாள். அவர், "உன் வயிற்றில் வலிமை வாய்ந்த முட்டையொன்று தோன்றும். அம்முட்டையை உடைக்கும் ஆற்றல் விநாயகப்பெருமான் ஒருவருக்கே உண்டு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அம்முட்டையினின்றும் மயிலொன்று தோன்றும். அதனை ஆனைமுகன் தன் வாகனமாகக் கொள்வர். நல்லோர் வல்லோ ராவர்; அல்லோர் அழிவர்'' என வரம் ஈந்தார். அவ்வாறே வினதை ஒரு முட்டையை ஈன்றாள்; அதனைக் கண்ணை இமை காப்பதுபோல் காத்து வந்தாள்.

அவ்வாறிருக்கும் நாளில் ஒரு நாள் திரிசந்தி க்ஷேத்திரத்தில் பாலகணேசரும் மற்ற பாலகர்களும் விளையாடிக் கொண்டிருந் தார்கள். விளையாட்டிலேயே நாட்டம் கொண்ட சிறுவர்கள் விநோதமான ஒலியொன்றைக் கேட்டனர். உடனே விளை யாட்டை விட்டு ஒலி வந்த திசையை நோக்கினர். ஆங்கு அவர்கள் அதுவரையில் அறிந்திராத அதிசயப் பறவை ஒன்றைக் கண்டனர். அப்பறவையின் வண்ணமும் அழகும் அச்சிறார்களின் உள்ளத்தைக் கவர்ந்து இழுத்தன. அதனைப் பிடித்து வந்து அதனுடன் விளையாட எண்ணினர். அதனால் பாலகணேசர் அதனைப் பிடிக்கும்பொருட்டு அதன்பின்னே சென்றார். அப்பறவை கிருஷ்ணாசுரன் என்னும் அசுரன். அவன் பாலகணேசரைக் கொல்வதற்காகச் சிந்து ராஜனால் அனுப்பப் பட்டவன்; மாயையால் பறவையுருக் கொண்டு வந்தவன். கணபதி அப்பறவை பின்னே சென்றார்; அதுவும் சென்றது, அவர் அதன்பின் விரைந்தோடினார்; அதுவும் விரைந்து பறந்தது; தூரத்தில் இருந்தால் எங்கோ பார்ப்பதுபோல் அலட்சியமாய் நின்றிருந்தது; பிடிபட்டுவிடும்போல் பாசாங்கு செய்தது. இவ்வாறாக ஆனைமுக பாலனை அப்பறவை வெகுதூரம் தனியே அழைத்துவந்துவிட்டது. தனிப்பட்டு நிற்கும் தரும மூர்த்தியை எளிதில் கொன்றுவிடலாம் என்ற எண்ணம் போலும்! அரக்கன் வஞ்சனையை அறிந்தார் ஆனைமுகத்தார்; சினம் கொண்டார்; பாசம் எடுத்துப் பகைவன்மீது வீசினார். பாசத்தால் பிணிப்புண்ட நிசாசரன் உடல் உயிரற்று உதிர்ந்தது; அவன் உண்மை சொரூபமும் தெரிந்தது. அவ்விடத்திற்கு அருகில் தான் வினதை தன் முட்டையுடன் தவம் செய்து வந்தாள்.

பறவை உருவில்வந்த பாதகனைப் பாசத்தால் கொன்றான் ஒரு பாலகன் எனக் கேள்வியுற்ற வினதை அப்பாலகனே விநாயக மூர்த்தியாக வேண்டும் என நிச்சயம் கொண்டாள். உடனே பாரமிக்க தன் முட்டையுடன் ஆனைமுகத்தர் எதிரே வந்து பணிந்து அவரெதிரில் அம்முட்டையை வைத்தாள். ஆனைமுகத்தர் தம் விரல் நுனியால் அதனைக் கீற அதன் ஓடு பிளந்தது; அதனுள்ளிருந்து அழகிய மஞ்ஞையொன்று வெளிப் பட்டது; வெளிப்பட்ட உடனே அது விரைந்து வளரத் தொடங்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கியது; பிரம்மாண்டமான உருவம் பெற்றது; அளவிலா வலிமை பெற்றது; ஏழு வயது பாலகன் அவ் ஏறு மயில்மீது ஏறியமர்ந்தார். அதனைக் கண்ட வினதை அகமும் முகமும் மலர்ந்து அவரடி பணிந்தார். அடியார்க்கு அருளும் அம்மான் வினதையை நோக்கி, "வேண்டின வேண்டின வரங்கள் ஈவோம்" என முகமலர்ந்தார். வினதை மீண்டும் பரமன் அடிபணிந்து, "நாகர்களால் சிறைப்பட்ட என் குமாரர்களைச் சிறைவீடு செய்து காக்க வேண்டும்" என வேண்டினாள். அவ்வாறே செய்வோ மென அருளிய ஆனைமுகன் கலாப மயில்மீதமர்ந்து தன் நண்பர்கள் இருந்த இடத்திற்குப் பறந்து வந்தார்; மீண்டும் ஒரு முறை மயூரேசர் ஆயினார்.

பறவை அரசர்களுக்கு அருள் பாலித்தது

கணேச மூர்த்தி கலாபமயிலேறி ககனவழியே காசினியெங்கும் சுற்றி வருவார். தம் நண்பர்களையும் தம்மோடு அழைத்துச் செல்வார். எங்கணும் சுற்றி இன்புற்று விளையாடி திரிசந்தி க்ஷேத்திரத்தை வந்தடைவார். ஒகரம் ஏறிய ஓங்கார மூர்த்திக்கு ஒன்பது வயது முடிந்தது. ஒருநாள் வழக்கம்போலவே பால கணேசர் தம் நண்பர்களுடன் தோகைமேல் ஏறிப் பல இடங் களுக்கும் செல்லும்போது அழகிய மலைகள் சூழ்ந்த அற்புத மான ஓர் இடத்தை அடைந்தார். நெருங்கிய சோலைகளும் மணம் வெடிக்கும் மலர்களும் பண்பாடும் பறவைகளும் ஒளி வீசும் மணிக்குவியல்களும் மலைவீழ் அருவிகளும் அவ் விடத்தை ஓர் அதிசய உலகாக்கின. அவ்விடத்து அருவியொன்று தாமரைத் தடாகத்தைத் தண்ணென்ற புனிதப் புனலால் நிரப்பி வெளியே சிற்றோடையாய்ப் பரிணமித்தது. இயற்கை எழில் கொஞ்சும் அத்தடாகத்தில் தாமும் தம் நண்பருமாய் விருப்புடன் துளைந்து விளையாடினார் விநாயகப் பெருமான். நீண்டநேரம் நீரில் ஆடியபின் நிமலரும் நண்பரும் கரையேறினர். அவர்கள் தம் இருப்பிடத்திற்கு மீண்டு செல்ல முனைந்தபோது நாகிள மங்கையர் சூழ நாக கன்னிகை ஒருத்தி அங்குப் புனலாடப் போந்தாள். அவள் அட்ட நாகர்களில் ஒருவரான வாசுகியின் புதல்வி. அவள் பால கணேசரின் ப்ரஸன்ன முகத்தையும் முக காந்தியையும் மூவுல்கையும் தன்னுள் அடக்கும் பேரகட் டையும் பார்த்து, "யார் கொல் இவர்?" என எண்ணி நின்றாள். பின்னர் பண்புடன் பெயர்ந்து பரமன் அருகடைந்து பணிந்தெழுந்து, "தாங்கள் யாரென யான் அறியலாகுமோ?" என வினவினாள். பால கணேசரும் "பஞ்சமுகப் பரமனின் புதல்வன் யான்" என்றார். என்று அவர் கூறலும் மீண்டும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பணிந்தெழுந்த பாலிகை, "எண்ணிலாத் தவம் செய்தாரும் எய்துதற்கரிய பேற்றினை யான் பெற்றேன்; எண்டோள் ஈசன் பெற்ற மகனைக் கண்ணாற் காணும் பாக்கியம் செய்தேன்; உயர்ந்தோங்கிய மலையரசன் பெற்ற உமையம்மையின் உதரத்துதித்த உத்தமன்றன் இணையடி போற்றிப் புனிதமானேன்" எனப் பலவாறு துதித்தாள். பின்னர் பாதலத் துறையும் நாக கன்னிகை தான் என்பதையும் பணிகளுக்கு அரசென வீற்றிருக்கும் வாசுகி தன் தந்தை என்பதையும் கூறினாள். மேலும் தன் அரண்மனைக்கு வந்து தான் செய்யும் பூஜை முதலிய மரியாதைகளை ஏற்றுத் திருவருள் பாலிக்க வேண்டுமென்று வேண்டினாள்.

ஜடாயுவும் சம்பாதியும் சேனனும் நாகருலகிற் கொடுஞ் சிறையில் வேதனைப்படுவதை எண்ணினார் விநாயகர். வினதைக்குக் கொடுத்த வாக்கைக் காக்கும் பக்குவகாலம் நெருங்கியதை உணர்ந்தார். ஆதலால் நண்பர்களையும் நண்பர் களுக்குத் துணையாய் நவிரத்தையும் நயன்மிகு தாமரைத் தடாகக் கரையில் நிறுத்தித் தாம் மட்டும் நாகலோகம் சேர்ந்தார். வாசுகி பெற்ற வனிதையும் முழு மனத்துடன் வரவேற்பு செய்து பூசனையும் சிறப்பும் புரிந்து போற்றினாள். அண்ணலும் பொன்மனப் பெண்ணுக்கு நன்மனத்தால் ஆசி நல்கி அரவரசன் வீற்றிருந்த அத்தாணி மண்டபத்தை அடைந்தார். அங்கு மாசுணத் தலைவனாகிய வாசுகி மணியணி பூண்டு கோசிகத் துகிலுடுத்து இயலொளி வீசும் நவரத்னங்கள் பதித்த ஜாம்பூநத சிங்கா தனத்தில் தன்னிகரற்ற தலைச்செம்மணி எங்கும் செவ்விள வெயிலெறிப்ப இறுமாந்து அமர்ந்திருந்தான்; ஐயன் வர வறிந்தும் வழிபாடு செய்தானல்லன்; வலிமைப் பெருக்கால் முறுகிய செருக்கனாய் வாளாவிருந்தான். தலைக்கேறிய செருக்கைத் தரையோடு அறைக்க எண்ணிய ஐயன் பன்னக அரசனுடைய பணமுடியின் மீது ஒளிர்ந்த செம்மணியைத் திருகிப் பறித்தார். அவ்வளவில் உரக வேந்தன் உரமிழந்து உளம் கலங்கி மூச்சுத் தடுமாறித் தரைமேல் வீழ்ந்தான். காவலாய் நின்ற வயவலி நாகர் பயம் மலிந்து நாற்றிசையிலும் சிதைந்தோடினர். கண்ணிய காலம் நண்ணியதென எண்ணிய முன்னவர் ஜடாயு வையும் சம்பாதியையும் சேனனையும் சிறைவீடு செய் தருளினார். அவ்வெல்லையில் மயக்கம் தீர்ந்து எழுந்த வாசுகி வன்மம் கொண்டு வரமுனிமுகனை வயவர் குழாத்தோடும் வந்தெதிர்த்தான். நாகவீரர் நாற்றிசையும் நலிந்தோட வாசு கியைப் பிடித்து மாதிரம் நடுங்க மோதிரமாக்கி ஆழி விரலில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அழகுற் அணிந்துகொண்டார். அரவரசன் அடைந்த அவல நிலை கேட்ட ஆதிசேஷன் சீற்றம் மிகக் கொண்டு சீறி எழுந்தான். ஆயிரமுகத்து அகிந்திரன் சீறி எழுதலும் பிணி முகத்தை எண்ணினார் பிள்ளையார். எண்ணிய அளவில் விரைந்து அங்குத் தோன்றிய மஞ்ஞை தன் இறகால் விசிற நாகவீரர் சிதறினர்; ஒருவர்மேல் ஒருவர் வீழ்ந்து புரண்டனர், மயூரம் சிலரை நகத்தாற் கீறியது; சிலரை அகவல் ஒலியால் அடக்கியது; சிலரை அலகால் கொத்தியது; சிலரை மொத்தியது. அரவினங்கள் அல்லலுற்று ஆற்றலற்று மறைவிடங்களில் பதுங்கின. மயங்கித் தியங்கிக் கிடந்த சேடன் உடல்நடுவே ஒகரம் தன் அலகால் ஒரு கோடாய்க் கீறியது. பின்னர் அவனைப் பிணித்துக் கரிமுகப் பண்ணவன் முன்னே கொணர்ந்து நிறுத்தியது. ஐங்கரக் குரிசில் ஆதிசேடனை அரைஞான் ஆக்கித் தம் இடையில் அணிந்துகொண்டார். அப்போது ஆணவம் அழிய நாக கன்னியர் நடுங்கி ஓடிவந்து நாதன் பாதம் பணியச் சினம் தணிந்து நின்றார் செல்வ கணபதி. அக்கன்னியருக்கு அபயம் அளித்து அருள்சுரந்து பாதலத்தைப் பணிபதி ஆளப் பணித்து மீண்டும் அந்தப் பங்கயப் பொய்கையை அடைந்தார்.

கோராசுரன்

தான் அனுப்பிய தானவர் யாவரும் தம்முயிர் நீத்தமை அறிந்தும் சிந்துராஜன் ஆரண முதல்வனாகிய வாரண முகத்தானை உணரவில்லை. ஆகவே அவன் கோராசுரன் என் பவனை மயில்வாகன கஜமுகனைக் கொன்று வருமாறு ஏவினான். அப்போது பாதலம் புகுந்த பாலகணேசர் திரும்பிவந்தபாடில்லை. கணேசருடைய நண்பர்கள் கணேசரைக் காணாது பொய்கை யைச் சுற்றியிருந்த காடுகள், மலைகள், மலைமுழைகள், சோலைகள் ஆகிய இடங்களில் அவரைத் தேடிக் கொண்டிருந் தார்கள். அவ்விடத்தை அடைந்த கோராசுரன் கொக்கு உருவம் கொண்டு அச்சிறுவர்களைப் பிடித்து மீனை விழுங்குவது போல் விழுங்கிவிட்டான். பிறகு பாலகணேசர் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தான். பாதலம் புகுந்து பறவையரசர்களைச் சிறைவீடு செய்துவிட்டுத் திரும்பி வந்த கணேசர் தம் நண்பர் களைக் காணவில்லை. ஆனால் வெள்ளிமலைபோல் எதிரே நின்ற கொக்குருக் கொண்ட அசுரனைக் கண்டார். நடந்த நிகழ்ச்சிகளை அனுமானித்துக் கொண்ட ஐயனை விழுங்கும் பொருட்டு அங்காந்த வாயுடன் கோராசுரன் பாய்ந்தோடி வந்தான். பாய்ந்துவந்த பாதகனை பரசாயுதத்தால் வெட்டிக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொன்றார். ஆனைமுகத்தான் அருள்மிகு நோக்கால் அசுரன் உண்ட அருமை நண்பர்கள் மீண்டும் உயிர்பெற்றார்கள். பின்னர் கணேசரும் நண்பர்களும் திரிசந்தி க்ஷேத்திரத்தை அடைந்தார்கள். அப்போது பாலகணேசருக்குப் பத்து வயது முடிந்தது.

காரளன், விகாரன்

கோராசுரனின் கோர முடிவையறிந்த சிந்துராஜன் மேலும் இரண்டு கொடிய அசுரர்களை வருவித்தான். வந்தவர்கள் காரளன், விகாரன் என்பவர்கள். அவர்கள் இருவரும் மாயக் கொலை புரிவதில் வல்லவர்கள். அளவிலா வலிமை படைத்தவர்கள். அவர்கள் பாலகணேசரைக் கொன்றுவரும் உறுதியுடன் திரிசந்தி க்ஷேத்திரத்திற்கு வந்தார்கள். ஒருவன் காட்டெருமை உருவம் கொண்டான். மற்றொருவன் காட்டுப் பன்றியானான். இரண்டும் ஒன்றையொன்று துரத்தியும் முட்டியும் சண்டையிட்டுக் கொண்டே பாலகணேசர் இருக்கும் இடத்திற்கு வந்தன. வந்தவை இரண்டும் இரு அரக்கர்கள் என்று உணர்ந்த எம்பெருமான் தன் கைப்பாசத்தை அவர்கள் மீது எறிந்தார். பாசம் அவர்களைப் பிணித்தது; இருவரையும் இரு வேறு திசைகளில் இழுத்தது. அவர்கள் வேதனை தாங்காமல் அலறினார்கள்; மூச்சு விட முடியாமல் வேதனைப்பட்டார்கள்; அவர்களுடைய கண்கள் செருகின; வாய் குழறி நாக்கு வெளிப்பட்டது. இறுதியில் இருவரும் இறந்து விழுந்தார்கள். விழுந்தபின்னே அவர்கள் அரக்கர்கள் என்பதை அனைவரும் உணர்ந்தனர்.

பிறகு பல முனிவரர்கள் கணபதியை வந்து போற்றித் திருவருள் பெற்றுச் சென்றனர். இறுதியாகச் சிந்து மஹாபலிஷ்டனான ஊர்த்தன் என்பவனை அனுப்பிக் கணேசரைக் கொல்ல முயன்றான். ஊர்த்தன் வேங்கையின் உருக்கொண்டு வினையின் நீங்கிய முனிவர்கள் வாழும் திரிசந்தி க்ஷேத்திரத்தை அடைந்து தனியே வரும் சிறுவர்களையெல்லாம் அடித்துப் புசித்துக் கொண்டிருந்தான். கணேசரும் தனியே வருவதை எதிர்பார்த்துக் கொண்டு சுற்றிலும் இருந்த வனங்களில் திரிந்து கொண்டிருந்தான். தன் நண்பர்களைக் கொன்ற அரக்கன் தன்னையும் எதிர்பார்த்துக் கொண்டு இருப்பதை உணர்ந்த கணேசர் கானகம் சென்று அப்புலியைப் பிடித்து அதன் பற்களை உடைத்தார்; நன்கு புடைத்தார்; காதை நறுக்கினார்; மூக்கை அறுத்தார்; புலியுருவம் மாறியது; எதிரே நின்றான் அரக்கன். விநாயகரைக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கண்ட அரக்கன் உடலெல்லாம் நடுங்கியது. விநாயகர் அவனைப் பார்த்து, "உன்னைக் கொல்ல யாம் விரும்பவில்லை; உன்னை ஏவியவரிடம் சென்று நிகழ்ந்தவைகளைக் கூறு; அவரையும் கொல்லப் போகிறோம் என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறு" எனச் சொல்லி அவனை விரட்டியனுப்பினார். பின்னர் அந்தகனை அழைத்து இறந்த முனிகுமாரர்களை எழுப்பி திரிசந்தி க்ஷேத்திரத்திற்கு அழைத்து வந்தார்.

சிந்துவின் . சீற்றம்

மூக்கும் காதும் மானமும் இழந்த ஊர்த்தன் சிந்துவின் முன்சென்று நடந்தவற்றை நவின்றான். சீற்றம் கொண்ட சிந்து பெரும்படையொன்றைத் திரட்டிக் கனலாசுரன் என்ற பெருவீரனைத் தலைமையாக்கி விநாயகரைக் கொன்று வருமாறு விடுத்தான்.

திரிசந்தி முற்றுகை

காலனும் கண்டால் கதிகலங்கும் கனலாசுரன் தேரும் கரியும் பரியும் படையுடை வீரரும் புடைசூழச் சென்று திரிசந்தி க்ஷேத்திரத்தை நாற்புறமும் சூழ்ந்து முற்றுகையிட்டான். திரிசந்தியில் வாழ்ந்திருந்த தவத்தோர்கள் திகிலடைந்து திணறிச் செய்வதறியாது ஓடிச் சிவனடியே சரணென்று சார்ந்தார்கள். அன்பர்தம் அல்லலை அகற்றலே தம்பணியெனக் கொண்ட சடைமுடிப் பெருமானும் தம் அருகில் அமர்ந்திருந்த தோகை மயில் வாகனனாம் தும்பிக்கைப் பெருமானை நோக்கினார். நோக்கிய நோக்கின் குறிப்புணர்ந்த குஞ்சரமுகத்தான் வினதை பெற்ற விறல்மிகு மயூரத்தின்மீது ஏறிப் புறப்பட்டார். போருக்குப் புறப்பட்ட புதல்வன் முகம் நோக்கிக் கனலாசுரனைக் கடிதினிற் கொன்று வருக என வீரமிகு வாழ்த்துரை கூறித் தன் கைச் சூலத்தை அளித்து வழியனுப்பி வைத்தார்.

மயூரேசப் பெருமான் சங்கல்ப மாத்திரத்தால் நால்வகைப் படைகளையும் சிருஷ்டி செய்துகொண்டு கனலாசுரன் தானை எதிரே வந்தார். அவர்படை யுகாந்தகாலப் பெருங்கடல்போல் தோன்றியது. அக்கடலில் நீர் முகந்து செல்ல வந்த பெரு மேகங்கள் போல நாகங்கள் விளங்கின; அக்கடலில் பொங்கிக் கவிழும் அலைகள் போலக் கொய்யுளைப் புரவிகள் துள்ளித் திரிந்தன; கடலிடைத் தீவுகள் போலத் தேர்கள் பிரகாசித்தன; சமுத்திர மத்தியில் மகரங்கள் ஒளி பாய்ச்சி நீந்திச் செல்வதே போலச் சேனை நடுவே வயவலி வீரர்கள் வாள் சுழற்றி வென்றி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குறித்து விரைந்து சென்றார்கள். கணேசர் தலைமையிற் சென்ற கவனவாஹினியைக் கண்ட கனலாசுரன் முதலில் திகைத்தான். பிறகு கோப மிகுந்தவனாய் படைக்கலங்களைத் தொடுத்துப் போர் செய்தான். அவுண வீரர்களுக்கும் கணேசர் படைகளுக்கும் இடையே ஏற்பட்ட போருக்கு ஒரு முடிவே இராதுபோல் தோன்றியது. பாலகணேசர் பாசப்படையை எடுத்து அசுரப் படையின்மீது வீசினார். அவ்வளவில் அசுர கணங்கள் அழிந் தொழிந்தன. கனலாசுரன் கண்களில் கனல்தெறிக்க களத்தில் தன்னந்தனியே நின்றான். எதிரில் நின்ற ஆனைமுகக் குமாரனைக் கண்டு கடுங்கோபம் கொண்டு கட்கத்தை உருவிக்கொண்டு அவர் மீது பாய்ந்தான். பாலகணபதியும் வாளரக்கனும் கடும்போர் புரிந்தனர். அப்போது மயூரேசர் அசுரனின் ஒரு தோளை அறுத்தார்; உடனே ஆறுபோல் சீறிப் பாய்ந்த ரத்த வெள்ளத்தி னின்றும் லட்சோபலட்சம் ஆயுதம் தரித்த அசுர வீரர்கள் தோன்றினார்கள். அதனைக் கண்ட தேவப்படையும் பூதப் படையும் அஞ்சி நடுங்கின. ஆனைமுகரோ தம் நெற்றிக் கண்ணைத் திறந்து அவ்வீரர்களை நோக்கினார்; தோன்றிய அசுரர் நீறாயினர். கோபமும் மானமும் பொங்கக் கனலாசுரன் ருத்ராஸ்திரத்தை எடுத்து அபிமந்திரித்து விநாயகர்மீது ஏவினான். ஆனால் அந்த ருத்ராஸ்திரம் அம்பிகை தனயரின் அம்பறாத் தூணியில் அடங்கிவிட்டது. அருந்தவமியற்றி அரனிடமிருந்து பெற்ற அரிய ருத்ராஸ்திரம் பயனற்றுப் போனதைக் கண்ட கனலாசுரன் தண்டமொன்றேந்தி விநாயகர் தலையைத் தாக்க விரைந்தோடி வந்தான். தந்தி முகனார் தம் தந்தையளித்த சூலத்தை எடுத்துக் கனலாசுரனைக் கடிதின் வீழ்த்தினார்.

கனலாசுரன் மடிந்தது கேட்ட சிந்துவின் மனத்தில் சிறிதே அச்சம் தோன்றியது; சிறுவனாய் நின்ற கரிமுகன் வலிமையை எண்ணியெண்ணி மயங்கினான்; எவ்வாறு இவனை வெல்வ தென இடையறாது சிந்தித்தான். இறுதியில் இரவியும் மதியும் திரிசந்தி க்ஷேத்திரத்தில் ஒளி விளக்கம் செய்யக் கூடாதெனக் கட்டளையிட்டான்; திரிசந்தி இருள்மயமாயிற்று; அங்குப் பகலும் இல்லை; இரவும் இல்லை; பின்னர் வன்னியையும் வருணனையும் வரவழைத்து திரிசந்தி க்ஷேத்திரத்தில் தலை காட்டலும் கூடாதெனக் கட்டுப்பாடு செய்தான்; பாவகனும் புனல்வேந்தனும் அத்தலத்தை நீங்கினர்; அருமறைச் சடங்குகள் புரிய அக்கினி இல்லை; ஆறு குளங்கள் வடிந்து காய்ந்தன. திரிசந்தி க்ஷேத்திரம் துன்பமிகு தலமாயிற்று. உயிர் வாழ்க்கை உலைவுற்றது. தாங்கொணாத் துன்பமுற்ற தாபதரும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பண்ணவரும் களிற்றுமுகனைத் தஞ்சமென அடைந்தனர். தன்னடியார் திறந்து எப்போதும் தண்ணருள் புரியும் எம்பெருமான் தன் முகத்தமைந்த கண்கள் மூன்றையும் ஒருசேரத் திறந்து அருள்நோக்கு நோக்கினார். உடனே அங்கு ஆதவன் தோன்றினான்; அனல் வேந்தன் பூரித்தான்; புனல்வேந்தன் பொழிந்தான்; அம்புலி தண்ணொளி வீசியது. திரிசந்தியின் துன்பம் தீர்ந்தது; நித்ய கர்மானுஷ்டானங்கள் தடையின்றி நிகழ்ந்தன.

நந்திதேவர் தூது

திரிசந்தி க்ஷேத்திரத்தின் துன்பம் துடைத்த ப்ரஸன்ன வதனன் மற்ற தலங்களின் துன்பத்தையும் போக்கத் திருவுளம் கொண்டார். ஆகவே அம்மையப்பர் அருள் பெற்று பூத கணாதி படைகளோடும் இளவலாகிய முருகன் வீரபாகு முதலியவர் களுடனும், நந்திதேவரும் வீரபத்திரரும் தொடர்ந்து வர புறப் பட்டு கண்டக நகரத்து எல்லையளவும் சென்று அவ்வெல்லையில் பாடி அமைத்துக் கொண்டார். சிந்துராஜன் தன் தீய நெறி களைக் கைவிட்டு நன்னெறி படர்வான் என்ற நம்பிக்கை இல்லையேயாயினும் அவனுக்கும் ஒரு வாய்ப்பு நல்க எண்ணிய எம்பெருமான் அவனிடம் ஒரு தூதுவரை அனுப்ப ஆலோசனை செய்தார். தூதாகச் செல்பவர் சிறந்த தோற்றமும் நிறைந்த அறிவும் நுண்ணிய உணர்வும் திண்ணிய உடலும் கொண்ட வராய் இருத்தல் வேண்டும்; தன் நிலையும் மாற்றார் நிலையும் உற்றுணர்ந்து கடமை உணர்வுடன் தக்க காலத்தில் இடம் பொருள் ஏவல்களுக்கு ஏற்ப கசப்பான செய்தியையும் இனிய மொழியில் இயல்பாக எடுத்துச் சொல்லும் பேச்சாற்றல் மிக்கவராய் இருத்தல் வேண்டும்; ஆகையால் திருநந்தி தேவரே இதற்கு ஏற்றவர் எனத் தீர்மானம் செய்து அவரையே தூதுவராய்ச் சிந்துராஜ னிடம் அனுப்பி வைத்தார்.

நந்தியெம்பெருமானும் மயூரேசர் தாள் பணிந்து ககன மார்க்கமாய் கண்டக நகரடைந்து சிந்துராஜன் அரண்மனைக்குச் சென்றார். அரண்மனையில் அத்தாணி மண்டபத்தில் மந்திரிகள் பிரதானிகள் சேனாபதிகள் முதலியோர் சூழ்ந்திருக்க சிந்து ராஜன் அமர்ந்திருந்தான். எல்லையை வந்தடைந்த மயூரேசரை எவ்வாறு வெல்வது என ஆலோசனை நிகழ்ந்து கொண்டிருந்தது. அச்சமயத்தில் அரசவையை அடைந்த நந்திதேவரை சிந்துராஜன் நோக்கி "நீர் யார்? இங்கு எவ்வாறு வந்தீர்? வந்த காரியம் யாது?" என வெகுண்டு வினவினான். நந்திதேவர் தாம் அங்கே அமர்தற்குரிய இருக்கை இல்லாமையைக் கண்டு சங்கல்ப மாத்திரத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தால் சிறந்ததோர் அரியாசனம் படைத்து அதில் கம்பீரமாக அமர்ந்தார். சிந்துராஜன் மேலும் சினம் கொண்டான். நந்திதேவர் அவனையோ அவன் சினத்தையோ திருலட்சியம் செய்யாமல் தாம் வந்த காரியத்தைச் சொல்லலுற்றார்:

"விண்ணும் மண்ணும் பணிய ஆணை செலுத்தி ஆட்சி புரியும் பேரரசே, முன்னைப் பழம்பொருளுக்கும் முன்னைப் பழம்பொருளாயும் பின்னைப் புதுமைக்கும் புதுமையாம் மெய்ப்பொருளாயும் விளங்கும் மயூரேசரின் அதிகாரம் பெற்ற தூதன் யான். நான் யாண்டும் எவ்வித இடையூறுமின்றி எளிதில் சென்றுவரும் ஆற்றலுடையேன். எம் தலைவராகிய மயூரேசர் உமக்கு அனுப்பிய செய்தியொன்றுள்ளது. அதனைக் கூறி அறம் வலியுறுத்தவே யான் இங்குப் போந்தேன். என் பெயர் நந்தி."

சிந்துவின் சிந்தையில் சினம் கொப்பளித்தது; செங்கண் தீ விழித்தது; உடலும் நடுங்கியது; மூச்சுக் காற்றில் அனல் தெறித்தது. ஆனால் அவன் ஏதும் சொல்லத் தொடங்குமுன்னமே நந்தியெம்பெருமான். மேலும் கூறத் தொடங்கினார்:

"குவலயம் முழுவதும் வென்றுகொண்ட கொற்றவ, நின் தனவளமும் ஜனவளமும் வரபலமும் யௌவனமும் எண்ணி யெண்ணிச் செருக்கடையாதே. அழியாத தனத்தை அற்றாருக்கும் உற்றாருக்கும் உதவ வேண்டும். பெற்ற வரங்களைப் போற்றி அறவழியில் நிற்றல் வேண்டும். ஆனால் நீயோ வரபலம் காட்டி அமரர்களை அல்லற்படுத்தினாய்; தாபதர்களைத் தவிக்கச் செய்தாய்; விண்ணவர் வேந்தனையும் ஆலிலையில் துயிலும் மாலினையும் நளினத்தில் அமர்ந்திருக்கும் நான் முகனையும் அடிமையாக்கி அன்புநெறி நீங்கி அறவழி பிழைத்தாய். இத்தனை தவறுகள் இழைத்திருந்தும் எம்பெருமான் மயூரேசன் நின்பால் அருள்கொண்டு என்னைத் தூதுவனாய் அனுப்பியுள்ளார்; தேவரையும் முனிவரையும் இன்னே சிறை வீடு செய்க; மாலையும் மலரவனையும் வாசவனையும் அவரவர் இருப்பிடம் செல்ல விடுக; அறம் ஒன்றே உன்னைக் காக்கும் ஆற்றல் கொண்டது; மறம் மரணத்தையே தரும். செம்மை நெறிகளில் சிந்தை செலுத்திச் சீரெலாம் பெற்றுச் சிறப் புற்று வாழ்க. அஃதின்றேல் நீ அழிந்தாய் எனக் கொள்க. உன் படைவலிமை எல்லாம் எம்பெருமான் பாசம் ஒன்றுக்கே பற்றாது காண்."

நயவுரை கேட்டும் நன்மை உணராத் தீயோன் நந்தியெம் பெருமானை இழித்துப் பேசி, "சீரிய சிங்கத்துக்குச் சிறுநரி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிவுரை தருவதோ? உன் தலைவன் என்று நீ உரைக்கும் அச் சிறுவனை யான் அறிவேன்; அகவை முற்றாத அருந்தவம் பழகாத குறுந்தாளும் பெருந்தொந்தியும் கரிமுகமும் கொண்ட அச்சிறுவனோ எனக்கீடு? தூதுவனாய் வந்ததாய்ச் சொன்னாய்; அதனால் உன்னை யான் ஒன்றும் செய்கிலேன்; இனிமேலும் நீ இங்கு நின்றால் உன் உயிர் உன் உடலை விட்டு ஓடும்; விரைந்து செல்; அச்சிறுவனுக்கு என் ஏற்றமெல்லாம் கூறித் திரும்பிப் போகச் சொல்; வீணாக உயிர்விட வேண்டாமென்று விளம்பு'' எனப் பகர்ந்தான்.

ஆணவம் கொண்ட அசுரனின் அகந்தைமிகு பேச்சைக் கேட்ட நந்தா வலிமைமிகு நந்தியெம்பெருமான் சிந்துவை நோக்கிச் செப்புவார்:

''தூதுவனாய்ச் சென்று துங்கவுரை கூறிச் சிந்து நன்னெறி நாட முயற்சி செய் என எம்பெருமான் இயம்பியதால் என் வலிமை காட்டாது இன்னே விரைந்து திரும்புகிறேன்; நாசம் வந்துற்ற போது நல்லோர் சொல் வாசகமும் செவிபுகாது. நீ அழிவது திண்ணம்; நின்வாசமிகு வண்ணமேனி மண்ணிற் புழுதியாடிக் கிடக்கப்போவது மெய்; நீ உன் குலத்தையே நாசம் செய்தவனாவாய். வேறு சொல்ல வாசகம் இல்லை. போருக்கு எழுக! போர்!! போர்!!!''

இவ்வாறு வீரவுரை வழங்கிய நந்திதேவர் தாம் அமர்ந் திருந்த ஆசனத்தினின்றும் எழுந்தார். ஆசனம் அக்கணமே மறைந்தது. செஞ்சொல் தூதுவரும் சிறிதே தம் வயச்செவ்வி காட்டுவார்போல் பெருமூச்செறிந்தார். மூச்சுக் காற்றால் அரண்மனை ஆடியது; ஆசனங்கள் கவிழ்ந்தன; சித்திர மண்டபத்தின் உத்திரங்கள் உதிர்ந்தன; அவையோர் அஞ்சினர்; சிந்து திகைத்தான்; நந்தி நகைத்தான்.

கலகலவெனத் திக்கெட்டும் வெடிக்க நகைத்த நந்தி வானின் வழி எழும்பி வள்ளல் மயூரேசர் மலர்ப்பதம் பணிந்து, தூது சென்று வந்த செய்தியெலாம் வரன்முறையால் கூறினார். பொன்மேனிப் பிள்ளையாரும் போருக்குப் புறப்பட்டார். சிந்துவும் கடலெனக் கதித்துவரும் காரவுணப் படையோடும் நடமாடும் மலைகளெனத் திகழும் தேர் வருக்கத்தோடும் மேக மெலாம் தரைமீது மண்டியதோ என மயக்கும் மால்யானைப் படைகளோடும் ஆற்றல் காட்டித் துள்ளிப் பாயும் அசுவ தந்திரத்தோடும் போருக்குப் புறப்பட்டான். அவன் அமைச்சர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

களான மித்திரன், கௌஸ்துபன், வீரராஜன் ஆகியோரும் அவனுடன் போர்க்களம் சென்றார்கள்.

மித்திரனும் வீரவாகுவும் நீண்டநேரம் போர்புரிந்தனர். பின்னர் சுப்பிரமணியர் தம் வஜ்ராயுதத்தால் மித்திரனை நீண்ட நித்திரை கொள்ளச் செய்தார். கௌஸ்துபனோடு போரிட்ட வீரபத்திரர் தண்டாயுதத்தால் அவனை வீழ்த்தினார். நந்திதேவர் வீரராசனின் வலக்கரத்தைத் துண்டித்தார்; அவன் இடக் கரத்தில் வாளேந்திப் போர்புரிய நந்திதேவர் அவன் தலையை நசுக்கினார்.

சிந்துராஜனும் மயூரேசரும் போரிட்டனர். முதல் நாள் போரில் மயூரேசனின் சூலம் சிந்துராஜனின் கிரீடத்தைக் கீழே தள்ளிக் குலைத்தது. சிந்து யாரும் அறியாமல் தன் அரண்மனை அடைந்தான். மறுநாள் போரில் சிந்துவின் புதல்வர்களும் சுப்பிர மணியரும் பெரும்போர் புரிந்தனர். அப்போரில் சிந்துவின் புத்திரர்கள் மாண்டனர். கொதித்தெழுந்துவந்த சிந்து சுப்பிர மணியருடன் பெரும்போர் புரிந்தான். ஆனால் போரில் வலி யிழந்து சிந்து மீண்டும் அரண்மனை அடைந்தான். மூன்றாம் நாள் முடிவான யுத்தம் தொடங்கியது. சிந்து பிறந்த போதே பிறந்த ஆயுதங்களும் பயனிலவாயின. இறுதியில் சிந்துராஜன் சூலாயுதம் ஒன்று எடுத்து மயூரேசர் மேல் ஏவினான். ஆனால் மயூரேசரோ தம் மழுப்படையை ஏவினார். அது சூலத்தைச் சூர்ணம் செய்து சிந்துவின் நெஞ்சைப் பிளந்து கொன்று மீண்டது. சிந்து வீழ்ந்ததும் சிதறி ஓடின அசுரர் படை. தேவர்களும் முனிவர்களும் மகிழ்ந்தனர். பார்வதி பரமேசுவரர் ரிஷபாரூட ராக அக்களத்தில் தோன்றி மயூரேசரையும் முருகரையும் தழுவிக் கொண்டனர்.

இந்திராதி தேவர்கள் சிறைவீடு பெற்றனர். மாயனும் நான்முகனும் தத்தம் தொழிலை மீண்டும் மேற்கொண்டு செய்யத் தொடங்கினர். தேவரும் முனிவரும் மற்றும் யாவரும் ஆனை முகத் தண்ணலாகிய மயூரேசனின் பேரருட்டிறத்தைப் போற்றி வாழ்ந்தனர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

34. தூமகேது விநாயகர்

தூமர்சுரனின் முற்பிறப்பு

விந்தியம் என்றதொரு வளநாட்டில் மசிபாஹினி என்றொரு மஹா நகரம் இருந்தது. அந்நகரம் மிக்க அழகு வாய்ந்ததாய் அமைக்கப் பெற்றிருந்தது. அந்நகரைத் தலைநகராகக் கொண்டு விந்திய நாட்டைத் தூமாசுரன் ஆண்டு வந்தான். அவன் கரு நிறங்கொண்ட பெருமேனி உடையவன்; இரும்புலக்கை ஒத்த தோள்வலியும் மலையையும் பொடியாக்கும் தாள்வலியும் உடையவன். அசுர குலத்தில் பிறந்தும் அளவிலா வலிமையும் செல்வமும் பெற்றிருந்தும் சிவபிரான் திருவடிகளில் பதிந்த சிந்தையுடயவனாய் நற்குண நற்செய்கைகள் மிக்கவனாய் வாழ்ந் திருந்தான். அவன் புகழ் அகிலமெங்கும் பரவியிருந்தது. நாட்டை நன்னெறிக் கண் உய்த்து செம்மை நெறி தவறாது நல்லாட்சி புரிந்துவந்தான்.

அவ்வசுரனுடைய பெருமையையும் கருணையையும் கேள்வியுற்ற பிருகு முனிவர் ஒருநாள் அவனுடைய அரண் மனையை வந்தடைந்தார். தூமாசுரன் அவரை முறைப்படி வரவேற்றுப் பல்வகை உபசாரங்களும் செய்து அழகியதோர் ஆசனத்திருத்தினான். உணவு வழங்கல் தாம்பூலம் வழங்கல் முதலிய யாவும் முடிந்தபின்னர் அவர்கள் பொதுவாகப் பேசத் தொடங்கினர். அப்போது தூமாசுரன் முனிவரை நோக்கி, "என்னிடம் சிறந்த குணங்கள் இருப்பதாய் எண்ணுகிறேன்; ஈகை, பெரியாரைப் பேணல், வலியிலாரைக் காத்தல், செங் கோன்மை, வாய்மை, கடவுள் பக்தி ஆகிய குணங்கள் இயல் பாகவே என்னிடம் இருப்பதாய் உணர்கிறேன். இக்குணங்கள் எல்லாம் அசுரர்களுக்கு இயல்பானதன்று; அங்ஙனமிருக்க அக்குணங்கள் என்னை எவ்வாறு வந்தடைந்தன? அல்லது இத் தகைய நற்குணங்களோடு நான் எவ்வாறு அசுர குலத்தில் வந்துதித்தேன்? இவற்றை ஆய்ந்து எனக்கு எடுத்துக் கூறி அருள வேண்டும்" என்று வேண்டினான்.

பெருந்தவ முனிவரான பிருகு முனிவர் சற்று நேரம் தியானத்தில் ஆழ்ந்தார். மேலான நிலையில் ஞானதிருஷ்டியினால் தூமாசுரனுடைய முற்பிறவி வரலாற்றை உணர்ந்து அதனை அவ்வாறே அவனுக்கு எடுத்துக் கூறினார். அசுரனை நோக்கி,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

"அசுரர்களில் ஏற்றமிகு அரசனே, நீ முற்பிறவியிலும் ஓர் அரசனாக இருந்தாய். அப்போது உன் பெயர் விகுதி என்பது. வேதங்களையும் வேதாங்கங்களையும் நன்கு கற்று அரசியல் நூல்களை ஆராய்ந்தறிந்து செங்கோல் கோடாது சிறப்புற உன் நாட்டை ஆண்டு வந்தாய். உனக்குப் பகைவர்களே இல்லை என்னுமாறு உன் ஆட்சி எங்கும் பரவியிருந்தது. அப்போது சிறந்த யாகங்கள் செய்யவேண்டுமென்று நீ எண்ணினாய். அதன் பலனாக யாகம் செய்யும் முறைகள், அனுகு முறைகள், சடங்குகள் இயற்றும் காலம், உதவியாக வைத்துகொள்ள வேண்டிய குருக்கள் ஆகியவைபற்றி முற்றும் ஆராய்ந்து பார்த்தாய். பிறகு எள்ளளவும் பிழையேற்படாமல் முதல் யாகத்தை முற்றுவித்தாய். வித்தம் வேண்டி வந்த வித்தகர் யாவருக்கும் அள்ளி வழங்கினாய். அதுமுதல் உன் புகழ் உலகெங்கும் பரவியது. பிறகு ஆண்டுதோறும் ஒரு யாகம் செய்து செய்து பழகியது உன் மனம். யாசகர்களுக்கு வழங்கி வழங்கிச் சிவந்தது உன் கரம். இவ்வாறு நீ தொண்ணூற்றொன்பது சிறந்த யாகங்களைச் செவ்வனே செய்து முடித்தாய். அப்பால் நூறாவது யாகமும் தொடங்கினாய். அப்போது இந்திரன் கவலையுற்றான். நூறாவது யாகம் முடிவுறுமாயின் அவன் பதவி பறிபோகும். நீ இந்திரனாவாய். ஆகையால் அவன் பதறினான். நூறாவது யாகத்தை நீ செய்யாதபடிச் செய்ய வழி தேடினான். இவ்வாறு அவன் மன மறுக்கமுற்று அயர்ந்திருக்கும் சமயத்தில் அங்கு நாரதர் வந்தார். அவரைக் கண்டதும் இந்திரன் அவரடி பணிந்து தன் மனக்கவலை முற்றும் அவருக்குத் தெளிவாகக் கூறித் தனக்கு உதவிசெய்து தான் இந்திரபதவி இழக்காமலிருக்க ஆவன செய்ய வேண்டுமென்று இரந்தான். ஏதோ ஒரு மனநிலையில் நாரதரும் ஒப்புக் கொண்டார்; விகுதி நூறாவது யாகம் செய்து முடிக்காதபடித் தடுத்துவிடுவதாய் வாக்குறுதி அளித்தார். அவ்வாறு அவர் முடிவெடுத்தது விதியின் வலிமையாலேயே.

"நாரதர் வயது முதிர்ந்த விப்பிரர் உருக்கொண்டு செம் மேனியில் வெண்ணீறும் கழுத்திற் கண்மணி மாலையும் தரித்துக் கொண்டு கைத்தண்டு ஊன்றிக் கடுகி நடந்து விகுதியின் யாக சாலைக்கு விரைந்து வந்தார். வந்த மறைமுனியை நீ எதிர் கொண்டு வரவேற்றுச் சீரிய சிம்மாசனத்தில் அமர்த்தி அவரடி பணிந்து முறையான வழிபாடுகள் பலவும் செய்து வந்த நோக்கம் யாதென வினவினாய்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

"அந்தணராக வந்த வஞ்சக முனிவர் தன் நாமதேயம் சிவசர்மா எனவும் யாகம் செய்யும் பேரரசன் இரந்து வந்த எளியோர்க் கெல்லாம் இல்லை எனாது விழைந்த பொருள்களை எல்லாம் கொடுக்கவேண்டுவது யாகவிதியாகலின் அதைக் கருதியும் அங்கு வந்ததாகக் கூறினார். அரசனும் அவ்வந்தணர் தானமாக வேண்டிய பொருள் யாது என வினவ, அவரும் கொஞ்சமும் கூசாமல் தயங்காமல் அஞ்சாமல் 'உன் மனைவியை எனக்குத் தானமாக அளி' என்றார். நீ திடுக்கிட்டாய். தானம் பெறவந்தவர்களில் உலகம் தோன்றிய நாள் முதலாக ஒருவனுக்கு உரிமை படைத்த மனைவியைத் தானமாகக் கேட்டவர் எவரும் இலர். யாகம் செய்பவர் கோபத்தை அடக்கியிருத்தல் வேண்டும் என்பது விதியாகலின் நீ நின் சினத்தை நெஞ்சகத்தே நிறுத்தி, 'தானம் கேட்பவர் தங்கள் தகுதிக்கும் தானம் அளிப்பவர் தகுதிக்கும் தக தானம் கேட்க வேண்டும். அவ்வாறே தானம் கொடுப்பவரும் தம் தகுதிக்கும் தானம் பெறுபவரின் தகுதிக்கும் தக தானம் அளிக்க வேண்டும். ஆகையால் அம்முறை பிறழாது வேண்டியன கேட்டிடுக. ஒருவன் மனைவியைக் கேட்டல் ஒவ்வாத யாசகம்; மனைவியைக் கொடுத்தலோ அதைவிட ஒவ்வாத கொடை. ஆகவே, இந்த இழிந்த எண்ணத்தைவிட்டு வேறேதேனும் கேட்டிடுக. விரைந்தளிக்கின்றேன்' என்றாய். ஆனால் வந்தவர் கருத்து யாகத்தை நிறுத்துவதல்லவா? ஆகவே, மிகவும் கோபம் கொண்டவர் போன்று விருட்டென்று எழுந்த வஞ்சக நெஞ்சர், 'வேள்விச் சாலையில் யாசித்து வந்த எனக்குக் கொடை மறுத்த கொடுங்கோல் மன்னா, நீ செய்யும் இவ்வேள்வி பயனற்றுப் போகட்டும். கொடைமறுத்த நீயும் அடுத்த பிறப்பில் அசுரனாவாய்' எனச் சாபமிட்டுச் சென்று விட்டார்.

"அவ்வினைமிகு வேதியர் சென்றதற்பின் அவர் செயலை ஆராய்ந்த நீ இந்திரன் தூண்டிய வஞ்சக வழி என்று உணர்ந்தாய். ஏனெனில் மனைவியின்றி யாகம் செய்யும் உரிமையின்மையால் அவ்வேதியர் வேண்டியபடி மனைவியைத் தந்திருந்தாலும் யாகம் தடைபட்டுவிடும். உண்மையை உணர்ந்த போது நீ மிகவும் வேதனைப்பட்டாய். மனத்தளர்வு உண்டா யிற்று. உடலும் சோர்ந்தது. சின்னாட்களில் அப்பிறப்பை யொழித்தாய். நாரதர் வஞ்சகமாய் வந்து சபித்தபடி நீயும் அசுரனாக மீண்டும் பிறந்தாய். ஆயினும் முற்பிறப்பில் செய்த பெரிய புண்ணியங்களின் பலனாக இப்பிறப்பிலும் நற்குண நற்செய்கைகளுடன் விளங்குகின்றாய். இப்பண்புகள் உன்னிடம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உள்ளவரை உயர்ந்து விளங்குவாய்'' எனப் புகன்று வாழ்த்தித் தம்மிடம் சென்றார்.

சுமுதையின் மகப்பேறு

மசிபாதினி நகரத்தில் மாதவராசன் என்றொரு மாண்புமிகு மன்னவர்குலச் செம்மல் வாழ்ந்து வந்தான். பல்வகைச் செல்வங்களும் நிறைந்தவன். அவனுக்குக் கற்பிற் சிறந்த காரிகை, சுமுதை, மனைவியாய் அமைந்தாள். அவர்கள் இல்லறம் நல்லறமாகவே நடந்துவந்தது. ஆயினும் நீண்டநாட்கள் வரை அவர்களுக்கு மகப்பேறு உண்டாகவில்லை. முதலில் அதனைப் பொருட்படுத்தாமல் இருந்தார்களாயினும் நாட்கள் நகர நகர அவர்கள் வயதேற வயதேற தங்களுக்கு ஒரு குழந்தை இல்லையே என்ற குறை மிகப் பெரிதாய்த் தோற்றமளித்தது. அதனால் மனம் வருந்திய மாதவராசன் ஒருநாள் தன் வசம் இழந்து தன் மனைவியை நோக்கி, ''பிள்ளையைப் பெற்றுத்தர இயலாத பெண்ணும் ஒரு பெண்ணா? பிள்ளையற்ற வாழ்வும் ஒரு வாழ்வா? மலடியாய் வாழ்வதைவிட மிருகங்கள் வாழும் காடு சென்று மக்கள் கண்ணிற் படாமல் வாழ்தலே மேல்'' என்று வெறுத்துக் கூறினான். அது கேட்ட சுமுதை தாங்க முடியாத மனவேதனையில் துடித்தாள்; இனி வீட்டைவிட்டு வெளியேறி நாட்டைத் துறந்து காட்டில் உறைந்து காலங் கழித்தலே நன்று என எண்ணினாள். அன்றே அக்கருத்தைச் செயற்படுத்திக் கடும்புலி வாழும் காடு நண்ணி உயிர்மேல் சற்றும் பற்று வையாது அமைதியான ஓரிடத்தை, மக்கள் வர அஞ்சும் இடத்தைத் தேர்ந்தெடுத்து ஆங்கே உறுதியுடன் அமர்ந்து அன்ன பானம் இன்றி அனைத்துலகும் காக்கும் திருமாலைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தாள்.

காக்கும் தெய்வமாகவும் அனைத்தையும் அழிக்கும் சக்தியாகவும் புவனம் முழுவதும் உண்டாக்கும் பண்ணவனாகவும் மூன்றாய் கிளைத்தெழும் மூலமாகிய ஆதிப் பரம்பொருள், ஆனைமுகத்து அண்ணல் சுமுதையின் தவத்திற்கு உருகித் தாமே திருமால் உருக்கொண்டு அவள் விழிமுன் தோன்றியருளினார். விழியெதிர் நின்ற விமலனைக் கண்டு விரைந்தெழுந்த சுமுதை கண்ணீர் மல்கப் பரவசமாகி நின்றாள். திருமாலாய் நின்ற தெய்வத்தின் திருவடிகளைப் பற்றித் தன் மனக்குறையெலாம் கூறிக் கதறினாள். அடியவர்களின் துன்பம் காணப் பொறுக்காத தும்பிக்கை எம்மான், 'யானே நின் மணி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வயிற்றில் மைந்தனாய்த் தோன்றுவேன்; நின் பழம்பாவங்கள் எல்லாம் தொலைந்தன; நின் மகன் பேரரசனாய்த் திகழ்வான்; நின் திருநகர்க்குத் திரும்பிச் சென்று நின் கணவனுடன் மகிழ்ந்து வாழ்க' எனக் கூறி மறைந்தார். சுமுதையும் பெரு நம்பிக்கையுற்று அடவி நீத்துத் திருநகர் திரும்பித் தன் வீட்டை அடைந்தாள். ஏதோ ஒரு சமயத்தில் காரணமின்றித் தோன்றிய வெறுப்புணர்வால் தன் மனைவியைப் பிரிந்து வருந்தி வாழ்ந்து கொண்டிருந்த மாதவராசன் மீண்டும் தன் மனைவியைப் பார்த்தவுடன் பெருமகிழ்வெய்தி அவளை அணைத்துக் கொண்டு வரவேற்று அரண்மனைக்குள் அழைத்துச் சென்றான். தான் முன்னே அறிவற்றுக் கூறிய மொழிகளை மனத்துள் பாராட்ட வேண்டாமென்றும் நெடுநாள் சென்று அவள் மீண்டு வந்தது மிகவும் ஆறுதலையும் சந்தோஷத்தையும் தருகிறதென்றும் மனமுருகிக் கூறி மன்னிப்பு வேண்டினான். தன் கணவன் குற்ற உணர்வுள்ள மனத்தோடு மீண்டும் மீண்டும் தன்னிடம் வேண்டுதலைக் கண்டு கூசிய சுமுதை அவனுக்கு ஆறுதல் கூறித் தான் வீட்டைவிட்டுச் சென்றது முதல் திரும்பிவந்தது வரை நடந்தவற்றையெல்லாம் நிரல்படக் கூறினாள். பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ? என்றாற்போல இருவரும் மீண்டும் இணைந்து இல்லறத்தை மகிழ்வுடன் நடத்தினார்கள். தெய்வத் திருவருளால் சுமுதை கருவுற்றாள்.

இஃதிவ்வாறிருக்க நாட்டைச் செவ்வனே ஆண்டு வந்த தூமாசுரன் கொஞ்சம் கொஞ்சமாக துர்க்குணங்கள் மிகுந்து முற்பிறவியிற் பண்ணிய புண்ணியமெல்லாம் பாழாக நிமிர்ந் திருந்த செங்கோல் நிலைகுலைந்து கவிழ அசுர குணங் களையெல்லாம் கைக்கொண்டு அறநெறி தப்பிப் புறநெறி புகுந்து தக்கன இன்ன தகாதன இன்ன எனப் பகுத்தறிந்துணராது மனம் போன போக்கெல்லாம் போகத் தொடங்கினான். அண்டை அயலில் இருந்த அரசர்களோடு மாறுகொண்டு அவர்களோடு போரிட்டு அவர்களை அழித்தான். அதன்பின் அகில உலகத் தையும் ஆளவேண்டுமென்ற பேராசை கொண்டான். பெரும் படையொன்றைத் திரட்டிக் கொண்டு திக்விஜயம் செய்யப் புறப்பட்டான். அவ்வாறு புறப்பட்ட சமயத்தில் அசரீரியாய் வானத்தில் ஓர் குரல் கேட்டது: "நற்குணங்களைக் கைவிடுத்துத் துர்க்குணங்களை மேற்கொண்ட தூமாசுரனே, நிமிர்ந்து நின்ற செங்கோலை வளைத்துத் தாழ்த்திக் கொடுங்கோலாகச் செய்த கொற்றவனே, உன்னைக் கொல்லவென்றே சுமுதை வயிற்றில் ஒரு குழந்தை கருவாய் உருவாகி வளர்ந்து வருகின்றது."

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அதனைக் கேட்ட தூமாசுரன் அந்நிகழ்ச்சியை ஓர் உற்பாத மாகக் கருதினான். சூது அறியாச் சுமுதையின் வயிற்றுக் கருவை எச்சமின்றிக் குலைக்க எண்ணினான். ஆகவே வித்துருமன் என்ற வீரன் ஒருவனை சுமுதையையும் மாதவராசனையும் கொன்று வருமாறு நியமித்தான். வித்துருமன் தன்னுடைய ஆட்களோடு மாதவராசனின் அரண்மனையுள் புகுந்து அவ் விருவரும் உறங்கிக் கொண்டிருக்கும் பஞ்சணைக் கட்டிலோடு அவர்களை அலுங்காமல் குலுங்காமல் அருகில் இருந்த அரணி யத்துள் கொண்டுபோனான். அங்கே ஓரிடத்தில் கட்டிலைக் கீழே இறக்கி வைத்தபோது சுமுதையும் மாதவராசனும் விழித்துக் கொண்டனர். எழுந்தமர்ந்து நாற்புறமும் நோக்கினர். காரிருள் கனிந்து நின்ற கானகத்தூடு தாமும் தம் கட்டிலும் இருப்பது அறிந்தனர். அறிமுகமற்ற ஆயுதப் படைஞர் பலர் தம்மைச் சூழ்ந்திருப்பதையும் கண்டனர். விவரம் புரியாமல் அஞ்சினர். அப்போது படைத்தலைவன் வித்துருமன் அவர்களை நோக்கி, "மாதவராசரே, தூமாசுரனின் ஆணையால் தங்களை இங்குக் கொண்டுவந்திருக்கிறோம். உங்கள் இருவரையும் கொன்று விடுமாறு உத்தரவு எங்களுக்கு இருக்கிறது. இன்னும் சற்று நேரத்தில் உங்கள் இருவரையும் சிரச்சேதம் செய்து எங்கள் அரசரின் உத்தரவை நிறைவேற்றப் போகிறோம். அதற்குமுன் நீங்கள் உங்கள் மனத்துக்குகந்த தெய்வத்தைப் பிரார்த்தனை செய்துகொள்ளுங்கள்" என இருசெவிகளிலும் ஈயத்தைக் காய்ச்சி உருக்கி ஊற்றினாற்போலும் கொடிய சொற்களைக் கூறினான். சுமுதையும் மாதவராசனும் துணுக்குற்றனர். காத்தற் கடவுளாகிய கமலக் கண்ணனை மனத்தில் நினைத்துச் சரணா கதி செய்தனர். 'சரணம்' என்ற சொல்லைக் கேட்ட உடனே 'தந்தேன்! தந்தேன்!!' என அருளும் தாமரைக் கண்ணன் 'வந்தேன்! வந்தேன்!!' என்று விரைந்தோடி வந்தார். அவரோடு வந்த வலிமை மிக்க வீரர்கள் வித்துருமனுடைய ஆட்களைக் கொன்று வித்துருமனை நன்கு புடைத்து அவனைக் கொல்லாது நாட்டை நோக்கி ஒட்டினார்கள். தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என எண்ணித் தலைதெறிக்க ஓடி வந்த வித்துருமனைக் கண்ட தூமாசுரன் நடந்த செய்திகளைக் கேட்டு மேலும் அச்சம் கொண்டான்.

தங்கள் உயிருக்கும் தங்களுக்குப் பிறக்கப்போகும் குழந்தையின் உயிருக்கும் பேராபத்து காத்திருக்கிறது என்பதை உணர்ந்த சுமுதையும் மாதவராசனும் நாட்டிற்குத் திரும்பிவர விரும்ப வில்லை. கானகத்திலேயே மறைந்து வாழ்ந்து பேறு காலத்தை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எதிர்நோக்கி இருந்தனர். தூமாசுரனின் மந்திரிகளுள் ஒருவன் தூமாசுரனுக்கு சுமுதையையும் மாதவராசனையும் கொல்ல வேண்டாமென்றும் சில அசுரர்களைக் கானகத்திற்கு அனுப்பிச் சுமுதையின் பேறு காலத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கச் செய்து, குழந்தை பிறந்ததும் உடனே அக்குழந்தையைக் கொன்று விட வேண்டுமென்றும் கூறினான். தூமாசுரனுக்கு அதுவே நல்ல யோசனையாகப்பட்டது. எனவே வலிமை மிகுந்த வீரர்கள் நால்வரைக் காட்டிற்கு அனுப்பி அவர்கள் இருப்பிடத்தைக் கண்டறிந்தான். மேலும் பதின்மரை அனுப்பி அவ்விருவரையும் அவர்கள் அறியாமல் கண்காணிக்கச் செய்தான். பேறுகாலம் நெருங்க நெருங்க சுமுதைக்கும் மாதவராசனுக்கும் ஒருவகைத் துடிப்பு உண்டாயிற்று. அவர்களை அவர்கள் அறியாமல் கண்காணித்து வந்த அசுரர்களுக்கு அதைவிடத் துடிப்பு அதிக மாயிற்று. ஒரு நாள் காலையில் சுமுதை ஓர் அரசமரத்தடியில் அமர்ந்து ஓய்வுகொண்டிருந்தாள்; அப்போது காலையிளங்கதிர் அவள் மேனியிற்பட்டுப் பளபளத்தது; எழிலமிக்கிருந்த சூழலில் இளங்காற்று வீசச் சற்றே கண்ணயர்ந்தாள்; அயர்ந்த அந்நேரத்தில் அவள் மடியில் இளங்குழவியாய் நாற்கரங் களிலும் நால்வகைப் படை ஏந்தியவராய் நிலாக் கீற்றொன்று நெற்றியிற் புரள முக்கண்ணராய் தும்பிக்கை நீண்ட ப்ரஸன்ன முகத்தினராய் விநாயகர் தோன்றினார். அக்குழந்தையைக் கண்ட சுமுதையும் மாதவராசனும் வியந்தனர். தந்திமுகத் தனயனும் அவர்களை நோக்கி, "திருமாலே உங்களுக்குத் திருமகனாக அவதரிப்பார்; உங்கள் கருவிலிருக்கும் திருமாலையும் உங்களையும் நோக்கவே இப்போது இங்குக் குழந்தையாய்த் தோன்றினேன். முன்பு கானகத்தில் தவத்திற்குருகி வரம் தந்தது நானே. உங்களுக்குப் பிறக்கும் குழந்தை உலகமெலாம் புகழ இந் நாட்டை ஆள்வான்" என மொழிந்தார்.

தூரத்தில் இருந்து இந்நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த அசுர வீரர்கள் அதிசயித்தனர். ஆனைமுகக் குழவி பேசிய பேச்சு அவர்கள் செவியிற் சேரவில்லையாயினும், குழந்தை பிறவாமலே குழந்தையொன்று மடியிற் கிடந்த அதிசயம் அவர்களுக்கு அச்சம் ஊட்டியது. அவர்கள் விரைந்தோடி தூமாசுரனிடம் இச்செய்தியைக் கூறினர். அவன் துணுக்குற்று நால்வகைப் படைகளோடும் அக் காட்டை முற்றுகையிட்டு அவர்கள் இருப்பிடத்தைக் கண்டு அவர்கள் மீது அம்புமாரி பொழிந்தான். அப்போது விநாயகப் பெருமான் அதிர்ந்த அன்னையையும் அத்தனையும் கையமர்த்தி 'அஞ்சல்' என்று அருளித் தன் வாய்வழியே பந்து பந்தாகப் புகையுமிழ்ந்தார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அப்புகைப்படலம் எல்லாத் திககுகளிலும் பரவியது. அசுரக் கூட்டம் அப்புகைப்படலத்துள் அகப்பட்டுக் கொண்டது. தூமாசுரனும் அவன் படைகளும் கண்தெரியாமல் அவதியுற்றுக் காட்டில் பல இடங்களில் விழுந்து தட்டுத் தடுமாறி எழுந்து மீண்டும் விழுந்து அல்லலுற்று மூச்சு முட்டி இறந்தனர்.

பாலசந்திர மூர்த்தி சுமுதையையும் மாதவராசனையும் மசிபாதினி நகரம் செல்லப் பணிந்துத் தாம் மறைந்தார். அவர் ஆணையைச் சிரமேற் கொண்ட இருவரும் தம் நகரத்தை அடைந்து தம் அரண்மனையில் இனிதே வாழ்ந்தனர். சில நாட்களில் அவர்களுக்குத் திருமகன் தோன்றினான். அத்திருமகன் படிப்படியாகப் பல்வகைக் கலைகளும் பயின்று இளைஞனாகி மேதையாகிப் பிற்காலத்தில் விந்திய நாட்டைப் புகழுடன் ஆண்டான். சுமுதையும் மாதவராசனும் நெடுநாள் வாழ்ந்து அனுதினமும் துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம் பணிந்து முடிவில் முக்தியும் எய்தினர்.

தூமாசுரனையும் அவன் பெரும்படையையும் புகையால் (தூமத்தால்) அழித்த புகழ் விளங்க அவ்விநாயகர் தூமகேது விநாயகர் எனப் போற்றப்பட்டார்.

35. கணேசர்

சிவபிரானுக்குத் திரிபுரங்களை எரிக்கும் ஆற்றல் தந்த விநாயகர் கணேசர். இவர் பஞ்சமுக கணேசர் எனப்படுவார். இவ்வரலாறு 7 ஆம் அத்தியாயத்தில் சிந்தாமணியைச் சிந்தித்த சிவபிரான் என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ளது.

36. கணபதி

ஓங்கார கணபதி

சொல்லும் பொருளும்போல் ஒன்றிய அம்மையப்பனாகிய பார்வதியும் பரமேசுவரனும் ஒரு சமயம் கைலையங்கிரியில் உலா வந்தனர். புன்னையும் கொன்றையும் பூத்துக் குலுங்கும் பொழிலூடு மகிழ்ந்து சென்று சித்திரமண்டபம் ஒன்றை அடைந்தனர். மண்டபச் சுவர்களில் உலகியல் விளக்கச் சித்திரங்கள், வேதாந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கருத்துக்களை உள்ளடக்கிய சித்திரங்கள், தெய்வநிலையை விளக்கும் சித்திரங்கள், அண்ட சராசரங்கள் இயங்கும் நிலையை விளங்கும் சித்திரங்கள், சிருஷ்டி நிலையைச் செப்பும் சித்திரங்கள், ஒரழிவிலிருந்து மற்றொன்று புதிதாகத் தோன்றும் முறையை விளக்கும் சித்திரங்கள் முதலிய அதியத்புதமான சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் அகில உலகிற்கும் தாயாகவும் தந்தையாகவும் விளங்கும் பார்வதி பரமேசுவரர் பாாத்துக்கொண்டே வந்தனர். இறுதியில் அங்குள்ள சித்திரங் களுக்கெல்லாம் சிகரம் போன்ற ஓர் ஓவியத்தைக் கண்டு ஆச்சரியம் அடைந்தனர். அவ்வோவியம் "ஓம்" என்ற பிரணவ சொரூபத்தை அடிப்படையாகக் கொண்டு களிறும் பிடியும் இணைந்து நிற்கும் பாவனையைக் காட்டி அழகும் பொருளும் செறிந்து நின்றது. பிடியின் பேரழகில் பெருமாட்டி ஒன்ற, களிற்றின் கம்பீரத்தில் கருணாகரன் கலக்க, இருவரும் ஒருமுகமாய்ச் சித்திரத்தை நோக்க அவர்களுடைய அன்புத் தேட்டத்தில் அப்போதுதான் தோன்றியது போலச் சித்திர உருவினின்றும் ஆதியம் பரமனாகிய விநாயகப் பெருமான் பச்சிளம் மதலையாய்த் தோன்றினார்; சந்திரனை உருக்கி வார்த்ததுபோலச் செவ்வொளி வீச வாரண முகத்தோடு ஆரண முதல்வர் தோன்றினார்.

தாமே முழுமுதற் கடவுளாயினும் அம்மையப்பன் அருளன்பால் வெளிப்பட்ட தனயன் ஆதலின் விநாயகமூர்த்தி உமையம்மை யையும் அந்திவண்ணப் பெருமானையும் அடிபணிந்தார். அன்பூறு மனத்தோடு எம்பிராட்டி அக்குழந்தையை அள்ளி எடுத்து அணைத்துக்கொண்டார். ஆதியும் அந்தமும் இல்லாத காரண னைப் பெற்ற களிப்பால் எம்பெருமானும் பெருமை கொண்டு, "இயல்பாகவே தலைவனாகிய நின்னை அடிபணிவோர் நீங்காத இன்பமெய்தி நீடு வாழ்வார்; நீயே நம் படைக்கணங்களுக் கெல்லாம் தலைவனாய் அமைவாய்; கணபதி எனப் பெரு நாமம் கொண்டு காசினியைக் காத்தருள்வாய்" என இயம்பி மீண்டும் கைலையங்கிரிக்குத் தேவியுடனும் கணபதியுடனும் எழுந்தருளினார். கணத் தலைவரான கணபதி கைலையின் முகப்பிலேயே தங்கியருளினார். அவ்விடத்தில் இருந்தவாறே தன்னைச் சரணடைந்தோர்க்கு உன்னரும் பொருள்களை உவந்து அருள்வாராயினர்.

கவறாட்டம்

இவ்வாறாகப் பன்னாள் சென்றதற்பின் ஒருநாள் உமையம் மையும் எம்பெருமானும் கவறாடத் தொடங்கினர்; அவ்வமயம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருமால் அங்குவர அவரை வென்றதும் தோற்றதும் விளம்பும் சான்றவராக இருக்க வேண்டினர்; அவரும் இசையப் பகடை தொட்டனர். ஆட்டத்தின் முடிவு நெருங்கியது. இறுதியில் உமையம்மை தம் கைவண்ணம் காட்டி வெற்றியுறும் வண்ணம் பகடை உருட்டினார். சிவபெருமான் விளையாட்டாக விஷ்ணுவை நோக்கித் தாமே வெற்றிபெற்றதாகக் கூறுமாறு கண்ணால் புகன்றார். மணிவண்ணனும் முக்கண்ணனுக்கு இசைந்து "வெறும் விளையாட்டே" என எண்ணி "கைலை நாதனே வென்றார்" என்றார்.

நடுவுநிலை பிறழ்ந்த நாரணன் :

விளையாட்டே ஆயினும் வெற்றி தோல்விகளில் மனம் ஊன்றியிருந்த தேவியார் வெகுண்டார்; "கண்ணாற் கண்டும் நெஞ்சறிந்து ஒருபாற் கோடி பொய்கூறிய நெடுமாலை "கண்ணொளியிழந்த மலைப்பாம்பு ஆவாய்" எனச் சபித்தார். "விளையாட்டுக்கும் பொய்சொல்லல் ஆகாது" என்பது மெய்யாயிற்று.

மருளுற்ற திருமால் மணிகண்டன் பதம்பற்றி, "நீவிர் இருவீரும் கவறாட ஆட்ட வினைக்கு நான் ஆளானேனே; சங்கரி யிட்ட சாபத்திற்கு ஒரு விமோசனம் அருள வேண்டும்" என வேண்டி நின்றார். சங்கடத்தில் அகப்பட்ட சங்கரன் திருமாலை நோக்கி, "ஆலமரங்கள் நிறைந்த தீவாகிய வட த்வீபத்தில் அம்மையின் சாபத்தை அனுபவிக்க வேண்டும். உமா புத்ரனாகத் தோன்றிய கஜானனன் அத்தீவின்வழியே வரவேண்டிய பிரமேயம். விரைவில் உண்டாகும். அப்போது அவரருளால் நின் சாபம் நிவர்த்தியாகும்" எனப் புகன்றார். இதற்குள் சாபத்தின் வலிமை திருமாலைச் சார அவரும் விரைந்து வடத்வீபத்தை அடைந்தார்; ஆங்கோர் ஆலமரப் பொந்தில் கண்ணிழந்த பாம்பாகிச் சங்கரனே சரணென்று தவத்தில் ஆழ்ந்தார்.

கஜமுகாசுரன்

கஜமுகாசுரன் எனப் பெயர்கொண்ட ஓர் அசுரன் கைலை வள்ளலை மனத்திற் பிணித்துப் படுபயன் கருதிக் கடுந்தவம். புரிந்தான். அவனுடைய தவத்தின் திறம் கண்ட கைலைத் தலைவன் அவன் கண்களுக்கு விருந்தாய் அவன் முன்னே தோன்றினார். அவன் கேட்ட கேட்ட வரங்களெல்லாம் வழங்கினார்; மேலும், "மூல்முழும் நடுவும் முடிவும் இல்லாத

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பரம்பொருளாலன்றி வேறு எவராலும் உனக்கு முடிவில்லை'' என அருளி மறைந்தார்.

பின்னர் கஜமுகாசுரன் பல்லாயிரக் கணக்கான தன் தம்பியரோடு வந்து சேர்ந்துகொண்டான்; தேவ தச்சனை வருவித்து மதங்க நகரம் என்றோர் மாநகரத்தை நிர்மாணம் செய்தான்; அசுரர் படையொன்றைத் திரட்டிக் கொண்டு அமராவதிக்குச் சென்றான்; தேவர்கள் முதலானோரைப் போரில் வென்றான்; இந்திரன் முதலானவர்கள் ஓடி மறைந்தார்கள். கஜமுகாசுரன் பிறகு பல்வேறு உலகங்களையும் துன்புறுத்தத் தொடங்கினான். அவன் செய்யும் கொடுமைகள் தாங்கமுடியாத அளவுக்கு அதிகமாகி விட்டன. தேவர்கள் யக்ஷர்கள், கின்னரர்கள், நாகர்கள் முதலான பலரையும் தினமும் தன்னுடைய அத்தாணி மண்டபத்திற்கு வந்து தன்னெதிரே நின்று தலையில் குட்டிக்கொண்டும் மாறுகை மாறுகாது பிடித்துத் தோப்புக்கரணம் போட்டும் தன்னை வணங்க வேண்டும் என்று விதித்தான் அந்த வல்ல சுரன். வேறு வழியின்றி அவர்களும் அவ்வாறே செய்துவந்தார்கள்.

ஆனைமுகன் அபயம் அளித்தல்

வேகும் துன்பக் கடலினின்றும் கரையேற வெள்ளி மலையானே வழிகாட்ட வேண்டுமென எல்லாரும் ஒரு நாள் கைலைமலையை அடைந்தனர். ஆங்கு முகப்பில் இருந்த விநாயகரை வழி பட்டுத் தங்கள் குறைகளை விளக்கமாக விளம்பினர். அப்போது சிலர் அழுதனர்; சிலர் அரற்றினர்; சிலர் விம்மினர்; சிலர் பேச்செழாமல் பொருமினர். அவர்கள் துன்பந்துடைக்க எண்ணிய ஆனைமுகக் கணபதி அவர்களுக்கு அபயம் அளித்தார்; பிறகு தம்முடைய பூதகணங்களை நோக்கிப் போருக்குப் புறப் படுமாறு ஆணையிட்டார்; தாமும் மலை தளர்ந்தாலும் நிலை தளராத பேருருவமும் பெருவலியும் கொண்ட அசலன் என்ற பூதகணத் தலைவன் தோள்மிசை அமர்ந்து மதங்கமாநகரம் நோக்கிப் புறப்பட்டார்.

கஜமுகனும் கணபதியும்

கணபதி பூதகணங்களுடன் போருக்குப் புறப்பட்ட செய்தி கேட்ட கஜமுகன் தன்னுடைய நால்வகைப் படைகளையும் திரட்டினான். பூதக்கணங்களோடு எதிர்கொண்டு மோத விரைந்து சென்றான். வெகுகாலமாகப் போரின்றித் தினவெடுத்த தோள்களுக்கு நல்ல தீனியென்று அட்டகாசமாகச் சிரித்தான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. T.N.

Digitization by eGangotri-South Center

அச்சிரிப்பில் திக்கெட்டும் நடுங்கியது; அண்ட முகடு அதிர்ந்து விழுந்ததோ என அமரர்கள் அயிர்த்தார்கள். கணபதியின் எதிரே வந்த கஜமுகாசுரன் கடுஞ்சொற்களை அள்ளி வீசிக் கொடுங் கணைகளை மழையெனப் பொழிந்தான். கணபதியோ தம் கதாயுதத்தால் கணைகளை விலக்கிக் கஜமுகன் வில்லையும் ஒடித்தார். கஜமுகன் கனன்று கார்முகம் வேறொன்றெடுத்து அஸ்திரயுத்தம் புரியத் தொடங்கினான். அஸ்திரங்கள் ஆனை முகன் அடிகளில் அடைக்கலமாயின. கஜமுகன் கொதித்தான்; வன்மை வாய்ந்த தண்டாயுதம் ஏந்திப் பிள்ளையாரைத் தாக்கினான். விநாயகரோ கதாயுதத்தால் அதனைத் தடுக்க தண்டாயுதம் தகர்ந்தது; கதாயுதம் அவன் மார்பில் மோதியது. கஜமுகன் மயங்கிச் சாய்ந்தான். கணபதி, அவன் மீண்டும் உணர்வு பெறு முன்னர் அவன் சேனை முழுவதையும் த்வம்ஸம் செய்துவிட்டார். மயக்கநிலை நீங்கி விழித்தெழுந்த, கஜமுகன் அசுரசேனை அழிந்துபட்டதைக் கண்டான்; வெகுண்டான்; கோபாவேசம் கொண்டான்; கொடூரமாகத் தாக்கத் தொடங்கினான்; பூத கணத்தவரில் ஒருவராலும் அவனெதிர் நிற்க இயலவில்லை. இந்நிலையைக் கண்ட எல்லாம் வல்ல எம்பெருமான் "எவ்வாயு தத்தாலும் இறவா வரம்பெற்ற இவனை இவ்வாறு ஒழிப்பதே தகுதி" என எண்ணி தம் வலப்புற தந்தத்தை ஒடித்துக் கஜமுகன் மீது கதுமெனக் கடாவினார். அவ்வளவில் அவ்வசுரனின் அகன்ற மார்பு பிளந்தது; குருதி கொப்பளித்துப் பாய்ந்தது; அவன் வலி பொறாது உலகெலாம் நடுங்க அலறிக் கீழே வீழ்ந்தான்.

அவன் வீழ்ந்ததைக் கண்ட அமரர் அகமகிழ் வெய்தினர்; இனி அச்சம் இல்லையென ஆடினர்; அவ்வசுரன் வலியழித்த வலக்கோடு வாரிதியில் மூழ்கிப் புனிதமாகி அண்ணல் கைக்கு மீண்டும் வந்ததைக் கண்டு வியந்தனர். இன்னியம் பல இயம்பினர். மோனத் தவசிகளும் வானப் புலவர்களும் வேத முதல்வனை வழுத்தித் துதித்தனர்.

அச்சமயத்தில் ஆருயிர் துறந்தாற்போலும் அவனிமீது வீழ்ந்து கிடந்த கஜமுகன் பிரபஞ்சமே பிரமித்துப் பேரச்சம் கொள்ளு மாறு பெருச்சாளியாயினான். அதன் வலிமை சொல்லும் தரமன்று. ஒரு கணத்தில் பிரமன் உலகம் அடைந்தது; அங்கிருந்து தாவி வைகுண்டத்தில் குதித்தது; வானவரும் நாகரும் நடுக்கம்கொள்ள நாசம் பல புரிந்தது; மலைபோல் பெருத்து இருள்போல் கருத்து யமன்போல் உருத்துத் தராதலம் முழுவதும் திரிந்தது. அதனைக் கண்டவர் கலங்கினர். அதன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேல் பட்டவர் மயங்கினர். கொம்பொடித்துக் குவலயம் காத்த குஞ்சர முகத்தான் மூதுலகை உழக்கிய மூஷிகத்தைப் பிடித்து அதன் முதுகில் அமர்ந்தார். ஆதிப் பரம்பொருளின் அடித்துளி பட்ட அளவில் அனைத்துலகையும் துன்புறுத்திய (ஆகு) பெருச்சாளியாகிய கஜமுகனுடைய அஞ்ஞான இருள் நீங்கியது; ஆணவ மலம் ஒழிந்தது; கன்மம் கரைந்தது. மெய்ஞ்ஞானம் பொங்க யாரும் பெறாத பேறு பெற்ற மூஷிகத்தை முனிவரும் போற்றினர்; தேவரும் துதித்தனர். அன்றுமுதல் ஆனைமுகக் கடவுள் ஒற்றைக் கொம்பராய் ஆகு வாகனராய் அன்பர்களால் துதிக்கப்படுகிறார்.

கஜமுகன் கதி கண்ட அவன் குலகுரு சுக்ராசாரியர் விண் வழியில் மறைந்து போனார். அவன் அமைச்சனான அசு ரேந்திரன் ஒரு பறவை உருக்கொண்டு மலைமுழையொன்றில் மறைந்து வாழலானான். இந்திராதி தேவர்கள் இறைவன் திருமுன்பு எய்தி, "எம்மை ஆட்கொண்ட சிவபாலா, கஜ முகனிடமிருந்து எங்களைக் காத்த கணபதியே, கஜமுகனுக்கு அஞ்சித் தலையில் குட்டிக் கொண்டோம்; மாறுகை மாறுகாது பிடித்துத் தோப்புக் கரணம் போட்டோம்; கஜமுகனைக் கண்டு கதிகலங்கிச் செய்த அச்செயல்களை நாங்கள் தங்களை வணங்கும் போது மகிழ்ச்சியுடன் செய்ய விரும்புகிறோம். கஜமுகனிடமிருந்து காத்த கருணை எங்கள் கருத்தில் எப்போதும் மறவாதிருக்குமாறு எங்கள் பணிவை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என இறைஞ்சினர். பின்னர் ஐயன் அருள் பெற்று வானோர் அனைவரும் தம் இருப் பிடம் சென்றனர்.

விநாயகப் பெருமான் தம் பூதகணங்களுடன் மீண்டு கைலை மலைக்கு ஏகக் கருதினார். தம் ஊர்தியாகிய மூஷிகத்தின்மீது அமர்ந்து கணங்கள் பின்தொடர வடத்வீபத்தின் வழியே வரலானார். அங்கு தன் தாயின் சாபத்தால் கண்ணிழந்த பாம்பாகிக் கைலையங்கிரிவாசனையே கருத்தில் நிறுத்தித் தியானம் செய்துகொண்டிருக்கும் திருமாலைக் கண்டார். கணபதியின் அருள் நோக்கால் திருமாலைச் சேர்ந்த சாப விளைவும் கதிரவனைக் கண்ட பனிபோல் அகன்றது. செங்கண் திருமால் முன்புபோல் அழகிய மேனியும் ஆநந்த நகையும் பெற்றுக் கணபதியைத் தொடர்ந்து கைலையை அடைந்தார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

37. மஹோத்கட விநாயகர்

தேவாந்தகனும் நராந்தகனும்

அங்கதேசம் என்றொரு தேசம் உண்டு. அது பல்வகை வளங்களும் நிறைந்து விளங்கியது. அத்தேசத்தில் காத்ரம் என்று வழங்கப்பட்ட மிக அழகிய நகரம் ஒன்று இருந்தது. அந்நகரில் ரௌத்ரகேது என்றோர் அந்தணன் வாழ்ந்து வந்தான் அவன் கல்வி கேள்விகளில் சிறந்தவன்; வேத வேதாங்கங்களை நன்கு ஓதிக் கற்றவன்; பல கலைகளில் வல்லவன்; நித்ய கர்மானுஷ்டானங்களை அக்கறையுடன் செய்பவன். அவன் மனைவியின் பெயர் சாரதா. அவள் அழகும் குணமும் நிறைந்தவள்; கணவன் இயற்றும் நல்ல காரியம் யாவினும் கைகொடுத்து நிற்பவள். அவர்கள் இல்வாழ்க்கை நல்வாழ்க்கை யாய் அமைந்திருந்ததில் ஆச்சரியமில்லை. இல்வாழ்க்கையின் பலனாய் அவர்களுக்கு இரட்டைப் பிள்ளைகள் பிறந்தனர். அக்குழந்தைகளுக்குப் புண்யாஹவாசனம் முதலிய சடங்கு களையெல்லாம் செய்து ஒரு பிள்ளைக்கு தேவாந்தகன் எனவும் மற்றொரு பிள்ளைக்கு நராந்தகன் எனவும் பெயரிட்டுச் சீரும் சிறப்புமாக வளர்த்துவந்தனர். உரிய வயதில் உபநயனம் செய்வித்து வேதங்களையும் கலைகளையும் கற்பித்தனர். தேவாந்தகனும் நராந்தகனும் தங்கள் தந்தையைக் காட்டிலும் விரைவை உடையவர்களாய் வெகுசீக்கிரத்தில் வேதங்களையும் மற்றவைகளையும் கற்றுக்கொண்டனர். அப்போது ஒரு நாள் நாரதர் ரௌத்ரகேதுவைக் காண வந்தார். அவர்கள் மகிழ்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது நாரதர் அக்குழந்தைகளின் திறமையை உணர்ந்தார். அதனால் அவர்களுக்குச் சிவபெருமானுக் குரிய பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்து அதனை ஜபிக்க வேண்டிய முறைகளையும் கற்பித்தார். பிறகு நாரதர் அவ்விரு வரையும் நோக்கி, "இந்தப் பஞ்சாட்சர மந்திரம் மிகவும் பெருமை வாய்ந்தது. இதனைத் தினந்தோறும் தூய்மையாய் இருந்து முறைப்படி ஜபித்து வந்தால் தீயவை யாவும் தீரும்; நன்மைகள் யாவும் பெருகும்; எண்ணிய எண்ணியாங்கு ஈடேறும்; தேவர்களும் வணங்கும் பெருமை உங்களுக்கு உண்டாகும்" என்று கூறி விடைபெற்றுச் சென்றார்.

நாரத மஹா முனிவரிடம் பஞ்சாட்சர உபதேசம் பெற்ற பாலர் இருவரும் பரமேஸ்வரனைக் குறித்துத் தவம்புரிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விழைந்தனர். தங்கள் விருப்பத்தைத் தங்கள் பெற்றோரிடம் கூற அவர்கள் ஒப்புக்கொண்டனர். தேவாந்தகனும் நராந்தகனும் தவம் செய்ய ஏற்றதொரு இடம் தேடிக் காட்டினுள் சென்றனர். ஒவ்வொரு இடமாக ஆராய்ந்துகொண்டே இறுதியில் அதி ரம்யமான ஒரு சோலையை அடைந்தனர். அதன் நடுவே அழகிய ஒரு சிவன்கோவில் இருப்பதைக் கண்டனர்; கோவிலை அடுத்து தெளிந்த நீர்நிறைந்த ஒரு புஷ்கரிணி இருப்பதையும் பார்த்தனர். அந்த இடம் ஏகாந்தமாக அமர்ந்து இனிது தவம் செய்யத் தகுந்த இடமாக இருந்ததைக் கண்டனர். அவ்விடத்தி லேயே இறைவனைத் துதித்துத் தவம் செய்யத் தொடங்கினர். பஞ்சாக்னி மத்தியில் உடல் துன்பத்தைப் பொருட்படுத்தாமல் நின்று பதினாயிரம் ஆண்டுகள் தவம் செய்தனர். அவர்கள் தவத்திற்குகந்த சிவபிரான் உமாதேவி ஸமேதராக அவர்களுக்குக் காட்சி அளித்தார். இருவரும் புளகாங்கிதம் அடைந்து பரமன் அடிபணிந்தனர்; போற்றித் துதித்தனர். பரமன் அவர்களை நோக்கி, ''நீங்கள் விரும்பிய வரம் யாது?'' என்னலும் அவர்கள், ''எக்காலத்தும் யாராலும் நாங்கள் அழியாத வரம் வேண்டும்; அயன், அரி, இந்திரன் முதலானவர்களும் எங்களுக்கு அடங்கி நடக்க வேண்டும்; மூவுலகையும் நாங்கள் ஆள வேண்டும்'' என்று வேண்டினார்கள். தேவாந்தகன் மேலும் பரமனிடம், ''நான் பகலிலும் இறக்கக்கூடாது; இரவிலும் இறக்கக் கூடாது; வானத்திலும் இறக்கக் கூடாது; தரையிலும் இறக்கக் கூடாது; மனிதராலும் இறக்கக் கூடாது; தேவராலும் இறக்கக் கூடாது; விலங்காலும் இறக்கக் கூடாது; எந்த வகை ஆயுதத்தாலும் இறக்கக் கூடாது'' என வேண்டினான். அவர்கள் வேண்டிய வரங்களை எல்லாம் அளித்த சிவபிரான் ஒரு விதிவிலக்கும் கூறினார்: அதாவது விநாயகப் பெருமானை அன்றி வேறு யாராலும் அவர்களுக்கு அழிவில்லை என்றார்.

தேவாந்தகன் சுரருலகு ஆள்தல்

முக்கண்ணன் அருள் பெற்றுப் பெருவலி படைத்த தேவாந் தகனும் நராந்தகனும் தம் பெற்றோரை வந்து கண்டனர். அவர்களிடம் தாங்கள் தவம் செய்ததையும் வரங்கள் அருளப் பெற்றதையும் கூறிப் பெருமகிழ்ச்சி கொண்டனர். சின்னாட்கள் தங்கள் தாய்தந்தையருடன் இருந்தபின் அரசாட்சிமேல் ஆர்வம் கொண்டனர். சிவபிரானிடம் வரங்கொண்ட செருக்கால் அவர்களுடைய இயல்பான நற்குணங்கள் மறைந்தன. அசுர குணங்கள் தலைதூக்கின. அவர்களுக்குக் கொடியவர்களே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நண்பர்களாயினர். அவர்கள் வரம்பெற்றுவந்த செய்தியறிந்த அவுணர் பலர் அவர்களை நாடி வந்தனர். கொடியவர்களின் நட்பும் அவுணர்களின் கூட்டுறவும் அவர்களை அதிகார வெறி பிடித்தவர்களாக்கியது. தேவாந்தகன் தன் தம்பியாகிய நராந் தகனை நோக்கி, "நீ நன்கு தேர்ந்த அசுரப்படை ஒன்றை உருவாக்கிக்கொள். பிறகு பூவுலகையும் கீழுலகையும் வென்று அரசாட்சி செலுத்து. நான் மற்றொரு சிறந்த அசுரப்படையைத் தயாரித்துக் கொண்டு தேவருலகம் சென்று இந்திரனை வென்று தேவருலகில் அரசாட்சி செலுத்துகிறேன்" என்று கூறினான். பிறகு தேவாந்தகனுக்கு உதவியாகச் சிறந்த அசுரவீரர்களையும் படைஞர்களையும் தேர்ந்தெடுத்தனர். தேவாந்தகன் பிறகு எண்ணற்ற அசுரர்களோடு அமராவதியை அடைந்து நகரின் வெளிப்புறத்தில் இருந்த கற்பகச் சோலையில் தங்கினான். தேவாந்தகன் அமராவதியின்மீது படையெடுத்து வந்திருப்ப தைக் கேள்வியுற்ற வானவர் வேந்தன் வெகுண்டெழுந்தான். தன் படைகளைத் திரட்டிக்கொண்டு தேவாந்தகனை நோக்கி வந்தான். இருதிறத்தாருக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. முதலில் அவுண வீரர்களை தேவர்கள் முறியடிப்பதுபோல் தோன்றியது. ஆனால் வரபலம்மிக்க தேவாந்தகன் போர்முனைபுக்குத் தேவர் படையைச் சின்னாபின்னமடையும்படிச் செய்தான். களத்தில் நிற்கமாட்டாத தேவர்கள் நானாதிசையிலும் ஓடி ஒளிந்தனர். இதனைக் கண்ட இந்திரன் எல்லையிலாச் சினம் கொண்டு வெள்ளை யானை மீதேறி தேவாந்தகனை நோக்கி விரைந்து வந்தான். போர்முனையில் முன்னணியில் நின்றுகொண்டிருந்த தேவாந்தகனை நெருங்கியதும் வலிமை மிக்க தன் வச்சிரா யுதத்தால் அவன் மார்பில் ஓங்கி அடித்தான். வரபலங் கொண்ட தேவாந்தகனின் உரத்திற்பட்ட வஜ்ராயுதம் பொடிப் பொடியாய்ப் பிதிர்ந்து வீழ்ந்தது. இந்திரன் நிராயுதபாணி ஆனான். தேவாந்தகன் ஐராவதத்தின் மீது பாய்ந்து உலக்கை போன்று வலிமைவாய்ந்த தன் கரங்களால் அதன் மத்தகத்தில் ஓங்கிக் குத்தினான். இந்திரனைத் தன் காலால் ஏற்றி வெகு தூரத்தில்போய் விழும்படிச் செய்தான். விழுந்த இந்திரன் மூர்ச்சை அடைந்தான். வெள்ளை யானையும் வலி பொறுக்காமல் அலறிப் பிளிறியது; நிற்கும் வலிமையின்றிக் கீழே சாய்ந்து வீழ்ந்தது. தலைவனற்ற தேவர் படைகள் சிதறின; சிலர் சரணடைந்தனர். சற்றே மயக்கம் நீங்கிய இந்திரன் இனி தேவாந் தகனோடு போரிடுதல் இயலாதெனத் தெளிந்து மாற்றுருக் கொண்டு மறைந்தோடி மகாமேரு பர்வதத்தின் ஒரு சார்லில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

யாரும் அறியாவண்ணம் ஒரு குகையில் மறைந்துகொண்டான். இந்திராணி முதலிய பெண்டிரும் அமராவதியை நீத்து மறை விடங்களைத் தேடிச் சென்றனர். இந்திரன் இருப்பிடம் அறிய முடியாமல் தேவர்கள் கவன்றனர்.

தேவாந்தகன் இந்திரன் அரண்மனையை அடைந்தபோது அரண்மனையில் ஒருவரும் இல்லை. அது வெறிச்சோடிக் கிடந்தது. தேவாந்தகனும் அசுரப் படைஞரும் அரண்மனை முழுவதும் நிரம்பினர். தேவாந்தகன் இந்திரன் அரியணையில் அமர்ந்தான். ஓடிப் பதுங்கமுடியாத தேவர்கள் அசுரப் படைகளிடம் அகப்பட்டனர். ஆனால் தேவாந்தகன் அவர்களை நோக்கி, "என்னையே உங்கள் தலைவனாக ஏற்றுக்கொண்டு எனக்கு அடங்கி இனிது வாழ்க. அவ்வாறு இல்லையெனில் உங்கள் யாவரையும் சித்திரவதைக்கு உள்ளாக்குவேன்" என்றான். அதுகேட்ட எஞ்சிய தேவர்கள் அடங்கி வாழ ஒப்புக்கொண்டனர். தேவாந்தகனும் அவர்களைத் துன்புறுத்தாது விட்டுவிட்டான். அன்றுமுதல் தேவாந்தகன் விண்ணுலகாளியாய் விளங்கி வந்தான்.

பிறகு தேவாந்தகன் சத்தியவுலகு நோக்கிப் படையெடுத்தான். அவன் வருவதைக் கேள்வியுற்ற சதுர்முகப் பிரம்மா அவனுடன் போரிட விரும்பாமல் மறைந்தோடி வைகுந்தத்தை அடைந்தார். சத்தியவுலகம் வெகு எளிதில் தேவாந்தகன் வசமாயிற்று. தேவாந்தகனின் செருக்கு மிக அதிகமாயிற்று. சத்தியவுலகினின்றும் புறப்பட்ட தேவாந்தகன் வைகுந்தத்தை நோக்கிச் சென்றான். அவன் சிவபிரானிடமிருந்து பெற்ற வரபலத்தை முன்னமே அறிந்திருந்த விஷ்ணுவும் பிரம்மாவும் அவனோடு அப்போது போரிடுவதில் பயனில்லை என்பதை நன்கு உணர்ந்திருந்தனர். அதனால் போரைத் தவிர்த்துக் கொள்வதே புத்திசாலித்தனம் என்று கருதிய அவர்கள் இருவரும் தேவாந்தகனிடத்தில் அகப் படாமல் மறைந்து மேருமலைச் சாரலை அடைந்தனர். அப்போது இந்திராணியும் அரண்மனைப் பெண்டிரும் அங்கு வர அவர்கள் யாவரும் இந்திரன் இருக்குமிடம் அறிந்து அவனோடு சேர்ந்து மறைந்து வாழ்ந்தனர். வைகுந்த உலகும் தேவாந்தகன் வசமா யிற்று. இவ்வாறு அவன் விண்ணுலக முழுதும் தன்கையகப் படுத்திக்கொண்டான்.

நராந்தகன் ஆட்சி

நராந்தகனும் தன்னோடு ஏராளமான அசுரப் படைகளைச் சேர்த்துக்கொண்டு நானிலம் முழுவதும் விஜயம் செய்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அரசர்கள் பலரைக் கொன்றான். அவர்களுடைய நாடுகளைத் தானே ஆளத் தொடங்கினான். தன்னிடம் சரணடைந்தவர் களைத் தனக்குக் கப்பம் கட்டும்படி ஏற்பாடு செய்து அவர்களுடைய நாட்டை அவர்களே ஆள அனுமதித்தான். நாட்டில் நல்லவர் களின் செல்வாக்கு குறைந்தது; கொடியவர்களின் கொட்டம் அதிகமாயிற்று. முனிவர்களும் தவம் செய்வோர்களும் தம் செயல்களைச் செய்ய இயலவில்லை. தவம் குறைந்தது; தானம் நலிந்தது; நேர்மை குன்றியது. பூவுலக முழுவதும் தன்வயப் பட்டவுடன் நராந்தகன் பாதல உலகம் நோக்கிப் புறப்பட்டான். அதலம், விதலம், சுதலம், தராதலம், ரஸாதலம், மஹாதலம், பாதலம் என்ற ஏழு உலகங்களிலும் தன்னுடைய பிரதிநிதிகளை நியமித்தான். பணியாத அரசர்களை ஆவி நீக்கினான். பணிந் தவர்களிடம் திறைபெற்றான். நாகருலகையும் சென்று வென்றான். அப்போது ஆதிசேடன் பணிந்துவந்து திறையளிக்கச் சம்மதம் தெரிவித்தான். ஆனால் நராந்தகன் ஏனோ அதற்கு இணங்க வில்லை. ஆதிசேடனைக் கொடுஞ் சிறையிலிட்டுத் துடிக்கச் செய்தான். அவன் அரண்மனையில் இருந்த அரிய பொருள் களையெல்லாம் அகற்றித் தன்னுடைய அரண்மனையில் சேர்க்கச் செய்தான். அவன் செல்வங்களையெல்லாம் கொள்ளை யடித்தான். பிறகு தனக்குப் பிரதிநிதியாக இருந்து நாகருலகைப் பரிபாலித்து வருமாறு ஓர் அசுரனை நியமித்தான்.

இவ்வாறு விண்முழுதாளியாக தேவாந்தகனும் பூவுலகும் கீழுலகும் ஆள்பவனாக நராந்தகனும் விளங்கினார்கள். தன் மக்களுடைய வலிமையையும் செல்வத்தையுமே கண்ட அவர் களுடைய தந்தையாராகிய ரௌத்ரகேது மிகவும் பெருமை கொண்டார்; அவர்களுடைய தாயாராகிய சாரதா மிகவும் மகிழ்ச்சி கொண்டாள். பிறகு பேரழகிகளாக விளங்கிய பெண்கள் இருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தனர். காலப்போக்கில் அவர்களுக்குப் பல புதல்வர்கள் தோன்றினர். அப்புதல்வர்கள் யாவரும் செருக்கு மிகுந்தவர் களாய் கொடுமை செய்யத் தயங்காதவர்களாய் இருந்தனர்.

மஹோத்கடர் அவதாரம்

காச்யபரின் மனைவியாகிய அதிதியின் புத்திரர்கள் இந்திரன் முதலியோர். ஆகையால் அவர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தைக் கண்டு அதிதி கலங்கினாள். ஆனால் அசுரர்கள் காச்யபரின் மற்றொரு மனைவியாகிய திதியின் புத்திரர்களின் வழிவந்தவர்கள். ஆகையால் அவர்களுடைய ஆக்கத்தைக் கண்டும் அதிதி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மைந்தர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தைக் கண்டும் திதி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். அதிதி காச்யப முனிவரை வணங்கித் தன்னுடைய மக்களின் இன்னல்களைப் போக்கிப் பழமைபோல் பெருமையை உண்டாக்கும் வண்ணம் வல்லமை மிக்க ஒரு வீரப் புதல்வனைத் தனக்கு அளிக்க வேண்டும் என வேண்டி நின்றாள். காச்யபரும் தம் அன்பு மனைவியை ஆதுரத்துடன் நோக்கி, "கற்புக் கடம் பூண்ட செல்வியே, தேவாந்தகனும் நராந்தகனும் சிவபிரானைக் குறித்துக் கடுந்தவம் புரிந்து யாராலும் வெல்ல முடியாத வலிமையையும் மற்ற வரங்களையும் பெற்றுள்ளனர். அவர்களை விநாயகமூர்த்தியைத் தவிர வேறெவராலும் வெல்ல முடியாது. ஆகையால் நீ விநாயகமூர்த்தியைக் குறித்துத் தவம் செய்து அவரையே சரணாக அடைக. அவரே நினக்குப் புத்திர ராகத் தோன்றி நின் கருத்தை நிறைவேற்றுவார்" எனக் கூறிக் கணேச பஞ்சாட்சர மந்திரத்தை அவளுக்கு உபதேசம் செய்தார். அதிதியும் அன்று முதல் மிக்க தூய்மையோடு கணேச பூஜையை முறைப்படி செய்து கணேச பஞ்சாட்சர மந்திரத்தைத் திரிகரண சுத்தியுடன் ஜபித்து உருவேற்றி வந்தாள். இவ்வாறு நூறு ஆண்டுகள் கழிந்தன. அதிதியின் பூஜைக்கு உவந்த எம்பிரான் அவள்முன் தோன்றினார். ஸஹஸ்ர கோடி தினகரன் போல் சிம்ம வாஹனத்தில் தோன்றிய கணேச மூர்த்தியை அதிதி தேவி தன் இரு கண்ணாலும் கண்டு பரவசம் அடைந்தாள். அம் மூர்த்தியைப் பலமுறை நமஸ்கரித்தாள்; கண்ணீர் மல்க மௌன மாய் நின்றாள். கணேசர் அவளை நோக்கி, "உன்னுடைய தவத்திற்கு ஒப்பாய் வேறு ஒன்று இல்லை; உனக்கு வேண்டும் வரங்களைக் கேட்டுப் பெறுவாயாக" என்றார். அதிதி தேவி மீண்டும் அனைத்தும் வல்ல ஆனை முகத்தானை வணங்கி, "ஆதியே, அருட்பெருங்கடலே, அனைத்தையும் விளக்கும் சோதியே, தேவாந்தகன், நராந்தகன் என்ற இரு மனிதர்கள் தம்முடைய சுபாவத்தை விட்டுவிட்டு அசுரர்களின் இயல்பை மேற்கொண்டு என் புத்திரர்களாகிய இந்திரன் முதலானோரைத் துன்புறுத்துகின்றனர். அவர்களுக்கு அஞ்சிய அவர்கள் மறை விடத்தில் வாழ்கின்றனர். மேலும், எனக்கு மகன் முறையான ஆதிசேடனையும் அவர்கள் அருஞ்சிறையிட்டுத் துன்புறுத்து கின்றனர். முக்தி பெறும் முயற்சியில் முனைந்து தவம்புரியும் முனிவர்களுக்குச் சொல்லொணாத் துன்பமும் இடையூறும் விளைத்து வருகின்றனர் அவ்விரு சோதரர்களும். ஆகையால் அருள் கூர்ந்து அவ்விருவரையும் ஒடுக்கவும் எல்லாவுலகுக்கும் நன்மை ஏற்படவும் என் ஜன்மம் ஸாபல்யம் அடையவும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தாங்கள் எனக்கு மகனாகப் பிறந்தருள வேண்டும்'' எனப் பிரார்த்தித்தாள்.

விநயம் மிகுந்த அதிதியின் கூற்றைக் கேட்ட விநாயகர், "தவச் செல்வியே, உன் விருப்பப்படியே உரிய சமயத்தில் உனக்குப் புதல்வனாய் வந்து தோன்றுவோம்; கவலற்க'' எனக் கூறி மறைந்தார். அதன் பின்னரும் அதிதி தினமும் விநாயக பூஜையை விடாமல் செய்துவந்தாள். தன் கணவராகிய காச்யப முனிவரிடம் தான் தவமியற்றியதையும் தவத்திற்குருகிய தயாபரன் தரிசனம் தந்ததையும் வரம் ஈந்ததையும் விளக்கமுறச் சொல்லி னாள். அவரும் மகிழ்ச்சியுற்றார்.

அதன்பின் பல்லாண்டுகள் கழிந்தன. மறைந்து வாழ்ந்த தேவர்கள் இன்னல் பொறுக்காமல் பிரம்மதேவனை அணுகி, "எத்துணை காலம் இத்தகைய இன்னல்களைப் பொறுத்துக் கொண்டிருக்க இயலும்? இதற்கொரு முடிவே இல்லையா? எங்களிடம் கருணைகொண்டு ஒருவழி சொல்ல வேண்டும்'' என்று வேண்டினார்கள். அவர்கள் கூற்றைக் கேட்ட பிரம்ம தேவன் அவர்களை நோக்கி, "அவர்கள் சிவபக்தர்கள்; சிவபிரான் சிந்தியாது ஈந்த வரத்தால் அனைத்துலகமும் அவதியுறுகின்றது; அவர்களை விநாயகமூர்த்தி ஒருவரால்தான் கொல்ல இயலும்; வேறொருவரால் இது நீங்காது. ஆகையால் நாம் எல்லாரும் சேர்ந்து ஆதியென்று நாம் கருதும் பொருளுக்கும் ஆதியாக விளங்கும் ஆனைமுகக் கணபதியைக் கைதொழுது பூஜிப் போம்; தியானம் செய்வோம்; நம்முடைய துன்பம் விலகுவது திண்ணம்'' என்றார். நான்முகன் கூறியதை யாவரும் ஏற்றுக் கொண்டு கணேச மூர்த்தியைக் குறித்து எல்லாரும் தியானம் செய்தார்கள். அப்போது வானத்தைக் கீறி ஓர் அசரீரி ஒலித்தது: "அண்ட முழுதும் அலைத்து அழிக்கும் புல்லியர் அழிய புனித தேவர்களும் முனிவர்களும் மகிழக் களிற்றுமுகக் கணபதி காச்யப் முனிவருக்குப் புதல்வராய் விரைவில் அவதரிக்கப் போகிறார்.''

அனுதினமும் இடைவிடாது ஆனைமுகனை ஆராதனை செய்யும் அதிதிக்கு ஒருநாள் எண்ணிலாத் தலைகளும் எண்ணிலாக் கரங்களும் கொண்டு ஜோதி வடிவாய்க் காட்சியளித்தார் ஆதி பகவன். துணுக்குற்ற அதிதி அவரை உடனே பக்தி பரவசத்தோடு பாடிப் பரவி வணங்கி நின்றாள்; தேஜோமயமான கணேச மூர்த் தியைக் கண்ணால் காண இயலாது கண்கள் கூசத் தவித்தாள். மீண் டும் அம்மூர்த்தியை வணங்கி, "ஓங்கார மூர்த்தியே,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அடியவர்க்கு அருளும் கண்ணலே, எனக்கு மகனாய்த் தோன்றுவதாக அருளிய திருவாக்கை விரைவில் நிறைவேற்ற வேண்டும்'' என வேண்டினாள். விநாயகப் பெருமான் சிரித்தார். ''அந்த வரத்தை நிறைவாக்கவே இப்போது வந்திருக்கிறேன்'' என்று அவர் கூறலும் அதிதி, ''இத்துணை பெரிய உருவத்தை நான் எவ்வாறு என் கைகளில் அடக்குவேன்? எவ்வாறு என் மடியில் வைத்துக் கொஞ்சுவேன்? எவ்வாறு உணவளிப்பேன்? என் கைக்கும் மடிக்கும் அடங்கும் குழந்தையாய் நான் ஆசையுடன் அள்ளி எடுத்து உச்சி மோந்து மார்போடணைத்துப் பால் கொடுத்துப் பழகும் குழந்தையாய் வரல் வேண்டும்'' என வேண்டினாள். அவள் கூறி முடிக்குமுன் ப்ரபஞ்ச காரணனாகிய பெம்மான் அப்போதுதான் பிறந்த குழந்தைபோன்று பிஞ்சு விரல்களும் மெல்லிய காலும் சற்றே பருத்த தொந்தியும் மதாணி அசையும் மார்பும் நீண்ட கைகளும் ப்ரஸந்ந வதனமும் கொண்டு அத் தேவியின் மடிமீது கிடந்தார். அதிதியோ அன்பு பொங்க ஆர்வம் மேலிட குழந்தையை இரு கைகளாலும் அணைத்து அழகுற எடுத்து ஒளிவீசும் அதன் கன்னத்தில் ஒரு முத்தம் இட்டுப் பாலமுதம் ஊட்டினாள். பகவான் இவ்வாறு அவதாரம் செய்தபோது நானாவகை மலர்ச் செடிகளும் பூத்துக் குலுங்கி மணம் பரப்பின. காச்யப முனிவர் அத்தெய்வக் குழந்தைக்கு மஹோத்கடர் எனப் பெயரிட்டுச் சிறப்புடன் வளர்த்துவந்தார். இவ்வாறு கணேச மூர்த்தி காச்யப முனிவரின் புத்திரராகத் தோன்றி மஹோத்கடர் என்ற பெயரோடு வளர்ந்து வருவதை நாரதர் தெரிந்துகொண்டார். அவர் மற்ற முனிவர்களுக்கு அதனை அறிவித்தார். உடனே பல முனிபுங்கவர்கள் அக் குழந்தையைத் தரிசித்துச் செல்வதற்காகக் காச்யபருடைய ஆச்ரமத்துக்கு வந்தவண்ணம் இருந்தார்கள்; குழந்தையைக் கண்டு மகிழ்ந்து ஆசி கூறிச் சென்றார்கள்.

குழந்தையை விழுங்கிய விரஜை

அதே சமயத்தில் நராந்தகனுடைய அரண்மனையில் காணக் கூடாத அசுப சகுனங்கள் தோன்றின; தீ நிமித்தங்கள் தோன்றின; உற்பாதங்கள் மிகுந்தன; பிடி மதம் பெருக்கியது; கற்பூரம் கேசம் கரிந்தெரிந்த வாசம் காட்டியது; மேகமின்றியே இடி இடித்தது; தூமகேது தினகரனைச் சூழ்ந்தது; குருதி மழை பொழிந்தது; இவை யாவற்றையும் கண்ட நராந்தகன் மனம் கொஞ்சம் கலங்கியது. அதனால் அவன் நிமித்திகர்களையும் புட்குறி வல்லுநர்களையும் சோதிடர்களையும் வருவித்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நெஞ்சைக் கலக்கும் நிகழ்ச்சிகளை ஆய்ந்து அவற்றின் பலன் களைக் கூறுகெனக் கட்டளையிட்டான். அவர்கள் அந்நிகழ்ச்சி களை ஒவ்வொரு கோணத்திலும் ஆராய்ச்சி செய்தனர்; ஆனால் அவை குறிக்கும் விளைவை எடுத்துக் கூற அஞ்சினர். நராந்தகன் அவர்களை நோக்கி, "உண்மை நிலையை உள்ளவாறு கூறுங்கள்; அவ்வாறு கூறுவதால் உங்களுக்குத் துன்பம் ஏதும் உண்டாகாது" என உறுதியளித்தான். அவ்வாறு அவன் உறுதி கூறியபின் அவர்கள் ஒருமுகமாய், "காசினி முழுவதும் காத்திடக் கருதி கணேச மூர்த்தி காச்யப முனிக்குக் கான்முளையாய்த் தோன்றி யுள்ளார்; நானிலம் ஆளும் நராந்தக வேந்துக்கு நவைமிக உண்டாம்; நல்லுயிர் உடல்விட்டு ஓடவும் கூடும்." எனக் கூறிச் சென்றனர்.

முன்னே கலங்கிய நராந்தகன் இப்போது அச்சம் அடைந் தான். அச்சம் மிகவே விரஜை என்ற அசுரப் பெண் ஒருத்தியை அழைத்துப் பரிசில் பல நல்கி, "காச்யப முனிவர் ஆச்ரமத்தில் வளர்ந்து வரும் குழந்தையைக் கடிதினிற் கொன்று விரைந்து வருக" என ஆணையிட்டான். ஆணையும் பரிசும் பெற்ற அரக்கி காச்யப முனிவர் கடுந்தவம் புரியும் கானகம் அடைந்தாள். அரசன் குறித்த அந்தக் குழந்தையைக் கண்டாள். எவ்வாறு இதனை வதைக்கலாம் என்று ஆலோசித்தாள்; கடைசியில் ஓர் அந்தண குலத்துப் பெண்ணாய் வஞ்சக வேடம் கொண்டு ஆச்ரமத்தை அடைந்தாள். அப்போது அதிதி தேவி தன் கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் ஆழ்ந்திருந்தாள். காச்யபர் தன் மாணாக்கர்களுடன் காட்டினுள் சென்றிருந்தார். பிள்ளைப் பெருமான் கண்ணை மூடிக்கொண்டு அறிதுயிலில் கிடந்தார். வந்த அந்த அரக்கி வந்த வேளை நன்று என எண்ணி மலர்க்கண் மூடித் தளர்ந்து உறங்கும் பச்சைப் பிள்ளையை எடுத்துத் தன் குகை வாயிற் போட்டு விழுங்கினாள்; விழுங்கிய பின் யாரும் காணாமலே வெளியேறினாள். அப்போது மஹோத்கடர் தம் நெற்றிக் கண்ணைச் சிறுச்சிறிதே திறந்தார். அதனால் உண்டான வெப்பத்தால் அரக்கியின் வயிறு எரிச்ச லடைந்தது; வெந்து புண்ணாயிற்று; வலி தாங்க முடியவில்லை; விரைந்தோடி அருகில் இருந்த தடாகத்தில் உள்ள நீரை எல்லாம் குடித்தாள். எரிச்சல் அதிகமாயிற்றே தவிரக் குறையவில்லை; சற்று நேரம் கடந்தது; உடம்பு முழுவதும் எரிச்சல் தோன்றியது; வானிற் பாய்ந்து விரைந்தோட எண்ணினாள்; ஆனால் அவள் வயிற்றுள் இருந்த விநாயகர் மலைபோலக் கனமானார்; உள்ளும் புறமும் தோன்றிய எரிச்சலாலும் வயிற்றில் கல்லைக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கட்டினாற்போலும் உண்டான கனத்தாலும் துன்புற்ற விரஜை நடக்கவும் முடியாமல் கீழே விழுந்து துடித்தாள்; வயிற்றுள்ளிருந்த விநாயகப் பெருமான் அப்போது தம் கால் நகத்தால் அவள் வயிற்றைக் கீண்டார். வலி பொறுக்க முடியாது விரஜை இடிக்குரலெடுத்துக் கதறினாள்; தரை முழுதும் புரண்டு தளர்ந்தாள்; அவள் உயிர் ஊசலாடியது. குழந்தை மஹோத்கடரோ கொஞ்சமும் அச்சமின்றி அவள் வயிற்றில் தான் கீறிய துளை வழியே வெளிப்போந்து அவள் மார்பில் அமர்ந்தார். அவள் கதறிய குரல் கேட்ட ஆச்ரம வாசிகள் விரைந்தோடி வந்தனர். அதிதி தேவியும் கண்களைத் திறந்து பார்த்தாள். குழந்தையைக் கிடத்திய படுக்கை கிடக்கக் குழந்தையைக் காணாது திகைத்தாள். சத்தம் கேட்ட திசைநோக்கி ஓடிவந்தாள்; அரக்கியின் மார்பின் மீது அருமைப் புதல்வன் அமர்ந்திருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தாள். வஞ்சகர் சூதினை உணர்ந்து வருத்தம் மிகக் கொண்டாள். யாவரும் திகைத்தனர்; குழந்தையை எடுத்துச் சென்று கண்ணேறு கழித்தனர். விரஜையின் விறல்சூது வெற்றி பெறாமல் விரஜையே மாண்டதை நராந்தகன் அறிந்தான். மாயம் வல்ல அரக்கியை மாளச் செய்த மதலையின் வலிமையை எண்ணி வியந்தான்.

தத்தையாய் வந்த தைத்தியர்

மஹோத்கடருக்கு அப்த பூர்த்தி சடங்குகள் செய்யப்பட்டன. குழந்தையும் தினம்தினம் புதுப்புது விளையாட்டுக்களை விளையாடி யாவரையும் மகிழ்வித்துக்கொண்டிருந்தது. அப்போது நராந்தகன் மஹோத்கடரைக் கொல்வதற்காக உதத்தன் துந்துபி என்ற இரு அரக்கர்களை அனுப்பினான். அவர்கள் காச்யபருடைய ஆச்ரமத்துக்கு அருகே தத்தை உருக்கொண்டு தானியங்களைக் கொத்தித் தின்றும் கொஞ்சிக் கொஞ்சிப் பேசியும் விசும்பில் விண்ணென்று எழுந்து பறந்து காட்டியும் அருகில் இருந்த தருக்களில் தங்கியும் மஹோத்கடரைக் கொல்வதற்கு ஏற்ற தருணத்தை எதிர்பார்த்து இருந்தனர். மஹோத்கடர் அதனைப் புரிந்து கொண்டார். அவ்வஞ்சக் கிளிகள் ஆச்ரம முற்றத்தில் தத்தித் தத்தி விளையாடுவதைக் கண்ட மஹோத்கடர் தம் தாயிடம் அக்கிளியைப் பிடித்து விளையாடத் தருமாறு வேண்டினார். கிள்ளையைப் பிடித்துத் தரச் சொன்ன பிள்ளையைப் பார்த்து, "விண்ணிற் பறக்கும் பறவை கண்ணியிற் படுவதல்லால் கையிற் படுமோ?" என்றாள். உடனே அக்குழந்தை விண்ணில் தாவியது; பருந்தாய் மாறியது; கிளிகளின் பின்னால் பறந்தது;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பருந்தாய் வந்த பாலகனைப் பார்த்த வஞ்சகப் பைங்கிளிகள் தம் உயிருக்கு அஞ்சிக் கடுங்காற்றென விரைந்து பறந்தன. மஹோத்கடரோ எளிதில் அவற்றைப் பற்றிச் சிறகுகளை முறித்து உடல்களைப் பாறைகளின் மீது மோதினார். வந்த அசுரர்களின் உடல் பிளந்தது; உயிர் பிரிந்தது; அசுரச் சடலம் தரையில் கிடந்தது. அதனைக் கண்ட ஆச்ரமவாசிகள் அஞ்சினார்கள்; குழந்தையின் தெய்வத் தன்மையை உணர்ந்து போற்றினார்கள். அதிதி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை; அள்ளித் தன் மடிமீது அமர்த்திக் கொண்டாள்.

கந்தர்வன் சாப விமோசனம்

காச்யபரின் ஆச்ரமத்தருகே மிக அழகிய புஷ்கரிணி ஒன்று உண்டு. அதில் வெண்டாமரையும் செந்தாமரையும் அலர்ந்திருந்தன. அதன் நான்கு புறங்களிலும் சந்திரகாந்தக் கற்களால் படிகள் அமைக்கப்பட்டிருந்தன. அக்குளம் சோமவதி என்னும் பெயரால் புகழ்பெற்றிருந்தது. ஒருநாள் அதிதி தேவி தன் குழந்தை மஹோத்கடரைத் தூக்கிக் கொண்டு அக்குளத்திற்கு நீராடச் சென்றாள். அவளோடு இன்னும் சில பெண்களும் சென்றார்கள். மூன்றே வயது நிரம்பிய மஹோத்கடரை வாவிக் கரையில் அமர்த்தி அவ்விடம் விட்டு அகலாதே என்று இதமாகக் கூறி எச்சரித்துப் பின்னர் யாவரும் நீரில் இறங்கித் துளையமாடினர். அப்போது மஹோத்கடர் ஒருவரும் பாரா திருக்கையில் தடாகத்தில் உள்ள தாமரை மொட்டைப் பறிப் பார்போன்று மடுவுள் இறங்கிவிட்டார். அப்போது அம்மடுவுள் வாழ்ந்துகொண்டிருந்த முதலை ஒன்று 'இன்று இனிய உணவு கிடைத்தது' என மகிழ்ந்து அவரைத் தன் வாயால் கவ்விக் கொண்டது. துளையமாடிய பெண்களில் ஒருத்தி முதலை குழந்தையைக் கவ்வுவதைப் பார்த்துவிட்டு அலறினாள். எல்லாரும் முதலையைத் துரத்திக் கொண்டு போனார்கள். முதலையோ மிக ஆழமான பகுதிக்குப் போய்விட்டது. ஒருவராலும் குழந்தையை மீட்க முடியவில்லை. சிலர் இச்செய்தியைச் சொல்ல ஆச்ரமத்துக்கு ஓடினார்கள். ஆனால் சற்றுநேரத்தில் மஹோத்கடர் முதலையின் முதுகின்மீது அமர்ந்து சவாரி செய்துகொண்டிருந்தார். அதற்குள் ஆச்ரமத்தினின்றும் சிலர் ஓடி வந்தனர். அவர்களும் செய்வதறியாது திகைத்து நின்றனர். முதலையின் முதுகின்மீது அமர்ந்த மஹோத்கடர் முதல்லையைக் குளத்தைச் சுற்றிச் சுற்றி நீந்திவருமாறு நிர்பந்தித்தார்; குனிந்து முதலையின் அடிவயிற்றை அமுக்கிக் கொண்டார்; அது வலி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தாங்காமல் அவர் திருப்பிய திசையிலெல்லாம் நீந்திச் சென்றது. இவ்வாறு நெடுநேரம் நீந்தியதால் அந்தக் கராம் களைத்தது. அதனால் நீந்த முடியவில்லை; ஆனால் மஹோத்கடரோ அதன் அடிவயிற்றை மேலும் அமுக்கி அது துடித்துக்கொண்டு நீந்திக் கரையேறுமாறு துரத்தினார். முதலை நுரை கக்கி மூச்சுத் திணறியது; மிகவும் கஷ்டப்பட்டு மஹோத்கடரால் உந்தப்பட்டு அது கரையேறியது; அதன் வலிமை முழுவதும் அழிந்தது. மஹோத்கடர் அதன் முதுகினின்றும் கீழே இறங்கினார். அதிதி தேவி ஓடிவந்து மஹோத்கடரை வாரி எடுத்து அணைத்துக் கொண்டாள். வலிமை அழிந்த இடங்கர் புரண்டு மல்லாந்து விழுந்து உயிர்விட்டது. அவர்கள் யாவரும் பார்த்துக்கொண் டிருந்தபோதே அதன் உடம்பினின்றும் ஓர் ஒளிக்கற்றை வெளிப் பட்டுக் கந்தர்வன் உருவாய் மாற அவன் மஹோத்கடரின் பாதம் பணிந்து, "எம்பெருமானே, இன்னல் தீர்த்து இன்பம் அளிக்கும் ஏந்தலே, நான் ஒரு கந்தர்வன்; என் பெயர் சித்ரன்; ஒரு சமயம் நான் இருந்த இடத்திற்கு பிருகு முனிவர் வந்தார். நான் ஏதோ சில கவலைகளிலும் செய்ய வேண்டிய காரியங் களிலும் மூழ்கியிருந்தபடியால் அவர் வந்ததை கவனிக்கவில்லை. ஆனால் முனிவு மிகுந்த அம்முனிவரோ நான் செருக்குக் கொண்டு அவரை கவனிக்காமல் இருந்துவிட்டதாகக் கருதி என்னை முதலையாகெனச் சாபமிட்டார். தன்னுணர்வு வந்த நான் பிருகு முனிவரைப் பணிந்து அறியாமற் செய்த தவற்றை அருள்கூர்ந்து மன்னிக்கவேண்டுமென்று வேண்டினேன். விரைவில் சினம் அடங்கும் குணம் மிக்க வித்தகரான பிருகு முனிவரும் எனக்கு இரங்கி, 'விநாயகப் பெருமான் காச்யப முனிவருக்குத் திருக்குமாரராக அவதரிப்பார்; அக்காலையில் அவருடைய திருவடி சம்பந்தத்தால் உன் சாபம் நீங்கும்' எனச் சாபவிடை கொடுத்தார். அன்று முதல் இன்றுகாறும் ஆதிமூலப் பழம்பொருளாகிய, புதுமைக்கும் புதுமையாகிய தங்கள் திருப் பாதமே கதி என எண்ணி தியானம் செய்து வந்தேன். என் தவம் இன்று பலித்தது" எனக் கூறி நின்றான். மஹோத்கடரும் அக் கந்தர்வனுக்கு அருள் பாலித்தார். அவன் தன் கந்தர்வ உலகு சென்றான்.

பிரபஞ்சம் காட்டிய பெருவாயான்

மஹோத்கடருக்கு மூன்று பிராயம் முடிந்தது. நான்காம் பிராயத்தில் அடியெடுத்து வைத்தார். ஒரு நாள் ஹாஹா, ஹூஹூ, தும்புரு என்ற மூன்று கந்தர்வர்கள் அரன் வைகும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கயிலையங்கிரிக்குச் சென்று அம்மையப்பனைத் தரிசனம் செய்ய விழைந்து பயணம் மேற்கொண்டனர். போகும் வழியில் முனிவர் திலகமான காச்யபர் ஆச்ரமத்தைக் கண்டு அங்கே தங்கி அவர் அருள்பெற்றுச் செல்ல எண்ணி ஆச்ரமத்தை வந்தடைந்தனர். காச்யப முனிவர் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றுச் சிறந்த உபசாரங்களைச் செய்தார். அம்மூன்று கந்தர் வர்களும் புனித நீராடிப் பஞ்சாயதன பூஜை செய்யத் தொடங்கினர். அப்போது ஒரு பலகையின்மேல் நடுவில் பாண லிங்கத்தையும் வட கிழக்கில் ஸாளக்ராமத்தையும் தென்கிழக்கில் ஸ்படிகத்தையும் தென்மேற்கில் சோணத்தையும் வடமேற்கில் ஒள்ளொளிச் சிலை யையும் முறையே சம்பு, ஹரி, சூர்யமூர்த்தி, கணேசமூர்த்தி, அம்பாள் ஸ்வரூபமாக வரிசைப்படுத்தி வைத்துக் கண்ணை மூடிக்கொண்டு தியானம் செய்தனர். அருகில் விளையாடிக் கொண்டிருந்த மஹோத்கடர் அந்த அர்ச்சாரூபங்கள் மறைந்து போகுமாறு செய்தார். தியானம் முடிந்து கண்ணை விழித்த கந்தர்வர்கள் தாம் வைத்திருந்த பாணலிங்கம் முதலியவற்றைக் காணாமல் மயங்கினர். மிகவும் வருந்திய அவர்கள் அவற்றை எடுத்து மறைத்தவர்களைச் சபிக்கப் போவதாகக் கூறினர். அப்போது காச்யப முனிவர் விளையாடிக் கொண்டிருந்த மஹோத்கடரையும் மற்ற சிறுவர்களையும் அழைத்து அவற்றை எடுத்து வைத் திருக்கிறார்களா என்று கேட்டார். மஹோத்கடர் தாம் எடுத்து ஒளித்துவைத்திருப்பதாகக் கூறவே மிகவும் கோபம் கொண்ட அவர், "எங்கே வைத்திருக்கிறாய்?" என்று கடிந்து கேட்டார். மஹோத்கடர், "இதோ" என்று வாயைத் திறந்து காட்டினார். கந்தர்வர்களும் காச்யபரும் திகைத்து அவர் வாயை நோக் கினார்கள். அப்படியே அயர்ந்து நின்றார்கள்; அவ்வாயினுள் அவர்கள் ப்ரபஞ்சம் முழுவதையும் கண்டார்கள்; சகல ஜீவரா சிகளையும் கண்டார்கள்; இப்பூவுலகைப் பார்த்தார்கள்; காச் யபர் தவம் செய்துவந்த கானகத்தைக் கண்டார்கள்; அங்கே ஆச்ரமத்தைக் கண்டார்கள்; அங்கே ஒரு காச்யபரைக் கண்டார்கள்; அந்த மூன்று கந்தர்வர்களையும் கண்டார்கள்; பஞ்சாயதன மூர்த்தங்களைக் கண்டார்கள்; அங்கே ஒரு மஹோத்கடரைக் கண்டார்கள்; அண்டசராசரங்களிலும் உள்ள அனைத்துப் பொருள்களையும் கண்டார்கள்; மூன்று கந்தர்வர்களுக்கும் மஹோத்கடர் யாரெனப் புரிந்துவிட்டது. அவர்கள் அவரைப் பலமுறை வலம்வந்து வணங்கினார்கள். தங்கள் பாக்கியமே மிகச் சிறந்த பாக்கியம் என்று மகிழ்ந்தார்கள்; மஹோத்கடர் அவர்களுடைய பஞ்சாயதன ஸாதனங்களைத் திருப்பியளித்தார்; மேலும் பல வரங்களையும் ஈந்தார். அம்மூன்று கந்தர்வர்களும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தங்கள் பேற்றை எண்ணிப் பெருமிதம் கொண்டனர்; காச்யப முனிவரிடம் விடைபெற்றுக் கொண்டு தங்கள் பயணத்தை மேலும் தொடர்ந்தனர். ஆச்ரமவாசிகள் அனைவரும் அளவிலா மகிழ்ச்சி எய்தினர்; மஹோத்கடரின் தெய்வத் தன்மையை வியந்தனர்.

உபநயனம்

மஹோத்கடருக்கு ஐந்து வயது முடிந்தது. நுண்ணறிவு மிகுந்திருக்கும் குழந்தைகளுக்கு ஐந்து வயதிலேயே உபநயனம் செய்யலாம் என்ற விதி இருப்பதால் காச்யபர் தம் மகனாகிய மஹோத்கடருக்கு உபநயனம் செய்ய விரும்பினார். நாளும் கோளும் ஆராய்ந்து நல்லதொரு நாளில் உபநயன முகூர்த்தம் குறிப்பிட்டார். பிறகு பல முனிவர்களையும் தேவர்களையும் முகூர்த்தத்திற்கு வந்திருந்து முகூர்த்தத்தை நன்கு நடத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். குறிப்பிட்ட நன்னாள் வந்தது. முனிவர்களும் தேவர்களும் ஆசிரமத்தில் குழுமினர். மஹோத்கடருக்கு உபநயனம் நிறைவெய்தியது. பெரியோர்கள் மஞ்சள் அக்ஷதை போட்டு அசீர்வாதம் செய்தனர். இந்தக் கோலாகல சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு நராந்தகனால் ஏவப்பட்ட ஐந்து அசுரர்கள் முனிவர் உருவத்தில் வந்திருந்தனர். அவர்கள் அக்ஷதையில் அஸ்திர ஆவாஹனம் செய்து ஆசீர்வதிப்பது போல் பாவனை செய்து அந்த அக்ஷதைகளைக் குழந்தையின் தலையைக் குறித்துத் தூவியதுபோல் வீசினர். அவை உடனே பயங்கரமான அஸ்திரங்களாக மாறி அவனி அஞ்ச நெருப்பைக் கக்கிக்கொண்டு மஹோத்கடரை நோக்கி வந்தன. யாவரும் திடுக்கிட்டு நின்றனர். அவற்றின் பயங்கரத்தைக் கண்ட பலர் விரைந்து ஓடினர். முனிவர்கள் அந்தச் சூழலே அழிந்து விடுமோ என அஞ்சினர். காச்யபரும் அதிதியும் குழந்தையைக் கட்டிக் கொண்டனர். அஸ்திரமோ அவர்களை நோக்கியே வருவது தெளிவாயிற்று. காச்யபர் அவசமானார்; அதிதியோ நினைவிழந்தாள். அந்நிலையில் அவனி முழுதும் ஆச்சரியப்படும் படியாக அசுரர் அஞ்சி அழியும்படியாக அந்த அஸ்திரங்கள் வேகம் குறைந்தன; மஹோத்கடரை நெருங்க நெருங்கக் கொடுமை குறைந்தன; இறுதியில் அவை மலர்களாக மாறி மஹோத்கடரின் மலர்ப்பாதங்களில் வீழ்ந்தன. மஹோத்கடர் மந்தஹாசத்துடன் ஐந்து அட்சதைகளை எடுத்து ஆகாயத்தில் வீசினார். அவை ஐந்தும் ஐந்துவகை உக்ரமான அஸ்திரங்களாக மாறின; வானத்தினின்றும் நேராக வஞ்ச உருவம் கொண்டு வந்திருந்த அரக்கர்களின் தலைமீது இடியேறுபோல வீழ்ந்து அவர்கள் உடலைச்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சின்னாபின்னமாக்கின. மஹோத்கடரை மாய்க்க வந்த வல்லரக்கர்கள் மாண்டொழிந்தார்கள். பிறகு அவ்விடத்தைச் சுத்தம் செய்து புண்யாஹவாசனம் போன்ற சடங்குகளால் புனிதமாக்கிச் செல்வக் குமாரனுக்கு ஆலத்தி எடுத்தார்கள்.

வாசவன் செருக்கு

மஹோத்கடரின் உபநயன முகூர்த்தத்துக்கு வந்திருந்த மஹேஸ்வரன் குழந்தைக்குப் பல்வகைப் போர்க்கருவிகளை அளித்து வாழ்த்தினார்; நாரணன் தனக்கு முன்னே சங்கரன் அளித்த சக்ராயுதத்தை அளித்தார். பிரம்மதேவர் கமண்டலம் முதலியன கொடுத்தார். உமையம்மை சிம்ஹவாகனம் கொடுத்தார். இப்படி எல்லாத் தேவர்களும் ஏதேனும் ஒரு சிறந்த பொருளைப் பரிசாக அளித்துப் போற்றி அருள் பெற்றார்கள். ஆனால் தேவர்கோன் மஹோத்கடரை மிகவும் அலட்சியமாக எண்ணினான்; தனக்குத் தம்பிதானே என்ற எண்ணம் இருக்கலாம். காச்யபர் அவன் மனநிலையைப் புரிந்துகொண்டார். அவனிடம் அவன் நடந்து கொள்ளும்முறை சரியன்று எனவும் அசுரர்களின் வன்மையை ஒழித்துச் சுரர்களைக் காக்கவே தோன்றிய அவதார புருஷன் மஹோத்கடர் எனவும் கூறினார். மேலும் மஹோத்கடரைப் பணிந்து அவரருள் பெறுதல் நலம் எனவும் நவின்றார். ஆனால் தலைக்கேறிய செருக்குடைய இந்திரன் அவ்வாறு செய்யவில்லை. தன்னுடைய பெருமையையும் வலிமையையும் காட்டவே விழைந்தான். ஆகையால் உடனே வாயுவை விளித்து, "அண்டமெல்லாம் திண்டாட அதிவேகமும் வன்மையும் கொண்டு வீசி இக்கானகத்தை நிலைகுலையச் செய்; இச்சிறுவனையும் உருட்டிப் புரட்டி விடு" என ஆணையிட்டான். வாயுதேவனுக்கு மஹோத்கடரின் மஹிமை முழுவதும் தெரியும். ஆணவம் அறிவை மறைத்தலால் ஆணை இடுகிறான் இந்திரன் என்பதை நன்கு புரிந்துகொண்ட வாயு இந்திரனுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என எண்ணி உடனே ஆணைக்குக் கீழ்ப்படிந்தான். உலகெலாம் கிடுகிடுக்கப் பேரிரைச்சலோடு ஊழிக்காற்றோ என அயிர்க்குமாறு வெகுவேகமாக வீசத் தொடங்கினான்; அண்டமெலாம் நிலைகுலையுமோ என யாவரும் அஞ்சினர்; அந்நிலையிலும் மஹோத்கடர் கொஞ்சமும் அசையாமல் நிற்கவே இந்திரனுடைய கர்வம் புண்பட்டது. கோபம் கொண்ட இந்திரன் அக்னியை நோக்கி வாயுவுக்கு உதவி செய்யுமாறு கூறினான். எங்கும் காற்றும் வெப்பமும் கடுமையாயின. இதனைக் கண்ட கணபதி தம் பார்வையால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அக்னியின் வலிமையை நிர்மூலமாக்கினார். பிறகு இடுப்பில் இருந்த ஆதிசேஷனை ஏவிக் காற்றை பலஹீனமாக்கினார். இவற்றைப் பார்த்த தேவேந்திரன் திகைத்து நிற்க மஹோத்கடர் விசுவரூபம் கொண்டார். ஆயிரம் தலைகளும் அண்டமுகடு முட்ட பாதங்கள் பாதாலம் ஏழுக்கும் அப்பாற் பரவ நின்ற பேருருவைக் கண்ட இந்திரன் மனமயக்கம் அகன்றது. அவன் மெய்யுணர்வு பெற்றுச் செருக்கழிந்தான். அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கித் தன் பிழை பொறுக்குமாறு வேண்டினான். தன் வஜ்ராயுதத்தையும் மற்றும் பல பொருட்களையும் காணிக்கை யாக அளித்தான். விநாயகப் பெருமானும் அவற்றை ஏற்றுக் கொண்டு அனுக்கிரஹம் செய்தார்.

காசிக்குச் செல்லுதல்

உபநயனம் செய்துகொண்டபின் மஹோத்கடர் நித்ய கர்மானுஷ்டானங்களை முறையாகச் செய்து வந்தார். ஆனால் தம்முடைய இயல்பான விளையாட்டுகளை நிறுத்தவில்லை. அப்போது ஆவணி மாதம் வந்தது. காச்யப முனிவர் சாதுர் மாஸ்ய விரதம் மேற்கொண்டார். சாதுர்மாஸ்ய விரதம் எடுத்துக்கொண்டால் நான்கு மாதங்கள் தான் இருக்கும் ஊரை விட்டு வெளியூருக்குச் செல்லுதல் கூடாது. இந்தச் சமயத்தில் காசிராஜன் தன் மகனுக்குத் திருமணம் நிச்சயம் செய்து கல்யாணச் சடங்குகளை முடிக்க வேண்டும் என்று விரும்பினான். அவன் காச்யப முனிவரிடம் மிகவும் மதிப்புக் கொண்டவன். அதனால் அவன் நேராக காச்யப முனிவர் தவம் செய்துகொண் டிருக்கும் ஆச்ரமத்திற்கு வந்தான். வந்த அரசனை முனிவர் முறைப்படி வரவேற்று வந்த காரியம் யாதென வினவினார். அரசனும் மனக்கருத்தைத் தெரிவித்தான். முனிவர் அவ்வரசனிடம் தாம் சாதுர்யமாஸ்ய விரதம் ஏற்றிருப்பதால் தாம் வர இயலாது எனவும் தமக்குப் பதிலாகத் தம் குமாரன் மஹோத்கடரை அனுப்பி வைப்பதாகவும் வைதிகச் சடங்குகள் யாவற்றையும் அக்குமரன் நன்கு செய்துவைப்பார் எனவும் கூறினார். அரசனும் ஒப்புக் கொண்டு மஹோத்கடரைத் தன்னுடைய தேரின்மீது ஏற்றிக்கொண்டு காசி நகரம் நோக்கிச் சென்றான்.

தூமாட்சன்

நராந்தகனுக்குச் சிறிய தந்தையார் முறையான தூமாட்சன் என்பவர் சூரியனைக் குறித்து நீண்ட காலம் தவம் செய்து வந்தார். அவருடைய தவத்திற்கு மகிழ்ந்த சூரியனும் மிகச் சிறந்த ஆயுதமொன்றை அவருக்காக அனுப்பினான். காசியை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நோக்கிச் சென்றுகொண்டிருந்த அரசனும் மஹோத்கடரும் அந்தத் தெய்வீக ஆயுதத்தைக் கண்டனர். அவ்வாயுதம் யாருக்காக எங்கே செல்கிறது என்பதை உணர்ந்த மஹோத்கடர் இடை வழியிலேயே அதனைப் பிடித்துத் தன்னதாக ஆக்கிக் கொண்டார். பிறகு அதனைத் தூம்ராட்சன்மீது ஏவினார். அந்த ஆயுதம் கோடி சூரியப் பிரகாசத்துடன் விரைந்து சென்று அவன் தலையை அறுத்துத் தரையில் தள்ளியது. அது கண்ட காசி ராஜன் மிகவும் அச்சம் கொண்டான். தூம்ராட்சன் நராந் தகனுடைய சிறிய தந்தையார் என்பது காசிராஜனுக்குத் தெரியும். மேலும் காசிராஜனும் நராந்தகனும் நண்பர்கள், நீண்ட நாட்களாக அவர்கள் நண்பர்களாக இருந்த காரணத்தால் தான் காசிராஜன் தொடர்ந்து அரசனாக இருக்க முடிந்தது. இல்லாவிட்டால் மற்ற அரசர்களின் கதியே காசி அரசனுக்கும் ஏற்பட்டிருக்கும். மஹோத்கடர் செலுத்திய ஆயுதத்தால் தூம்ராட்சன் மாண்டான் என்பதை அவனுடைய புதல்வர்கள் இருவரும் அறிந்தனர். அவர்கள் ஆக்ரோஷத்துடன் மஹோத் கடரை நோக்கி வந்தார்கள். அவர்களைக் கண்ட காசிராஜன் வெலவெலத்தான். வீணாக இவர்களுடைய விரோதத்தையும் நர்ாந்தகனுடைய விரோதத்தையும் அடைந்தோமே என வருந் தினான். அச்சமயத்தில் மஹோத்கடர் ஒரு பெருமூச்செறிய அக்காற்றால் அவ்விருவரும் தூக்கி எறியப்பட்டனர். அவர் களுடைய உடலங்கள் நராந்தகனுடைய அவையிற்போய் விழுந்தன. நராந்தகன் அச்சமும் அளவு கடந்த கோபமும் கொண்டான். அஃது எங்ஙனம் நிகழ்ந்தது என்பதை விசாரித்துத் தெரிந்துகொண்டான்.

நராந்தகன் அனுப்பிய அரக்கர்கள்

கோபம் கொந்தளித்து எழ நராந்தகன் அருகில் இருந்த வலிய ஐந்து அரக்கர்களை விளித்து மஹோத்கடரைக் கொன்றுவர அனுப் பினான். ஆனால் மஹோத்கடர் அவ்வைவரையும் அழித்தார். இவ்வாறே இடையிடையே பல சாகஸங்களைச் செய்துகொண்டு இருவரும் காசி நகரை அடைந்தனர். அப்போது நராந்தகனால் அனுப்பப்பட்ட இரு அசுரர்கள் அந்தணச் சிறுவர் வடிவம் கொண்டு மஹோத்கடரை அன்புடன் வரவேற்பதுபோலக் கட்டிக் கொண்டனர். அப்படியே இறுக்கி அமுக்கி அவரைக் கொன்றுவிட வேண்டும் என்பது அவர்களுடைய திட்டம். அவர்கள் இறுக்குவதையும் கொல்ல முனைவதையும் கண்ட மஹோத்கடர் இளந்தளிர்களைக் கசக்குவதுபோல் அவர்களைக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கசக்கி எறிந்தார். அவர்கள் இரத்தம் கொப்பளிக்கக் கதறிக் கீழே சுய உருவுடன் வீழ்ந்து இறந்தார்கள்.

பதங்கனும் விதுலனும்

அவ்விரு அரக்கர்களும் அழிந்தவுடனே அவர்களோடு வந்திருந்த பதங்கன் விதுலன் என்ற இரு அரக்கர்கள் மிக்க கோபம் கொண்டு புயற்காற்றாக மாறிப் பெரிய பெரிய கட்டடங்களை இடித்துத் தள்ளி மஹோத்கடரைக் கொல்ல முனைந்தனர். புயல் காற்றால் நகர மக்கள் அவதி உற்றனர். மலைபோல் நின்ற மாளிகைகள் தவிடுபொடியாயின. சிறு சிறு வீடுகள் ஆசிரமங்கள் இவற்றைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். இதைக் கண்ட மஹோத்கடர் தம் அரையில் இருந்த ஆதிசேடனுக்குக் குறிப்பால் அறிவிக்க ஆதிசேடனும் வாயு முழுவதையும் விழுங்கிவிட்டான். அவ்விரு அசுரர்களும் வலியிழந்து நிற்க அவர்கள்ளப் பற்றித் தரையின்மீது மோதி அடித்துக் கொன்றார். பிறகு நிர்மூலமான நகரத்தைத் தன் அருள்நோக்கால் நோக்கினார். நகரம் முன்போலாயிற்று; அரண்மனை முன்னைக் காட்டிலும் அதிகப் பொலிவுடன் விளங்கியது. அதனைக் கண்ட காசிமன்னன் அச்சமும் அதிசயமும் அடைந்தான்.

கூடன்

பின்னர் அவர்கள் அரண்மனையை நெருங்கினர். அவ்வசுரர்களோடு வந்திருந்த மற்றொரு அசுரன் கூடன் என்பான். அவன் ஆத்திரங்கொண்டு அரண்மனை வாயிலில் ஒரு பெருங்கல்லுருக் கொண்டு இருந்தான். அதனை அறிந்த மஹோத்கடர் அரசனிடம் அரண்மனையுள் புகுமுன்பு ஆனைமுகனைக் குறித்து ஆயிரம் தேங்காய்கள் உடைத்துக் கண்ணேறு கழித்துக் கொள்ள வேண்டும் எனக் கூறினார். அரசனும் உடனே ஆயிரம் தேங்காய்களை வருவித்தார். மஹோத்கடர் முதலில் ஒரு காயை எடுத்துக் கல்லுருவம் கொண்டு நின்ற அவுணன்மீது அடித்தார். பிறகு ஒவ்வொருவரும் ஒரு காய் எடுத்து அதே கல்லின்மீது எறிய அவுணன் உடலும் புண்ணாகியது. அவன் தாங்கமுடியாமல் தன் கல்லுரு நீங்கி முன்னுருக் கொண்டான்; நிற்கவும் முடியாமல் கீழே விழுந்தான்; அங்கேயே இறந்தான். இதனைக் கண்டவர் பேரச்சமும் மிகுவியப்பும் கொண்டனர்.

தருமதத்தர்

காசிராஜனுக்குப் புரோஹிதர் தருமதத்தர். அவர் பலவகைக் கலைகளிலும் வேத வேதாங்கங்களிலும் வல்லவர். தவமிகுந்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தவர். அவர் விநாயகப் பெருமானின் பக்தர். விநாயகரின் சக்திகளான சித்தி புத்திகளை வேண்டித் தவம் செய்து அவர்களைத் தம் பெண்களாகப் பெற்றிருந்தார். மஹோத்கடர் விநாயகப் பெருமானின் அவ்தாரம் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகையால் மஹோத்கடர் அரண்மனைக்கு வந்துள்ளார் எனத் தெரிந்ததும் அவர் விரைந்து வந்து மஹோத்கடரைத் தரிசனம் செய்து கொண்டார். பிறகு தருமதத்தர் தம் எண்ணத்தை மஹோத்கடருக்குக் கூறினார். மஹோத்கடரும் மகிழ்ந்து விருப்பம் தெரிவித்தார். அதனால் அரசனுடைய அனுமதியுடன் தருமதத்தர் மஹோத்கடரைத் தம் ஆச்ரமத்துக்கு அழைத்துச் சென்றார்.

காமனும் குரோதனும்

மஹோத்கடரும் தருமதத்தரும் ஆச்ரமத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும்போது நராந்தகனால் அனுப்பப் பட்ட இரு அசுரர்கள் கழுதை வடிவம்கொண்டு வந்திருந்தனர். அவர்கள் மஹோத்கடரை வழியில் பார்த்தவுடன் எவ்வாறு அவரைக் கொல்லலாம் என யோசனை செய்தனர். பிறகு இரு கழுதைகளும் ஒன்றுடன் ஒன்று சண்டைபோட்டுக் கொள்வது போல பாவனை செய்து ஒன்றையொன்று உதைத்துக் கொண்டும் புழுதியை வாரி இறைத்துக் கொண்டும் அட்டஹாசம் செய்தன. உண்டான புழுதியில் மஹோத்கடர் இருக்குமிடம் தெரியவில்லை; இச்சமயத்தில் மஹோத்கடர்மீது வந்து மோதி அவர்மீது விழுந்து அவரை நசுக்கிக் கொல்ல வேண்டும் என எண்ணினர். ஆனால் மஹோத்கடர் ஒரு புல்லை எடுத்து இரண்டாகக் கிள்ளி அஸ்திரப் பிரயோகம் செய்து அவர்கள்மீது ஏவினார். இருவரும் இறந்து வீழ்ந்தனர். அஞ்சி நின்ற தருமதத்தர் அச்சம் நீங்கியவராய் மீண்டும் மஹோத்கடரை அழைத்துக்கொண்டு தம் ஆச்ரமம் நோக்கிச் சென்றார்.

குண்டன்

காமனும் குரோதனும் மாண்டதைக் கண்ட அவர்களுடைய நண்பன் குண்டன் என்னும் அரக்கன் ஒரு மாமதயானை உருவம் தாங்கி இடிபோல் முழங்கிக்கொண்டு விரைந்தோடி வந்தான். அதனைக் கண்டார் அஞ்சி ஓடினர். தருமதத்தர் வெலவெலத்து நின்றார். மஹோத்கடரோ அனாயாசமாக அந்த மதகளிற்றின் வாலைப் பிடித்துச் சுழற்றித் தூக்கினார். தலைக்கு மேலாகப் பிடித்துக் கறங்கு சுழற்றுவது போல் சுழற்றினார். யானையாக வந்த குண்டனுக்குத் தலை சுற்றியது; பிளிறினான்; அவன் உண்டிருந்த வைகளைக் கக்கினான். மஹோத்கடர் அந்த யானையைத் தரையின்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மீது வெகுதூரம் சென்று விழுமாறு வீசி எறிந்தார். விழுந்த அக் களிறு எழுவதற்குள் விரைந்தோடிச் சென்று அதன் முதுகின்மீது ஏறினார். மிகவும் முயன்று அக்களிறு அவரையும் தூக்கிக்கொண்டு எழுந்து நின்றது. மஹோத்கடர் அதன் இரு கவுள்களிலும் தம் கையால் நன்கு குத்தினார். யானை வலி தாங்க முடியாமல் ஓடியது; அவரும் கீழே இறங்காமல் நகரைச் சுற்றிச் சுற்றி விரட்டி ஓட்டிக்கொண்டே இருந்தார். அந்த யானை அவரிடமிருந்து தப்பிக் காட்டிற்குள் ஓட முயன்றது. ஆனால் அவர் விடவில்லை; மீண்டும் மீண்டும் அதன் கவுள்களில் குத்தி நகரைச் சுற்றிச் சுற்றி ஓடிவருமாறு செய்தார். யானை உருக்கொண்ட அவ்வரக்கன் நடக்கவும் முடியாமல் தவித்தான். வாய்வழியே நுரை கக்கினான்; பெருமூச்செறிந்தது. வலிமையெல்லாம் தளர்ந்தது; மரித்துக் கீழே வீழ்ந்தான். தருமதத் தருக்குப் போன உயிர் வந்தது.

சிரம்பை

தருமதத்தர் மஹோத்கடரை அழைத்துக்கொண்டு தம் ஆசிர மத்தை அடைந்தார். அங்குத் தம் மனைவியிடமும் மற்றவர் களிடமும் தம் குமாரிகளின் திருமணம் பற்றிய செய்தியைச் சொன்னார். திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் நடந்துகொண்டிருந்தன. தருமதத்தரின் உறவினர்கள் பலர் வந்து கொண்டிருந்தனர். ஆச்ரமத்தில் மக்கள் நிறைந்திருந்தனர். அப்போது தூம்ராட்சனின் மனைவி சிரம்பை என்பாள் ஓர் அந்தணப் பெண் போல வேடம் தாங்கி அங்கு வந்தாள். தன் கணவனைக் கொன்ற மஹோத்கடரை வஞ்சனையால் கொல்லவே அவள் அங்கு வந்திருந்தாள். அவள் மாப்பிள்ளைக்குத் தைல ஸ்நானம் செய்விப்பதற்காகப் பல உயர்ந்த மூலிகைகள் போட்டுக் காய்ச்சி வடித்த வாசனைத் தைலம் கொண்டுவந்திருப்ப தாகவும் மாப்பிள்ளைக்குத் தானே எண்ணெய் தேய்த்துவிடப் போவதாகவும் கூறினாள். தருமதத்தரும் அவள் வஞ்சனையை உணரவில்லை. அப்படியே ஆகட்டும் எனக் கூறிவிட்டார். உண்மையில் அத்தைலம் விஷத் தன்மை வாய்ந்தது; தோலின் மூலம் உட்சென்று மரணத்தை விளைவிப்பது. தருமதத்தரின் அனுமதியைப் பெற்றபின் அவள் மஹோத்கடரைத் தைல ஸ்நானம் செய்ய வருமாறு அழைத்தாள். அவள் வஞ்சனையை உணர்ந்த விநாயகர் மகிழ்ச்சியோடு வந்தார். அரக்கியும் தான் கொணர்ந்திருந்த விஷத் தைலத்தை விநாயகர் தலையில் வைத்துத் தேய்க்கத் தொடங்கினாள்; அவ்விஷம் அவரை ஒன்றும் செய்திலது; ஆனால் அவ்வரக்கியின் கைகளின்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வழியே அவ்விஷம் அவள் உடலில் ஏறியது; சற்று நேரத்தில் மயக்கமடைந்த அவள் பிறகு எழவில்லை. யாவரும் அச்சமும் மகிழ்ச்சியும் கொண்டனர். அரக்கியின் உடலை அப்புறப் படுத்தி இடத்தைச் சுத்தம் செய்து மீண்டும் நல்ல காரியங்களைத் தொடங்கினர்.

திருமணம்

தருமதத்தர் நல்லதொரு வேளையில் தாம் பெற்ற மகளிரான சித்தி, புத்தி ஆகிய இருவரையும் மஹோத்கடருக்கு வேத விதிப்படித் திருமணம் செய்து கொடுத்தார். அந்தணாளர் களும் முனிவர்களும் அவருக்கு ஆசி வழங்கினர். காசிராஜன் திருமண வைபவத்திற்கு வந்திருந்து பல பொருள்களைப் பரிசாக அளித்தான். திருமணம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. அதன் பிறகு அரசன் சித்தி புத்தி ஸமேத மஹோத்கடரை அரண்மனைக்கு எழுந்தருளுமாறு செய்தான். மஹோத்க்டரும் அரண்மனைக்கு எழுந்தருளி அனைவருக்கும் அருள் செய்தார்.

சின்னாட்களுக்குப் பிறகு காசிராஜன் தன் மகனுடைய திருமணத்தை நடத்த ஏற்பாடுகள் செய்வது பற்றி அமைச்சர் களுடன் ஆலோசனை செய்தான். அவர்கள் அரசனை நோக்கி, "அரசே, இப்போது நாம் நராந்தகனுடைய பகையை முழு மையாகச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறோம். அவன் எச் சமயத்தில் எவ்வாறு நம்மைத் துன்புறுத்துவான் என்பது தெரிய வில்லை. ஆனால் மிக்க சினம் கொண்டு இருக்கிறான் என்பது நம் எல்லோருக்கும் புரிகிறது. இச்சமயத்தில் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நராந்தகன் நம்மோடு போர்புரிய வரமாட்டான் என்பது நிச்சயம் ஆக வேண்டும்; அல்லது நராந்தகனோடு பொருது அவனை அழிக்க வேண்டும். இவற்றைக் கருதும்போது திருமணத்தைச் சில நாட்கள் தள்ளிப் போடுதல் அவசியம் என்று கருதுகிறோம்" என்றனர். அரசனுக்குத் திருமணம் தள்ளிப் போடுவதில் வருத்தம் இருந்தது. ஆயினும் மதியமைச்சர்கள் கூறுவதை அவனால் மறுக்க முடியவில்லை. அப்போது அவையில் இருந்த மஹோத்கடரை மன்னன் பார்த்தான். அரசன் மனத்தில் எண்ணியதை உணர்ந்த மஹோத் கடர் அரசனை நோக்கி, "அமைச்சர்கள் கூறுவது அறிவுக்குப் பொருத்தமாக உள்ளதே. இதுவரை நராந்தகன் நமக்குப் பல இடையூறுகளை உண்டாக்க முயன்றிருக்கிறான். இனிமேலும் மாயமும் வலிமையும் மிக்க அசுரர்கள் நம் நகரத்துட் புகுந்து கலகம் விளைவிக்கலாம். ஆகவே, நராந்தகனை விரைவில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அழிக்கும் உபாயத்தைப் பார்ப்பது நல்லது'' எனக் கூறினார். எனவே, அரச குமாரனின் திருமணம் சில நாட்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

விதாரணன், ஜ்வாலாமுகன், வியாக்ரமுகன்

'மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்' என்றாற்போல அமைச்சர்கள் கூறிய அறிவுரை அரிய உரையாயிற்று. நராந்தகன் காசிராஜன் மீது கடுங்கோபம் கொண்டு காசிராஜனையும் மஹோத்கடரையும் எவ்வாறேனும் கொன்று வருக எனக் கட்டளையிட்டு விதாரணன், ஜ்வாலாமுகன், வியாக்ர முகன் என்ற அசுரர்களையும் அவர்களுக்குப் பக்கபலமாக வேறு பல அசுரர்களையும் காசி நகருக்கு அனுப்பி வைத்தான். அவர்கள் யாவரும் மாயம் வல்லவர்கள்; மிக்க வலிமை பொருந்தியவர்கள். அவர்கள் காசி நகரை அடைந்தபோது இரவாகி விட்டது. அம்மூவரும் எவ்வாறு நகரை அழித்து மக்களை அலைக்கழித்து அரசனை அழித்து மஹோத்கடரைக் கொல்வது என்று திட்டம் தீட்டினர். காசி நகரிலிருந்து வெளி யேறிச் செல்ல அமைந்த கோட்டை வாயிலில் வியாக்ரமுகன் தன் பெரிய வாயைத்திறந்து கீழ் உதட்டை வாயிற்படியிலும் மேலுதட்டை வாயிலின் மேல் எல்லையிலும் பதித்துக் கொண்டான். விதாரணன் தன் மாயத்தால் சூறாவளிக்காற்றை ஏவினான்; அதனால் பெரிய பெரிய மரங்கள் வேரோடு வீழ்ந்தன; உயரமான கட்டடங்கள் உருண்டு விழுந்தன. மக்களே காற்றில் பறந்தனர். இந்த நிலையில் ஜ்வாலாமுகன் எரியை ஏவினான்; ஊர் முழுவதும் பற்றி எரியத் தொடங்கியது. காற்று விரைவாக வீசி நெருப்பைப் பரவச் செய்தது. மக்கள் புகலிடம் இன்றிப் பலதிசைகளிலும் ஓடத் தொடங்கினார்கள். அரண்மனை யும் அவ்வாறே பாதுகாப்பு இழந்தது. காசிராஜன் கலங்கினான். மந்திரிகள் என்ன செய்வதென்று கலங்கினார்கள். நகரத்தை விட்டு வெளியே ஓட முயன்ற மக்கள் நகரவாயிலில் வாயைத் திறந்துகொண்டிருந்த வியாக்ர முகனின் வாயில் வீழ்ந்து அவன் வயிற்றை அடைந்தனர். அரசன் விரைந்தோடி மஹோத்கடர் இருப்பிடம் அடைந்து தன்னையும் மக்களையும் காக்கவேண்டு மென்று வேண்டிச் சரணடைந்தான். மஹோத்கடர் அரசனை நோக்கி, ''அரசே, இது நராந்தகன் அனுப்பிய அரக்கர்களின் செயல்; அவ்வரக்கர்களை இப்போதே கொன்று வருகிறேன்'' எனக் கூறி வெளியே வந்தார். கமண்டலத்திலிருந்து கொஞ்சம் நீரை எடுத்துக் காற்று வீசும் திசைக்கு எதிர்த்திசையில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளித்தார். காற்றின் கடுமை அடங்கியது; நெருப்பின் வெம்மை குறைந்தது; சற்று நேரத்தில் வாயுவாய் நகரைக் கலக்கிய விதாரணன் உடலம் சடலமாய் விழுந்தது; நெருப்பாக நின்று யாவற்றையும் பஸ்மமாக்கிய ஜ்வாலாமுகன் உயிரற்றுத் தரையில் வீழ்ந்தான். மஹோத்கடர் நகரத்தின் பகுதிகளைக் கருணையோடு நோக்க, நகரம் முழுவதும் குளிர்ந்தது. எரிந்த பொருள்களும் உடைந்த பொருள்களும் பண்டை வடிவம் பெற்றன; இறந்த மனிதரும் அங்கம் இழந்தவர்களும் உயிர் பெற்றெழுந்தனர்; உறுப்பு வளர்ந்து நின்றனர். மஹோத்கடர் மீண்டும் நகரின் வாயிற்புறம் சென்று வாயைத் திறந்து கொண்டு அவ்வழியே வருவோரையெல்லாம் விழுங்கிக் கொண்டிருந்த வியாக்ர முகனுடைய வாயில் ஏறி நின்றார்; அவ்வாறே விசுவரூபம் கொண்டார். அவன் வாய் கிழிந்து மாண்டான். அவனால் வஞ்சனையாக விழுங்கப்பட்ட மக்களும் உறக்கத்தினின்றும் விழித்தெழுவார் போன்று உயிர்பெற்று எழுந்து வந்தனர். இவ்வாறு மஹோத்கடர் தீராதுபோல் வந்த பெருந்துன்பங் களை மிக எளிதில் போக்கி விட்டார். காசிராஜன் களிப்பு மிகக் கொண்டான். மறுநாள் மஹோத்கடருக்குச் சிறப்பு விருந்தொன்று வைத்தான்.

புருசுண்டி முனிவர்

மஹோத்கடருக்காக விருந்தேற்பாடு செய்த தினம் சதுர்த்தி தினமாய் அமைந்தது. அடிசில் அட்டு அனுபவம் நிரம்பிய மடைப்பள்ளித் தலைவர் அறுசுவை உண்டிகளை ஆர்வத்துடன் சமைத்திருந்தார். பல வகையான இனிப்புப் பண்டங்களும் கறி வகைகளும் பச்சடி, ரசம் போன்றவைகளும் பல பழங்களும் தயாரிக்கப்பட்டிருந்தன. அரசன் பல அணிகலன்களைப் பரிசாக அளித்து அணிந்துகொள்ளச் செய்தான். பிறகு அன்புடன் மஹோத்கடரை உணவுண்ண அழைத்து வந்து ஆசனத்தில் அமர்த்தினான். அரசன் மனைவியே அன்பு மீதூர மஹோத் கடருக்கும் சித்தி புத்தி தேவியருக்கும் அமுது படைத்தாள் . உணவு உண்ணத் தொடங்கினர். அப்போது மஹோத்கடருடைய மார்பில் மிக்க பிரகாசத்தோடு பொன் ஆரம் ஒன்று தோன்றி மின்னியது; அது அவனளித்த ஆரம் அன்று; அவன் அளித்த பொருள்கள் யாவற்றையும் விட அது சிறப்பு மிக்கதாய் இருந்தது. அரசன் வியப்பு அடங்குமுன் மஹோத்கடருடைய இலையில் அரண்மனையில் செய்யப்படாத சில பக்ஷணவகைகள் இருப் பதைப் பார்த்தான்; அவன் ஆச்சரியம் எல்லை கடந்தது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மிகப் பணிவு கொண்டவனாய் மஹோத்கடரைப் பார்த்து மன்னவன், "அந்தணர்களுள் மேன்மை பெற்றவரே, தங்கள் மார்பின் யானிட்ட மாலையைத் தவிர வேறொரு சிறந்த பொன்னாரம் மின்னுகிறதே. அது எவ்வாறு? தங்கள் கலத்தில் அரண்மனையில் செய்யாத சில பக்ஷணங்கள் காணப்படு கின்றனவே அவை எவ்வாறு? எனக்கு அவற்றை விளக்கிக் கூறியருள வேண்டும்" என வேண்டினான்.

மஹோத்கடர் அரசனைப் பார்த்து, "அரசே, தண்டகவனத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தவசிரேஷ்டர் ஒருவர் இருக் கிறார்; என்னிடத்தில் மிகவும் பக்தி கொண்டவர்; இன்று சதுர்த்தி தினமாகையால் விரதமிருந்து விநாயக பூஜை இயற்றி இப் பொன்னாரம் சாத்தி நிவேதனம் செய்தார். அவை அம்முனிவரின் பக்தியின் சக்தியினால் என்னை வந்தடைந்தன. அவற்றையே இப்போது நீ பார்க்கிறாய்" என்று கூற அரசன் வியப்படைந்து எம்பிரானை நோக்கி, "பக்திச் செல்வம் மிக்க அம்மஹா முனிவரைக் காண விரும்புகிறேன்; அவரை வணங்கிப் பேறு பெற விரும்புகிறேன்; அவரைப் பார்க்க அருள்புரிய வேண்டும்; அவ்ரை உபசரிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்க வேண்டும்" என வேண்டினான். மஹோத்கடரும் உடனே புருசுண்டி முனிவரின் இருப்பிடத்தைக் கூறி, "நான் இங்கே உன் மகனுடைய திருமணத்தை நடத்திவைக்கும் பொருட்டு இங்கு வந்து தங்கி யிருப்பதாகவும், அவரை இங்கு வரும்படிப் பணித்ததாகவும் அவரிடம் கூறுக" எனச் சொன்னார்.

காசிராஜன் தன் படைகளோடு தண்டகம் அடைந்து புருசுண்டி முனிவரைக் கண்டான். முனிவரும் அரசனை அன்புடன் வரவேற்றார். மஹோத்கடர் தம் மகனின் திருமணத்தை நடத்தி வைப்பதற்காகக் காசிக்கு வந்திருப்பதையும் புருசுண்டி முனிவரை அழைத்து வருமாறு ஆணையிட்டிருப்பதையும் அரசன் அம் முனிவருக்கு விவரமாகக் கூறினான். ஆனால் அம்முனிவர் அரசனை நோக்கி, "மஹோத்கடர் என்பவர் யார்? அவர் என்னை எதற்காக அழைத்துவரச் சொன்னார். உன்னுடைய மகனுடைய திருமண வைபவத்தில் நான் செய்ய வேண்டியது என்ன இருக்கிறது. நான் இங்கிருந்து புறப்பட்டு வந்தால் நான் செய்துகொண்டிருக்கும் தவம் தடைப்படுமே. இவற்றையெல்லாம் கவனிக்க வேண்டாமா; மஹோத்கடரைப் பற்றி நீ கூறுவது எதுவும் எனக்கு விளங்கவில்லையே" எனக் கூறினார். அரசன் விடை கூற அறியாது விழித்தான். பிறகு புருசுண்டி முனிவரை நோக்கி மீண்டும், மஹோத்கடர் காச்யப முனிவருக்கும் அதிதி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தேவிக்கும் மகனாகத் தோன்றியவர் என்பதையும் பல வியத்தகு செயல்களைச் செய்திருப்பவர் என்றும் தற்போது காசிமாநகரத்தில் அரண்மனையில் தங்கியிருக்கிறார் என்றும் கூறினார். மேலும் தமது அரண்மனைக்கு வருகை தந்து அவரது பாததூளி அரண்மனையில் படும் பாக்கியம் அருள வேண்டும் என்று வேண்டினார். இவை யாவற்றையும் கேட்ட புருசுண்டி முனிவர் அரசனை நோக்கிச் சற்றே கண்களை மூடிக்கொள்ளுமாறு கூறினார். அரசனும் தன்னிரு கண்களையும் மூடிக்கொள்ள புருசுண்டி முனிவர் அவன் தலைமீது தன் கையை வைத்து வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தார். கண்களை மீண்டும் திறந்த அரசன் தான் தன்னுடைய அரண்மனையில் இருப்பதைக் கண்டான்; எதிரே மஹோத்கடர் நிற்பதையும் பார்த்தான்.

மஹோத்கடர் அரசனைப் பார்த்து, "புருசுண்டி முனிவரை அழைத்து வந்தாகிவிட்டதா? அவர் இப்போது எங்கே தங்கி யிருக்கிறார்? ஏன் இங்கு அழைத்து வரவில்லை?" எனக் கேள்வி மேல் கேள்வி கேட்டு அவனைத் தொளைத்துவிட்டார். அரசன் மஹோத்கடரின் பாதங்களைப் பக்தியுடன் பணிந்தேத்தித் தான் தண்டகவனம் சென்றது முதல் புருசுண்டி முனிவரைப் பார்த்தவரையில் கூறிப் பின்னர் தானறியாமலே அரண்மனை வந்ததையும் கூறினான். மஹோத்கடரைத் தனக்குத் தெரியா தென்றும் மாயையால் தன்னை மீண்டும் காசிக்கு ஏகுமாறு செய்தாரென்றும் அரசன் கூறினான். உடனே மஹோத்கடர் அரசனை நோக்கி மீண்டும் தண்டக வனம் சென்று புருசுண்டி முனிவரைக் கண்டு, "உங்களைக் காசிக்கு கஜானனர் அழைத்து வரச் சொன்னார் என்று சொல்லுக" என்றார். அரசன் மீண்டும் மஹோத்கடரை வணங்கி எழுந்தான். எழுந்தவுடன் தான் புருசுண்டி முனிவர் முன் நிற்பதைக் கண்டு வியந்தான். முனிவரிடம் மஹோத்கடர் கூறியது போலவே அரசன் கூறலும் அவர் மிக மகிழ்ந்து மெய்ம்மறந்து நின்றார். இருவரும் மனோவேகத்தில் காசியை அடைந்தனர். புருசுண்டி முனிவர் அரண்மனையை அடைந்தவுடன் "கஜானனர் எங்கே?" எனலும் அரசன் மஹோத்கடரைக் காட்டினான். புருசுண்டி முனிவர், "இவர் கஜானனர் அல்ல" எனக் கூறித் தமதிருப்பிடம் செல்ல யத்தனித்தார். அக்கணமே மஹோத்கடர் கஜானனர் உருவில் தோன்றி புருசுண்டி முனிவரை மகிழ்வித்தார். முனிவரும் அங்குச் சில நாட்கள் தங்கி அரசனுக்கு ஆசிபுரிந்து தம் இருப்பிடம் மீண்டார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேகன்

ஒரு நாள் அரசன் தன் அமைச்சர் பெரியோர் சூழ அவையில் அமர்ந்திருந்தான். அப்போது மேகன் என்ற ஓர் அசுரன் சோதிடன் போல் வடிவம் கொண்டு அரசவைக்கு வந்தான். அரசனும் அவனை வரவேற்று ஆசனத்தில் அமர்த்தினான். அவனும் அரசனுக்குச் சோதிடம் சொல்லத் தொடங்கினான், "அரசே, உன் அரண்மனையில் ஒரு சிறுவனைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டிருக்கிறாய். அவன் அரண்மனையில் இருப்பது உனக்கு மிகக் கஷ்டத்தையே கொடுக்கும். உன் காரியங்களில் பல தடைகள் ஏற்படும். அவன் விக்னராஜன். அதனால் மேலும் மேலும் உன் எண்ணங்கள் தடைப்பட்டு நன்மைகள் குறையும். தின்மைகள் பெருகும். அவ்வொருவனால் நகரத்திற்கே கேடு ஏற்படப் போகிறது" என்று கூறினான். அரசன் அச்சோதிடன் கூறியதைக் கேட்டு மனத்துள், "இவன் நராந்தகனால் அனுப்பப்பட்டவன் போலக் காண்கிறான்; மஹோத்கடரால் மாயும் நேரம் வந்தது போலும்" என எண்ணி அவனை நோக்கி, "இப்போது நான் செய்ய வேண்டுவது யாது?" எனக் கேட்டான். அவன் உடனே, "அப்பிள்ளையைக் காட்டிற்குத் துரத்தி விடுங்கள். நகரம் ஆபத்தினின்றும் தப்பும்" எனக் கூறினான். அரசன், "அவ்வாறாயின் தாங்களே தங்கள் சக்தியால் அவனைக் காட்டிற்கு அழைத்துச் சென்று விட்டுவிடுங்கள்" என நயமுறக் கூறினான். அச்சோதிடனும் மகிழ்ந்து அவ்வாறே செய்வதாகக் கூறி அச்சிறுவனைக் காண்பிக்குமாறு கூறினான். அரசன் மஹோத்கடரைக் காட்டுமாறு தன் பணியாளர்களைச் சோதிடனுடன் அனுப்பினான். பணியாளர்கள் சோதிடனை அழைத்துச் சென்று வெளி முற்றத்தில் இருந்த மஹோத்கடரைக் காட்டினார்கள். சோதிடன் மஹோத்கடரை நோக்கிச் சென்றான். அவனைப் பார்த்த உடனே மஹோத்கடர், "அரச சபைக்கு யாரோ ஒரு சோதிடர் வந்திருப்பதாக அறிந்தேன்; தாங்கள்தானோ அவர்?" எனக் கேட்டதும் வஞ்சச் சோதிடன் மனம் கலங்கினான். ஒருவாறு தன்னைத் தேற்றிக் கொண்ட அவன், "சிறு குழந்தாய், நீ காசியில் தங்குவதனால் பெருந்துன்பத்துக்கு ஆளாவாய். இந்த நேரம் பொல்லாத நேரம். இந்த நேரத்தில் நீ கானகத்தில் தங்கியிருந்து சின்னாட்களில் திரும்பி வந்தால் உனக்கும் க்ஷேமம் உண்டாகும்; அரசனுக்கும் க்ஷேமம் உண்டாகும்; உன்னைப் பெற்றோருக்கும் க்ஷேமம் உண்டாகும். ஆகையால் நீ உடனே புறப்பட்டுக் கானகம் செல்வது நல்லது; நீ சிறுவனாதலின் உனக்குத் துணையாக நானும் கூட வருகிறேன்; கெட்டகாலம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கடந்ததும் மீண்டும் இங்கு வரலாம்'' என்று கூறினான். அது கேட்ட மஹோத்கடர் மிகவும் மகிழ்ந்தாங்குத் தன் முத்து மாலையைக் கழற்றி அச்சோதிடனுக்குப் பரிசாக்கினார்; அதனைத் தாமே அவன் கழுத்தில் போட்டார். அக்கணமே ஒவ்வொரு முத்தும் நெருப்புக் கங்காக மாற அச்சோதிட வேடம் கொண்ட அரக்கன் எரிந்து சாம்பரானான். அரசனும் மற்றோரும் மஹோத்கடரின் பெருமையைப் போற்றினார்கள். நகர மாந்தர் வியந்தனர். இச்செய்தி அறிந்த நராந்தகன் சினத்தீயில் வெந்தான். வேறு இரு அசுரர்களை மஹோத்கடரை கொன்று வருமாறு பணித்தான்.

கூபன், கந்தன்

ஒருநாள் மஹோத்கடர் ஊருக்கு வெளியே ஒரு நந்தவனத்தில் தம் தோழர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார். மஹோத்கடரைக் கொல்லுவதற்காக நராந்தகனால் அனுப்பப்பட்ட இரு அசுரர்களும் பெரிய கிணறாகவும் தவளையாகவும் உருவம் கொண்டு நந்தவனத்தின் ஒரு பகுதியில் இருந்தார்கள். விளையாடிக் கொண்டிருந்தவர்கள் அக்கிணற்றைக் கண்டு அதில் குதித்து விளையாடினார்கள். அவர்களுக்குள் போட்டி உண்டாயிற்று. கிணற்றின் அடிவரை சென்று யாரால் மண் எடுத்துவர இயலும் என வீரம் பேசினார்கள். சிலர் தம்மால் முடிந்தவரை தண்ணீரினுள் முழுகிச் சென்று பார்த்தனர். கிணறு மிக ஆழமாக இருந்தது. ஒருவராலும் மண் எடுத்துவர இயலவில்லை. அவர்கள் யாவரும் மஹோத்கடரை நோக்கி, "உன்னால் கிணற்றின் அடியிலிருந்து மண் எடுத்துவர இயலுமா?'' எனக் கேட்டார்கள். மஹோத்கடர் உடனே கிணற்றுள் குதித்தார். பாதலம்வரை ஆழ்ந்திருந்த அதன் அடிப்பகுதிக்குச் சென்று மண் எடுத்துக் கொண்டு மீண்டு வந்தார். கொண்டு வந்த மண்ணை வெளியே வீசினார். அப்போது தவளையாய் வந்த அரக்கன் அவர் காலைக் கடித்து இழுத்தான். மஹோத்கடர் அத்தவளையின் காலைப் பிடித்துத் தூக்கிக் கிணற்றுச் சுவரின்மேல் ஓங்கி அடித்தார். கிணறாக வந்த அசுரனும் தவளையாக வந்த அசுரனும் உயிர்நீத்துச் சுய உருவத்துடன் கீழே விழுந்தனர். இச்செய்தி நராந்தகனை எட்டியது. மிக்க வருத்தமும் பெருங்கோபமும் கொண்ட அவன் மஹா பராக்ரமசாலிகளாகவும் மாயாவிகளாகவும் விளங்கிய மூன்று அசுர சகோதரர்களை வரவழைத்தான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அந்தகாசுரன், துங்காசுரன், அம்பாசுரன்

வல்லமை வாய்ந்த அந்தகாசுரன், துங்காசுரன், அம்பாசுரன் ஆகிய மூவரும் நராந்தகனை வந்தடைந்தனர். நராந்தகன் அவர்களை நோக்கி, "அருமை நண்பர்களே, காசி நகரத்தில் காசியரசனோடு மஹோத்கடர் என்ற ஒரு சிறு பிள்ளை இருக்கிறான். அவன் அசுரர்களின் எதிரி. அவனைக் கொல்வதற்காகப் பல அசுரர்களை அனுப்பினேன். சென்ற அசுரர்களில் ஒருவரும் திரும்பி வரவில்லை. அவர்கள் அனைவரும் அச்சிறு பிள்ளையால் கொல்லப்பட்டு மாள்கிறார்கள். இது அண்ட முழுதும் பரவி நிற்கும் அசுரர்களுக்குத் தலை குனிவு அல்லவா? நீங்கள் மூவரும் சென்று அச்சிறுவனை எவ்விதத்திலாவது கொன்று வர வேண்டும். காசிராஜனுக்கும் ஒரு பாடம் புகட்ட வேண்டும்" என்று கூறினான். மதமும் கொழுப்பும் வாய்ந்த அவ்வசுரர்கள் தங்கள் அரசனை நோக்கி, "அரசே, தாங்கள் கவலைப்பட வேண்டாம். இப்போதே சென்று காசி நகரத்தை அழித்து அச்சிறுவனையும் கொன்று வருகிறோம்" எனச் சூளுரைத்துச் சென்றார்கள்.

மூவரும் காசி நகரை அடைந்தனர்; அந்தகாசுரன் இருள் மயமாய் மாறி நகரம் முழுவதும் கவிந்துகொண்டான்; துங்காசுரன் கொடுமுடிகளோடு கூடிய குலவரைகளாய் மாறி நகரைச் சுற்றிச் சுவர் எடுத்ததுபோல நின்றுகொண்டான்; அம்பாசுரன் மேக ஜாலங்களாய் மாறி யுகாந்த காலத்தில் பெய்யும் பெருமழைபோல் கொட்டத் தொடங்கினான். நகரைச் சுற்றி மலையாய் இருந்ததால் மழைநீர் வெளியேற வழியின்றி வீடுகளும் அரண்மனைகளும் முழுகத் தொடங்கின. இடியும் மின்னலும் யாவரையும் அஞ்சச் செய்தன. மக்கள் அவதியுற்றனர். இதைக் கண்ட மஹோத்கடர் உண்மையைப் புரிந்து கொண்டார். உடனே அவர் வானளாவி நிற்கும் வட விருட்சம் ஒன்றை சிருஷ்டித்து அதன் உச்சியில் தாமே ஒரு சக்கரவாகப் பறவையாய் அமர்ந்து தம் நீண்ட சிறகுகளை அடித்தார். அதனால் உண்டான பெருங்காற்று மேகக்கூட்டங்களை விரைந்து அடித்துச் சென்று நகரைச் சுற்றிநின்ற நெடுவரைமீது மோதியது. மோதிய மோதலில் வேகமாய் வந்த அம்பாசுரனும் மலையாய் நின்ற துங்காசுரனும் தங்கள் வலிமை இழந்து கீழே வீழ்ந்தனர். சாகரம் எனப் பொங்கி வந்த நீர் விரைந்து வடிந்தது. அப்போது மஹோத்கடர் தம் நெற்றிக் கண்ணைத் திறக்க அந்தகாசுரன் விரித்த இருள் கோட்டை தகர்ந்தது. எங்கும் ஒளி வீசியது. மக்கள் தங்கள் கவலை விட்டு மகிழ்ந்தனர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வாறு தங்கள் வலிமையொழிந்த அசுரர்கள் விரைந்து வேறொரு வஞ்சகச் செயலைச் செய்ய எண்ணினர். அதன்படி ஓர் அசுரன் ஆலமரமாய் உயர்ந்து நின்றான்; மற்றொருவன் பறவை பிடிக்கும் கண்ணியாகி ஆலமரத்தின்மீது அமர்ந்தான். மூன்றாமவன் விநாயகராகிய பறவையை விரட்டினான். பறவையை விரட்டிக் கண்ணியில் சிக்கவைத்துக் கொன்று விடுவதே அவர்கள் நோக்கம். மஹோத்கடர் தன்னை விரட்டிய அரக்கனைத் தன் கால் நகங்களால் தூக்கிக்கொண்டு மாய மரத்தின் மீதிருந்த கண்ணியில் பாய்ந்தார். அதில் அவ்வசுரனும் புள்ளுருவில் இருந்த மஹோத்கடரும் சிக்கினர். மரமாய் நின்ற அசுரனும் கண்ணியாய் நின்ற அரக்கனும் மஹோத்கடரை நெருக்கிக் கொல்ல எண்ணினர். மஹோத்கடரின் கால் நகங்களில் அகப் பட்ட அரக்கன் கழல விரகு அறியாமல் தத்தளித்தான். அதனால் அவர்கள் நெருக்கத் தயங்கினர். அப்போது விமலன் வலையி னின்றும் விடுபடப் பெருமுயற்சி செய்வார் போலச் சிறகுகளைப் படபடவென அடித்துக் கொண்டு மேலே கிளம்ப மரமும் வேரோடு பெயர்ந்து வானத்தை அடைந்தது. மாய மரத்தையும் வஞ்ச வலையையும் இரக்கமிலா அரக்கனையும் அண்ட முகடு வரை தூக்கிச்சென்ற விநாயகராகிய சக்கரவாகப்புள் அங்கிருந்தே அவர்களை உதறிக் கீழே தள்ள மூவரும் உயிர்நீங்கி அவர் களுடைய தாயாகிய பிரமரை முன் போய்த் திடீரென்று விழுந்தனர். திடுக்கிட்ட அவள் அச்சடலங்கள் தன்னுடைய மக்கள் உடல்கள் எனத் தெரிந்ததும் வருத்த மேலீட்டால் அழுது மாழ்கினாள்.

பிறகு தன் கணவனாகிய பதங்காசுரனுக்குச் செய்தி தெரிவித்து அழைத்து வருமாறு சிலரை அனுப்பினாள். அவர்கள் சென்று திரும்பி வந்து பதங்காசுரன் முன்னமே இறந்துபட்டான் என்றும் பதங்காசுரனையும் அவன் மக்களையும் கொன்றவர் மஹோத் கடர் என்றும் கூறினர். வெகுண்ட அவள் தன் கணவனையும் மக்களையும் கொன்ற மஹோத்கடரைக் கொன்றொழிப்பதாய்ச் சூளுரை நவின்று காசி நகரம் நோக்கிச் சென்றாள்.

பிரமரை

மஹோத்கடரைக் கொன்றொழிப்பதாகச் சூளுரைத்த பிரமரை காசிநகரை அடைந்தாள். பிறகு அரண்மனையுள் எவ்வாறு புகுந்து எவ்வாறு அவரைக் கொல்வது என்று எண்ண மிட்டாள். அவளுக்கு ஓர் அரிய யுக்தி தோன்றியது. கொடிய விஷம் கலந்த பல இனிப்புப் பண்டங்களைச் செய்து எடுத்துக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொண்டாள்; மஹோத்கடரின் தாயாகிய அதிதி தேவியின் உருவம் கொண்டாள்; தன்னுடைய தோழிகளாகச் சில அசுரப் பெண்களை அழைத்துக் கொண்டாள். மகனை வெகுநாளாகப் பிரிந்திருந்த பிரிவுத் துன்பம் முகத்தில் தேங்கி நிற்க அரண்மனை யுட் புகுந்தாள். அவள் மஹோத்கடரின் தாய் என்றே கருதிய அனைவரும் அவளை அன்புடனும் மரியாதையுடனும் வர வேற்றனர். அப்போது மஹோத்கடர் அங்கு இல்லை. சிலர் சென்று மஹோத்கடரிடம் அவருடைய தாய் வந்திருப்பதாகக் கூறினர். உடனேயே இது வஞ்சம் என்பதை உணர்ந்த அவர் விரைந்தோடி வந்து தாயுருவில் வந்திருந்த அரக்கியின் மடியில் அமர்ந்து "அம்மா, எனக்கென்ன கொண்டுவந்தாய்?" என்றார். அவளும் பெற்ற தாயென தான் கொண்டுவந்திருந்த பக்ஷணங் களைக் கொடுத்தாள். மஹோத்கடரும் அவற்றைப் பிறருக்குக் கொஞ்சமும் கொடுக்காமல் விரைந்து உண்டார்; மிச்சமில்லாமல் உண்டார். அவர் உண்டு முடித்தவுடன் அதில் கலந்திருந்த நஞ்சு அவரை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அது அவ்வரக்கியின் தலைக்கேறியது; அவளுடைய தோழிகளின் தலைக்கேறியது; அவர்கள் அப்போதே மாண்டனர். அக்கொலையஞ்சாப் பாதகி யாரென்பதை எல்லாரும் உணர்ந்தனர். அரக்கிகளைக் கொன்ற மஹோத்கடரை யாவரும் போற்றித் துதித்தனர்.

வீடுதோறும் விருந்து

காசி நகர மக்கள் மஹோத்கடருடைய பெருமைகளை நன்கு உணர்ந்தனர். அவருக்குத் தங்கள் தங்கள் வீட்டில் விருந்து வைக்க வேண்டும் என எண்ணினர். ஆகவே அவர்கள் எல்லாரும் அரண்மனைக்கு வந்து அரசரிடம் மஹோத்கடரைத் தங்கள் வீட்டுக்கு விருந்துண்ண அனுமதிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். அரசன் அவர்களை நோக்கி, "உங்களுடைய அன்பு மிகப் பெரிது; அதுவே போதும்; மஹோத்கடரை எல்லாருடைய வீட்டுக்கும் விருந்துண்ண அனுப்புதல் இயலாத காரியம்; ஆகவே அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிட்டு அவரிடம் பக்தியுடன் இருங்கள்" எனக் கூறினான். வந்த மக்களின் மனம் வாடியது. அதைக் கண்ட மஹோத்கடர் அரசனிடம் நாளையே எல்லாருடைய வீட்டிலும் விருந்துக்கு ஏற்பாடு செய்யுமாறு கூறச் சொன்னார். 'ஒரே நாளில் எவ்வாறு எல்லாருடைய வீட்டிலும் விருந்துண்ண முடியும்?' என்ற கேள்வி முகத்தில் பிரதிபலிக்க அரசன் மக்களை நோக்கி, "உங்கள் விருப்பப்படி மஹோத்கடர் நாளையே உங்களுடைய வீட்டுக்கு விருந்தினராய்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வருவார்'' என்று அறிவித்தார். மக்கள் மனம் மகிழ்ந்து தத்தம் இல்லம் சென்றனர். அரசனோ மறுநாள் மஹோத்கடர் எவ்வாறு எல்லாரில்லத்திலும் விருந்துண்ணப் போகிறார் என்று வியந்துகொண்டிருந்தான்.

மறுநாள் ஜனகர் முதலான சில முனிவர்கள் காசி ராஜனைப் பார்க்க வந்தனர். மஹோத்கடரும் அவர்களோடு அமர்ந்திருந் தார். ஆகையால் அரண்மனையில் விருந்து சாப்பிட வேண்டிய தாயிற்று. மக்களுக்கு வாக்களித்தபடி மஹோத்கடர் ஒவ்வொரு வருடைய வீட்டுக்கும் சென்றார். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு மஹோத்கடர்; அரசனோடும் ஒரு மஹோத்கடர் இப்படியாகப் பல்லாயிரக்கணக்கான இடங்களில் பல்லாயிர வடிவம் கொண்டு விருந்துண்டார் மஹோத்கடர்.

அந்நகரில் சுக்லர் என்றொரு ஏழை அந்தணர் இருந்தார். அவர் மனைவி பெயர் வித்ருமா. அவர்களுக்கும் மஹோத் கடரை அழைத்துச் சிறந்த விருந்தளிக்க வேண்டும் என்ற பேராவல் இருந்தது. ஆனாலும் கொஞ்சமும் வசதியில்லை. வசதியில்லையாயினும் மஹோத்கடரை விருந்துண்ண அழைத் திருந்தனர். அவர்கள் அழைத்த அன்று சோதனையாக அவர் களுக்கு உணவுப் பொருள் எதுவும் கிடைக்கவில்லை. யாசித்த இடங்களில் எல்லாம் தோல்வி. மிகவும் வருத்தமுற்றார்கள். சுக்லரின் மனைவியான வித்ருமா அரிசித் தவிட்டைக் கொண்டு ஒரு பணியாரம் செய்து வைத்து மஹோத்கடர் வந்தால் அவருக்கு இதைத்தான் வழங்கவேண்டும் என்று தீர்மானம் செய்தாள். முதல் நாளிலிருந்தே இருவரும் பட்டினி. என் செய்வாள் பாவம். மஹோத்கடரும் விருந்துண்ண வந்து சேர்ந்து விட்டார். சுக்லரும் அவர் மனைவியும் மலர்ந்த முகத்துடனும் வருந்திய மனத்துடனும் வரவேற்று ஆசனம் அளித்தனர். இருவரும் அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி எழுந்து கண்ணீர் வார நின்று கலங்கினர். பிறகு ஓர் இலையைக் கலனாக வைத்து முன்னமே செய்து வைத்திருந்த அரிசித் தவிட்டுப் பணியாரத்தைக் கலனில் வைத்து உண்ணக் கோரினார்கள். அவர்கள் மஹோத்கடரைப் பார்த்து, "எம் பெருமானே, எங்கள் ஆசை பெரிது; ஆசைவாய்ப்பட்டு அடிகளை விருந்துக்கு அழைத்தோம்; எங்களால் முடிந்தவரை பிரயாசைப்பட்டுப் பொருள் சேர்க்க முயன்றோம். ஒன்றும் கிடைக்கவில்லை; எங்களுடைய துர்பாக்யம்தான் அது; நாங்கள் அதிருஷ்டஹீனர்கள்; நாங்கள் செய்து வைத்திருக்கும் அல்பமான பணியாரத்தை உண்டு மனத் திருப்தி அடைய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேண்டும்'' என்று பலவாறாகப் புலம்பி வேண்டினார்கள். மஹோத்கடர் அவர்கள் அன்புடன் அளித்த அரிசித் தவிட்டுப் பணியாரத்தை ருசித்துச் சாப்பிட்டார்; ''இவ்வளவு இனிய பண்டத்தை நான் இதுவரை உண்டதே இல்லை'' என்று அதனைப் புகழ்ந்துகொண்டே உண்டார். சுக்லரும் வித்ருமாவும் அல்பாகாரம் அளித்த வருத்தத்தில் கூசி நின்றார்கள். உண்டு முடித்தபின் அவர்கள் மீண்டும் மஹோத்கடரை நமஸ்காரம் செய்தார்கள். மஹோத்கடர் அவர்களுக்கு ஸிம்ஹாரூடராகக் காட்சியளித்தார். அவர்களுடைய தரித்திரம் அன்றோடு அகன்றது. சுக்லரும் வித்ருமாவும் விநாயக மூர்த்தியைப் பணிந்தார்கள். ''எம்பெருமான் பாதார விந்தங்களை என்றும் மறவாது நினைந்திருந்து முத்தி பெற வேண்டும்'' என வேண் டினார்கள். எம்பெருமானும் அவ்வாறே அருள்புரிந்து மறைந்தார்.

உளவு பார்த்தல்

தான் அனுப்பிய அசுர வீரர் அனைவரும் அழிந்தது கண்ட நராந்தகன் இரண்டு அசுரர்களைக் காசி நகருக்கு அனுப்பி மஹோத்கடருடைய வரலாறு, வலிமை, தவம், பெருமை முதலியவைகளைத் தெரிந்துகொண்டு வருமாறு கூறினான். அவர்கள் இருவரும் காசி நகருக்கு வந்து மஹோத்கடருடைய விவரங்களைச் சேகரித்தார்கள். அவர்களுக்கு மஹோத்கடர் வலிமை மிக்கவராகத் தோன்றவே இல்லை. மிகவும் சாமானியர் என்று எண்ணினார்கள். கடைசியில் மஹோத்கடரைத் தாங்களே பிடித்துச் சென்று நராந்தகன் எதிரில் நிறுத்துவதென்று தீர் மானித்தார்கள். அந்நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு அவர்கள் மஹோத்கடர் தனித்திருக்குமிடம் சென்றார்கள். அவர்கள் கருத்தை அறிந்த மஹோத்கடர் அவர்கள் இருவரையும் பிடித்து நெருக்கினார். அவர்கள் மூச்சு விடமுடியாமல் திணறினார்கள். அந்நிலை நீட்டித்தால் விரைவில் தாம் இறந்து விடுவோம் என்பதை உணர்ந்த அவர்கள் அஞ்சினார்கள்; மஹோத்கடருடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு தங்களைக் கொல்ல வேண்டாமென்று கெஞ்சினார்கள். மஹோத்கடரும் அவர்களை மன்னித்து அனுப்பிவிட்டார். அவர்கள் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று விரைந்தோடி நராந் தகனை அடைந்து நடந்த நிகழ்ச்சிகளைக் கூறினார்கள்.

நராந்தகன் படையெடுத்தல்

உளவு பார்த்த அசுரர்கள் கூறியதைக் கேட்ட நராந்தகன் தன்னுடைய அமைச்சர்களையும் தானைத் தலைவர்களையும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வரவழைத்து ஆலோசனை செய்தான். இறுதியாகக் காசி நகரத்தின் மீது படையெடுத்துச் சென்று மஹோத்கடரைக் கொல்வது எனவும் காசி ராஜனுக்குச் சரியான பாடம் கற்பிப்பது என்றும் தீர்மானம் செய்தார்கள். அதன்படி நராந்தகன் தன்னுடைய பெருஞ்சேனையைத் திரட்டினான். படைத்தலைவர்கள் மிகவும் கவனமாக அணி வகுத்தனர். காசி நகரை நோக்கிப் பெருஞ் சேனை எழுந்தது.

நராந்தகன் படையெடுத்து வருவதை ஒற்றர் மூலம் அறிந் தான் காசியரசன். உடனே அரசவையைக் கூட்டி மந்திரிகள் சேனாபதிகள் ராஜதந்திரிகள் ஆகியோரைக் கலந்து ஆலோ சித்தான். "நராந்தகன் பரமேஸ்வரனைக் குறித்துப் பலகாலம் தவமியற்றி வரம்பல கொண்டவன். அவனை எதிர்த்துப் போரிடுதல் எளிதன்று. அவனுடைய தமையன் தேவாந்தகன் மேலுலகம் முழுவதையும் ஆள்கின்றான். ஆதலால் அவனுடன் பகை வளர்த்துக் கொள்ளுதல் நமக்குத் தீம்பாய் முடியும். அவனுக்கு அடங்கிச் சமாதானமாய்ப் போவதே நன்று" என்று அனைவரும் ஒரே குரலாய்க் கூறினர். அப்போது மஹோத்கடர் அரசனை நோக்கி, "படையெடுத்துவரும் அரக்கனைக் கண்டு பயந்து பணிதல் நம் வீரத்திற்கு இழுக்காகும். மேலும் பயந்து பயந்து வாழ்வதைவிட அஞ்சாது நின்று போர்புரிந்து வீர சுவர்க்கம் அடைதல் விழுமிய செயலாகும். ஆகவே 'படை களைத் திரட்டிக் கொண்டு போருக்கு எழுதலே சிறந்ததாகும்" என்றார். மஹோத்கடருடைய பெருமைகளை முன்னமே நன்கு உணர்ந்திருந்த அரசன் அவர் கூறிய கருத்தே சரி எனத் தீர்மானம் செய்து பெரும் போருக்கு எழுக என்றான். அரசன் ஆணையைச் சிரமீது கொண்ட சேனாபதிகள் பெருஞ்சேனையைத் திரட்டிக் கொண்டு நகர்ப்புறத்திற்கு வந்து சேர்ந்தார்கள். பல்வகை வாத்யங்கள் முழங்க பல்வகைப் போர்க்கருவிகள் மின்ன காசிப் படையின் தூசிப்படை முன்னே சென்றது. அதன்பின்னே பெரும்படை சென்றது. நராந்தகன் பெரும்போர் நிகழ்த்தினான். காசி வீரர் வீறுகொண்டெழுந்து தாக்கியதில் அவுணப்படை சிதறியது. அசுரர்கள் பலதிசைகளிலும் ஓடத் தொடங்கினர். இதனைக் கண்ட நராந்தகன் தானே யுத்தகளத்தில் முனைக்கு வந்து ஓடிய வீரர்களை ஒன்று சேர்த்துக் கடும்போர் புரிந்து காசி அரசனையும் அவன் மந்திரிகளையும் மக்களையும் பிடித்து நிராயுதபாணிகளாக்கிக் கொடுஞ்சிறையில் அடைத்தான். தூதுவர் ஓடிச் சென்று இச்செய்தியை அரசியாரிடம் கூறினர்; அரசியார் அஞ்சித் தவித்தார்; யாது செய்வதென்று புரியாமல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கலங்கினார்; மஹோத்கடரை அடைந்து அழுதார். மஹோத்கடர் அரசியாரை நோக்கி, "வருந்தற்க. இப்போதே நான் போர் முனைக்குச் சென்று நராந்தகனைக் கொன்று அரசரை மீட்டு வருவேன்; கவலைவேண்டா" எனக் கூறித் தேரேறிப் போர்க் களம் புக்கார்.

குரூரன் போர்த்திறம்

அப்போது அவர் முகத்திலிருந்து ஆயிரம் ஆயிரம் வீரர்கள் தோன்றினர்; தோன்றும்போதே அவர்கள் ஆயுதம் தாங்கி வந்தனர்; நெடிய உருவமும் வலிய தோற்றமும் கொடிய பார்வையும் கொண்ட அவர்களைப் பார்க்கும்போதே அரக்கர்களுக்கு அச்சம் தோன்றியது. அவர்களுள் குரூரன் என்பான் மஹோத்கட மூர்த்தியின் பாதம் பணிந்து தன்னைப் போருக்கு அனுப்பக் கோரினான்; அவரும் குரூரனுக்கு ஆசி புரிந்து, "எதிரிலுள்ள படைகளை எல்லாம் அழித்திடுக; அப்படை நடுவே அருஞ்சிறையில் வாடும் காசிராஜன், அவன் மக்கள், அவனுடைய மந்திரிகள் ஆகியோரை மீட்டுக்கொண்டு வருக" எனக் கட்டளையிட்டு அனுப்பினார். குரூரனும் அவன் படைஞரும் தம் போர்த்திறனைக் காட்டினார்கள். நராந்தகனுடைய வீரர்கள் அழிந்தார்கள். இதைக் கண்ட நராந்தகன் ஆக்ரோஷத்தோடு குரூரன் முன் வந்தான். எண்ணிலடங்காக் கணைகளைக் குரூரன்மீது செலுத்தினான். அவை குரூரனுக்கு ஒரு துளித் துன்பமும் விளைக்கமுடியாது வீணாயின. நராந்தகன் வேலொன்று எடுத்து விடுத்தான்; குரூரனின் பெருமூச்சுக் காற்றால் அது தூள்தூளாகச் சிதறி வீழ்ந்தது. அவ்வேல் வலியிழந்ததைக் கண்ட அரக்கன் கதாயுதம் எடுத்து வீசினான்; அது குரூரனின் மார்பில் பட்டு மலைமீது மோதிய மண்கட்டியைப் போலாயிற்று.

இதனைக் கண்ட நராந்தகன் 'மஹோத்கடரால் அனுப்பப் பட்ட வீரனொருவனே இவ்வளவு வலிமை உடையவன் எனின் அவர் எப்படியோ?' என எண்ணிக் கலங்கினான். இனி அஸ்திரங்களைப் பயன்படுத்தி இவனைக் கொல்ல வேண்டும் எனத் தீர்மானித்துப் பாசுபதாஸ்திரத்தை எடுத்தான். ஒளிவீசும் பாசுபதம் அரக்கன் கையில் விளங்குவதைப் பார்த்த குரூரன் அதனை ஏவுமுன் அவனைத் தேரோடு தூக்கி வான வெளியில் விட்டெறிந்தான். அவனால் பாசுபதக் கணையை ஏவ முடியாமற் போயிற்று. வானவெளியில் திசை தெரியாமல் மூர்க்கத்தனமான வேகத்தோடு விழுந்து கொண்டிருந்தான் நராந்தகன்; அதற்கு ஒரு முடிவே இல்லை போலத் தோன்றியது. குரூரன் உடனே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

படை நடுவே புகுந்து பலரை வெட்டிச் சாய்த்துப் படை நடுவே பாடி வீட்டில் சிறைவைக்கப்பட்டிருந்த காசி ராஜனை யும் மற்றவர்களையும் மீட்டுக்கொண்டு திரும்பி வந்தான். மஹோத்கடர் அவர்களை அரண்மனைக்கு அனுப்பிவிட்டுப் போர்க்களத்தில் காத்திருந்தார். நராந்தகன் மீண்டும் பூமியில் தேருடன் வந்து வீழ்ந்து மயங்கிக் கிடந்தான்.

நராந்தகன் வதம்

நெடுநேரம் மயங்கிக் கிடந்த நராந்தகன் உணர்வு பெற்று எழுந்தான். காசியரசனையும் மற்றவர்களையும் குரூரன் விடு வித்துக் கொண்டு சென்றதை அறிந்து குமுறினான். மீண்டும் போர்க்களத்துட் புக்கான். அங்கு மஹோத்கடர் நிற்பதைக் கண்டு அவர்மீது பாணங்களை வர்ஷித்தான். பாணங்கள் அவரை ஏதும் செய்ய முடியாமல் வீணாயின. மாயப்போர் செய்தே மஹோத்கடரை வெல்ல இயலும் என்று எண்ணிய நராந்தகன் பெருமழை பொழியச் செய்தான்; பெருநெருப்புப் பற்றி எரியச் செய்தான்; சூறாவளி உண்டாக்கினான். மஹோத் கடரோ அவற்றை எல்லாம் விளையாட்டாக அழித்துவிட்டார். பிறகு ஓரம்பால் அவன் தலையை அறுத்து விண்ணுலகை ஆளும் அவன் தமையன் தேவாந்தகன் முன்பு விழச் செய்தார். ஆனால் தலை மீண்டும் முளைத்தது. மீண்டும் அறுத்தார்; அதனை அவன் அரண்மனையில் விழச்செய்தார். இவ்வாறு தலைகள் முளைக்க முளைக்க அவற்றைக் கிள்ளிக்கொண்டே இருந்தார். இவ்விளையாட்டு போதுமென எண்ணிய மஹோத் கடர் மிகப் பேருருவம் கொள்ள நராந்தகனும் அவ்வாறே மிகப் பேருருவம் கொண்டு நின்றான். எம்பெருமான் தன் கால் நகத்தால் அவன் மார்பைக் கீறி அவனை மாய்த்தார்; உயிர் வெளியேறியதும் அவன் உடலைத் தேய்த்து ஒன்றுமில்லாமல் செய்தார். நராந்தகன் மாண்டான். தேவர்கள் மகிழ்ந்தனர்; முனிவர்கள் நிம்மதி அடைந்தனர்.

தேவாந்தகன் வதம்

தன்முன் வந்து விழுந்த நராந்தகனின் தலையைக் கண்ட தேவாந்தகன் திடுக்கிட்டான். தூதுவர் ஒற்றர்கள் மூலம் நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் அறிந்து மிக வருந்தினான். பிறகு பெருஞ்சேனையைத் திரட்டிக் கொண்டு தம்பியைக் கொன்ற வனைக் கொல்லக் கொடுங்கோபத்தோடு வந்தான். அவன் சேனா சமுத்ரத்தின் அளவை ஒற்றர்களால் அறிந்த காசிராஜன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நடுங்கினான். மஹோத்கடரைச் சரணாகதி அடைந்தான். அவரும் அவனுக்கு அபயம் அளித்து சித்தி புத்தி ஸமேதராகப் போர்க் களத்திற்கு எழுந்தருளினார். தாம் முன்னமே தோற்றுவித்திருந்த தேவகணங்கள் போதாவென்று சித்தி தேவியை நோக்கி, ''உன் சக்தியால் பெருஞ்சேனையைத் தோற்றுவிப்பாயாக'' என்றார். சித்தி தேவியும் அஷ்டமா சித்திகளையும் வீரைகளாக்கி மேலும் பல்லாயிரம் வீரர்களையும் தோற்றுவித்தாள். வீரைகள் எண்மரும் தம்முடைய படைவீரர்களோடு தேவாந்தகனின் படைகளைச் சின்னாபின்னமாக்கினர். அதனைக் கண்ட தேவாந்தகன் மேரு மலைபோலும் மிகப்பெரிய தன் வில்லை வளைத்து அம்புமாரி பெய்து வீரைகள் செயலற்றுப் போகும்படிச் செய்தான். இதனைக் கண்ட புத்தி தேவியார் கோரமான ஒரு பெண் பூதத் தைத் தோற்றுவித்தார். பூதம் புத்தி தேவியாரை வணங்கி நிற்க, ''நீ சென்று வீரைகள் எண்மரையும் பாதுகாத்து தேவாந் தகனின் வீரர்களைக் கொன்று வா'' என்று ஆணையிட்டு அனுப்பினாள். அப்பூதமும் விரைந்து முன்னேறிச் சென்றது. வழியில் நின்ற அரக்கர்களை எல்லாம் வாரி எடுத்து எண் டிசையும் வீசி துவம்சம் செய்தது. தேவாந்தகன் தன்மீது ஏவிய அம்புகளை எல்லாம் தூசி தட்டுவதுபோல் தட்டிவிட்டு வீரைகளை விடுதலை செய்தது. அப்பூதம் தேவாந்தகனை நோக்கிச் செனறபோது அவன் மனம் துணுக்குற்றது. மாபெரும் வடிவம் கொண்ட அரக்கர்களை எல்லாம் அப்பூதம் வாயிற்போட்டு விழுங்கிக் கொண்டே வந்தது. தேவாந்தகன் அம்புகளெல்லாம் புழுதிகளாயின. தேவாந்தகனை நெருங்கிய பூதம் அவனை ஒரு கையால் தூக்கி வாயில் போட்டு விழுங்கி விட்டது. தேவாந்தகன் சமயோசிதமாக சூக்ஷ்ம வடிவம் கொண்டு அவள் மூக்கின் வழியாக வெளியேறி ஒருவரும் அறியாமல் நராந்தகனுடைய அரண்மனையை அடைந்தான். அங்கே இருந்த தன் தந்தை யாரிடம் வெற்றி விளைக்கும் யாகமொன்றை அறிந்து அதனை முறைப்படி இயற்றினான். யாக முடிவில் வேள்வித் தீயினின்றும் அசுவம் ஒன்று தோன்றியது. மேலும் பல வீரர்கள் ஆயுத பாணிகளாகத் தோன்றினர். வென்றி தரும் அந்த இவுளி மீது அமர்ந்து வேதியில் தோன்றிய வீரர்கள் புடைசூழ மீண்டும் போருக்குச் சென்றான் தேவாந்தகன், போர்க்களத்தில் கோடிக் கணக்கான மஹோத்கடருடைய வீரர்களைக் கண்ட அவன் அனைவரையும் விரைந்தழிக்க விரும்பினான். ஆகையால் மோஹனாஸ்திரத்தைப் பிரயோகித்தான். குரூரன், வீரைகள், புத்தி தேவியார் சிருஷ்டித்த பூதம் உள்பட யாவரும் மோஹ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

னாஸ்திரத்தால் பாதிக்கப்பட்டு மயங்கி விழுந்து கிடந்தனர். அப்போது மஹோத்கடரும் சித்தி புத்தி தேவியரும் யுத்த களத்திற்கு வெளியே இருந்தனர்.

அவ்வாறு போர்வீரர்கள் அனைவரையும் மயங்கிக் கிடக்குமாறு செய்துவிட்டு தேவாந்தகன் யாரும் அறியாத வகையில் போர்க் களத்திலேயே ஒரு பகுதியில் ஒரு கோர யாகம் செய்தான். அந்த யாக குண்டத்தினின்றும் வானத்தையும் பூமியையும் இணைக்கும் பாலம் போன்ற தோற்றத்தோடு பெண்பூதமொன்று வெளிப்பட்டது. வெளிப்பட்ட உடனே தேவாந்தகனை நோக்கி, "அகோரப் பசியுடன் இருக்கிறேன்; எனக்கு உணவு யாது?" எனக் கேட்டது. தேவாந்தகன் எதிரே மயங்கிக் கிடந்த மஹோத் கடருடைய சேனா சமுத்ரத்தைக் காட்டி "அவ்வீரர்களை உண்க" என்றான். பூதமும் அவர்களை உண்ண விரைந்து சென்றது.

மோஹனாஸ்திரத்தால் படைவீரர் அனைவரும் மயங்கிக் கிடப்பதை அறிந்த மஹோத்கடர் ஞானாஸ்திரப் பிரயோகம் செய்து அனைவரையும் எழுப்பினார். அச்சமயத்தில் தேவாந் தகன் ஏவிய பூதம் அவர்களை உண்ண அங்கே வந்தது. புத்தி தேவியார் படைத்த பூதம் அப்பூதத்தைக் கண்டது. உடனே விரைந்தோடி வந்து அப்பூதத்தை இரண்டாகக் கிழித்துத் தரையில் தேய்த்தது. அப்பூதம் அழிந்தது. மஹோத்கடர் தேவாந்தகன் நின்ற இடம் நோக்கி வந்தார். வேதியில் தோன்றிய இவுளி மீது அமர்ந்து பன்மடங்கு பலம் பெற்று நின்ற தேவாந்தகனை விரைவில் அழிக்கத் திருவுளம் கொண்டார் விநாயகப் பெருமான். அவன் பரமேஸ்வரரிடம் பெற்ற வரங் களைச் சிந்தித்தார். அப்போது விடியற்காலை நேரம். தேவாந் தகனும் அவரோடு பொருவதற்கு விரைந்து வந்தான். மிக்க கோபத்தோடு விநாயகரின் தேர்மீது பாய்ந்து அவரைக் கட்டிப் பிடித்தான். சற்று நேரம் அவனோடு போரிட்ட விநாயகப் பெருமான் பகலும் இரவும் அல்லாத காலைச் சந்தியில் வானமும் பூமியும் அல்லாத தேர்த்தட்டில் ஆயுத இனத்தைச் சேராத தம் கொம்பை ஒடித்து அவன் தலையில் குத்தினார். அவ்வளவில் அவன் மாண்டான். அவன் உடலினின்றும் ஓர் ஒளி தோன்றி எம்பெருமானின் பாதங்களை வந்தடைந்தது. தேவர்களும் முனிவர்களும் மகிழ்ச்சியுற்றனர்; காசி ராஜன் அச்சம் நீங்கினான்.

காசி இளவரசன் திருமணம்

தேவாந்தகன் மரித்தபின் தன் பெருஞ்சேனையை மஹோத் கடப் பெருமான் மறைத்து விட்டார். காசியரசனின் மகனுக்கும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மகத் நாட்டு அரசனுடைய மகளுக்கும் திருமணம் நிச்சயிக்கப் பட்டிருந்தது. காசி ராஜன் திருமண ஏற்பாடுகளை மிகவும் சிரத்தையுடன் செய்தான். திருமணத்திற்கு வரும் அரசர்கள் தங்குவதற்கான பாதுகாப்பான அழகிய இடங்கள்; தேவர்கள் தங்குவதற்கான இடங்கள்; அவர்கள் பொழுது போக்குவதற் கான நந்தவனங்கள்; தடாகங்கள்; முனிவர்கள் அமைதியுடன் இருப்பதற்கான இடங்கள்; இவைபோன்ற இன்னும் பலவற்றையும் உத்தேசித்துத் தன் மந்திரிகளின் உதவியுடன் சிறப்பாகச் செய்திருந்தான். மஹோத்கடர் புரோஹிதராக இருந்து காசி ராஜனுடைய மகன் திருமணத்தை வேத விதிப்படி நடத்தி வைத்தார். முனிவர்களும் தேவர்களும் அரசர்களும் உறவினர் களும் நண்பர்களும் நாட்டு மக்களும் இளவரசனையும் இளவரசியையும் வாழ்த்தினர்.

மஹோத்கடர் சின்னாட்கள் காசியில் தங்கியபின் காசி ராஜன் தொடர்ந்துவர தம் தந்தையாரையும் தாயாரையும் தரிசிக்கும் பொருட்டுத் தம் ஆச்ரமத்திற்குத் திரும்பி வந்தார். சித்தி புத்திகளுடன் தந்தையையும் தாயையும் பணிந்தேத்தினார். காசி ராஜன் தன் நாட்டிற்கு மீண்டும் சென்று நல்லாட்சி செய்து வந்தான். விநாயக பூஜையை விடாமல் செய்து இறுதியில் முக்தியும் பெற்றான்.

38. உடுண்டி விநாயகர்

பிரமாசுரன் பெற்ற வரம்

கைவர்த்தம் என்பது இயற்கை வளமும் செயற்கைத் திறனும் கொழிக்கும் சிறந்ததொரு நாடு. அந்நாட்டின் தலைநகரம் செல்வவளம் செழித்து நிற்கும் பன்மகம் என்ற ஊர். அவ்வூரின் கண் பிரமாசுரன் என்ற ஓர் அசுரன் தோன்றினான். அசுரர் களுக்கே உரிய வலிமையும் கொடுமனமும் கொண்டிருந்த அவ் வசுரன் சிவபிரானை நோக்கித் தவம் செய்தான். அவன் தவத்தை மெச்சிய சிவபிரான் அவன்முன் தோன்றி 'நீ வேண்டும் வரங்களைக் கேள்' என்றார். அவனோ "நான் என் கரத்தை யார் சிரத்தின் மீது வைத்தாலும் அவர் உடனே எரிந்து சாம்பராக வேண்டும்" என வேண்டினான். "அவ்வாறே ஆகுக" என்ற சிவபிரானை நோக்கி, "இவ்வரத்தைச் சோதிக்கத் தங்கள் தலைமீதே கைவைத்துப் பார்க்கிறேன்" என்று கூறிக் கொண்டே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவரை நெருங்கினான். வந்தது ஆபத்து என்று சிவபிரானும் மறைந்து விட்டார்; அவர் இருக்குமிடம் தேடி அலைந்தான் அசுரன்.

இச்செய்தியை அறிந்த விஷ்ணு மிக அழகிய பெண்ணுருவாய் அவன்முன் தோன்றினார். அம்மோஹினியின் அழகில் மயங்கிய அசுரன் அவள் பின்னே சென்றான்; அவளை மணக்க விரும்பி அவளை இறைஞ்சினான். அவள் அவனை நோக்கி, ''எனக்கு நிகராக நாட்டியம் ஆடும் ஆடவனையே நான் மணந்து கொள் வதாய்ச் சபதம் செய்திருக்கிறேன். உன்னால் ஆடக்கூடுமாயின் உன்னையே நான் மணந்து கொள்வேன்'' என்றாள். பிரமாசுரன் நாட்டியக் கலையில் வல்லவன். ஆகையால் இந்த நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டான்.

இருவரும் நாட்டியம் ஆடத் தொடங்கினர். ஆட்டத்தின் போது மோஹினி தன் தலையின்மீது கைவைத்து வருடினாள். வாங்கிய வரத்தை மறந்து அவனும் தன் தலைமீது கைவைத்தான்; வரம் பலித்தது; அசுரன் மாண்டான்.

துராசதன்

பிரமாசுரனுக்கு துராசதன் என்றொரு மகன் இருந்தான். மஹாவிஷ்ணுவின் தந்திரத்தால் தன் தந்தை இறந்தது கேட்டுக் கொதித்தான். விஷ்ணுவையும் தேவர்களையும் பழிவாங்க எண்ணினான். அதனால் தன் குல குருவாகிய சுக்ராசார்யரை அடைந்து அருள் புரிய வேண்டினான். அவர் அவனுக்குச் சிவ பெருமானின் திருவைந்தெழுத்து மந்திரத்தை உபதேசித்துத் தவம் புரியுமாறு கூறினார். துராசதன் ஆயிரம் ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தான். தவத்திற்கு உருகிய பெருமான் அவன் முன் தோன்றி, ''தேவர் முதலிய யாவரும் உன் சொற்படி நடப்பர்; நீ மூவுலகையும் ஆள்வாய்; விநாயகப் பெருமானின் திருவடியே அல்லால் உன்னை வெல்லும் திறல் வியனுலகில் இல்லை'' எனக் கூறி மறைந்தார்.

துராசதன் தவத்தை முடித்துக் கொண்டு முகுந்தை என்ற நகருக்கு வந்தான். அசுரர் அனைவரும் அவனை அண்டி ஆத ரித்தனர். அவன் நிலவுலகையும் விண்ணுலகையும் வென்றான். இந்திரனும் அவனைச் சார்ந்தவர்களும் மறைந்தோடி காசியில் விசுவநாதப் பெருமானைச் சரணடைந்து வாழ்ந்திருந்தனர். துராசதன் பிரம்மலோகம் செல்ல பிரமதேவனும் அஞ்சி மறைந்து காசியை அடைந்தான். சத்யவுலகை வென்ற அசுரன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வைகுந்தம் நோக்கிச் சென்றான். இவன் வருகையைக் கேட்ட விஷ்ணு அஞ்சித் தாமும் காசி நகரை அடைந்தார். இவ்வாறு அனைத்துலகையும் வென்று ஏக சக்ராதிபதியாக ஆட்சி செலுத்தி வந்தான். இந்திராதி தேவர்கள் எங்கு மறைந்து வாழ்கிறார்கள் என்பது வெகுநாள் வரை துராசதனுக்குத் தெரியாமல் இருந்தது. ஒருநாள் அமைச்சர்களில் ஒருவன் அவர்கள் காசியில் வாழ்வதைக் கண்டுகொண்டான். அதனை உடனே துராசதனிடம் கூறினான். துராசதன் காசி மீது படையெடுத்தான். காசிநாதரோ, இந்திராதி தேவர்களை உடனழைத்துக் கொண்டு திருக்கேதாரம் சென்று அஞ்ஞாத வாசம் செய்யத் தொடங்கினார்.

உடுண்டி விநாயகர் தோற்றம்

திருக்கேதாரத்தில் தேவர்கள் ஒருநாள் பிரம்ம தேவனை நோக்கித் துன்பம் அகலும் நாளும் உண்டோ என வினவி வருந்தினர். அப்போது பிரம்மதேவன் துராசதனை விநாயகப் பெருமானால் மட்டுமே வெல்ல முடியும்; அவர் தோன்றினால் தான் அது சாத்தியம் என்று கூறினார். பிறகு நான்முகன் யோசனைப்படி தேவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து உமை யம்மையை வழிபட்டனர். மனமிரங்கிய மலைமகளின் வதனார விந்தத்திலிருந்து சடாமகுடமும் மகுடத்தின்மேல் சந்திரனும் விளங்கித் தோன்ற விநாயகமூர்த்தி அவதாரம் செய்தார். உமையம்மை அவ்விநாயகருக்கு வக்ரதுண்டர் எனத் திருநாமம் இட்டார்; சிம்மவாஹனம் ஈந்தார்; அசுரர்களால் அல்லலுறும் முனிவர்களையும் தேவர்களையும் அல்லல் தீர்த்தாள வேண்டு மென்று பணித்தார். திருமாலும் நான்முகனும் தேவர்களும் அவ்வாறே பணிந்து வேண்டினர். உடுண்டி (வக்ரதுண்ட) விநாயகரும் அவர்களுக்கு அபயமளித்தார்.

முதல்நாள் போர்

விநாயகப் பெருமான் எல்லாருடைய வேண்டுகோளுக்கும் இணங்கிப் போருக்குப் புறப்பட்டார். எண்ணற்ற பூதப்படை களை ஸங்கல்பத்தால் தோற்றுவித்தார். அப்பூதப் படைகள் சூழ தேவர்கள் பின்தொடர காசி நகரை நோக்கிச் சென்றார். காசியை நோக்கி தேவப்படைகளும் பூதப்படைகளும் வருவதை ஒற்றர் மூலம் கேள்வியுற்ற துராசதன் எல்லையற்ற கோபத்துடன் தன் பெருஞ்சேனையைத் திரட்டிக் கொண்டு காசிமாநகரின் எல்லையை அடைந்தான். அசுரப் படைகளும் கணாதிபர் படைகளும் பயங்கரமாகப் பொருதன. துராசதன் வக்ரதுண்டர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எதிரில் வந்து அவரை எதிர்த்துப் பொருதான். அப்போது வக்ரதுண்டர், "துராசதா, சிவபிரான் அருளால் சிறந்த வரங்களைப் பெற்றுள்ள நீ தீயவழியில் சென்று அவற்றைக் கெடுத்துக் கொள்ளாதே; தேவர்களையும் முனிவர்களையும் துன்புறுத்துவதை விட்டுவிடு; இன்றேல் துன்புறுவாய்" என்று எச்சரித்தார். ஆனால் வரபலத்தால் செருக்குக் கொண்ட துராசதன் எம்பெருமான் சொல்லைப் புறக்கணித்தான். விநாயகப் பெருமான் மீது பாணங்களை ஏவினான்; அவற்றை எல்லாம் அவர் தடுத்து விட்டார்; இறுதியில் அவன் நெற்றியின்மீது தம் முஷ்டியால் குத்தினார். அந்தக் குத்தைத் தாங்க முடியாத அரக்கன் மயங்கி வீழ்ந்தான். பூதப்படையினர் அசுரப் படைகளை ஹதாஹதம் செய்துவிட்டனர். விநாயகரும் இறந்த தம் பூதப்படையினரை உயிர்ப்பித்துக் கொண்டு இருப்பிடம் அடைந்தார். மயக்கம் தெளிந்த துராசதன் எழுந்து தன் பாசறை சேர்ந்தான்.

இரண்டாம் நாள் போர்

பாசறை சேர்ந்த துராசதன் தன் மந்திரிகளையும் சேனைத் தலைவர்களையும் கலந்து ஆலோசனை செய்தான். விநாயகப் பெருமான் பார்வைக்குச் சிறியவராய் இருந்தபோதிலும் போர் செய்வதில் வல்லவராய் இருக்கிறார். ஆகையால் அசுரப் படைகள் அனைத்தையும் திரட்டிக் கொண்டு போருக்குச் செல்ல வேண்டுமென்று தீர்மானித்தனர். பொழுது விடிவ தற்குள் பெரும்படை திரண்டது. ஆனைமுகத்து அண்ணலும் தம பெரும் பூதப்படையுடன் போர்க்களத்தை அடைந்தார். துரர்சதனின் கடல் போல் பரந்து நின்ற சேனையைப் பார்த்தார். உடனே சிம்மவாஹன விநாயகராகவும், மயூரேசராகவும், மூஷிக வாஹனராகவும் பலபல வடிவம் கொண்டார். இவ்வாறு ஐம்பத்தாறு வடிவம் கொண்டு துராசதன் படைகளைத் துவம்சம் செய்தார். துராசதன் ஏவிய பாணங்கள் அஸ்திரங்கள் ஆகிய வற்றைப் பயனற்றதாக்கினார். ஒரு சமயம் இருவருமே பாசுபதக் கணையை ஏவிவிட்டனர். அவை வானவெளியில் ஒன்றையொன்று கவ்வி உலகே அஞ்சுமாறு வெப்பத்தை உண்டாக்கின. பின்னர் அவை ஏவியவர்களிடமே திரும்பின.

துராசதன் களைப்படைந்தான்; இனி விநாயகருடன் போரிட முடியாதென் எண்ணினான்; மாயையால் மறைந்தோடி ஒளிய எண்ணினான்; அப்போது வக்ரதுண்ட விநாயகர் விசுவரூபம் கொண்டு தம் வலத் திருவடியை அவன் தலைமேல் நாட்டி,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

"சிவபிரானிடம் அழியா வரம் பெற்ற அசுரனே, அவ்வர பலத்தால் உனக்கழிவில்லை; ஆயினும் எப்போதும் எம் பாத பீடமாய் நின்று இத்தலத்தில் தீமை செய்பவர் திருந்துமாறு ஆட்சி செய்து கொண்டிருப்பாயாக" எனத் திருவருள் பாலித்தார். பரமனின் பாத தூளி பட்ட மாத்திரத்தில் துராசதன் தன் தீவினையின் விளைவுகளினின்றும் விடுபட்டான்; ஞானம் பெற்றான்; மற்றவர் செய்யும் தீமைகளை அகற்றி அவர்களைப் புனிதர்களாக்கிக் காசி நகரின் கீழ்த்திசையில் உடுண்டி விநாயகப் பெருமானின் அடித் தொண்டனாக அணுக்கத் தொண்டனாக விளங்கினான்.

வக்ரதுண்ட விநாயகரும் பஞ்சமுக விநாயகராக காசி நாதரின் ஸந்நிதியில் அமர்ந்தார். தேவர்களும் முனிவர்களும் அவரை உடுண்டி விநாயகர் என்றே போற்றி வழிபட்டனர். உலகம் முழுவதும் உண்மையான இன்பம் பெற்றது.

ரிபுஞ்சயன் தவம்

மிகமிகப் பண்டைக் காலத்தில், ஏதோ ஒரு கல்பத்தில், பாற்பம் என்றதொரு வளநாட்டை சுவாயம்புமனு என்று பெயர் கொண்ட பேரரசன் ஆண்டு வந்தான். அவன் ஆட்சிக் காலத்தில் நாடு பல்வகைகளிலும் வளமோங்கிப் புகழுடன் விளங்கியது. நாட்டு மக்கள் நன்மை பல பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்; நேர்மை, உண்மை, இரக்கம், தெய்வபக்தி ஆகிய நற் பண்புகள் யாவும் திகழச் சிறப்புற்று விளங்கினர். அவ்வலிமை வாய்ந்த நேர்மை நெறி பற்றி நின்ற சுவாயம்புமனு இயற்கை நியதிப்படி ஒருநாள் உயிர் துறந்தான். அவன் மறைவுக்குப் பின்னர் அந்நாடு வளம் கெட்டது. மன்னன் இல்லாததால் மக்களும் மனம்போனபடி வாழ்ந்தார்கள். நாட்டை நெறிப்படுத்த நல்லரசு இல்லை. இயற்கையும் இன்னல் புரிந்தது. மழையே இன்றி நாடு வறண்டது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக அப்பூமி மழை காணாது வெடித்துக் கிடந்தது. ஊற்றுநீர் வற்றியது. ஆற்றுநீர் இல்லை. தெய்வ பூசை மறந்தது. திருவிழாக்கள் மறைந்தன. இந்நிலையைப் போக்க நான்முகனார் திருவுளம் கொண்டார்.

அதனால் பிரமதேவன் முதலில் நல்ல மன்னன் ஒருவனைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று முயன்றார். காசியம்பதியில் க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்த ரிபுஞ்சயன் என்பான் கடுந்தவம் புரிந்து கொண்டிருப்பதைக் கண்ட கமலவாசன் அவனை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாற்ப நாட்டரசனாக்க எண்ணினார். ரிபுஞ்சயன் சிறந்த தவ வலிமை உள்ளவனாகத் திகழ்ந்தான். அரசருக்குரிய குணங்கள் அனைத்தும் பொருந்தியவனாக இருந்தான். நான்முகனார் அவனை நண்ணி பாற்ப நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படிக் கூறினார். அவன் சற்றே யோசனை செய்து, காசி நகரத்தில் தங்கியுள்ள தேவர்கள் யாவரும் வெளியேற வேண்டும் எனவும் அவர்கள் அங்கு மீண்டு வருதல் கூடாது எனவும் நிபந்தனை விதித்தான். நாட்டை வளமாக்க எண்ணிய நான்முகனார் வேறு வழியின்றி அந்நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டார். ஒப்புக்கொண்ட போதிலும் அந்நிபந்தனையை நிறைவேற்றுவது எவ்வாறு எனக் கவலை கொண்டார். அக் கவலையோடு காசி விசுவநாதர் கோயிலுக்குச் சென்றார். அப்போது காசியம்பதிப் பெருமான் முப்பத்திரண்டறம் செய்த இல்லாளோடும் ஏனைத் தேவர்களோடும் தம் பூத கணங் களோடும் மந்தரமலை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

சிவபிரான் மந்தர மலையை அடைதல்

மந்தர மலையும் நீண்ட நாட்களாகச் சிவபெருமான் தன்னிடம் வாசம் செய்ய வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தது. இப்போது அம்மலைச் சாரலில் மரீசி என்றொரு முனிவரர் ஐம்புலனடக்கம் பெற்று யோக நெறியுற்றுத் தவ வழியில் படர்ந்து கொண்டிருந்தார். அவர்தம் தவத்தைப் போற்றிய காசியம்பதிவாழ் கைலைநாதன் அவருக்கு அருள்புரிய எண்ணினார். அதற்காகவே அவர் அப்போது மந்தரமலை நோக்கிப் பயணமானார். ரிபுஞ்சயன் விதித்த நிபந்தனையை எவ்வாறு எம்பிரானிடம் எடுத்துக் கூறுவது என்று அறியாமல் அலர்மேல் அமர்ந்த அந்தணன் எம்பிரானோடு தொடர்ந்து மந்தரமலையை அடைந்தார். அங்கு மதி மிலைந்த கைலை நாதன் மரீசிக்குப் பிரத்யக்ஷமாகி அருள் புரிந்தார். மரீசி முனிவர் எம்பி ரானை நோக்கி, "பிரபஞ்சமனைத்தையும் தோற்றுவித்து, ஆட்டுவி த்து, அழிவிக்கும் எல்லையிலாச் சக்தி வாய்ந்த கைலையங் கிரி வாசனே, என்றும் உன்றன் இணைமலர்ப் பதங்களை மறவாது போற்றிப் புகழ்ந்து என் மனத்தில் நிறுத்த வேண்டும். எவ்வுலகத் தோரும் விரும்பும் ஏற்றமிகு சிவலோக வாசம் நிலையாய் எனக்குக் கிடைக்க வேண்டும்" என வேண்டிப் பணிந்தார். பொங் கரவப் பணி பூண்ட சங்கரனும் புனித மரீசி முனிவர் வேண்டிய வரமளித்தார். தபோதனரான மரீசி முனிவரும் சிவலோக விமானம் ஒன்றில் ஏறிச் சிவலோகம் சார்ந்தார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவ்வாறு மரீசி முனிவர் சிவலோகம் சென்றதற்பின் பாதலம் வரை வேர்விட்டு வான்முட்டி நிற்கும் மந்தரமலையை நோக்கி, "நீயும் வரம் வேண்டினையெனில் தருவோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அதுகேட்ட மந்தர மலையும் இதுதான் சமயமென்று மனமகிழ்ந்து, "வாசி பலபெற்று விளங்கும் காசித் தலத்தில் பண்ணவர் புடைசூழ மண்ணவர் வியக்க அடியார்க்கு அருள்புரிந்து வாழும்பாப்போலே என்றன் பறம்புச் சாரலிலும் நிதம் புத்தருள் புரிந்து அடியார்களுடன் தங்கி வாழ்ந்து வரல் வேண்டும்" எனப் பிரார்த்தனை புரிந்தது. இந்தச் சந்தர்ப் பத்தை நழுவவிட மனமில்லாத மலர்த்தேவன் முக்கண் அப்பனை வணங்கி ரிபுஞ்சயன் இட்ட நிபந்தனையையும் நாடு வளம்பெற வேண்டித் தவிர்க்கமுடியாத நிலையையும் விளக்கிக் கூறி மந்தர மலையின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தருள வேண்டும் என வேண்டினார். மந்தஹாச வதனத்தோடு மலைமகள் மணாளனும் அவ்வாறே மந்தர மலையில் தங்கி வாழ்வதெனத் தீர்மானம் செய்தார்.

ரிபுஞ்சயன் ஆட்சி

காசி க்ஷேத்திரத்திலிருந்து விசுவநாதப் பெருமான் வெளியேறத் தேவர்கள் யாவரும் வெளியேறினர். ரிபுஞ்சயன் பிரமதேவரிடம் ஒப்புக்கொண்டதற்கிணங்க காசி க்ஷேத்ர முள்ளிட்ட பாற்ப வளநாட்டை ஆளத் தொடங்கினான். தவத்திரு மிக்க ரிபுஞ்சயன் நாட்டு மக்களை நல்வழிப் படுத்தினான்; வேள்விகள் முதலிய கர்மாக்கள் இடையீடின்றி நிகழ்ந்தன. மாரியும் பொய்யாது பொழிந்தது. வறண்ட பாலைகள் மருதமாயின. வெடித்து விடர் விட்ட நிலங்கள் முல்லையாயின. நாடு வளங்கொழித்தது. மக்கள் கட்டுப்பாட்டுடன் வாழத் தொடங்கினர். எங்கும் அமைதி நிலவியது. ரிபுஞ்சயனின் உயர்வையும் திறனையும் உணர்ந்த ஆதிசேஷன் அவனுக்குத் தன் மகளான அனங்கமோஹினியைத் திருமணம் செய்து கொடுத்தான்; ஏராளமான செல்வங்களையும் ஈந்தான். ரிபுஞ்சயனுக்குத் திவோதாசன் என்ற பெயர் உண்டாயிற்று. மேலும் வான்புகழ் கொண்ட திவோதாசனுக்குக் கற்பக விருக்ஷமும் பல்வகைச் செல்வங்களை அளித்தது. அதனால் அவன் நாடு மேலும் சிறந்தது. தேவரும் மூவரும் ஏவரும் தனக்கு இணை யில்லை என்னும்படி திவோதாசன் பிரகாசித்தான். இவ்வாறாக நிமிர்ந்த செங்கோல் நிமிர்ந்த நிலையிலேயே எண்பதாயிரம் ஆண்டுகள் கழிந்தன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவபிரான் மீண்டு காசியடைதல்

மந்தர மலையின் வேண்டுகோளை ஏற்று நான்முகன் விருப்பப் படி சிவபிரான் எண்பதாயிரம் ஆண்டுகள் மந்தரகிரி வாசராய் இருந்தார். தேவர்களும் முனிவர்களும் தேவகங்கையில் நீராடி தேவதேவனைத் தரிசிக்கும் பாக்கியம் இல்லையே என வருந்தினர். சிவபிரான் மீண்டும் காசி க்ஷேத்ரத்தை வந்தடைந்தால் அப் பாக்கியம் கிடைக்குமே என ஏங்கினர். தங்களுடைய எண்ணத்தைத் தந்திமுகத்தோன் தந்தையிடம் பக்குவமாய்க் கூறினர். சங்கரனும் அவ்வாறே காசி செல்ல வேண்டுமெனக் கருதினார். தேவர்கள் தங்கள் குருவை அணுகி இதற்கொரு வழிசொல்ல வேண்டுமென வேண்டினர். தேவகுருவும், "திவோதாசன் ஆட்சியில் நன்னெறி படர்ந்து வேரூன்றி நிற்கின்றது. அந்நிலையில் அவனுடைய வரபலத்தைக் குறைக்க முடியாது. நாட்டில் நன்னெறி நசுங்கித் தீநெறி ஓங்குமாயின் மீண்டும் தேவர்கள் காசி நகரத்தை அடையலாம்" என்றார். உடனே இந்திரன் அந்நாட்டின் நன்னெறியை நசுக்கத் தீர்மானம் செய்தான். வேள்வி முதலியன இடையூறின்றி நடத்தலால் நன்னெறி படர்கின்றதாகையால் முதலில் வேள்வி முதலிய கர்மாக்கள் நிகழாதிருக்க வழி தேடினான். வேள்வி நிகழ அக்னி இன்றியமையாததாதலின் அக்னி தேவனை அழைத்து, "இனிக் காசிமாநகரத்தில் நெருப்பு எழுதல் கூடாது" என ஆணையிட்டான். இந்திரனின் ஆணைக்கு அஞ்சிய அக்னி அன்று முதல் காசிமாநகரை விட்டு விலகிவிட்டான். மறுநாள் காலையில் முனிவர்களும் அந்தணாளர்களும் அக்னி காரியம் எதுவும் செய்ய இயலாமல் அவதியுற்று அரசன் அரண்மனையை அடைந்தனர். தினமும் சுழித்தெழுந் தோங்கிப் பிரகாசிக்கும் அக்னி, அரணி கடைந்தும் எழாத குறையை அரசனிடம் கூறி வருந்தினர்.

திவோதாசன் பல்லாயிரம் ஆண்டுகள் தவம் செய்து சித்தியடைந்த யோகி. ஆகவே நாட்டு மக்கள் சொன்ன குறை ஏற்பட்ட முறை யாதென உணர்ந்தான். இனிப் பஞ்சபூதங் களுமே காசி நகரில் நுழையாது எனினும் தானே தன் யோக வலிமையால் எல்லாமாய் நின்று நாட்டைக் காப்பதென உறுதி பூண்டான். எனவே, மீண்டும் வேள்வி முதலிய நல்ல காரியங்கள் நடந்தன; மக்கள் நவையறத் தொழில் புரிந்து முறைபிறழாது வாழ்ந்து வந்தனர். இந்திரன் ஏமாற்றம் அடைந்தான். இன்னது செய்வதெனத் தெரியாது திகைத்தான். மலைவில்லான் மாணடி சேர்ந்து திவோதாசன் வலிமையையும் செம்மை நிலையையும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எடுத்துக் கூறினான். மலைமகளும் தானுமாய் கணங்களோடு நடனமாடும் எம்பிரான், ''எம்மால் அவன் செம்மை நிலையைக் குலைத்தல் இயலாது. யாவருக்கும் முதல்வனாய் விளங்கும் விநாயகப் பெருமானைச் சரணடையுங்கள்'' என்றார். சிவபிரான் தம் விருப்பத்தைப் புலப்படுத்த, தேவர்கள் உடுண்டி விநாயகரைச் சரணடைந்தனர். உடுண்டி விநாயகர் தேவர்களுக்கு அருள்புரிய உளங்கொண்டார். அதனால் விநாயகப் பெருமான் காசிநகரை யடைந்து சோதிடத்தில் வல்ல அந்தணர் உருவம் கொண்டார். அவருடைய தோற்றம் யாவரையும் கவர்ந்திழுக்கும் சக்தி வாய்ந்ததாய் இருந்தது; பேச்சு தெளிவாகவும் ஆணித்தர மாகவும் நியாயபூர்வமாகவும் இருந்தது. கண்டார் வியக்கும் வண்ணம் கடந்த காலச் செய்திகளைக் கொஞ்சமும் தவறின்றிக் கூறினார். நிகழ்காலச் செய்திகளை உள்ளவாறே கூறினார். யாவரும் அவருடைய சோதிடத்தால் ஈர்க்கப்பட்டனர். பிறகு அங்கு வாழும் மக்களுக்குப் பலவிதமான தீய கனவுகள் உண்டாகும் படிச் செய்தார். அத்தகைய கனவுகளைக் கண்டவர்கள் வஞ்ச சோதிடரிடம் தம் கனவுகளைச் சொல்லிப் பலன் கேட்டார்கள். கேட்டவர்களுக்கெல்லாம் அவர்கள் கனவைப் பகுத்து அலசிக் காட்டி அந்நகரத்திற்குத் தீங்கு வரும் எனவும் நகரமே நிர் மூலமாகி அழிந்துவிடுமெனவும் பலபேருடைய கனவுகள் அம்முடிவையே காட்டுவதால் அழிவு நிச்சயமெனவும் கூறினார். நாட்டு மக்கள் பீதி அடைந்தனர். பலர் காசியை விட்டு வெளியேற முனைந்தனர். அதனால் நித்திய, கர்மானுஷ்டானங்கள் பாதிக்கப்பட்டன. வெகுசில நாட்களிலேயே நாட்டில் தர்மம் குறைந்து குழ்ப்பம் மிகுந்தது. இறுதியில் விநாயகப் பெருமான் திவோதாசனையும் சந்தித்தார். அப்போது அரசன் அவ்வேடதாரியான அந்தணரை நோக்கி, ''எண்பதினாயிரம் ஆண்டுகள் தருமத்தை நிலைநிறுத்தி நேர்மைநிலை பிறழாமல் செங்கோலாட்சி செய்து வந்தேன். இப்போது சின்னாட்களாக நாட்டில் குழப்பமும் அதர்மமும் தலைதூக்குகின்றன. இதன் காரணம் யாது? சோதிட நூல்படி அதனை விளக்கவேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டான். அதற்குச் சோதிடராக வந்த உடுண்டி விநாயகர் அரசனை நோக்கி, ''இன்னும் பதினேழு நாட்களில் அரண்மனைக்கு வாதம் செய்வதில் வல்ல ஒருவர் வருவார். அவரிடம் இதனைக் கேட்டுத் தெரிந்து கொள்க'' எனக் கூறினார். பிறகு அவர் தம்வழியே செல்வார்போல் காசிப்பதி நீத்து மறைந்தார்.

காசிப்பதியில் நிகழ்ந்தவற்றை உணர்ந்த சிவபிரான் ஸ்ரீமந்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நாராயண மூர்த்தியையும் மஹாலக்ஷ்மியையும் பகுத்தறிவு எனக் கூறி அரைகுறை உண்மைகளை இயம்பும் பௌத்த மதத்தினர்களாக அங்கு அனுப்பினார். நாராயணமூர்த்தியும் மகாலக்ஷ்மியும் காசிப்பதியிற் சென்று நித்ய கர்மானுஷ்டானம், யக்ஞம் முதலியன செய்வோர்களை அடுத்து அவர்கள் செய்வன வீணான செயல்கள் எனவும் பயனற்றவை எனவும் விவாதம் புரிந்தனர். மேலும் ஒழுக்கம் கட்டுப்பாடு என்பவை மனிதன் ஒவ்வொருவனும் அடைய விழையும் இன்பத்தைக் குறைப்பன வேயன்றி வேறன்று; எண்ணிய போதெல்லாம் எண்ணியபடி யெல்லாம் செயற்படுதலே பேரின்பம் என்றும் அத்தகைய செயற்பாட்டுக்குத் தடைவிதிப்பன யாவும் மனிதன் உரிமை யுடன் அடைய வேண்டிய சுகத்தை மறுப்பதாகும் எனவும் கூறி மக்களை மயக்கினர். மக்களும் அவர்கள் கூற்றைக் கேட்டு அதுவே உண்மையென்று மயங்கவுணர்ந்தனர். ஓரிரு வாரங்களில் ஊரில் கட்டுப்பாடே கழன்றுவிட்டது. ஒழுக்கம் குலைந்தது. நாட்டில் குழப்பம் உண்டாயிற்று; தருமம் தகர்ந்தது; அதருமம் தலையெடுத்தது; நிமிர்ந்திருந்த செங்கோல் நிலைகுலைந்து தடமாடியது; இவற்றைத் திவோதாசன் தன் யோக பலத்தால் உணர்ந்தான். இவ்வாறு பதினாறு நாட்கள் கடந்தன. பதினேழாம் நாள் பௌத்த வேடதாரியாக வந்த நாராயணமூர்த்தியும் மகாலட்சுமியும் அரசனுடைய அரண்மனையை அடைந்தனர். முன்னமேயே அவர்களையும் அவர்களுக்கு முன்னே வந்த உடுண்டி விநாயகரையும் யோகநெறியில் உணர்ந்துவிட்ட அரசன் அவர்களை அன்புடன் வரவேற்றான். அவர்களைப் பணிந்து, "உடுண்டி விநாயகர் வந்து செய்த குழப்பத்தையும் தாங்கள் இருவரும் வந்து செய்த தர்மநஷ்டத்தையும் நான் நன்கு அறிவேன். தங்களையும் நான் யாரென்பதைப் புரிந்து கொண்டேன்; தேவாதி தேவனான உடுண்டி விநாயகரும் காத்தல் தொழிலுக்கு அதிபதியாகிய தாங்களும் பல்வகைச் செல்வங்களையும் பல்கச் செய்யும் ஸ்ரீதேவியும் கொண்ட கருத்துக்கு எதிராக ஒரு கருத்து இருக்க முடியுமா? நான் யாது செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதனைச் செய்யச் சித்தமாக இருக்கிறேன்" என உரைத்தான்.

நாராயணமூர்த்தியும் மஹாலட்சுமியும் தங்கள் உண்மை உருவைத் திவோதாசனுக்குக் காட்டினர். பிறகு நாராயணமூர்த்தி திவோதாசனைப் பார்த்து, "சாமான்ய மக்களிடையே ஒழுக்கத்தையும் தர்மத்தையும் நிலைநிறுத்த ஓராயிரம் ஆண்டுகள் தேவைப்படுகின்றன; ஆனால் அதர்மத்தைத் தூண்ட,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒழுக்கத்தைக் கெடுக்க ஒரு சில நாட்களே போதும்; இதனை இந்நகரத்தில் இன்று நாம் கண்டோம். என்றுமே தர்ம நெறி யினின்று தவறாதவர்கள் இந்நகரில் இருந்தால்தான் சஞ்சல புத்தி உள்ளவர்களின் எண்ணிக்கை குறையும். அதனால் ஒழுக்கமும் கட்டுப்பாடும் ஓங்கும். அவை ஓங்குதலால் தர்மம் செழிக்கும்; குழப்பம் குறையும்; நாடு நலம் பெறும். ஆகவே, என்றும் தர்மத்திலேயே கருத்தூன்றி நிற்கும் தேவர்களும் முனிவர்களும் தடையின்றி இங்குவர அனுமதிக்கவேண்டும்; காசிப்பதியைக் கங்காள மூர்த்தியான கைலைமலைச் செல்வனுக்கு அளித்துவிடுக. இதனால் நீ இம்மையிற் 'புகழும் இறுதியில் முத்தியும் பெறுவாய்'' என்றார்.

எண்பதாயிரம் ஆண்டுகள் ஆட்சி புரிந்திருந்த திவோதாசனும் சலிப்புற்றிருந்தான். அரச வாழ்க்கையை நீத்து ஆன்மீக வாழ்க்கையை ஏற்க ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தான். அந்தச் சந்தர்ப்பம் இப்போது கிடைத்தது. ஆகையால், உடனேயே தன் மகனுக்கு முடிசூட்டி நாட்டை அவனிடம் ஒப்படைத்தான். தன்னிடம் சேர்ந்திருந்த ஏராளமான பொருள்களைக் கொண்டு காசி விசுவநாதப் பெருமானுக்கு அழகுமிகு கோயில் எடுத்தான். கைலைமலை வாழ் காருண்ய மூர்த்தியை மீண்டும் காசிப்பதிக்கு எழுந்தருளுமாறு வேண்டினான். கூடவே தேவரும் முனிவரும் வரச் செய்தான். காசிவிசுவநாதரை வேதாகம முறைப்படி பிரதிட்டை செய்து தினமும் முறைவழுவாது வழிபாடு செய்து வந்தான். இறுதியில் தான் பிரதிட்டை செய்த சிவலிங்கத் திருவுருவோடு ஒன்றி இரண்டறக் கலந்தான்.

39. வல்லபை விநாயகர்

மரீசியின் தவம்

மூவா முதலா முன்னவன் பெருமையெல்லாம் தன் தந்தை யாகிய நான்முகனிடம் வேண்டித் தெரிந்துகொண்ட மரீசி முனிவர் தவம் முயன்றார். பல்லாயிரம் ஆண்டுகள் உண்ணும் உணவும் அருந்தும் நீரும் இன்றிக் கடுந்தவம் செய்தார். அவருடைய தவத்தின் பெருமையைப் போற்றிய விநாயகப் பெருமான் அவருக்கு மூஷிக வாகனராய்க் காட்டியளித்தார். மரீசி முனிவர் பேரானந்தம் அடைந்து விரைந்து எழுந்து ஆனைமுகத்து அண்ணலைப் பணிந்தார். விநாயகப் பெருமானும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மரீசியை நோக்கி, ''வேண்டின வேண்டின வரங்கள் பெற்று வாழ்க'' என வாழ்த்தினார். மரீசி முனிவர் உடனே களிற்று முகக் கடவுளைப் போற்றி, ''என்றும் உன்றன் திருவடி மறவாத பேறு தரல் வேண்டும்; மூவுலகும் என் ஆணை வழிச் செல்லல் வேண்டும்; முனிவராயினும் தேவர்ராயினும் மனிதராயினும் எனக்கு அடங்கியே நடக்க வேண்டும்; என்றும் துன்பம் எனக்கு ஏற்படலாகாது; இறைவன் இடப்பாகத்தமர்ந்த தேவி என் மகளாக வேண்டும்; அம்மகளைத் தேவரீர் திருமணம் செய்து கொள்ள வேண்டும்'' என்றபடியெல்லாம் வேண்டி வரம்பல பெற்றார். பின்னர் தம் தந்தையாரான நான்முகனை அடைந்து தான் இயற்றிய தவத்தையும் பெற்ற வரத்தையும் கூறினார். நான்முகனும் மகிழ்ந்து தேவவல்லி என்ற சிறந்ததொரு கன்னி கையை அவருக்குத் திருமணம் செய்வித்தார். மேலும் பிரம்ம தேசம் என்றொரு சிறந்த நகரை சிருஷ்டி செய்து அந்நகரில் வாழ்ந்துவருமாறு கூறினார்.

மலைமகளின் செருக்கு

ஒரு சமயம் திருக்கயிலையில் சிவபிரானும் மலைமகளும் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அப்போது சிவபிரான் உமையம்மையை நோக்கி, ''சக்தியாகிய உன்னால்தான் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது'' என்ற தத்துவத்தை எடுத்துக் கூறினார். சக்தி தோன்றிய பினன்ரே சக்தி தத்துவம் இயங்கும் என்பதை மறந்த எம்பெருமாட்டி சற்றே செருக்குக் கொண்டு, ''சக்தியால்தான் எல்லாம் இயங்குகின்றன எனில் எம்பெருமான் இயக்கமும் என் சக்தியினாலேயே'' என்றாள். அம்மையின் அறியாமையை அகற்ற எண்ணிய அப்பரமன் சகல புவனங் களிலும் உள்ள தன் சக்திகளைத் தன்னுள் ஒடுக்கினார்; உமையம்மையும் அதனுள் ஒடுங்கினார். உலகம் இருண்டது; செயலற்றது; முனிவரும் தேவரும் நித்திரையில் ஆழ்ந்தனர்; ஒட்டுமொத்தமாக எல்லாமே ஸ்தம்பித்துவிட்டது.

தேவி நடுங்கிப் பரமேஸ்வரரின் பாதங்களில் பணிந்து, ''அறியாமையால் அகங்காரம் கொண்டு பேசியதைப் பொருட் படுத்தாமல் மன்னிக்க வேண்டும்'' என வேண்டினாள். சிவபிரானும் மனம் கனிந்து ருத்ர கணங்களைத் தோற்று வித்தார். அவர்கள் ஒரு சிவராத்ரியில் இரவு முழுவதும் சிவ பிரானை வழிபட்டு அவரருள் வேண்டினர். அவர்களுக்குப் பிரத்யக்ஷமானார் சிவபிரான். அவர்கள் பெருமானைப் பணிந்து, ''பண்டு போலவே லோகம் இடைவிடாது இயங்க அருள்புரிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேண்டும்'' என வேண்டினர். சிவபிரானும் அவ்வாறே அருள் பாலித்தார். உலக இயக்கம் மீண்டும் தொடங்கியது. இந்திராதி தேவர்கள் எம்பெருமானை அடைந்து இடையில் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாதிருந்தமை குறித்து மன்னிக்குமாறு வேண்டினர். எம்பெருமான் அவர்களை நோக்கி, "தவறு உங்களுடையதல்ல'' எனக்கூறி அருள்பாலித்தார்.

சிவபிரான் கூறிய குறிப்பினை உணர்ந்த உமையம்மை, "தானே தனக்கு நிகராய் விளங்கும் சத்துவ ஸ்வரூபியே, என்னாலன்றோ அண்டமுழுவதும் இடர்ப்பாடுற்றது. அதற்கு நான் இயற்ற வேண்டிய பரிஹாரம் யாது'' என்றாள். சிவபிரான் உமையம்மையை நோக்கி, "பிரம்மதேசத்தைத் தனக்குரிமையாகக் கொண்டிருக்கும் மரீசி முனிவர் யமுனைக் கரையில் ஓர் ஆசிரமம் அமைத்துக் கொண்டு தவம் செய்து வருகிறார். யமுனையில் ஒரு தாமரை மலரில் நீ ஒரு சங்காய்க் கிட. அவர் யமுனைக்கு நீராட வரும்போது அச்சங்கை எடுப்பார்; அப்போது நீ ஒரு குழந்தை உருக்கொண்டு அவருடைய ஆச்ரமத்தில் வளர்ந்து வருக. அவர் முன்னே விநாயகப் பெருமானிடம் வரம் பெற்றுள்ளார். அவர் வரம் பெற்றபடி விநாயகர் உருவில் நானே வந்து உன்னைத் திருமணம் செய்து கொள்வேன்; இதுவே நீ செய்யும் பரிஹாரமாகும்'' என்றார்.

வல்லபை

அவ்வாறே ஒரு புண்ணிய காலத்தில் மரீசியும் அவர் மனைவியாகிய தேவவல்லியும் யமுனையில் நீராடச் சென்ற போது ஒளி வீசும் ஓர் அரிய தாமரை மலரைக் கண்டனர். அதன் அழகில் ஈடுபட்ட மரீசி அதனைப் பறித்து வந்து விநாயக மூர்த்திக்குச் சாத்த எண்ணி அதன் அருகில் சென்றார்; அதன் மீது அழகியதொரு வெண்சங்கு இருப்பதைப் பார்த்தார்; அதிசயம் அடைந்த அவர் அந்தச் சங்கைக் கையிலெடுத்தார்; அக்கணமே அச்சங்கு அழகியதொரு பெண் குழந்தையாய் மாறியது, தமக்கு விநாயகர் தந்திருந்த வரமே இப்போது பலித்தது என்று உணர்ந்த மரீசி முனிவர் அன்போடு அக்குழந்தையைக் எடுத்து வந்து தன் மனைவி கையில் கொடுத்தார். அவரும் அன்போடு அக்குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டார். ஆசிரமத்துக்குத் திரும்பி வந்த அவர்கள் அக்குழந்தைக்கு வல்லபை எனப் பெயரிட்டு அருமையுடன் வளர்த்து வந்தனர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஐந்து ஆண்டுகள் நிரம்பப் பெற்ற வல்லபை அருமைத் தந்தையை நோக்கி, "அம்பலக் கூத்தனைக் குறித்து அருந்தவம் செய்ய என் மனம் அவாவுகின்றது; அதற்கு இசைவாக ஓர் தவச்சாலை அமைத்துத் தர வேண்டும்" என வேண்டினாள். மரீசி முனிவரும் அவ்வாறே ஒரு தவச்சாலை அமைத்துக் கொடுத்தார். தேவியும் தவவாழ்க்கை மேற்கொண்டார்; சிவ பிரானை மனத்திருத்தி முறை தவறாது தவம் புரிந்தார். பிராட்டிக்குப் பன்னிரண்டு வயதாயிற்று. மரீசிக்கு அளித்த வாக்கை நிறைவேற்ற விரும்பிய விநாயகப் பெருமான் சிவபிரானைச் சார்ந்து பிராட்டியைத் திருமணம் செய்துகொள்ளுமாறு வேண்டினார்.

வல்லபையும் சிவபிரானும்

சிவபிரான் ஒரு கிழவர் வேடம் பூண்டு வல்லபை தவமியற்றும் சாலைக்கு வந்து சேர்ந்தார். வயதான பெரியவர் ஒருவர் வந்துள்ளார் என்பதைத் தோழிகள் மூலம் கேள்வியுற்ற வல்லபை வெளிப்போந்து அவரை மரியாதையுடன் உள்ளே அழைத்துச் சென்று ஆசனம் அளித்து உபசரித்தாள். பிறகு அவரை நோக்கி, "தாங்கள் என் தவச்சாலை தேடி வந்த காரணம் யாது?" என்றாள்.

கிழவர் "பருவப் பெண் பாடுபட்டுத் தவம் புரிகிறாள் என்று கேள்விப்பட்டு வந்தேன்; நீ தவம் புரியும் நோக்கம் என்ன?" என்றார்.

வல்லபை, சற்றே நாணத்துடன், "கயிலையங்கிரி வாசனையே என் கணவனாக அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு" என்றாள்.

கிழவர் கடகடவெனச் சிரித்தார். "பித்தனான அவனை விரும்பும் பெண்ணும் உலகில் உண்டோ?" என்றார். வல்லபை கோபம் கொண்டாள்: "வயதுக்கேற்ற அறிவற்ற கிழவரே, தங்களுக்கு ஏதேனும் பொருள்வேண்டின் பெற்றுக் கொண்டு விரைந்து இவ்விடத்தினின்றும் நீங்குக" என்றாள்.

கிழவர், "எனக்கு வேண்டியதெல்லாம் உன்னை மனைவியாக அடையும் பாக்யமே" என்றார்.

வல்லபை திடுக்கிட்டாள். அவரை 'வெளியேறு' என்று விரட்டினாள். அவர் வெளியேறுவதாய் இல்லை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வல்லபை, "நானே வெளியேறுகிறேன்" என்று கூறித் தவச்சாலையை விட்டு வெளியே வர முயன்றாள். அப்போது எதிரிலிருந்த அந்தணர் திடீரென்று மறைந்தார். எதிரில் பரமேஸ்வரன் விநாயகர் உருவில் நின்றார்.

வல்லபை மகிழ்ந்து பணிந்தாள். விநாயகப் பெருமான் வல்லபை தேவிக்குத் தன் இடப்பாகம் தந்து என்றும் பிரியா திருக்க வரமளித்தார்.

தோழிகள் மூலமாக மரீசி முனிவர் நிகழ்ந்ததுணர்ந்தார். திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் செய்தார். அப்போது மஹாவிஷ்ணு லக்ஷ்மி ஸமேதராக விஜயம் செய்து தம்முடைய குமாரிகளான மோதா, பிரமோதா, சுமதா, சுந்தரி, மனோரமா, மங்களா, தேஹினி, காந்தா, சாருஹாசா, சுமத்யமா, நந்தினி, காமதா என்ற பன்னிருவரையும் பரிணயம் செய்துகொள்ள வேண்டுமென்று வேண்டினார். விநாயகப் பெருமான் அவ் வேண்டுகோளையும் ஏற்றார். திருமணம் நன்கு நடந்தேறியது. திருமணத்திற்குப்பின் எல்லா மனைவியரையும் அழைத்துக் கொண்டு விநாயகப் பெருமான் தம் உலகமான மணித்வீபத்தை அடைந்து உலகுக்கு அருள்புரிந்து வந்தார்.

40. சோமகாந்தன் விநாயகர் உலகு அடைதல்

பிருகு முனிவர் அறிவுரை

இவ்வாறு சோமகாந்த மன்னனுக்கு விநாயகப் பெருமானின் பெருமைகளை எல்லாம் பிருகு முனிவர் விளக்கமாக எடுத்துக் கூறினார். மிகவும் பக்தி சிரத்தையோடு சோமகாந்தன் அவை களைக் கேட்டான். பிருகு முனிவர் சோமகாந்தனை நோக்கி, "விநாயக விஜயத்திற்கு ஒப்பும் உயர்வும் எங்கும் இல்லை. அதனைத் தினமும் படித்து நினைத்து தியானித்து வழிபாடு செய்து வருதல் எப்புண்ணியங்களிலும் மேலானதாகும். அத் துடன் விநாயக மந்திரத்தைத் தினந்தோறும் உருவேற்றி ஜபம் செய்வதால் ஸகல காரியங்களும் சித்திக்கும்; மேலான விநாயக ருலகும் பெறலாம்" என அறிவுரை கூறினார்.

பிருகு முனிவரின் அறிவுரைகளைக் கேட்ட சோமகாந்தன் அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "குருதேவ,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தங்கள் பேரரருளால் யான் பெரும்பேறு பெற்றேன். விநாயகப் பெருமானை வணங்கிப் பேறு பெற ஆசி அளிக்க வேண்டும்'' என்று கூற முனிவரும் மனங்கனிந்து வாழ்த்தினார். சோம காந்தன் தன் மனைவியோடும் அமைச்சர் இருவரோடும் தனியே ஒரு தவச்சாலையில் இருந்து விநாயகரைக் குறித்துத் தவம் புரிந்தான். இவ்வாறு ஓராண்டு கழிந்தது.

தேவ விமானம் வருதல்

சோமகாந்தனுடைய தவம் நன்கு செய்யப்பட்டது. அவன் மனைவியும் அமைச்சர்களும் அவனுக்கு உறுதுணையாயினர். அரசன் தவத்தை மெச்சிய விநாயகப் பெருமான் தேவ கணங் களை விளித்து, ''தவமுதிர்ந்து நிற்கும் பக்தன் சோமகாந் தனையும் அவன் மனைவியாரையும் அவன் அமைச்சர்களையும் நம் உலகுக்கு அழைத்து வருக'' என்று ஆணையிட்டார். கஜானன மூர்த்தியின் ஆணையைத் தலைமேற் கொண்ட தேவ கணத்தினர் தேவ விமானத்துடன் அவர்களுடைய தவச் சாலையை அடைந்தனர். விமானத்தின் ஒளியில் எண்டிசையும் விளக்கமடைந்தது. அதனைக் கண்ட யாவரும் மருட்சி அடைந்தனர். விமானத்தில் இருந்த தேவர்கள் விமானத்தினின்றும் இறங்கி வந்து சோமகாந்தனைக் கண்டு விநாயகப் பெருமான் ஆணையைக் கூறினர்.

சோமகாந்தன் பிருகு முனிவரைச் சார்ந்து அவரடி பணிந்து தேவவிமானம் வந்திருப்பதையும் விநாயகப் பெருமான் ஆணை யையும் தெரிவித்தான். பிருகு முனிவர் மிக்க மகிழ்ச்சி கொண்டு மலர்ந்த முகத்தினராய் சோமகாந்தனை ஆசீர்வதித்து விமானத்தில் ஏறிச் செல்லும்படி உத்தரவளித்தார். சோமகாந்தன் மீண்டும் குருதேவர் அடிபணிந்து, ''பாவங்கள் நலியவும் புண்ணியம் மலியவும் இப்பெருவாழ்வு எனக்குக் கிடைத்தது தங்கள் அருள் வலியாலேயே'' என்று கூறினான். பிறகு யாவரும் போற்ற சோமகாந்தனும் அவன் மனைவியும் அவனிரு அமைச்சர் களும் விமானத்தில் ஏறினர். தெய்வ விமானம் விண்ணிலேறிப் பறந்தது.

தேவநகர் அடைதல்

தேவ விமானம் விண்ணிற் பறந்து சென்றது. செல்லும் வழியில் தேவ நகரைக் கடக்கலாயிற்று. அதுகண்ட சுதன்மை சோமகாந்தனை நோக்கி, ''நம் மகன் ஏமகண்டன் நாம் திரும்பி வருவோம் என்று தினமும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இப்போது அவனை நாம் பார்க்காமல் செல்வது அவனுக்குத் துன்பத்தைத் தரும். எனக்கும் அத்தகைய துன்பமே உண்டாகிறது. ஆகையால் அவனைப் பார்த்துவிட்டுச் செல்ல அனுமதிக்க வேண்டும்'' என வேண்டினாள். இதைச் செயற்படுத்துவது சோமகாந்தனுடைய அதிகார எல்லைக்கு உட்பட்டதல்லவே. ஆதலால் அவன் ஒன்றும் சொல்லாது வாளாவிருந்தான். சுதன்மை கூறியதைக் கேட்ட தேவ கணத்தவர் மனம் இரங்கினர்.

''உங்கள் மகன் ஏமகண்டன் விநாயக பக்தன்; தினமும் விநாயக வழிபாடியற்றிய பிறகே உண்ணும் வழக்கம் உடையவன்; நீதியும் நேர்மையும் மிக்க அரசன். நீங்கள் ஒரு பக்தனைக் காண விரும்புவதால் இங்கே இவ்விமானத்தைச் சிறிது நேரம் நிறுத்துகிறோம். நீங்கள் உங்கள் மகனைப் பார்த்துவிட்டு வரலாம்'' என்றார்கள்.

விமானம் நகரத்திற்கு வெளியே இறங்கியது. அமைச்சர் இருவரும் அரண்மனை நோக்கி விரைந்தனர். அமைச்சர்கள் வெகு தூரத்தில் வரும்போதே ஏமகண்டன் அவர்களைப் பார்த்துவிட்டான். அமைச்சர்கள் மாத்திரம் வருவதைப் பார்த்த அவன் துணுக்குற்றான்; விரைந்தோடி எதிர்கொண்டான்; ஏமகண்டனுடைய பதைப்பைக் கண்ட அமைச்சர்கள் சோமகாந்தன் நகரத்திலிருந்து கானகம் சென்றதுமுதல் நிகழ்ந்த அனைத்தையும் சுருக்கமாகச் சொல்லினர். விநாயகர் உலகு செல்லும் வழியில் அவனைப் பார்த்துச் செல்வதற்காகத் தங்கியதையும் கூறினர். ஏமகண்டன் மிக்க மகிழ்ச்சியோடு தாய் தந்தையரைக் காணப் புறப்பட்டுச் சென்றான். இவ்விஷயம் விரைவில் நகரத்தில் பரவிவிட நகர மக்களும் சோமகாந்தனைப் பார்ப்பதற்கு வந்தார்கள்.

ஏமகண்டன் தன் தாய்தந்தையரைக் கண்டு மகிழ்ந்தான்; அவர்கள் தன்னைவிட்டுப் பிரிந்துசெல்வது அவனால் பொறுக்கக் கூடியதாய் இல்லை. ஆகையால் அவன் தந்தையையும் தாயையும் நோக்கி, ''நானும் உங்களோடு வருகிறேன்; இனி ஒரு போதும் உங்களைப் பிரிந்து இருக்க மாட்டேன்'' என்று கூறினான். சோமகாந்தன் ''விநாயகருலகுக்குச் செல்லுதல் அவர்அவர் செய்த தவப்பயனாகும். இதில் நான் எவ்வாறு தலையிட முடியும்? அது என்னுடைய உரிமை எல்லையை மீறியதாகும்'' எனக் கூறினான். அதே சமயத்தில் நகரமக்களும், ''நாங்களும் அரசரோடு வருவோம்; இன்றேல் எங்கள் உயிரைவிடத் தயங்க மாட்டோம்'' என்றனர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவர்கள் இவ்வாறு கூறுவதைக் கேட்ட தேவகணத்தவர் அரசனை நோக்கி, "உம் மகன் ஏமகண்டன் தினமும் விநாயக பூஜை செய்து புனிதனாகி விநாயகருலகு புகத் தகுதி உடையவனாய் விளங்குகிறான். ஆனால் மக்கள் அவ்வாறில்லையே; எனினும் அதற்குமோர் வழி உள்ளது. காசி மாநகரத்தில் சத்தாவரணத்தில் விநாயகக் கடவுளின் ஐம்பத்தாறு படிவங்கள் உள்ளன. அம் மூர்த்தங்களின் பெயரைச் சொல்லுதலே பெரும் புண்ணிய மாகும்; பாவங்களைக் கருவறுக்கும். அவற்றை நாங்கள் இப்போது கூறுகிறோம். எல்லாரும் பக்தியுடன் அவற்றைக் கேட்கட்டும். எல்லாரும் பாவம் கரைந்தவர் ஆவர். புண்ணியசாலிகள் ஆவர். அப்போது யாவரும் இவ்விமானத்தில் ஏறி விநாயகர் உலகை அடையலாம்" என்றனர்.

மக்கள் யாவரும் பக்தி சிரத்தையுடன் விநாயக தியானத்தில் மூழ்கி நின்றனர். தேவ கணத்தவர் சத்தாவரண மூர்த்தங்கள் ஐம்பத்தாறின் பெயர்களையும் கூறினர். மக்கள் அவற்றைக் கேட்டுப் புனிதர்கள் ஆயினர். எல்லாரும் அத்தேவ விமானத்தில் ஏறினர். விமானம் பரந்து இடம் கொடுத்தது. அனைவரும் விநாயகர் உலகு புக்கு அப்பெருமானின் திருவடியைத் தொழுது பேரின்பமுற்றனர்.

விநாயகனே அல்லாது வேறுமொரு தெய்வமுண்டோ?
விநாயகன்றன் கருணைக்கு விசும்புமோர் எல்லையாமோ?
விநாயகனே விக்கினங்கள் விலக்கிடுவான் இன்றும்என்றும்
விநாயகனே எங்கள்கதி எங்கள்நிதி எங்கள்வாழ்வே.

விநாயக விஜயம் முற்றிற்று.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீ:

ஸர்வஸித்தி நல்கும்

ஸ்ரீ ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரங்கள்

(மூலம் தமிழில்)

1. ஸ்ரீ விஷ்ணு
2. ஸ்ரீ லலிதா
3. ஸ்ரீ துர்கா
4. ஸ்ரீ லக்ஷ்மீ
5. ஸ்ரீ ஸரஸ்வதீ
6. ஸ்ரீ சாகம்பரீ
7. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹர்
8. ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவர்
9. ஸ்ரீ ராமர்
10. ஸ்ரீ ஹநுமார்
11. ஸ்ரீ வேங்கடேசர்
12. ஸ்ரீ ஸுதர்சநர்
13. ஸ்ரீ க்ருஷ்ணர்
14. ஸ்ரீ கணபதி
15. ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர்
16. ஸ்ரீ சிவன்
17. ஸ்ரீ அந்நபூர்ணா
18. ஸ்ரீ காயத்ரீ
19. ....
20. ஸ்ரீ பவாநீ
21. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி
22. ஸ்ரீ தத்தாத்ரேயர்
23. ஸ்ரீ ஸூர்யன்
24. ஸ்ரீ சாஸ்தா
25. ....
26. ....
27. ஸ்ரீ மத்வாசார்யர்
28. ஸ்ரீ தேசிகன்
29. ....
30. ஸ்ரீ ராகவேந்த்ரர்

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (மூலம் ஸம்ஸ்க்ருதத்தில்)

லிப்கோவின் பிற வெளியீடுகள்

நவக்ரஹ க்ஷேத்ர புராணம்
விரத பூஜா விதாநம் (36 விரத பூஜைகள்)
அபிராமி அந்தாதி — மூலமும் உரையும்
ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ — ஸம்ஸ்க்ருத, தமிழ் மூலம் உரை
ஸகல கார்யஸித்தியும் ஸ்ரீ தேவீ பாகவதமும்
பெரிய புராணம் (கதைச் சுருக்கம்)
திருவிளையாடற் புராணம் (கதைச் சுருக்கம்)
ஸ்ரீ ஸத்யநாராயண விரதம்
ஆறுமுகனுக்குகந்த ஆறு படைவீடுகள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விநாயக விஜயம்

1087123

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.